

# பேரறிஞர் அண்ணா
*எழுதிய*
# உள்ளம் வருந்திய நிகழ்ச்சிகள்

1



# பேரறிஞர் அண்ணா எழுதிய

# உள்ளம் வருந்திய நிகழ்ச்சிகள்

(முதல் தொகுப்பு)

இதுவரை நூல்வடிவம் பெறாத கட்டுரைகள்

தொகுப்பாளர்

**மோ. பாட்டழகன்,** எம்.ஏ., பிஎச்.டி.,

**மீனா கோபால் பதிப்பகம்**

மனை எண்–9, கதவு எண்–26,

ஜோசப் காலனி, ஆதம்பாக்கம்,

சென்னை – 600 088.

தொலைபேசி : 2453667

# நூல் விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூலின் பெயர் | பேரறிஞர் அண்ணா எழுதிய உள்ளம் வருந்திய நிகழ்ச்சிகள் (முதல் தொகுப்பு) |
| தொகுப்பாளர் | மோ.பாட்டழகன், எம்.ஏ., பிஎச்.டி., |
| முகப்பு அட்டை | ஓவிய அரசு சுப்பு |
| மொழி | தமிழ் |
| பதிப்பு | முதல் பதிப்பு |
| வெளியீட்டு ஆண்டு | 2000 |
| தாள் | வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | கிரவுன் 12.5 x 18 செ.மீ. |
| அச்சு | 11 புள்ளி |
| பக்கம் | 416 |
| படிகள் | 1200 |
| ஒளியச்சு | பரணி கிராபிக்ஸ் சென்னை – 600 005. |
| அச்சிட்டோர் | சென்னை ஆப்செட் சென்னை 600 014. |
| பொருள் | சமூகவியல் – கட்டுரைகள் |
| விலை | ரூ. 85.00 |

# முன்னுரை

தமிழகத்தின் மிகச்சிறந்த தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கையில் நடந்த சுவை நிறைந்த நிகழ்ச்சிகள் பலப்பல. வருந்திய நிகழ்ச்சிகள் பல. அவர் உணர்ச்சிகளை எழுத்தாகவும் பேச்சாகவும் பல்வேறு வடிவங்களில் வெளியிட்டார். அவை மக்களுக்கு மிகவும் பயன் தந்தன. சில ஆறுதல் அளித்தன; சில அறிவுரை வழங்கின; சில ஊக்கம் வழங்கின.

நல்லவர் பலர் மறைந்தபோது வருந்தினார். அவர்களுக்காக எழுதிய இரங்கல் உரைகளில் மறைந்தவர்களின் மேன்மையைக் குறிப்பிட்டு, வாழ்ந்தால் அவர்களைப் போல் வாழவேண்டும் என்ற நல்லெண்ணத்தை ஊட்டினார். நாட்டிலே தகாத செயல்கள் நடந்தபோதெல்லாம் வருந்தினார். மக்களுக்குத் துன்பம் அளிக்கும் நிகழ்ச்சிகளைக் கண்டபோதெல்லாம் உள்ளம் வருந்திக் கட்டுரைகள் தீட்டினார். அவையெல்லாம் மக்களிடம் அவர் கொண்டிருந்த அளவற்ற பேரன்பினை வெளிப்படுத்துவதாகும்.

தம்மை மாற்றார் துன்புறுத்திய போதும் தாங்கிக் கொண்டு தம் துன்பத்தினை நாகரிகமாகவும் நயமாகவும் வெளியிட்டுப் படிப்பவரை உருகச் செய்தார். பேரறிஞர்

அண்ணாவின் பண்பட்ட நெஞ்சினையும் அவரது பண்பாட்டுச் சிறப்பினையும் பல கட்டுரைகள் நமக்கு உணர்த்தும்.

பழைய திராவிட நாடு இதழ்களில் ஒளிந்து கொண்டிருந்த முத்துக்களைத் தேடித் தேடி எடுத்துத் தொகுத்து நூல் உருவாக்கப்பட்டது. இவை இதுவரை நூல் வடிவம் பெறாத கட்டுரைகள், பேரறிஞர் அண்ணா எழுதிய உள்ளம் வருந்திய நிகழ்ச்சிகள் பலவும் இன்று மூன்று தொகுப்புகளாக வெளி வந்துள்ளன. இது முதல் தொகுப்பாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்மீது மிகுந்த பற்றுடைய என் தந்தையார், முத்தமிழ்க் கவிஞர், டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்கள் இத்தொகுப்பினை உருவாக்குவதில் எனக்கு உதவினார். அண்ணா அறிவாலயத்தில் நூலகராக மிகச் சிறப்பாகப் பணிபுரிந்து வரும் பெருந்தகை திருமிகு. சி.கே.சுந்தரராசன் அவர்கள் எனக்கு உதவியதை மிகுந்த நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

அச்சுப்படியைப் படித்துப் பிழை திருத்தம் செய்து உதவிய, நல்ல பண்பாளர், மிகச்சிறந்த கவிஞர் எழிற்பித்தன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி. என் முயற்சிகளை ஆதரிக்கும் தாயுள்ளம் படைத்த பெரியோர் அனைவருக்கும் என் நன்றி.

அன்பார்ந்த,

**மோ. பாட்டழகன்**

# பேரறிஞர் அண்ணாவின் கடைசி நாள்கள்

**டாக்டர் கே. நடராஜன்**, B.Sc., M.D.,
முன்னாள் மருத்துவப் பேராசிரியர்,
ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை
இயக்குநர், டாக்டர் கே.என். அறிவியல் மனித நேயம்
ஆய்வு மையம், சென்னை 600 083.

நேற்று மாலை தொலைக்காட்சியில் 'மணிப்பயல்' என்னும் தமிழ்ப்படம். இதன் தொடக்கத்தில் ஒரு சிறந்த பாடல். திரு.சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் அண்ணாவைக் குறித்துப் பாடியது. 'காஞ்சியிலே ஒரு காந்தி பிறந்தான்' எனத் தொடங்கி அவர் வாழ்க்கையைச் சுருக்கமாகச் சித்தரித்து அவர் இறுதிப் பயணத்தையும் படம் பிடித்தது. முன்பே பலமுறை கேட்டிருந்தும், பார்த்திருந்தும், இப்போதும் நெகிழ்ச்சி அளித்தது.

இப்பாடலை நேற்று ஒளி பரப்பியது, இன்று அண்ணா நினைவு நாளை முன்னிட்டு என்று கருதுகிறேன், ஆனால் எந்த அளவு உள்ளம் நிறைவோடு ஒளி பரப்பினார்கள். எந்த அளவு இதுவும் ஒரு அரசியல் அடிப்படையானது. என்று தெரியவில்லை. (பொதுவாக இது சென்னை டி.வி.யே ஆயினும், பல சமயத்திலும் ஏதோ வெளிநாட்டு டி.வி., பிறமொழி டி.வி., என இருப்பதாக இந்த எண்ணம்)

அண்ணா மறைந்த சமயம் அவரைக் கடைசி முறையாகக் காண, அவர் இறுதிப் பயணம் காண, எவ்வளவு பெரிய மக்கள் வெள்ளம், கின்னஸ் புத்தகப் பதிவேட்டில்

(Book of World Records) மறைந்த ஒரு தலைவருக்குச் சேர்ந்த மிகப் பெரிய கூட்டமெனக் குறிப்பிட்டுள்ளதாம். கூட்ட நெருக்கடியில் எத்தனை பேர் மிதியுண்டார்கள்! உள்ளே இடமின்றி புகைவண்டி மீது அமர்ந்து வந்தபோது ஒரு பாலத்தைக் கடக்கும்போது, எத்தனைபேர் அடிபட்டு இறந்து போனார்கள்!

'அண்ணாவோடு ஐந்து நாட்கள்' என்று தலைப்பிட்டு என் வேதனையை வெளிப்படுத்தி தினசரி குறிப்பு எழுதினேன். அதில் பல உண்மை நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன. உதாரணமாகப் பக்கத்து அறையில் அண்ணா ஆபத்தான நிலையில் இருக்க, மறு அறையில் சில தலைவர்கள் கூட்டம். அவர்கள் பேசிக்கொண்டது. பல சமயம், சத்தமிட்டுப் பேசிக் கொண்டமையால் - எனக்கும் கேட்டது. பல சமயத்திலும் அவை எனக்கு வேதனை அளிப்பனவாக இருந்தன.

இக்குறிப்பேட்டை யாரோ ஒருவர் படித்துவிட்டு தருவதாக எடுத்துச் சென்றார். கவனக்குறைவாக அதைக் காணாது போக்கிவிட்டார் போலும். திருப்பித் தரவில்லை. பலரைக் கேட்டும் கிடைக்கவில்லை.

அதன் முன்னுரையாக எந்த ஐந்து நாட்கள் என்ற வினா எழுப்பி,

என் இளவயதில், அவரை எங்கள் ஊர் செய்யாறு இயக்கக் கூட்டங்களுக்கு அழைத்திடச் சென்று, அவர் இல்லத்தில் அவர் நெடுநேரம் சீட்டு ஆடுவது கண்டு பலகாலம் காத்திருந்து நினைவூட்ட, "இரு நடராஜா, என்ன

அவசரம்" என்று அன்பொழுகக் கூறி, பின்னர் என்னோடு வந்து பலமுறை சிறப்பாக உரைகள் ஆற்றிய நாள்களா?

சந்திரமோகன் நாடகம் அரங்கேறியது, அப்போது அதில் அவர் சிறப்பாக நடித்துத் தடை செய்யப் பெற்ற இரணியன் அல்லது இணையற்ற வீரன் நாடகம் நடத்திய போது மகாவிஷ்ணு கைது, இரணியன் கைது எனத் தம் வார ஏட்டில் வெளியிட்ட நாள்களா?

பின்னர் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்கும், விடுதிக்கும் பலமுறை அழைத்து வந்து அவர் உரை கேட்ட நாட்களா?

கல்லூரி முதல்வர் அனந்த நாராயண ஐயர் தலைமை தாங்கிய அக்கூட்டத்திற்கு இவர் வந்துசேர நேரமானபோது, மாணவர்கள் அமைதி இழக்க இருந்த நிலையில், இவர் வந்து சேர்ந்து, அந்த நாட்களிலே பல தொடர் வண்டிகள் இடையே தடம் புரண்டு நின்று போக, காலம் கடந்து வந்தாலும் இந்த காஞ்சிபுரத்து வண்டி தடம் புராளது தன் நிலை வந்து சேரும் வண்டி, எனக் கோடிட்டுக் காட்டிச் சிரிக்க வைத்த நாள்களா?

மாணவர் விடுதிக் கூட்டத்திற்கு வந்த பிறகே MOODS AND DEEDS என்ற தலைப்புத் தந்திட அத்தலைப்பில் தனி அரசியல் கலப்பு இன்றி உலக நிகழ்ச்சிகள் பலவற்றை எடுத்தியம்பி, சிறப்பாக உரை நிகழ்த்தி அனைவரையும் வியக்க வைத்த நாள்களா?

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய அன்று, ராபின்சன் பூங்கா மைதானததில் மழைத்துளிகளோடே (பின்னர்

பெரியார் கூறியபடி கண்ணீர்த் துளிகளோடே) நின்று அவர் உரை கேட்ட நாள்களா?

திருச்சி, சென்னை, செங்கற்பட்டு ஆன பல இடங்களில் நடந்த மாநாடுகளில் கலந்து கொண்டு அவர் உரை கேட்ட நாள்களா?

மாற்று அரசியல் தலைவர்களும் எங்கிருந்தோ கேட்க விரும்பிய, ஆண்டுதோறும் மெரீனா கடற்கரையில் நிகழ்த்தும் அவரின் சிறப்பான மே தினச் சொற்பொழிவு நாள்களா?

இல்லை, இவ்வகை இனிக்கும் சிறந்த நாள்கள் எல்லாம் அல்ல. அவர் அடையாறு மருத்துவமனையில் தம் கடைசி ஐந்து நாள்கள் அவதியுற்றாரே, வேதனையளித்த அந்த ஐந்து நாள்கள் எனப் பதில் தந்து, நான் உடன் இருந்த அந்த ஐந்து நாள்கள் நிகழ்ச்சிகளையும் சற்று விவரமாக எழுதியிருந்தேன். இத்தனை ஆண்டுகளுக்குப் பின் ஒவ்வொரு மணி நேர நிகழ்ச்சிகளும் நினைவுக்கு வாரா நிலையில், நினைவுக்கு வரும் சில நிகழ்ச்சிகளைக் கூறுவேன்.

29-1-69 புதன்கிழமை சற்று ஆபத்தான நிலை. பெருங் கூட்டம் கூடிவிட்டது. தொடர்ஜுரத்திற்கு குளோரோமைசிடின் மருந்து (Chloramphenical) ஊசி வழி உட்புகுத்த வேண்டும் என்றனர். மருத்துவமனையில் அம்மருந்து இல்லை. அதை பல மருத்துவக் கடைகளில் விசாரித்து வாங்கிச் சென்று அளித்தோம்.

30.1.69 வியாழக்கிழமை மிகவும் குறிப்பிடவேண்டிய தினம். அன்று அவருக்குச் சற்று இருதய தளர்ச்சி. சுவாசப்

பைகளில் நீர்க்கோப்பு கொண்டு (Pulmonary Congestion) பெருமூச்சு எடுத்தது. அதை உணர்ந்த அங்கிருந்த தலைமை மருத்துவர், "இது ஆபத்து நிலை, எந்த நேரத்திலும் அவர் இறந்து விடக்கூடும்" என்றார்.

When I ausculated his chest, there were rales only at the Bases. Apicies where free. "Why do you Predict Imminent Death" என்று கேட்டேன்.

"Any moment rales will be generalised we should be guarded in Pronouncing it. especially when VVI Ps are concerned" என்றார்.

❊

இந்த அவர் கருத்தை எப்படியோ தவறாக எடுத்துக் கொண்ட சிலர் அவர் இறந்து விட்டதாகவே அறிவித்து விட்டார்கள். வானொலியும் அவ்வாறு அறிவித்துவிட்டது.

பிராணவாயு அளிக்கும் கருவி நீங்கலாக, பிற கருவிகள் அனைத்தையும் அகற்றிவிட்டதைக் கண்டு வியந்தேன். செய்தி அறிந்து தள்ளுவண்டியில் அமர்ந்து பெரியார் முதல் பலரும் நேரில் வந்து, கண்மூடி இருந்த அண்ணாவைக் கண்டு கண்கலங்கி நின்றார்கள். மகாத்மா காந்தி அடிகள் மறைந்த தேதியிலே, அதே நேரத்திலே, தென்னாட்டுக் காந்தியும் இறந்தாரா என எண்ணி வேதனையுற்றார்கள் போலும்.

6.45 மணி அளவில் அவர் மெல்லக் கண்விழித்து, தன்னைச் சூழ்ந்து பெரியார் முதல் பலரும் இருப்பதைத் தன்

தலையைச் சற்றே திருப்பிப் பார்த்தார். பயந்த அளவு ஆபத்தில்லை என்பதை உணர்ந்த டாக்டர்கள் பின் மீண்டும் பிற கருவிகளையும் இணைத்தனர், ஆனால்,

31.1.69 அன்று காலை 9.25க்கு அவர் இருதயம் சற்றே நின்றுவிட்டது. (Cardiac Arrest) எனவே அவர் நினைவு தவறி விட்டார். மூச்சு வாங்குவதும் நின்றுவிட்டது. இதை உணர்ந்த மருத்துவர்கள், உடனே, இருதயத்தைப் பிசைந்து தந்து மீண்டும் இயங்க வைத்தனர். செயற்கை சுவாச இயக்கம் வழி (Positive Pressure Artificial Respirator) உயிர் காத்தனர்.

Aramin, Angiotensin உதவி கொண்டு இரத்த அழுத்தம் குறையாவண்ணம் பார்த்துக் கொண்டனர்.

1-2-69 இரவு 8 மணி அளவில் அண்ணாவின் இருதயம் மிகமிக வேகமாகத் துடிக்கத் தொடங்கி விட்டது. (Ventricular Tachycardia which is serious) மீண்டும், எந்த நேரத்திலும் அண்ணா இறந்து போகக்கூடும் என்றனர். எனினும் சில நாள்களாகப் பழக்கத்திற்கு வந்த ஒரு புது மருந்தை (Propranolol) சிறிய அளவில் இரத்தநாளம் வழியே உட்செலுத்தி முயல்வோம், சில சமயம் அதன்வழி இருதயம் நின்றுவிடக் கூடும் என்பதை முக்கியமானவர்களிடம் கூறி அவர்கள் அனுமதியோடு உபயோகித்தார்கள்.

2-2-69 ஞாயிறு காலை 1.45 மணியளவில் இருதயம் தன் இயல்பான இயக்கமாக மாறியது (Reverted to sinus rhythm.) ஆனால் பின்னர் அன்றே, ஏனோ திடீரென அதிக

அளவு ஜுரம் (106 எப்) வந்துவிட்டது. பனிக்கட்டிகள் (Ice Cradle) வழி உடல் சூட்டைக் குறைக்க முயன்றார்கள்.

இரவு நெடுநேரம் அங்கேயே இருந்தேன். நடு இரவு சமயம் சூடு குறைந்தது. சற்று தேவலாம் என்ற சிறு மனஅமைதியோடு 12 மணிக்கு வீடு வந்தேன்.

3-2-69 (திங்கள்) ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் (12.25 மணி) புலவர் அண்ணன் மகன் அறிவுடை நம்பி அங்கிருந்து தொலைபேசி வழி, அண்ணா 12.22 இறந்து விட்டார் என்ற துயரச் செய்தியைக் கூறினான். மீண்டும் இருதயம் நின்று விட்டது போலும். இம்முறை அதைச் செயற்கை முறையில் இயக்க முடியவில்லை போலும்.

உடனே காரை எடுத்துக் கொண்டு வேகமாகச் சென்றோம் கைலாசம் காரை வேகமாகத்தான் ஓட்டினார். எனினும் எனக்கு மெல்லப் போவதாக எண்ணி, வேகமாக ஓட்டுமாறு கோபித்துக் கொண்டேன். அவ்வளவு வேகமாக ஓட்டியும் நாங்கள் அங்கே போவதற்குள், அவரை நுங்கம்பாக்கம் அவர் இல்லத்திற்கு எடுத்துச் சென்று விட்டிருந்தார்கள்.

நேரே சென்று அவர் உயிரற்ற உடல் கண்டு கண்கள் கலங்கிட, அவர் பாதங்களில் விழுந்து அஞ்சலி செலுத்தினேன்.

வீட்டில் மனைவியும், மக்களும் அண்ணாவைக் காண விழைந்தார்கள், பொழுது விடிந்தால் காணுவது சிரமம் என்று அவர்களையும் அழைத்து வந்தேன்.

பின்னர், ராஜாஜி மண்டபத்திற்குக் கொண்டு சென்றார்கள். அங்கே அவரைக் காணக்கூடிய பெருங் கூட்டம். கூட்டத்தை ஒழுங்குபடுத்த இயலாது கண்ணீர் புகை, துப்பாக்கி சூடு நிகழ்த்தினார்கள். பலர் மிதிபட்டே இறந்து போனார்கள்.

4-2-69 செவ்வாய், அண்ணாவின் இறுதி யாத்திரை, வழி நெடுக, எந்தத் தலைவனுக்கும் சேராத கூட்டம்.

ராஜாஜி மண்டபத்திலிருந்து ஜெமினி சதுக்கம் வழி கடற்கரைப் பயணம். முன்பு, அமெரிக்காவிலிருந்து திரும்பியபோது ஜெமினி சதுக்கம் பகுதியில் மேற்குப் பக்கம் திரும்பி ஓய்வு கொள்ள நுங்கம்பாக்கத்து தம் இல்லம் சென்றார். இப்போதும் இடது பக்கமே திரும்பினார். ஆனால் கிழக்குத் திசை நோக்கிப் பல்கலைக்கழக கடற்கரை ஓரம் தன் முடிவிலா ஓய்வு கொள்ளச் சென்றார்.

நான் முழு மனதோடு ஏற்றுக் கொண்ட ஒரே அரசியல் தலைவர் மறைந்துவிட்டார். அதன்பின் எனக்கு அரசியலில் ஈடுபாடு கொள்ள மனம் எழவில்லை. ஒரு குடிமகன் என்ற அளவில், நாட்டு நடப்பினை மட்டும் கவனித்து வந்தேன். நிகழும் விசேஷ நிகழ்ச்சிகள் சமயம் என்னைச் சார்ந்த சிலரிடம் மட்டும் என் கருத்தினைப் பரிமாறிக் கொண்டேன். சில சமயம் எழுதி வைத்தேன்.

***டாக்டர் கே. நடராஜன்***

## உள்ளடக்கம்

பக்கம்


1. அந்தோ நெஞ்சு வேகிறது! 15
2. எனது ஆசிரியரை இழந்தேன்! 16
3. மணி மறைந்தார்! 20
4. அழகான சிலை! தலைதான் இல்லை! 22
5. மகிழ்நன் மறைவு! 25
6. வரப்போகுதய்யே...! 26
7. கையில் ஊமையர்! 28
8. ஷீஸ்டரின் சோகம்! 36
9. பஞ்சமாம் பஞ்சம்! 42
10. அருமை! அருமை! 43
11. சாமான்யமா? 44
12. மகாகனத்தின் மணியோசை! 72
13. ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார்! 77
14. புன்னகையும் பெருமுச்சும்! 107
15. தீராத் துயரம்! 122
16. கிலிஸ்தான்! 123
17. திருவாங்கூர் திவானுக்கு 131
18. சி.டி. நாயகம் மறைவு! 136
19. தேம்பும் தாயகம்! 137
20. டஹரோ! டஹரோ! 146
21. சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர்! 158
22. அறிவுக்கொவ்வாததை அஞ்சாது எதிர்ப்பவர்! 170
23. காமராசர் சம்பவம்! 175
24. விசாரணை நடத்துக! 189
25. தங்க வயலில்! 200
26. மரண சாசனம்! 205
27. சர். பாத்ரோ மறைவு! 221

28. மயான காண்டம்! 223
29. சட்ட மறுப்பும் – சாஸ்திர மறுப்பும்! 228
30. மைசூர் சர்க்காருக்கு! 233
31. வாழ்த்தினர்! 236
32. மனு சிரிக்கிறான் 245
33. நம்மோடு கலந்துவிட்டார்! 253
34. வேதனையைப் போக்கியும்... 258
35. இடந்தேடிகள் 276
36. இயற்கை ஓர் அழகிய விதவை! 289
37. கம்பர் விழா! 299
38. மறைந்த மறத்தமிழர்! 317
39. ஆடுராட்டே! ஆனால் இங்கு! 321
40. ஐயோ யாழ் முறிந்தது! 322
41. நாகை மணி பகுத்தறிவுக் கழகம்! 323
42. அவுங்சான்! 324
43. இழந்த இன்பம்! 333
44. சிறந்த நண்பர்! – சிதைந்த வாழ்வு! 341
45. அனுதாபம்! 347
46. வெந்த புண்ணில்! 348
47. துக்கவாரம்! 351
48. ஒன்றும் செய்யவில்லை! 357
49. மறைந்தார்! 366
50. அடுத்தகட்டம்! 366
51. நீர் நஞ்சாயிற்று! 368
52. பறக்கும் குதிரை! 369
53. உத்தமரை இழந்தோம்! 370
54. அவர் காண விரும்பிய நாடு! 384
55. அவர் சிந்திய இரத்தம்! 394
56. ஆறுதல் கூறுகின்றோம்! 408
57. வெட்கப்படுகின்றோம்! 409

# 1. அந்தோ நெஞ்சு வேகிறது!

நமது பேரன்பர், தமிழர் தளபதி குடந்தைத் தோழர் கே.கே. நீலமேகம் அவர்களின் துணைவியார், தோழியார் தனபாக்கியத்தம்மாள், திடீரென மறைவுற்றது கேட்க நெஞ்சு வேகிறது! தோழர் நீலமேகம் எவ்வளவு மனமுடைந்திருப்பார் என்பதை நாம் எண்ணிப் பார்க்கும்போது எரிகிற எண்ணெயில் வீழ்வதுபோல், நமது நெஞ்சு வேகிறது. இயக்கப் பணியாற்றி வரும் அவருக்கு, அவரது துணைவியார், மிக்க உதவியாக இருந்துவந்ததை நாம் அறிவோம். அவரது இல்லத்தில் சென்று தங்கி, உபசாரத்தை நேரில் கண்டவர், இச்செய்தி கேட்டுக் கலங்குவார், பெரியாருக்கு ஒரு நாகம்மையார் கிடைத்து, மறைந்தார், அன்று அவரது வாழ்க்கையிலே ஏற்பட்ட பள்ளம், காலத்தாலும் மூடப் படவில்லை. அதுபோல் தோழர் கே.கே. நீலமேகத்துக்குற்ற துணைவியாக இருந்து வந்த அம்மையாரின் பிரிவு, அவருக்கு, ஆறுதல் அளிக்க முடியாத அளவு கலக்கத்தை உண்டாக்கிவிட்டிருக்கு மென்பதை நாமறிவோம். நாம் வேதாந்தியல்ல மாயாவாதம் புரிந்து அவரைத் தேற்ற, மதஉபதேசியல்ல, மறு பிறப்பு பற்றிப்பேசி அவருக்கு மன ஆறுதல்தர, நாம் கருதினாலும் அவர் அதனை ஏற்கார். அவர் ஓர் சுயமரியாதைக்காரர்.

ஆம்! ஆகவேதான், அவர் இந்தச் 'சோதனை'யிலிருந்து தப்பித் தத்தளித்துத்தேறி, கொந்தளித்துக் குளிர்ந்து, கதறிஓய்ந்து, பின்னர், அஞ்சோம் எதற்கும்' என்று உறுதிக்கொள்வார் என்று நம்புகிறோம். அவரது வாழ்க்கைக் கப்பலின் எதிரிலே, பெரும் பாறை தட்டுப்பட்டு விட்டது. அதனைக் கடந்து, மரக்கலத்தைத் தோழர் கொண்டு செல்வார் என்று நம்புகிறோம்.

இத்தாலிய விடுதலை வீரர், கரிபால்டி, தனது, பிரிய மனைவி இறந்தபோது, "ஆம்! என்மனைவி இறந்தார், ஆனால் என்மனைவிமீது நான் கொண்ட அன்பு அணையாது. அந்தஒளி இன்னமும் இருக்கும், அதைத்துணைகொள்வேன், இத்தாலிய விடுதலைப்போரில் மேலும் ஈடுபடுவேன்" என்றுரைத்தாராம். போரிட்டார், வெற்றிகண்டார். தோழர் நீலமேகமும் அத்தகைய இயல்பு படைத்தவரே, இந்த நேரத்தில் அவருக்கும், அவரது மக்களுக்கும் நாம் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*(திராவிட நாடு - 29-3-42)*

## 2. எனது ஆசிரியரை இழந்தேன்!

தமிழரின் பூந்தோட்டத்தில், மணம்வீசும் மலர்களைத் திடீர் திடீரெனக் காலமெனுங் கள்ளன், பறித்தழிக்கிறான். அந்தோ, மனதை மலரச்செய்யும் மாண்புகள் படைத்த நமது நண்பர்களை நாம் இழக்கும் கொடுமையில் அடிக்கடி சிக்கி

அவதியுறுகிறோம். தமிழரின் நறுமணச்சோலை வேலியற்றதோ! ஏதோ, காலக்கள்ளனின் கன்னெஞ்சத்தின் காரணம்! பெறற்கரியவர்களைப் பெற்று, இனி நமக்கென்ன குறை என்று தமிழன் இறுமாந்திருக்கும் வேளையில், ஆரிய நச்சரவும் புற்றில் பதுங்கவில்லையேல் தலைபோகும் என்று பயப்படும் நேரத்தில், எப்படியோ, இடர் நம்மைத் தாக்கி, நமது இன்ப எண்ணங்களை அழித்தொழிக்கிறது. இதனை என்னென்போம்!

திருச்சியில் தோழர் சுந்தர நாடாரைச் சூறையாடிச் சென்ற மரணம், தனது பசி அடங்கப்பெறாமல் சின்னாட்களுக்கு முன்பு சிரித்த முகத்தழகன், சீர்மிகு குணக்குன்று, பொறுமையின் இருப்பிடம், பொன்னான பண்புகளின் தங்குமிடம், மாணவர்களின் மனதை மயக்கி, அன்பால் பிணைக்கும் அருங்குண அண்ணல், தோழர் திருவேங்கிடசாமியையும் திருடிக்கொண்டு போய்விட்டது. திடுக்கிட்டேன் செய்தி கேட்டு. நீர்சுரக்கும் கண்களுடன் இங்குமங்கும் நோக்கினேன், ஏதேதோ எண்ணினேன், என்செய்வேன், இன்னமும், குழம்பிய சிந்தையில் தெளிவு ஏற்படவில்லை, கசங்கியகண்கள் பழையநிலை பெறவில்லை, துடித்த நெஞ்சு துடித்தபடி இருக்கிறது.

தோழர் திருவேங்கிடசாமி அவர்கள், எனக்கு இண்டர்மீடியேட் வகுப்பில் ஆங்கில ஆசிரியர்! ஆனால் அன்று முதல் நேற்றுவரை அவர், எனக்கு, வாழ்க்கையின் பலதுறைகளுக்கும் ஆசிரியராக இருந்து வந்தார். நான் அவரிடம் வகுப்பிலே கற்ற பாடங்களை மறந்துவிட்டேன், ஆனால், அவருடனிருந்த நான், கல்லூரிக்கு வெளியே

இருந்தும், கல்லூரியை விட்டு நான் நீங்கிய பிறகும் பெற்ற பாடங்களை மறக்கவில்லை - மறக்கவும்மாட்டேன். பொல்லாங்கு எண்ணுவோரைக் காணும்போதும் புன்னகை செய் - கடமையைச் செய்யக் கலங்காதே - காலத்தை அறிந்து உதவி செய் - தமிழரிடம் பற்று கொள் - அவர்களுக்காகப் பாடுபடுவதைப் பெரியதோர் பண்பு எனக்கொள் - பார்ப்பனரிடையே உள்ள ஒற்றுமையைப்பார், அதுபோல் தமிழரிடை உண்டாக்க வேலை செய் - என்பன போன்ற அரும்பெரும் பாடங்களை எனக்களித்த ஆசிரியரை, நண்பரை, தோழரை, இழந்தேன். தமிழர் ஒரு சிறந்த ஊழியரை இழந்தனர். சென்னை ஒரு சிங்கார புருடரை பரிபாலகரைப் பறிகொடுத்துவிட்டது. தோழர் திருவேங்கிடசாமி மாரடைப்பினால் திடீரென மரணமடைந்தார். தமிழரின் திருவிளக்கொன்று அணைந்துவிட்டது. என் செய்வது.

அவர், பச்சையப்பன் கல்லூரித் தலைவராக நியமிக்கப்பட்டபோது நான் கொண்ட மகிழ்ச்சி சொல்லுந்தரத்ததன்று. அவரது ஆட்சியின்கீழ் எனது கல்லூரி தமிழருக்கு அறிவூட்டும் ஊற்றாக விளங்கும் என்றெண்ணிப் பூரித்தேன். அவருடைய தமிழ்ப்பற்றும், பகுத்தறிவுத் திறனும் கண்டுகளித்த நான். அவரது புகழை மாற்றாரும் உரைக்கக்கேட்ட காதுகளில், அவரது மரணச்செய்தியைக் கேட்கும் துர்பாக்கியம் பெறுவேன் என்று எண்ணவில்லை. கண்ணால் கனியைக்காணும் நேரத்திலேயே, கல்லடிபட்டுக் கனி கீழே வீழ்ந்தது போல், அவர் மறைந்தார்.

சென்னை நீர் ஊற்றாக இருக்கும் மாதவரம் ஏரிக்கரை மீது, பெரியார் தடியை ஊன்றிக்கொண்டு நடக்க, அவர் பக்கத்தில், தோழர் திருவேங்கிடசாமி அவர்கள் நடந்து கொண்டு தமிழருக்குக் கல்வித்துறையில் உள்ள குறைபாடுகள் பற்றி விளக்கிக்கூறிக் கொண்டுவர, அக்காட்சியைக் கண்டும், பேச்சைக் கேட்டும் மகிழ்ந்து நான் நடந்துசென்றதும் பின்னர் அவரது விடுதியில், பெரியாருக்கு விருந்தளிக்கப்பட்டதும், அதுபோது நானும் அவருடனிருந்து உண்டதும், பின்னர், கல்லூரி மாணவர்களின் ராணுவப் பயிற்சிப் படையின் விழாவுக்கு அவர் எம்மை அழைத்துச் சென்றதும், இப்போது தான் நடப்பதுபோல், என்மனக்கண்முன் தோன்றுகிறது. அதுநான் 'விடுதலை'யை விட்டு விலகிய மறுநாள் நடந்தது. அதற்கு மறுநாள், எனது ஆசிரியர் என்னைத் தமது இல்லத்திற்கு வரவழைத்து, 'விடுதலை'யை விட்டுவிலகியது ஏன் என்று விசாரத்துடன் கேட்டு, பற்பல புத்திமதிகள் புகன்ற காட்சி, இதோ என் எதிரே சித்திரம் போல் நிற்கக் காண்கிறேன்.

ஆனால் அவர் மறைந்துவிட்டார். அவரது மறைவால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்யமுடியாது என்றுரைப்பது சம்பிரதாயத்தைக் கடந்த பேச்சு.

அவரது குடும்பத்துக்கும் என் ஆழ்ந்த அனுதாபத்தை, வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். காலத்தை எண்ணி, மிகக்கலங்குகிறேன். என்நிலை இதுவெனில், அவரது குடும்பத்தினரின் நிலைமை யாதாயிருக்கும். நினைக்கவும், நெஞ்சு வேகிறது.

*(திராவிட நாடு - 12-4-42)*

# 3. மணி மறைந்தார்

தோழர் நாகைமணி இறந்து விட்டார்! "மிகவும் இளைத்துப் போனார், என்றபோதிலும், குணமடைந்து வருகிறார்', என்று சென்ற வாரம் தெரிவித்தனர். 29-5-42, சென்னையிலிருந்து, நமது சிந்தையைக் கலங்க வைக்கும் தந்தி வந்தது, நமது தோழர் இறந்தார் என்று. தோழர் மணி சின்னாட்கள் நோய்வாயுற்றிருந்தார், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார். எவ்வளவோ முயன்றாலும், அவரது மறைவைத் தடுக்க முடியவில்லை.

தோழர் மணியின் கட்சித் தொண்டுகளைக் கண்டோ கேட்டோ இராத தமிழர் யார்! அந்தச் சிவந்த மேனியன், சிரித்த முகத்துடன் உபசாரமொழி பேசி உற்சாகமூட்டக் கேட்காத தமிழர் காது ஏது! தமிழரின் எதிரிகள் விரண்டோடும்படி, தூக்கித் துரத்திய அந்தக்கைகள், தமிழர் தலைவருடன் தமிழகத்திலே நடமாடிய அந்தக் கால்கள், தமிழருக்காக உழைத்து உழைத்து உருமாறிய அந்த உடலும், இன்று, மண்ணில் சேர்ந்து விட்டது. அவரது உணர்ச்சியும், அந்த உணர்ச்சியை எதிர்ப்போரைக் கண்டதும் அவரடையும் உக்கிரமும், தமிழரில் யார் முன்னேற்றமடைந்தாலும், கண்டு பூரிக்கும் இயல்பும், நாமறிவோம், அறிந்ததாலேயே இன்று,

கசங்கிய கண்களுடன், கை நடுக்குற, நெஞ்சு பதைக்க நிலைதடுமாறி, இந்தச் சோகச் செய்தியை எழுதுகிறோம். பெரியாரின் சுற்றுப் பிராயணங்களிலே பலமுறை அவர் கலந்து கொண்டு, பலமாநாடு, பொதுக்கூட்டங்களில் பங்கு கொண்டு தமிழரின் மணியாகத் திகழ்ந்தார். அத்தகைய மணியை இழந்தோம், என்செய்வோம். தமிழரின் வீரத்துக்கும், வாலிப உணர்ச்சிக்கும், இலாப நோக்கமற்ற கட்சிப் பற்றுக்கும், நடமாடும் உதாரணமாக இருந்த நமது நண்பரை இழந்தோமே, நாம், உய்யும்வகை குறைந்தோமே, என்றெண்ணிக் கலங்குகிறோம். அவருடைய உடலும் சுடலை செல்லுகிறது. தோழர்களிடை உரசி, எதிரிகள்மீது மோதி, தமிழரின் இயல்பை எடுத்துரைத்த உடலும் சுடலை செல்லுகிறது! தமிழரின் அன்பும், மரியாதையும், அவருக்குப் பரிசாகத் தந்தது இயக்கம். பதவியல்ல, பணமல்ல, பட்டப்பணியல்ல! அவருடைய வியர்வையும், இரத்தமும் கட்சிக்கு அவரளித்தார், இன்று அவரது சவத்தைத் தமிழர் தமது கண்ணீரால் கழுவுகின்றனர். மலர்முகம் படைத்த மணி நீயோ மறைந்தாய், எம்மைப் பிரிந்தாய்.! மணி மறையினும் மணியின் புகழ் ஒளி தமிழகத்திலே நின்றுலவி, நமக்கு வழி காட்டுமாக. அவரது குடும்பம் நெஞ்சங்குமுறி நிற்கும், நாம் என்ன கூறுவோம் அவர்களை ஆற்ற, தேற்ற அவர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களின் துக்கத்தைத் தமிழகம் பங்கு கொள்கிறது. இறந்தது அவர்களின் மணியல்ல, தமிழரின் மணி! எங்ஙனம் தாங்குவோம் துக்கத்தை! என் செய்வோம்!

*(திராவிட நாடு - 31-5-42)*

# 4. அழகான சிலை! தலைதான் இல்லை!

என்ன அழகு! எவ்வளவு திறமை! உயிருள்ள உருவம் போன்றிருக்கிறது! இந்தச் சிலையினைச் சமைத்த சிற்பியின் திறமையை என்னென்று புகழ்வது! என்று, அந்தச் சிலையினைப் புகழாதார் இல்லை. குதிரை மீதேறிக் கொண்டு, ஒரு கையிலே வாளைப் பிடித்துக் கொண்டு மார்பினை முன்னிறுத்தி அமர்ந்திருக்கும் மாவீரனின் சிலை! குதிரையின் குளம்புமுதல், வாளின் கூர்மை வரையிலே, சிலையிலே விளங்குகிறது. ஆம்! சிற்பி தன் முழுத்திறமையுடன் அந்தச் சிலையைச் சமைத்தான். ஆனால், அந்தச் சிலைக்குத் தலைமட்டும் இல்லை! அழகான சிலைதான், தலைதான் இல்லை, என்று கண்டோர் கூறிச் சோகிக்கின்றனர். இவ்வளவு கெம்பீரமாகக் குதிரை மீதமர்ந்துள்ள வீரனின் முகம் எவ்வண்ணமிருக்குமோ, விழியிலே கனல் கிளம்புவதையும், புருவம் நெரித்திருப்பதையும், மீசை துடித்திருப்பதையுங் கூடவன்றோ இவ்வளவு திறமையுள்ள சிற்பி, விளங்கச் செய்திருப்பான். என்ன பரிதாபம்! சிலைக்குத் தலைதானே இல்லை!! என்று கூறிக்கசியும் நிலையைத் தமிழர் பெறும் நடவடிக்கையொன்று நடைபெற்றிருக்கிறது - தஞ்சைத் தரணியிலே.

மூவேந்தருள் ஒருவரும் முத்தமிழ் வளர்த்தவரும், தமிழ்த் தரணியின் கொடியைத் தாரணியில் பல்வேறு இடங்களில் மதித்திடும்படியான நிலையை உண்டாக்கியவரு மான. இராசராச சோழர் விழா, 7-11-43ல் தஞ்சை, பெரிய

கோயிலில் கொண்டாடப்பட்டதாம். தமிழருக்குத் தமிழ் உணர்ச்சியும், நாட்டுப்பற்றும், பண்டைச் சீரும் சிறப்பும் உணர்வதால் ஏற்படும் எழுச்சியும், உண்டாக, இத்தகைய விழாக்கள் பயன்படும். ஆம்! அந்த நல்ல காரியத்தை, நடத்திய முறை இருக்கிறதே, அதுதான் சிலை அழகுதான், தலைதான் இல்லை என்று நம்மைக் கூறிடச் செய்கிறது. நல்ல நோக்கம், நேர்த்தியான திட்டம், ஆனால். அந்நாள். வெறும் ஏடுபடிக்கும் பீடை நாளாக்கப்படலாமா? இராசராசன் விழாவிலே, சோழ மன்னர்கள் வீரம், பெருமை, அறிவாற்றல், பர்மாவில் வெற்றிக்கொடி நாட்டிய வீரம், வாணிபம் அவர்கள் காலத்திலே செழித்திருந்த வரலாறு, கலையும் ஒளியும் மிகுந்திருந்த காட்சி என்பவைகள், மக்கட்குத் தக்கோரால் எடுத்துரைக்கப்பட்டு இருக்குமானால், தமிழர், தன்னுணர்வு வீரம், பெற முடியும். கனகவிசயரை முறியடித்துக் கல் கொணர்ந்த சேரன் செங்குட்டுவன், கடற்படைகொண்டு பர்மாவை வென்ற இராசேந்திரன், கடாரம்; வென்ற குலோத்துங்கன் போன்ற வீரத் தமிழ் மன்னர்களின் விழாக்கள், விலாமுறிந்துள்ள தமிழரின் உடலிலும் உள்ளத்திலும்; புதுவிசை உண்டாக்கச் சோர்வைப் போக்க, ஆர்வம் பிறக்க, ஆற்றல் ஊற்றெனப் பெருகப் பயன்படுத்தப்படவேண்டும். தமிழர் ஏதேதோ விழாக்கொண்டாடி, எடுப்பார் கைக் குழவியாகி, இயல்பிழந்து இடருற்றுத் தவிக்கும் இந்நாளிலே. தமிழகத்தின் பெருமையை விளக்கும் பெருநாட்களை முறையுடன், தமிழ்நாட்டினிடம் உண்மைப்பற்றுப் பிறக்கும் விதமாகக் கொண்டாடுவதன்றோ தக்கோர் செயலாகும். அதை மறந்தனர், தஞ்சைக் கோயிலிலே விழாவாம், அதற்கொரு

அனந்தநாராயணய்யர் தலைவராம்! கண்ணப்பர் கதைபற்றிப் பிரசங்கமாம், கிருபானந்தவாரியாரின் சொற்பெருக்காம்! இராசராசன் விழாவுக்கும் இந்தப் புராணக் குப்பைகட்கும் தொடர்பு உண்டாக்குவது, தமிழர் பணியாகுமா? சந்துவிட்டால் வந்துவிட்டேன் என்று கூறிடும் ஆரியத்துக்கு, ஒரு சிறந்த வீரத்தமிழ் மன்னன் விழாவிலே இடமளிப்பதா? புராணப் பிரசங்கமன்றி, இராசராசன் விழாவுக்குரிய பொருள் ஆற்றுவார் தமிழகத்திலே இல்லையா! தமிழக வரலாறு, தமிழக வளம், தமிழ் வீரம், தமிழ் வாணிபம், முதலியனவற்றிலே வல்லுநர் இல்லையா? கண்ணை இழந்தவர் கதையும் காதளவு விபூதி பூசிக் கனகசபேசன் கூத்தினைப் பாடிய இராமலிங்கர் கதையுமின்றி, வேறொன்றுமறியாப் பராபரங்கட்குத் தமிழ் மன்னர் விழாக்களிலே இடந்தருவது, அவர்களுக்குப் பெருமை தரக்கூடும், செவிக்கு ஏதேனும் சத்தம் தேவை என்று நோக்குடையோருக்கு இன்பம் இருக்கும். ஆனால் தமிழ்நாட்டை எங்ஙனம் அது வளப்படுத்தும் என்று கேட்கிறோம். மறைமலைகளும், பாரதிகளும், கதிரேசர்களும், கலியாணசுந்தரரும் கேட்பாரற்றா கிடக்கிறார்கள், அவர்கள் அறியாரா, இராசராசன் வரலாற்றினை! அவர்கள் யாரும் காணோம்! தமிழ்வரலாற்று விளக்கம் காணோம்! வீரவணக்க விழாக் காணோம்! விரிவுரைக்கு இருபுராணிகர்களும் தலைமைக்கு ஒரு ஐயரும், தஞ்சைத் தரணியில் கிடைத்தனர் போலும்!

இராசராசன் ஆண்ட தரணி, எவ்வளவு சீர்கேடடைந்தது என்பதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்? இந்த நிலையிலே தமிழகம் இருத்தலாலன்றோ, தஞ்சையை அடுத்த

திருவையாற்றிலே, சமஸ்கிருதக் கல்லூரி மாணவர்கள், தமிழ் மாணவருடன் இருந்துண்ண மறுத்து, இன்று அரிசியும் பிறவும் படிபெற்றுத் தனியாகச் சமைத்து உண்கின்றனர். அந்தப் பேதம், அவ்வளவு அருகிலேயிருக்க, சமரச சன்மார்க்க போதமாற்றினாராம் குகப்பிரியர், கிருபானந்த வாரியார்! இந்தப் பேதத்தைக் கண்டும் துடிக்காத உள்ளமும், உறுத்தாத தோலும் படைத்த தமிழகத்துக்கு இராசராச சோழர் விழா ஒரு கேடா! என்று கேட்கிறோம். வெட்கம், வெட்கம்!!

*(திராவிட நாடு - 28-11-43)*

# 5. மகிழ்நன் மறைவு!

"மகிழ்நன்" என்ற புனைபெயருடன் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பகுத்தறிவுக்கு வழிகோலும் முறையில், ''செந்தமிழ்ச்செல்வி'' என்னும் திங்களிதழில் எழுதித் தமிழ்நாட்டுவர்க்கு, நடுநிலை திறம்பாத முறையில் அறிவுச்சுடர் கொளுத்தியவரும், வேலூர் ஊரீஸ் கல்லூரித் தலைமை ஆசிரியராகப் பலகாலம் அலுவல் பார்த்தவரும், அண்மையில் வேலூர் மாவட்ட யுத்தப்பிரசார அமைப்பாளராக இருந்து நாட்டுப் பணியாற்றியவருமான அறிஞர் தோழர் கே.பி. சந்தோஷம், பி.ஏ., எல்.டி., அவர்கள் கடந்த 14-12-43ல் திடீரென இயற்கை எய்திய செய்தி எம்மை ஆற்றொணாத் துயரத்திற்குள்ளாக்கிற்று.

மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் கட்டுரைகளை மன்பதைக்குதவிய மகிழ்நனின் மறைவு, உண்மையிலேயே

தமிழ்நாட்டுக்கு ஒருஈடு கொடுக்க முடியாத நஷ்டமாகும். அவருடைய ஆழ்ந்த கருத்தோடு கூடிய அழகிய கட்டுரைகள் ஒவ்வொன்றும், படிப்பவர்கட்கு நகைச்சுவையையும், பொருட் சுவையையும் தந்து, மக்களைப் பகுத்தறிவென்னும் பாதையில் கொண்டு வந்து விடுவதாகவே இருக்கும்.

தோழர் மகிழ்நன் அவர்கள் கிறித்துவ வகுப்பைச் சேர்ந்தவர் ஆனால் அவருடைய அறிவுச்சுடர், அவர், இன்ன வகுப்பைச் சார்ந்தவர், என்று எவராலும் சொல்லமுடியாத முறையில் பிரகாசிக்கிறது. தோழர் மகிழ்நன் அவர்களால் எழுதப்பட்ட "மகிழ்நன் ஆராய்ச்சிக் கட்டுரைகள்" என்ற சிறந்த நூலே யாம்கூறும் உண்மைக்குச் சான்றாகும். எல்லோர்க் கும் எல்லாத்துறையிலும் நண்பராய் இருந்து நல்லறிவு வழங்கிய தோழர் மகிழ்நன் அவர்களின் மறைவால் வருந்தும் அவருடைய துணைவியாருக்கும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

*(திராவிட நாடு - 26-12-43)*

# 6. வரப்போகுதய்யே.......!

மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப்போகுதய்யே, என்று பாடினாராமே நந்தன், அந்த நாள் வருகிறது. ஊர் பலவற்றிலே, உள்ளே கிடக்கும் உற்சவ மூர்த்திகள் வெளிக் கிளம்புவர்! திருவாதிரை ஒருவாய்க்களி, என்ற பேச்சும், திரும்பிப் பார்த்தால் உலக்கைத்தடி என்ற ஏசலும், நடக்கும்.

அத்திருவிழாவிலே கலந்து கொள்பவர்கள் சேவை செய்துவிட்டு, நெற்றியிலே அர்ச்சகர் அளிக்கும் திருச் சாந்தினை அணிந்து வீடு திரும்புவர், மோட்சத்திற்கு அச்சாரம் தந்துவிட்டதாகக் கருதிக்கொண்டு. அந்த விழாவிலே, திலகமிடும் செயல்புரியும் சீலர்கட்கு, அதை ஒட்டியுள்ள புராணம் தெரியுமோ, என்பது சந்தேகந்தான். தெரிந்தால், தன்மானமுள்ளவன், இத்தகைய திருவிழாவிலே கலந்து கொள்ளவுமாட்டான் திலகமிட்டுக் கொள்ளவுமாட்டான். கேட்க ஆபாசமானது, அந்தத் திலகத்தின் திருக்கதை!

சிவனுக்கும் காளிக்கும், நர்த்தனம் நடந்ததாம் முன் பொருபோது. சளைக்காமல் சதிராடிய காளியை எப்படியேனும் தோற்கடிக்க வேண்டுமென்று கருத்துடன் தோடுடைய செவியன், காலைத் தூக்கி நின்று ஆடினாராம். ஒரு ஆடவன், பெண்ணின் எதிரே காலைத் தூக்கி நின்று ஆடினால், காட்சியின் கோரத்தையும், அதைக் காணநேரிடும் அம்மையின் கண்ணிலும் கருத்திலுமுண்டாகும் மிரட்சியையும் விவரிக்க வேண்டுமா! அதிலும், அவர் எப்படி எப்படி ஆடுகிறாரோ, அப்படியெல்லாம் அம்மையும் ஆடவேண்டும் என்பதே நர்த்தனப்போட்டியிலே முக்கியாம்சம்: என்ன செய்வாள் காளி? எப்படிக் காலைத் தூக்கி ஆடுவது? தோற்றாளாம். இந்தக் கேவலமான முறையில் கெலித்தக் கடவுள், களித்தாராம், இன்றும் பக்தர்கள் இதைத்தான், காலைத் தூக்கி நின்றாடிய தெய்வமே! என்று பாடிக்களிக்கின்றனர். புராணம் இத்துடன் முடிந்திருந்தால், திருவாதிரை திலகம் ஏற்பட்டிராது. மேற் கொண்டும் ஒன்று நடந்தது, அதைவிட ஆபாசமானது. சிவனாரின் நர்த்தனத்தின்போதும் ஜடையிலேயே இருந்தாளாம்

கங்கா தேவியார். திடீரெனச் சிவனாரின் நெற்றியிலே, உதிரம் ஒழுகிற்றாம். அவர்கீழே விழவுமில்லை, வேறுவகை காயமும் ஏற்படவில்லை. அவர் தெரிந்து கொண்டார், உதிர உற்பத்தியின் காரணத்தை, மேலே இருந்த கங்கையும் சற்று வெட்கினார்கள், திடீரென மாதவிடாய் ஆனதால், உதிரம் சிவனாருக்கு அபிஷேகிக்க வேண்டி நேரிட்டதற்காக. சிவனார், உதிரத்தையே திலகமாக்கிக் கொண்டார். அந்த உதிரத்தின் அறிகுறியாகத்தான் இன்றும் திருவாதிரையின்போது, பக்தர்கள், திருச்சாந்தை திருவிழாவிலே பெற்று, நெற்றியிலே தீட்டிக் கொள்கின்றனர். அறிவும் தன்மானமும் தமிழருக்குப் பிறந்தால், இனி இத்திருவாதிரைத் திலகத்தைத் தரிப்பானா என்று கேட்கிறோம். வெட்கக் கேடு! வெட்கக்கேடு!! வேண்டாம் இந்த மானமற்றசெயல்!!

*(திராவிட நாடு - 2-1-44)*

# 7. கையில் ஊமையர்!

அவன் ஓர் ஊமை! கையுமில்லை!! அவனைக் காவலுக்கு நிறுத்தினான், கருத்துக் குருடனொருவன். எங்கே, எதற்கு? பாறையிலே! அதன்மீது வைக்கப்பட்ட வெண்ணெய் உருண்டைக்கு!! வேளை எத்தகையது? கடும் வெயில்நேரம். பேச்சிழந்துக் கையுமிழந்தவனுக்குக் கண் மட்டும் கெட வில்லை! பார்த்தபடி இருக்கிறான், வெண்ணெயை, கதிரவனின் ஒளிபடப்பட, வெண்ணெய் உருகி வழிந்து ஓடுகிறது, பாறைமீது. விளக்கிக்கூறவோ வாயில்லை, ஊளையிடுகிறான்! வெப்பத்தால் வெண்ணெய் உருகி ஓடிப் பாறையிலே பாழாவது

தெரிகிறது, வெண்ணெயை வழித்தெடுத்து வேறிடம் கொண்டு செல்லவோ, கருத்துண்டு, கரமில்லை!! கரமுள்ளவரிடம்கூறி, வெண்ணெயை வேறிடம் எடுத்துவைக்கச் சொல்லவோ எண்ணமுண்டு, எண்ணத்தை எடுத்துரைக்கவோ, வாயில்லை! என்செய்வான், "கையிலூமன்"!!

"பசி! பசி! பஞ்சம், அகவிலை, நோய், அவதி!" என்றோர்புறம் அலறலும் அழுகுரலும் கேட்கிறது.

"கொள்ளை இலாபம் - கோடீஸ்வரனானான் - கோபுர உயரத்துக்கு மாளிகை கட்டினான்" - எனமற்றோர் புறம் பேசுவதும் கேட்கிறது.

"பொருள் இல்லை, பண்டமில்லை, அரிசி இல்லை, நெய் இல்லை, விரகு இல்லை, நவதானியம் இல்லை" என்ற விசாரம் ஒருபுறம், மற்றோர் புறத்திலோ 100001 காணிக்கை, 10001 பாதகாணிக்கை, 101 ரூபாய் பிட்சை என்ற பேச்சும், பத்து வண்டி சம்பாநெல், இருபது டின் நெய், பத்து டன் கட்டை, நவதானியம் நாற்பது மூட்டை வந்து இறங்கும் வைபவமும் நடக்கிறது!

பஞ்சையின் நெஞ்ச பதறுகிறது, படாடோபக்காரனின் பகட்டு பரவி வீசுகிறது! இந்நிலையால், நொந்திடுவோரிலே நெஞ்சறிந்ததைக் கூற இயலா, நாக்கிழந்தார் ஒரு பகுதி, நாவிருந்தும், இந்நிலையைத் திருத்தி அமைக்கும் நோக்கிருந்தும், செயலாற்றும் திறமற்றோர் வேறோர் பகுதி எனவே கண்டு கவலைகொண்டு, உளைச் சேற்றிலே சிக்கி உயிர்வாதை அடைகின்றனர் பல கோடிமக்கள்.

பாறையிலே வெண்ணெய் பாழாவதைப் பார்த்திருந்தும், கையில்லாத ஊமை, காரியமேதும் செய்யாதிருந்திடல் போலத்தான், பேதத்ததால் விளையும் பெருந்தீங்கினைக் கண்டும், கூறவும் குறை தீர்க்கவும் முடியாதநிலையிலே, இங்கு, கையில் ஊமையர் உள்ளனர். பொருள் அழிவைத் தடுக்கவோ, புத்தியை அரித்திடும் புல்லுருவியைப் பெயர்த் தெடுக்கவோ, முடியாது, பேசவுமார்க்கமின்றிப் பிதற்றியோ புலம்பியோ வாடுகின்றனர் நம்மக்கள். ஊமையன் கண்முன் உருகிடும் வெண்ணெய்போல, இவர்கண்முன்னே, செல்வமும் அறிவும் பாழாக்கப்படுகிறது. அதைக்கண்டும் தடுக்கும் வகையற்று வதைகின்றனர். கையில் ஊமைகள் தொகை பெரிதாக உள்ளவரையில், பிறர் பொருளைச் சூறையாடிச் சுகம்பெறும் போகிகளும், மற்றவர் வாழ்க்கையை மிதித்து துவைத்து, அதனையே தமக்கு வாசமாகக் கொண்டு வாழும் வன்னெஞ்சர்களும், வாகையுடன் வாழத்தான் செய்வார்கள்! நாடெங்கும் வேதனைக்குரல் உணவுப் பொருள்முடை! மக்கள் யாவருக்கும் மனவாட்டம்! மனைகளிலே, விறகில்லா வேதனைத்தீ, பஞ்சத்தைச் சூடாக்கிப் பருக அளிக்கும்நிலை. அதேநேரத்திலே, யமுனை ஆற்றங்கரையிலே வேதஒலி, அந்த ஒலி குறையாதிருக்கவும், பசி அலைமோதாதிருக்கவும், உணவுப்பொருள், குவியல் குவியலாக!! வேதியக்கூட்டம், வேள்விக்காக! நூறு அக்னிக்குண்டமாம், அதைச் சுற்றிலும் பூசுரக் கூட்டமாம், இதற்குச் செலவு 13 இலட்சமாம்!! 1000 மணங்கு நெய்! 5000 மணங்கு சமித்து இவைகளைப் பொசுக்க 1500 ஆரியப் புரோகிதர்!!

புதிய புதிய பர்ணசாலைகள் கட்டப்பட்டு,

ஓமகுண்டங்கள் வெட்டப்பட்டு, வண்டி வண்டியாக விறகு குவிக்கப்பட்டு, விலையுயர்ந்த பண்டங்கள் குண்டங்களிலே கொட்டப்பட்டு, மகாயாகம் ஒன்று, நடக்கிறது. இதற்கு நாலு சங்கராச்சாரிகள், பிரசன்னமாம்! வங்கத்திலே மக்கள் மடிந்தாலென்ன சேரன் தங்கிய சீமையிலே சீர்கெட்டாலென்ன, பங்கரசிக்காலமாக இருந்தாலென்ன, பஞ்சம் தலை விரித்தாடினாலென்ன, கையில் ஊமையர் நிரம்பிய இடத்திலே, அவர் கண் முன்பே, புல்லர்கள் பொருளைப் பாழ் செய் கின்றனர், புலம்பவும் உளறவுமன்றி, கையிழந்த ஊமையால் வேறென்ன செய்ய முடியும்! நாட்டுச் செல்வத்தைக் காத்திடும் பொறுப்பு, இந்தக் கையில் ஊமைகளிடமிருக்கிறது! சர்க்காரோ, குறுக்கிடமாட்டார்கள், மதவிஷயத்திலே தலையிடோம் என்று மகாராணியார் கூறிவிட்டார்கள்!! உலகோ தடுக்காது. இப்படி ஒரு உன்மத்தம் பிடித்த நாடு, வேடிக்கைபொருளாக இருக்கட்டும் என்றே சும்மா இருக்கும், மேயோ போன்றாருக்கு எழுத்தோவியத்துக்குப் பயன்பட்டும் என்றுமிருக்கட்டும். எல்லாம் அறிந்த இந்த நாட்டிலே, செல்வத்தைச் செல்லாய் அரிக்கும் செயலென்னமோ, தங்குதடையின்றி நடக்கிறது! பெருமையின் சிகரம்!! குணக்குன்று!! அறிவின் உச்சாணி இதோ, இந்தப் பரதகண்டந்தான், சந்தேகமா, உங்கட்கு?

மமதையும் மடத்தனமும், மக்களைப் பற்றிக் கவலை யின்மையும் அறிவினிடம் ஒத்துழையாமையும் எவ்வளவு ஊறிப் போயிருந்தால், உலகு இன்றுள்ள நிலையிலே, ஊர் இன்று படும்பாட்டிலே, ஏழை அழுத கண்ணீர் ஆறென ஓடுகையிலே, இந்த அர்த்தமற்ற, நேரத்தை, நினைப்பை,

பொருளைப் பாழாக்கும் செயல் நடக்கும், என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம். துயரால் துடிக்கும் மக்களுக்குப் பயன்படுத்த வேண்டிய பண்டங்களைப் பாழாக்கும், ஈரமற்ற நெஞ்சர்கள், நெய்யை நினைப்பிலுங் கொள்ளமுடியா மக்கள் நிரம்பிய நாட்டிலே, நெய்யை நெருப்பிலே கொட்டிடும் கொடுஞ்செயலினர், ஏழை அழுத கண்ணீர் கண்டும் இரக்கமில்லா இத்தீயர்கள், உள்ளனரே, இவரை அடக்குவார் இல்லையே!! பல இலட்சம் பாழாகிறதே, பஞ்சகாலத்திலே! யாகமாமே, மகாயாகம்!! உலகுக்கே க்ஷேமமாம் இதனால். இந்த உளறுவாயுரை கேட்டு அறிவுலகம் பொறுக்கிறதே, என்ன அதிசயம்!! நூறு அக்னிக்குண்டங்கள் இருந்த அந்த நாட்களிலேதானே, சுயாட்சி சூறையாடப்பட்டு, வேற்று நாட்டானுக்கு இந்நாடு வெள்ளாட்டியாக்கப்பட்டது. வேதஒலி விண்ணை முட்டிய வேளையில்தானே, வேலை தேடி வந்த வெள்ளைக்கார கிளைவின் வேட்டுச் சத்தம் நந்தம் நாட்டினிலே கேட்டது. அன்று, அடிமைத்தனம் வந்ததைத் தடுக்காத, அக்னிக்குண்டமும் அதனருகே அமர்ந்து அங்கத்தை வளர்க்கும் தொங்குவயிறினரும், இன்று, நூறு அக்னிக்குண்டம் அமைத்து, என்ன சாதிக்கப் போகிறார்கள்!! ஏனோ, நமது மக்கள் இவை பற்றிய சிந்தனையின்றி உள்ளனர்! சிந்திப்போரும், கையில் ஊமைகளாகத்தானே உள்ளனர்! யமுனைக்கரையிலே மட்டுமா, பல்வேறு இடங்களிலே நடக்கிறது, இத்தகைய பாழும் விழாக்கள், கும்பாபிஷேகங்களுக்கும், கொட்டு முழக்குடன் கூத்துக்கும் குறைவில்லை! ஜீவனோபாயத்துக்கு மார்க்கமின்றி ஜனங்கள் வாடிட கோயில் ஜீரணோத்தாரண வேலைகள் நடந்தபடி உள்ளன. பட்டினிப்பட்டாளம் பரிதவிக்கும் வேளையிலே,

பல்லக்கிலே, சங்கராச்சாரிகள் பவனி வருவதும், பட்டணப் பிரவேச விழாவிலே தம்பிரான்கள் களிப்பதும், நடந்த வண்ணம் இருக்கின்றன. இந்த நடவடிக்கைகளிலே ஈடுபடுவோருக்கு இரக்கம் இல்லை, இதைக்கண்டு வேறுபல வேலைகளிலே மனதை அலையவிடும் அறிவாளிக்கோ ரோஷ மில்லை, பெரும்பாலான மக்களுக்கோ பேச்சுமில்லை, கையுமில்லை, மூச்சும் முழியும் மட்டும், முன்னது சுருண்டபடியும் மற்றையது இருண்டவண்ணமும் இருந்திடக் காண்கிறோம். இப்படியும் ஒரு நாடா! இதற்குப் புண்ணிய பூமி' என்ற பெயர் ஒரு கேடா! பொருளைப் பூசுரரின் ஆபாசத் திருவிளையாடலுக்குக் கொட்டி அழத்தானா, இத்தனைபாடும்!!

பஞ்சத்தால் பதைத்த மக்களைப்பற்றிக் கவலை கொள்ளாது, பஞ்சணையிலே பரிமளவல்லிகளின் பாகுமொழி பருகி, பாதமலர் வருடி, இன்பபுரியில் இடறி விழுந்தவரை, மக்கள் வீழ்த்தி ஜனநாயகத்தை வாழ்த்தின, வரலாற்றுக்குத்தான், பிரஞ்சுப் புரட்சி, ரஷியப் புரட்சி என்று பெயர். புரட்சிக்கு முன்னர், அவ்விரு நாடுகளிலே போகத்திலே புல்லர்கள் புரண்டதற்கும், இங்கு இன்று, இளித்தவாயரை ஏய்த்து மதக்கிறுக்கர்கள், மதோன்மத்தராக வாழ்ந்து, பணம் படைத்தோரையும்துணைக்கொண்டு நிற்கும் காட்சிக்கும், என்ன வித்தியாசம் காணமுடிகிறது! மெய்சிலிர்க்கிறது, இரத்தம் கொதிக்கிறது, மேதினிபுகழ் அந்த வரலாறுகளைப் படித்தால். என்று மேடை அதிரக்கூறும், மேதினத் தோழர்கள்" இந்த நிலையைக்கண்டும், நாவசைக்க நடுங்குவதைக் காணீர்! கையில் ஊமைகளுடன் வாழும் நிலைக்காகக் கைபிசைந்து கண்ணீர்

சொரிந்து, நிற்பீர், என்று ஓமகுண்டர்கள் கூறுகின்றனர்.

உழைக்காத, உழைப்பின் பெருமையை உணரமுடியாத, பசியின் கொடுமை தெரியாத, பாதசாரியாய் உலவிக்கால் கடு கடுத்தரியாத, ஆடைக்கு அலையாத, அங்கத்தை வளர்க்க அரும்பாடுபடும் மக்களின் மனைகளிலே மூண்டிடும் மனத் துயர்தனைத் தெரியாத சங்கராச்சாரிகளுக்குச் சந்தர்ப்பனையாம், சன்மானமாம், பாதகாணிக்கையாம், பிச்சையாம்!! காஞ்சீபுரத்திலே கூடாரமடித்துக் கொட்டு மேளத்துடன், கும்பல் பரிவாரத்துடன், குலநேசத்தைக் காட்டி, குறுகிய மனப்பான்மையினருக்குக் கடிவாளம் பூட்டிக் குவிக்கிறார் பொருள், கோலாகலமாக, சங்கராச்சாரியார். ஐந்தை ஐம்பதுக்கு விற்ற அருங்குணவான்களும், அருக்கு மங்கையர் மலரடி வருடிட ஆயிரம் தரும் ஆசாபாசத்தின் அடிமைகளும், ஏமாளியும் கோமாளியும் கொட்டிய பொருளால் கட்டிய மாளிகையைக் கடவுள் தந்தவரம் என்று கருதிடும் கண்ணியர்களும், சங்கராச்சாரியாருக்கு - உலகமே மாயை என்று கூறும் உருவுக்கு - அகம் பிரமம் என்றுரைக்கும் விப்பிரருக்கு - பணத்தைப் பக்தியுடன் தந்து பாதநீரை உண்டு பரமானந்தமடைகின்றார்கள்!!

எதிரேவரும் ஏழையை ஏறெடுத்தும் பாராத இச்செல்வவான்கள், எட்ட நின்று, தட்டில் பணத்தைக் கொட்டி விட்டு, மோட்சத்திற்கு முன்பணம் கட்டி விட்டோம் என்று நினைத்துக் கொள்கின்றனர்! சிறுசெயலும் பெருஞ்செல்வமும் இணைந்த இந்த உருவங்களின் உலாக்காட்சியைக் கண்டு, கையில் ஊமைகள் என்ன செய்ய முடிகிறது. காலத்தின் போக்கையும்

மீறிநடக்கும் இக்கொடுஞ்செயல்களைக் கண்டபிறகுமா, கையில் ஊமைகளாகக் காலந்தள்ளுவது!

கையில் ஊமைகளாக மக்கள் உள்ளதற்குக் காரணம், விளக்கமும் திட்டமும் அற்றதும், வீணருக்கு வீரரைப் பலியிடுவதும், ஜாதிபேதத்தைக் கட்டிப் புரளுவதுமாகிய இந்து மதத்தை நாட்டினர் கட்டியழுவதுதான். கான்பூரிலே, சென்ற கிழமை தோழர் என்.சிவராஜ் அவர்கள் தலைமையில் கூடிய எல்லா இந்திய தீண்டாதார் மாநாட்டிலே, பழங்குடி மக்களின் பார்த்திபனாம் டாக்டர் அம்பேத்கார் இந்துமதமே நமது இழிநிலைக்கும் இடர்ப்பாட்டுக்கும் காரணம், அதனை உதறித் தள்ளினால்தான் உரிமை பெற முடியும், உயர்நிலை அடைய முடியும் என்றுரைத்தார். பழங்குடி மக்கட்கு மட்டுமல்ல, திராவிட இனத்துக்கே விடுதலை மார்க்கம் அதுதான்! கனபாடி களிடம் நம்மைக்காட்டிக் கொடுப்பதும், நம்மவரைக் கையில் ஊமையாக்குவதும், அந்த இந்துமதந்தான்! இதனை அறியாதார் எதனையும் அறியாதாரே!! நம்மவர் பிறவி ஊமைகளல்ல, பார்ப்பனீயம் வாய்க்குத் தாளிட்டு விட்டது! கரமின்றித் பிறந்தவருமல்ல, காதகரின் கட்டுத் திட்டமெனும் தளைகளை, தமிழரின் கரங்களைச் செயலற்ற தாக்கியுள்ளன. பிறவியிலேயே, கையில் ஊமையரல்ல, பார்ப்பனியத்தை ஏற்றதால், கைக்கட்டப்பட்டு, வாய் அடைக்கப்பட்டு வதைகின்றனர். ஒரு சீரிய முயற்சி செய்யின், கையில் ஊமையராக இன்று காணப்படுவோரின், அடிமைத் தனம் ஒழியும், அறிவுடைமை ஓங்கும், மகிழ்ச்சி பொங்கும்! கையில் ஊமையராகக் காலந் தள்ளும் வரையிலே, ஓமகுண்டங்கள் இருந்து தீருவது மட்டுமல்ல, அக்குழிகளிலே,

நெய்க்குப்பதில் மக்களின் இரத்தமும், விறகுக்குப் பதில் கை கால்களும், போட்டுச் சுடப்பட்டாலும் ஆச்சரியமிருக்க முடியாது, நரமேதயாகமும் நடத்திய நாடுதானே இது!

*(திராவிட நாடு - 6-2-44)*

# 8. ஷூஸ்டரின் சோகம்!

"தம்பி! என்ன இது? உன் அந்தஸ்து என்ன, பெருமை என்ன, பிரதாபம் என்ன, நீ இப்படித் தனியாகத் துணையின்றிப் போகலாமா? செச்சே நான் தெருக்கோடியிலே நீவருகிறபோதே பார்த்தேன், பதைத்தேன், இப்படி வரலாமா?" என்று, மடமடவெனப் பேசிக்கொண்டே, தோளின் மீது கைபோட்டுச் சொந்தம் பாராட்டினான் சொக்கன், வீதி வழியே வந்து கொண்டிருந்த குப்பனைக்கண்டு. குப்பன், திணறிப்போனான். யார் இந்த ஆசாமி நமக்குத் தெரியவில்லை, அவரோ நெடு நாட்களாக நம்மைத் தெரிந்தவர்போல் பேசுகிறாரே, புகழ்ச்சியாகப் பேசுகிறாரே என்று யோசித்தான். குப்பனை இந்த நிலைக்குக் கொண்டுவந்த சொக்கன், சும்மா இல்லை, "டேய்!" என்று வண்டியோட்டுபவனைக் கூப்பிட்டான் அதிகாரத்தடன். வண்டி வந்தது, "தம்பி! ஏறு வண்டியிலே" என்று அன்பும் அதிகாரமும் கலந்த குரலிலே கூறினான். "நடந்தே போகலாமே......" என்று கூச்சத்தோடு கூறினான் குப்பன். இடிபோன்ற சிரிப்புடன், "நல்ல காரியம் செய்கிறாயப்பா! குடிப்பது கூழாகவிருந்தாலும் கொப்பளிப்பது பன்னீராக இருக்கிறது, நம்ம ஊர் வாலிபப்பிள்ளைகளுக்கு நீ

லட்சுமீபுத்ரன், சரஸ்வதி கடாட்சம் பெற்றவன். உனக்கென தலைவிதியா நடந்துசெல்ல. இனிமேல் எப்போதும் நடந்தே போகக்கூடாது, வண்டியிலேதான் நீ போகவேண்டும்'' என்று சொக்கன் கூறினான். லட்சுமிபுத்ரனை ஏற்றிக் கொண்டு போகையிலே, குதிரை, 'காலப்பிலே' போகவேண்டும் என்று கருதினான் போலும், வண்டிக்காரன், சவுக்கைச் சரமாரியாக வீசினான், உள்ளே குப்பன் திணறினான். அவன் அதுபோன்ற ''சவாரி'' செய்து பழக்கப்பட்டவனுமல்ல, புகழுரை கேட்டவனுமல்ல. எனவே, சொக்கனின் சொல்லபிஷேகம் அவனுக்கு ஆச்சரிய மூட்டிற்று. "நிறுத்து வண்டியை" என்று உத்தரவிட்டான் சொக்கன், ஒரு பெரிய ஓட்டலுக்கு எதிரே! "தம்பி, எனக்குத் தெரியும் நீ களைத்துவிடுவாய் என்று. ஆனால், மற்ற ஓட்டல்களிலே காபி, கழுநீர்போல இருக்கும். ஆகவே இவ்வளவு தொலைவு, உன்னை அழைத்து வந்தேன். இறங்கு, சூடாக ஒரு கப் காபி போட்டுக் கொள்வோம்" என்றான் சொக்கன். "இப்போது ஏன்? பசியில்லை" என்று குப்பன் கூறினான். சொக்கனிடம் பலிக்குமா இந்த வித்தை.

உள்ளேபோய் உட்கார்ந்த உடனே, சொக்கன் 'அம்பி'யைக் கூப்பிட்டார். "அம்பி! இதோபார், இன்று காப்பி கனஜோராக இருக்கவேண்டும். வரவேமாட்டேன் என்றார், நான் வற்புறுத்தி அழைத்து வந்தேன், நம்ம மானத்தைக் காப்பாற்று" என்று அம்பிக்குச் சொக்கன் கூறினார். அம்பி, "அப்படியே" என்று பதிலுரைத்தவிட்டுத் திரும்புவதற்குள், சொக்கன், "அம்பி இன்றைக்கு ஸ்பெஷல் என்ன" என்று கேட்டான். "அருமையான கோவாலாடு, ஆனந்த ஜிலேபி, ரம்மியமான ரசகுல்லா" என்று அம்பி அடுக்க ஆரம்பித்தான்.

குப்பன் இடையிலே புகுந்து, வெறும் காபி போதும் எனக்கு. இவருக்கு ஒரு ரசகுல்லா கொண்டு வாரும் என்றான். "ரொம்ப சரி! அம்பி அவர் பேச்சுப்படியே எனக்கு ஒரு ரசகுல்லா கொண்டுவா. கோவாலாடு அவருக்குக் கொண்டுவா" என்று உத்தரவிட்டார். அம்பிக்கு அதிகம் சொல்லவா வேண்டும். இனிப்பு முடிந்ததும், கொஞ்சம் 'காரம்' நடந்தது, பிறகு காபி, "பத்தணா அங்கே, பத்தணா இரண்டுபேர்" என்று அம்பி,துந்துபி முழங்கினான், சொக்கன் சொகுசாக நடந்தான் குப்பனுக்கு வழிகாட்டுவதுபோல. "பில்தரவேண்டிய இடத்திற்கு வந்ததும், "அடடா! ஆனைதாண்டவபுரம் ஜெமின்தார் போகிறார், தம்பி! இங்கே, இரு. இதோ வந்துவிடுகிறேன்" என்று கூறினான் சொக்கன். அவசர அவசரமாக வெளியே போய்விட்டான். அம்பி, "பத்தணா இரண்டுபேர்" என்று மீண்டும் கூவினான், குப்பன் பேந்தப்பேந்த விழிக்கிறான், சொக்கன் வந்தால்தானே! வழியிலே, வரும் ஏமாளியிடம் வாய்ச்சல்லி அடித்து, வயிற்றைக் கழுவும் வர்க்கம், அந்தச் சொக்கன்.' முகஸ்துதிகேட்டு இளித்தவாயனாகும் இனம், குப்பன். குப்பனைச் சொக்கன், முன்பின் கண்டதுமில்லை, ஆனாலும், முகக்குறியிலிருந்தே தெரிந்து கொண்டான், இவன் ஓர் ஏமாளி என்று!

சர். ஜார்ஜ் ஷுஸ்டர், அப்படி நம்மை முன்பின் தெரியாதவரல்ல! பழககமுள்ளவர், இங்கு அதிகாரம் செலுத்தியவர். எனவே, குப்பனுடைய குணத்தைச் சொக்கன், தெரிந்து கொண்டதைவிட, ஷுஸ்டருக்கு இந்தப் பூபாகத்தின் குணம் தொயும். எனவே, அவர், "இது புராதன நாடல்லவா! இதற்கு ஒரு கெடுதி சம்பவிக்கலாமா! இதனைத்

துண்டாடலாமா? இந்தத் துயரை நான் சகிப்பேனோ? எதிர்காலம் சரியாக இராதே! இதை எண்ணினாலே, எனக்கு ஏக்கம் அதிகரித்துத் தூக்கம் வர மறுக்கிறதே" என்றெல்லாம் பேசியிருக்கிறார் இலண்டன் பட்டினத்திலே. பிரிட்டனுடைய எதிர்காலத்தைப் பற்றிப் பிரிட்டிஷார் பிரிட்டனிலே பேசிக் கொள்வது முறை. ஆனால், இந்தியா ஒரு "இளித்தவாயன்" என்பதுதானே, ஏகாதிபத்தியச் சொக்கன்களின் எண்ணம். எனவே இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றி இலண்டன் பட்டினத்திலே, 'துரைமார்' பேசுகிறார்கள்!! குப்பனைச் சொந்தம் கொண்டாடியும் சுகம் விசாரித்தும், புகழ்ந்து பேசியும் துணையாகச் சென்றும், சொக்கன், தன் நட்பைக் காட்டிக் கொண்டது, எதன் பொருட்டு, நாவின் ருசியை உத்தேசித்து! அதுபோலத்தான், ஏகாதிபத்தியம் அடிக்கடி, "இந்தியா பூர்வபெருமை உள்ள நாடாயிற்றே! இதனைப் பாகிஸ்தான் என்றும் திராவிடஸ்தான் என்றும் பல பல பிரிவுகளாகச் செய்வதா? இதனால் இந்தியாவின் எதிர் காலம் கெட்டுவிடுமே! என்று பேசுவதன் கருத்து, 'இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்னை ஓய்ந்தபாடில்லை! சுயாட்சியை வழங்க வேண்டுமென்ற எண்ணமோ எங்கட்கு குறைந்தபாடில்லை. சுயாட்சியைத் தந்துவிடுவோமென்றாலோ இந்தியாவின் எதிர்காலம் என்னவாகுமோ என்ற பயம் எங்களை விட்டபாடில்லை" என்று கூறிக்கொண்டே இருப்பதன்மூலம், இங்கு கூடாரமடித்துக் கொண்டு, கொலுவீற்றிருக்கலாம். என்பதுதான். இது குறைமதிக் குப்பன்களுக்குத் தவிர, மற்றையோருக்கு நன்கு தெரியும். இந்த இயல்பைத் தெரிந்து, இங்குள்ள தலைவர்கள், தமக்குள் இருக்கும் இடர்ப்பாடுகளை, நீக்கிக்

கொண்டால் ஷுஸ்டர்களின் சுருதி குறையும்! இந்தியாவிலே உள்நாட்டுப் பிரச்னை இல்லை. அது தீர்க்கப் பட்டுவிட்டது. ஒரு இனத்தை மற்றோர் இனம் ஆள்வது என்ற ஆணவம் அழிந்தது. முஸ்லீம்களுக்குப் பாகிஸ்தான் தேவை என்பதை இந்துக்கள் ஒப்புக்கொண்டனர். இந்துக்களுக்கு இந்துஸ்தான் தேவை என்பதை முஸ்லீமும், திராவிடரும் ஒப்புக்கொண்டனர், திராவிடநாடு திராவிடருக்கே என்பதை இந்து, முஸ்லீம் ஆகிய இருசாராரும் ஏற்றுக் கொண்டனர். யார், யாரை ஆள்வது? எப்படி ஆட்சி இருப்பது? என்ற பிரச்னைகள் இனி இல்லை. உள்நாட்டுக் குழப்பம் இல்லை, வகுப்புப்பூசல் இல்லை. எனவே, துலாக்கோல் தூக்கி நிற்கத்துரைமார் இனித் தேவையில்லை, என்று கூறும்துணிவு, இங்கு உண்டாகாதவரை, சொக்கன், குப்பனை ஏய்த்தகதைபோல "இந்தியாவின் பூர்வபெருமை, இந்தியாவின் ஒருமித்தத் தன்மை இந்தியாவின் எதிர்காலம்". என்ற மொழியிலே ஷுஸ்டர்கள் பேசுவார்கள், அமெரிகள் ஆள்வார்கள், ஆகாகான் மாளிகைகள் இருக்கும், அரசியல் நெருக்கடி நீடிக்கும். இதனை அழகுற எடுத்துரைக்கிறார், லீக் காரியதரிசி நவாப் சாடா லியாகத் அலிகான், டில்லி மத்தியசபையிலே பேசுகை யில். நவாப் சாடா, காங்கிரஸ் தலைவர்களைச் சிறையிலிருந்து விடுதலைச் செய்தால் அவர்கள் லீகின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுவார்கள் என்பதற்கு ஒரு அறிகுறியும் காணோம். சரோஜினிதேவியாரின் அறிக்கையிலேயும் இந்த அறிகுறி இல்லை! இந்நிலையில் நாங்கள் என்ன செய்வது, பத்துக்கோடி முஸ்லீம்கள், தங்களின் தனியான கலாச்சாரத்துடன் தனியாக அமைத்துக் கொள்ள, வழி வேண்டும். அதற்குமட்டும்

காங்கிரஸ் தலைவர்கள் இசைவதாக ஜாடைகாட்டினால் போதும், அவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்கும் முயற்சிக்கு எங்களாலான எல்லா உதவிகளையும் செய்வோம், என்று தெளிவாகக் கூறியிருக்கிறார். இதனை உணர்ந்து, "உரத்த குரலிலே பேசும் பெரிய கட்சிக்காரர்" நடப்பதானால், உள் நாட்டுப்பிரச்னை ஒழிக்கப்படும். அது ஒழிந்து போனால், ஷுஸ்டர் போன்றவர்களின் "சொக்கன்வேலை" நடைபெறாது. எப்போது இதனை உணரப்போகிறார்களோ தெரியக்காணோம்.

இந்தியாவின் எழில்பற்றியும், பழமையைக் குறித்தும், பலபல பேசிடும், சொக்கன்களுக்கு, எந்த அளவு அன்பு இந்தியாவிடம் இருக்க முடியும் என்பது யாருக்குத் தெரியாது! பஞ்சணைக்கு இழுக்குமுன் பாவையிடம் கொஞ்சிடும் காமக்கூத்தன்போல, நாட்டின் பூர்வபெருமையைக் கூறிவிட்டு, அது என்றென்றும் வெளிநாட்டானின் காலடியிலே வீழ்ந்து கிடக்க வேண்டுமென்று விரும்பும் அரசக் கூத்தர்கள், ஆங்கில நாட்டிலே உள்ள சில ஏகாதிபத்யக்காரர்கள் ,அவர்களில் ஒருவரே ஷுஸ்டர். அவருக்கு மனம் வேதனைப்படுகிறதாம், இந்தியா பல பிரிவுகளாகப் போவது! எவ்வளவு அன்பு பாருங்கள்! இந்திய பூகோளப்படத்தைக் காப்பாற்றும புனித காரியத்துக்காகவே, பூவுலகிலே இந்தப் புண்யாத்துமாக்கள், அவதாரமெடுத்திருக்கிறார்கள் போலிருக்கிறது! அண்டையிலே இருக்கும் ஐரோப்பாவிலே, ஐம்பதுக்குமேல்பட்ட தனி அரசுகள் இருப்பது, ஷுஸ்டருக்கு மண்டைக்குடைச்சல் தரவில்லை. இந்தியாவில்தான், தனி அரசுகள் 'ஏற்படுவது அவருக்குத் தலைவேதனையாக இருக்கிறது. இந்தியா ஒரே நாடாக இருக்கவேண்டும் என்ற தர்மோபதேசத்தை இத்துரை

மகன், ஐரோப்பாவிலே செய்து பார்ப்பதுதானே அவ்வளவு தொலைவு சென்று தொல்லைப்படத் தேவையில்லை, அடுத்த வீடு இருக்கிறதே அயர்லாந்து, அங்கே, காட்டுவதுதானே, ஒரு பகுதி, அல்ஸ்டர் என்று பிரிக்கப்பட்டுத் தனி அரசாக அமைந்திருக்கிறதே, இதனைக்கண்டு, ஷூஸ்டர் துரைக்குச் சோகம் பிறக்காத காரணம் என்ன?

*(திராவிட நாடு - 13-2-44)*

# 9. பஞ்சமாம் பஞ்சம்!

பஞ்சம்! பசி! பட்டினி!! என்று கூவுகின்றார்கள்! யாருக்குப் பஞ்சம்? யார் பசியுடன் போராடுகின்றனர்? எங்கே தாண்டவமாடுகிறது, பட்டினி!

இதோ, பட்டியல் பாருங்கள், இந்தப் பஞ்சகாலம், பஞ்ச கச்சத்தைக் கண்டு பயந்தோடுவதை!!

பிப்ரவரி 2 - மன்னார்குடியில் மாத்வநவமி நடைபெற்றது, பிராமண சந்தர்ப்பணை நடைபெற்றது.

ஜனவர் 31 - திருச்சி மலைக்கோயிலில் கும்பாபிஷேகம், பசு மடத்தில் பொது ஜன உதவியால் சுமார் 2000 பிராமணர்களுக்கு அன்னம் அளிக்கப்பட்டது.

பிப்ரவரி 6 - திருவனந்தபுரம் மகாராஜாவின் தந்தையின் சஷ்டியப்தபூர்த்தியை முன்னிட்டுப் பிராமணர்களுக்கு (வைதீக முறைப்படி) தானம் வழங்கப்பட்டது.

பிப்ரவரி 4 – பெரிய குளம், பாலசுப்பிரமணியர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஐந்து நாட்களாக, ஆயிரக்கணக்கான பிராமணர்களுக்குப் போஜனம் அளிக்கப்பட்டது.

பிரவரி 7ந்தேதி காஞ்சிபுரத்தில், சங்கராச்சாரியார் நடத்திய கும்பாபிஷேகத்தை அனுசரித்துப் பிராமணர் களுக்குப் போஜனம் அளிக்கப்பட்டது.

ஜனவரி 30ந் தேதி, தஞ்சை ஜில்லா கலியாணபுரத்தில், லட்சார்ச்சனை நடைபெற்றது. அதை அனுசரித்து பிராமணர் களுக்கு (ததியாராதனை) போஜனம் அளிக்கப்பட்டது.

பிப்ரவரி 5-ந் தேதி மாலை தியாகராய நகரில் இராமாயண உபன்யாசம் செய்து வந்த சாஸ்திரிகளுக்குப் பண முடிப்பு அளிக்கப்பட்டது!

பஞ்சமும் பட்டினியும் இந்தப் ''பரப்பிரம்ம சொரூபிகளைத்'' தீண்டிற்றா? திக்கற்ற தமிழர்களே! இந்தப் "பட்டி" புகட்டும் பாடம் என்ன? சிந்தித்துப் பாருங்கள்!

*(திராவிட நாடு – 13-2-44)*

# 10. அருமை! அருமை!!

(இன உணர்ச்சியற்ற தமிழரே, இதோ பாருங்கள், ஆரிய இனத்தின், ஒருவருக்கொருவர் 'கைகொடுக்கும்' அருமையை)

திருக்காட்டுப்பள்ளியில், சர்.சிவசாமி ஐயரின் சேவையைப் பாராட்டிப் பேசி விட்டு, சர்.சி.பி. இராமசாமி ஐயரின் படத்தை, மகாகனம் சீனுவாசசாஸ்திரியார் திறந்து வைத்தார்.

மகாகனம் சாஸ்திரியாரை, வரவேற்றுப் பேசினார், சிவசாமி ஐயர் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் ஐயர், வந்தனோபசாரம் கூறினார் வைத்தியநாத ஐயர்.

ஜஸ்டிஸ் வரதாச்சாரியார், ஜஸ்டிஸ் பதஞ்சலி சாஸ்திரியார், சர். இராதாகிருஷ்ண ஐயர், டி.டி. கிருஷ்ண மாச்சாரியார், ராவ்பகதூர் ஜி.ஏ. நடேச ஐயர், டாக்டர் டி.எஸ்.எஸ். இராஜன் அய்யங்கார், ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பினர்.

இது, சி.ஆர். சீனுவாச ஐயங்காரை ஆசிரியராக கொண்ட சுதேச மித்திரனில் வெளியாயிற்று.

இனம், இனத்தைக் காப்பதைக் காணீர்!!

*(திராவிட நாடு - 13-2-44)*

# 11. சாமான்யமா!

16.3.44 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த கம்பர் மாநாடு குழப்பத்தில் முடிந்தது பற்றி 23.4.44

திராவிட நாடு இதழில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய தலையங்கம் :-

"நந்தவனத்திலோர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு தோண்டி – அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் – போட்டுடைத் தாண்டி!"

என்றோர் பாடலைக் கேட்டிருப்பீர்கள். இதிலே குற்றம் யாரிடம் இருக்க முடியும்? தோண்டி கிடைத்ததே என்ற களிப் படைந்த ஆண்டி, கூத்தாடியதுதானே குற்றம்! ஆற்றுநீரைக் கலக்கிச் சேறாக்குவானேன், பிறகு ஆயாசப்படுவானேன்! ஆப்பை அசைத்துவிடுவானேன், அறுபட்ட வாலை எண்ணி அழுவானேன்! கல்லைக் குத்துவானேன், கைவலிக்கிறதே, என்று பிறகு கதறுவானேன். எண்ணித் துணிக கருமம்,துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு என்று பெரியோர்கள் சொன்னது எதற்காக! ஏதேதோ படித்து, எதை எதையோ இயம்பி இறும்பூதெய்தும் இயல்பினருக்கு, விதைக்கேற்ற விளைவே கிடைக்கும் என்பது தெரிய வேண்டாமா! நாம் முன்னமே சொன்னோம், ஐயன்மீர்! வீம்பு கூடாது, வீம்பின் சூளிலே, வம்பே வளரும் என்று. கேட்டனரோ, ஏடுபுரட்டிகள்? இந்தப் பயல்கள் சொல்லுவதா, நாம் கேட்பதா, நமது படிப்பென்ன, பட்டமென்ன, பண்பு எத்துணை, படாடோபம் எத்திறத்தது, என்று எண்ணினர், எமக்கு நிகர் இங்கொருவரு மில்லை என்று எக்காளமிட்டனர், பின்னர் ஏங்கினர். குறைமதியால் வரும் தொல்லை பலப்பல. மதியிருந்தும் அதனைச் செலுத்தும் மார்க்கம் அறிவது தனியானதோர்

திறமை, அதனை அறியாதார், எதற்கும் உதவாதார் என்போம். கோசல நாட்டு வளமுரைக்கப்போந்த கம்பர்,

"வண்மை இல்லையோர்
வறுமை இன்மையால்
திண்மை இல்லைநேர்
செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய்
உரைஇல் லாமையால்
கேண்மை இல்லைபல
கேள்வி மேவலால்"

என்று கூறினார். உனக்கென்ன தெரியும் ...... இது கலாரசிகர் டி.கே. சிதம்பர நாதரால் பழுதுபார்க்கப்பட்ட பாவா, என்று கேட்காதீர் தோழர்களே, இதனைச் சென்னையிலே நடந்த கம்பர் மாநாட்டிலே, தலைமைப்பூண்ட திருவாளர் பெரும் பேராசிரியர் பண்டிதமணி, மகிபாலன்பட்டிக் கதிரேசர், தமது உரையிலே உரைக்க இருந்தார், உரைக்க இயலவில்லை, பத்திரிகை பல பின்னர் பிரசுரித்தன. எனவே பாடல், ஒரு பண்டித மணியால் மேற்கோளாகக் காட்டப் பட்டது, பாமரனால் அல்ல! வறுமையில்லை, எனவே கொடை இல்லை, பகைவர் இல்லை ஆகவே வீரம் இல்லை என்ற பொருள்படக் கம்பர் கூறினாரே அதேபோல, நாமொன்று நவில்வோம்,

அமைதி இல்லை ஆங்கு
ஆர்வம் இன்மையால்

இனிமை இல்லை ஈர்க்கும்
இயல்பு இன்மையால்
பொறுமை இல்லை
பெருமையாளர் இன்மையால்
பண்பு இல்லை
அப்பழக்க மின்மையால்

ஆம்! சொற்பொழிவின் பயனோ முறையோ ஆர்வத்தை ஊட்டுவதாக இல்லை, எனவே, அக்கூட்டத்திலே அமைதி நிலவவில்லை, அமளி குறையவில்லை, பேச்சிலே இனிமை இல்லை, காரணம் எதிர்ப்பாளரையும், தன்வயப்படுத்தக்கூடிய இயல்பு பேசினோரிடமின்மையால், சபையைப் பெருமைப் படுத்திடும் பெருங்குணம் இல்லாததால் அங்கு, மக்களிடை பொறுமை இல்லாது போயிற்று. பண்பிலே பழக்கமில்லாதார் நடத்திய நிகழ்ச்சியிலே பண்பு காணப்பட முடியாது போயிற்று. சென்னை கோகலே மண்டபத்திலே 16ந் தேதி மாலை நடை பெற்ற கம்பர் மாநாடு, குழப்பத்திலே மூழ்கியதற்குக் காரணம் நாம் மேலே குறிப்பிட்டதுதான். கவிதை முறையிலே குறை யிருக்கும், நாம் கவியல்ல, ஆனால் காரணவிளக்கத்திலே குறையிருக்காது, நாம் ஆரஅமர யோசித்து இதனை உரைத்திருப்பதால்.

சொற்போரும் மற்போரும் வேறு வேறுதான், என்றபோதிலும் இருசெயலுக்கும், நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் வேண்டும், நிலைமை உணர்வும் வலிமை அளவறிதலும் இருந்தாக வேண்டும், களத்தின் அமைப்புக் கேற்பவே போரும் இருக்க முடியும், கருத்தின் தன்மைக்

கேற்பவே வெற்றி கிடைத்திட முடியும். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அன்று அமளி நடந்ததால் இதனை மறந்தனர் போலும். நான் சொற்போருக்குத் தயாரேயன்றி மற்போர் புரியும் பருவம் கடந்துவிட்டேன் என்று உரைத்தாராம்! உண்மைதான்! ஆனால் பருவம், மற்போர் விஷயமாக மட்டுமே கவனிக்கப்படவேண்டும் என்று கருதுவது சரியல்ல. சொற்போருக்குத்தான் அது பொருந்தும். நாம் கதிரேசர் வயோதிகர் எனவே, சொற்போருக்குப் பருவம் இல்லை என்று கூறுவதாகக் கருத வேண்டாம், முதுமை வளரவில்லை மற்ற அங்கங்களின் தொழில்திறம் குறையும், வாயுரைத்திறம் வளரும் என்பதை நாமறிவோம், எனவே நாம் குறிப்பிடுவது, தனிப்பட்ட ஒருவரின் பருவத்தை அல்ல: காலம் என்று கருத்திலே கூறுகிறோம், புராணத்தின் சார்பாக நின்று சமரிட, சொற்போராயினுஞ் சரியே, மற்போர ஆயினும் சரியே, இது பருவமல்ல, காலம் மாறிவிட்டது. இது கழுமரம் நாட்டக் கூடிய காலமுமல்ல, கடவுள் அடியெடுத்துக் கொடுக்கக் கூடிய காலமுமல்ல, ஏடு எதிர்நோக்கி ஓடும் காலமுமல்ல, இது பகுத்தறிவு காலம்! பண்டிதமணியார், அன்றைய கலவரத்தைக் கண்டு, மற்போர் புரியும் பருவம் தமக்கு இல்லை என்பதை உணர்ந்து உரைத்தாரே, அதே போலவே, அவர் கால வேகத்தையும் மக்கள் கொண்டுள்ள பகுத்தறிவு ஆர்வத்தையும், ஏன், எதற்கு என்று கேட்கும் மனப்பான்மை எங்கும் பரவி இருத்தலையும், காண்பாரானால், மற்போருக்கு மட்டுமல்ல புராணத்துக்கு ஆதரவு தேடப் பருவம் கடந்தே விட்டது என்பதை உணருவார். இதனை உணர, இன்னமும் காலம் கடந்துவிடவில்லை!

ஆரியர்-திராவிடர் உணர்ச்சி ஊரெங்கும் வலுவடைந்து விட்டதை, இந்நாடு இன்று ஆரியத்தின் வேட்டைக் காடாகியதாலேயே, திராவிடரின் வாழ்வு சுடுகாடாகி விட்டது என்ற எண்ணம் பரவி விட்டதை, எந்த விலை கொடுத்தேனும் இன விடுதலையைப் பெற்றே தீரவேண்டும் என்று உள்ளத்திலே உறுதி கொண்டிருப்பதை, வேங்கைக்காட்டிலே நரிஆட்சி புரிவதா என்ற முழக்கம் கிளம்பிவிட்டதை, கலைச்செல்வம், காவியரசம், இலக்கியச்சுவை என்ற இன்னோரன்ன மேற்பூச்சுக்களிலே ஆரியமெனும் நஞ்சு தமிழரின் நெஞ்சகத்திலே பாய்ச்சப்படுவதைத் தெரிந்து கொண்ட தமிழர், கலைப்புரட்சி செய்தாகவேண்டுமென்று கூறுவதை, வாலிப உலகு இதற்கான ஆதரவு தருவதை இதனைச் சாதிப்பதற்கு வேண்டிய வலிமை வளர்வதை, ஆரியவர்க்கம் உணர்ந்திருப்பதை, அந்த உணர்வு, சில சமயம் ஓலமாகவும் வேறு சில சமயம் கலகமாகவும் நடமாடுவதை, நமது பண்டிதமணிகள் உணர்ந்திருப்பின் கம்ப இராமாயணத்தைக் கண்டிக்க ஒரு கூட்டம் இருப்பதா, அதைக் கண்டு நாம் வாளாயிருப்பதா, ஏடு எடுத்து வீசுவோம், புலமை எனும் பாணம்விட்டு அவர்களைத் துளைப்போம், ஆவேசமொழி பேசி அழிப்போம், என்று வீம்பு கொள்ளாமல், நிலையை அறிந்து நடக்கும் யூகம்பெற்று, கலையை காலத்தின் பணியாளாக்கும் வீரர்களாகி இருக்க முடியும்! அங்ஙனம், அவர்கள் செய்திருப்பின், நமது அகம்மகிழும். நமது அகத்தின் நிலைபற்றி அவ்வளவு பெரிய மனிதர்களுக்கு அக்கரை இருக்க முடியாது. அதைக்கூட அவர்கள் பொருட்படுத்தத் தேவையில்லை, புறத்திலே காட்சி அன்று கோகலே

மண்டபத்தில் இருந்ததுபோல இருந்திராது. புலமையை இன விடுதலைக்குப் பயன்படுத்திய பெரியோரே வருக! கலையைத் தமிழர் நிலையை உணர்த்தும் கருவியாக்கும்படி திருத்தி யமைத்த கதிரேசரே வாழ்க! ஆரியப்புரட்டை அழிக்க அறிவைப் படைக்கலமாகக் கொண்ட அருந்தலைவர்காள் வருக, வருக!! என்ற வாழ்த்தொலி, அந்த மண்டபத்திலிருந்து கிளம்பி அக்கிரகாரம்வரை முட்டி இருக்கும், கலகம் பட்டியிலிட்ட காளை என அடங்கி இருக்கும், களிப்புகீதமாக இருந்திருக்கும். ஆனால் நடந்தது என்ன! இரைச்சல், இடர், இடி, கலகம், குழப்பம், கைகலப்பு, சலசலப்பு, பதைப்பு,துடிப்பு, சொற்பொழிவு கால அழிவாயிற்று. காலத்தை உணராக் குறையின் விளைவு இது, காரணம் வேறொன்றுமில்லை.

"ஐயோ! கண்ணு! கமலம்! கமலம்!, ஐயா, என் குழந்தை கமலத்தைக் கண்டீர்களா! ஐந்து வயதுக்குழந்தை, அழகாக இருக்கும், பார்த்தீர்களா ஐயா!" என்று கதறிக் கேட்கிறாள் ஒரு மாது. இல்லையே, என்று பதில் மூலைக்கு மூலை கிளம்புகிறது. இடையே ஒரு பேச்சு எழுகிறது, தேரும் திருவிழாவும் திருடருக்கு விருந்தல்லவா, இந்தத் தெளிவில்லாத் தையல், அணி பலபூட்டி அழைத்து வரலாமோ குழந்தையை, அவன் உயிரோடு விடுவானோ, கழுத்தை முறித்துக் கொன்று விடுகிறானோ, என்னமோ யார் கண்டார்கள்? என்று சிலர் கூறுகின்றனர். சீராட்டிப் பாராட்டிச் சிரித்திடும் வாய்க்கு முத்தம் ஈந்து, மழலை கேட்டு மகிழ்ந்து குறுநடை கண்டு களித்திடும் பெற்றோர், தமது பாலருக்கு நகைகளைப் பூட்டி நடுவீதியிலே பெருங்கூட்டத்திடையே அழைத்துச் சென்றால், கள்ளன் கருப்பட்டியைக் காட்டிக் குழந்தையைத்

தாயிடமிருந்து பிரித்துத் தனியிடம் எடுத்துச் சென்று அணிகளை அகற்றிக் கொண்டு, பேசாதிருந்தால் உயிருடன் உலவவிடுவதும், ஆழத்தொடங்கினால் குழந்தையைப் பிணமாக்குவதும், உண்டு. ஆரியம், வலிமை, வளம், வாய்மை தூய்மை, வீரம் ஈரம், கொடை பெருங்குணம் முதலிய அணிபலபூண்ட நமது அருந்தமிழர்களையுங்கூடத் தன்மானத் தோழரிடமிருந்து பிரித்து அழைத்துச் சென்று அணிகளை அகற்றிவிடுகிறது, பேச்சு மூச்சும் பெரும்பிழை என்று கருதும் தடித்த தோலரை, உலவவிட்டு வைக்கிறது, சூதறிந்து ஏன் இச்செயல் என்று கேட்கக் குரலெடுத்தாலோ, அழித்தே விடுகிறது, அதாவது செல்வாக்கு அற்றவர்களாக்கி விடுகிறது. அந்தநாள் முதல் இந்தநாள் வரை ஆரியத்தின் நடவடிக்கை இருந்த விதமறிவர், நாம் கூறுவதைத் தெரிந்து கொள்வர். நமது கலாரசிகர்கள் என்போரின் கதி, அணிபூண்ட சிறுகுழந்தை, கள்ளன் கருப்பட்டிக்கு ஆசைப்பட்டு அவன்பின் சென்று, அணியிழக்கும் நிலைபோலவே இருக்கிறது.

"நம்ம மகிலன்பட்டி செட்டியார் இருக்கார் பாருங்கோ, அபாரமான ஞான்ம் அவருக்கு! ஆச்சார அனுஷ்டானாதி களிலே அவருக்கு அலாதியான பிரியம்! ஜாதித்துவேஷ மென்பது அவரிடம் லவலேசமும் கிடையாது. மகா மகோபாத்யாய பட்டமன்னோ அவருக்குக் கிடைச்சிருக்கு, நம்ம உ.வே. சாமிநாத ஐயரவாளுக்குக் கிடைச்சமாதிரி" என்று வெல்லப் பேச்சுப் பேசி ஆரியம், இதுவரை கணக்கற்ற கதிரேசர்களைக் கவிழ்த்திருக்கிறது! எனவேதான், புதுஉலகம் காணவிழையும் தோழர்கள், ஆரியமெனும் பூவையின் புன்சிரிப்பு ஒருபொறி, அவளது ஆலிங்கனம் அழிவுக்குவழி,

அந்தச் சல்லாபம் சாவுக்கிடங்குக்கு இழுத்துச் செல்லும், வேண்டாம் அந்த உறவு, எட்டி நில்லும், ஆபத்து, எச்சரிக்கை என்று, கூறி வந்திருக்கின்றனர். கேளாக் காதராக இருந்தால், தீராத் தொல்லைதானே வரும்! இதற்கென்ன செய்ய முடியும்!

சென்னையிலே, பலமுறை காப்பிய மாநாடுகள் நடந்துள்ளன, கம்பர் மாநாட்டிற்குத் தலைமை வகித்த பண்டித மணியாரே, அத்தகைய மாநாட்டுக்குத தலைமைபூண்டுள்ளார், புலவர் பலர் பேசியுள்ளனர். கலித்தொகை மாநாடு, குறுந் தொகை மாநாடு, புறநானூறு மாநாடு, அகநானூறு மாநாடு, என்று பற்பல மாநாடுகள் பழைய ஏடுகளில் உள்ளச் சுவையைப் பயனுடைத்து என்று மக்கட்கு விளக்கக் கூட்டப் பட்டன. ஒன்றேனும் குழப்பத்திலே இடறிவிழவில்லை, "எதிர்ப்பாளர்கள்" இருந்ததில்லை. மகிபாலன் பட்டியாரின் மணிமொழி, மனமகிழ்ச்சிக்கு ஒரு வழி என்று கருதியவர் பலர். செவி உணர்வு இல்லா மாக்கள் என்றும், கலை அறிவில்லாக் கயவரென்றும், கற்பனைக் கரும்பை அறியாக் காலிகள் என்றும், கடுமொழி பலவற்றுக்கு ஆளான சுயமரியாதைக்காரர்கள், மேற்படி மாநாடுகளிலே கலகம் விளைவித்தனர், என்றோ அக்கூட்டத்தினருக்குக் கதிரேசர் மீது கோபம் இருந்தது என்றோ எவரும் கூறிட முடியாது. கம்பர் மாநாடுதான் குழப்பத்திலே முடிந்தது! அதிலே கதிரேசர் தலைமை தாங்கியதாலுமல்ல, கம்ப இராமாயணம் பழைய காப்பியம் என்பதற்காகவுமல்ல, அக்குழப்பம்!! வந்தேமாதர கீதம், திரேதாயுகத்தது என்பதற்காக அல்ல, முஸ்லிம்கள் அதனை எதிர்ப்பது. இக்காலத்திலே தோன்றிய கீதந்தான், என்றாலும், முஸ்லிம் இனத்தை அது இழிவு செய்யும்

இசையாக அமைந்திருக்கிறது என்பதற்காகவே, அதற்கு எதிர்ப்புக் கிளம்பிற்று. அதுபோலவே, கதிரேசர் மீது கோபங் கொண்டதாலோ பழைய காப்பியத்தின்மீது ஆத்திரம் வைத்ததாலோ கம்பர் மாநாட்டிலே கலவரம் நேரிட்டது என்று கூறுவது பொருந்தாது. கம்ப இராமாயணம், திராவிட இனத்தை இழித்துரைக்கவும் ஆரியருக்கு அடிமைப்படுத்தவும் ஒருகருவியாக அமைந்தி ருக்கிறது. திராவிட இனம் எழுச்சி பெற வேண்டுமானால், இத்தகைய ஏடுகளைக் கண்டித்தாக வேண்டும் என்ற எண்ணம் வலுத்திருப்பதே, அன்றைய கலவரத்திற்குக் காரணம். ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பார்களே, அதைப்போல, மாநாட்டுக்கு வந்திருந்த மக்களின் எதிர்ப்பு, சு.ம.க்களின் காலித்தனம் என்றும், சு.ம.கரடிகளின் அட்டகாசம் என்றும் ஆரிய ஏடுகளில் எழுதப்பட்டதோடு, இந்தக் குழப்பத்திற்குக் காரணமே. சு.ம.மக்கள்தான் என்று கூறப்படுகிறது. பலமுறை பாதகரின் பழியுரை கேட்டுப் பழக்கப்பட்ட தன்மான இயக்கத்தினருக்கு, இது புதிதல்ல, தாங்கிக் கொள்ள முடியாததுமல்ல, மதியை ஆரியத்துக்கு அடகு வைத்து விட்டவர்களின் பேச்சுக்கு மதிப்புத் தருவதோ அதனைக் கேட்டு மனத்தாங்கல் கொள்வதோ சு.ம. மக்களிடம் இருக்கப் போவதில்லை, அது மட்டுமல்ல, ஆரியத்தின் அடிவருடி அறி விழந்தவர்கள்மீது கோபங்கூடக் கிடையாது, சு.ம. மக்களுக்கு பரிதாபந்தான். கவிதைகளைக் கேட்ட மாத்திரத்திலே கசிந்து கண்ணீர் மல்கும் பக்தகோடிகளும், "இந்தப் புளுகு கந்த புராணத்திலும் இல்லையே" என்ற பழமொழி பரவிய பிறகுங்கூட, கந்தலீலா கதைகேட்டுக் கார்த்திகேயா! கீர்த்தி வேலா! முருகா,

பழனியாண்டவா! என்று பஜிக்கும் தாசர்களும், ஆண்டவனைப் பற்றிய கதையிலே அறிவுக்குப் பொருத்தமா இல்லையா என்ற ஆராய்ச்சியே செய்யக்கூடாது, அங்ஙனம் ஆராய்வதே நாத்தீகம் என்று நம்பும் நடுங்கிகளும், பெருவாரியாகக் கம்பர் மாநாட்டிலே அன்று இருந்திருப்பார்களானால், மாநாடு மங்கள கரமாக இரகுபதிராகவ இராஜாராம் என்னும் கீதத்துடன் முடிந்திருக்கும்! ஆனால் இன்று, அறிவுபரவி விட்டதே எங்கிருந்து, எதையும் நம்பும் ஏமாளி கூட்டம் கிடைக்கும், கோமாளிக் கதையைக் கேட்டுக் களிக்க! அன்றைய மாநாட்டிலே, வந்திருந்த பொதுமக்களில் பெரும்பான்மை யோருக்குக் கம்பஇராமாயணத்திற்கு மாநாடு கூட்டியதும் அதனை மாநாட்டு நிர்வாகிகள் நடத்திய முறையும், அங்கு பேசினோரின் பேச்சின் தன்மையும். சில பெரிய மனிதர்களின் செயலும். ஆத்திரத்தைக் கிளப்பியது, அதன் விளைவே குழப்பம், என்பதை விளக்க முடியும், சு.ம.மக்களைக் கண்டபடி ஏசுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட பத்திரிகைகாரர்களின் எழுத்திலிருந்தே. காரணமின்றி, ஒருசிலர் குழப்பம் விளைவித்தனர் என்றும் அந்தக் குழப்பத்தை வீராதிவீரர்கள் வென்றுவிட்டனர் என்றும் விளக்க அப்பத்திரிகைகள் பாவம், மிகச்சிரமப்பட்டுள்ளன! பெரியதோர் எதிர்ப்பை அடக்கிய பெருமை தங்கட்கு உண்டு என்று கூறி வீராதி வீரர்கள் என்ற பட்டமும், வெற்றி மாலையும் வீர கண்டா மணியும், தோடாவும் அவர்கள் அணிந்து கொள்ளட்டும், நமக்குக் கவலையில்லை, ஆனால் ஒருசில சு.ம.க்களின் காலித்தனம் இதுஎன்று கூறுவதும், அதேசமயம் பெருத்த குழப்பம், சமாளிக்கமுடியாத குழப்பம், தலைவர்கள்

போலீஸ் பந்தோபஸ்துடன் வீடு திரும்ப வேண்டிய அளவு நிலைமையை மாற்றிய குழப்பம் என்று, கூறுவதும், பிறகு, மாநாடு விமரிசையாக நடந்தேறியது என்று கூறுவதும், ஒன்றுக்கொன்று கொஞ்சமாவது பொருந்தியிருக்கிறதா என்பதை எண்ணிப் பாருங்கள். இங்ஙனம் பொருந்தாஉரை எழுதுவது அறிவாளிகளின் நகைப்புக்கிடந்தருவதாகும். ஆனால் புராண மனப்பான்மையினருக்கு இது அதிசயமாக இராது. அண்டத்தை ஆதிசேஷன் தாங்குகிறான். அதே ஆதிசேஷன் மீதுதான் திருப்பாற் கடலிலே திருமால் பள்ளிக் கொண்டிருக்கிறார், பார்வதியாரின் சிறுவிரலிலே ஆதிசேஷம் மோதிரமாக இருக்கிறான், அந்தப் பார்வதி கடலுக்குள்ளே இல்லை, கைலாயமலைமீது பரமசிவனில் பாதியாக இருக்கிறார்கள்! இதுதானே புராணம்! இதிலே யோசியுங்கள், ஆதிசேஷனைப்பற்றிய கதைகளிலே ஒன்றுக்கு ஒன்று பொருந்துகிறதா என்று! இதைப் போலத்தான் இருக்கிறது, "நிருபர்கள்" தீட்டியுள்ள நிகழ்ச்சி விவரமும்.

நடுப்பகல் - சுடுமணல் - பெரு நடை - சுகமான பயணம். இந்நான்கு தலைப்புகளையும் ஒரே விஷயத்திலே உபயோகிக்கும் ஆளை நீங்கள் என்னவென்று கருதுவீர்கள்! என்ன அண்டப் புளுகனய்யா இவன், சுடுமணலிலே நடுப்பகல் நேரத்திலே ஒருவன் பெருவேகமாக நடந்தால் அது எப்படிச் சுகமான பிரயாணமாகும், வேதனையுடன் வெப்பத்தால் வதைக்கப்படுபவனைச் சுகம் கண்டான் என்று சாது கூறுகிறானே, சொல்வார் சொன்னாலும் கேட்பாருக்கு மதி எங்கே போயிற்று, என்றுதானே கூறுவீர்கள் சரி, மற்றுமொன்று கேளுங்கள். பட்டப்பகல் - கட்டைச் சாரீரம் - திட்டமில்லா

தாளம் - திவ்வியமான இசை விருந்து என்று இந்நான்கு தலைப்புகளாலும் ஒரு சங்கீதக் கச்சேரியைப் பற்றி ஒருவர் விமரிசனம் எழுதினால் என்ன சொல்வீர்கள்? தாளம் கெட்டுக் குரல் கெட்டுப் பாட்டின் இனிமை பரிமளிக்காத பகலிலே எவனோ பாடினால் அது கழுதை கத்துவது போலிருக்குமே யன்றி, கானமாகவா இருக்கும், இதனைப் போய் எவனோ, திவ்யமான இசை என்று கூறினானே, என்ன திமிர் இவனுக்கு, நம்மை இவன் எவ்வளவு ஏய்க்கப் பார்க்கிறான் பார்த்தீர்களா, என்று கேட்பீர்களா, மாட்டீர்களா? சரி, இதோ படியுங்கள், கம்பர் மாநாடு சம்பந்தமாக ஆரிய ஏடுகள் வெளியிடும் தலைப்புகளை.

கம்பர் திருவிழாவில் சு.ம.மக்கள் கலகம், மைக்குகள், டிரான்ஸ்மீட்டர் நொறுங்கின. கூட்டம் அமைதியாகவும் விமரிசையாகவும் நடைபெற்றது.

இது, சுதேசமித்திரன் தலைப்புகள்! என்ன சொல்கிறீர்கள்? உங்களால் முடியுமா இதுபோலப் பொருந்தாத உரையைக் கூச்சமின்றிக் கூற. மைக்குகளும், டிரான்ஸ்மீட்டரும், நொறுங்கிய கூட்டத்திற்கு மித்திரன், சூட்டும் பட்டம் என்ன பார்த்தீர்களா? அமைதியாகவும் விமரிசையாகவும் நடந்ததாம் கூட்டம்! என்ன அமைதி! எவ்வளவு அழகான விமரிசை!! பொட்டைக் கண்ணனுக்குப் பெயர், கண்ணாயிரம், ஒற்றைக் காலனுக்குப் பெயர் தாண்டவராயன், இந்தக் கூட்டத்துக்குப் பெயர் அமைதியும் விமரிசையுமாக நடந்த கூட்டம்!!

தலைப்புகள் மட்டுமா, கூட்ட நிகழ்ச்சியைப் பற்றி நிருபர்கள் தீட்டிய வாசகங்களைப் படியுங்கள், அந்த

அமைதியின் அழகும், விமரிசையின் விசித்திரமும் விளக்கமாகத் தெரியும். இதோ, தினமணியின் திருவாக்குக் கேளுங்கள்.

சுயமரியாதைக் கரடிகள் புகுந்து கலாட்டா செய்தன. இது ஒரு தலைப்பு!! இந்த நிருபரிடம் நமக்கு உண்மையிலேயே பரிதாபமாகத்தான் இருக்கிறது. பாருங்கள் பாவம், அந்த மனுஷ்யர் எவ்வளவு அப்பாவியாக இருக்கிறார். சுயமரியாதைக்காரனையோ, கரடியையோ, அவர் கண்டவராக இருந்திருப்பின், சுயமரியாதைக் கரடிகள் என்று எழுதுவாரா? மேலும் கேளுங்கள், தினமணி நிருபரின் உரையை.

"மைக்கு கவிழ்ந்தது, ஒலிபெருக்கி நொறுங்கியது, நாற்காலி பறந்தது" இவை தலைப்புகள். மேலும் எழுதுகிறார் அந்த நண்பர், "சுயமரியாதைக்காரர்கள் என்று சொல்லிக் கொண்ட சுமார் ஒரு டஜன் நபர்கள், ஒரு மணி நேரம் ஒன்றும் நடக்கவிடாமல் பெருத்த கலாட்டா செய்தார்கள். மேடை மீது நாற்காலி பறந்தது. ஒலிபெருக்கி உடைந்து உருண்டது. மகாநாட்டு நடவடிக்கைகளைப் பிராட்காஸ்ட் செய்ய அகில இந்திய ரேடியோக்காரர்கள் வைத்திருந்த மைக்கும் தகர்க்கப் பட்டது. பூமாலைகள் தலைசுற்றித் தூக்கி எறியப்பட்டன. பரிசு கொடுக்க வைத்திருந்த புத்தகங்களும் ஓலைச்சவடிகளும் வீசி எறியப்பட்டன. இவ்வளவுக்கும் சிகரம் வைத்தாற்போல் அவர்களில் ஒருவர் பேசிவிட்டார்".

இத்துடன் நிறுத்தினாரா அந்த நிருபர்? ஒரு சுயமரியாதைக்காரர் அந்த மேடையிலே பேசியது, சிகரம் வைத்தது போலிருந்தது என்று எழுதினாரே, அவர் தமது

அருமையான எழுத்திற்குச் சிகரம் வைத்ததுபோல ஒன்று எழுதியிருக்கிறார். என்ன அது!

இவ்வளவு கலாட்டாவிலும் கூடியிருந்த மக்கள் காட்டிய அமைதி அவர்களுக்குக் கம்பனிடத்தில் உள்ள பக்தியை நிதர்சனமாக்கிற்று". என்னே, அந்த மக்களின் பொறுமை! மைக் கவிழ்ந்தாலென்ன? டிரான்ஸ்மீட்டர் நொறுங்கினா லென்ன, மேடைமீதிருந்த சிலருக்குக் கன்னத்தில் அறை விழுந்தா லென்னவென்று, அவைகளைப்பற்றிக் கவலைப் படாமல், அந்த மாபெருங்கூட்டம், ஒரு டஜன் சு.ம.க்களின் கலாட்டாவைப் பற்றிக் கவலை கொள்ளாமல், கம்ப பக்தியிலே தம்மை மறந்திருந்தனராம்!!

"அந்தப் பகுதிதான் ஆச்சரியமாகுதடி" என்று புரட்சிக்கவி கனக சுப்புரத்தினம் கூறுகிறாரே, அதுபோல் கூறலாம், இந்த நிருபரின் இந்தப் பகுதிக்கு!! நீங்கள் நம்புகிறீர்களா, ஒரு பெருங்கூட்டம், ஒரு டஜன் போர்வழிகள், இவ்வளவு கலாட்டாச் செய்வதைக் கண்டும், அமைதியாக யிருக்குமென்று. ஒன்று பதுமைகளை அந்தச் சபையிலே வைத்திருக்க வேண்டும், அல்லது, அந்த மக்கள் கம்பர் மாநாட்டின் கதி இப்படித்தான் ஆகவேண்டும், சரியான காரியம் நடக்கிறது என்று எண்ணி மகிழ்ச்சியுடன் அக் காட்சியைக் கண்டு இருந்திருக்கவேண்டும், அல்லது, மாநாட்டு மணிகள், மக்கள் மனதிலே ஏற்கனவே வெறுப்பு எழும் முறையிலே நடந்து கொண்டிருக்க வேண்டும், அதனால், அடாது செய்தோர் படாதுபடுவர் என்று எண்ணி, அக்கூட்டம் சிறுவிரலையும் அசைத்திடாது இருந்திருக்க வேண்டும். இதுதானே இயற்கை! குட்டு வெளியாகாதிருக்கவும், குழப்பம்

விளைவித்தற்குக் காரணம் சில சு.ம.மக்கள் என்று கூறித்தீர வேண்டுமென்பதற்காகவும், தினமணி நிருபர், அன்றையக் கூட்டத்திலே உட்கார்ந்திருப்பவர்கள் பதுமைகள் என்று கருதும்படி எழுதியிருக்கிறார்.

"கோகலே ஹால் ஒரு கோயில் மண்டபம்போல் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மங்கள வாத்தியம் முழங்க மாநாடு ஆரம்பமாயிற்று என்று எழுதுகிறார் நிருபர். மங்கல வாத்தியத்துடன் ஆரம்பமாகி அமங்கலமாக முடிந்ததன் காரணம் என்னவோ நாமறியோம்.

"ஸ்ரீகதிரேசன் செட்டியார் தமது தலைமைப் பிரசங்கத்தைச் செய்ய எழுந்தார். அவர் சில வார்த்தைகள் கூடப்பேசியிருக்க மாட்டார், குழப்பம் ஆரம்பித்து விட்டது. ஆரிய அடிமை கதிரேசன் செட்டியாரே எங்கள் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் என்று ஒருசிலர் கத்திக் கொண்டு மேடைமீது ஏறிவிட்டனர்.

முன்னே வந்த ஒரு குள்ளமான ஆள் ஒரு நாற்காலியை வீசி மைக்கை உடைத்துத் தள்ளிவிட்டான். அதன் தலை கவண்கல் மாதிரி சென்றது. நிருபரின் தலைதப்பியது தம்பிரான் புண்ணியமாகி விட்டது.

அதே ஆசாமி ஒலிபெருக்கியையும் ஒரு குத்துவிட்டுத் தள்ளிவிட்டான். மாலையைத் தலைசுற்றித் தூக்கியெறிந்தான். மண்பாண்டங்கள் "மடார்" என்று போட்டு உடைக்கப்பட்டன.

இதற்கிடையில் கூட்டத்திலிருந்து சிலர் மேடைமீது ஏறி அமர்ந்தனர். வெகு சிரமப்பட்டு கலாட்டாக்காரர்கள்

மேடையைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டார்கள்'' என்று கூறுகிறார்.

இதிலே ஒரு சூட்சமம் பார்த்தீர்களா? நாசுக்கான திரை விடுகிறார் நிருபர்! கேள்விகளுக்குப் பதில் கூறுக என்று கூச்சலிட்டனராம் சிலர். என்ன கேள்வி! எப்போது யார் கேட்டனர்? என்பது பற்றி நிருபர் ஒன்றும் கூறவில்லை. உண்மை என்ன? மாநாட்டிலே சென்னைச் சுயமரியாதைக் கழகத்தினரால் அச்சடிக்கப்பட்ட இரண்டு கேள்வித்தாள்கள் வழங்கப்பட்டன. அக்கேள்விகளுக்குத்தான் பதில் கோரினர். பதில் இல்லை, எனவே, பதில்கூறுமாறு கூச்சல் கிளம்பிற்று. சகலகலாவல்லவர்களுக்கு எழுதப்படிக்கக் கூடத்தெரியாத சு.ம.க்களின் கேள்விகளுக்குப் பதில்கூறத் தெரியாமற் போன காரணம் என்ன? மகாமகா உபாத்தியாயர்களும், இலக்கியப் பூங்காவின் காவலர்களும் கொலுவீற்றிருந்த அந்த அலங்கார மண்டபத்திலே, கேள்விகளுக்கு அதிலும் காவியமறியா சுயமரியாதைக்காரர்களின் சாமான்யமான கேள்விகளுக்குப் பதில் கூறாதது ஏன்? இது மக்கள் மனதிலே, எரிச்சலை உண்டாக்கியிராதா? அதுவரை கம்பதாசராக இருப்பவருக்குங் கூட, மயக்கம்போய், சந்தேகமல்லவா பிறக்கும். இது என்ன ஆச்சரியம், சு.ம.க்களின் கேள்விகளுக்குப் பதில்கூற இந்தப் பெரும் புலவர்களுக்கு ஏன் திண்டாட்டம்? திணறல்? இப்படிப் பட்ட பெரிய பண்டிதர்களின் வாயை அடக்கும் கேள்விகள் தயாரிக்க, சு.ம.க்களுக்குப் புலமை கிடையாதே, ஆகவே, கதையிலே கேள்வி கேட்டால் பதில்கூற முடியாத அளவு ஆபாசம் இருக்கிறது என்பதல்லவா தெரிகிறது, இப்படிப்பட்ட கதைக்கு விழா ஒரு கேடா, என்று எண்ணாமலிருந்

திருப்பார்களா என்று கேட்கிறோம்.

இந்தச் சமயத்திலேதான் பண்டிதமணி கதிரேசர், நான் மற்போர் புரியும் பருவம் கடந்து விட்டேன், சொற்போருக்கு நான் தயார் என்று கூறினார் போலும்! கதிரேசரிடம் படித்த மாணவர்களிற் சிலரே, அவரது இவ்வுரையைப் பத்திரிகையிலே பார்த்துவிட்டு, எந்தத் தேதியில் எந்த இடத்திலே சொற்போர் ஏற்படுத்தலாம், நான் தயார், நீ தயார்தானா என்று கதிரேசருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றனராம். பொறுத்திருந்து பார்ப்போம், அந்தச் சொற்போரையும்!

ஒரே டஜன் பேர்வழிகள்தானாமே, நிருபரின் கணக்குப் படி அவர்கள் செய்த கலகம் என்ன விளைவு தந்தது தெரியுமா, அதே நிருபரின் வாசகத்தின்படி தலைவரால் பிரசங்கத்தைப் படிக்க முடியவில்லை. திரு.டி.பி. மீனாட்சி சுந்தரர், அதனை வாங்கி வாசித்தாராம். முடித்தாரோ? இல்லை! அவருடைய குரல் கம்மி விட்டதாம், குழப்பம் நின்ற பாடில்லையாம். அவருடைய குரல் கம்மலாகிவிட்டது என்றால் அது சாமான்யமா? நிருபர் கூறுகிறார், ஸ்ரீ டி.பி. மீனாட்சி சுந்தரம் பிள்ளை தமது கெம்பீரமான குரலிலே வாசிக்க ஆரம்பித்தார் என்று. அந்தக் கெம்பீரக் குரல் கம்மலாகிவிடவே, திரு. டி.எஸ். நடராசப்பிள்ளை அவர்கள், அதனை வாங்கி வாசித்தாராம். விமரிசையான மாநாடு, சந்தேகமா உங்களுக்கு! ஒரு டஜன் எதிர்ப்பாளர்களின் கலாட்டாவால், கம்ப பக்தியில் தம்மை மறந்து அமைதியாக இருந்த அப்பெருங்கூட்டத்திலே பெரும்புலவர் கதிரேசர் தமது தலைமை உரையைப் படிக்க முடியாத்

திகைப்பாளரானார், கெம்பீரக் குரலாளர் ஸ்ரீ டி.பி. மீனாட்சிசுந்தரனார் முயன்றார் முடியாமற் போகவே அமர்ந்தார். பின்னர் தேசீய முன்னணிக்கு செங்கற்பட்டு வட்டார அமைப்பாளராக உள்ள திரு. டி.எஸ். நடராஜப்பிள்ளை படித்து முடித்தார். அப்பொழுது அமைதி அரசாண்டதா? அதுதானே இல்லை! குழப்பந்தானாம், அதே நிருபர் கூறுகிறார். பிறகு ஸ்ரீ ஆர்.பி. சேதுப்பிள்ளை, சொற்பொழிவாற்றத் தொடங்கினாராம். மீண்டும் குழப்பம்தானாம். வீரவுரை நிகழ்த்தலானாராம் பிள்ளை, காரமாகிவிட்டதாம் கலகம், பிள்ளை அமர்ந்தாராம், பெருங்குழப்பமாம், போலீஸ் வரவழைக்கப்பட்டதாம், மீண்டும் குழப்பமாம்! அமைதியும் விமரிசையும். அடைமொழிகள், அக்கூட்டத்தை விமர்சிக்கும் நிருபரின் தாராளத்தைப் பாருங்களேன், விளக்குமாற்றுக்கு வெண்சாமரம் என்று கூறிடும் வித்தைபோலில்லையா இது. தினமணி நிருபரின், செய்திச் சித்திரம், தலைவர் போலீஸ் பந்தோபஸ்தில் வெளியே சென்றார் என்ற சிகரத்துடன் முடிகிறது! விமரிசையாக நடந்தேறிய மாநாடு தோழர்களே, இது! அமைதி நிலவிய மாநாடு, கம்ப பக்தியால் மக்கள் கட்டுண்டு கிடந்த மாநாடு, ஆமாம், அதை மறந்து விடாதீர்கள்!!

வேறு சில விசித்திரங்கள் பாரததேவி பகருகிறாள். படியுங்கள் அதனையும்.

"கம்பர் திருநாள் நடக்கவொட்டாமல் செய்யவேண்டு மென்ற சிலர் கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருந்த போதிலும் கலாட்டாக்களை எல்லாம் பொருட்படுத்தாமல், கம்பர் மாநாடு கோகலே மண்டபத்தில் விமரிசையாக நடந்தேறியது"

இத்துடன், பாரததேவி நிருபர் நிறுத்திக் கொண்டாரா? இல்லை! விமரிசையாக நடந்தது மாநாடு என்பதற்கு ஆதாரம் கூறாமல் இருப்பதா? எழுதுகிறார் அந்த நிருபர்.

"மேடை மீதிருந்த சிலருக்குக் கன்னத்தில் அறை!

ஒலிபரப்பும் கருவி கீழே தள்ளப்பட்டது!!

விமரிசையாக நடந்ததல்லவா, மாநாடு போதாது என்கிறீர்களா, விமரிசையாக என்பதற்கு விளக்கம்? சரி, விளக்கத்துக்குப் பஞ்சமில்லை, படியுங்கள் பாரததேவி நிருபரின் எழுத்தை. அவர் மேலும் கூறுகிறார்.

"சிறுபான்மையோர் ஆரிய அடிமை ஒழிக என்று கூவினர். ஒரு இளைஞர் மேடைமீதேறி ஆவேசம் வந்தவர்போல் ஒலிபரப்புக் கருவிகளைக் கீழே தள்ளினார். கம்ப இராமாயண ஓலைச் சுவடி, மேஜைமேல் புஷ்ப ஹாரத்துடன் இருந்ததையும் கீழேத் தள்ளிவிட்டுப் போனவனைப் பிடிக்கப் போனவர்களிடமிருந்து திமிறிக் கொண்டு கீழே இறங்கி விட்டான். கேட்டீர்களா வேடிக்கையை! ஒரே இளைஞன், மேடைமீது ஏறி அவ்வளவும் செய்கிறான். மேடை மீதிருந்தவர்கள் அவனைப் பிடிக்க முயற்சி செய்யாமல் முயற்சி செய்து பலிக்கவில்லையாம்!! சு.ம.வின் முரட்டுத்தனத்தை தெரியப்படுத்திவிட்டதாக அந்த நிருபர் திருப்தி அடையக் கூடும். முதல் தடவை அந்த நிருபரின் செய்தியைப் படிப்பவரும் அதுபோலவே, கருதுவர். ஆனால் அடுத்த விநாடி தோன்றக்கூடிய எண்ணம் என்ன? என்ன அதிசயமய்யா இது? ஒரே ஒரு பயல், அவனைப் பிடிக்க

மேடை மீது இருந்தவர்களெல்லாம் முயன்று முடியவில்லை. என்ன ஆச்சரியம்!! மேடை மீது இருந்த அத்தனைபேரும் அவ்வளவு, கையாலாகாதவர்களா? என்று கேட்கத்தானே தோன்றும், யோசியுங்கள். அதுதான் போகட்டும். ஒரு இளைஞன் இவ்வளவு செய்ததைக் கூட்டம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுவிடுமா? தினமணி நிருபர் கூறியதுபோல கம்ப பக்தியிலே கட்டுண்டு கிடந்தனர் என்று கருதிவிடாதீர்கள். பாரததேவி நிருபர் எழுதுகிறார் இச்சம்பவத்துக்குப் பிறகு "அதிகமானவர்கள் ஆரிய அடிமையே பதில் சொல், என்று கூச்சலிட்டனர்" என்று. இதன் பொருளென்ன? மேடைமீது ஏறி அமர்க்களம் செய்தவனை, ஆதரிக்கச் சபை தயாராக இருந்தது என்பதுதான். "பல பெரியார்கள் முன் வந்து வணக்கத்துடன் அமைதியாய் இருக்கும்படி வேண்டிக் கொண்டும் கூச்சல் நிற்கவில்லை" என்று எழுதுகிறார். இதிலிருந்தாவது தெரிய வில்லையா, கம்பர் மாநட்டில் சில வம்பர் கலகம் செய்ய வரவில்லை, யாரோ சில வம்பர்கள் கம்பர் விழாவின் பெயரால் ஆரியத்துக்குக் கட்டியங் கூறுகிறார்கள் என்று, ஆத்திரங்கொண்ட மக்கள், அங்கு பெருவாரியாக இருந்தார்கள் என்பதை!

பிறகு தோழர் டி.பி. மீனாட்சி சுந்தரனார் பேசினாராம், "கூச்சல் இன்னும் வலுத்தது" என்று எழுதுகிறார் நிருபர். "பலர் நின்று கொண்டனர்" என்றும் எழுதுகிறார், இதற்குத்தான் "அமைதியான" கூட்டம் என்று பெயர்!!

ஒலிபரப்புக் கருவி முதலியவைகளைக் கீழே தள்ளினவன் மேடைமீது உட்கார்ந்தான். பக்கத்திலிருந்தவர்

களைப் போருக்கிழுத்தான். ஆத்திரம் பொங்கியது, அங்கிருந்த வர்களுக்கு, பளார் என்று கன்னத்திலும் அறைகள் விழுந்தன, மேடைமீது இருந்தவர்கள் எல்லோரும் எழுந்து விட்டனர்.

இடதுபுறம் சற்று தூரத்தில் சிலருக்கிடையே மல்யுத்தம் சில விநாடிகள் நடந்தது. சப் இன்ஸ்பெக்டர் அதட்டினார், அவர்கள் மசியவில்லை, கூச்சலும் அடங்கவில்லை. பிறகு ஸ்ரீ சேதுப்பிள்ளை பேசும்போது, சப்இன்ஸ்பெக்டர் பயமுறுத்த லாகவே அதட்டினார். கூட்டத்தினிடையே கலவரம் நிற்க வில்லை" இவ்வளவு எழுதிவிட்டு, பாரததேவி, "மகாநாட்டை விமரிசையாக முடித்த கம்பர் திருவிழா கழகத்தாரைப் பாராட்டுகிறோம்" என்று கூறுகிறது.

போலீஸ் பந்தோபஸ்துடன் தலைவர் வீட்டிற்கு அனுப்பப்பட்டார் என்றே பாரத தேவியும் எழுதியிருக்கிறது. கம்ப பக்தர்கள் கூடிக் கலாட்டாவைப் பொருட்படுத்தாமல் அமைதியாகவும் விமரிசையாகவும் நடத்திய மாநாடு தோழர்களே இது!

மாநாட்டில் ஆரியர் ஒழிக என்று இடையிடையே விஷமிகள் கூச்சலிட்டனர். ஒருவர் மேடைமீதேறி தலைவர் ஸ்ரீ கதிரேசன் செட்டியாரை அடிக்க முயன்றார். ஆனால், மேடை மீதிருந்தவர்கள் இச்சம்பவம் நிகழாமல் தடுத்தனர். கடைசியாகக் கூட்டம் அமைதியாகவும் விமரிசையாகவும் நடைபெற்றது.

தலைவர் நின்று கொண்டு பேச முடியாமலிருந்ததால் முகவுரையை முடித்ததும் அவர் உட்கார்ந்துக் கொண்டு பேச

ஆரம்பித்தார். ஆரிய அடிமை கதிரேசர் பதில் சொல் இல்லையேல் கீழே இறங்கு என்ற கூச்சல் ஒரு மூலையிலிருந்து கிளம்பியது. இக்கூச்சல் வரவரப்பெருத்தது. ஆரிய அடிமை ஒழிக கதிரேசன் ஒழிக என்ற கோஷத்தைப் பலமாகச் செய்துக் கொண்டு ஒரு சிறுபான்மையோர் குழப்பம் செய்ய ஆரம்பித்தனர்.

இந்தக் கட்டத்தில் சாந்தியை நிலைநாட்ட டி.பி. மீனாட்சி சுந்தரம்பிள்ளை சில வார்த்தைகள் சொல்ல ஆரம்பித்தார் ஆனால் விஷமிகளின் அட்டகாசம் அதிகமாயிற்று. ஒரு இளைஞன் திடீரென மேடை மீதேறி ஆவேசம் வந்தவன்போல் கூத்தாடினார். மேடைமீதிலிருந்த ஒலிபரப்புக் கருவிகள், கண்ணாடி டம்ளர்கள், புஸ்தகங்கள் முதலியவற்றைக் கீழே தள்ளினார், நாற்காலிகளை எடுத்து வீசினார். தலைவர் முன்னிருந்த மேஜையையும் அதன் மீதிருந்த சாமான் களையும் கீழே தள்ளிவிட்டுத் தலைவரை அவர் அடிக்கவும் முயன்றார் உடனே மேடை மீதிருந்தவர்கள் அந்த இளைஞரைப் பிடித்துத் தடுத்தனர். அவர் எல்லோரையும் திமிறிக் கொண்டு மேடையைவிட்டுக் கீழே இறங்கினான் இந்தக் கலாட்டாவின் பயனாக இருமைக்குகள் ஒரு டிரான்ஸ்மீட்டர் முதலியன ஒடிந்தன. முன்னால் வீற்றிருந்த பத்திரிகா நிருபர்களின் தலையின்மேல் பழமாரி, புஸ்தகமாரி, புஷ்பமாரி பொழிந்தன.

டி.பி. மீனாட்சிசுந்தரம்பிள்ளை எத்துணை கலாட்டா ஏற்பட்ட போதிலும் திட்டப்படி இன்றைய கூட்டத்தை நடத்தியே தீருவேன் என்ற பிரதிக்ஞை செய்துகொண்டு தலைவரின் உரையை தாம் வாசிக்க ஆரம்பித்தார். குழப்பம்

நிற்கவில்லை. பிறகு, ஸ்ரீ சேதுப்பிள்ளை ஒருபுறம் கூச்சல் நடக்கட்டும் உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்ச மில்லை என்றார் பாரதியார்". யார் என்ன செய்த போதிலும் எனக்கு அச்சமில்லை என்றார் இந்தக் கட்டத்தில் கூச்சல் வலுத்தது. சேதுப்பிள்ளை சிறிது உட்கார்ந்துவிட்டு மீண்டும் எழுந்து ஒருவரையும் இலட்சியம் செய்யாமல் பேசினார். வடநாட்டைத் தமிழ்நாடாகக் கண்டான் கம்பன் என்றதும் குழப்பம் ஏற்பட்டது. மேடை மீது இருந்த இளைஞர்கள் எல்லோரையும் இடித்து தள்ளிக்கொண்டு ஏறினர். போலீசார் வந்து அவர்களை அமர்த்தி மேடைமீது உட்காரச் செய்தனர்.

தலைவரை அடிக்கப்போன வாலிபர், உட்கார்ந்த சில நிமிஷங்களுக்குள் மேடை மீதிருந்த சிலருக்கும் அவருக்கும் இடையே வார்த்தைகள் தடித்தன. பக்கத்திலிருந்த ஒருவரை அவர் சண்டைக்கு இழுத்தார். பக்கத்திலிருந்தவருக்கு ஆத்திரம் எழுந்தது. உடனே பளார் என்று கன்னத்தில் அறையும் சத்தம் கேட்டது. மேடைமீதிருந்தவர்கள் குழப்பத்துடன் எழுந்தி ருந்தனர் மேடையில் ஏறிய அவ்விருவரும் கீழே இறக்கப் பட்டனர், இதே சமயத்தில் கூட்டத்தின் மற்றோர் புறத்தில் ஒருவருக்கொருவர் கை கலந்தனர். குஸ்தி நடந்தது. விளைவு தெரியவில்லை" இது, சுதேசமித்திரனில் காணப்படுவது.

இதைக்கூர்ந்து கவனிப்போருக்கு ஒரு சூட்சமம் தெரியவரும். சொற்போருக்கு நான் தயார் என்று கதிரேசர் கூறியபோதும், மேடைமீது ஏறிய இளைஞரை மேடைமீது இருந்தவர்கள் பிடித்தபோதும், டி.பி. மீனாட்சி சுந்தரர் தமது கெம்பீரமான குரலைக் காட்டியபோதும், ஸ்ரீ ஆர்.பி. சேதுப்

பிள்ளை, நான் எதற்கும் அஞ்சமாட்டேன் என்று கூறிய போதும், குழப்பம், கலகம், கூச்சல் அதிகரித்திருக்கிறது. ஓரளவு தெளிவு உள்ளவர்களும் தெரிந்து கொள்ளலாம், குழப்பவாடை அடிக்கும் கூட்டத்திலே, சொற்பொழிவாளர்கள், வீராவேசத்தையும் வீம்பையும், வெத்துவேட்டையும் வலியப் போருக்கழைப்பதையும், தமக்கு மிஞ்சினவர்கள் யாருமில்லை என்ற மனப்பான்மையையும், தாங்கள் வீராதிவீரர்கள், எதற்கும் அஞ்சாத சிங்கங்கள் என்பதையும், எப்படியிருந்தாலும் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தியே தீருவோம் என்று சவால் விடுவதையும் காட்டினால், எறிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவதாகவும், ஆப்பை அசைப்பதும் போன்றதாகும், அமளிக்கு அச்சாரம் தருவதாக முடியும் என்பதை உணரலாம். மேற்படி மாநாட்டிலே, நாட்டின் இன்றையப் போக்கை உணராமலும், மாநாட்டினரின் மனப்பான்மை எப்படி இருக்கிறது என்ற நிலைமையை அறிந்து கொள்ளாதவர்களும், சபையினரின் போக்கைத் தம்வழிக்குத் திருப்பிக் கொண்டு வரக்கூடிய பேச்சு முறை எதுவென்பதை உணரமுடியாதவர் களும், பயங்காளித்தனத்தை மறைக்கப் பிரதாபம் பேசுவது பலனளிக்காது என்ற உண்மையைத் தெரிந்து கொள்ளாதவர் களும், கூடினால், என்ன நடக்கும் என்பதை அன்றைய நிகழ்ச்சி அழகாக எடுத்துக் காட்டுகிறது. மண்டபத்தைக் கோயில்போல அலங்கரிக்கவும், கதிரவன் ஒளி இருந்தபோதே எலக்ட்ரிக் விளக்குகளால் அலங்காரம் செய்யவும், ஓலைச்சுவடிக்கு எதிரிலே தேங்காய் பழம் வைத்து நைவேத்தியம் செய்யவும் அவர்களுக்குத் தெரிந்திருந்ததே யொழிய, கூட்டம் எந்த மனப்பான்மையினர் அதிகமாகக்

கொண்டது, என்ற நாடிப்பரீட்சை நடத்தத் தெரிந்தவர்களல்ல. நிகழ்ச்சியிலே "விமரிசையான" பல நடக்கக்காரணம் இதுதான். திரு.டி.கே. சிதம்பரநாத முதலியாரும், கல்கி ஆசிரியரும், கூட்டத்தினரிடையே எழுந்துபோய் விட்டனராம். இந்த அளவு யூகமாவது மற்றவர்களுக்கு இல்லையே என்றுதான் ஆச்சரியப் பட வேண்டி இருக்கிறது."

ஏன் இவ்வளவு குழப்பம்? ஒரு டஜன் பேரால் முடியுமா? மூலைக்கு மூலை அமளி என்று நிருபர்கள் எழுதினரே, ஒரு டஜன் பேரால் இப்படி நடத்த முடியுமா? மாநாட்டை சர்.பி.டி. இராஜன் திறந்து வைத்தபோது, குழப்பம் இல்லையே, கரணம் என்ன? அவருடைய பேச்சின் போக்கு கலகத்தை பிறக்கச் செய்யக் கூடியதல்ல. மாநாட்டினரை வரவேற்று திவான்பகதூர் டி.எம். நாராயணசாமிப் பிள்ளை பேசிய கட்டத்திலேயே, குழப்பத்துக்கு விதை தூவி விட்டனர் மாநாட்டினர். யாதுஅது? கேள்வித்தாளைக் கொடுத்த ஒரு இளைஞனை, மேடைமீதிருந்த மாநாட்டுத் தலைவர்களுள் ஒருவர் அடித்ததுதான்! யார் இவ்விதமாக நிலைமையை மறந்து, விளைவு யாதாகும் என்பதை யூகிக்காமல், கேள்வித் தாள் கொடுத்த இளைஞரை அடித்தவர்? லிபரேடர் பத்திரிகை தலையங்கத்திலே அவ்விதம் அடித்தவர் ஒரு சர்க்கார் உத்யோகஸ்தர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் பெயர் என்ன? ஏன் அவர் மீது வழக்கு தொடரக்கூடாது? என்று பலர் கேட்கும் கேள்விகளுக்குச் சுயமரியாதைக்காரனுடைய சுபாவமான பெருந்தன்மை, பதில் கூறாமல் இருக்கச் செய்கிறது!

கதிரேசரின் சீமையிருக்கிறதே செட்டிநாடு, அந்தப் பகுதியிலே காரைக்குடியிலே இருந்து வெளிவரும் குமரன் குழப்பத்தின் காரணத்தை விளக்கியிருப்பதோடு, கதிரேசருக்குச் சிலயோசனைகளும் வழங்கியிருக்கிறது.

"கம்ப இராமாயணம் முதலிய நூல்களை ஒழிக்க வேண்டுமென்று ஒரு கூட்டத்தார் கூறி வருகிறார்கள். இப்படிக் கூறுவது பல ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் நிகழ்ச்சியே யாகும்."

பண்டிதமணி அவர்கள் தலைமையுரையை அருமை யாக எழுதிக்கொண்டு போயிருக்கிறார்கள் என்றாலும், அதைப் படிக்க ஆரம்பிக்கும் முன்பாக ஏதோ ஒரு முகவுரை சொன்ன தாகச் செய்தி வந்திருக்கிறது. அதில் என்ன சொன்னார் களென்பது தெரியவில்லை. அதிலிருந்துதான் சிலருக்குப் பலமான கோபம் தோன்றியிருப்பதாக ஊகிக்க வேண்டி இருக்கிறது. ஒரு குழுவினர் மனுதர்ம சாத்திரத்தைக் கொளுத்தினார்கள். கம்ப இராமாயணத்தைக் கொளுத்த வேண்டுமென்றனர். மனுதர்ம சாத்திரத்தைக் கொளுத்தும்போது பண்டிதமணி ஒன்றும் பேசவில்லை, கம்ப இராமாயணத்தைக் கொளுத்த வேண்டுமென்றபோதும் பேசவில்லை! பெரிய புராணத்தையும் சேர்த்துக் கொளுத்த வேண்டுமென்ற பொழுது தான் பண்டித மணியவர்கள் ஒரு அறிக்கை வெளியிட முற்பட்டார்கள். இம்மூன்று இலக்கியங்களையும் கொளுத்துவது பிழையென்று கூறினார்கள். மனுதர்மம் இலக்கியம் என்றுகூட எழுத அவர்கள் மனம் இடந்தந்தது. கொளுத்துகிற கட்சிக்காரருக்குப் பண்டிதமணியின் முன்னை

பேச்சுகளோடு அன்றைய உரையும் சேர்ந்து ஆத்திரத்தை மூட்டிவிட்டி ருக்கிறதென்று தோன்றுகிறது. இவர்களுடைய தகுதியை நோக்கும் போது சென்னைக்குப்போய்க் கம்பர் விழாவில் தலைமை வகித்துச் சீரழிய வேண்டியதில்லை. சென்னைக்குப் போவானேன்? போனாலும் தகுந்த ஏற்பாட்டுடன் போயிருக்கலாம். இப்படிப்பட்ட நிலைமைக்குச் சந்தர்ப்ப மிருக்குமென்பது சொற்ப அறிவு உள்ளவருக்கும் தெரிந்தது தான். இதன் உண்மையை முன்னதாகவே தெரிவிக்கக்கூடிய ஒரு நண்பராவது சென்னையில் பண்டிதமணிக்கு இல்லாமல் போய் விட்டது வருந்தத்தக்கது. கம்பர் விழா நடைபெற்ற நூற்றுக்கணக்கான ஊர்களில் கொளுத்துகிற கட்சிக்காரரும் இருக்கத்தான் செய்கிறார்கள், ஆனால் இப்படிப்பட்ட கொடுமை நடக்கவில்லை! பண்டிதமணியவர்கள் சென்னை முதலிய இடங்களில் கூட்டப்படும் இப்படிப்பட்ட கூட்டங்களில் கலக்கும்போது பொறுப்புள்ளவர்களின் சார்பிலும், முன்னெச்சரிக்கை யுடையவர்களின் கூட்டுறவிலும் செல்ல வேண்டியதவசிய மென்றும் தெரிவிக்க விரும்புகிறோம்.

நாமும் கூறுகிறோம், கதிரேசருக்கு மட்டுமல்ல, கலையின் பெயர் கூறி ஆரிய வலையிலே தமிழரைச் சிக்க வைக்கும் தோழர்கள் அனைவருக்குமே, "ஐயன்மீர் வேண்டாம்! தீ பரவுகிறது, விலகி நில்லுங்கள்! வம்பை விதைக்காதீர்கள் இத்தகைய நிகழ்ச்சிகள் வருத்தத்தைக் கொடுக்கின்றன. குருக்ஷேத்திர யுத்தம் வேண்டாம், என்று மீண்டும் மீண்டும் கூறுவதா, நான் கேட்பதா என்று எண்ணுபவர்களிடம் நாம் என்ன சொல்லமுடியும். கோகலே

மண்டபக் கோலாகலத்தைப் போல நிகழ்ச்சிகள் நடந்தாலும், இராமாயணமென்றால் சாமான்யமா. அது மகா தொல்லை யல்லவா தருகிறது, ஒலிபரப்பு உடைகிறது, ஓலைச்சுவடி வீசி எறியப்படுகிறது, மற்போர் நடக்கிறது, இவ்விதமாக இருக்கிறதே, இது சாமான்யமல்லவே! என்று கூறுவதன்றி வேறென்ன கூறமுடியும்!!

*(திராவிட நாடு - 23-4-44)*

# 12. மகாகனத்தின் மணியோசை!

"அரசியல் ஞானி, அறிவுக்களஞ்சியம், ஆங்கில மொழியிலே அளவற்ற ஆற்றலுடையார், பாரெங்கும் சுற்றிப் பரங்கியருங் கேட்டு வெட்கும்படிப் பிரசங்கமாரி பொழிந்தவர், பாட்டுமொழியிலே நாட்டுநிலையைக் கேட்டிடுவோரின் மனதிலே ஊடுருவிச் செல்லும்படிப் பேசவல்ல பேராற்றல் கொண்டவர், மகாகனம் எனும் மாண்புடைப் பட்டம் பெற்று, ஏககாலத்திலே வைசிராய்க்கும் தோழராய் மகாத்துமாவுக்கும் நண்பராய் இருக்கும் நிலையிலே உள்ளவர், எமது மயிலைவாசி, மகாகனம் வலங்கைமான் சீனுவாச சாஸ்திரியார், என்று விளம்பர விருதுபெற்று, விருத்தாப்ய பருவத்தை அடைந்து, நரைத்து, உடல் இளைத்து, நாட்டுநிலைகண்டு, சலித்துப் போயிருக்கிறார், சாஸ்திரியார், அவர், சென்னையிலே ஓரிடத்திலே, இராமாயணக் காலட்சேபம் செய்து வருவதாகப் பத்திரிகைச் செய்தியொன்று கண்டோம், பரிதாபம் கொண்டோம். இலண்டனிலும் பாரிசிலும் வட்டமேஜை

மாநாட்டிலும் சர்வதேசச் சங்கத்தினர் முன்னிலையிலும், பேசிய மகாகனம், மன்னர்பிரான் சர்க்காருக்கு மதியும் நீதியும் உணர்த்துவிக்கும் உரைபல பேசுவோர் என்று பெருமையாகக் கூறப்பட்டுவந்த மகாகனம், லிபரல்கட்சி எனும், நிபுணர்களின் நிலையத்தின் நடுநாயகம் எனத் திகழ்ந்தவர், நிந்தனை எனினும் அவருடைய நேர்த்தியான வாசகத்தைக் கேட்பதிலே எமக்கோர் இன்பம் உண்டு என்று எதிரிகளும் கூறிடும் நிலையில் நின்றவர், இன்று, இராமாயணக் காலட்சேபம் செய்கிறாராம்! இராமாயணம் இனி நாட்டிலே இடம் பெற வேண்டுமானால் மகாகனங்கள்கூட, அதன் பக்கம் நிற்க வேண்டும், அவ்வளவு பெரிய எதிர்ப்பு இதுபோது அப்புராணத்திற்கு ஏற்பட்டுவிட்டது என்பதை இச்சம்பவம் காட்டுகிறதோ, அல்லது, மகாகனம் சாஸ்திரியார், மற்ற துறைகளிலே மாரடித்தழுது தோற்றுப் போனதால், வியர்த்து விம்மி, விலாநோக வேறு வேலை செய்வதைவிட, "ராம நாமமே கற்கண்டு" என்ற பஜனை மனப்பான்மை பெற்று விட்டார் என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறதோ நாமறியோம், ஆயினும் ஒன்று அறிவோம், இது பரிதாபத்துக்குரிய காட்சி! பாழடைந்த மாளிகை, பட்டுப்போன மரம், வறண்ட ஆறு, ஒடிந்த வாள் என்பவை போலவன்றோ இருக்கிறது, இராமாயணப் பிரசங்கம் செய்கிறார் மகாகனம் என்ற செய்தியைக் கேட்கும் போது!

அந்தக் குலுக்கு நடையும் மினுக்கு மேனியும், தளுக்கு மொழியும் பளிங்குப் பற்களும், கண்ணாடிக் கன்னமும், தென்னம்பாளை பிளந்ததன்ன சிரிப்பும், பொன்மேனியும், பூ இதழும், துடியிடையும் தாமரைக்கண்ணும் எங்கே! நரைத்து

நடுக்கலுடன், நாற்றமடிக்கும் புண்ணுடன் நடுவீதியிலே தள்ளாடி நடந்து தகரக் குவளைக் காட்டித் தரித்திரச் சுருதியை மீட்டித் தனவான்களை வேட்டையாடும் இந்த நிலை எங்கே, எவ்வளவு வீழ்ச்சி, எத்தகைய தாழ்ந்தநிலை, கோபுர உச்சியிலே கூத்தாடினாள் குட்டிச் சுவரிலே நடக்கிறாளே, கீதம்பாடி மகிழ்வித்தாள், இன்றோ ஓலமிட்டு விரட்டுகிறாளே, கண்டவர் மயங்கினரே! இன்று எதிர்ப்பட்டோர் ஏசுகின்றனரே, பாவம், ஏன் இவளுக்கு இந்நிலை ஏற்பட்டது என்று எவரும், அந்த நாளிலே அழகியாக இருந்து ஆடவரை அணைத்து அழித்து, பணம் பராக்குக்கூற, களிப்பு காவலிருக்க, முகஸ்துதி சாமரம்வீச, மது, மதியூக மந்திரியாக இருக்க, ஆடம்பரம், அடைப்பம்தாங்க, சீமான்கள் கை கால் பிடிக்க, சிற்றரசர்கள் ஏவலராக நிற்க, சிற்றின்பபுரியிலே ஆட்சி செய்து வந்து, பின்னர் சீரழிந்து சிரிப்பழிந்து, மேனியின் கட்டு அழிந்து கண்ணின் ஒளி இழந்து, நோய் கைபிடித்திழுக்க, இருமல் மிரட்ட, இடுப்பு வலி இம்சைசெய்ய, வறுமைவாட்ட, வழியிலே செல்வோரிடம், பிச்சைகேட்கும் நிலையைப் பெற்றவளை, ஏன் இந்நிலை பெற்றாய், எங்கே உன் இளமையும் அழகும், சிங்காரமும் சிரிப்பும், மாளிகையும் மதுவும், காதலரும் கவர்ச்சியும் என்று எவரும் கேட்பதில்லை, மனதிலே எண்ணிக் கொள்வர், அன்று அவள் கொண்ட மமதை எவ்வளவு இன்று அடைந்துள்ள வேதனைக்கு அதுதான் வித்துபோலும் என்று கருதுவர். அதுபோலவே, மகாகனம் அரசியலிலே உலவித் தமிழரின் எண்ணப்பூங்காவை அழித்ததையும், நீதிக் கட்சியின் கோட்டையைத் தகர்த்ததையும், தமிழர் தலைவர்கள்மீது சொல்லம்பு

வீசியதையும் அதே சமயத்திலே காங்கிரஸ் ஆரியருக்குக் காந்தியார் நிறுவிய சுகாஸ்ரமம் என்பதை அறிந்து அதற்கு "ஸ்துதி" பாடியதையும், அறிந்தவர் களுக்கு, இன்று சாஸ்திரியார், இராமாயணம் படிக்க வேண்டிய நிலைக்கு வந்தது காணும்போது ஏதேதோ மனதிலே எழுவது இயற்கைதான்! என்றாலும் நாம், பருவத்தை எண்ணி அவருடைய இந்தக்கால கருமத்தைக் கேலி செய்ய மறுக்கிறோம். ஏதோ பாவம், வாழ்ந்தார், அந்தக் காலத்திலே அற்புதமான மனக்கோட்டைகள் கட்டியிருப்பார், இன்று காண்கிறார், பெரியதோர் புரட்சி வேகம் பூசுரரின் வாழ்வைக் கீழே புரட்டித் தள்ளித் தலைகீழ்நிலை உண்டாக்கக் கிளம்பி இருப்பதை! சோகம் பிறப்பதும் சலிப்பு முற்றுவதும் இயற்கைதானே இந்நிலையிலே, எனவேதான் போலும், அவர் இராமாயணக் காலட்சேபம் செய்யப் புறப்பட்டுள்ளார். மகாகனத்தின் துணைகொண்டு இராமாயணம் மக்களிடை நிலைத்து விடும் என்று பூசுரக்கூட்டம் மனப்பால் குடிக்கும் என்பதை நாமறிவோம். இந்தச் சம்பவம், பாராளும் மன்றங்களிலே வீற்றிருந்த மகாகனம் பஜனைக் கூட்டத்திற்குக் காலவேகத்தால் அனுப்பப்பட்டார் என்பதைக் காட்ட உதவுமே யொழிய இராமகாதைக்கு அரணாக அமையாது. நாடுநாடுவது நாப்பறைக்காரர் நவின்ற நச்சுக்கோட்பாடுகள் நிறைந்த இதிகாசாதிகளையல்ல!! அந்தக் காலம் மலையேறி விட்டது. மகாகனங்களால், அந்த நிலையை மாற்றிவிட முடியாது. மற்றவற்றிலே பெற்ற தோல்வியின் அறிகுறியே, மகாகனத்தின் இராமாயண பாராயணம் என்று கருதுகிறது தமிழர் சமுதாயம். மகாகனத்தின் நிலை இப்படியும் ஆகவேண்டுமா பரிதாபம்,

என்று பச்சாதாப்படுகிறது!! பல்லிழந்து, நகமிழந்து, பாயும் வலிவிழந்த புலி, பசியை மட்டும் இழக்க முடியவில்லை. எனவே பொன்காப்பைக் காட்டி வழிப்போக்கனை ஏய்த்து, அருகே அழைத்து அவனைக் கொல்ல முயன்றதாக ஒருகதை உண்டே, அதனையும் நீறுபூசி மணி அடித்து ஏடுகையிலே பிடித்துச் சைவத்தின் மேன்மையைக் கடைப்பிடித்தேன், இனி ஒரு உயிரையும் கொல்லேன் என்று கூறி, ஏமாந்து அருகே வந்த எலிகளைத் தின்ற உருத்ராட்சப் பூனையின் கதையையும் பள்ளிச்சிறாரும் அறிவர். பள்ளிச் சிறார் பெற்றுள்ள அளவுகூடவா, இன்றையத் தமிழரின் பொது அறிவு இல்லை? அவர்கள் தெரிந்து கொள்ளமாட்டார்களா, மகாகனம் சாஸ்திரியார், அரசியல் ரணகளத்திலே நின்று போரிட்டு அலுத்தார், இன்று புராணப்பொறி அமைத்து, அதிலே தமிழரைச் சிக்கவைக்க முயலுகிறார் என்ற விஷயத்தை! ஏனோ, பாபம், தள்ளாத பருவத்திலே இந்தப் பயனளிக்க முடியாத காரியத்திலே ஈடுபடுகிறார், பரிதாபத்துக் குரிய மகாகனம்!! பஜனைக் கூடத்திலே அமர்ந்து, பக்தகோடி களைக் கண்டு மகிழ்ந்து, ஏடு படிப்போனிடம் பேசிவிட்டு, "எம்பிரானைத்" தொழுதிட, ஜப்பான் சூடத்தைக் கொளுத்தி, ஜெர்மன் ஓவியக்காரன் தீட்டி அனுப்பிய ராமர் படத்தின் முன்காட்டி, மணி அடித்துக் கொண்டிருக்கிறார் மகாகனம், அது ஆரியரின் காலம் தீர்ந்துவிட்டது, என்பதை அறிவிக்கும் மணி ஓசை என்பதை அவரே அறியாமலிருக்கிறார்!

*(திராவிட நாடு - 21-5-44)*

# 13. ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்குப் பகிரங்கக் கடிதம்!

ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களே!

பலகாலமாகப் பஞ்சமும் பிணியும் மிகுந்து, ஏழைகள் புழுப்போல் துடித்துப் பரிதவிக்கும் இந்த நாட்டிலே, அதே நேரத்திலே மதத்தின் பெயரால், மக்கள் பணத்தை வாரி இறைத்துப் பாழ்செய்வதைத் தாங்கள் அறிவீர்கள். இந்த நாட்டிலே, பல கோயில்களிலே, முடங்கிக் கிடக்கும் செல்வமும் அவ்வப்போது வீணாக்கப்படும் பணமும், ஏழைகளிடமிருந்து அவர்களுடைய உழைப்பின் மூலமாகத் தட்டிப் பறிக்கப்பட்டது என்பதை உணரப் பிரமாதமான மேதாவித் தனம் தேவை யில்லை, சாதாரணமாகப் புரியக்கூடியதே. இவ்வளவு செல்வமும் ஏழைகளை ஈடேற்ற, அவர்களுக்கு வாழ்க்கைக்கு வழிகாட்டும் தொழிற்சாலைகள் அமைக்கப் பயன்படுமானால், எவ்வளவு நன்மை கிடைக்கும் என்பதை எண்ணும்போது, இதனைத் தடுக்கும் மதப்பித்தம் மட்டந் தட்டப்பட்டாலொழிய மக்கள் மீளமார்க்கமில்லை என்று எவருக்கும் தோன்றும். திருத்தலங்கள் எனப்படுபவை பல. அவைகளுக்கு மகத்துவம் கற்பிக்கத தீட்டிய கதைகளும் பல. அக்கதைகளை நம்பி ஏமாந்த மக்கள், காசைக கரியாக்கிய கதைபோல, உலகிலே மடைமையும் கொடுமையும் நிரம்பிய வேறோர் கதை பார்க்க முடியாது.

இப்படிப்பட்ட திருத்தலங்களிலே ஒன்று திருவண்ணாமலை, அங்கும் அதைச் சுற்றியுள்ள

வட்டாரத்திலும் இன்றும், எத்தனையோ ஆயிரம் ஏழை மக்கள் வதைகின்றனர், வாழ்வு ஏன் என்று வெறுக்கின்றனர், ஒரு வேளை உணவுக்கு மாடாய் உழைக்கின்றனர், இராப்பட்டினிகள் பல, பகல் பட்டினி கிடப்போர் உண்டு, கூழும் களியும் கிடைத்தாலே, பாலும் பழமும் போலக் கருதுபவர் இருக்கிறார்கள். கோழியுடன் எழுந்து மிருகம்போல் உழைத்து, இரவு, கையே தலையணையாகக் கொண்டு காலங் கழிக்கும் கஷ்டப்படும் மக்கள் உள்ளனர். நெய் காணாக் குடும்பங்கள் எண்ணற்றன. நோய் வந்தால் மரணமன்றி வேறென்ன நேரிட முடியும். மருந்துக்குப் பணம் ஏது என்று எண்ணுபவர் எண்ணற்றவர். நெசவுத் தொழிலிலே நரம்பு முறிய வேலை செய்து வயிறார உண்ண முடியாதிருப்பவர் எவ்வளவோ! மக்கள். அனாதைகள், அபலைகள், அகதிகள், அழுகு நோயினர், நீர் ஒழுகும் கண்ணினர், அந்நகர், ஆயிரமாயிரம்! இவ்வளவு வறுமையும் வாட்டமும், அண்ணாமலையார் வாழும் திருவண்ணாமலையிலே இன்றும் உண்டு. ஆனால் கோவிலிலோ! திருவண்ணாமலையார் வீற்றிருக்கும் காட்சியும், அதனை மாட்சிமையுள்ளதாக்கிட மக்கள் பொருள் தந்துள்ள அளவோ, அபாரம்! திருவண்ணாமலைக் கோயிலிலே, திருஅருள் தேடினோர் செலவிட்ட பணத்தின் கணக்கு இதோ தருகிறேன். படித்துப் பாரும், பிறகு கூறும் இது தரித்திர நாடா என்பதை!

**கோயில் திருப்பணி**

| | |
|---|---|
| திருவண்ணாமலையில் அருணாச்சல ஈஸ்வரரின் சாமி கோவில் அம்மன் கோயில் மண்டபம் ஆகியவை பிரித்துக் கட்டியதற்கு | 12,00,000 |

| | |
|---|---|
| சுவாமிக்குக் கல்யாண மண்டபம் கட்ட | 50,000 |
| கோயில் பிரம்ம தீர்த்தக்குளம் படிகட்டுக் கட்ட | 75,000 |
| கோவில் சிவகங்கை தீர்த்தக்குளம் அகலப்படுத்தி மண்டபம் கிராதி கட்ட | 1,75,000 |
| வினாயகருக்கு வெள்ளிக் கவசம் போட | 5,000 |
| தளவரிசைக்கு | 20,000 |
| சத்திவிலாசத்துக்கும், பிரம்ம தீர்த்தத்துக்கும் போகத் தளவரிசை | 5,000 |
| கோபுரத்துக்கு வெளியில் சுவாமியை எழச் செய்யும் கல்யாண மண்டபம் | 25,000 |
| துர்காம்பாள் கோவில் கர்ப்ப - அந்திராள - நவராத்திரி மண்டபம் கட்ட | 35,000 |
| ஆதி - அடி அண்ணாமலையார் கோவில்கட்டி சுவாமி அம்மன் பிரதிஷ்டை செய்ய | 3,50,000 |
| அம்பாளுக்கு நாகாபரணம் வெள்ளிக் கவசம் | 5,000 |
| பார்ப்பனருக்கும், வேலைக்காரருக்கும் அக்கிரகாரமும் வீடும் | 10,000 |

## சுவாமிக்கும், அம்மனுக்கும் நகைகள்

| | |
|---|---|
| அம்மனுக்குத் தாலி | 3,000 |
| மேற்படி கர்ண பத்திரம் | 2,000 |
| சாமிக்குக் கர்ணபத்திரம் | 1,500 |
| மற்றோரு அம்மனுக்கு கர்ணபத்திரம் | 2,000 |

| | |
|---|---|
| சாமிக்கும் அம்மனுக்கும் கைக்கு உறை (அபயஸ்தம்) | 15,000 |
| அம்மனுக்கு பத்ம பீடம் | 500 |
| தும்புரு நாரதருக்குத் தங்கத்தகடு | 2,300 |
| தும்புரு நாரதருக்கு மரத்துக்கு ரேக்கு | 300 |
| இந்திர விமானம் (வெள்ளி) | 80,000 |
| மேற்படி நிறுத்தக் கட்டடம் | 8,000 |
| சின்ன இந்திர விமானம் | 15,000 |
| எடுபிடி உபசார சாமான் | 2,565 |
| வெள்ளிக் குடை 2-க்கு | 2,500 |
| சுப்பிரமணிய சாமி முதலியவற்றுக்கு வெள்ளிக் கவசம் | 3,000 |
| வாசற்படிக்கு வெள்ளித் தகடு | 300 |
| தக்ஷிணாமூர்த்தி கோவிலுக்குப் படி - பீடம் முதலியன | 3,000 |
| துர்காம்பாளுக்கு வெள்ளிக் கவசம் | 500 |
| மூல உற்சவ சாமிகளுக்குப் பட்டுச்சரிகை உடைகள் | 2,000 |
| நெற்றிப் பட்டம் விபூதிப்பட்டை தொங்கட்டம் உள்பட | 12,000 |
| இடப்புறத்து அம்மனுக்கு நெற்றிப் பட்டம் | 8,550 |
| அம்மனுக்குப் புலாக்கு | 1,200 |
| சாமிக்கு விபூதிப் பட்டம் | 7,475 |
| மூலசாமிக்கு நாகாபரணம் | 25,000 |

| | |
|---|---|
| எலக்டிரிக் விளக்கு எஞ்சின் உள்பட | 90,000 |
| வெள்ளி ரிஷப வாகனம் | 35,000 |
| மேற்படிக்குக் கட்டடம் | 7,500 |
| ரிஷபவாகனத்திற்குக் கூட வருகிற எஞ்சின் | 2,000 |
| வெள்ளிச் சின்ன ரிஷப வாகனம் | 3,000 |
| வெள்ளிக் குத்து விளக்கு 2-க்கு | 3,500 |
| அம்மன் மூலஸ்தானத்துக்குக் குத்துவிளக்கு | 2,010 |
| சாமிக்கு வெள்ளி நாகாபரணம் | 1,300 |
| சாமிக்குக் கவசம் கிரீடம் தங்கம் | 7,648 |
| சாமிக்கு ரத்ன வைரக் கிரீடம் | 30,000 |
| அம்மனுக்குத் தேர்த் தகடு | 20,000 |
| சுவாமிக்குத் தேர்த் தகடு | 55,000 |
| சோமாஸ்கந்தருக்கு வைரக் கிரீடம் | 44,000 |
| வினாயகருக்குச் சொர்ண கவசம் | 7,000 |
| தக்ஷிணாமூர்த்திக்கு வெள்ளிக் கவசம் | 285 |
| வேறுசாமி இரண்டு அம்மன், ஆஞ்சநேயர், கருடன், இவைகளுக்கு வெள்ளிக் கவசம் | 1,680 |
| கெஜலட்சுமிக்கு வெள்ளிக் கவசம் | 705 |
| ஆறுமுகம், அம்மன்கள் வெள்ளிக் கவசம் | 1,842 |
| சண்டிகேசுவரர் கவசம் | 255 |
| வைரவர் கவசம் | 608 |
| சனீஸ்வரர் கவசம் | 135 |
| சுப்ரமணியர், வேணுகோபாலர் திருவாக்ஷி | 2,700 |

| | |
|---|---|
| வெள்ளிக் காமதேனு | 30,000 |
| வெள்ளிக் கற்பக விருட்சம் | 30,000 |
| மேற்படிகளுக்குக் கட்டடம் | 10,000 |
| வாகனத்தோடு கூடவருகிற எலக்ட்ரிக் எஞ்சின் | 2,000 |
| அம்மனுக்குத் தங்கக் கிளி | 150 |
| சோமவார வெள்ளிக் குத்துவிளக்கு | 500 |
| சாமிக்குத் தங்கக் கவசம் | 5,000 |
| சலங்கை மாலை | 500 |
| சாமிக்கு டாலர் கோர்த்த தங்கச் செயின் | 1,000 |
| வைர டாலர் கோர்த்த தங்கச் செயின் | 1,000 |
| அம்மனுக்க வைர நத்து | 500 |
| இரட்டைப்பட்டை சங்கிலி | 300 |
| பதக்கம் கோத்த தங்கச் செயின் | 350 |
| அம்மனுக்கு மார்கவசம் | 1,000 |
| பாதம் முதலிய கவசம் | 129 |
| வெள்ளிக் கிரீடம் | 81 |
| அம்மனுக்குப் பிரபை | 346 |
| நகை வைக்க இரும்புப் பெட்டி | 900 |
| வைர மூக்குத்தி | 250 |
| வெள்ளி ரதம் தங்கத் திருவாட்சி ரதம் | 1,25,000 |
| ரதம் நிற்கும் கொட்டகை | 10,000 |
| தேர் முட்டி | 3,000 |
| இரதத்துடன் வருகிற எஞ்சின் | 3,000 |

| | |
|---|---|
| சாமிக்குப் பொன்முடியும் தங்கப்பூணூலும் | 2,745 |
| வலம்புரிச் சங்கு | 750 |
| காண்டாமிருகக் கொம்பு | 100 |
| அம்மனுக்கு வெள்ளிக் குதிரை | 15,000 |
| விநாயகருக்கு விமானம் | 2,500 |
| சாமிக்குக் குதிரை வாகனம் | 15,000 |
| மகிரி (நகை) 2-க்கு | 7,250 |
| பெரிய காசு மாலைகள் 3-க்கு | 7,227 |
| வைர மாங்காய் மாலை | 5,200 |
| இடப்புறத்தம்மனுக்குக் கவசம் | 523 |
| மேற்படி அஸ்தம் | 115 |
| தனி அம்மனுக்கு அஸ்தம் | 255 |
| மேற்படிக்கு பாதம் | 532 |
| ஜடைபில்லை | 2,000 |
| விநாயகர் நெற்றி பட்டம் விபூதி | 208 |
| சோமாஸ்கந்தருக்குத் திருவாக்ஷி | 2,355 |
| சாமிக்குப் பெரிய திருவாக்ஷி தங்கத்தில் | 5,003 |
| அம்மனுக்கு மேற்படி | 3,750 |
| சண்டிகேஸ்வரருக்கு முலாம் | 200 |
| சம்மந்த விநாயகருக்குக் கவசம் | 5,040 |
| சந்திரசேகர சாமிக்குக் கவசம் | 1,691 |
| பாத்திரம் வெள்ளிக் குடம் 6-க்கு | 2,100 |

| | |
|---|---|
| அர்ச்சிய வட்டம் 7-க்கு | 1,650 |
| வெள்ளி அபிஷேக கவுசம் 3-க்கு | 300 |
| வெள்ளி அண்டா 1-க்கு | 1,529 |
| தாம்பாளம் 2-க்கு | 503 |
| பூஜைமணி 2-க்கு | 466 |
| அலங்கார தீபம் 2-க்கு | 803 |
| வில்வார்த்தி | 144 |
| சருட்டி | 125 |
| குடை | 112 |
| விசிறி | 117 |
| கண்ணாடி | 99 |
| ஆலவட்டம் | 131 |
| வெள்ளித்தட்டு 10-க்கு | 139 |
| வெள்ளி 7-கிளை கற்பூரத் தட்டு | 134 |
| வெள்ளிக் கைத்தீவட்டி 2-க்கு | 150 |

**வாகன அலங்காரம்**

| | |
|---|---|
| உற்சவ சுப்பிரமணியர் திருவாக்ஷி | 955 |
| மேற்படி ரிஷப வாகனம் | 6,000 |
| சண்டிகேஸ்வரர் திருவாக்ஷி | 196 |
| வெள்ளி கோரி | 7,000 |
| யானை வாகனம் | 6,000 |
| சிறு மரத்தேர் | 1,500 |

| | |
|---|---|
| வினாயகர் பித்தளைப் பீடம் | 350 |
| மரச் சிங்க வாகனம் | 700 |
| மரக்காமதேனு வாகனம் | 1,000 |
| தங்கரேக் தரிசன விமானம் | 6,000 |
| பிள்ளையார் மேல்கோப்பு | 5,500 |
| ராஜா மண்டப இரும்புக் கதவு | 1,000 |
| பொக்கிஷம் பல்சட் | 750 |
| சஞ்சீவிராயருக்குக் கட்டடம் | 1,200 |
| நந்தி கொட்டகை | 100 |
| பிள்ளையாருக்கு கோவில் கட்டடம் | 2,000 |
| கிணறு, ஏரி படிக்கட்டு | 3,000 |
| கடைகள் கட்டியது | 4,100 |
| கடைகள் வாங்கியது | 13,350 |
| கண்ணாடி விமானம் | 500 |
| தெப்ப விமானம் | 7,700 |
| சர்வே செய்ய | 2,000 |
| ஏரி மராமத் | 1,500 |
| உற்சவத்துக்குச் சாக்கடை கட்டியது | 1,000 |
| கெஜலட்சுமிக்கு விமானம் | 300 |

மேல் கண்டவைகள் மொத்தமாகக் கட்டடம் நகை வாகனம் ஆகியவைகளுக்கு ஆக செலவு செய்யப்பட்டவற்றின் தொகைகளாகும். இவை மொத்தம் சுமார் 30,00,000 ரூபா ஆகும்.

## இனி மாத வருஷ செலவுகள் விவரமாவது

| | மாதச்செலவு |
|---|---|
| உஷக் காலை பூஜை வெண் பொங்கலுக்கு | 75 |
| கட்டளை அபிஷேகம், சர்க்கரைப் பொங்கல், தயிர்சாதம் | 200 |
| கட்டளை நைவேத்தியம் பூசை சுயிர்ச்சாதம் | 60 |
| தனிக்கட்டளை | 50 |
| புளியோதரைக்கு | 40 |
| கொழுக்கட்டைக்கு | 30 |
| வடை, பாயாச சுத்தன்னம் | 30 |
| மற்றொரு பாயாச சுத்தன்னம் | 30 |
| தினம் பூசை அபிஷேகம் நைவேத்தியத்திற்கு பால்படி 34-க்கு மொத்தம் | 300 |
| காலசந்தி பூசைக்கு | 200 |
| எலக்ட்டிரிக் விளக்கு | 600 |
| சோமவார அபிஷேகத்துக்கு | 10 |
| சுக்கிரவார அபிஷேகத்துக்கு | 15 |

### உற்சவ கால மண்டபப்படி

| | |
|---|---|
| 2-ம் நாளைக்கு | 500 |
| 3-ம் நாளைக்கு | 400 |
| 4-ம் நாள் | 800 |
| 5-ம் நாள் | 400 |

| | |
|---|---|
| 6-ம் நாள் | 600 |
| 8-ம் நாள் | 400 |
| 9-ம் நாள் | 700 |
| 5-உற்சவத்திற்கு வருஷம் | 1,250 |
| ஆருத்திரா தரிசன உற்சவத்திற்கு வருஷம் | 500 |

**வேத பாடசாலைகள்**

| | |
|---|---|
| பாடசாலைக் கட்டடம் 2-க்கு | 75,000 |
| இதற்கு மூலதனம் | 50,000 |
| மற்றொரு வேத பாடசாலைக் கட்டடங்களுக்கு | 1,50,000 |
| இதற்கு மூலதனம் | 1,50,000 |

கொடை வள்ளலே! இவ்வளவும், இன்னும் அதிகமாவும் இருந்தும், அண்ணாமலையாருக்குத் திருப்தி ஏற்படவில்லை, என்று கருதியோ என்னவோ, அவருக்கு ஏராளமான பொருட் செலவிலே கும்பாபிஷேகம் நடத்தப்படபோவதாகக் கேள்விப் படுகிறேன். அந்தச் செய்தியே சோகத்தைத் தருவது, ஆனால் அத்துடன் பிணைத்துப் பேசப்படுகிறது தங்களின் பெயர், தங்களின் திருகைங்கரியமாகத்தான் திருவண்ணாமலைக் கோயிற் கும்பாபிஷேகம் நடக்கப்போகிறது என்ற செய்தி என்போன்றோரின் நெஞ்சை மிகவும் வாட்டுகிறது. "என், போன்றார்" என்றால் யார் என்று கேட்க எண்ணுவீர், சொல்கிறேன் கேளும், தங்கள்பால் அன்பும் பெருமதிப்பும் கொண்டவர்கள், தங்களின் தாராள மனப்பான்மையைக் கண்டு அதிலே தமிழரின் பண்பு மிகுந்திருப்பதைப் பார்த்துப் பூரித்துப் பெருமை அடைபவர், எமது செட்டிநாட்டரசர்

என்று இறுமாப்புடன் அக்ரகாரத்தை நோக்கிக் கூறுபவர், இமயம் வரை மட்டுமல்ல இலண்டன் நியூயார்க் வரையிலும் கூடத் தங்கள் புகழ் பரவவேண்டும் என்று ஆசைப்படும், உமது அன்பர்கள், தமிழர்கள், தன்மான இயக்கத் தோழர்கள். இதுதான் "என்போன்றார்" என்பதன் விளக்கம். இத்தகைய நண்பர்களின் மனம் படும்பாடு கொஞ்சமல்ல, இதைக்கண்டு ஆரியம் ஆனந்தக்கூத்தாடுவது சாதாரணமாகவல்ல!

"கேட்டேயேளோ! என்னமோ நினைச்சிண்டிருந் தாளேன்னோ இந்தச் சு.ம.க்கள் ராஜா சர். இனிப் பிராமண காரியத்துக்குப் பணம் செலவிடமாட்டார், அவருக்கு இப்போ சங்கீதமே கூடத் தமிழிலேயே இருக்கணும்னு சொல்ற அளவு பிராமணத்துவேஷம் வந்திருக்குன்னு, நாயக்கர் கோஷ்டி சொல்லிண்டிருந்தாளேன்னோ, அதுபூரா சுத்த அபத்தம், பேந்தப்பேந்த விழிக்கிறா, சு.ம. விஷயம் என்ன தெரியுமோ? நம்ம ராஜா சர், திருவண்ணாமலைக் கோயிலே பிரமாதமான செலவிலே கும்பாபிஷேகம் செய்யப் போறாராக்கும். இப்போ என்ன சொல்வா, இந்தக் சுயமரியாதைக்காரன்" என்ற அக்ரகார வாசி ஆனந்தமாகத் தொங்கு வயிற்றைத் தடவியும் முப்புரியை முறுக்கியும், பெருமிதத்தோடு பேசுவது, எங்கள் செவியிலே விழுகிறது, நெஞ்சம் சோகத்திலே சென்று ஆழ்ந்திடுகிறது. கும்பாபிஷேகம் செய்கிறீர்கள் என்பதற்காக ஆனந்திக்கும் அதே ஆரியபுரியினர், மற்றும் ஒன்று சொல்லிக் கேட்கிறோம், புண்ணிலே வேலாக இருக்கிறது அச்சொல். "கும்பாபிஷேகம் செய்றதுக்கு என்ன, குத்தலோ குடைச்சலோ! என்ன ஓய்! இந்தச் சண்டையிலே மட்டும் ராஜா சர்க்கு, லட்சலட்சமாக இலாபம் கிடைச்சிருக்கு. அதிலே ஒரு லட்சம்வாரி வீசினா

என்ன கெட்டுப் போச்சு. பேரும் புகழும் சும்மா வருமா? காரணமில்லாமே காரியம் நடக்காது பாரும்" என்றும் ஆரியர் பேசிடக் கேட்கிறோம். அவர்களின் நிந்தனையே வந்தனமாகக் கருதப்படும் நிலை இருந்தாலன்றி, இச்சொல் கேட்கயார் ஒப்புவா்! வங்கப் பஞ்சத்தையும் கேரளத்தின் கஷ்டத்தையும், பம்பாய் தீ விபத்தையும் அசாம் அமளியையும் எண்ணி எண்ணி மக்களின் மனம் புண்ணாகிக் கிடக்கும் இந்த வேளையிலே, கும்பாபிஷேகம் நடக்கப்போகிறது, அதிலும் அதனைத் தாங்கள் முன்நின்று நடத்தி வைக்கப் போகிறீர்கள் என்று கேள்விபட்டால், மக்களின் மனம், அனலிடு மெழுகென உருகாதா, அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை என்று கூறும் அளவு, உலகப்பொது அறிவு இல்லாதவரெனத் தங்களை யாரும் கூற முடியாதே, தாங்களா, இக்காரியம் செய்வது. நாட்டு நிலை அறியாதாரும், கூட்டைவிட்டு உயிர் போனால் போதும் என்று சாவுக்குச் சீட்டனுப்பிவிட்டுக் காத்துக்கிடக்கும் மக்களின் மனவேதனையை உணர முடியாதாரும், பஞ்சம் தலைவிரித்தாடினாலென்ன, பஞ்சாமிருத அபிஷேகம் செய்து பழனியப்பனைத் தொழுவேன் என்று கூறினால், அதிலே பொருள் உண்டு, அவர்கள் அறிவை வேண்டாதார், ஆலயமே வேண்டுவர் என்ற அத்தகையோரை ஒதுக்கித் தள்ளிவிட முடியும். தாங்களோ பல்கலைக்கழகம் கண்டவர், பண்பும் பண்ணும் ஒன்றுபடவேண்டுமென விண்டவர், ஏழையின் கண்ணீர் எத்தன்மையது என்பதனைத் தெரிந்தவர், இருதயமெனும் ஆலயத்திலே அன்பெனும் அபிஷேகம் தந்தால், ஆண்டவன் அதனைத்தான் மகிழ்வோடு ஏற்றுக் கொள்வார் என்று அறநெறி அறிந்தவர், அறிஞர் உலகிலே அரசோச்சுபவர், தர்மம் செய்வது என்றதுறையிலேயே

பொதுவாகத் தமிழகத்திற்கும் சிறப்பாகத் தனவணிகர் தரணிக்கும் புதிய வழி காட்டியவர், தாங்கள், தரித்திரர் துடிக்கும் இந்த நேரத்திலே, பணப்பெருக்கத்தைக் கண்டு பாழ் செய்யாதீர், சேமித்து வைத்துப் போருக்குப் பிறகு உண்டாகும் பணப்பஞ்சத்தின் போது பயன்படுத்துக என்று சர்க்காரே பிரச்சாரம் செய்யும் இந்த நாளிலே, அவசியமும் அவசரமும், பலனும் அற்ற காரியத்துக்குப் பெரும் பொருளைச் செல விடுவது சரியா, நாட்டுக்கு உகந்ததா, காலத்துக்கு ஏற்றதா, தங்களின் போக்கைத் தமக்குப் பாதையாகக் கொள்ள வேண்டும் என்று எண்ணும் பல தனவான்களைத் தவறான பாதைக்கு இழுத்துச் செல்வதாகாதா, சொல்லுங்கள்!

நான், மதத்தைக் கண்டிக்கிறேன், மகேஸ்வரனை நிந்திக்கிறேன், செல்வர்களைச் சாடுகிறேன், என்று இந்த என் கட்டுரையைத் திரித்துக் கொள்ளும் திமிர்வாதக்காரர் சிலர் இருப்பர். அவர்களின் போக்கு, பண்புடைய தங்கட்குப் பிடிக்காது என்பதையும் நான் அறிவேன், தாங்களும், புன்னகையுடன் இத்தகைய அன்புரைகளைக் கவனிப்பீரே தவிர, இவன் யார், என் முறையைக் குறைகூற என்று கூறிக் கனல் எழுப்ப மாட்டீர் என்பதையும் தெரிந்திருக்கிறேன், எனவேதான் ஒளிவின்றிக் கூறுகிறேன், இந்தச் செயலைக்கண்டு நான் துக்கப்படுகிறேன், வெட்கப்படுகிறேன், ஏன் இந்தக் காரியம்புரிய முன்வந்தீர் என்று கேட்கிறேன் - உரிமையோடு. ராஜாசர் அவர்களே! தங்களைப் போற்றவும், புகழவும் ஆதரிக்கவும் ஆரியத்தாக்குதலின் போது பக்க நின்று போர் புரியவும், தன்மான இயக்கத் தமிழரன்றித் தமிழகத்திலே தக்கார் வேறு யாருமில்லை. இது நாட்டுநிலை, வெறும் ஏட்டு

மொழியல்ல. காட்டுக் கூச்சல்போலத் தங்களை வாயாரப் (மனமார அல்ல) புகழ்ந்து பேசிவிட்டு, பேட்டி கண்டு, பேழை யருகே அழைத்துச் செல்லும் கோழையுள்ளம் படைத்த காரியக் கழைக்கூத்தாடிகள், தாங்கள் செய்வது எதுவும் சரியே என்று கூறும், நாங்கள் அப்படியல்ல, நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று கூறுபவர்கள், அது மட்டுமல்ல, நீரிலே மூழ்கிவிடுவோமே என்று பயந்து திருமுருகாற்றுப்படை பாடுபவருமல்ல. குற்றத்தை எடுத்துக் கூறுகையிலே, கொடுவாளோ குறுந்தடியோ, வரினும் தலை குனியோம், நிலைமாறோம், நாவாணிபம் புரிய மாட்டோம், எங்கள் போக்கே அலாதியானது, அது தங்கட்குத் தெரியாத தல்ல!

பூங்கொடி ஒருவளை வயோதிக அந்தணனுக்குக் கலியாணம் செய்து கொடுப்பது, அந்தகனிடம் காட்டும் அன்பு என்று கூற முடியுமா? குருடன்மீது கருணைபிறந்தால், கைக்கு ஒரு கோல் தருவது முறையாகுமேயன்றிக் கலவிக்கு ஒரு கன்னியைக் காணிக்கை தருவது சரியாகுமா! நாகத்தின் நர்த்தனத்தைக் கண்டு, களிப்பினால் அதனை உச்சிமோந்து முத்தமிட எண்ணுவார் உலகில் உண்டா, அந்த எண்ணம் உண்டாகி அவ்விதம் செய்திடின் அவர்கள் உலகிலே பிறகு வாழத்தான் முடியுமா? பாத்திரப் பிச்சை இடவேண்டும், பருவமறிந்து பெண் தரவேண்டும், வாழ்வு வளமாக இருக்க வேண்டுமானால், பொருந்தா மணம், அருந்தாப் பானமாக வன்றோ இருக்கும். புரட்சிக்கவி பாரதிதாசன், ஒரு கட்டிலறைக் காட்சியைக் காட்டுகிறார், பொருந்தா மணத்தை விளக்க. நரைத்தலையன், திறந்த வாயன், முறுவலிலா முகத்தான்,

குரட்டைவிட்டுக் கிடந்தான் கட்டிலின் மீது. அந்த அறையிலே ஒரு விளக்கு, அதன் ஒளி சிவந்ததாம், அங்கு இருந்த கன்னியின் கன்னத்தின் சிவப்பினால். இளமையும் எழிலும் அவளிடம், கிழத்தனமும் கோரமும் இவனிடம், இன்பபுரியின் இளவரசி அவள், அவனோ அந்தபுரியிலே இருக்கும் உரிமை இழந்தவன், பருவப் பண்பு மிளிரும் அங்கங்களுடன் அணங்கு, காலத்தால் சர்வபங்கமடைந்து கட்டுத்தளர்ந்து, தேய்ந்து காய்ந்து ஒய்ந்துபோய், தகனக்கிரியைக்கே இலாயக் கான உடற்கூறு அவனுக்கு, அவளுக்கு அவன் பொருத்தமா? இதனை உணரமுடியாத தாய் பிணைத்து விட்டாள். இன்புற்று இருவரும் உள்ர் என்றே எண்ணிக் கிடந்தாள், ஓர்நாள் தற்செயலாகக் கண்டாள், தத்தைமொழியாள் இத்தள்ளர்டு பவனிடம் தவித்துக் கிடப்பதைவிட, விஷமே மேலான விருந்து என்று துணிவு கொண்டிருந்த உண்மையை. அது பொருந்தாமணத்தின் கொடுமை! தாங்கள் செலவிடப் போகும் பணத்தை அப்பாவைக்கு ஒப்பிட்டுப் பாருங்கள், அந்த வயோதிகனுக்கு ஒப்பிடுங்கள், ஆரியத்தை கலியாணத்திற்கு ஒப்பிடுங்கள், கும்பாபிஷேகத்தை, அந்தத் தாயின் நிலையிலே தாங்கள் இருந்துக் காண்பீர். பொருந்தாத மணம்போலப் பணம் பாழாகப்போகிறது, சத்தளிக்கும் பால், உண்டுகொழுத்து ஊன்சுமந்து திரிபவர்களுக்கு மேலும் மேலும் விருந்து, உபசாரம், தட்சணை, வேட்டிகள், விருதுகள், வழங்குவார்கள், காய்ந்த வயிற்றினர், மேய்ந்து வயிறு நிரம்பாக் கால்நடை போலக் கிடக்கும் இந்நாளிலே. இதற்குப் பெயர் தர்மமா, சத்காரியமா, அல்லது செட்டிநாட்டரசரையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, வட்டியும் முதலுமாக அட்டியின்றிக்

கொடு என்று ஆரியம் தலையிலே குட்டிக் கேட்கிறது என்பதைச் சுட்டிக்காட்டும் சம்பவமா என்பதை எண்ணிப் பார்க்காமலிருக்க முடியுமா, சிந்தனைக்கு மதிப்புத் தரும் என்போன்றாரால், மதத்தை நம்புவதிலோ மார்க்கத்தை விரும்புவதிலோ, புரட்சிகரமான மாறுதலைத் தாங்கள் கொள்ள வேண்டும் என்று நான் கூறவுமில்லை, எதிர்பார்க்கவும் முடியாது.

"வினையின் வந்தது
வினைக்கு விளைவாயது
புனைவனநீங்கிற் புலால்
புறத்திடுவது"
இந்த மானிட தேகம்,
இது, "பற்றின் பற்றிடம்
குற்றக்கொள்கலம்
புற்றிடங்கரவிச்
செற்றச்சேர்க்கை"

ஆகவே, "மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து மிக்கோய்" இதனைப் பற்றிப் பிரமாதமாக எண்ணிடாமல்,

"காயமேஇது பொய்யடா
நல்ல காற்றடைத்த பையடா"

என்று பாடி, "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்பதை ஓதி, "சின்மயானந்த சொரூபனை" வாழ்த்தி, வணங்கி, "பிறவாவரம் தாரும் பெம்மானே" என்று வரங்கேட்டுக் கொள்ள யார் வேண்டுமானாலும் கிளம்பட்டும், நான்

குறுக்கிடப் போவதில்லை ஆனால் மதம், பக்தி, என்பனவற்றின் பெயரால், மக்கட்குப் பயன்படவேண்டிய, அதிலும் தாயில்லாப் பிள்ளைகள்போல் தவித்துக் கிடக்கும் மக்கட்குப் பயன்பட வேண்டிய செல்வம், நேரம், நினைப்பு, பயனற்ற கேட்டையே விளைவிக்கக் கூடிய, வீணருக்கும் கேடருக்குமே விருந்தூட்டக் கூடிய, கும்பாபிஷேகம் போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும்போது, எனக்குப் பொருந்தா மணத்திலும் கொடுமையானதாக இது காணப்படுகிறது. அண்ணாமலையாருக்குத் தங்களின் தண்ணளியால் அபிஷேகம் நடைபெறும். அதே நேரத்தில், இல்லாமை எத்தனை இல்லங்களிலே கண்ணீரால் உமது உடன் பிறந்தவரை, அண்ணாமலையாரின் பிள்ளைகளைக் கழுவிக் கொண்டிருக்கப் போகிறது. இரண்டினையும் ஏககாலத்திலே படப்பிடிப்பாக்கிக் காட்டினால் பண்பட்ட தங்கள் மனம் புண்படுமே! இலட்சதீபமோ லஸ்தாகுளோப்புகளோ ஆலயத்தில் தங்கள் கொடையின் பலனாக ஒளிவிட்டெரியும் கோடி சூரியப்பிரகாசர் என்று பக்தகோடிகள் புகழும் ஆண்டவன் நன்றாகத் தெளிவாகத் தெரிவதற்காக ஒளியை ஒளிகொண்டு காணுவர். அதே சமயத்திலே, எத்தனை இல்லங்களிலே இருள் சூழ்ந்து கிடக்கும், எவ்வளவு பேரின் வாழ்வு இருள் சூழ்ந்து கிடக்கும், என்பதை அந்தச் சமயத்திலே தங்கட்கு யார் நினைவூட்டப் போகிறார்கள்! மேளமும் தாளமும் முழங்க ஆட்லும் பாடலும், கூடலும் தேடலும், நாடலும் ஓடலும், ஒருபுறம் நடக்கும். பஜனையும் விலாச விசாரணையும், நாமாவளியும், நகையந்தாதியும் வேறோர்புறம் நடந்தபடி இருக்கும், அதே இடத்திலே அதே சமயத்திலே, குஷ்டத்தைக் காட்டியும்

அதில் மொய்த்துக் கிடக்கும் ஈக்கூட்டத்தை ஓட்டியும், பின்பு கை நீட்டியும் கிடக்கும் பிச்சைக்காரர்களைக் காணலாம். குருடரும் கூனரும், சிறுவரும் கரமிழந்தோரும், அபலையும் அனாதையும், ஆற்றுவாரின்றித் தேற்றுவாரின்றி அண்ணாமலையார் ஆலய வாயிலிலே கிடப்பர், அவன் அருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையால் அல்ல, அவன் அருளைத் தேடிவரும் தனவானிடமிருந்து சிதறும் பொருள் தனக்குக் கிடைக்கும் என்ற எண்ணத்தால். பஞ்சணையில் கொஞ்சிடப் பக்குவமுள்ள வஞ்சிகளைத் தேடிக் கொண்டு மிஞ்சிய காமத்திடம் தஞ்சமடைந்த நஞ்சு பாய்ந்த நெஞ்சினர் பலர் வருவர், அரோகரா என்பர், அண்ணாமலையாரே என்பர் உரத்தகுரலில், அவளைப்பார் என்பர், அலமுவா என்பர், ஆடையைப் பிடித்திழுப்பர், தாடை தொட்டுமகிழ்வர், பீடை களென்போரைக் கண்டால் காலைத் தட்டிவிடுவர், கை கொட்டிச் சிரிப்பர், கண்ணடிப்பர், கூர்மையான கத்திரிகோல் அதனைவிடக் கூர்மையான கண்கள், கொண்டவர் நீறுமிகப் பூசி, நின்றும் விழுந்தும் தொழுது, தமது வேலையை முடிப்பர் பின்னர், நீண்ட தங்கமாலையைக் காணோம், கொண்டையி லிருந்த திருகு காணோம் என்று கூச்சலிடுவர் கோமளங்கள், குறிப்பு எடுப்பர் போலீசார், கொட்டி அழுதேனே பணத்தை என்று கடிந்துரைப்பான் கணவன், நகைஇழந்து அதனால் நகைமுகம் இழந்து நாரியரைப் பொருள் இழக்காப் பூவையர்,துக்கம் விசாரிப்பர் நெருங்கி, தூரச்சென்றாலோ, வேண்டும் அவளுக்கு, அடக்கமற்ற சிறுக்கி, ஆடவரைக் கண்டாலே உடல் குலுங்கி நடப்பாள், நகைபோனால்தான் புத்திவரும் என்று கேலிபேசுவர். தோடியில் பாடித் துதிப்பர் ஒருபக்தர். கோடியில் நிற்கும்குட்டி, மோடிசெய்பவனாக

இருப்பின் நாயக நாயகி பாவத்திலே பக்திப் பண்பாடுவார், வாடி என்கண்ணே! என்று. மங்கம்மா டான்சுடா எல்பார் வாலிபர் ஒருவர், ஒரு மங்கையின் நடையைக் கண்டு, என்னைப்பார் என் அழகைப் பார், கூர்ந்து பார், என்று பாடுவார் மற்றோர் வாலிபர் சுவாமிகாள் என்று சுருதி கிளப்புவார் வேறோருவர்: உனைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ என்று உருக்கமாகப் பாடுவார் மற்றுமோர் வாலிபர். அர்ச்சர்களின் ஆசைநாயகிகளும், பக்திமிகுந்த சீமான்களின் "பழக்கமான பாவைகளும்" அதிகாரிகளுக்குத் தெரிந்த அலங்காரவல்லிகளும், இசை வாணர்களுக்குகந்த இன்பவல்லிகளும், பசையுள்ளவரைப் பார்த்துப் பிடிக்கும் பாவையரும். பக்திப் பிரபாவத்தை அதிகமாக்கிட உதவுவர். குளத்தங்கரை, ஊஞ்சலாகும்! மண்டபங்கள், மஞ்சங்களாகும்! பக்தியின் சக்தி, புதிய ஜோடிகளைச் சேர்த்து வைக்கும், பழைய ஜோடிகளுக்கு டானிக்காக இருக்கும். பலப்பல நடக்கும். திருவிழிகள் சந்திக்கும் இத்தகைய திருவிழாக்களிலே. திருவாய்மொழி முழுதும் திருப் பல்லாண்டாக இராது, திருமதி துதியாக, பள்ளியறைச் சதகமாக, ஆசை அகவலாக விரக வெண்பாவாக, கவிதாரசம் வழிந்தோடும். நான் தீட்டியதைவிட அதிகமாக இருக்குமே யன்றிக் குறைவாக இராது. இது ஆண்டவனைத் திருப்திப் படுத்தும் காரியமாகுமா என்பதும், இந்த நாட்டிலே இந்த நாளிலே, தங்கள் போன்றவர்கள் பணத்தை இவ்விதமான காரியத்துக்குப் பாழாக்கலாமா என்பதும், என்கேள்விகள். என் கேள்விகளுக்குப் பதில்கூறத் தாங்கள் கட்டுப்பட்டவர் என்று நான் இவைகளைக் கேட்கவில்லை, இவைபோன்ற கேள்விகள் உமது சிந்தனையைக் கிளறவேண்டும் என்ற

ஆசையால் கிளப்பினேன். ஆண்டவன்-சிவபெருமான்-கும்பாபிஷேகம் செய்துவைத்தால்தான் அருள்புரிவாரா? அதிலும், எத்தனையோ ஆயிரம் இளைஞர்களுக்கு அறிவுக் கண் அளிக்கும் அறச்சாலையாம் பல்கலைக்கழகம் கண்ட தங்கட்கு, அருள் இந்தக் கும்பாபிஷேகம் செய்யாவிட்டால் கிடைக்காது என்று, யாராலாவது கூறமுடியுமா? எந்தப் புராண இதிகாசங்கள், கும்பாபிஷேகம் முதலிய கைங்கரியங்களின் மேன்மைகளைப் பற்றிப் புகழ்ந்துரைக்கின்றனவோ, அதே ஏடுகள், எடுத்துக்காட்டும் பல கதைகள், ஆண்டவன் தமது அருளை, ஆரஅமர யோசித்துத் தக்கார்க்குத் தக்கபடி தருகிறார் என்ற நம்பிக்கையையாவது நமக்குத் தருகின்றனவா? அதுவும் இல்லையே!

தமிழ் இசைத் தந்தையே! தாங்களோ சன்மார்க்க நெறி செல்கிறீர், தயாள குணத்துடன் இருக்கிறீர், பொதுப்பணி புரிகிறீர், இவைபோதாவா, ஈசன் அருளை உமது வீட்டு வாசற்படிக்கு இழுத்துவர! நான் சொல்கிறேன் கேளும், எத்தகையவர்களுக்கெல்லாம் சிவபெருமான் தமது அருளைத் தந்தார் என்பதை. என் கற்பனையல்ல, புராண ஏடுகளிலிருந்து எடுத்துக் கூறுவது.

முன்னொரு காலத்திலே காம்பிலி நாட்டிலே, வேள்வித் தத்தன் என்பவனுக்குக் குணநிதி என்றோர் மகன் இருந்தான் மதுவும் மங்கையுமே அவனுக்கு மகேஸ்வர பூஜையாக இருந்தது. "அருக்குமங்கையர் மலரடி வருடியும் கருத்தறிந்த பின் அரசிலை தடவியும்" குணநிதி இருந்ததால் தாய் வசனித்தாள், மகனின் செயலைத் தந்தை தெரியின் கேடுசெய்வரோ என்று அஞ்சி, அவனுடைய அடாதசெயலை

அவர் அறியாவண்ணம் மூடிவைத்தாள். விஷயம் பிறகு தெரிகிறது, தெரிந்ததும், வேள்விதத்தன், தகாத காரியம் செய்யும் தனயனைக் கண்டிக்காதிருந்ததற்காகத் தாயைக் கண்டித்தார். வேறோர் மாதை மணந்து கொண்டார். குணநிதியோ கூத்தியும் குடியும் இருக்கத் தாயும் தந்தையும் தேவையில்லை என்று எண்ணினான், எழிலுடைய மாதரடி கிடந்தான். கிடக்கையில் பொருள் வறண்டது. ஒரு சிவராத்திரியன்று, சிவநேசச் செல்வர்கள் கூடிய சிவாலயம் சென்றான், சிவசிந்தனையுடன் அல்ல, பொருள் களவாட! அங்கு பக்த கோடிகள் கண்மூடினர், இவன் பொருள் தேடினான், ஒளி இல்லை. எனவே அங்கிருந்த விளக்கைத் தூண்டினான், ஒளி அதிகம் இருந்தால் களவாட வசதியாக இருக்குமென்ற கருத்துடன்: களவாடினான், காலிடறி வீழ்ந்தான், கண்ணயர்ந்திருந்தோர் விழித்தனர், கையும் பிடியுமாகப் பிடித்தனர், அடித்தனர், கொன்றனர்.

இவ்வளவுதானா கதை? என்று கேட்பர் எவரும். இவ்வளவுடன் இருந்தால் அது, மக்கட்கு நீதி புகட்டிவிடுமே! தந்தை சொல்லை மறுத்தான், தகாதன செய்தான், கொலையுண்டான் என்று மக்கள் பாடம் பெறுவரே! அந்தப் பயம் புராணிகருக்கு, அவர் குணநிதி கதையை அவ்வளவோடு முடித்துவிடவில்லை. மேலும் உண்டு கதை, கேளுங்கள்.

“குணநிதி இறந்ததும், யமபடர்கள் வந்து சேர்ந்தனர், அவனை அழைத்துச் செல்ல”

“அப்படிச் சொல்லு! குணநிதியைத் தள்ளிக்கொண்டு போனார்களா நரகலோகத்துக்கு” என்று கேட்பீர்கள்.

“இல்லை!”

“ஓஹோ! முதலிலே யமதர்மனிடம் அழைத்துச் சென்று, சித்திரபுத்ரன் கணக்குப் பார்த்துப் பிறகுதானே தண்டிப்பார்கள். ஆகவே, குணநிதியை எமதூதர்கள், எமதர்மனுடைய கோர்ட்டுக்கு இழுத்துச் சென்றனர், அதுதானே கதை” என்று கேட்பீர்கள்.

“அதுவுமில்லை. குணநிதியை இழுத்துச் செல்ல யமதூதர்கள் வந்த அதே நேரத்திலே, சிவகணங்கள் அங்கேவந்து நின்று, இவனை நாங்கள், அழைத்துச் செல்லப் போகிறோம், நீங்கள் தொடக்கூடாது என்று யமதூதர்களை மிரட்டின”

“சிவன் கோயிலிலே புகுந்து, சிவனுடைய நகைகளைக் களவாடியதால், இவனைச் சிவனாரே நேரடியாக விசாரித்துத் தண்டனை தரவேண்டுமென்று அவனைப் போய் இங்கே இழுத்து வாருங்கள் என்று, சிவகணங்களை அனுப்பி வைத்தார் போலும்” என்று கூறுவீர்கள்.

“அதுவுமல்ல நடந்தது. குணநிதி மகாஉத்தமன், சிவபக்தன், அவனுக்குச் சிவானுக்கிரகம் கிடைத்திருக்கிறது” என்று கூறின சிவகணங்கள்.”

“புரியவில்லையே, சிவன்கோயிலிலே சிவராத்திரி எனும் புண்ய தினத்திலே களவாடிய கயவனுக்குச் சிவானுக்கிரகம் எப்படிக் கிடைக்கும் என்று என்னைக் கேட்பீர்கள். யமதூதர்கள் அதையேதான் கேட்டார்கள் சிவகணங்களிடம். இது தெரிய வில்லையா, இந்தக் குணநிதி சிவன் கோயிலிலே

சிவராத்திரியிலே, விளக்கைத் தூண்டிவிட்டானே, அது பெரிய புண்யகாரியமல்லவா, சிவனுக்குச் சிவராத்திரியிலே சேவை செய்த பக்தனைச் சிவன் அனுக்கிரகித்துவிட்டார், என்று சிவகணங்கள் கூறி யமபடரை விரட்டின, களவாட விளக்கைத் தூண்டிய குணநிதி சிவானுக்கிரகம் பெற்றுக் கலிங்க நாட்டிலே அருந்தமன் என்ற அரசனுக்குத் தமன் எனும் மகனாகப் பிறந்தான்".

செட்டிநாட்டரசரே! குடியும் கூத்தியும் கொண்டலைந்து கோயிலிலே களவாடிய நேரத்திலே, களவுக்காக விளக்குத் தூண்டியது, சிவானுக்கிரகம் பெறக் கூடிய புண்யகாரியம் என்று சிவனார் கருதினாராமே, இது எந்த நீதியைச்சேர்ந்தது, எத்தகைய பாடத்தை மக்கட்குத் தரக்கூடியது, நமது சிவபெருமானுக்குக் கள்ளனுக்கும் பக்தனுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பற்றித் தெரியவில்லையா! இப்படி ஒருகடவுள் அருள்பாலிக்குமா, பாலிக்கலாமா? தாங்கள் வேலைக்கு அமர்த்தும் ஆள், தங்களுக்கென வாங்கிவந்த பழத்தைத் திருடித் தின்றுவிட்டால், அந்த வேலையாள் பழத்தைத் தின்றது சரியான காரியம், அவன் அந்தப் பழத்தைச் சாப்பிடாமலிருந்தால், நான் சாப்பிட்டிருப்பேன், வயிற்றுவலி வந்திருக்கும், எனக்கு வலி வராமலிருக்க உதவிசெய்த அந்த வேலைக்காரனின் சம்பளத்தை அதிப்படுத்த வேண்டும் என்று எண்ணிடமுடியுமா! தாங்கள் மட்டுமல்ல, வேறுயாராவது எண்ணி அவனுக்குப் பரிச தருவார்களா? நமது சிவனோ, கள்ளன் காமுகன், குடியன், அவன் திருட்டுத் தொழிலுக்காகத் திருவிளக்கைத் தூண்டினான், அதற்கு அவனுக்குத் திருவருள்பாலித்தாராம்!! இப்படித் தகாதவனுக்கு

அருள்தருவது, நீதியின் பாற்பட்டத இது காசிகாண்டம் எனும் புண்ய கதையிலே காணப்படுவது. இப்படிப்பட்ட அதமனுக்கு அருள் பாலிக்கும் அரனுக்குச் சன்மார்க்கத்திலே பழகும் தாங்கள், கும்பாபிஷேகம் வேறு செய்துகாட்டித்தானா அருள் கேட்க வேண்டும்! அறிவு மன்றத்திலே அரன்மீது வழக்குத் தொடரலாமே, யுக்தா யுக்தமுமின்றி . பக்தியின் வகை இவ்விதத்தது என்பதையும் அறியாது, கள்ளனின் கை விளக்கைத்தூண்டி விட்டதற்காகக் கடவுள் கனிவு காட்டினராமே இது அரனுக்கு, அவ்வளவு ஆழ்ந்த யோசனை இல்லை என்பதைத்தானே காட்டுகிறது. பச்சைச் சிரிப்பால் எஜமானனை ஏமாற்றும் வேலைக்காரனுக்கு, வேட்டியும் பணமும் வழங்கும் எஜமானனிடம் அதே வேலைக்காரனுக்கேகூட மதிப்பு இராதே. "எங்கள் எஜமான் ஒரு அப்பாவி ஒருவிநாடியிலே அவரை ஏய்த்துவிட முடியும்" என்றுதானே வேலையாள் பேசுவான். குணநிதி சிவராத்திரியன்றுவரை காமந்தகாரனாக இருந்துவிட்டு, அன்று இரவும் பொருள்கவரவே கோயில் சென்று, அங்கு சிவநேசர்களின் - சீலத்தைக் கண்டு சிந்தித்துச் சிவனை தரிசித்துத் தனது பழையநிலைக்கு வருந்தி இறைவனிடம் முறையிட்டுப் பிழைபொறுத்தருள வேண்டுகிறேன் பிறைசூடி! என்று துதித்துப் பிறகு, தோடுடைய செவியன்விடை ஏறி ஓர் தூவெண்மதிசூடி வந்து காட்சி தந்தார் என்று புராணம் புகன்றாலும் ஓரளவு பொருள் உண்டு. அதுவும் இல்லையே! சிவகணங்கள் வந்திருக்கும்போதும் குணநிதிக்குச் சிவபக்தியோ சீலமோ ஏற்பட்டதாகக் கதை இல்லையே! இந்நிலையிலே சிவனருள் கிட்டியது என்றால், அது பொருத்தமாகுமா? இங்ஙனம் புல்லருக்கே, பொருத்தமற்ற

முறையிலே அருள்பாலித்த அரனார், தங்களைப்போன்ற நல்லவருக்குக் கருணைகாட்டக் கும்பாபிஷேகம் செய்யவேண்டுமா! வியாபார வேந்தே! விந்தையான மற்றோர் கதை கேளும், புண்ணியகதைதான் இதுவும்! ஈரோடு வெளியீடு அல்ல!! எருது, கழுதை, புலைச்சி ஆகிய மூவருக்குக் கடவுள் அருள்பாலித்தார் ஒருமுறை, காரணம் என்னவென்று கேட்பீர். எருது ஏத்தி ஏத்தித் தொழவில்லை, கழுதை கசிந்து கண்ணீர்மல்கிக் கபாலியைக் கோரிக்கொள்ளவில்லை, புலைச்சியும் பூஜை புரியவில்லை. அடிபடநேர்ந்தது, விநாயகர் ஆலயத்து எதிரே. அடிபட்டவரிடமிருந்து தப்ப, எருதும் கழுதையும், புலைச்சியும் அந்தக் கோயிலைச்சுற்றி ஓடின, இது திருக்கோயிலைத் திருவலம் வரும் திருக்காரியமாகக் கருதப்பட்டுத் திருவருள் தரப்பட்டது! ஓடுகையிலே, புலைச்சி மடியிலிருந்தும், எருதின் வாயிலே இருந்தும், கழுதையின் வாயிலிருந்தும் புல் கோயில் முன்பு வீழ்ந்ததாம். இது அர்ச்சனையாகக் கருதப்பட்டது. அர்ச்சித்து ஆலயம் சுற்றிய மூன்று பக்தர்களுக்கும் கடவுளின் கடாட்சம் கிடைத்ததாம். எருதோ, கழுதையோ, புலைச்சியோ, கோயிலைச் சுற்றி ஓடும்போது, பக்திகொண்டு அதனைச் செய்யவுமில்லை, பரமனைத் தேடிப் பாடவுமில்லை, முதுகு வலிதாங்காது ஓடின. முழுக்காதையையும் கேண்மின்! முன்னொரு காலத்திலே அவந்தி நாட்டைச் சுலபன் என்றோர் மன்னன் ஆண்டு வந்தான், அவன் தேவி பெயர் சுலபை. மதுசூதனன் என்ற ஒரு பிராமணன் ஓர்நாள் யாசகம் கேட்டான், அரசன் அவனைக்கண்டு சிரித்தான். கோபங்கொண்ட பூசுரன், "திமிர்கொண்ட மன்னவனே! நீ எருதாகச் சபித்தேன்" என்று சினந்து கூறினான், "அரசன்

அறியாது செய்த பிழையைப் பொறுத்திட அறியாதுபோன நீ கழுதையாகப் பிறக்கக் கடவாய்'' என்று சுலபை எதிர்ச்சாபமிட்டாள். "நீ புலைச்சியாகப் பிறக்கக்கடவாய்'' என்று வேதியன் மற்றோர் சாபமிட்டான். அதன்படியே சுலபன் எருதாகவும், மதுசூதனன் கழுதையாகவும், சுலபி, புலைச்சியாகவும் பிறந்தனர். ஒரு கிராமத்திலே விநாயகர் கோயில் முன்னால் ஓர்நாள் புலைச்சி சேகரித்த புல்சுமையை எருது இழுத்தது, அவள் அடித்தாள். கழுதை, எருதிடமிருந்த புல்லை இழுத்தது, எருது இடித்தது, கழுதை அதனை உதைத்தது. இந்தச் சேட்டையைக் கண்ட சில வேதியர், எருதையும் கழுதையும் அடித்ததோடு புலைச்சியையும் அடிக்கவே எருதும் கழுதையும் அடிதாங்காது கோயிலைச் சுற்றிச் சுற்றி ஓடினதுபோலவே, புலைச்சியும்ஓட, புல்கீழேவிழ, இதுவே கோயிலைச் சுற்றிவந்து பூஜை செய்ததாகக் கருதப்பட்டு, கடவுட்கிருபை பிறந்ததாம். இதிலிருந்து என்ன புரிந்து கொள்ள முடிகிறது? பாவனையே பக்தி என்று பரமனாலேயே எண்ணப்பட்டு விடுகிறதே, இந்தப் பரிதாபத்தை என்னென்று சொல்வது! இமிடேஷன் நகைக்கு, அசல் வைரத்தின் விலைகொடுத்து, ஒரு நகைக்கடைக்காரர் வாங்கினால், அக்கடைக்காரரைப் பற்றிக் கடைவீதி! என்ன எண்ணிக் கொள்ளும். இப்படிப் போலி வைரத்திற்கு: அசல் வைரத்தின் விலைகொடுத்துக் கொண்டிருந்தால், எத்தனை நாட்களுக்கு அந்தக் கடை நிலைக்கும். நான் எடுத்துக் காட்டிய இரு சம்பவங்களும், போலிக்கடவுள் அருள்புரிந்ததைக் கூறுவன. இவை நம்மை என்னென்ன சிந்திக்க வைக்கின்றன! இதிலே பாருங்கள், ஜாதித்திமிர் எந்த

அளவுக்குப் போகிறது எருது, கழுதைபோல் மிருக இனமாக்குகிறார் புராணிகர். இது எவ்வளவு ஜாதித்திமிரைக் காட்டுகிறது பாருங்கள்!! இப்படிப்பட்ட புராண இதிகாசங்களேதான், அபிஷேகம் ஆராதனை, கும்பாபிஷேகம் முதலிய கைங்கரியங்கள் செய்தால் ஆண்டவனின் அருள் கிடைக்கும் என்று கூறுகின்றன. தாங்கள், இப்புராணாதிகளை நம்பலாமா? இப்புராணங்களை நம்பிக் கொண்டு பொருளைப் பாழாக்கலாமா? என்று கேட்கிறேன். கும்பாபிஷேகம் நடைபெறுகிறபோது, தங்களின் “தர்ம சிந்தனையைப்பலர் புகழ்ந்து பேசுவார்கள். பூசுரக் கூட்டம் முகஸ்துதி புரியும். இக்கும்பாபிஷேகத்தின் பயனாகத் தங்கட்கு, விசேஷ புண்யம் கிடைக்கும் என்று புராணிகர்கள் கூறுவர். ஒருபுறம் தேவார பஜனைக் கோஷ்டி நடைபெறும். மற்றொருபுரம் திருவிளையாடல், பெரியபுராணம் முதலிய கதாப்பிரசங்கங்கள் நடைபெறும். வேறோர் புறத்திலே கிருபானந்தவாரியார் நிற்பர். இன்னோர் புறத்திலே பிரசங்க பூஷணங்களும் பண்டித மணிகளும், கலாரசிகர்களும் நிற்பர். யாவரும் உம்மைப் புகழ்வர். உமது செயலைப் பாராட்டுவர். ஆனால் இவர்கள் யாவரும் தனித்தனியே பேசுவது வேறு விதமாக இருக்கும். அந்தப் பெரிய கூட்டத்திலே என்போன்றோர் இருக்க முடியாது, ஆனால் நாங்கள் அதே சமயத்திலே, எவ்வளவு நல்லவர்! எத்தனைக் கெட்ட காரியத்துக்குப் பணம் பாழகிறது என்று எண்ணிக்கொண்டு இருப்போம். எங்களின் எண்ணத்தை மதித்திடுவோரின் தொகை குறைவு, ஆனால் அந்தத் தொகை வளர்ந்து வருகிறது! அறிவுடன் கூடிய சிந்தனைக்கு இடமளிக்கும் இடம், தங்கள் செயலைப் பாராட்டாது என்பது

நிச்சயம். அது மட்டுமா? தாங்களேகூட, ஆரஅமர யோசித்தால், இந்தக்காரியம் அவசியமானதுமல்ல, நாட்டுமக்களின் தேவைக்கு உகந்ததுமல்ல என்பதை உணருவீர்கள்! அந்த எண்ணத்தைத் தங்கள் மனதிலே தூண்டுமளவு இக்கடிதம் பயன்பட்டாலே போதும், நான் திருப்தி அடைவேன். இக்கடிதத்தைக் கண்டவுடனே, கும்பாபிஷேகத்தைத் தாங்கள் நிறுத்தி விடுவீர்கள் என்று எண்ணும் பித்தன் அல்ல நான். சர்க்கார் உத்தரவு தவிர வேறு எதுவும் இப்படிப்பட்ட "தடைகளை" உண்டாக்க முடியாது. ஸ்துதி பாடுவோர் மட்டுமே உண்டு என்று தாங்கள் கருதி, மேலும் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடாதிருக்கவும் தங்களைக் கண்டு மற்றும் பலரும் இதேவிதமான செயலிலே இறங்கிவிடாதிருக்கும்படி பார்த்துக் கொள்ளவும், தவறு செய்தால், அது ராஜா சர். ஆக இருந்தாலும் தவறு தவறுதான் என்று எடுத்தக்காட்டும் எமது இயல்புக்கு இழுக்கு நேரிடாதிருக்கவுமே இம்மடல் விடுத்தேன். மனதிலே வேறுவிதமாக எண்ணாதீர், மதிக்கொணா விஷயம் இதுவெனவும் தள்ளாதீர், யோசித்துப் பாரும் இது அவசியமான காரியந்தானா என்பதை?

முற்றுமுணர்ந்தவர்களும், கற்றதை மறவாதவர்களும், கண்ணியத்தை வாழ்க்கைக்காகக் கைவிடாதவர்களும், கடவுட் கொள்கையைத் தெளிவாகத் தெரிந்தவர்களும், இத்தகைய திருப்பணிகள் வீண் ஆடம்பரம் என்றும், இவைகளால் பரமன் திருப்தி அடைவதில்லை என்றும் திட்டமாகக் கூறியுள்ளனர். இரண்டொன்று கூறுகிறேன் அவர்கள் சொன்னதை. சைவத்தை மறவாத திரு.வி. கலியாண சுந்தரனார் முன்னாளிலே தமது ஏட்டிலே

"நடமாடும் தெய்வங்கள்
நாட்டிலே நிறைந்திருக்க
படமாடுங் கோவிலிலே
பார்ப்பனர்கள் உறைந்திருக்க
கல்லுச்சாமி பேரால் தமிழா!
காசை இழந்திடாதே!!"

என்று தீட்டினார்.

சித்தர் ஒருவர் சற்றுச் சீற்றத்தோடு கேட்கிறார்,
"உன் தெய்வம் கல்லடா
உலாவும் தெய்வம் செம்படா
பேசும் தெய்வம் யாமடா
பின்னே தெய்வம் யேதடா?"

என்று.

"கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே?" என்று பட்டினத்தடிகள் கேட்கிறார். பார்ப்பனர் மட்டுந்தான் திருப்பணி மேன்மையைப்பற்றி உம்மிடம் கூறுகின்றனர், பணத்தைப் பாழாக்குகின்றனர். நாட்டுக்கு நல்லவற்றினுக்கு, நலிவற்றோருக்கு, நடமாடும் தெய்வங்கட்குப் பயன்பட வேண்டிய பொருளைப் பாழாக்குகின்றனர். தாங்கள் அவர் காட்டும் பாதை வழியே செல்கிறீரே, அது சரியா என்று கேட்கிறேன், கோபியாதீர்.

இப்படிக்கு அன்பன்,
பரதன்.

*(திராவிட நாடு - 28-5-44)*

# 14. புன்னகையும் பெருமூச்சும்!

ஆந்திர நாட்டிலே அஞ்சாது தன்மானப் பணியாற்றிய பாரிஸ்டர் இராமசாமிச் சௌத்ரி மறைவு குறித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் 11.6.44 திராவிட நாடு இதழில் வருந்தி எழுதியவை :

"இராமாயணத்தைக் கண்டித்துப் பேசுகிறீர். இராமனைத் தெய்வமல்ல என்று கூறுகிறீர். அப்படிப்பட்ட நீர், ஏன் உமது பெயர் இராமசாமி என்று வைத்துக் கொண்டிருக்கிறீர்."

இது, நாம் அனைவரும் அறிந்த கேள்வியே, ஆரியரும் அவர்தம் அடிவருடிகளும், பகுத்தறிவுத் தந்தை பெரியார் இராமசாமியின் கணைகளால் தாக்குண்டு திக்கு முக்காடும்போது, விடும்கேள்வி என்பதை அன்பர்கள் அறிவர், மேதாவித் தனமும் நகைச்சுவையும் அக்கேள்வியிலே ததும்பு வதாக எண்ணம் அப்பாவிகளுக்கு, வாதங்கட்குப் பதில்கூற வகையற்ற வேளையிலே, இவ்வாயுரையால் மீளலாம் என்பது அவர்தம் எண்ணம். இது போலப்பல கூட்டங்களிலே, கேள்விகள் பிறந்ததுண்டு.

ஆனால் நான் குறிப்பிட்டுள்ளது, பெரியார் இராமசாமியை, யாரோ கேட்ட கேள்வியல்ல!!

வேறு யார்மீது பூட்டப்பட்ட பாணம் இது என்று கேட்பீர்கள் யார்மீது என்று என்னைக் கேட்பதற்கு முன்னம் சற்றே சிந்தனையைச் செலவிட்டால், கேள்வி யாரிடம் கேட்கப்படடதோ அவருடைய பெயரும் இராமசாமியே

என்பதும், அவரும் நமது பெரியார் போலவே பழமையைச் சாடிடும் பண்பினர் என்பதும் தெரியவரும்.

கேள்விக்கு அவர் அளித்த பதில் என்ன தெரியுமா!

"இராமாயணத்தை நான் கண்டிப்பது உண்மை இராமனை ஒரு ஆரியன் என்றுரைப்பதும் உண்மையே. என் பெயரும் இராமசாமியே! இதிலே தவறு எங்கே உள்ளது" என்று கேட்டார் இராமசாமி.

"இராமனைக் கண்டித்துப் பேசும் உமக்கு அதே இராமநாமம் இருக்கலாமோ" என்று மடக்கினார் கேள்வி கேட்டவர். சடக்கெனப் பதில் உரைத்தார் இராமசாமி. "ஐயா, சாமி என்றால் எஜமானன் என்றோர் பொருள் உண்டல்லவா? என் பெயர் இராமசாமி, நான் இராமனுக்கு எஜமானன்!"

இவ்விடை, கோபத்தைத்தர, கேள்வி பூட்டியவர், இராசாமியை மேலும் வைதார் - மனதிற்குள்! வைதிகர்களும் பழைமை விரும்பிகளும் பார்ப்பனர்களும் மதப்பித்தர்களும், எவ்வளவோ கண்டித்தும், துளியும் கலங்காமல், கடைசிவரை, வீரத்திராவிடராகவே, வீறுகொண்ட திராவிடராகவே வாழ்ந்து ஓராண்டு முன்பு இறந்துபட்டார், இராமசாமி, நமது இயக்கத் தளபதி. அவருடைய நினைவுக்குறியாக ஓர் கழகம், அதன் திறப்பு விழாவிலே கலந்து கொண்டு 4, 5-ந் தேதிகளிலே சொற்பொழிவாற்றினார் பெரியார் இராமசாமி, நாகட்லா என்ற ஆந்திர நாட்டுக் கிராமத்திலே.

ஆந்திர நாட்டிலே அஞ்சாது தன்மானப் பணியாற்றிய பாரிஸ்டர் இராமசாமிச் சௌத்ரி அவர்களின், புகழும் பணியின்

திறமும், தமிழகம் இதுவரை அறியாமற்போனதும், அவருடைய படையும் பெரியாரின் படையும், கூட்டுப் படையாகிக் களத்திலே நிற்க முடியாமற் போனதும், திராவிடத்துக்குப் பெருநஷ்டம். சென்னைக்கும் பாரிஸ்டர் இராமசாமி பிறந்து வளர்ந்து பணிபல புரிந்து வந்த தெனாலிக்கும் இடையே 300 மைல்கள்கூட இல்லை. ஆனால் ஆரியப் பத்திரிகைகள் இந்த இருபடைகளும் ஒன்று சேர விடாமல் துண்டித்து வைத்தன, எனவேதான், பாரிஸ்டர் இராமசாமியால் திராவிடம் முழுப்பயனையும் பெறமுடியாமல் போய்விட்டது. ஆரியப் போர்முறையே இதுதான், திராவிடப் படை வரிசையிலே சாமர்த்தியமாகப் பிளவுகளை உண்டாக்கி விடுவது, பிறகு பிளவுப்பட்ட படைகள் ஒன்றவிடாமல் பார்த்துக் கொள்வது. திராவிடச் சமுதாயத்திலே எண்ணற்ற பிரிவுகள் ஏற்பட்டது இந்தப் போர் முறையின் பயனாகத்தான். ஆரியத்தின் படையோ சங்கிலி கோர்த்தாப்போல இருக்கும், நகைச்சுவையுடன் பெரியார் கூறுவாரே அதுபோலக் கன்னியாகுமரியிலுள்ள ஒரு பார்ப்பானுக்குத் தேள் கொட்டினால் இமயமலையிலுள்ள பார்ப்பானுக்கு நெறிகட்டும்! நம்மாலோ, நமக்கு அருகிலே இருந்துகொண்டு, நாம் எக்கொள்கைக்காகப் பணியாற்றுகிறோமோ அதே கொள்கைக் காக அரும்பாடுபட்ட தெனாலி இராமசாமிச் சௌத்ரியின் கூட்டுறவைப் பெற முடியாமல் போய்விட்டது.

செல்வாக்குள்ள குடும்பத்திலே பிறந்து சீமை சென்று பாரிஸ்டர் படிப்பை முடித்துத் தாயகம் திரும்பியதும் வேலைக்கு மனுப்போடாது வாழ்ந்து, வீழ்ந்த திராவிடத்தை வீறுகொண்டெழச் செய்து, ஆரியத்தை அழிக்க அருஞ்சமர்

புரிந்து வந்தவர், பாரிஸ்டர் இராமசாமி பழமை ஒழியவேண்டும்! பார்ப்பனியம் படுசூரணமாக வேண்டும்! பிழைக்க வந்த கூட்டம், பழங்குடி மக்களைப் பிடித்தாட்டும் கொடுமை சாயவேண்டும்! பீடைகளை ஏற்றுக் கொண்டு திண்டாடும் வழக்கம்போக வேண்டும். புதுமை வரவேண்டும். பூசுரக் கூட்டத்தின் கொட்டம் அடக்கப்பட வேண்டும். பெண்டுபிள்ளைகளையும் இழக்கச் செய்யும் பேடித் தனத்தையே மதமாகக் கருதும் மடமை மடியவேண்டும். பேதங்கள் நீக்கப்படவேண்டும். பைத்தியக்காரனுடைய செயல் போன்ற சடங்குகளைத் தொலைக்கவேண்டும். பொல்லாங்கு தவிர வேறொன்று செய்யத் தெரியாத மாற்றான்முன் மண்டியிடும் மனப்பான்மை மாறவேண்டும். போரிட்டேனும் உரிமையைப் பெறவேண்டும் என்ற எழுச்சி பிறக்க வேண்டும், பௌருஷம் வேண்டும்!

இவை திராவிட இன எழுச்சியின் பொருட்டு, நாம் கருதும் எண்ணங்கள், இதே போன்று கருதி, கருதியதை இனிய எளிய தெலுங்குக் கவிதைகளால் பிரசுரம் செய்து, கவிராஜ் என்று மக்களால் கனிவுடன் அழைக்கப்பட்டு, மக்கள் மனதை மயக்கும் ஆரியப்புராண இதிகாசங்களின் புரட்டுகளை விளக்கிப் புத்தகங்களை இயற்றி, திருமணத்திலே ஆரியப் புரோகிதமோ, ஆரிய மொழியோ கூடாது என்றுகூறி, அஞ்சாது ஆரியத்தை அடக்கிக் கொண்டு வாழ்ந்தார், பாரிஸ்டர் இராமசாமி.

பார்ப்பனப் பிளேக் பரவுகிறது என்று அறிக்கை விட்டு விட்டு, பிறகு ஆரியக்குட்டையிலே மூழ்கினாரே சில ஆண்டு களுக்கு முன்பு, சேலம் பாரிஸ்டர், இராமசாமி என்பார், அவர்

போன்றோர் அல்ல, இந்த பாரிஸ்டர். இவர் கடைசிவரை திராவிடராகவே வாழ்ந்தார், எக்கஷ்டம் வரினும் வணங்கேன் வேதியக் கூட்டத்தை என்று முழக்கமிட்டார். அதன் எதிரொலி அன்று நாகட்லாவிலே கேட்டது.

நெருப்புச் சட்டியிலே போட்டுவாட்டுவது போன்றிருந்தது பயணம். மைல்கணக்கிலே மண்காற்று வீசும், பெருவெளிகளையும் கடந்து: நெருப்புக் காற்றை வாரி வாரி வழங்கிக் கொண்டு, கடமையைச் செய்யும் ஒரே குறியுடன் புகைவண்டி, எங்களை ஏற்றிக்கொண்டு சீராளா சென்றது. சீராளா சென்றவுடனே, எனக்கேற்றபட்டது போலவே, உங்கட்கும் சிந்தனை ஏற்பட்டுத்தானே தீரும். தொழிலாளர் ஆட்சிக்கே பாடுபடுவோம், 144, 148, முதலிய சட்டங்களைச் சாய்ப்போம், அடக்கு முறைகளையே ஒழித்து விடுவோம் என்று ஓட்டு வேட்டையின்போது பேசிய ஆச்சாரியார், ஆட்சியில் அமர்ந்ததும், இதே சீராளாவிலேதான், தொழிலாளத் தோழர்கள் மீதுதுப்பாக்கிக் குண்டுவீசி, காங்கிரசின் கண்ணியத்தை மக்கள் உணரும்படியான ஆட்சியை நடத்தினார். அந்தச் சீராளாவைக் கண்டதும், என்னையுமறியாமல் ஒரு பெருமூச்சு, சிந்தனை, நெஞ்சறிந்து பொய்யுரைக்கவும், விஷயமறியாத மக்களை ஏய்த்து வாழவும் வகையற்ற கூட்டத்தை நாடு இன்னமும் நடத்திக் கொண்டிருக்கிறதே என்பதை எண்ணும் போது, என்னையும் அறியாமல் பெருமூச்சுப் பிறந்தது.

சீரளாவிலிருந்து இருபது மைலுக்கப்பால், நாகட்லா என்ற கிராமம். அங்கே கவிராஜ ஆஸ்ரமம் என்ற பெயருடன், காலஞ்சென்ற பாரிஸ்டர் இராமசாமி அவர்களின் நினைவுக்குறி

கழகம். அதற்குச் சீதாராம அம்மையார் என்பவர் 5,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கட்டிடமும், படிப்பகமும் அமைக்க நன்கொடை நல்கினார்கள். 4-ந் தேதி காலை காரச்சேடி, தோழர் குப்புசாமி சௌத்ரி அவர்கள், அக்கட்டிடத்தைத் திறந்து வைத்து, "கோயில்கட்டிக் குளம் வெட்டி ஒரு ஜாதியார் பிழைக்க வழி செய்வது இதுவரை தர்மம் என்று கருதி வந்தார்கள். அந்தப் பழமை மடிந்தது. இப்போது மக்களுக்கு, நமது சமுதாயத்துக்கு நல்லறிவு பயக்கும் கழகங்கட்கு நன்கொடைகள் வழங்கும் வழக்கம் பரவி வருகிறது. இது அறிவின் அறிகுறி என்று எடுத்துக் கூறினார்.

அன்று மாலை, கிராம மக்கள் ஏராளமாகக் கூடினர். பெண்கள், நமது தமிழகப் பகுதியிலே வருவதைவிடப் பன்மடங்கு அதிகமாக வந்திருந்தனர். தோழர் வெங்கடாத்திரி என்பவர், விழாவுக்கு வந்திருந்தவர்களை வரவேற்றும், பாரிஸ்டர் சௌத்ரி அவர்களின் அருந்திறனை எடுத்துக்காட்டியும் பேசியபிறகு, இராமசாமி அவர்கள் ஒருமணி நேரம்வரை, தன்மான இயக்கக் கொள்கைகளைத் தெலுங்கில் எடுத்துரைத்தார். அன்றிரவு, விழாவிற்கு வந்திருந்த பல ஊர்த் தோழர்களிடம் திராவிடநாடு பிரச்சனை பற்றிக் கலந்து பேசினார். 5ந்தேதி காலையில் பண்டித வெங்கட்ரத்னம் என்பவரும் நரசிம்மையா என்பவரும், பாரிஸ்டர் அவர்களின் மனப்போக்கையும் புராண ஆபாசத்தையும் விளக்கிக் கூறினார். மாலையில் நான் ஆங்கிலத்தில் பேசினேன், தோழர் ஜனார்த்தனம் தெலுங்கில் பேசினார். சீராளா உயர்நிலைப் பள்ளி தெலுங்கு ஆசிரியர் தோழர் சத்தியநாராயணா பேசிய பிறகு, பெரியார், தமது முடிவுரையாக இரண்டுமணி நேரம்

தெலுங்கில் அரியதோர் சொற்பொழிவாற்றினார், இராமாயணம், பெரியபுராயணம் மனுஸ்மிருதி முதலியவைகளைத் தீயிலிட வேண்டியதன் அவசியத்தை விளக்கி, ஆவேசமுள்ள இன எழுச்சியுள்ள வாலிபர்கள், சமுதாயப்புரட்சி நடத்த முன்வர வேண்டும் என்று உணர்ச்சி பெருக்கெடுத்தோடப் பேசினார். வந்தனங்கூறுமுன் வந்த கோபிநாத் எனும் இளைஞர், இராமாயணத்தைப் படலம் படலமாக எடுத்துச் சாடினார், சம்புகவதத்தின் கொடுமையை எடுத்துக்காட்டி, இராம இராஜ்யத்தின் இலட்சணத்தை இடித்துரைத்தார், இராமாயணத்தைத் தீயிலிட வேண்டுமென்று கூறி "தீயும் கெட்டுவிடும் தீயகருத்துக்கள் அடங்கிய இந்நூலைத் தீயிலிடுகையில்'' என்று தீப்பொறி பறக்கப் பேசினார். பார்ப்பனியம் ஒழிக! பார்ப்பனரல்லாதார் சமுதாயம் வாழ்க! என்ற முழக்கத்துடன் இனிது முடிந்தது.

திராவிடர் என்ற உணர்ச்சி, ஆந்திரத்திலே செல்லாது என்று சிலர் கூறுவதுண்டு. அதற்குக் காரணம், ஆந்திர நாட்டிலே, திராவிட உணர்ச்சி இருப்பதை நாம் உணர வழியில்லாமல் போய்விட்டதேதான். நாம் ஆந்திர நாட்டுணர்ச்சியை அறியவும், நமது உணர்ச்சியை அவர்களுக்குத் தெரிவிக்கவும், ஆங்கில இதழ் நமக்கு இல்லை. இருக்கும் ''சண்டே அப்சர்வருக்கோ'' "லிபரேட்டருக்கோ" வேறு பணிகள். தன்மான இயக்கத்துக்குத் தடை ஏற்பட்டு இருப்பதற்கு இதுவே காரணம். இக்கருத்துக்கள் தெலுங்கர் நாட்டிலே பரவாமலில்லை. ஆங்காங்கு சிந்திச் சிதறிக்கிடக்கிறது. ஒன்று திரட்டி உருவாக்கு முன்னம் பாரிஸ்டர் இராமசாமிச் சௌத்ரி இறந்து விட்டார். ஆனால் அவருடைய

கொள்கைகளைப் பற்றி மற்றும் வாலிபர்கள், வாளாயிருப்பார் என்று சொல்ல முடியாது.

புரட்சிக்கவி கனகசுப்புரத்தினம், தாம் இயற்றிய இரணியன் அல்லது இணையற்ற வீரன் எனும் நாடகத்திலே, தூணிலிருந்து நாராயணன் வந்தவிந்தையை விளக்கியிருப்பதை நமது தோழர்கள் அறிவர். தூண் மறைவிலே தூர்த்தன், ஆரியன் ஒளிந்து கொண்டிருக்கிறான் சிங்க முகமூடியுடன் இரணியன் எனும் இணையற்ற வீரனைக் கொல்கிறான். தன்மானத் தனிக்கவி கூறிய இக்கருத்துப் போலவே, பாரிஸ்டர் இராமசாமி அங்கு பேசியும் எழுதியும் இருக்கிறார் என்றால் எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது. தகப்பனுக்கே துரோகியான பிரகலாதனுக்கு உடந்தையாக ஒரு ஆரியன், தூண் மறைவிலே ஒளிந்திருந்து இரணியனைக் கொன்றான். அதை நரசிம்ம அவதாரமென்று நமது மக்கள் நம்பிக் கெடுகின்றனர் என்று பாரிஸ்டர் சௌத்ரி அவர்கள் எழுதியிருக்கிறார். பகீரதன் ஆகாயத்திலிருந்து கங்கையைக் கொண்டு வந்தான் என்று புராணிகன் புளுகுகிறான், இதனை நம்ப வேண்டாம். பகீரதன் என்பவன், இமயமலைச் சாரலிலிருந்து, நதிக்காக வழிவகுத்திருப்பான், இதனைத்தான் புராணிகன் புரட்டாக எழுதி வைத்துவிட்டான், இதனை நம்புவதால், பார்ப்பான் பிழைக்கிறான், நம்மவர் பொருள் இழக்கின்றனர் என்று பாரிஸ்டர் கூறியிருக்கிறார். ஆனால் அந்நாட்டிலே வேரூன்றும்வரை அவர் இருப்பதற்கில்லாமற் போய்விட்டது.

தமிழர் மட்டுந்தான், நெடுங்காலமாக ஆரியத்தை அவ்வப்போது எதிர்த்து, அடிபணிய மறுத்துப் போரிட்டு

வந்திருக்கிறார்கள். அடிக்கடி புரட்சிப் புயல் வீசியபடி இருந்திருக்கிறது. மண்டியிடும் மன்னர்களும், மதிகெட்ட மந்திரிகளும், சிந்தனை கெட்ட மக்களும், தன்மானம் கெட்ட சில புலவர்களும், ஆரியத்தின் அடிவருடிகளானார்கள் என்ற போதிலும், பலமுறை பலர், ஆரியத்திற்கு எதிரிடையாகப் புரட்சி நடத்தியிருக்கிறார்கள். இன்றுவரை அப்புரட்சி நடந்து கொண்டேதான் இருக்கிறது. இப்புரட்சிக்கு, மக்களுக்கு அவ்வப்பொழுது தேவையான உணர்வை ஊட்டுவது, தமிழ்மொழியே! அம்மொழி ஒன்றே, ஆரிய ஆலிங்கனத்தைப் பெற்றுங்கூடத் தனித்து வாழும் தகைமையைத் தளரவிடாமல் தன்மான ஊற்றாக இருந்து வருகிறது. இன்று வடமொழி தமிழிலே கலந்து இருப்பினும்கூட, தெலுங்கு, மலையாளம், முதலிய மொழிகளிலே உள்ள அளவு இல்லை என்பது மட்டுமல்ல, இன்றுங்கூட, கலந்துள்ள வடமொழியை நீக்கிவிட்டு, தலைநிமிர்ந்து, வளமோ அழகோ துளியும் குறையாமல் குறையாததது மட்டுமல்ல அதிகமாக விளங்கும்படி தனித்து இயங்க முடியும். தொட்டால் துவளும் கேரளக் கன்னிபோலன்றி, அணைப்பால் அழிந்த ஆந்திர அணங்குபோலன்றி, தமிழ்த்தாய், முற்றத்தே வந்து விளையாடும் சிறார்களைப் பிடித்திழுத்துப் பண்டம் தந்து அனுப்பவதுபோலத் தமிழ், வடமொழி போன்ற எம் மொழியையும், உடனிருக்க அனுமதி தந்ததேயன்றி, அடிமை யாகவில்லை. இந்தத் தனித்தமிழ், இன்றும் தன்மானத்துக்கு ஊற்று என்று கூறலாம். தெலுங்கிலேயோ, மலையாளத்திலேயோ இன்றுள்ள வடமொழியை நீக்கிவிட்டால், அவ்விரண்டு மொழிகளும் தனித்து இயங்கமுடியுமா என்பது சந்தேகமே.

மொழி இழந்த மக்கள் வழி இழந்த விழிஅற்ற மக்கள் என்று கூறல் மிகையல்லவே! இந்தக் குறைபாட்டினை உணர்ந்த பாரிஸ்டர் இராமசாமி தெலுங்கு மொழியிலே உள்ள வடமொழிச் சொற்களை நீக்க வேண்டும், தனித் தெலுங்கு எழுத வேண்டும் என்ற கிளர்ச்சியைத் துவக்கினார். ஆந்திரர் என்ற பெயரே, ஆரியத்துக்கு அடிமையானதையே குறிக்கிறதென்றும், தெலுங்கர் என்று கூறிக்கொள்வதே, மொழியை அடிப்படை யாகக் கொண்ட உணர்ச்சியை ஊட்டும் என்ற சொல் என்றும், பாரிஸ்டர் கூறினார். ஆந்திரப்பல்கலைக் கழகம் ஏற்பாடான போது, அவர் "செனட் சபை"யிலே அங்கம் வகித்திருந்தார். அக்கூட்டத்திலே, "தெலுங்குப் பல்கலைக்கழகம்" என்று பெயரை மாற்றி வைக்கவேண்டும் என்று வாதாடினார், ஆரியத்தை நம்பியவர்கள் பெருவாரியாக அங்கு இருந்ததால், பாரிஸ்டரின் முயற்சி பலிக்கவில்லை, எனவே அவர், தமது கண்டனத்தைத் தெரிவிக்க அக்கூட்ட நடவடிக்கையிலே கலந்து கொள்ள முடியாதென்று கூறிவிட்டு வெளியேறி விட்டார். இன்று, தெலுங்கும் தனித்தியங்க வேண்டும் என்ற எண்ணமும், தனித்தியங்க முடியும் என்ற நம்பிக்கையும் கொண்ட இளைஞர்கள் பலர் இருக்கின்றனர். கிராமங்களிலே, கொச்சைத் தெலுங்கு என்று கூறப்படும் பேச்சிலேயும் பாட்டிலேயும், தொட்டிலாட்டும் தாயின் கொஞ்சு மொழியி லிருந்தும், இன்று, தனித் தெலுங்குச் சொற்களைத் திரட்டித் தெலுங்கு தனித்துவாழ வழி செய்ய வேண்டுமென்று விழை கின்றனர். மொழியிலே ஆர்வம், பிறகு இன எழுச்சிக்கு வழி தராமற்போகாது.

கம்ம, காபு, வெலமா, ரெட்டி, என்று பல பிரிவுகளாகத்

தெலுங்கர் பிரிந்து கெடுவதைக் கண்டித்து, இப்பிரிவுகள் ஜாதிப் பிரிவுகளல்ல, ஒவ்வொருவகையான நிலத்துக்கும் தக்கதோர் தொழிலும் வாழ்க்கை முறையும் அமைந்திருக்கிறது, அதுபோலவே ஆந்திரத்திலே, உள்ள பல பகுதிகளிலே உள்ள மக்கட்கு நிலப்பண்புக்கும் தொழில்முறைக்கும் ஏற்றவண்ணமே பெயர் அமைந்தது, இது ஜாதியைக் குறிப்பதல்ல, ஆரியருக்கே ஜாதிபேதம் உரித்தானது, நமக்கு அல்ல, என்று பாரிஸ்டர் கூறியிருக்கிறார், குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்று பண்டைத்தமிழர் நிலத்தினைப் பகுத்துக் கூறியிருப்பதுபோன்ற விளக்கமே, பாரிஸ்டர் எடுத்துக்கூறியதும். நமது இயக்கத்தினரைப்போலவே, பாரிஸ்டரும், திருமணங்களிலே ஆரியத்தை விரட்டி இருக்கிறார். பல திருமணங்கள் வடமொழி நீக்கப்பட்டும், ஆரியரின்றியும் நடத்தி வைத்தார். இவ்வளவுடன், திராவிட இனஎழுச்சிக்காகவும் பாடுபட்டிருக்கிறார். பத்தாண்டுகளுக்கு முன்பு, நெல்லூரில் நடந்த ஜஸ்டிஸ் மாநாட்டின்போது, பாரிஸ்டர் இராமசாமி, பெரியார் இராமசாமியைக் கண்டு பேசினாராம். இராம இராஜ்ய அலங்கோலத்தை விளக்க அவர் எழுதிய சம்புகவதம் எனும் நூலையும் படித்துக் காட்டினார். தன்மான இயக்கத்திற்கு அவர் தளராது உழைத்ததுடன், ஆரியப் புராணப் புரட்டுகளை விளக்கிப்பல புத்தகங்களை எழுதியுள்ளார். சூதபுராணம் என்ற தலைப்புள்ள நூலிலே, ஆரியப் புராணங்களை அலசி அலசிக் காட்டி யிருக்கிறார். அவர் துவக்கிவைத்த இயக்கத்தை வேகமாக, விறுவிறுப்பாக நடத்த வேண்டுமென்ற நோக்கம் இன்று அங்கு பலருக்கு இருக்கிறது. "பதினெட்டு பாபங்கள் புரியும் பார்ப்பனர்" "குலாசாரம் ஒரு கற்பனை" "சாத்திரத்தின் அடிமை"

"சமுதாயப் புரட்சி" என்பன போன்ற பல நூற்கள் வெளி வந்துள்ளன, தெலுங்கிலே. தெனாலியிலே சுதாஸ்ரமம் என்ற பெயருடன் ஒரு சங்கம் இருக்கிறது.

"சரி! சரி! இனிநான் சாஸ்திரோக்தமாகவே நடக்கப் போகிறேன். பாரதவர்ஷத்தின் பண்டைப் பெருமை பங்கமடையலாமா? இனி, ஆகமவிதிப்படி, ஆதிநாட்களிலே இருந்த முறைப்படி நடக்கப்போகிறேன்" என்று தீர்மானித்தான், ஒரு பிராமணன், பள்ளியின் ஆசிரியன். கங்கை தூங்கும் நேரத்திலே காகம் கரையுமுன், கதிரவனின் ஒளிதுளிபோல் காணப்படும் நேரத்திலேதான், காலைக் கடன்களை முடிக்க, சாஸ்திரோக்தமாகக் கிணற்றருகே சென்று, ஸ்நானம் செய்தான். அந்தக் குளிர்ந்த நீரைமேலே கொட்டிக் கொண்டதும், சாஸ்திர முறைப்படி நடக்கிறோம் என்ற களிப்பு உடலைப் பிடித்து உலுக்குவதுபோல, நடுங்கிற்று. புன்சிரிப்புடன், சம்போ! மகாதேவா! என்று பஜித்தான். குடம் குடமாகத் தண்ணீரைத் தலையிலே கொட்டிக்கொண்டபடி. புறக்கடையை வழக்கமாகச் சுத்தம் செய்யும் குப்பைக்காரன் கண்டானா, ஆரியன் சாஸ்திரோக்தமாக நடக்கத் தீர்மானித்திருப்பதை. வழக்கமாக வந்து நின்றான், கண்டான் ஆரியன், "கர்மமே! கிரஹசாரமே!" என்று கூவினான், தலையிலே அடித்துக் கொண்டான் "மகாபாபி நீ எங்கிருந்தடா வந்து சேர்ந்தாய். குளித்து முடித்ததும், சண்டாளனைக் காண்பது, மகாபாபமாயிற்றே. போய்த் தொலையடா" என்று வைதார், அவன் சென்றபிறகு, மீண்டும் ஆரம்பித்தார், ஆச்சாரத்தோடு தமது ஸ்நானத்தை. உடைவெளுப்பவனுக்கு அன்று ஏதோ அவசரம், அவன் வந்து சேர்ந்தான் ஐயர் இரண்டாம்முறை ஸ்தானத்தை முடித்த

சமயத்திலே, சாஸ்திர விரோதம் அதுவும். எனவே மீண்டுமோர் முறை ஸ்தானம் செய்யவேண்டி நேரிட்டது. இவ்விதமாக மூன்று நான்கு முறைகள், திரும்பத் திரும்ப ஸ்நானம் செய்து, பூஜை முடித்துக் கொண்டு போஜனத்துக்குச் சென்றார். அவர் அமர அம்மையார் வழக்கமாகப் போடும் மணையைப் போட்டிருந்தார்கள். ஐயருக்கு ஒரு சாஸ்திரம் நினைவிற்கு வரலாயிற்று. மரத்தால் செய்த ஆசனத்தில் அமருவது ஆச்சார விரோதம் என்று மனுவோ, பராசரரோ அல்லது அவர்களின் வழிவழி வந்தவர்களோ உரைத்துப் போனதாக நினைவுக்கு வரவே, "ஆசனத்தை அகற்றடி! ஆவிலையையும் அகற்று! கூட்டி மெழுகு, சுத்தம் செய்" என்று சகதர்மினிக்குக் கூறினார். பள்ளிப்போக ண்டிய சமயம் நெருங்கவே பயந்தார், பதைத்தார், மெழுகிய இடம் உலருமுன்னரே அமர்ந்தார். உண்ணப்போகும் சமயம், உரத்த குரலிலே யாரோ அழுகிற சத்தம் கேட்டது, அவர்களுக்குத் தெரியாதல்லவா, ஐயர் சாஸ்திரோக்தமாக நடக்க இருப்பது. ஐயருக்கோ ஒரு சாஸ்திரக்கட்டளை நினைவிற்கு வந்தது. "போஜன சமயம் புலம்பல் கேட்டால், போகிற கதி நல்லதல்ல" என்று யாரோ கூறினதாக அவர் படித்திருந்தார். எனவே சாப்பிடவில்லை, நேரே பாடசாலை சென்றார். வியாகர்ண வகுப்பு, வேதவியாகர்ணங்களை வேதியருக்கன்றி வேற்றாருக்குப் பாடம் சொல்லுவது சாஸ்திர விரோதம். பள்ளியிலேயோ, பார்ப்பனரல்லாத பிள்ளைகளும் இருந்தனர். ஆசிரியருக்கழகு பாடங்கூறுதல், ஆனால் ஆரியருக்கழகு ஆகமவிதிப்படி நடப்பது, எனவே, "சூத்திர"ப்பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித் தரமறுத்தார், அன்றே வேலையும் போய்விட்டது. மறுதினம் சிரார்த்தம்! கங்கைக்கரையிலே சிரார்த்தம் செய்தால்

சாஸ்திரோக்தமாக இருக்கும் என்ற எண்ணத்தால், காசிக்ஷேத்திரம் சென்றார். அங்கோ, பலஜாதி மக்களும் ஸ்நானம் செய்திடக் கண்டு பதைத்தார். நீசர்களும் ஸ்நானம் செய்யும் இடத்திலே சிரார்த்த காரியத்தைச் செய்வது ஆச்சார விரோதமாகுமே! எனவே அவர் கடலுக்குச் செல்வோம் என்று கராச்சி சென்றார். அங்கோ, பல ஜாதியினர் மட்டுமல்ல, வெள்ளைக்காரரும் கடலருகே இருக்கக் கண்டார், விசனித்தார். ஒருயுக்தி தோன்றிற்று. நீரும் நிலமும் அசுத்தமாகிவிடடது, இவ்விரண்டு இடங்களிலும் சிரார்த்தம் செய்வது சாஸ்திர விரோதமாகி விட்டது. சுத்தமான இடம் ஆகாயம்! எனவே அங்கே சென்று சிரார்த்தம் செய்வது சாஸ்திரோக்தமாக இருக்கும் என்று தீர்மானித்தார், விமான நிலையம் சென்று வாடகைக்கு ஒரு விமானத்தை அமர்த்திக் கொண்டார், புரோகித சகிதம், வானிலே வட்டமிட்டார். விமானம் வானிலே சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் வேளையிலே, சிரார்த்தத்தை முடித்துவிடுவதென்று எண்ணினார் சிரார்த்த காரியம் தொடங்கிற்று. புரோகிதருக்கு அதே சமயம் மயக்கமும் குமட்டலுமாகி வாந்தி எடுத்து, இடத்தையே அசுத்தமாக்கி விட்டார்! ஆகவே, விமானமும் சிரார்த்த காரியத்துக்கு ஏற்றதாக இல்லை, என் செய்வார் ஐயர்? சாஸ்திரோக்தமா அரபிக் கடலிலே விழுந்து பிராணத்தியாகம் செய்து கொள்வதா! யோசித்தார். அறிவு அவருக்கு உதிக்கலாயிற்று. "மூடா! காலம் எவ்வளவு மாறிவிட்டது! உலகம் எவ்வளவு மாறிவிட்டது! மாறினதும், மாறிக்கொண்டே இருப்பதும், மாறுதலையே இலட்சணமாகக் கொண்டதுமான பிரபஞ்சத்திலே, நீ ஒரு சிறு ஜென்மம். உன்னால் இந்த மாறுதலைத் தடுக்க முடியுமா? இந்த மாறுதல் என்ற வெள்ளத்திலே எதிர்நீச்சுப் போடுகிறாயே

முடியுமா? ஆகமும் சாஸ்திரமும் அந்தக் காலத்து மக்கள் அச்சமயத்திலே இருந்த அறிவிற்கு ஏற்றபடி, அந்த உலகத்து வசதிக்காக ஏற்படுத்திக் கொண்டவைகள். இந்தக் கால அறிவுக்கு அவை பொருந்துமா? இந்தக் கால உலகுக்கு அவை தேவையா? இந்தக் காலத்து வசதிக்கு இவைதுணை செய்ய முடியுமா? குரங்குப்பிடியாக இராதே" என்று கூறிற்று. சாஸ்திரோக்தமாக வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று "சங்கல்பித்துக் கொண்ட" பிராமணன், புத்தி வரப்பெற்று, ஒருவராலும் முடியாத காரியம் சாஸ்திரோக்தமாக நடப்ப தென்பது என்று தெரிந்து கொண்டு விமானத்தைக் கீழே இறக்கச் சொல்ல ஊர் திரும்பினான். சாஸ்திர அடிமையாக இருந்தவன், புத்திமானானான்.

இக் கருத்துடன் ஒரு கதை, "சாஸ்திரத்தின் அடிமை" என்ற தெலுங்குப் புத்தகத்திலே இருக்கிறது. கதை மட்டுமல்ல புராணங்கள் பலவற்றையும் பலமாக கண்டிக்கப்பட்டிருக்கிறது. எனவே, தங்கமான இயக்கவித்து அங்கு தூவப்பட்டு இருக்கிறது, உழைப்பெனும் நீர் பாய்ச்சினால், முளைவிட்டுப் பயிர் செழிக்கும் உழவு முறை தெரிந்தால் மட்டும் போதுமா உழைக்க ஆட்கள் தேவை. நாகட்லா சென்றதில் நான் கண்ட உண்மை இது. முயற்சி செய்தால் வெற்றி உண்டு என்பதை எண்ணும்போது புன்சிரிப்பு. அந்த முயற்சி செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறோமே என்பதை எண்ணும் போது பெருமூச்சு இரண்டும் மாறி மாறி வருகின்றன, என்ன செய்வது!

*(திராவிட நாடு - 11-6-44)*

# 15. தீராத்துயரம்!

நமது அன்பர், இசைஅரசு தோழர் தண்டபாணி தேசிகரின் திருக்குமரன் முத்தையா சிலநாள் நோய்வாய்ப் பட்டிருந்து 15-7-44ல் திடீரென மறைந்த செய்தி கேட்டோம், மனம் ஒடிந்தோம். தமிழருக்கு இசையை, இனிமையை, ஊட்டியவர் இசை அரசரின் அருமைக்குமரன், அவருக்கு அருமருந்தாக விளங்கி வந்தான். முத்தையாவின் குறு நடையும், புன்முறுவலும், மழலையும் அவருக்கு யாழாகவும் குழலாகவும், நாதமாகவும் நர்த்தனமாகவும் இருந்தது. இருதயம் பூரிப்பில் பிணைந்தது, விழியிலே களிப்புகூத்தாடி, மொழியிலே மகிழ்ச்சி மிளிர, தேசிகர் தமது திருக்குமரனைக் கண்டுகளித்து வாழ்ந்தார். 15-7-44லே, புயலால் பூம்பொழில் அழிந்துபட்டதுபோல, பெருங் காற்றால் விளக்கு அணைந்ததுபோல, சுழலிலே சிக்கிய கலம் பாறையிலே மோதுண்டு தூளானதுபோல, யாழின் நரம்பு அறுந்ததுபோல, முத்தையா மறையவும், தேசிகரின் மனம் ஆறாத்துயரெனும் ஆழியிலே வீழவுமாயிற்று. என்னென்பது இக்கோரத்தை! எதைக்கூறி ஆற்றுவது தேசிகரின் துயரத்தை. இயற்கை, இயற்கை என்று எண்ணற்ற முறை இயம்பினாலும், என் மகனே! என் மகனே! என்று அவருடைய இருதயத்திலிருந்தும் எழும் சோக ஒலி எப்படிக் குறைந்திட முடியும். புத்திர சோகத்தைவிடக் கொடியது வேறெதுவுமில்லையே! அந்தச் சோகத்திலே, அவர் ஆழ்ந்திட நேர்ந்தது கேட்டு நாம் மனம் வெதும்புகிறோம், அவருக்கு ஆறுதல் கூறும் எண்ணத்தை முந்தி நின்று முறியடிக்கிறது நமது சோகம். என்செய்வது!

என்செய்வது என்பதன்றி வேறோர் மொழி அறியாது திகைக்கிறோம், ஆறாத்துயரிலே அவர் இருத்தல் கேட்டுத் துடிக்கிறோம், என் செய்வோம்!

*(திராவிட நாடு - 23-7-44)*

# 16. கிலிஸ்தான்!

"காதகனே! கற்பழிக்கவா துணிகிறாய்!"

"கண்ணாளா! கட்டிலறைக்கு வா"

"கன்னெஞ்சமா உனக்கு? கைபிடித்திழுத்தாலும் வாரேன் என்கிறீரே!".

இவை, கற்புக்கரசி, காதலரசி, கலவிக் கடைக்காரி எனும் மூன்றுவிதமானவர்களின் மூன்றுவித மொழிகளாக இருப்பின், யாரும் வியப்படையக் காரணமில்லை. ஆனால், ஒரே மாது, மாலையிலே கற்புபேசி, நடுநிசியிலே காதலுரையாடி விடியும்போது விரகதாபத்தோடு சொல் வீசினாள் என்றால், வியப்பு மட்டுமா இருக்கும், அந்தப் பெண்பால் பேதையா, பித்தம் பிடித்தவளா என்ற சந்தேகம் உண்டாகுமல்லவா?

இதுகூட அவ்வளவு விந்தையல்ல! எதிரிகிட்டே வருவதற்கு முன்பு வீறாப்பு பேசி எதிரி நெருங்கினதும் பல்லிளித்து நின்று, அவன் அசட்டையாகத் திரும்பிய பிறகு, "ஏறெடுத்தும் பாரேன் என்கிறாரே, நான் இவரிடம் எவ்வளவு நேசமாக இருக்கிறேன், இவருக்கு ஏனோ என்னிடம் இவ்வளவு

வெறுப்பு?" என்று கூறுவதுமாக ஒருவர் இருந்திடக் கண்டால், அந்தப் பேர்வழியின் பெயர் எந்தப்பட்டியிலே பொறிக்கப் படவேண்டுமென்று யோசிக்க வேண்டாமோ!

அதிலும் இவ்விதமான விந்தைமிகுந்த மொழி மாற்றங்கள், ஒரு பெரிய பிரச்சினையிலே, ஒரு நாட்டு எதிர்காலத்தைப் பொறுத்த விஷயத்திலே, மதிப்பிற்குரிய ஒரு அரசியல் தலைவருக்கு இருக்குமானால், அது விந்தை மட்டுமல்ல, விபரீதமும் கூட என்று கூறுவோம்.

பாரத மாதாவை வெட்டுவதா? அடுக்குமா? இயற்கை இடந்தருமா? அரசியல் அறிவுடையாகுமா? ஜனநாயகக் கோட்பாடு என்னாவது? பாகிஸ்தானா, பாதகஸ்தானா? இதென்ன கொடுமை! என்று ஆத்திரம் பொங்கப் பொங்க அன்று ஆச்சாரியார் பேசி, முஸ்லீம் லீகை, ஏசி, குட்டிக் கதைகளை வீசினாரே, அது உண்மையாக அவருடைய கருத்தா அல்லது நடிப்புத் திறனா?

பாகிஸ்தானால் பாதகம் ஏற்படாது! பரங்கியை விரட்ட வேண்டுமென்றால் பாகிஸ்தானுக்கு இணங்கத்தான் வேண்டும். பழையதுணி நைந்துவிட்டால் இருதுண்டுகளாக்குவது அவசியம் என்று பேசி வரத்தொடங்கினாரே, அது உண்மைக் கருத்தா, உயர்தரமான நடிப்பா?

பாகிஸ்தானுக்கு நான் சம்மதிக்கிறேன் காந்தியாரும் "ததாஸ்து" கூறிவிட்டார். ஜின்னாசாயபுதான், நானாக, வலிய, பாகிஸ்தான் தர இசைந்ததும், சமரசத்துக்குவர மறுக்கிறார், என்னே அவர்போக்கு, நாட்டினரே! இதை நோக்குக, என்

முயற்சி மாற்றிவிட்டது என்று இதுபோது அறிக்கைகள் விடுகிறாரே, இது உண்மையான மனப்பாங்கா அல்லது புதுவிதமான நடிப்பா?

வீரம், சாந்தம், சோகம் என்ற முறையிலே அந்த நாட்களிலே கனல் கக்கும் விழியுடன் நின்றார், பின்னர் புன்னகை முகத்தோரானார், இன்றோ சிந்தாகூலராகக் காட்சி தருகிறாரே, ஆச்சாரியார், இந்த மூன்றுவிதமான காட்சிகளிலே எது நிஜஸ்வரூபம், எது வேடம், என்பது நமக்குத் தெரியவில்லை. நாட்டிலே உள்ளோரிலே எத்துணை பேருக்குத் தெரியுமோ நாம் அறியக்கூடவுமில்லை. வேளைக்கொரு பேச்சுப்பேசும் விபரீதம் நம்மைத் தூக்கி வாரிப்போடுகிறது! ஒரு சரியான விளம்பர இயந்திரம் உதவி செய்வதால் மட்டுமே, இப்படி மாறி மாறிப் பேசுபவர், இன்னமும் அபிப்பிராயம் கூறுமளவு அரசியல் அந்தஸ்து பெற்றிருக்கிறார். ஆரியராக இருப்பதாலேயே இப்படி அவருக்கு எவ்வெப்போது எதெது தோன்றுகிறதோ அவைகளைக் கூறவும் வாதிடவும் முடிகிறது. ஆனால், பாகிஸ்தான் சம்பந்தப்பட்ட மட்டிலே. ஆச்சாரியார், முடிவான, இதயப்பூர்வமான அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட்டாரா, அல்லது வேறு மாற்றங்களும் நேரிடக்கூடுமா என்பதுபற்றி நாம் ஏதும் கூறுவதற்கில்லை. அவருடைய மொழிப்படி, "வேளைக்கேற்ற மூளை" அவருக்கு இருக்குமாம்! நல்ல தலைவர்! ஈடில்லை அவருக்கு! அன்பர் ஆச்சாரியாரிடம், குறிப்புப் புத்தகம் இருக்குமோ இராதோ நாமறியோம், நம்மிடம் இருக்கிறது இவருடைய பல ரகப்பேச்சுகள் பொறிக்கப்பட்ட ஏடுகள். ஒருமுறை அந்த எடுகளைப்

புரட்டினால், கண்காட்சியிலே வைக்கப்படவேண்டியவர் அவர், என்று நமக்குத் தோன்றுகிறது, அவ்வளவு அபூர்வமான தலைகீழ் மாற்றங்கள் உள்ளன அவருடைய பேச்சுகளிலே!

அவருடைய பேச்சின் ரகங்கள், அரசியல் போர் முறையைக் காட்டக்கூடியன என்றுரைப்பவர் உளர். முதலிலே எதிரியை மிரட்டிப் பார்ப்பது, பிறகு, எதிரியிடம் மித்ரன்போல நடித்துக் காட்டுவது, பிறகு எதிரிமிக முரட்டுத்தனமாக இருப்பதாகப் பிறர் நம்பும்படி பேசிக்காட்டுவது, என்ற முறையிலே ஒருவேளை ஆச்சாரியார், முதலிலே பாகிஸ்தானிகளைப் பதைக்கப் பதைக்கத் தூற்றியும், பிறகு பரிவு கொண்டவர்போல அவர்களைப் பக்கத்திலே வருமாறு அழைத்தும், இதுபோது, பாகிஸ்தானிகள் வேண்டுமென்றே சமரசத்தை வெறுத்துத் தள்ளுகிறார்கள் என்று பேசியும் வருகிறார் என்று கூறவுங்கூடும். இவை உண்மை எனில், ஆச்சாரியார், ஆபத்தான ஓர் தந்திரசாலி! இவையல்ல உண்மை, அவருக்கு முதலிலே பாகிஸ்தான் என்றால் பயமாகத்தான் இருந்தது, பிறகுதான் அவருக்கு அது கேடுபயக்காது என்பது புரிந்தது என்று கூறுவரேல், ஆச்சாரியார், மிக மிக மந்தமதிபடைத்தவர் என்று ஏற்படும். ஆபத்தான தந்திரசாலியானாலும், அறிவுக்கூர் மழுங்கியவரானாலும், இரண்டும், இடையூறு மட்டுமல்ல, நாட்டுக்கு இழுக்குங்கூட!!

பாகிஸ்தானால் கேடு இல்லை, நாட்டு அடிமைத்தளை போக வேண்டுமானால், லீகுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டேயாக வேண்டும், என்று இப்போது உரைக்கும்

ஆச்சாரியார், முதலிலே ஏன் முப்புரியை உருவிக்கொண்டு, லீகின்மீது உக்கிரமாகப் பாய்ந்தார். ஆரஅமர யோசித்து அன்றே இந்த நல்ல முடிவுக்கு வந்திருந்தால், நாட்டிலே நிலைமை எவ்வளவு மாறி இருக்கும்! ஆச்சாரியார் என்ன, கொடிதூக்கும் குப்பனா, கதர்க்கடை கந்தனா, விஷயம் புரியாமலிருக்க! தலைவர். வக்கீல். உபநிடதம் முதற்கொண்டு ஊராளும் முறைவரை படித்தவர். முதலமைச்சர். இப்படிப்பட்ட யோக்யதாம்சங்கள் பெற்றவருக்குப் பாகிஸ்தான் பாதகம் விளைவிக்காது என்பது புரிய, இவ்வளவு காலமா பிடிக்கும்! நமக்கு ஆச்சரியமும் அச்சமும் பிறக்கிறது, இதை எண்ணும்போது, தாமதித்துத்தான் தெளிவு பிறந்தது என்றே வைத்துக் கொள்வோம். ஜனாப் ஜின்னா லீக் காரியக் கமிட்டியைக் கலந்து பிறகு பதில் கூறுகிறேன் என்று சொன்னார். இதற்குள் அவசரப்பட்டு, சமரசப் பேச்சு முறிந்து விட்டது, சகல முயற்சியும் தோற்றுவிட்டது, இணங்கிவர ஜின்னா மறுத்துவிட்டார், என்று நாட்டவருக்கு அவ்வளவு பதைப்புடன் கூறவேண்டிய அவசியமென்ன நேரிட்டு விட்டது என்று கேட்கிறோம். இரண்டாண்டுகளுக்கு மேலாகவே, பாகிஸ்தானை இவர் எதிர்த்தார், இவருடைய மனம் மாறியோ, நிலைமை மாறியோ, போர் முறையோ, எக்காரணத்தை முன்னிட்டோ, பாகிஸ்தானை ஆதரிக்கிறார், இடையே எவ்வளவு கண்டனம், கேலி! எத்துணை எதிர்ப்பு லீகுக்கு உண்டாக்கினார். இவ்வளவையும் பொறுத்துக் கொண்ட, சகித்துக் கொண்ட ஜனாப் ஜின்னா, "சற்றே பொறுமய்யா ஆச்சாரியாரே! உமது சமரசத் திட்டத்தை லீக் காரியக்கமிட்டி முன்னம் சமர்ப்பிக்கிறேன் என்று சொன்னால், இதைப் பொறுத்துக் கொள்ளக் கூடாதா ஆச்சாரியார்! ஏதோ குடி முழுகி விடுவது

போல, பத்திரிகைகளிலே அறிக்கைகள் வெளியிட்டுக் கடிதப் போக்குவரத்துக்களைப் பிரசுரித்து, விளக்கம் உரைத்து, வியாக்யானம் கூறி, நாட்டைக் கலக்கிய காரணம் என்ன? ஜனாப் ஜின்னாமீது, மக்கள் சீறிப்பாய வேண்டும், முஸ்லீம் இனத்தின் மனதிலே தமது தலைவர்மீது சந்தேகம் உண்டாக வேண்டும், லீகிலே பிளவு உண்டாக்க வேண்டும் என்பதன்றி, இந்த அவசரத்துக்கு வேறு என்ன காரணம் கூறமுடியும்!

இந்தப் போர்துவங்கிய உடனே, ஆச்சாரியார் தமது கட்சியின் அரசியல் ரேகையைக் கவனித்து ஜாதகம் கணித்தார்! இது பிரிட்டனுக்கு நெருக்கடியான நேரம், இந்தச் சமயத்திலே எவ்வளவு கடுமையாக வேண்டுமானாலும் செய்யலாம் பேரம், என்று கருதினார். லீகும் பிறகட்சிகளும் இருப்பதாகக்கூட அவருடைய ஜாதகத்திலே குறிக்கப்படவில்லை! போர், காங்கிரசின் ஒத்துழைப்பைப் பற்றிச் சட்டை செய்யவில்லை. தக்ளி துப்பாக்கியாகாது, கைராட்டை விமானமாகாது, என்பது போரிடுபவருக்குத் தெரியுமல்லவா! காங்கிரஸ் "துறவு" பூண்டாலும், 'பிடிசாபம்' என்று மிரட்டினாலும், கவலை இல்லை என்று கூறிவிட்டுக் காரியத்தை வீரியமாக நடத்தி, இதுபோது, பெர்லினில் பீதி உண்டாக்கவும், மாஸ்கோ மகிழவும், பாரிஸ் வரவேற்பிதழ் தயாரிக்கவும், இலண்டன் தணலிலே வெந்த தங்கமாகவும் விளங்கும் நிலையிலே நேசநாடுகள் உள்ளன. "இந்தியாவைப் பிடிக்க வந்த ஜப்பான் வாலறுபட்டு, சின் குன்றுகளிலே பதுங்கிற்று. இந்நிலை, ஆச்சாரியாருக்குத் தமது "ஜாதகம்", சரியாகக் கணிக்கப் படவில்லை என்பதை ஒருவாறு விளக்கிற்று. இடையே லீக் அல்லது பிறகட்சி காங்கிரஸ் காலி செய்த இடத்தை அடைத்துக்

கொள்ளும், அதுசமயம், அக்கட்சிகள் மீது போர்தொடுத்துப் பழையபடி பதவியிலே அமர வழி தேடிக்கொள்வோம் என்று கருதினார், அதிலேயும் அவருடைய "ஆருடம்" ஆலமரத்தடி ஜோதிடரின் ஆருடம் போலாகிவிட்டது. லீகின் வேகத்தைக் கண்டார். ஜனாப் ஜின்னா, வைசிராய் மாளிகையைக் கவனிக்க மறுத்து, சாதாரண முசல்மானின் வீடுகளிலே நுழைந்து, ஒவ்வொரு முஸ்லீமின் மனதிலும் "பாகிஸ்தான்" இலட்சியம் பதியும்படிச் செய்வதைக் கண்டார். பிரிட்டிஷாரின் எதிர்கால திட்டம் நாட்டுப் பிரிவினைக்கு ஏற்றவிதமாகவே அமையக் கூடும் என்பதைக் கிரிப்ஸ் திட்டம் விளக்கிடக் கண்டார், இனிப் பாகிஸ்தானைப் பெறும் நிலைக்கு முஸ்லீம்கள் வந்து விட்டார்கள், ஆகவே யூகத்தோடு வந்துவிட்டார்கள். ஆகவே யூகத்தோடு நடக்கவேண்டும், பாகிஸ்தானை நாமே தருவதாகக் கூறுவோம் என்று நினைத்து பாகிஸ்தானை ஆதரிக்கத் தொடங்கினார். ஜனாப் ஜின்னா, எந்த ஜனநாயகக் கோட்பாடு களை கொண்ட தலைவரும் கூறவேண்டிய முறைப்படி, ஆச்சாரியாரின் சமரசத் திட்டத்தை லீக் காரியக் கமிட்டியிடம் சமர்ப்பிக்கிறேன் என்று கூறினார் இது முறையே என்று முன்னாள் மந்திரியார், எஸ். இராமநாதன் மொழிகிறார். அரசியல் அறிஞர்கள் அனைவரும் அவ்வண்ணமே அபிப்பிராயப்படுகின்றனர். ஆச்சாரியாரோ, அலறுகிறார் அழுகிறார்! ஏன் என்று கேட்கிறோம்!

ஜனாப் ஜின்னாவின் ஒப்பற்ற திறமை, முஸ்லீம் இனத்தின் சக்திக்குப் புதுமுறுக்கு ஏற்றிவிட்டது கண்டு, இன எழுச்சி என்ற இலட்சியம், அங்குமட்டுமின்றி, திராவிடத்திலும் வீறுகொண்டு வளருவது கண்டு, எதிர்காலம் எப்படி

இருக்குமோ என மனமருண்டு, ஏகபோக உரிமை இருண்டு போவது அறிந்து ஆச்சாரியார் அல்லற்படுகிறார். சமரச திட்டத்தின் யோகியதை எப்படிப்பட்டது, ஜனாப் ஜின்னா அதை உடனே ஏற்றுக் கொள்ளாமல், ஏன் லீக்காரியக் கமிட்டிக்கு அனுப்புவதாகக் கூறினார், மேற்கொண்டு செய்யப் பட வேண்டியது என்ன என்பது பற்றி முடிவு செய்யும் பொறுப்பும், யோக்கியதையும், அக்கரையும், ஜனாப் ஜின்னாவுக்குத்தான், என்பதிலே சந்தேகமில்லை. அவர் இஸ்லாமியருக்கு மட்டுமல்ல, இந்திய உபகண்டத்துக்கே சரியான வழிகாட்டுவார் என்பதிலே நமக்குத் தளராத நம்பிக்கை உண்டு. அவருடைய கருத்தும் போக்கும் எப்படி இருக்கும் என்பது பற்றி முன்கூட்டி நாம் கூறப்போவதில்லை. ஒன்று மட்டும் கூறுகிறோம், அந்த நாளிலே ஆணவத்தோடு பேசிக் கொண்டிருந்தார்களே காந்தீயர்கள், இந்தியா, காந்திஸ்தான் ஆகவேண்டுமென்று, அந்த எண்ணம், மடிந்து விட்டது. ஆச்சாரியார் இன்று வாழும் இடம் கிலிஸ்தான்!! இந்த நிலைமை ஏற்பட்ட காரணம், லீகின் கிளர்ச்சி, கட்டுப்பாடு, இன ஒற்றுமை, தலைவரின் தளராத உழைப்பு. திராவிடரே! இந்தமுறையிலே நாம் பணிசெய்ய வேண்டாமா! பாகிஸ்தான் கொள்கை பிறக்குமுன்பு பிறந்தது "திராவிட நாடு" என்ற இலட்சியம். பாகிஸ்தானுக்கு ஆச்சாரியார் இணங்கினால், திராவிடஸ்தானுக்கும் இணங்கத்தானே வேண்டும் என்று டாக்டர் மூன்ஜே கேட்கிறார். பாகிஸ்தானுக்கு இணங்கி, இஸ்லாமியரின் எதிர்ப்பை அடக்கிவிட்டு திராவிடநாட்டை இந்துஸ்தானில் ஒருபகுதியாக்கி ஆரியர் வாழ்விலே குறை வாராதபடி பாதுகாக்கலாம் என்பது ஆச்சாரியாரின் கடைசி தந்திரத் திட்டமாக அமையும்! திராவிட-இஸ்லாமியக்

கூட்டுக்கிளர்ச்சி ஆரியத்துக்கு ஆபத்து என்பதை அவர் அறிவார். பாகிஸ்தானும் தனியாகி, திராவிடநாடு இந்துஸ்தானில் ஒருபகுதியாக இருக்குமானால், இன்று இருப்பதைவிட இழிவு, கொடுமை, கஷ்டநஷ்டம் திராவிடருக்கு விளையும். ஆகவே, தீவிரமாகத் துவக்குங்கள் திராவிடநாடு தனிநாடாக வேண்டும் என்ற கிளர்ச்சியை! லீகின் கிளர்ச்சியின் பயனாக இன்று கிலிஸ்தானில் வாசம்செய்யும் ஆச்சாரியார், திராவிடக் கிளர்ச்சியின் வேகத்தைத் தாங்க முடியாது.

*(திராவிட நாடு - 23-7-44)*

# 17. திருவாங்கூர் திவானுக்கு

திருவாங்கூர் திவான் சர்.சி.பி. இராமசாமி அய்யரே!

அக்டோபர் 3-அன்று மயிலாப்பூர் இந்திய இளைஞர் கழகத்தில் தாங்கள் பேசினீர்களாம். "அம்பேத்காருக்கு திவானின் ஆணித்தரமான பதில்" என்று புளுகுமணிப் பிரசுரங்களில் கொட்டை எழுத்துக்களில் வெளியானது கண்டு வியந்தேன். தாழ்த்தப்பட்டோரின் தனித் தலைவருக்கு உயர்ந்தோரென்று கூறிக்கொள்ளும் கூட்டத்தில் ஒருவர் பதிலளிப்பதாம்: அதுவும் ஆணித்தரமான பதிலாம்: என்று வியந்து முழுவிவரமும் கண்டேன்.

தீக்ஷதர்களாலும் சாஸ்திரிகளாலும் சூழப்பட்டு பவனிவரும் உமக்கு ஆரியப்பித்தம் இயற்கையிலேயே தலைக்கேறித்தான் இருக்கும், பிறப்பிலேயே புனிதமான

குலத்தவரல்லவா! அன்றுநீர் பேசிய பேச்சு சற்றேனும் ஆலோசித்துப் பேசியதாகத் தெரியவில்லை. ஆரியரும், அவர்தம் அடிவருடிகளும், இவ்விருவர் செயலைக்கண்டு அகமகிழும் ஆளுங்கூட்டத்தினரும் அமர்ந்திருந்த அவையிலே, குலப்பெருமையை உயர்த்தியும், குலத்தின் பழக்கங்களைக் குற்றங்காணும் குணாளரைத் தாழ்த்தியும் நீர்பேசியபோது, ஏற்பட்ட (வெறுங்) கரகோஷத்தால் நீர் உற்சாகம் உச்சிக்கேற, உரைப்பதன் உண்மை தானும் உணராமல் உளறிக் கொட்டியிருக்கிறீர்.

உம் இனத்தவர் உம்மைப் பாராட்டிய போதிலும், அறிவுள்ள மனிதர், மேதாவி என்பதற்காக உம்மீது மதிப்பு வைக்கும் பிற இன அன்பர்கள் உம்மீது இரங்கத்தான் வேண்டும். கடுஞ்சொல் கூறுவதாய்க் கோபமுறாதீர்: கோபம் அறிவை மயக்குமே : கைப்பு, நோக்கு கல்மருந்து என்பது தாங்கள் அறியாததா?

முதலில் இந்து சமுதாயத்தின் பெருமைகளைப் பற்றிப் பேசியிருக்கிறீர். இந்து மதத்தைக் கொண்டதனால் ஒரு இனத்தாருக்கு அளவற்ற நன்மையும், மற்றொரு பிரிவினருக்குப் பகரவொண்ணாத பழியும் ஏற்பட்டிருப்பது மறுக்கவொண்ணாத விஷயம்.

ஒரு பிரிவினர் உச்சிவேளையிலே நெற்றியினின்று நிலத்தில் விழும் வியர்வையைத் துடைத்தவண்ணம், கடுங் கதிரொளியில் கால் வயிறு கஞ்சியுடன் காலங்கடத்த, அப்பேருழைப்பின் பயனை, மந்தமாருதம் சுந்தரப்பூங்காவிலே வீச வந்தே மாதர வனிதாமணிகளும், சந்தம்வல்ல சங்கீத

சிரோன்மணிகளும் சூழ, மதியினழகைப் பற்றியும், கம்பனின் கவியின்பதைப் பற்றியும், வேதாகமங்களின் விசேஷத்தைப் பற்றியும் தருக்கித்து, உல்லாசப் போது போக்கும் வீணர் அடைவது எதனால்? உணவுப் பஞ்சம் மிகுந்த இந்நாளிலும் அர்ச்சர்களுக்கு அளவற்ற செல்வமும், ஊணும் சேர்வதுதான் எதனால்? வேதம் ஓதும் வித்வமணிகள், "மறைகாணா முதல்வனை" இசையொடு காணச்சென்று, பசையோடு வீடு திரும்புவது எதனால்?

பரமன் முகத்துதித்த பிராமணர்களுக்குப் பாதத்துதித்த சூத்திரர்கள் பாத சேவை செய்து பிழைக்க வேண்டுமென்று உங்கள் சமுதாயம் விதித்திருப்பதாலன்றோ! அந்தச் சமுதாயத்தினால் நலம்பெறும் நீர் அதை வாழ்த்தாது வேறென்ன செய்வீர்.

பிறகு அரசாங்க ஊதியம் பெறும் ஒருவர் எவ்வாறு ஒரு சமூகத்தை இகழ்ந்து பேசலாம் என்று கனற்பொரி கண்களில் பறக்கக் கூறுகிறீர். எச்சமுதாயத்தையும் இகழ்ந்து பேச வேண்டுமென்பது அம்பேத்காரின் அகக்கிடக்கையன்று. அவர் தாழ்த்தப்பட்டோர் தலைவர். தாழ்த்தப்பட்டோர் வகுப்பின் நலனுக்கான வழிகளை வகுத்துப் பேசுங்கால், இடையூறா யிருப்பவைகளை எடுத்துக் காட்டி, தாழ்த்தப் பட்டோர் தன்னுணர்வடைய வேண்டுமென்று சொன்னால் அது தவறாகுமா?

அம்பேத்கர் அரசாங்க ஊதியம் பெறுபவர் என்பது உமக்குத் தெரிவதைவிட அம்பேத்காருக்கு அதிகம் தெரியும் அதனால்தான் அவர் அரசாங்கம் நன்கு நடைபெற எந்த

இனத்தவரின் நல்வாழ்வு இன்றியமையாததோ - எந்த இனத்தாரைத் தொட்டாலும் பாவம் என்று நீர் உயர்த்திக்கூறும் இந்துநெறி இசைக்கின்றதோ - அந்த இனத்தாரின் ஆக்கத்திற் கான அமைப்பைச் சொன்னார். அதை ஒரு குற்றமாகக் கொண்டு நீர், உம் இனத்தோரின் இயல்புபோல அரசாங்கத் தாரிடம் எந்த அரசாங்கத்தை உமது சமுதாயத்தில் பெரும் பாலோர் வெறுக்கின்றனரோ அந்த அரசாங்கத்தினிடம் எடுத்துக் காட்டும் முறையில் பேசியிருக்கிறீர். ஆனால் சிவன் சிரத்தி லுள்ள சிறுநாகம், ஆழி துயிலும் அரி அமரும் கருடப் புள்ளைக் கண்டு கலப்புரையாடும் என்று உமது புராணங்களே உமக்குப் பகரவில்லையா?

ஒரு சமுதாயத்தினர் உயர் நிலையிலும், மற்றவர் தாழ்நிலையிலும் இருப்பதும், உயர்ந்தவர் தாழ்ந்தவரைக் கஷ்டப்படுத்துவதும் தேசவரலாற்றில் எப்போதும் இருந்தே தீரும் என்று இறுமாந்து இயம்புகிறீர்.

உமது கூற்றுக்கு மேற்கோளாக தென் ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலியா நாடுகளின் முற்கால வரலாற்றைக் காட்டுகிறீர்.

நீர் காட்டும் ஆதாரங்கள் நேர்மையானவையா என்பது ஒருபுறமிருக்க - பிறநாடுகளில் நடந்தது என்பதனாலேயே ஒரு கெட்ட செயல் நல்ல செயலாகி விடுமா? கள்ளுக்கடையில் கணக்கிலடங்காதோர் கலாம் விளைத்துக் கொண்டிருந்தால், குடி கைக்கொள்ளக்கூடிய நற்பழக்கமாகுமா? சோமபானத்தை ஆரியர் அருந்தி வேதம் பாடினார்கள் என்று திராவிடர் அவர்தம் தீமைகளைக் கூறாமலிருக்க முடியுமா?

இனி, இங்கிலாந்தின் முற்கால யூதர்களின் நிலையைக் கூறும் நீர் அவ்வுபமானத்தின் நேர்மையை நினைத்தீரா? அந்நாட்டு யூதர்களுக்கு ஒப்பிடக்கூடியவர் இந்நாட்டில் ஆரியர்தாம். திராவிடர் உழைக்க ஆரியர் திளைக்கின்றனர். அத்தகைய யூதர்களை மற்றவர்கள் இங்கிலாந்தில் நடத்தியது தவறல்ல என்று இந்நாட்டு மக்கள் கருதிவிடக்கூடாதென்று முன்யோசனையுள்ள ஆரியர் "அமலனை" அணுகிக் கெஞ்சி நிற்கவேண்டியிருக்க, நீர் இங்கிலாந்து வரலாற்றை எடுத்துக் காட்டுதல் பொருந்துமா? மன்னர் ரோமன் காத்தலிக்காக இருக்கலாகாதென்றுள்ள முறையை உரைக்கிறீரே, இந்த வரையறைகளெல்லாம் அந்நாட்டின் மக்களுடைய வாழ்க்கை முறைகளை மாற்றியிருக்கின்றனவா? நால்வருணங்கள் அந்நாட்டில் உளவா? பார்ப்பனன் பறையன் என்ற பிரிவினை அந்நாட்டில் உண்டா? பரலோக வாழ்க்கைக்குப் பசுமாட்டைப் பார்ப்பனன் மூலமாகப் பரமனுக்குப் பரிதானம் வழங்கும் கொள்கை உண்டாவென்று ஆலோசித்தீரா?

திருவாங்கூரில் ஆலயத் திறப்பைப் பற்றி வானளாவப் பேசியிருக்கிறீர். ஆலயத்திற்கு எத்தனை தாழ்த்தப்பட்டோர் வருகின்றனர்? உயர்ந்த உத்தியோகங்களைத் தாழ்த்தப்பட்ட வருக்காக 'ஒதுக்குவதும்' பிறகு தகுதியுள்ள 'ஆள் கிடைக்காத தால்' ஆரியர்களுக்கு அவற்றை அளிப்பதும் நடைமுறையில் இல்லையா?

அன்பரே! காலம் கடுவேகமாகச் சுழல்கிறது! குரங்குப் பிடியாளருக்குக் காலம் இதுவல்ல. பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும், ஒன்றே குலம், திராவிட நாடு திராவிடருக்கே என்று திட்டங்கொண்டு வரும் தீரர்களின் காலம் இது. இந்து

சமுதாயத்தை இகழ்கிறான் என்று என்னைக் கோபியாதீர். புத்துணர்ச்சியுலகின் கொள்கைகள் உமக்குப் பிடிக்கவில்லையென்றால் புறம்பாய் ஒதுங்கி நில்லும். திராவிடர் தன்னுணர்வு என்னும் தனிப்பெரும் புயலை எதிர்த்து வீணே வருந்தாதீர்.

*(திராவிட நாடு - 15-10-44)*

# 18. சி.டி. நாயகம் மறைவு

தோழர் சி.டி. நாயகம் அவர்கள் ஒரு மாத காலமாய் நோய்வாய்ப்பட்டிருந்து அவருடைய சொந்த ஊராகிய குலசேகரப்பட்டினத்தில் 66-வது வயதில் 13-ந் தேதி முடிவெய்தினர் என்கின்ற செய்தியைக் கேட்ட தமிழ் மக்களில் துக்கப்படாதவர் எவருமிருக்கமாட்டார். நாயகம் அவர்கள் கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்டாராக இருந்து ரிட்டயர் ஆனவர், சட்டசபை மெம்பராயும், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கழக உறுப்பினராயும், தாலுகா தேசீயப்போர்முனை அமைப்பாளராயும் திருநெல்வேலி தென்னிந்திய பாங்க் டைரக்டராயும் இருந்து வந்தவர் என்பதோடு 40 வருட காலமாக இருந்து வரும் தாயம்மாள் பெண் பாடசாலைக்கும், சென்னை தியாகராயநகரில் இருந்து வரும் எலிமெண்டரி அண்டு செகண்டரி பாடசாலைகளுக்கு காரியதரிசியாகவும், நிர்வாகியாகவும் இருந்து வந்தவர். அவர் பதவியிலிருக்கும் போது திராவிட மக்களுடைய நலனையே குறியாகக் கொண்டு அதற்காகத் தன்னாலானதை எல்லாம் செய்தவர். தனது சொத்துக்களை எல்லாம் பெரிதும் மேற்கண்ட பள்ளிக்கூடங்

களின் நலனுக்காகவே தர்மம் செய்தவர். வாழ்நாள் முழுவதும் ஓய்வின்றி உழைத்தவர். அவருக்கு இரண்டு மகனும், இரண்டு பெண்களும் இருந்து வருவதோடு யாவரும் படித்துப் பட்டம் பெற்று உத்தியோகங்களில் இருக்கிறார்கள். மனைவியாரும் இருக்கிறார்கள்.

*(செய்தி - திராவிட நாடு - 24-12-44)*

# 19. தேம்பும் தாயகம்

நாட்டு மக்களின் நல்வாழ்க்கைக்காக நாளும் பாடுபட்டுழைக்கும் நல்லோர்க்கெல்லாம் நாயகமாக விளங்கிய நமது தளபதி, தோழர் செ.தெ. நாயகம் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தார். ஒரு திங்கள் நோயுடன் போராடினார், திராவிடத்தைப் பிடித்துக் கொண்டுள்ள ஆரியமெனும் நோயை நீக்க வாழ்நாள் முழுதும் உழைத்து வந்த வீரர். நாயகம் நற்பண்புகளின் தாயகம்! கட்சிப் பற்றிலே அவர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். கரையான்களாகவும் காளான்களாகவும், காலத்திற் கேற்ற கோலமிருப்பவராகவும் பலர் கட்சியிலே இருந்தனர். அந்தக் கரைகள் மறையுமளவு, மணி ஒளி என விளங்கினார் மாண்புடைய அன்பர். அவர்,துரைத்தனத்திலே வேலை பார்த்து, ஓய்வுபெற்றார், சில ஆண்டுகட்கு முன்பு; ஆனால் ஓய்வைப் பொதுவாழ்க்கைக்கு அர்ப்பணித்தார். எளிய வாழ்க்கை, இன்சொல், குளிர் முகம், மலர்ந்து மறைந்து மீண்டும் மலரும் அழகிய புன்னகையுடன், அவர் காட்சியாக விளங்கினார், தமிழகம் கண்குளிரக்கண்டது, பெருமிதத்துடன்

அவருடன் உறவு கொண்டது, அவருடைய பயனுள்ள மொழி கேட்டுப் பண்பட்டு வந்தது. கலம் கரைசேருமுன், காவலரில் ஒருவர் மறைந்தார். கலத்திலே உள்ளோரின் கண்ணீர் கடல் வெள்ளத்திலே கலந்தது. என் செய்வது, திராவிடம் பெற்ற தீரர், ஆரியத்தோடு தொடுத்த போர் முடியாமுன்னம், மறைந்தார், மனமுடைந்து நாம், அவர் வழி சென்று, அவர் ஆற்றி வந்த அரும்பணியினைத் தொடர்ந்து நடத்தி, அவருக்கு நன்றி செலுத்துபவராக வேண்டும் என்பதையன்றி, வேறென்ன இருக்கிறது.

தளர்பருவமுற்றபோதும், நாயகம், தமது தமிழகப் பண்புக்கேற்பப் பணிபுரிந்து வந்தார். அஞ்சா நெஞ்சுடன், பணி புரிந்தார் என்றால், பாராளும் இடம் பெறுவதற்காகச் சர்க்கார் முன் தவங் கிடக்கும் பணியல்ல, பழமையுடன் போராடினார், தமிழர் தமது தரணியை ஆளும் தகுதிடை யோராக வேண்டுமென்ற நோக்கத்துடன் போராடினார். நமது கொள்கைகளைக் கண்டு சிலர் மிரண்டதுண்டு, சிலர் தலைவரைத் தாக்கியதுண்டு, மற்றுஞ் சிலர் தலைவரைத் தாக்க இது ஓர் சாக்கு எனக் கொண்டதுமுண்டு, நமது நாயகம், கொள்கை தீவிரமானது கண்டு களிகொண்டு, சுயமரியாதை ஆர்வத்தை வேண்டுமட்டும் மொண்டு உண்டு, பணிபுரிந்தார்.

"பருத்தி நூற்காரர்களின்" பழக்கவழக்கங்கள் பற்றிப் பல வருட அனுபவத்துடன் அவர் ஆற்றிய உரைகளைக் கேட்டவர்கள், தெளிவும் தீரமும் பெற்றனர். இவ்விதழில் பிறிதோரிடத்திலே, நாயகம் நல்கிய நன்மொழிகள் என்ற தலைப்பிலும், சுயமரியாதை நீதி என்ற தலைப்பிலும், அவருடைய பொன்மொழிகளில் ஒரு சிறுபகுதியை வெளி

யிட்டிருக்கிறோம், ஆழ்ந்த கருத்தும், அறிவின்திறமும், திராவிடத்தீரமும், அவர் மொழியிலே குழைந்திருப்பதைக் காணலாம். எப்படிப்பட்ட நெஞ்சழுத்தமும் நேர்மையில் நாட்டமும், பணியில் ஆர்வமும், பண்பில் பயிற்சியும் பெற்றி ருந்தவரை நாம் இழந்துவிட்டோம், என்பது அவர் உரையி லிருந்து அறிகிறோம், அறிந்ததும் நமது ஆறாத்துயரம், அனலென நம்மை வாட்டிடக் காண்கிறோம், வதைகிறோம், விம்முகிறோம், வேறென் செய்வோம்.

மாநாட்டு மலர் மாலைக்கும், சட்டசபை ஸ்தானங்கட்கும், அதிகாரிகளின் புன்சிரிப்புக்கும், கட்சிப்பிரவேசம் ஒரு நுழை வழி என்று கொண்ட சிறுமதியினராகப் பலர் இருந்த நாளிலே உழைத்து உடல் மெலிந்திருந்த உண்மை ஊழியர், தமது இன முன்னேற்றங் காணமட்டுமே, கட்சிப்பணி ஓர் வாய்ப்பு எனக் கொண்டிருந்தார், தொண்டு புரிந்தார், அந்தோ மறைந்தார், அரும்பணி புரிந்து வந்த அண்ணல்.

இந்தி எதிர்ப்புக் காலத்திலே, சொல்லம்பு பல விட்டுச் சோபிதமாக உலவி, அறிக்கைகளை ஏவித் தொண்டர்களைக் கூவி அழைத்துக் கூண்டுக்குள் இருக்கச் செய்துவிட்டுக் கொலுவீற்றிருந்த கொள்கை மறந்த கோமான்கள் கூட்டத்திலே இருந்தவரல்ல, நம்மைக் கோவெனக் கதறவிட்டுக் குளிர்ந்து போன திராவிடத் திருவிளக்கனையார். சிறைக்கஞ்சாச் சிங்கமானார், தங்கக்குணமுடையார்! இந்தி எதிர்ப்புக்கே தமது இல்லத்தை ஓர் பாசறையாக்கினார். அவருடைய புன்முறுவலே, எண்ணற்ற தொண்டர்களுக்கு இன்னமுதாயிற்று, சிறைபுக நேருமோ என்ற சிந்தனை எழுந்தகாலை சிரித்தமுகத்துடன்,

ஆரிய ஆட்சியினும் அவதி தரும் சிறைமேல் என்று ஆண்மையுடன் பேசினார். அரசாங்கம் ஓலை விட்டதும், காலை முன்வைத்துச் சிறைச்சாலைக்குச் சென்றார், சென்றபின் கொள்கையைக் கொன்ற சீலர்கள் போல, மன்னிப்புக் கோரும் மணிகளாகாது, அந்தக் கிழவர், சுகம் வெளியே இருக்க, சுற்றம் சோர்ந்திருக்க, குடும்பம் களிப்பூட்டக் காத்திருக்க, அவைகளை மறந்து, மனதுட்கொள்ள மறுத்து, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமைமாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்ற பொன்மொழிப் புலவரின் பாட்டினை விளக்கும் நடமாடும் நாயகமாகச் சிறைச்சாலையிலே இருந்தார், செந்தமிழரின் வீரத்தை இகழ்ந்தாரில்லை. புலி எனப்பேசி எலி என ஓடிய புன்மதியினர் போலன்றி, மெள்ளப்பேசிக் கள்ளச் சிந்தனை ஏதுமின்றிக் கஷ்டநஷ்டத்தைக் கலங்காது ஏற்றுக் கொண்டார், நமது மனதைக் கொள்ளை கொண்டார், நமது கண்களைக் குளமாக்கி மறைந்தார், குணக்குன்று.

தீவிரமாகப் பேசுவதிலே தீரர் என்று பெயரெடுத்தாகி விட்டது, அந்த அரங்கிலே ஆனந்த நடனம் புரிந்து, அதற் கான ஆதரவு பெற்றுவிட்டது, இனிவேறு ஆடலிடம் தேடுவோம், பாடலழகராகுவோம், பரமன்பதத்தை நாடுவோம், பழனிபக்தருடன் கூடுவோம், பக்திப்பஞ்சாமிருதத்தைப் பருகுவோம், பாமாலை புனைந்து பூமான்களை அடைந்து, பெம்மான் அருள் பெற்ற சீமான் எனத்திகழ்வோம் என்று துணிந்து தூர்த்தராகும் தூயமணிகளைக் கண்டு, கண் புண்ணாகவில்லையே இக்காட்சியைக் காண நேரிட்டும் என்று கவலையுற்ற போதெல்லாம், செச்சே! இந்த நாவாணிபர்கள் வேளைக்கோர் வேடமிடுவர், இவர்பற்றிச்

சிந்தனையும் சோகமும் ஏன், நரிக்குணம் கொண்டவரின் நடவடிக்கையைக் கருதற்கு, நாயகத்தை நோக்கு! அவருடைய நடுங்கா நாவையும், ஒடுங்கா உள்ளத்தையும், பதவிப் பாசத்திலே சிக்காத பான்மையையும் கண்டு களி! பெருமை கொள்! இதோ என் தமிழர்! என்று மார்தட்டு! - என்று நமக்கெல்லாம் கூறுவது போலிருந்து வந்தது, நாயகத்தின் குறுநகையும், கண்களிலே தோன்றிடும் சிறு ஒளியும், பெரும்பணியும். ஆம்! அத்தகைய வீரரைத்தான் இழந்து விட்டோம். அவர், பலகாலம் நமக்காகப் பாடுபட்டுத் தமது பங்குக்கு மேலாகவே உழைத்து விட்டுத்தான் நம்மைவிட்டுப் பிரிந்திருக்கிறார். இனி அவரிடம் இவ்வளவு பெற்ற நாம், அவருடைய பெயரை மறவாது, குறியை மறவாது, அவர் பணி வழிநின்று உழைப்பதன்றி, மறைந்தவருக்குக் காட்டக்கூடிய மரியாதை வேறென்ன! அறிவுக்கண் இழந்தே நமது வீர இனம், வீழ்ச்சியுற்றது என்பதை உணர்ந்த நாயகம், குலசேகரன்பட்டினத்திலே கல்விச் சாலை நிறுவி அதனைக் கண்ணிமைபோல் காத்து வந்தார். அவருடைய அறிவு இல்லத்தைத் திராவிடர் தமது ஆதரவுக்கு உரிமை பெற்ற குழந்தைகளாகக் கொண்டு, அன்பை அள்ளி ஊட்டி வளர்க்க வேண்டும். நமது நீங்காக்கடமை அது. தூங்கும் உள்ளம் படைத்தோராக இராமல்,துயர்நீக்க அயராது உழைத்த நாயகத்தின் நற்பண்புகளின் சின்னங்களாக நாம் விளங்குவோமாக. நாயகம் நமக்காக வாழ்ந்தார், உழைத்தார். நம்மை நினைத்தவண்ணமே உயிர் நீத்தார் நாமும் உயிர்நீங்குமுன், நாயகம் நல்கிய நன்மொழி வழிநடந்து, நாங்களும் நாயகத்தின் நல்லின மக்களே என்று உவகையுடன் உரிமையுடன் உரைத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு, உரிமைப் போரிலே ஊக்கம் கொண்டு உழைப்போமாக.

நாயகத்தை இழந்த தாயகம் தேம்புகிறது, தேம்பிவண்ணமே, தலைவனை இழந்து தவிக்கும், அம்மைக்கும் தந்தையை இழந்து தவிக்கும் மக்கட்கும், உற்றார் உறவினருக்கும், ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. மிண்டும் தேம்புகிறது!

இந்தி எதிர்ப்பின் சர்வாதிகாரியாக இருந்து 3-6-38ல் கைது செய்யப்பட்டு 16-12-39ல் விடுதலையடைந்த தோழர் சி.டி. நாயகம் அவர்கள், "கட்டாய இந்தியை ரத்து செய்து விட்டனர் என்ற செய்தியை யான் அறிந்ததும், எனக்கேற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. உண்மையிலேயே இது திராவிட மக்களின் ஒப்பற்ற முதல் வெற்றியாகும். என்றாலும் இது ஒரு விசயத்தைக் குறித்தே நாம் பூரண விடுதலையடைந்து விட்டதாகவோ, வெற்றியேற்பட்டதென்றோ மகிழ்ச்சியடைய முடியாது. நமக்கு யாவற்றிலும் முக்கியமாகத் திராவிட நாடு திராவிடருக்கே ஆகவேண்டிய எல்லா முயற்சிகளுக்கும் நமது தலைவர் பெரியார் அவர்களின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டுழைத்து நம்முடைய பரிபூரண வெற்றியைக் கூடிய விரைவில் காணவேண்டும்." என்று சென்னை அரசாங்கத்தார் கட்டாய இந்தியை ரத்து செய்தபொழுது பேசியது குறிப்பிடத்தக்கது.

## நாயகம் நல்கிய நல்மொழிகள்

### கட்சியில் சமநீதி வேண்டும்

"மக்களின் எல்லாத் தொகுதிகளுக்கும் ஒத்த உரிமை அளிக்க வேண்டும் என்ற கட்சிக் கொள்கையைச் சம்பள

வேலைகளிலும் வற்புறுத்துவதில் கட்சித் தலைவர்கள் காட்டும் அக்கரை வேண்டிய அளவுக்கு ஆயிரத்தில் ஒரு பங்குகூட இல்லை. அரசாட்சியில் நேரே சம்பளம் பெறும் வேலையில் மாத்திரமல்ல, அரசாட்சியின் பணஉதவி பெறும், அல்லது அரசாட்சியின் பாதுகாப்பில் தொழில்புரியும், நிலையங்களில் சம்பளம் பெறும் வேலையிலும், மக்களின் ஒவ்வொரு தொகுதியினரும் அத்தொகுதியின் எண்ணிக்கை உரிமைக்குத் தக்கபடி வேலைபெற ஏற்பாடு செய்யவேண்டும். தெளிவாகச் சுருங்கச் சொல்லின், அரசாட்சி நாட்டாண்மை, நகராண்மை, புகைவண்டி அரசாட்சியின் உதவி பெறும் தனி உடைமைப் பள்ளிக்கூடங்கள், வாசகசாலைகள், இவை ஒவ்வொருதுறை யிலுமுள்ள வேலையில் ஒவ்வொரு படிப்பிலும் பார்ப்பனர்கள்; அவர்கள் எண்ணிக்கை உரிமைப்படி நூற்றுக்கு மூவருக்கு மேல் வேலை பெறக்கூடாது. இப்படியே ஒவ்வொரு தொகுதிக்கும். இது புது நியமனத்தில் மாத்திரமல்ல, உள்ள வேலை முழுவதிலும் இந்தத் தோரணை இருக்க வேண்டும். பார்ப்பார்களும் அவர் எண்ணிக்கையின் உரிமைப்படி தோட்டி வேலையிலும் அமைச்சர் வேலையிலும் பங்கு பெற நீதிக்கட்சி உதவி புரியவேண்டும். பிறப்பால் வேற்றுமையுள்ள அளவும் இந்நீதி முறைக்கு இடமிருந்தே தீரும். இக்கொள்கையில் ஐயமுள்ளவர்கள், அதை வற்புறுத்தத் தயங்குபவர்கள், நீதிக்கட்சியில் இருக்கவோ, அதை நடத்தவோ கருதுவது வஞ்சகமாகும். அப்படிப்பட்டவர்கள் அமைச்சர்களாக இருந்தா லும் கட்சிக்கு வஞ்சகர்களேயாவார்கள். அப்படிப்பட்டவர் களும் கட்சியலிருந்து நீக்கப்பட்டாலொழிய கட்சி இளைத்துக் கொண்டேதான் போகும்."

## கடவுள் வழிபாடு

"பாரோஸ் (Barros) என்ற அமெரிக்க கிறிஸ்தவக் கலைஞர் பெயரால் நடைபெற்று வருகிற கிறிஸ்துமத சொற்பொழிவாளர் ஒருவர் நம்நாட்டில் பல இடங்களில் சிலகாலத்துக்குமுன் சொற்பொழிவாற்றினார். சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியின் அண்டர்சன் மண்டபத்தில் ஆறுநாள் தொடர்ந்து நடந்த சொற்பொழிவு ஆறுக்கும் நான் போயிருந்தேன். சொற்பொழி வாற்றியவர் கிறிஸ்தவர். தலைமை பூண்டவர்களில் ஐவர் கிறிஸ்தவர். கேட்டவர்களிற் பெரும்பாலார் கிறிஸ்தவர். சொற்பொழிவின் நோக்கம் கிறிஸ்தவ உண்மையைப் பரப்புவது. சொற்பொழிவுக்குப் பணம் ஈந்தவர் அந்நோக்கம் பூண்ட கிறிஸ்தவர். எனினும் எந்நாளிலாவது சொற்பொழிவின் முதலிலாவது நடுவிலாவது கடைசியிலாவது கிறிஸ்து வழிபாடாவது கடவுள் வழிபாடாவது வணக்கமாவது கிடையாது. இதுவே அறிவுடையோரின் முன்மாதிரியான நடக்கை. கடவுள் பற்றுடைய நம் நாட்டாரும் இதைப் பின்பற்றுபவர்களாக."

## பயிர்த்தொழில் செய்யும் பாட்டாளி.

"விளைநிலங்கள் முழுவதுமாக அவற்றுள் பெரும்பாகமாவது, பயிரிடும் பாட்டாளிகளிடமிருந்தால் நாட்டின் விளைவு பெருகி, உணவுப் பொருள்களின் விலை குறைந்து துரைத்தனக் கைதிகள், பட்டாளங்கள் இவர்களின் உணவுச் செலவும், துரைத்தன ஊழியச் சம்பளச்செலவும் குறைந்து துரைத்தன மொத்தச் செலவும் குறைய இடமாகும்.

பயிரிடுபவர்களிடம் நிலம் இருப்பதால் வரிவரும்படி கூடவும், செலவு குறையவும் வரிப்பளுவைப் பற்றிய கூக்குரலுக்கு விடைசொல்வதில் கழிக்க வேண்டிய நேரத்தை மற்ற துரைத்தன மேம்பாட்டில் கழிப்பதற்கும் இடமாகும். ஆகையால் முதலாளிகளிடமுள்ள நிலங்களைப் பயிர்த் தொழிலாளிகளிடம் போகச் செய்வது துரைத்தனத்தாரின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்."

## ஆலைத் தொழிலாளர்களுக்கு

"பக்கிங்காம் கருநாடக ஆலைத் தொழிலாளர்களிடம் ஒருநாள் பேசிக் கொண்டிருந்தேன். கூட்டம் கலைந்த பொழுது ஒரு தொழிலாளர் என்னிடம் வந்து, "இப்படி நாங்கள் சேமித்துப் பெருக்குகிற தொகையை என்ன செய்ய? என்று கேட்டார். அவர் கேட்டதிலிருந்து அவருடைய மனப்பான்மை தெளிவாயிற்று. தொழிலாளிகளிற் பலர் சம்பாதிப்பதும், செலவு செய்வதுந்தான் தங்கள் கடமை - சேமிப்பதும் பணம் திரட்டுவதும் தங்களுக்குப் புறம்பானது, என்று எண்ணியிருந்தது வெளியாயிற்று. அவர் கேட்ட கேள்விக்கு உடனே, "சேமித்துச் சேர்த்த தொகையிலிருந்து ஆலைப் பங்குகளை விலைக்கு வாங்கி முதலாளியாகுங்கள்" என்று கேட்டவரிடமும், பக்கத்தில் நின்றவரிடமும் விடை சொன்னேன்".

*(திராவிட நாடு - 24-12-44)*

# 20. டஹ்ரோ! டஹ்ரோ!!

வந்தார் மகான்!

தரிசனம் தந்தார்!

பிரார்த்தனை நடத்தினார்!

பஜனை செய்யச் சொன்னார்!!

காணிக்கை பெற்றார்!

கைகூப்பித் தொழுதனர்!

பாதத்தில் வீழ்ந்து வணங்கினர்!

ஆரத்தி எடுத்தனர்!

யானை குதிரை, ஒட்டை முன்வர ஊர்வலம் நடத்தினர்!

இலட்சக்கணக்கிலே மக்கள் காத்துக் கிடந்தனர்.

மாலை அணிவித்தனர்! பரிவட்டம் கட்டினர்!

கோயில் மரியாதைகள் யாவும் செய்தனர்!

சன்னதியிலே ஒருமணிநேரம் நின்று தியானித்தார்!

பக்தியால் பரவசமானார்!

முகத்திலே தேஜஸ் வீசிற்று!

குரலிலே ஓர் மகத்துவம் தொனித்தது!

கரத்தை உயர்த்தினார், கண்டவர் அனைவரும், மந்திர சக்தியால் கட்டுண்டவர் போலாயினர்!

ஊரே திரண்டது அந்த உத்தமரைக் காண!

நாடெங்கும் அவரைத் தரிசித்து மகிழ்ந்தது!

1946 என்ற ஆண்டுக்குறிப்புடன் இணைக்காமல், இந்த வாசகங்களைக் கூறிடக் கேட்டால், யாருக்காக "வைபவம்" என்று யோசிக்க வேண்டிய அவசியமே இராது. யாரோ ஒரு மகான், அவதார புருஷன், சமயாச்சாரியார், அற்புதம் புரிந்தோன், அருள்பெற்றோன், வந்தார், இராமதாசரோ, கபீர்தாசரோ, இராமானுஜரோ, சைதன்யரோ, யாரோ ஒரு மகான் வந்திருப்பார், அவருக்காகவே, இத்தனை வைபவம் நடந்திருக்க வேண்டும் என்று யோசிக்காமலேயே கூறிவிட முடியும். ஏனெனில், சாது சன்யாசிகளை வரவேற்கும் பரம்பரைப் பழக்கமுள்ள "பாரத்வர்ஷ"மல்லவா இது! ஆனால், இவ்வளவும் இந்திய உப கண்டத்தின் விடுதலைப்போருக்கு, வித்தூன்றியவர், அல்லது வழிவகுத்தவர், அல்லது உயிர்நாடி என்று கூறப்படும் காந்தியாருக்கு, நடந்த வைபவங்கள்! இது, தேசீய சக்தியைத் தருவதாகக் காங்கிரஸ் அன்பர்கள் கருதக் கூடும், களிக்கக் கூடும்! ஆனால், உண்மையில், விழாவுக்குப் பிறகு யோசித்தவருக்கு, இதுவரவில் சேர்ப்பதா, செலவுக் கணக்கிலே எழுதுவதா என்ற கவலை வந்தே தீரும் தெளிவுள்ளவர்கள், செலவுக் கணக்கிலேதான் இதனை எழுது வரேயன்றி, வரவுக்கணக்கிலே குறித்திடார். ஏன்?

காந்தியார், காங்கிரசின் தலைமையை ஏற்று, நாட்டு மக்களை விடுதலைப்பாதையில் நடத்திச் செல்ல முன்வந்தவர். பலவகைப் "போராட்டங்களிலே" அவையுக்தமோ யுக்த மில்லையோ என்பது ஒருபுறம் இருப்பினும், பொதுமக்களை வசியம் செய்யக்கூடிய பேராட்டங்களை நடத்தி, மக்களைப் பழக்கினவர். சுயராஜ்ய வேட்கையைக் கிளப்பினவர். அவருடைய தலைமையை ஏற்று, கட்டளையை நிறைவேற்ற,

நாட்டிலே "பல இலட்சம் மக்கள் உள்ளனர்" என்று கூறிவந்த போது, காரிருள் சூழ்ந்திருந்த இந்திய அரசியல் வானிலே புதியதோர் ஒளி, கண்டோம், அதன் பாதையிலே தெளிவு கண்டோம், என்று கூறிடவும், தேசீயப் போருக்குப் புதியதோர் 'சக்தி' கிடைத்தது என்றும் "வரவு" கணக்கு எழுத முடிந்தது. உலகிலே, வேறெந்த நாட்டிலும் நடமாடும், நாயகர்களைக் கண்டு, உமக்குள்ள செல்வாக்கைவிட, எமது தலைவர் காந்தியாருக்குள்ள செல்வாக்கு எவ்வளவு அதிகம் பாரீர்! என்று பெருமிதத்துடன் கூற முடிந்தது. இத்தாலியை விடுவித்த காரிபால்டி போல, பிரான்சை உயர்த்தப் பாடுபட்ட நெப்போலியன்போல், அமெரிக்காவின் தலைசிறந்த தலைவனான ஆபிரகாம் லிங்கன்போல், எங்கள் நாட்டிலும் ஒரு காந்தியார் இருக்கிறார், அவருக்குள்ள செல்வாக்கு அமோகம்! என்று கூற முடிந்தது. இம்முறையிலே, இது நாட்டுப் பேரேட்டிலே வரவுக்கணக்கிலே குறிக்கப்பட்ட பெரு நிதியாயிற்று. ஆனால், இன்று? வரவு இலாப வகையில் ஒரு இலட்சம், பைத்து இன்கம்டாக்சும், பிறவரிகளும், கண்ட்ரோல் ரூலுக்கு விரோதமாக நடந்ததற்காகக் கட்டிய அபராதமும் சேர்த்து எண்பதாயிரம்! என்று எழுதும், வியாபாரியின் கணக்குப்போல, மக்களின் சக்தியை விடுதலைப் போருக்குப் பூட்டும், செல்வாக்குப் படைத்த காந்தியார், தேசீயப் பேரேட்டில் வரவுக் கணக்கில் குறிக்கப்பட்டு, இன்று செலவுக் கணக்கிலே எழுதப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதாவது அரசியலுக்கு, அல்லது விடுதலைப் போராட்டத்துக்கு ஏற்றவர் என்றிருந்த தலைவரை, மகாத்மா என்று துதித்து, பஜனைகள் நடத்துவோராக்கி, அரசியல் தலைவர்கள், விடுதலைப்போர் வீரர்கள் பட்டியிலிருந்து அவர் பெயரை,

மதத் தலைவர்கள், சமயாச்சாரியார்கள், மகாத்மாக்கள் பட்டிக்கு மாற்றி, "பைத்து" எழுதி விட்டனர். இது மறக்க முடியாத சம்பவம்! நாட்டு விடுதலைப் போரை நடத்துவதற்கு மற்ற இடங்களிலே சாது சன்யாசிகள் தங்கள் காவி கமண்டலத்தையும் துறந்து, போரில் கலந்து கொண்டனர் என்று படித்திருக்கிறோம். இங்கோ நாட்டு விடுதலைப்போர் நடத்த முன்வந்தவரை, வைதிகம் - தனக்கு ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்கிக் கொள்ள, தன்னிடம் இழுத்துக் கொண்டது.

அரசகுமாரியை மணம் செய்து கொள்ளக் கிளம்பிய இளவரசன், அவளிடமிருந்து 'ஓலை' கொண்டு வந்த தாதியிடம் மையல்கொண்டு, "ஓலையைப் பிறகு பார்ப்போம், ஒய்யாரி ஒரு முத்தம் தாராய்!" என்று கொஞ்ச, அரசிளங்குமரியால் காதலிக்கப்பட்ட ஆணழகனை ஆரத்தழுவும் பாக்கியம் தனக்குக்கிட்டியதால், இளவரசனின் இன்ப அணைப்புக் கிடைத்ததும் தானுமோர் இளவரசியாகிவிட முடியும் என்ற நினைப்பிலே, வெள்ளாட்டி தன்னையே விருந்தாக்கிய கதை போலாயிற்று, தேசீயம், தேடிப்பெற்ற காந்தியாரை, வைதிகம், தன்னிடம் இழுத்தக் கொண்ட கதையும்.

காந்தியார் "மகாத்மா" ஆகாமல், 'தரிசனம்', 'பிரார்த்தனை', 'பஜனை', 'பரவசம்', 'கோயில் மரியாதை' என்பன போன்ற அணிகலன்களை அவருக்குரிய அர்ச்சனை யாக்க வேண்டிய அவசியம் ஏற்படாமல், நாட்டு விடுதலையின் தலைவர், அவருடன் பேதம் கொண்டவேறு கட்சியினரே கிடையாது, யாரேனும் பேத உணர்ச்சி கொண்டாலும் அவர்

பேசினால் அவர்கள் தமது சந்தேகம் தெளியப் பெறுவர், அனைவரையும் ஒரே கொடியின் கீழ் கொண்டு வந்துவிட்டார், ஐக்கிய முன்னணி ஏற்படுத்தி விட்டார், என்ற அடை மொழிகளைத் தாங்கும் விதத்திலே அவருடைய நிலைமை இருக்குமானால், விடுதலைப் போருக்கு எவ்வளவு மகத்தான இலாபம் என்பதைச் சிந்திக்க வேண்டுகிறோம், பஜனையில் கலந்திருந்த தோழர்களை. இப்போது, என்ன நிலைமை தெரியுமோ? நாட்டு மக்களுக்குச் சுதந்திர தாகத்தை எழச் செய்தவர், விடுதலைப் படையின் ஒப்பற்ற தலைவர் என்ற பட்டத்தை, வைதிகம் தட்டிப் பறித்துக் கொண்டது, உங்கள் கண்முன்பாகவே உமது உள்ளம், நடந்த சூதை உணரு முன்பு! நாட்டு விடுதலைப் போர்ப்பட்டியிலே பொறித்திருந்த பெயரை, வைதிகம், தனது பட்டியிலே பெயர்த்தெடுத்து வைத்துக் கொண்டது. மகான், மகாத்மா, தேஜஸ், பூஜை, பரவசம், பஜனை, தாளம், பூர்ணகும்பம், தரிசனம், யக்ஞம், காணிக்கை, பாதசேவை போன்ற பதங்கள் எந்தச் சந்தர்ப்பத்தில், யாருக்கு, உபயோகிக்கப்படுவது முறை, வழக்கம்? விடுதலை வீரர்கள் வரலாற்றிலா? அல்லது சமயக் குரவர்கள் பற்றிய கதைகளிலா? சமயக் குரவர்கள் கதையிலேதான் இச்சொற்கள் வரும், இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறும். அதேவிதமான பெருமை இவருக்கு இருப்பது எண்ணி இன்புறத் தக்கதன்றோ எனில், கூறுவோம் கேண்மின். இங்கு நாம் தேடித் தவித்துக் கொண்டிருந்தது, இந்த நாட்டை மீட்டிடும் போர் நடத்தும் தலைவரையே தவிர, சமயக் குரவரையல்லவே! "நாதன் அருளால்" நமக்குத்தான் அந்தத்துறையிலே பஞ்சமே ஏற்பட்டதில்லையே! எவ்வளவோ மகாத்மாக்களை, மகான்களை, மகரிஷிகளை நாடுதாங்கி இருக்கிறதே, ஆகவே

இப்போது ஒரு புதுமகாத்மா வந்தது, வியப்புக்கு உரியதோ, வேண்டி வரவேற்கத் தக்கதோ அல்லவே. பாரதமாதா, மலடல்லவே. இப்படிப்பட்ட மகாத்மாக்களை அம்மை, அடிக்கடி ஈன்று, பழக்கமில்லாதவர்களாயிற்றே, நாம், மாதாவின் மணிவயிற்றிலே ஓர் மாவீரர் உதித்தார், அவர் மக்களை ஒன்று திரட்டினார், விடுதலைப் போர் நடத்தினார், என்று கேட்கத் துடிக்கும் நேரத்தில், இவரே அத்தகைய மாவீரர் என்று எந்தக் காந்தியாரைச் சுட்டிக் காட்டி வந்தீர்களோ, அவரையே, பிறகு மகாத்மா என்றும், கண்கண்ட தெய்வம் என்றும் கூறி, தேசீயப் பேரேட்டிலே செலவுக் கணக்குக் காட்டிவிட்டீரே, நஷ்டம் நாட்டுக்கு விடுதலை கோருபவருக்கும், இலாபம் வைதிகத்துக்கும் என்பதை உணரவில்லையே!

அவரை, "வைதிகம்" தன்னிடம் இழுத்துக் கொண்டதை யும், அதைக் காங்கிரசார் அனுமதித்தது மட்டுமல்ல, அதற்காக ஆனந்தப்படுவதையும், பல்வேறு நாடுகளும், வரவேற்கின்றன; ஏனெனில், எவ்வளவுக்கெவ்வளவு "மகத்துவம்" ஏறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்பது தந்திரசாலிகளான அவர்களின் எண்ணம்.

"காந்தியார் கேட்கிற சுயராஜ்யத்தை ஏன் தரக்கூடாது. அவருக்குள்ள அபாரமான செல்வாக்குத் தெரியுமல்லவா? விழுப்புரத்திலே விடியுமுன் கூட்டிய கூட்டம் பதினைந்து ஆயிரம். மதுரையில் மாபெரும் கூட்டம்! அவருடைய பிரார்த்தனைக் கூட்டத்தைக் கண்டால் போதும், தலைகள் நிரம்பிய சமுத்திரம்" என்று கூறிமுடித்ததும், வெளிநாட்டவர், "உண்மை! உண்மை! அவருக்கு அபாரமான செல்வாக்குத்தான்;

அவர் ஒரு மகாத்மா! மகாத்மாக்களை மக்கள் அவ்விதம்தானே பூஜிப்பர், அதிலும் இந்தியரோ, மதவிஷயத்திலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள், காந்தியாரை மகாத்மா வாகக் கொண்டாடி, அவருடைய பஜனையிலே சொக்கிப் போவதை நாங்களும் பார்த்திருக்கிறோம். படமும் பிடித்திருக் கிறோம். ஆனால், மகாத்மாக்கள், கூறும் எவ்வளவோ விஷயங்களை, பக்தர்களாலேயே நடத்த முடியாமல் போகிறதே, சுயராஜ்ய விஷயம் மட்டுந்தானா? மகாத்மா விஷயத்திலே மக்கள் அனைவரும் மதிப்புத் தருகிறார்கள், ஆனால் அரசியல் தகராறுகள் உள்ளனவே, அதனை மகாத்மாக்களைக் கொண்டு தீர்க்க முடியாதே. அவர்கள் ஆத்மார்த்தத்துக்கு அல்லவா வழி செய்பவர்கள். அவர்களுடைய அரசியல் அபிப்பிராயங்கள் பெரிதும் அனுபவ சாத்யமற்றதாகவே இருக்கும்" என்று கூறி முடிப்பர். எந்த வகையிலே பார்த்தாலும், வரவு, செலவானதுதான் காணமுடியும்.

வைதிகம், ஏன் களிக்கிறது? இந்த இருபதாம் நூற்றாண்டிலே, எங்கு பார்த்தாலும், பழைமையை முறியடிக்கும் போர்க்குணம் படைத்த தலைவர்களே தோன்றலாயினர். எத்திக்கு நோக்கினாலும் தங்கள் தர்பாருக்குச் சாவுமணி அடிக்கப்படுவதையே கேட்டனர், கலங்கினர். பொது அறிவு, பகுத்தறிவுத் துறைக்கே மக்களை இழுப்பது கண்டனர், புலம்பினர். வேதம் ஒலித்த இடத்திலே ரேடியோ சத்தம், கோயில் மிகுந்த இடத்திலே, பார்க்குகளும், ஆஸ்ரமம் இருந்த இடங்களிலே ஆஸ்பத்திரிகளும், குருகுலங்கள் இருந்த இடங்களிலே, விளையாட்டு மைதானங்களும், தோன்றக்கண்டு,

வைதிகர்கள் தமது வாழ்வு சுருங்குவது தெரிந்து சோகித்தனர். சதி நிறுத்தப்பட்டது, சாரதா சட்டம் பிறந்தது, பெண்களும் ஆண்களும் சமம் என்று பேசப்பட்டது, வைதிகம், சரி, நமது காலம் முடிந்துவிட்டது என்று தீர்மானித்துத் தேம்பிடலாயிற்று. அந்த நேரத்திலே வந்த காந்தியார், வைதிகத்துக்கு அபயம் அளித்தார்! அபயம் அளிக்கச் சென்றவரை, வைதிகம் ஆட் கொண்டு விட்டது. வைதிகத்தை திருத்துவேன் என்று கூறிச் சென்றார் வைதிகமோ அவரைத் தனது திருக்கூட்டத்திலே சேர்த்துக் கொண்டு, திலகமிட்டது. திருப்திக்குரிய காரியமா இது என்று, தேசியத் தோழர்கள், திருவிழா நினைவு குறைந்த பிறகேனும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம் - அதிலும் குறிப்பாக வாலிபர்கள் - சிறப்பாக மாணவர்கள் சிந்திக்க வேண்டும்.

எம்மதமும் ஒன்றே
அரியும் அரனும் ஒன்றே
சத்தியமே ஜெயிக்கும்
ஜாதிமதகுல பேதம் பாராதே
பக்தியோடு பரமனைப் பாடு
பகவான் உன் உள்ளத்திலே உறைகிறார்
அவர் எங்கும் எதிலும் இருக்கிறார்
அவரை மனமாரப் பஜியுங்கள்
களங்கமற்ற மனமுள்ளவனே கடவுளைக் காண்பான்
இருதய ஆலயத்திலேயே இறைவன் இருப்பான்

இவையும், இவை போன்றவையும், இன்று நேற்று ஏற்பட்ட உபதேசங்களா? இவைகளைக் கூறாத மகான்

உண்டா? ஜாதி மதம் உயர்வு தாழ்வு எனும் தீது சமரச ஞான மகான்களுக்கு ஏது? என்பது புதுமொழியா? அல்ல! இங்கு தோன்றிய மகான்கள் சொல்லிப்போன உபதேச உரைகள், இன்றும், தாளச்சத்தம் மேளச் சத்தத்துடன், பஜனைக் கூடங் களிலும் பாடப்படும் பதிகங்கள். பதிகம்பாடி, பஜனைக்கூடம் அமைத்த நாம், பதிகங்களிலே பதிந்திருக்கும் உரையின் வழி ஊரைத் திருப்பினோமா? திருப்பி இருந்தால், இங்கு 'உபதேசியார்கள் தொகை குறைந்திருக்குமே! உபதேசங்களை உரத்த குரலுக்கு உறுதுணையாக்கிக் கொண்ட இங்கு, காந்தியார் உபதேசித்துக் காணப் போவது என்ன? 'என்ன வேண்டு மானாலும் சொல்லுங்க சார்! அவர் எதிரே போனதும் உடம்பே சிலிர்த்துப் போகிறது' என்று பேசுபவர்களையே கேட்கிறோம். இதுபோல எத்தனையோ முறை சிலித்திருக்கிறதே! ஊரிலே சமரசமா மலர்ந்தது! இல்லையே! ஆக, அவர் கூறினதும் புதிதல்ல, உமக்கோ, இத்தகைய உபதேசம் கேட்பதும் பழக்கமற்றதல்ல, இனி இவர் உரைப்படி, என்ன நடக்கும் என்று எதிர்பார்க்கிறீர் என்று பூஜித்தவர்களைக் கேட்கிறோம். "தீண்டாமையே போகவேண்டும்" என்று கூறுகிறாரே, அது புதிதல்லவா, புரட்சிகரமல்லவா, சீர்திருத்தம் அல்லவா அது என்று கேட்பர்; அவ்விதமும் சொல்லமுடியாதே! ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும் அவர்கள் அரங்கனைப் பூஜிப்பவரானால், அவரே நாம் வணங்கும் தெய்வமாமே!! என்று ஆழ்வார்களும் நாயன்மார்களும் கூறினது பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அல்லவா! அங்ஙனம் கூறுவதெல்லாம், கூறுபவரின் தாராள மனதையும், சமரச ஞானத்தையும், பரிபக்குவத்தையும், காட்ட உதவிற்றேயன்றித் தீண்டாமையைப் போக்கவில்லையே!

இவருடைய தீண்டாமை ஒழிப்பு வேறு எவ்விதமான விளைவு உண்டாக்கும். அதிலேயும் ஆழ்வார்கள் நாயன்மார்களாவது அறநெறி, அன்பு என்ற காரணங்களை மட்டும் காட்டித் தீண்டாதவர்களை ஆதரிக்க வேண்டுமென்று மட்டுமே கூறமுடிந்தது. காந்தியாருக்குத் தீண்டாமை போக வேண்டும் என்று எடுத்துக்காட்டுவதற்குக் காரணங்கள் அவ்விரண்டுடன், நன்றாக விளங்கக்கூடிய வைதிகர்களும் கணக்குப் போட்டுப் பார்த்துத் தெரிந்துகொள்ளக்கூடிய, காரணம்கூற வழி இருக்கிறதே! புள்ளி விவரமல்லவா, கோயில் பூட்டுகளை இன்று உடைக்கின்றன. 40 கோடி ஜனத்தொகை - அதிலே 10 கோடி முஸ்லீம். பாரத்வர்ஷத்துப் பழையநாள் இந்துக்களே அதிலே பெரும்பாலோர்! இன்று அவர்களெல்லாம் இஸ்லாமாகாது இருந்தால், வைதிகத்தின் வருமானம் குறைய வழி உண்டா? திவசம் - திதி நடத்தாது, திருமணத்துக்கு தட்சணை தராது, கும்பாபிஷேகத்துக்குப் பொருள் தராது, பத்துக்கோடி பேர் பகிஷ்கரித்து விட்டனர். அவர்கள் இந்துக்களாக இருந்தவர்கள், நீங்கள் தீண்டாமையை விடாத காரணத்தால், வேறு மார்க்கம் போயினர். அதுபோலவே பல இலட்சம் கிருஸ்தவர்களாயினர்; இப்படிப் படிப்படியாக வருமானம் குறைந்துவிட்டது. ஆறு கோடிக்கு மேல் ஆதித்திராவிடர்கள் உள்ளனர். அவர்களைத் தீண்டாதார் என்று இன்னமும் விலக்கியே வைத்திருந்தால், அவர்கள் மதம் மாறக்கூடும்! இந்து மார்க்கம் வேண்டாம் என்று கூறிவிட முடியும். ஆக, 10 கோடி முஸ்லீம், ஆறுகோடி ஆதித்திராவிடர், திராவிடர் 4 கோடி, இந்துக்கள் அல்ல என்று தீர்மானிக்கின்றனர். இப்படி இருபதுகோடிபேர் வெளியேறி விட்டால், உன்கதி என்ன ஆகும், என்று இந்துவை நோக்கிப்

புள்ளிவிவரத்தோடு கேட்கிறார் காந்தியார்? இந்த 'வசதி' அந்தநாள் ஆழ்வார்களுக்கு இருந்ததில்லை. புள்ளி விவரம் காட்டி, வந்துகொண்டிருக்கும் ஆபத்தையும் சுட்டிக் காட்டி, காந்தியார் தீண்டாமை போகவேண்டும் என்று கூறுவது, இந்துமத ரட்சகரின் செயலாகுமேயொழியப் புதுமை, புரட்சி என்று எங்ஙனம் ஆகமுடியும்? உபதேசம் ஒருநாளும் புரட்சி மார்க்கமாகாது. புரட்சி, தீண்டாமையைக் கைவிடுங்கள் என்று 'ஜாதி இந்துவுக்கு உபதேசிக்கும் முறையிலே இருந்திடாது. புரட்சியாக இருக்கவேண்டுமானால், அந்தப் பேச்சு, 'தீண்டாதார் என்ற நிலையை ஏற்றுக் கொள்ளாதீர்கள்! உங்கள் உரிமையைக் கேட்டுப் பெறுங்கள். தரமறுத்தால் தலை சாய்க்காதீர்கள்!' எனத் தீண்டாதார் என்று தீயரால் அழைக்கப்படும் மக்களிடம் கூறப்படுவதாக இருக்க வேண்டும். காந்தியாரோ, ஜாதி இந்துக்களிடம், 'இந்துமதம் க்ஷீணிக்கிறது, அதைக் காப்பாற்றத் தீண்டாமையை நீக்குங்கள்' என்று உபதேசிக்கிறார், அதுபோலவே, தீண்டாதாரே! நீங்கள் உங்கள் கடமைகளை மறவாதீர்கள். சுத்தமாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்' என்று அவர்களுக்கு அறிவுரை கூறுகிறார். புரட்சிக்காரர், 'தீண்டாதாரே நீங்கள் உலுத்தருக்காக உழைத்து உருமாறி விட்டீர்கள். நீங்கள் அசுத்தத்திலே இருப்பதற்குக் காரணம் உங்களை இந்த நிலைமையிலே வைத்திருக்கிற கொடுமைதான். உங்களை அசுத்தத்தில் புரளும்படி அவர்களே, பண்டை நாளிலே இருந்து ஏற்பாடு செய்தனர். உங்களுக்குத் தரப் பட்டுள்ள வேலையும், அதற்கு நீங்கள் பெறும் கூலியும், உங்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள சேரியும், நாகரிகத்தையோ, நல்ல வாழ்க்கையையோ, சுத்தத்தையோ, சுகத்தையோ, நீங்கள் பெறமுடியாதபடி செய்வதாக இருக்கின்றன. உங்களை இந்தக்

கதிக்கு ஆளாக்கிவிட்டு, நீங்கள், அசுத்தமாக இருக்கிறீர்கள் என்று உங்களையே இடித்துரைக்கின்றனர். இது புண்ணில்வேல்! வேதனைக் கண்டு, வாடி, நாடி இழக்காதீர்கள். விழித்தெழுங்கள். உங்கள் உரிமைகளைக் கேளுங்கள் – பெறுங்கள்!" என்று பேசியிருப்பார். அவ்விதம் பேசினவர்கள் உண்டு! உள்ளனர்! அவர்களெல்லாம் "மாபாவிகள்" என்று பாமரராலும் வைதிகரா லும் கண்டிக்கப்படுபவர்கள். மகாத்மா வேண்டுமானால் ஒரு மண்டலம் இந்தப் புரட்சி மார்க்கத்திலே இறங்கிப் பார்க்கட்டும், தாளச் சத்தமும் மேளச் சத்தமும், காற்றில் வீசப்படும் வளையல் சத்தமும், எவ்வளவு குறைந்து விடுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் 'மகாத்மா' பட்டம் கெட்டுவிடுமே தவிர, கொடுமைக்கு ஆளான மக்களின் நிலை உயரும்! இன்று காந்தியார், தமக்குக் கிடைத்துள்ள செல்வாக்கைச் சமுகத்தின் அடிப்படையைத் திருத்தி அமைக்கத் திருப்பி விட்டால், துதிப்பவர் தூற்றுவர். ஆனால் நாடு நலிவது நின்று, நாடு உயரும்! வைதிகம், அவரை அந்தத்துறைக்குச் செல்லவிடாது ஆரத்தழுவிக் கொண்டது; அவரும் ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்துவிட்டார். நாட்டுக்கு ஒருதலைவர் என்ற நிலைபோய், வைதிகத்துக்கு மற்றுமோர் மகாத்மா கிடைத்தார் என்ற நிலை ஏற்பட்டது. இலாபமா? நஷ்டமா? யாருக்கு இலாபம்? யாருக்கு நஷ்டம்? சிந்தித்துக் கூறுங்கள் காங்கிரஸ் தமிழர்களே! விடுதலை விரும்பிகளே!

காந்தியாரின் பெருமையைப் பாரீர்! ஜனசமுத்திரம் தெரிவதைக் காணீர்! அவதார புருஷனைக் காணீர்! அவர் அடி தொழுதிட வாரீர்! என்று அவசர அவசரமாக அர்ச்சிக்கும் அன்பர்களுக்கு ஒன்று கூறுகிறோம். காந்தியாருக்குச் 'சேவை'

செய்து வைத்த மதுரைக்கோயில் பட்டர், மளமளவென்று அர்ச்சித்தாராம், விளங்கிக் கொள்ள முடியாதபடி. அப்போது காந்தியார் சொன்னாராம், நிறுத்தி, நிதானமாக, புரியும்படி, மந்திரத்தைச் சொல் என்று. டஹ்ரோ! டஹரோ! என்றாராம் இந்தியில். அதனையேதான் நாம், காந்தியார் சேவையிலே ஈடுபட்டு, அவர் புகழ்பாடி, அர்ச்சனை நடத்தும் அன்பர்களுக்கும் கூறுகிறோம், கொஞ்சம் நிதானமாகப் புரியும்படி நடத்துங்கள் உங்கள் அர்ச்சனையை! டஹ்ரோ! டஹ்ரோ!! இன்று காந்தியார், மகாத்மா ஆனதன் பலன் என்ன? இலாபம் யாருக்கு? நஷ்டம் யாருக்கு? அவசர அர்ச்சனையிலே சூக்ஷமத்தை மறந்துவிடாமல், இதனைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்; என்று கூறுகிறோம்.

*(திராவிட நாடு - 10-2-46)*

# 21. சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்

சிந்தனைச் சிற்பி தோழர் மா. சிங்காரவேலர் இறந்துவிட்டார்; இலட்சியமே மூச்சாகக் கொண்டிருந்த வீரர் மறைந்துவிட்டார். இந்திய உபகண்டத்தின் முதல் பொது உடைமைவாதி காலமானார், மூன்றாவது சர்வதேச அபேதவாத அங்கத்தினர் மூவர், இந்தியாவில், அவர்களில் ஒருவர் இவர். அப்படி ஒருவர் இருந்தாரா, என்று கேட்கும், "கதர் ஜிப்பாக்களும்", "கார்ல்மார்க்ஸ் படிப்போரும்" ஏராளம். சோவியத்திலே பொதுஉடைமை ஆட்சி ஸ்திரமாவதற்கு முன்னாலேயே, இங்கு சென்னையிலே, கடலோரத்தில்,

மயிலையில் ஒருபுரட்சிவீரர் உலவிக்கொண்டிருந்தார். உலகிலே காணப்படும் கொடுமைகளைக்கண்டு, மனதிலே கோபம் அலை அலையாகக் , கிளம்ப, அதனால் தூண்டப்பட்டு, யாரும் அதுவரையில் கேட்டறியாத கொள்கையை, பொதுஉடைமைத் தத்துவத்தைப் புரட்சிக் கனலுடன் கலந்து அளித்து வந்தவரே, தோழர் மா. சிங்காரவேலர் என்பதை, அவர்கள் அறியார்கள். தேசியத் தொழிலாளர் இயக்கங்களிலே அவர் பிரபலமாக இருந்த சில பல வருஷங்களிலேகூட, அவருக்கு உரிய ஸ்தானம் அவருக்கு அளிக்கப்படவில்லை, அவருடைய அறிவும் ஆற்றலும் அளவிடப்படவில்லை, வெட்டுக்கிளிகளும், பச்சோந்திகளும் புகழப்பட்ட நேரத்தில், புரட்சிப் புலியை மக்கள் மறந்தனர் - மறக்கும்படிச் செய்யப் பட்டனர். அவருடைய திறமை அறிவு, ஆற்றல், தியாக புத்தி ஆகியவைகளை அளவாகக் கொண்டு, மதிப்பிட வேண்டுமானால், தோழர் மா. சிங்காரவேலருக்கு, லெனின், டிராட்ஸ்கி, சக்லத்வாலா, போன்றவர்களின் வரிசையிலே இடந்தரவேண்டும். ஆனால் கந்தபுராணம் காந்திபுராணம் படிக்கும் வகையினரையும் போற்றிப் புகழ்ந்த மக்கள், இந்த ஒப்பற்ற புரட்சிவீரனை, சாமான்யமாகக் கருதினர். நாளாவட்டத்திலே சில இலட்சியவாதிகளுக்குத் தவிர மற்றவர்களுக்கு அவருடைய பெயரும் மறந்து விட்டது என்று கூறிவிடலாம். தோழர் மா. சிங்காரவேலரே, ஏகாதிபத்யத் தால் தாக்கப்பட்ட முதல்வீரர் - ஆனால் முப்புரி இல்லாத காரணத்தால், மங்கினார். அவருடைய பெருமைப்பாக்கள், படத்திறப்பு விழாக்கள், இல்லை! இராது!! அவர், மா. சிங்காரவேலுச் செட்டியார், பரதவர் குலம் (மீன் பிடிப்போர்) நெய்தல் நிலநாயகன், சிங்காரவேல் சர்மாவாக இருந்திருந்தால்,

அவருடைய சிலையை மாஸ்கோவிலே நிருவ வேண்டும் என்று மயிலை கூறும்.

மா. சிங்காரவேலர், மறைந்தார் என்ற போதிலும், எதிர் பாராத திடுக்கிடக்கூடிய விதத்திலே நேரிட்ட மரணமல்ல. மரணத்தின்போது அவர் தம்முடைய உழைப்பு வீண் போயிற்றோ என்ற சந்தேகம் கொண்டு சஞ்சலமடைந்திருக்க வும் மாட்டார். ஏனெனில் 11-2-46ல் அவர் இறக்கும்பொழுது அவருக்கு வயது 84. அவருடைய இரண்டு அடிப்படை இலட்சியங்களாகிய சுயமரியாதை, சமதர்மம் என்பவை, ஓங்கி வளர்ந்திருப்பதைக் கண்டபிறகே அவரின் கண்கள் மூடின. சுயமரியாதையும் சமதர்மமும் வேறு வேறு கட்சிகளாக இருப்பானேன், அது முறையல்லவே, படைபலமே சிதறுமோ என்ற கவலை மட்டும் அவருக்கு இருந்தது என்று கூறலாம். அதுவன்றி, அவருடைய பெயர் மங்கியதுபற்றி நாம் மனம் வருந்துகிறோமேயன்றி அவர் அதுபற்றி எண்ணியிருப்பார் என்றோ ஏங்கி இருப்பார் என்றோ எண்ணவில்லை. அந்த அஞ்சாநெஞ்சனுக்கு 'பூர்ஷுவா' உலகில் மதிப்பு கிடைக்காது; கிடைக்கவில்லை - கிடைக்காததே அவருடைய மாத்துக் குறையவே இல்லை என்பதற்குச் சிறந்த அடையாளமுங்கூட.

இந்திய உபகண்டம், ஏகாதிபத்ய இரும்புப் பிடியிலே சிக்கியது கண்டு, எழுச்சி பெற்று எதிர்த்த முன்னணி வீரர்களில், மா. சிங்காரவேலர், முதல் வீரர்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரிடையாகக் கிளம்பிய சிப்பாய்க் கலகம் 1857ல் நடந்தது. சிறுவன் சிங்காரவேலனுக்கு, அந்தக் கலக காலத்துச் சம்பவங்களையே, வீட்டாரும்

ஊராரும் கூறியிருப்பார்கள், பொழுது போக்குக்கோ, மிரட்டவோ, எக்காரணத்துக்காகவோ! கம்பெனிக்காரனைச் சிப்பாய்கள் எதிர்த்தனர், எதிர்த்தவர்களை வெள்ளைக்காரர் சுட்டனர் என்று சிறுவயதிலே அவர் கேள்விப்பட்டிருப்பார். நமது காலத்தைப்போல, கவர்னர் ஜெனரலின் கனிவு - கோகலேயின் தெளிவு - முதல் சீர்திருத்தத்தின் அழகு - என்பன போன்றவைகளை அல்ல, அவர் சிறுவராக இருக்கும் போது கேட்டது. நாம், அடிமைத்தனத்திலே நாடு அதிகமாக ஊறிப்போன காலத்திலே பிறந்தோம்; அவர் ஆங்கிலேய ஆட்சியை ஆயுத பலத்தால் தாக்கிய சிப்பாய்க்கலகம், சிறுவர்களுக்கான சிறுகதையாகப் பேசப்பட்ட காலத்திலே பிறந்தவர். 1862-ல் சிப்பாய்க் கலகம் அடங்கி ஐந்து ஆண்டுகள் ஆனபிறகு அவர் பிறந்தார். புயல் அடித்து ஓய்ந்தது, ஆனால் சாய்ந்துபோன மரங்களிலே சில, பாதையிலே கிடந்தன! அப்படிப்பட்ட சமயத்திலே பிறந்தவர், சிங்காரவேலர், இறுதிவரையில் அவரைப் பொறுத்தவரையில் 1857தான், ஏகாதிபத்யம், முதலாளித்வம், வர்ணாஸ்ரமம், மௌடீகம், இவைகளைத் தாக்கும் பேச்சுத்தான் அவருக்கு, வீட்டில்! பேச்சிலே மட்டுமல்ல, பார்வையே அப்படித்தான்.

மிதவாத மணிகள் மயிலையில் பல! தேசியக் கனவான்களும் உண்டு. சீமான்கள் உண்டு! சிங்காரவேலர், வழுக்கியிருந்தால், இதிலே எதில் வேண்டுமானாலும் தங்கி விட்டிருக்கலாம். சட்டம் படித்தார், வக்கீல் ஆனார், ஆனால் எதற்கு? அன்னிய ஆட்சிக்காரன் சட்டம் தொகுப்பது, அதை நாம் படித்து வாதாடுவது, என்பது அடிமைத்தனத்தின் சின்னம், என்று கூறி, அந்த வக்கீல் அங்கியை நெருப்பிட்டுக்

கொளுத்தினார்! கோர்ட்டை ஏற மறுத்து, மக்கள் மன்றத்திலே, வழக்கை எடுத்துரைத்தார் திறமையுடன். அவருக்கு ஜெர்மன், பிரஞ்சு, ரஷ்ய மொழிகளும் தெரியும். இந்தியாவிலேயே, விஞ்ஞான அறிவுக்கலை சம்பந்தமாகவும், பொது உடைமை சம்பந்தமாகவும் அதிகம் படித்துப் புரிந்து கொண்டு, அந்த அறிவைக் கொண்டு மற்றவர்களுக்கும் அவை புரியும்படியாகச் செய்த பெருமைக்குரிய இடத்தில் முன் வரிசையில் முதலிடம் அவருக்கே அளித்தாக வேண்டும். ஓயாத படிப்பு! உள்ளத்திலே வேதனை தரும் சகல பிரச்சனைகளுக்கும், அவர் காரண காரியம் தேடுவதிலேயே மிகக் கவலை எடுத்துக் கொண்டு உழைத்தார். நுனிப்புல் மேய்வது அவருக்குப் பிடிக்காது. பிரச்சனைகளைப் பூசி மெழுகினால் ஆத்திரப்படுவார்! வீண் ஆரவாரத்தால் மக்களை மயக்கும் இயக்கங்களைக் கண்டிப் பார். கடலோரத்திலே, கடைசியில் தானொருவனே உலாவுவ தானாலும், கொள்கையின் தோழமை ஒன்று இருந்தால்போதும் என்று கருதினார். ஏறக்குறைய, கடைசி காலத்தில் அவர் தனி மனிதர் போலவே நின்றார். அந்த முதியவர், எவ்வளவு உரமான, புரட்சிகரமான கருத்துக்களைத் தாங்கிக் கொண்டு இருந்தார் என்பதை எண்ணும்போதே ஆச்சரியம் உண்டாகும்.

"பேய், பூதம், பிசாசு உண்டா?" என்று கேட்டுவிட வேண்டியதுதான், பேய்பூதம் பிசாசு என்ற சொல் எப்போது உபயோகத்திலே கொண்டு வரப்பட்டது என்பதிலிருந்து தொடங்கி, இன்று, பிறன் உழைப்பைக் கொண்டு வாழ்பவனே உண்மையான பேய், என்கிறவரையிலே, கூறிவிடுவார்; சந்தேகங்களைத் தெளியவைக்கும் முறையிலே, அவருடைய மனம், ஒரு சிறந்த அகராதியாக இருந்தது. அப்படிப்

பட்டவரின் மறைவு, சர்வ சாதாரணச் செய்தியாகிவிட்டது. இந்த நாட்டிலே எண்ணற்ற பத்திரிகைகள் இருக்கின்றன, அவற்றிலெல்லாம் இலட்சியவாதிகள் பேனா பிடித்துக் கொண்டு இருக்கின்றனராம்!

அவர் வீரர், தீரர், என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். கிளர்ச்சிகள் அவருக்கு நிலாச்சோறு. சிறைவாசம் அவருக்குச் சகஜம். அவர் எதிர்ப்புக்கோ, ஏகாதிபத்தியத்தின் தாக்குதலுக்கோ அஞ்சினவருமல்ல. கும்பலோடு சேர்ந்து சிறைக்கூண்டு போனவருமல்ல. தேசியத்தின் பேரால் முதன் முதல் கைதுசெய்யப்பட்ட பெருமை லோகமான்ய திலகருக்கு என்பார்கள். ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், திலகரைத் தீண்டுவதற்கு முன்பே, தோழர் மா. சிங்காரவேலுவைத் தாக்கி விட்டது. தேசிய ஆரவாரத்தினால் இந்த உண்மை மறைந்து பட்டது. கான்பூரில் பொது உடைமைக்காரர்கள் என்ற குற்றத்துக்காக, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், தோழர் சிங்கார வேலுவையும், மௌலானா அசரத் மோகானியையுந்தான் முதன் முதல் கைது செய்தது.

“தொழிலாளர்கள்” என்று ஒரு பிரிவினர் உள்ளனர் என்ற உண்மையையே, நாடு அறியும்படி முதலில் எடுத்துக் கூறிய பெருமையும், மா. சிங்காரவேலுக்கு உடையதாகும். இங்கிலாந்திலே தொழிலாளர் கிளர்ச்சி ஆரம்பமானபோதே, இங்கு இவர், அத்தகைய கிளர்ச்சியைத் துவக்கினார்.

கூனன்போல் காணப்பட்ட இந்தியாவின் நிலையைக் கண்ட சிங்காரவேலு, முதுகெலும்பு வளைந்தால் கூனி நடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதைக் கண்டுபிடித்து

நாட்டுக்கு முதுகெலும்பு தொழிலாளரே என்பதை அறிந்து, அந்தத் தொழிலாளரின் விழிப்புக்காக வேலை செய்யத் தொடங்கினார். தொழிலாளர்கள், மதத்தின் பேராலும், அரசியலின் பேராலும், மௌடீகத்தாலும் அடக்கப்பட்டு வரும் கொடுமையைக் கண்டு கொதித்தார்.

அவருடைய அபாரத் திறமை தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தத்தின்போது நன்கு விளங்கிற்று. அதுசமயம் அவர் பத்தாண்டு தண்டனை தரப்பட்டார்.

ரயில்வே வேலை நிறுத்தம் நான்கு நாட்கள் வெற்றி கரமாக நடந்ததைக்கண்டு, ரயில்வே தலைமை அதிகாரி, ரயில்வே தொழிலாளர்களுடன் சமாதானத்திற்கு வருவதைத் தடுத்தவர்களும், தானும் தனது சகாக்களும் கடுந்தண்டனை பெற்றதிலிருந்து தப்பி அப்பீல்மூலம் முயன்ற காலத்தில், அதற்கும் எதிராக இருந்தவர்களும், பெசண்டு அம்மையாரும் அவர்தம் சிஷ்யகோடிகளும்தான் என்பதைத் தோழர் சிங்கார வேலர் நன்கு உணர்ந்தார். ரயில்வே வேலை நிறுத்தத்தில், இந்நாட்டுப் 'பத்திரிகை ஜாதி' செய்த பொய்ப்பிரச்சாரம் அன்றைய ஒரு லட்சம் தொழிலாளர் வாயில் மண் போட்டது என்பதற்கும், பின் தலை எடுக்கவேண்டிய கோடானுகோடி தொழிலாளரின் கண் விழிப்புக்குத் தடைக்கல்லாக இருந்தது என்பதையும் கண்டபின்பே, அவர் மனமாறுதல் அடைந்தார். தொழிலாளர் சமூகம் உண்மையாக நியாயம் பெற வேண்டு மானால், முதலாளிகளான வெள்ளை முதலாளி, கருப்பு முதலாளி ஆகிய இவர்களின் பிடியினின்று விடுதலையாகு முன், முதலாளிகட்கும் தொழிலாளிகட்கும் உண்மையில்

துரோகிகளாகவுள்ள போலித் தொழிலாளர் தலைவர்களும் அவர்கள் பத்திரிகைகளும் தொலைய வேண்டுமென்று எண்ணினார். அவர் தொழிலாளர் இயக்கத்திலிருந்து சுயமரியாதை இயக்கத்திற்கு வந்ததற்குக் காரணம் இதுவேயாகும்.

தோழர் சிங்காரவேலர் சிறந்த ஒத்துழையாதார். நல்ல வரும்படி வந்த காலத்திலும் காந்தியத்தில் நம்பிக்கை கொண்டு தனது வக்கீல் வேலையைவிட்டு, ஒரு சில சென்னை வக்கீல்களில் சிங்காரவேலர் முதன்மையானவர். காங்கிரசின் பேரால் வக்கீல் வேலையைவிட்டு, பின்பு, மீண்டும் கோர்ட்டுக்குப்போன வக்கீல்களில் சிங்காரவேலர் சேர்ந்தவரல்ல. சிறந்த ஒத்துழையாதாராகவே இருந்தார். சென்னையில் பொதுமக்களின் பேரால் நடந்த பெரிய "கிளர்ச்சிகள்" நான்கு என்று சொல்லலாம். சூளையில் வேலைநிறுத்தம், பிரின்சப் வேல்ஸ் பகிஷ்காரம், சைமன் பகிஷ்காரம், கானாட்டுக் கோமகன் பகிஷ்காரம் என்பவைகளில் தோழர் சிங்காரவேலர் முதல் மூன்றிலும் பூரண பங்கெடுத்துக் கொண்டார். இதே காலத்தில் அமெரிக்காவில், சாக்கோ, வான்சிட்டி என்ற இரண்டு பொது உடைமைத் தோழர்கள், பொது உடைமை வழக்கில் சம்பந்தப்பட்டு எலக்ட்ரிக் மூலம் கொல்லப்பட்டார்கள். இச்செயலைக் கண்டிக்கச் சென்னை பீப்பில்ஸ் பார்க்கில் தோழர் சிங்காரவேலர் ஓர் பிரம்மாண்டமான கூட்டத்தைக் கூட்டினார். மாகாண சர்க்கார் பயந்து தனது போலீஸ்படை முழுவதையும் அனுப்பி அக்கூட்டத்தைப் பயமுறுத்தியது. அன்றைய கூட்டத்திற்குத் தலைமை வகிக்க ஒத்துக்

கொண்டவரும், பிரசங்கம் செய்யச் சம்மதித்தவர்களும் போலீஸ் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அஞ்சி அந்தப் பக்கமே வரவில்லை.

மனம் அலுத்த சிங்காரவேலர் தனியாகப் பீப்பில்ஸ் பார்க் பக்கம் வந்தார். தன் நண்பர்கள் யாவரும் வரவில்லையே என்பதற்காகப் பயந்து விடவில்லை. கூட்டமோ இவ்வளவு தடபுடலாகக் கூடாது என்று எண்ணிவந்த சிங்காரவேலர் அங்கு கண்டதென்ன? பிரம்மாண்டமான கூட்டத்தையும், அதன் மத்தியில் ஒருவர் சமதர்மப்பாடல் பாடுவதையும், இரண்டு மூன்று இளைஞர்கள் மேடைமீது இருப்பதையும் கண்டார். தான் எதிர்பாராத சம்பவம் நடப்பதைக்கண்டு ஓர்சிறிய புன்னகையுடன் மேடையருகில் வந்து பார்த்தார். மேடைமீது இருந்தவர்கள் தனக்குப் புதியதாய் இருந்தாலும், அன்றுதான் எடுத்துக் கொண்ட வேலைக்கு தனக்கு உதவியாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். கூட்டமே நடக்காது என்று எண்ணியவர் சென்னை பொதுமக்கள் இவ்வளவு போலீஸ் மிரட்டலையும் அலட்சியப்படுத்திக் கொடுமையாகக் கொல்லப்பட்ட இரண்டு அமெரிக்கத் தொழிலாளர்களிடம் அனுதாபம் காட்டி, அவர்கள் கொள்கையை ஆதரிப்பதற்கு அறிகுறியாக இக்கூட்டம் கூடும்படி செய்த சென்னைப் பொது மக்களைப் பாராட்டினார். இக்கூட்டத்தில்தான், காலஞ்சென்ற சிங்காரவேலரின் கவனம் சுயமரியாதை இயக்கத்தின் பக்கம் திருப்பப்பட்டது. பட்டுக்கோட்டைத் தோழர் அழகர்சாமி சொன்னார், "செருப்புத் தைக்கும் சமூகத்திலும், மீன்பிடிக்கும் சமூகத்திலும், பிறந்த இரண்டு தொழிலாளர்கள் அமெரிக்கச் சர்க்காரால் தண்டிக்கப்பட்டார்கள். தொழிலாளர் சமூகம் விழிக்கு

முன்பு, இத்தகைய சம்பவங்கள் பல நிகழவேண்டும். நமது நாட்டுத் தொழிலாளர் உலகம் கண்விழித்து இத்தாலிய மீன்பிடிக்கும், தொழிலாளியான வான்சிட்டி இறந்ததைப் போல் நமது உண்மைத் தொழிலாளர் தலைவரான சிங்காரவேலர் இந்நாட்டு வான்சிட்டியாகச் சர்க்காரால் தண்டிக்கப்பட்டு, அக்கூட்டத்தைக் காண ஆசைப்படுகிறேன் என்று. இச்சொல் ஒன்றே சிங்காரவேலரைச் சுயமரியாதைக் காரனாக்கியது.

சுயமரியாதை இயக்கம் சமதர்மம், இந்நாட்டு மக்களுக்குத் தக்கபடி எடுத்துச் சொல்லி, 'மார்க்கீசம்' என்பதன் பொருளாதார தத்துவத்தைச் சாதாரணமானவரும் உணரும்படி செய்த பெருமை இந்நாட்டில் இருவரையே சாரும். மற்ற மற்ற மாகாண மக்கள் பொதுஉடைமைத் தத்துவத்தை உணர்ந்தி ருப்பதற்கும், இம்மாகாண மக்கள் அதிலும் தொழிலாளர் இயக்கம் பொதுஉடைமையை உணர்ந்திருப்பதற்கும் இன்னும் ஏராளமான வித்தியாசம் உண்டு. மார்க்கீசத்தைக் கரைத்துக் குடித்து எவரும் எளிதில் உணரும்படி எழுதியும் பேசியும் வந்தவர்கள் பெரியார் இராமசாமி அவர்களும், தோழர் சிங்காரவேலருமேயாகும். தோழர் சிங்காரவேலர் சுயமரியாதை இயக்கம் வளர்வதற்குப் பெரிதும் பாடுபட்டார். அவரின் உழைப்பை எந்தச் சுயமரியாதைக்காரனும் மறக்கமாட்டான்.

எல்லா மக்களும் இன்ப வாழ்வு பெறவேண்டுமென்ற சிறந்த இலட்சியமே அவருக்கு. இது கிடைக்கவிடாமல் தடுப்பது எதுவாக இருப்பினும், அதனைத் தவிடு பொடியாக்க வேண்டுமென்று அவர் துடித்தார்.

ஏகாதிபத்தியம், மதவாதம் இரண்டுமே முடக்குவாத நோய்தான் சமுதாயத்துக்கு என்பதை அவர் எவருக்கும் அஞ்சாது கூறினார். அவருடைய தீவிர வாதத்தைக் கண்டு திகில் கொண்டவர்கள் அவரை நாத்திகர் என்று கூறினார்; அவர் அதனை ஏற்றுக் கொண்டார்; சென்னையில் நாத்திகர் மாநாட்டையே நடத்தினார்; இந்தியாவிலேயே யாரும் செய்யாத காரியம் அது. மதத்தின்மீதும் கடவுளின் மீதும் பாரத்தைப் போட்டுவிட்டு, பழிபாவத்துக்கு அஞ்சாமல், பாமர மக்களைக் கசக்கிப் பிழியும் வர்க்கத்தை நோக்கி, அந்த மாவீரர் கேட்டார்.

"உலகில் உயிர்கள் படுந்துயரத்திற்கு யார் ஜவாப்தாரி? பசுவைப் புலி பிடித்துத் தின்னவும், தேரையைப் பாம்பு பிடித்துத் தின்னவும் யார் கட்டளையிட்டார்? இந்தக் கொடூரக் காட்சியை விடவா வேறு உளது? நோய், வறுமை, பஞ்சம், புயல், வெள்ளம் முதலிய இயற்கைச் சம்பவங்களால் மாந்தருக்கு எவ்வளவு இம்சை?

கடவுளை தயாபரன், சர்வரட்சகன், ஆபத்பாந்தவன் அன்பன் என்ற மாத்திரத்தில் இந்தக் கொடுமைகளை மறக்கமுடியுமா? சமணர்களைக் கழுவில் ஏற்றினது கடவுள் பெயரால் அன்றோ? கோடான கோடி பிசாசு பிடித்தவர் களென்று பெண்மக்களை அடித்துக் கொன்றது கடவுள் பெயரால் அன்றோ? கிருஸ்தவரும் முஸ்லீமும் கோடிகோடி யாக 500 வருஷ காலம் கொடும் போரில் மாண்டது சாமி பெயரால் அன்றோ? சாமி பெயரால் எத்தனை கோயில்கள், கட்டிடங்கள் இடிந்தன. எத்தனை நாடுகள் நகரங்கள்

நாசமாயின.?"

இவ்விதமாக, எதிரி திணரும்படியான கேள்விகளைப் பச்சைப் பச்சையாகக் கேட்பார் மா. சிங்கார வேலர். அவரும் மனப்பண்பிலும், மதியூகத்திலும் அவருடைய இணையாக இருந்த பெரியாரும் ஒன்று கூடி, சுயமரியாதை இயக்கத்தை நடத்தியபோது, நாடே அதிர்ந்தது, சர்க்காரும், நடுங்கிற்று என்று கூறலாம். காசியில் சிக்கிக்கிடந்த மக்களை அவர்கள் கைபிடித்து இழுத்து மாஸ்கோவுக்கு அழைத்தனர்.

❋

நான் கடைசியாக அவரைக்கண்டது, நான் மேலே குறிப்பிட்ட அவருடைய அருங்குணத்தை விளக்கக்கூடிய ஒரு சம்பவமாகவே இருந்தது. இரண்டு முதியவரும், பெரியார் இராமசாமியும், தோழர் சிங்காரவேலரும் ஒரே மேடையிலே உட்கார்ந்திருந்தனர், 20-6-43ல் சென்னை செயிண்ட்மேரி மண்டபத்தில். அன்று அங்கு தீண்டாமை ஒழிப்பு நாள்! தளர்ந்த உடல், தள்ளாடும் நடை, நரைத்த தலை, இக்கோலத்திலே இருந்தார் மா. சிங்காரவேலு. தீண்டாமை ஒழிப்புத்தினம் என்று கேள்விப்பட்டதும், அவர், 'தள்ளாமையையும் மறந்து, அங்கு வந்திருந்தார். பாட்டாளி மக்களின் சுயமரியாதைக்காகவும் சுகவாழ்வுக்காகவும் போராடிய அந்தப் புரட்சி வீரரை அன்று நான் கடைசியாகக் கண்டேன். அவர் மறைந்தார் என்ற செய்தியைக் கேட்டேன், திடுக்கிடவில்லை, ஆனால் திகைத்தேன், இனி அத்தகைய ஓர் மாவீரன் கிடைப்பாரா என்று. மறைந்த மாவீரருக்கு நமது மரியாதையைச் செலுத்துவோமாக. அவர் வகுத்த மார்க்கம்

பழுது படாதபடி பாதுகாத்து, அவருடைய இலட்சியமாகிய மக்கள் ஆட்சி மலருவதற்காக, நாம் உழைப்போமாக என்று, மாவீரரை மதிப்போரெல்லாம் உறுதி கொள்வார்களாக.

*(திராவிட நாடு - 24-2-46)*

# 22. அறிவுக்கோவ்வாததை அஞ்சாது எதிர்ப்பவர்

மறைந்த தோழர் மா. சிங்காரவேலர், சிலகாலம் காங்கிரசிலும் இருந்தார். அவர் காங்கிரசில் சேர்ந்திருந்ததற்குக் காரணம், ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பது, ஏழை மக்களின் வாழ்வைக் கெடுக்கக்கூடிய பல கொடுமைகளிலே ஒன்றை எதிர்ப்பது, எளியவன்மீது பூட்டப்பட்டிருக்கும் பல தளைகளிலே ஒன்றை உடைப்பது, சமுதாயத்தை அடைத்து வைத்திருக்கும் சிறைக்கூண்டின் கம்பிகளிலே ஒருகம்பியை அகற்றுவது என்ற முறையிலேதான் மா. சிங்காரவேலர், காங்கிரசுடன் கூட, ஏகாதிபத்யத்தை எதிர்த்தாரேயொழிய, காங்கிரசையும் அதிலும் குறிப்பாகக் காந்தீயத்தையும் அவர் முதலாளி இயக்கம் (பூர்ஷ்வா) என்றே கண்டித்து வந்தார். காந்தியார், "தீண்டாதாருக்குத் தனித்தொகுதி கூடாது" என்று கூறி உண்ணாவிரதம் இருந்தபோது, காந்தியாரின் போக்கை அவர் மிக மிக வன்மையாகக் கண்டித்தார். அதுபோது அவர் தீட்டியக் கட்டுரை, நாட்டு விடுதலையிலும், ஏழைகள் விடுதலையிலும் அக்கரைகொண்டவர் யாவருக்கும் மனப் பாடமாக வேண்டியது என்று கூறலாம். அது, இது :-

"நமது சமதர்ம அபிப்பிராயப்படி காந்தியார் தாழ்த்தப் பட்டோர் பால் உண்ணாவிரதம் கொள்வதாகத் தீர்மானித்தது, ஆங்கிலதுரைத்தனத்தாருக்குப் பெருத்த வெற்றி என்றே கூற வேண்டும். பிரிட்டிஷ் அரசியல் தந்திரத்தின் வெற்றி, இதனால் ஸ்தாபிக்கப்பட்டதென்று அறிதல் வேண்டும். காந்தியார், தான் கொண்ட சுயராஜ்யப்போரை விட்டுவிட்டு, இந்த உபயோகமற்ற பிரச்னையில் தற்கொலை செய்து கொள்வதாக உடன்பட்டது, பிரிட்டிஷாருடைய அரசியலுக்கு மாபெரும் வெற்றியெனக் கருதல் வேண்டும் (Triumph of British Diplomacy) பிரிட்டிஷாரின் அரசியல் தந்திரத்தில், நமது காந்தியார் எந்த மூலை? (He is nowhere) அவர் எங்குமில்லை என்றே சொல்லலாம்.

ஒரு காலத்தில் சூலூஸ் (czulus) என்ற ஆப்பிரிக்கர் களைக் கலகப்படுத்திவிட்டுப் பிறகு ஆங்கிலேயர்கள் அவர்களை நாசமாக்கியதைப் பார்த்து இருந்தவர். சென்ற 19ம் நூற்றாண்டு இறுதியில், போயர் (Boers) களுடன் கூடியிருந்துவிட்டு, அவர்கள் சண்டையில் அவர்கள் விரோதியர்களுக்கு உதவியாய் இருந்தார். யூரோப்பியன் மகா சண்டையில் (The great European war) பிரிட்டிஷாருக்கு உதவிச் சேனையைத் தயாரித்து, அந்தச் சண்டை முடிந்த பிறகு பிரிட்டிஷாருக்கே விரோதமாக, ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார். அதையாகிலும் செம்மையாக முடிவுக்குக் கொணர்ந்தாரா? இல்லை. யாரோ சிலர் கொல்லப்பட்டார்களென்று 50,000 பேர் சிறையில் கிடக்க பர்டோலியில் அதனை நிறுத்திவிட்டார். இதுதானா இவர் செய்த காரியம். இத்துடன் இவர் முரண் (Contradiction)

நிற்கவில்லை உபயோகமில்லாத உப்புமறியலை ஆரம்பம் செய்து அதனால் 60,000 பேரை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டு, டெல்லி உடன்படிக்கையில் (Delhi pact) கையொப்பமிட்டு, அதனையும் அவர்களையும் கைவிட்டார்! இது நிற்க, சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்துவிட்டுச் சுமார் 60, 70 ஆயிரம்பேரை ஜெயிலில் அடைக்கச் செய்து, இந்துக் களையும் பஞ்சமர்களையும் பிரிக்கின்றதாகத் தனித் தொகுதியின்பேரில் தனது கோபாவேசத்தைக் காட்ட உண்ணாவிரதம் பூண்டு, தான் சாகப்போவதாகப் பறைசாற்றி விட்டார்! இது என்ன அகோரக்காட்சி என்று கேட்கிறோம்? இதனால் ஒன்று உலகம் தெரிந்து கொள்ளல் வேண்டும். அதாவது காந்தியார் எவ்வளவு உலகப் பிரசித்தம் பெற்றவராயினும், அவரை நம்பி எந்தக் காரியமும் செய்யலாகாதென்பதே. அவரை நம்புவதைவிடச் சேற்றில் நட்ட கம்பத்தை நம்பிக்கரை ஏற எண்ணலாம்.

இவர் வாழ்நாள் முழுமையுமே முரண்பட்ட காரியங்களாகவே இருந்து வருகின்றன. (His life is a series of contradictions) என்று யாதொரு ஆட்சேபனையுமின்றிக் கூறலாம். இவர் புகழ் தென்னாப்பிரிக்காவிலிருந்து கிளம்பியது. அங்கேயாகிலும் நின்று தான் எடுத்தக் காரியத்தைச் சாதித்தாரா? 5, 6 வருஷம் அங்கே கலகத்தை மூட்டிவிட்டு, அங்கு வாழும் இந்தியக் குடிமக்களை நடு ஆற்றில் விட்டு இந்திய நாட்டுக்கு வந்து விட்டார்! இத்தியாதி (Series of defeats) தோல்வியை வரிசை வரிசையாக அடைந்தவரை ஏன் இந்த உலகம் இன்னும் நம்புகின்றதோ, அது நமக்கு விளங்கவில்லை.

இவர் உண்ணாவிரதக் கிளர்ச்சி வெறும் Clap Trap, அதாவது வெறுங்கூச்சல் என்றே நமக்குத் தோன்றுகிறது. தாழ்த்தப்பட்டோருக்குத் தனித்தொகுதி கொடுத்தால் என்னவென்று கேட்கிறோம்? தற்கால ஆங்கிலேயர் திட்டத்தில் யாருக்கு என்னதான் கிடைத்து விடப்போகிறதென்று கேட்கின்றேன். உங்களுக்கும் பே, பே; உங்கள் அப்பனுக்கும் பே, பே; என்று சொல்லிக் கொண்டிருக்கும் திட்டத்தில், யாருக்கு என்ன அதிக சுதந்திரம் கிடைக்கப் போகின்றது? விஷயம் இவ்வாறிருக்க, ஏன் இந்த வீண் கூச்சல் என்று கேட்கின்றோம்? இந்தக் கூச்சல் யாவும் பகல் வேஷம் என்பதே எங்கள் துணிபு.

இந்துக்களை, ஜாதி இந்துக்களென்றும், ஜாதியில்லா இந்துக்களென்றும், இருவகுப்பாக, இந்தத் தனித்தொகுதி பிரித்து விடுகிறதாம்! பஞ்சமர்கள் தனித்தொகுதியால், வேறுபட்டு விடுவார்களாம்!! தனித்தொகுதியால் இந்துக்கள் பஞ்சமர்களை எதிரிகளாகப் பார்ப்பார்களாம்!! இவ்விருவருடைய ஒற்றுமைக்குப் பகை வந்துவிடுமாம்!! இந்தக் கதையைக் கேட்க, ஒருபழமொழி நமது ஞாபகத்திற்கு வருகிறது. "ஆடு நனைகிறதென்று, ஓனாய் குந்தி அழுகிறதாம்!" இந்துக்கள் கடந்த 5000 வருஷமாகப் பள்ளனையும், பறையனையும், பஞ்சமனையும், தோட்டியையும், பரங்கியையும், தியாவையும், சாரணரையும், மற்றும் பல தீண்டாதாரையும் (Untouchables) தாழ்த்தப்பட்டோரையும் (Depressed) தங்கள் தோழர்களாகப் பாவித்து வந்ததைக் கெடுக்க இந்தத் தனித் தொகுதி நடுவில் வந்து விட்டதாம்!! உலக ஒற்றுமைக்கு அழிவு வந்துவிட்டதாம்!! என்ன விந்தை!

கோடானுகோடி தாழ்த்தப்பட்டோர் வீடு, வாசல், உணவு, ஆடை, கல்வி, சுகாதாரம், வைத்தியம், இறந்தால் வாய்க்கரிசிக்குக்கூட வழியில்லாமல் இருக்க இரண்டொரு (Votes) ஓட்டுகளால் ஏன்துவண்டு விடப்போகிறதோ அது நமக்கு விளங்கவில்லை. கடந்த 50 வருஷங்களாக இந்திய சட்டசபைகளில், பொதுத் தொகுதியால் இந்துக்கள் பஞ்சமர்கள் பால் என்ன சாதித்தார்கள் என்பதைக் கேட்கின்றோம்? இந்தக் காலமெல்லாம் 5 கோடி பஞ்சமர்களுக்கு இந்துக்களே என்ன செய்து விட்டீர்கள்? எத்தனை கிணறுகளைக் கட்டினீர்கள்? எத்தனை வீடுகள் கட்டுவித்தீர்கள்? எத்தனை ஆஸ்பத்திரிகள் கட்டுவித்தீர்கள்? எத்தனை பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தீர்கள்? எத்தனை கல்லூரிகள் நியமனம் செய்தீர்கள்? எத்தனை சுகாதார ஸ்தாபனங்கள் உண்டாக்கினீர்கள்? எத்தனை (Free Scholarships) இலவசப் படிப்புக்கு உதவியளித்தீர்கள்? எத்தனை புஸ்தக சாலைகளை உண்டாக்கினீர்கள்? எத்தனை சுத்தத் தண்ணீர் வசதிகள் ஏற்பாடு செய்தீர்கள்? ஐந்து கோடி தாழ்த்தப்பட்ட பேரின் தரித்திரத்தையும் மூடப்பழக்கங்களை யும், மூடப்பக்தியையும் ஒழிக்க என்ன செய்தீர்கள்? என்ன செய்கின்றீர்கள்? என்ன செய்யப் போகின்றீர்கள்? எனவும் கேட்கின்றோம்."

என்று தோழர் சிங்காரவேலர் எழுதினார். கொடுமையும் அநீதியும், பசப்பும் புரட்டும், போலிவாதமும் பொய்யுரையும், எங்கு இருக்கக்கண்டாலும், சர்க்கார் மாளிகையிலே இருந்தாலும் சங்கராச்சாரி மடத்திலே காணப்பட்டாலும், பழைய ஏட்டிலே இருந்தாலும், நாட்டு விடுதலை நாடகம் நடத்துவோரின் ஏட்டிலே காணப்பட்டாலும் தோழர் மா.

சிங்காரவேலர், தன்னால் முடியுமா என்பது பற்றிக்கூட யோசிக்காமல், அச்சம், தயை தாட்சணியமின்றிக் கண்டிப்பார். அத்தகைய தீரம் அவருக்கு இருந்ததற்குக் காரணம், ஒடுக்கப்பட்டவர்கள், கொடுமைக்கு ஆளானவர்கள், ஏழை எளியவர் என்போரிடம் அவருக்கு இருந்த அன்புதான். எனவே, காங்கிரசின் போக்கு, உண்மையிலேயே இந்நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுக்கு விடுதலை அளிக்கக் கூடியதல்ல வென்பதை இக்கட்டுரையின் வாயிலாக நன்கறியலாம்.

*(திராவிட நாடு - 3-3-46)*

# 23. காமராஜர் சம்பவம்!

### தொடர் கதையில் ஒரு பகுதி

### தொழுது நிற்பவர் அழுது ஒய்வர்!

### இறுதி அத்யாயம் எழுதப்போவது திராவிடன்

'காம்ராஜர் சம்பவம்' இன்று தமிழ்நாடெங்கும், கொதிப்பை உண்டாக்கிவிட்டது. பல இடங்களிலே கண்டனக் கூட்டங்கள் நடக்கின்றன, சில ஏடுகள், இந்தக் கண்டனச் செய்தியை வெளியிடுகின்றன. காந்தியாரைப் புகழ்ந்து விட்டு, அவரைத் தவறான வழியிலே போகச் செய்துவிட்ட, ஆச்சாரியாரைக் கண்டித்து வருகின்றன. இதனால் பிரமாதமான பலன் ஏற்படும் என்றோ, அல்லது தமிழகத்திலே ஏற்பட்டுள்ள

கொதிப்பு நீடிக்குமென்றோ சொல்ல முடியாது. அடிதாங்க மாட்டாதது; வலி அதிகம், வலி இருக்குமட்டும் கோபம் இருக்கும், பிறகு விட்ட வழிப்படி நடக்கட்டும் என்று விஷயம் அடங்கிவிடும்.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் நடிவடிக்கைகளைக் கூர்ந்து ஆராய்பவர்கள், 'காமராஜர் சம்பவம்' 1946-ல் நடந்த முதல் நிகழ்ச்சி அல்ல என்பதையும், காஞ்சிபுரத்திலிருந்து தொடங்கி, காமராஜர் சம்பவம்கள், அவ்வப்பொழுது நடந்து வந்துள்ளன என்பதையும் உணருவர். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைமைப் பதவியையோ, அல்லது தலைவரை ஆட்டிப் படைக்கும் சூத்திரதாரிப் பதவியையோ, தமது கரத்தில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதை, இந்நாட்டு ஆரியர், மிகத் திறமையாகச் செய்து வந்திருக்கின்றனர். வெற்றி பெற்றே வந்திருக்கின்றனர். புரட்சி செய்தவர்களைப் பொசுக்கி இருக்கின்றனர், தங்கள் சொந்தச் சக்தியால் அல்ல, வடநாட்டுத் தலைவர்களின் துணைகொண்டு. அன்று முதல் இன்று வரை, வடநாட்டுத் தலைவர்களுக்கு அறிமுகமான, அவர்களின் ஆதரவு பெற்ற, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் யாவரும், ஐயர், ஐயங்கார்களாகத் தான் இருக்கும்; மற்றவர்கள் இங்கே, மக்களிடம் சொல்லொணாத செல்வாக்குப் பெற்றிருக்கலாமே யொழிய, அகில இந்தியக் காங்கிரஸ் அமைப்பிலே அவர்கள் அறிமுகமாகாதவர்களாகவும், அறிமுகமாகுவதற்கே யாராவது ஒரு ஐயரின் துணையை நாடவேண்டியவர்களாகவோ தான் இருப்பார்கள். அந்த நிலைமையுடன், அகில இந்தியக் காங்கிரசின் தலைமை அமைப்பு வடநாட்டிலே இருப்பதால், எந்தத் தகராறும் தீர்க்கப்படுவதற்கு, 'அப்பீல் கோர்ட்' அங்கே

அமைந்துவிட்டது. அப்பீல் கோர்ட் ஜட்ஜு தனக்கு வேண்டியவர் என்றால், ஆரியருக்கு வழக்குச் சாதகமாகத் தானே முடியும். இதுபல ஆண்டுகளாக நடந்து வந்திருக்கிறது - நடக்கிறது - நடக்கும். பல சமயங்களில், தமிழ்நாட்டிலே பார்ப்பனக் காங்கிரஸ் தலைவர்களுக்கும் பாரப்பனரல்லாத காங்கிரஸ் தலைவர்களுக்கும் 'சண்டை' ஏற்பட்டுள்ள மக்கள் பார்ப்பனத் தலைவர்களைக் கண்டித்துப் பார்ப்பனரல்லாத தலைவர்களிடம் நம்பிக்கையைத் தெரிவித்தும், இங்கிருந்து பார்ப்பனக் காங்கிரஸ் தலைவர்கள், அனுப்பும் செய்தியை ஏற்றுக் கொண்டு வடநாட்டுத் தலைவர்கள், (எக்ஸ்பார்ட்டி) தீர்ப்பு, பார்ப்பனர் பக்கமே அளித்து இருப்பதுடன், பார்ப்பனர் களையே காங்கிரஸ் அதிகாரிகளாய் நியமித்துப் பார்ப்பன ரல்லாத காங்கிரஸ் தலைவர்கள் முகத்திலே கரி பூசி இருக்கிறார்கள். இன்று காமராஜருக்குக் காந்தியார் கொடுத்த பதப்பிரயோகம், இதற்கு முன்பு, வடநாட்டுத் தலைவர்கள், தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாதார் தலைவருக்குத் தந்திருக்கிறார்கள்.

1925-ல் காஞ்சிபுரத்தில் காமராஜர் தோன்றினார் - அதாவது, பார்ப்பனத் தலைமைக்கு எதிராகப் புரட்சி ஆரம்பமாயிற்று. இன்று காமராஜர், கண்ணீர் சிந்தினார், காஞ்சியிலே, கனல் சிந்தப்பட்டது! அந்தக் கனலும் ஓயவில்லை, கண்ணீரும் நின்றபாடில்லை!

⁂

"தேர்தலுக்கு யாரார் அபேட்சர்கள் என்பதை இப்போதே, இங்கேயே தெரிவித்து விடலாமே. மாகாணத்திலிருந்து

காங்கிரஸ் பிரமுகர்கள் வந்திருக்கிறார்கள். இப்போது யாரார் காங்கிரஸ் சார்பிலே அபேட்சகர்கள் என்பதைக் கூறிவிட்டால் இவர்களெல்லாம் தத்தம் பகுதியிலே சென்று, பிரச்சாரம் புரிய சௌகரியமாக இருக்கும்'' என்றார், கொங்குநாட்டுத் தலைவர். மயிலை அய்யங்கார் அதற்கு,

''நாயக்கர்வாள்! இப்போது, தேர்தலுக்கு யாரை நிறுத்துவது என்பது பற்றித் தீர்மானிக்க வேண்டியதில்லை. ஒரு கமிட்டி நியமித்துவிடுவோம். அந்தக் கமிட்டி, பிறகு தேர்தலுக்கு ஆட்களை நியமிக்கட்டும்'' என்றார். கொங்கு நாட்டின் குறுநில மன்னர் போன்ற நிலையிலிருந்தவர், "இது கூடாது" என்றார். வார்த்தை தடித்தது. "இது அயோக்யதனம்" என்றார் கொங்கு நாட்டுத் தலைவர்.

"நாயக்கர்வாள்! அந்த வார்த்தையை வாபீஸ் வாங்க வேண்டும்'' என்றார் மயிலை ஐயங்கார்.

"முடியாது"

"வாபீஸ்! வாபீஸ்!"

"ஒருக்காலும் முடியாது"

"வாபீஸ் வாங்கத்தான் வேண்டும்"

"அதற்கு வேறு ஆளைப்பாருங்கள்"

குஞ்சம் வைத்த செருப்பைக் காலிலே மாட்டிக் கொண்டார், ஒருமுறை, திரும்பிப்பார்த்தார், மயிலை ஐயங்காரையும், அவருடைய கூட்டத்தையும்.

"அயோக்யத்தனம் என்று சொன்னதை வாபீஸ் வாங்கவா சொல்கிறீர்கள். முடியாது. இந்த அயோக்கியத்தனத்தை இதே ஊரிலே கூட்டம் போட்டுக் கூறுகிறேன், ஊரெங்கும் கூறுவேன், இதோ புறப்படுகிறேன்" என்று கூறி விட்டுக் கிளம்பினார், அன்று ஆரம்பமான பிரயாணம், இன்றும் தொடர்ந்து நடந்து வருகிறது. மீசையுடன் இருந்தபோது ஆரம்பமான பிரயாணம், தாடி வளர்ந்த பிறகும் நடந்து வருகிறது. பெரியார் இராமசாமி அன்று தொடுத்த அறப்போர், இன்றும் நடந்து வருகிறது. அன்று பெரியார், பார்ப்பனர்கள் காங்கிரசைக் கொண்டு, பார்ப்பனரல்லாதாரைப் பாழ்படுத்துவதை நாடறியச் செய்வேன் என்று உரைத்த சூளுரையின் படியே இன்றும் நடந்து வருகிறார். அவர் காஞ்சியில் கனல் கலந்த கடுஞ்சொல் வீசி விட்டுக் கிளம்பியது, 31-வது, தமிழ் மாகாணக் காங்கிரஸ் மாநாட்டிலே. கொங்கு நாட்டுத் தலைவர், மாநாட்டுப் பந்தலில், கமிட்டிக் கூட்டத்தின்போது மயிலை எஸ். சீனுவாச ஐயங்கார் கோஷ்டி, காங்கிரசின் மூலம், பார்ப்பனரை, 'மூலஸ்தானங்களில்' அமர்த்த விரும்பியதை உணர்ந்து கண்டித்தார். தேர்தல் சமயம். யாரார் அபேட்சகர்கள் என்று மாநாட்டிலேயே கூறி விடவேண்டும் என்று பெரியார் வற்புறுத்தியதின் 'சூக்ஷமம்' என்னவென்றால், வெளிப்படையாக மாநாட்டிலேயே கூறி விடுவது என்றாகிவிட்டால், தேர்தல் 6-ஸ்தானங்களில் பெருவாரியான பார்ப்பனர்களைப் போடமாட்டார்கள் என்பதே மயிலை ஐயங்கார், கமிட்டி நிறுவ ஆசைப்பட்டதற்குக் காரணம், மாநாட்டுக்குக் கூறாமல் இரகசியத்தில் 'அபேட்சகர் களை நியமித்துவிட்டால், பெரும்பாலும் பார்ப்பனர்களையே போடலாம் என்பதே. கடைசியில் மயிலை ஐயங்கார் மனோ

பீஷ்டமே நிறைவேறிற்று. என்றாலும், காஞ்சியிலிருந்து புயல் கிளம்பிற்று.

❋

பார்ப்பனர் - அல்லாதார், விஷயமான சச்சரவு, காங்கிரசில் வெடிப்பதற்கு முன்பு, குமுறிக் கொண்டிருந்திருக்கிறது. 1925ல், பெரியார், பயணத்தைத் துவக்கினார். அது வரை, உள்ளிருந்து போராடி இருந்திருக்கிறார், போருக்கு உரிய நிலைமை என்றும் மாறவில்லை - ஏனெனில் ஒரு சிறுகூட்ட மாகிய பார்ப்பனர்கள், ஒரு பெரிய தேசிய ஸ்தாபனத்தையும், ஏற்கனவே செல்வாக்குத் தரக்கூடிய பல ஸ்தாபனங்களைக் கைப்பற்றியதுபோலவே இதனையும் கைப்பற்றிச் சுயநலத்தைப் பெருக்கிக் கொள்ள முயலும்போது 'உண்மை உணரும் பார்ப்பனரல்லாதார், எப்படிப் போரிடாமலிருப்பார்கள். போர் 1919 முதற்கொண்டே நடந்தது என்று கூறலாம்.

1919ல், பெரியார் காங்கிரசில் இருக்கையில், ஆச்சாரியார் யோசனையின் பேரில், தேசியவாதிகள் சங்கம் (Nationalist Association) ஈரோட்டில் அமைக்கப்பட்டு, அதற்குத் தலைவராகத் தோழர் சேலம் விஜயராகவாச்சாரியாரும், பொதுக்காரியதரிசியாக தோழர் ராஜகோபாலாச்சாரியாரும், ஆந்திர அமைப்பாளராகத் தோழர் பிரகாசம் அவர்களும், தமிழ்நாட்டுக்கு அமைப்பாளராகப் பெரியா.ரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உபதலைவர் ஸ்தானத்துக்குத் தோழர் வி.ஒ. சிதம்பரம் பிள்ளையின் பெயர் பிரேரேபிக்கப்பட்டது. அதனை டாக்டர் வரதராஜுலுவும் பெரியாரும் ஆதரித்தனர்.

ஆச்சாரியார் சம்மதிக்கவில்லை. உடனே அந்த விஷயம், பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் வாடையைக் கிளப்பிற்று. ஆச்சாரியார், தமது தந்திரத்தைப் பிரயோகித்தார். பிற்பகலில் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டார். பிற்பகல் மாநாட்டிலே, படைவரிசையுடன் இரு கட்சியும் கூடின. உபதலைவர்கள் 5 பேர் இருக்கட்டும், அதிலே ஒருவராகச் சிதம்பரம்பிள்ளை இருக்கட்டும் என்றார் ஆச்சாரியார், அதாவது உபதலைவர் ஸ்தானத்தை உப்புச் சப்பற்றதாக்கி விடும் சூழ்ச்சி செய்தார். பார்ப்பனரல்லாதார் சார்பிலே, பெரியாரும் வரதராஜுலு அவர்களும் வாதாடி வெற்றி பெற்றனர். தோற்ற ஆச்சாரியார் துயருடன், "உங்களை விட ஜஸ்டிஸ் கட்சியார் 100 மடங்கு தேவலாம்" என்று கூறினார்.

1920ல், திருநெல்வேலியில் மாகாண மாநாடு. ஜஸ்டிஸ் கட்சியார் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைக்காகப் போரிடுவதால், அந்தக் கொள்கை நியாயமானது, ஆகையால், பார்ப்பனரல்லாதார் அதை ஆதரிக்கிறார்கள், ஆகவே காங்கிரசைப் பலப்படுத்தவும், காங்கிரசிலே பார்ப்பனரல்லாதா சமுதாயத்தைச் சேர்க்கவும், அந்த வகுப்புவாரிப் பிரதிநித்வக் கொள்கையைக் காங்கிரசில் நிறைவேற்றிவிடவேண்டும் என்பது பெரியார் கட்சி. இதனை, 1919ல் முதன்முறையாகப் பெரியார் திருச்சியில் நடைபெற்ற தமிழ் மாகாணக் காங்கிரஸ் மாநாட்டின்போதே, ஆச்சாரியாருடன் பேசி, அவருடைய சம்மதத்தையும் பெற்று வைத்திருந்தார். திருநெல்வேலியில் கூடிய தமிழ் மாகாணக் காங்கிரசில் இதே வகுப்புவாரித் தீர்மானத்தைப் பெரியாரும் தோழர் சிதம்பரம் பிள்ளையும் கொண்டுவந்து, விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றி,

மாநாட்டிலே கொண்டு போனார்கள். மாநாட்டுத் தலைவர், மயிலை சீனுவாச ஐயங்கார். தலைவர் தமது அதிகாரத்தைக் கொண்டு, தீர்மானத்தை நிராகரித்து விட்டார். காமராஜர்கள் குமுறினர்.

1921ல், தஞ்சையில் நடைபெற்றது மாநாடு. அப்போது, பெரியார், வகுப்புவாரித் தீர்மானம், கொண்டுவர ஏற்பாடு செய்ய, பார்ப்பனத் தலைவர்கள்கூடி, காங்கிரஸ் ஸ்தாபனம் உட்படச் சகல இடங்களிலும், பார்ப்பனரல்லாதாருக்கு நீதியும் பாதுகாப்பும் இருக்கும்படிச் செய்வதாகக் கூறி, தீர்மானத்தை நழுவவிடச் செய்தனர்.

1922ல், திருப்பூரில் மாநாடு.தென்னாட்டுத் திலகர் என்று பெயரெடுத்துப் பிரகாசித்துவந்த டாக்டர் வரதராஜுலு, அதற்குத் தலைமை வகிக்க, மாகாணமெங்கும் ஆதரவு இருந்தும், பார்ப்பனர்ப் பத்திரிகைகள் - குறிப்பாக மித்திரன் - சூழ்ச்சி செய்து, வாசுதேவராவ் என்ற ஐயரைத் தலைவராக்கினர். அந்த மாநாட்டிலே, பார்ப்பனர் - அல்லாதார் தகராறு பலமாகி, கைகலக்கும் நிலைமைவரை வளர்ந்தது. அந்த மாநாட்டிலே, ஜாதிவித்தியாசத்தைக் கண்டித்துப் பேசினார் பெரியார். இராமாயணம் கொளுத்தப்படவேண்டும் என்று பேசியதும் அங்குதான்.

பிறகு திருச்சியில், மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்று, அதிலே பெரியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே பார்ப்பனர்கள், பெரியார் தலைவராக இருக்கக்கூடாதென்று கூறிப் படைதிரட்டினர். வவே.சு. ஐயர், பெரியார்மீது அதே போது நம்பிக்கையில்லாத்

தீர்மானம் கொண்டு வந்தார். தோழர் கலியாணசுந்தரனார், இந்தத் தீர்மானம், பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் துவேஷத்தால் பிறக்கிறது, இது கூடாது, இப்படித் தீர்மானம் வருமானால், பிறகு, காங்கிரசிடம் நம்பிக்கையில்லை என்று பார்ப்பனரல்லாதார் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிவரும் என்று எச்சரிக்கை செய்தார். தீர்மானம் கொண்டு வரப்பட்டது, பார்ப்பனர் படுதோல்வி அடைந்தனர்.

1923-ல்திருவண்ணாமலையில் தமிழ் மாகாணக் காங்கிரஸ் மாநாடு, பெரியார் தலைமையில் நடைபெற்றது. தலைமை உரையில், பார்ப்பனரல்லாதார் விஷயமாகப் பல உண்மைகள் இருந்தன. பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் போரிலே, பார்ப்பனரல்லாதார் கரமே உயர்ந்தது. ஆனால், மயிலை ஐயங்கார், அந்தப்படை வரிசையைக் குலைத்தார். பணத்தை வீசினார். படையில் பிளவு உண்டாக்கினார். காஞ்சியில் அவர் கரம் வலுத்தது. காமராஜர்கள் அன்று அங்கு இருந்தனர். பெரியார் இனிக் காமராஜராக இருக்க வேண்டியதில்லை, பார்ப்பனர்கள் காங்கிரசைக் கொண்டு நடத்தும் கபட நாடகத்தை வெளியாக்குவேன், என்று வெளியே கிளம்பினார், தோழர்கள் சுப்பிரமணிய நைனார், ஜனாப் தங்கமீரான், சீயாழி சாமிநாதச் செட்டியார், அய்யாமுத்து, கோவை சுப்பையா, மாயவரம் சுப்பிரமணியபிள்ளை, எஸ். இராமநாதன், தண்டபாணிப்பிள்ளை, எஸ்.வி. லிங்கம் போன்றவர்கள் பின்தொடர. இன்று பெரியாரின் படையிலே ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளனர், காரணம், அந்த உறுதி, அஞ்சாநெஞ்சு, தமிழ்உரம்!

*

1927ல் சென்னை கோகலே மண்டபத்தில், தமிழ் மாகாணக் காங்கிரஸ் மாநாடு. இதற்குத் தஞ்சைத் தோழர் மருதவாணம்பிள்ளை அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆனால், அந்தச் சிறுகூட்டத்தின் சக்தியால், அவர் ராஜிநாமா செய்யும்படி செய்யப்பட்டு, தோழர் கே.வி. ரங்கசாமி ஐயங்கார் தலைமை வகித்தார்.

1929ல் வேதாரண்யத்தில் மாநாடு. குமுறல் ஏராளம். தலைமை வகிக்கச் சர்தார் படேல் அழைக்கப்பட்டிருந்தார். அவரை வரவேண்டாம் என்று ஏராளமான தந்திகள், மயிலைக் கோஷ்டி அனுப்பிற்று. மாநாடு நடைபெறாது தடுக்க எவ்வளவோ சூழ்ச்சிகள். ஆனால் பலிக்கவில்லை. படேல் தலைமை வகித்தார். அந்த மாநாட்டிலே, மயிலை ஐயங்கார் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. பார்ப்பனர்கள் மிகப் பிரயத்தனப்பட்டு அதை வாபஸ் வாங்க வைத்தனர். தோழர் முத்துரங்க முதலியார், தமிழ்மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரானார். ஆனால் அந்த வருஷம் பூர்த்தியாகுமுன்பே, ஆச்சாரயார் மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவரானார். இடையே, பார்ப்பனர்கள் தமது 'வேலையை'விடாது செய்து வந்தனர்.

1930ல் மதுரையில் 34வது மாநாடு கூடிற்று. இதிலே ருக்மணி லட்சுமிபதி அம்மையார் தலைமை வகிக்க வேண்டும் என்று தமிழர் கட்சி, பார்ப்பனர்கள், சத்யமூர்த்தி அவர்களைத் தலைவராக்க விரும்பினர். போட்டி கடுமை, குமுறல் ஏராளம். தோழர் சத்யமூர்த்தி ஓட்டு அதிகம் பெற்றுத் தலைவரானார். அந்த ஓட்டும், திருச்செங்கோடு சம்பவம் போன்றதே! ஒரு

ஜில்லாக் கமிட்டி, முறைப்படி தேர்தலோ, கூட்டமோ நடத்தாமலேயே, தோழர் சத்யமூர்த்திக்கு 'ஓட்' தருவதாக, எதேச்சாதிகாரமாகக் கூறி, ஐயரை ஆசனம் ஏறச் செய்தது. அடுத்த மாநாடு சத்யாக்கிரகம் காரணமாக, முறைப்படி நடைபெறவில்லை.

36-வது மாநாடு, ஆச்சாரியார் தலைமையில் கோவையில் நடந்தது. உபதலைவருக்குப் போட்டி, தோழர் சத்யமூர்த்திக்கும், சர்தார் வேதரத்தினம் அவர்கட்கும் இடையே. மூன்றுமுறை ஓட்டுக்கு விடப்பட்டு, முப்புரி பலமாக வேலை செய்தும், மூன்று முறையும் சர்தார் வேதரத்தினம் வெற்றி பெற்றார். தமிழன் தன் வீரத்தைக் காட்டி, ஆற்றலை நிரூபித்ததோடு நிற்கவில்லை, பெருந்தன்மையைக் காட்ட வேண்டிக் கிடைத்த பதவியை ராஜினாமா செய்து விடவே, சத்யமூர்த்தி அவர்கள் உபதலைவராக அமர்ந்தார் - மும்முறை தோற்றபிறகு!

பிறகு நடந்தது காரைக்குடி! காமராஜர், ஸ்தானம் அன்று தோழர் முத்துரங்க முதலியாருக்கு. முதலியாருக்குத் தமிழரின் ஆதரவு பரிபூரணமாக இருந்தது. இருந்தும் சத்திய மூர்த்தியாரைத் தலைவராக்க, ஆச்சாரியார் துணிந்து, போர் தொடுத்து விட்டார். தந்திகள் பறந்தன! தூதுகள் கிளம்பின. சத்தியமூர்த்தியாரின் பொது வாழ்க்கை, சொந்த வாழ்க்கை ஆகியவற்றிலே இதற்கு முன்பு, குறைகண்ட ஆச்சாரியார், இனப்பற்றுக்காக இவ்வளவையும் மறந்து, இராத்தூக்கம் பகல் தூக்கமின்றி வேலை செய்தார். சூழ்ச்சி கெலித்தது. முத்துரங்க முதலியார் தோற்றார். சத்தியமூர்த்தியார் ஜெயித்தார். இன்று

தமிழகத்தில் இருப்பதுபோல அன்றும் கொதிப்பு, கண்டனம். ஆச்சாரியார் அவைகளைச் சட்டை செய்யவில்லை. காரியம் பெரிது, வீரியம் அல்ல, என்ற முறையிலே, "நாலுநாள் வாய் வலிக்கப் பேசுவார்கள். பேசட்டும் நமக்கென்ன? நாயக்கர் போல விடாப்பிடியாக எதிர்க்க இவர்களால் ஆகாது" என்று எண்ணிக்கொண்டு, மூர்த்திக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்துவிட்டு, முப்புரியை உருவியபடி, தமிழரை அலட்சிய மாகப் புன்சிரிப்புடன் பார்த்தார். சின்னாட்களிலே, சீறிப் போரிட்டவர்களெல்லாம், ஆச்சாரியார் திருவடிகளே சரணம் என்று கூறிவிட்டனர். ஏன்? ஆச்சாரியார், வடநாட்டுத் தலைவர்கள் தனக்குப் பக்கபலமாக இருப்பதைக் காட்டினார். பார்ப்பன ஏடுகள் அவர்களுக்குப் பலம் தேடின. ஆச்சாரியார், காரைக்குடியிலே, கண்கசியும் காமராஜரைக் கண்டார், இன்றும் காண்கிறார்! கொதிப்பு இன்று இருப்பதுபோல அன்று இருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக, ஒரு விஷயத்தை மட்டும் காட்டுகிறோம். ஆச்சாரியாரின் காரைக்குடி நடவடிக்கையைப் பற்றிக் கண்டித்து அந்நாளில் திருவாரூர் காங்கிரஸ் தோழர் டி.எஸ். தியாகராஜ ஞானியார் என்பவர்,

"சமீபத்தில் காரைக்குடியில் நடைபெற்ற அரசியல் மாநாட்டின் போக்கையும் அங்கு விஜயம் செய்திருந்த தோழர் ராஜகோபாலாச்சாரி போன்ற பிராமணர்கள், பிராமணருக்குத் தலைவர் பதவியைப் பெறச் செய்த சூழ்ச்சி களையும், உடல்பொருள் ஆவி மூன்றினையும் காங்கிரஸ் கட்டளைக்காகத் துறந்த அரும்பெரும் தியாகியான பிராமண ரல்லாத் காங்கிரஸ்வாதி தோழர் முத்துரங்கமுதலியார் தலைவர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதையும் அறிந்து கொண்ட

பின்னரும், நாம் சும்மா இருப்போமானால் வருங் காலத்தில் அரசியல் துறையிலாகட்டும் வேறு எத்துறை யிலாகட்டும் பிராமணரல்லாதாருக்கு எந்த உயர்பதவியையும் கொடுக்கவோ அல்லது நாமே பெறவோ காங்கிரஸ் பிராமணர்கள் சம்மதிக்க மாட்டார்கள் என்பதும், மனம் பொறுக்க மாட்டார்கள் என்பதும் வெட்டவெளிச்சமாகி விட்டது. நாமே பதவிகளைப் பெறு வதற்கும் இடையூறுகள் பல செய்து மறைமுகமான சூழ்ச்சி களாலே முட்டுக்கட்டை போடுவார்கள் என்பது நிச்சயம்" என்று எழுதினார்.

தியாகராஜ ஞானியார், எழுதியது, காரைக்குடி சம்பவத்தின் போது பத்து ஆண்டுகளுக்கு முன்பு, ஏறக்குறைய மாதம் நாள் கூட அதே அளவினதாக இருக்கும். 1936, பிப்ரவரி 9-ந் தேதி அவர் எழுதினார். 1946 பிப்ரவரியிலும் அவர் போன்றவர்கள், நாள்தோறும், கலம்கலமாக எழுதுகிறார்கள், கலக்கத்தோடு, கோபத்தோடு! இன்னும் எத்தனை காலம் இதுபோல எழுதிக்கொண்டிருப்பரோ, தெரியவில்லை! காமராஜர் சிந்தும் கண்ணீர், இன்று நேற்று, ஏற்பட்ட இன்னலின் காரணமாக அல்ல. ஆரியரின் ஆதிக்கத்தை, எங்கு, யார், எதிர்த்தாலும் அவர்கள், எதிர்க்கும் காமராஜர்களைக் கண்ணீர் விடத்தான் செய்வார்கள். ஏனெனில், தொழுது நிற்கும் அடியவர்கள் அழுது குறைகூறித் தீரவேண்டுமே தவிர, எதிர்த்து நீதி கேட்கவோ, போரிட்டு அக்ரமத்தை அழிக்கவோ முடியாது என்பது ஆரியருக்குத் தெரியும். மேலும், 'பக்தரின்' கோபம், நெடுநாளைக்கு நில்லாது. ஏதேனும் ஒருதுளி, திருப்தி தரும் விஷயம் காட்டப்பட்டால், ஒரு சிறு புன்னகை, காட்டினால் இரண்டொரு இன்மொழி

சொன்னால் போதும், கண்ணீர் நின்றுவிடும், பழையபடி கைகூப்பித் தொழுவர் என்பது ஆச்சாரியாருக்கும் அவருடைய இனத்தவருக்கும் நன்கு தெரியும். காமராஜரைச் சாந்தப்படுத்த என்ன வழி என்பதை இன்னேரம், கண்டுபிடித்து விட்டிருப்பார், திட்டப்படி காரியமாற்றவும் தொடங்கி விட்டிருக்கக் கூடும். விரைவிலே காமராஜர், கண்களைத்துடைத்துக் கொண்டு, உலவவும் காணலாம், ஆனால், தன்மானத்தைத் தளரவிட மறுக்கும் எந்தத் தமிழனும், காமராஜர் அடைந்த கதியை எண்ணும்போது, கண்களிலே கனல் கிளம்பாமற் போகாது!! "காமராஜர் சம்பவம்" கிளப்பிய கொதிப்பைக் கண்டு, நாம் ஏமாறவில்லை, இந்தக் கொதிப்பு நிலைக்குமென்று நம்பிக் கொள்முதல் சரக்கு என்று எண்ணவுமில்லை. ஆரிய திராவிடப் போராட்டக் காதையிலே இது ஒரு கட்டம், என்ற முறையிலேயே இதைக் கவனிக்கிறோம். ஆள்பிடிக்கும் வேலைக்காக அல்ல!!

காமராஜர் சம்பவம், ஆரியர், திராவிடரை அடக்கும் துயரம் மிக்க தொடர் கதையில் ஒரு பகுதி. தொழுது நிற்பவர்கள் அழுது தீர்ப்பர், அழுது ஓய்வர் என்பதும் நமக்குத் தெரியும். ஆனால், இந்தத் தொடர்கதையின் இறுதி அத்யாயம் எழுதப்போவது திராவிடனே! அவனுக்குத் தெரியும், அந்த இறுதி அத்யாயம் என்ன என்பது! அந்த அத்யாயத்தின் தலைப்பு, திராவிட நாடு திராவிடருக்கே என்பதாகும்!

*(திராவிட நாடு - 3-3-46,*

# 24. விசாரணை நடத்துக!

“ஐயோ, மகனே! மாண்டனையா.” என்று தாய் அலறுகிறாள் தன் மகன், குண்டடிபட்டு இறந்த செய்தி கேட்டு. குண்டு, மகனுடைய உயிரைக் குடித்த இடம், யுத்த களம் என்றாலாவது, தாய் ஓரளவு, துக்கத்தைப் பொறுத்துக் கொள்ள முடியும். மகன், ஊர் நடுவே, பிணமாகிக் கிடக்கிறான் என்றால், அனலிடு மெழுகென அம்மையின் மனம் ஆகாதிருக்குமோ: ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலே, மகனைப் பறி கொடுத்த தாய்மார்கள் அழுதனர், அங்கு கடும்போர் நடந்தபோது, இந்திய பூபாகத்திலே, போர் இல்லை, ஆனால் இங்கு கடந்த பதினைந்து நாட்களிலே, கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய பெரிய பட்டணங்களிலே மட்டுமல்ல, அமைதி நிலவும், காஞ்சிபுரம், செய்யாறு போன்ற நகரங்களிலே யுங்கூடத் தாய்மார், கோவெனக் கதறும்நிலை வந்தது - பிணங்கள் பாதையிலே கிடந்தன. கடுமையான கலகம் - அதிகாரிகள் தாக்கப்பட்டனர் - கடைகள் சூறையாடப்பட்டன - கட்டடங்கள் கொளுத்தப்பட்டன - எனவே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டி நேரிட்டது - என்று துரைத்தனத்தார் கூறுவர். இதனால், சாந்தியோ, சமாதானமோ, ஏற்பட்டுவிட முடியுமா?துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட வேண்டிய அளவு கலகமும் கலவரமும், ஏன் நடந்தன? என்பது பற்றியல்லவா, விளக்கம் வேண்டும். கலகம் நேரிட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும், என்று “கபர்தார்” கூறிவிட்டால், போதுமா? ஏன், கலக உணர்ச்சி வளருகிறது, எப்படி அதனைக் களைவது, என்பது பற்றிய

காரணங் களையல்லவா,துரைத்தனத்தார் ஆராயவேண்டும். சுதந்திர நாட்டிலேயும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் இருக்குமானால், பன்மடங்கு அதிகமாகத்தான் மக்களின் மனவேதனை இருக்கும். அன்னிய ஆட்சியிலே, ஆனந்த வாழ்வு ஆறென ஓடினாலும், உணர்ச்சியுள்ள மக்கள் அன்னிய ஆட்சியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதிலும், தடியடியும் துப்பாக்கிப் பிரயோகமும், நடத்தி, அமைதியை நிலைநாட்டும், முறையிலே, அன்னிய ஆட்சி இருக்குமானால், மக்கள், எவ்வளவு அதிகமாக மனம் புண்ணாவர் என்பதை விவரிக்கத் தேவையில்லை.

சர்க்கார், இந்தியாவை, வெறும் 'எடுபிடி' என்றும், 'முன்னோடும் பிள்ளை' என்றும், இன்றும் எண்ணினால், ஏமாற்றமே அதிகரிக்கும். அதிருப்தி என்ற அலைமோதும் மனதுடன், கோடிக்கணக்கான மக்கள், வாழும் இடம் இந்தியா. எந்த விநாடியில் வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும், எதற்கு வேண்டுமானாலும் இங்கு இதுபோது, 'அமளி'யை மூட்டி விடமுடியும், அவ்வளவு 'ரோஷ' உணர்ச்சியுடன் நாடு இருக்கிறது. குனிந்து நடக்கும் மக்கள் இல்லை; நிமிர்ந்து நடக்கவும், ஏன்? என்று கேட்கவும், இது தவறு! என்று கண்டிக்கவும், மக்கள் பயிற்சி பெற்றுவிட்டனர். உலகெங்கும் காணப்படும் சுதந்திர ஆர்வம், இங்கு கொழுந்து விட்டு எரிகிறது. சிறப்பாக, வாலிபர் உள்ளம், கோபக்கனலைக் கக்கும், உலைக்கூடமாகி விட்டது. இந்திய பூபாகம் இன்று ஓர் எரிமலை! இதனை உணர மறுக்கும் வரையில், அடக்கு முறைகளைக் கொண்டோ, அவசரச் சட்டங்களைக் கொண்டோ, எப்படியோ ஆளலாம், என்ற அந்த நாளைய எண்ணத்திலே,

இலயித்துச் சர்க்கார், ஏமாற்றத்தைத்தான் காண்பர். அடிக்கடி நடைபெறும் அமளிக்குக் காரணம், அதிருப்தி. அதிருப்தி உண்டாகாது தடுக்கவோ, அதிருப்தி வளருவதை உணரவோ, அதனைக் களையவோ, முயற்சி செய்யாது, மூண்டுவிட்ட பிறகு, மூலைக்கு மூலை கலகமும் கலவரமும் நேரிட்டபிறகு, சர்க்கார், சட்டத்தையும் சமாதானத்தையும் நிலவச் செய்கிறோம் என்று சிந்துபாடுவதும், அதற்குத் துப்பாக்கி வேட்டுச் சத்தத்தைத் தாரளமாகக் கொள்வதும், பயனும் தராது, யாரும் பாராட்டவும் மாட்டார்கள். இதனால், கலகங்களை அடக்கி விடலாம், ஆனால் கசப்பு அதிகரிக்குமேயொழிய, குறையாது. மனக்கசப்பின் காரணமாகவே, கலகங்கள் மூள்கின்றன; கசப்பைப் போக்கு வதற்கு மார்க்கம் தேடாமல், தடியடி துப்பாக்கிப் பிரயோகம் போன்ற, முறைகளால் கலகங்களை அடக்குவதன் மூலம், ஏற்கனவே உள்ள கசப்பு அதிகரிக்கும் காரியத்தையே, துரைத் தனத்தார் செய்கின்றனர். துரைத்தனம் என்பது துரைமார் சர்க்கார், எனவே, இந்தக் கசப்பு, மேலும் பன்மடங்கு அதிகரித்து விட்டது. முறை மாறவேண்டும்; நிலைமை மாறிவிட்டதைச் சர்க்கார் உணரவேண்டும்.

கடல் குமுறிற்று, முதலில்! கடற்படையினர் வேலை நிறுத்தம் செய்தனர். வேலை முறை, சம்பளம், இவைகளிலே அதிருப்தி கொண்டு மட்டுமல்ல, மேலதிகாரிகளாக உள்ள வெள்ளையர், தங்களை நடத்தும் முறையைக்கண்டு, அவர்கள் கொதித்தெழுந்து, கிளர்ச்சி செய்தனர். நிறத்திமிர்கொண்ட அதிகாரிகள், கடற்படையிலே பணிபுரியும் நமது மக்களை, நாய்க்குப் பிறந்தவனே! கூலிக்காரனே! என்றெல்லாம், இந்த நாகரிக நாட்களிலேயும், கேவலமாகப் பேசினால், கடலிலே,

ஏன் குமுறல் இருந்திராது! இந்த நிறத் திமிரைக்களைய வேண்டும், அந்த அதிகாரிகளுக்குச் சர்க்கார், சரியானபடி புத்தி புகட்டி, "ஆணவமாக நடந்து கொள்ளாதீர்கள். நாடு நம்முடையது அல்ல. இந்திய பூபாகத்தை நாம் ஆள்வதே, சர்வதேச நாகரிகக் கோட்பாட்டுக்கு முரண். இன்று நாம் தர்மகர்த்தா, அல்லது மைனருக்குக் கார்டியன், என்ற முறையிலே இங்கு இருக்கிறோம், வெற்றி வீரர் என்ற முறையிலே அல்ல. இந்தியர்களைக் கேவலப்படுத்த, நாம் ஒன்றும், அவர்களைவிட, அறிவிலேயோ ஆற்றலிலேயோ, நாகரிகத்திலேயோ, மிக்கவர்கள் என்றும் கூறிவிட முடியாது. வர்ணாஸ்ரம முறையின் பயனாக, அந்தப் பூபாகத்து மக்கள் சண்டாளன், நீசன், பாபத்மா, சூத்ரன், என்று குலத்தமிர் கொண்டவர்களால் கூறப்பட்டுச் சகித்துச் சகித்துப் பழகிப் போனதால், கூலி, அடிமை, என்று நாம் கூறிவந்ததைச் சிலகாலம் பொறுத்துக் கொண்டனர். இது உரிமைக்குப் போரிடும் காலம். இன்று அத்தகைய ஆணவப்பேச்சை, அவர்கள் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். இந்திய பூபாகத்திலே இனங்களுக்குள் ஏற்பட்ட பிணக்கு நம்மை இங்கு அதிகாரிகள் என்ற நிலைக்குக் கொண்டு வந்தது என்பதை மறந்து, வீராதிவீரர்கள் நாம், அவர்கள் கேவலம் கோழைகள் என்று தவறாக எண்ணிக் கொண்டு, ஆணவமாக நடந்து கொள்ள வேண்டாம்!! நிறத்திமிர் வேண்டாம்!!" என்று விளக்கம் கூறி, வெள்ளை அதிகாரிகளின் மனதைக் கழுவி இருக்க வேண்டும். நிறத்திமிர் ஒழிந்தாக வேண்டும் என்று கூற வேண்டியிருக்க, இந்திய கடற்படையே அழிக்கப்படு வதானாலும் சரி, நான் அதற்குத் தயங்கப் போவதில்லை, இந்தக் கடற்படைக் கலகத்தை அடக்கியே தீருவேன், என்றா

உயர்ந்த நிலையிலே உள்ள சர்க்கார் அதிகாரி கூறுவது? கடற்படைக் கலகம் அடக்கப்பட்டு விட்டது. எதிர்பார்த்தது தான், ஆனால், அதற்காக, எடுக்கப்பட்ட நடவடிக்கையை நாடு முழுதும் கண்டித்தது, உலகிலே பல்வேறு இடங்களிலே, இதுபற்றிப் பேசப்பட்டது. எந்த வாயால், முதலமைச்சர் அட்லி, இந்திய சுயாட்சிக்கான திட்டம் தயாரிக்க மூன்று மந்திரிகள் இந்தியா புறப்படப் போகின்றனர் என்று கூறினாரோ, அதே வாயால், பம்பாய் கடற்படையினரிடையே ஏற்பட்ட வேலை நிறுத்தக் கலகத்தை அடக்க, பிரமாண்டமான கடற் படை, இந்தியாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்று கூற வேண்டியிருக்கிறதே! பெருமைக்குரிய பேச்சா அது? கலகத்தை அடக்கக் கப்பல்! பிறகு, வேறோர் கப்பலிலே, காகிதத் திட்டங்கள்!! நாட்டிலே மூண்டுவரும் விடுதலை உணர்ச்சியை அறியாத சர்க்காரின் முறை சரியல்ல!

கடற்படையில் குமுறல் ஏற்பட்டதும், குறைகளைக் களைந்து விட்டு, நாட்டு மக்களுக்கும் அதைத் தெரிவித்து விட்டு, நாட்டிலே உள்ள கட்சித் தலைவர்கள் அனைவரையும் அழைத்து, விஷயத்தை விளக்கி வைத்து, அவர்களைக் கொண்டு, மக்களின் மனதிலே, சாந்தியும் சமாதானமும் உண்டாகும்படிச் செய்திருக்க வேண்டும். அறிக்கைகள் விடுவதன்மூலம், மக்களைச் சமாதானப்படுத்தலாம், என்று பிரிட்டிஷ் சர்க்கார், பிரிட்டனைப் பொறுத்தவரையில் எண்ணலாம், இந்தியாவைப் பொறுத்த வரையில் எப்படி அப்படி எண்ணலாம்? அன்னிய ஆட்சியின் அறிக்கைகளைச் சுதந்திர ஆர்வத்திலே எதையும் தியாகம் செய்யும்துணிவு பெற்றுள்ள மக்கள், எப்படி ஏற்றுக் கொர்ண்டு திருப்தி

அடைவார்கள்? நாட்டு மக்களின் தலைவர்களைக் கொண்டுதான், இந்தத் 'திருப்தி' உண்டாக்கச் செய்ய முடியுமே தவிர, சர்க்கார் அன்னிய சர்க்காராக இருக்கும் வரையிலே, தானாக அதனைச் செய்துவிட முடியும் என்று எண்ணுவது வெறும் பைத்யக்காரத்தனம். பம்பாய் சம்பவத்துக்குப் பிறகு, நாட்டிலே உள்ள கட்சித் தலைவர்களைக் கொண்டு, பொதுமக்கள் மனதிலே, திருப்தி ஏற்படச் செய்திருக்க வேண்டும். சர்க்கார் இதனைச் செய்யாமல், எச்சரிக்கைகள், அறிக்கைகள், முதலிய பழைய சம்பிரதாயத்தாலேயே, பிரச்னையைத் தீர்த்துவிடலாம் என்று எண்ணிற்று. அதன் விளைவு என்ன? நாடெங்கும், பம்பாய் சம்பவம் பற்றியக் கண்டனம் கிளம்பிற்று. கண்டனத்துக்கு ஆரம்பக் காரணம் அது, ஆனால், வேறு பலப்பல காரணங்கள், இயற்கையாகவே அதனுடன் இணைந்து கொண்டன, பற்பல அதிருப்திச் சக்திகளும் ஏக காலத்திலே ஒன்றோடொன்று பிணைந்து கொண்டால், கலவரத்தின் அளவும், தன்மையும், போக்கும் விபரீதமாகிறது. காஞ்சிபுரத்தில் நடைபெற்ற சம்பவம் இந்தக் கதம்ப உணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

மாணவர்கள், ஹர்தால் செய்யக் கிளம்பினர். காரணம் என்ன? பல இடங்களிலே நடந்த செய்திகளைப் படித்தனர். பம்பாய் சம்பவம், ரஷீத் அலி, பர்ஹானுதீன் ஆகியோர் தண்டிக்கப்பட்டது, போன்ற சம்பவங்கள், அவைகளைக் கண்டிக்க, ஆங்காங்கு நடைபெற்ற வேலை நிறுத்தம், கடை அடைப்பு ஊர்வலம் ஆகிய செய்திகளைப் படித்தனர், எனவே, அவர்கள், தாங்களும், ஹர்த்தால் நடத்த வேண்டு மென்று விரும்பினர்.

பம்பாய் சம்பவத்துக்குப் பிறகு, நாட்டிலே உள்ள எல்லாக் கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு கூட்டு அறிக்கை மூலம், மக்கள், மனதிலே இதுபற்றி அதிருப்தி எழாதபடியான இதஉரை கூறச் செய்திருந்தால், சாதாரணமான நாட்களிலே, சாந்தத்தோடு நடந்துகொள்ளும் அம்மாணவர்கள், அன்று ஹர்த்தால் நடத்த விரும்பியிருக்க மாட்டார்கள். 'ஹர்த்தால்' நடத்த விரும்பியபோது, பள்ளிக்கூட நிர்வாகிகள், தமது அதிகாரத்தை நிலைநிறுத்த முனைகின்றனர், மாணவர்கள், தங்கள் ஆர்வத்தையும் நிலைநாட்ட முனைகின்றனர், இரு சக்திகளும் மோதுவதால், ஹர்த்தால், கலவரம் என்ற உருவத்தை அடைகிறது. அந்த நேரத்திலேயும், பல்வேறு கட்சித் தலைவர்களைக் கொண்ட ஓர் கூட்டுக் கமிட்டி இருந்திருந்தால், கலகம் வளராது -துவக்கத்திலேயே, தொல்லை வராதபடி பார்த்துக் கொள்ளலாம். "மாட்சிமை பொருந்திய மன்னர் சர்க்கார்" மற்றவர்களைக் கொண்டு, இந்தக் காரியத்தை நடத்துவதா என்ற மனோபாவத்திலே நடப்பதால், கலகத்தை அடக்க, அதிகாரிகளை அழைத்தது. கலகம் வளர்த்தது.

பம்பாய் சம்பவம், பார்ஹானுதீன் தண்டனை என்ற அதிருப்தியை மாணவர்கள் ஆரம்ப நேரத்தில் பேசினர். அந்தப் பேச்சுடன், வேற பல, "அதிருப்திகள்" தாமாக இணைந்து கொண்டன.

"ஆமாம் சார்! நூல் சரியாக கிடைப்பதே இல்லை! இதற்கு ஒரு கன்ட்ரோலாம்! நல்ல கன்ட்ரோல், நமது உயிரை வாங்கும் கன்ட்ரோல்" என்று ஒருவர் கூறுகிறார், உடனே கூட்டத்தில் ஒரு பகுதி,

கன்ட்ரோல் ஒழிக! கன்ட்ரோல் ஆபீஸ் ஒழிக என்று கூச்சலிடத் தொடங்குகிறது.

"என்ன, கூட்டம்? ஏன் இந்தக் கூச்சல்?" என்று கேட்கிறார் இன்னொருவர்!

''பள்ளிக் கூடத்துப் பிள்ளைகள் ஹர்த்தால் செய்கின்றனர்" என்று ஒருவர் பதில் கூறுகிறார். அதற்குள், கன்ட்ரோல் ஒழிக என்ற சத்தம் கேட்கிறது. "அது என்ன? என்று கேட்கிறார் அந்தத் தோழர். "இந்த நூல் கன்ட்ரோல் இருக்கிறதே, அது தவறு என்று கிளர்ச்சி நடக்கிறது" என்று பதில் கூறுகிறார்; உடனே அது கேட்ட தோழர் "ஆமாம் சார்! பெரிய தொந்தரவாகி விட்டது. இந்த ரேஷன் எப்போது சார், ஒழியும்? என்று கேட்கிறார். "நம்மை எல்லாம் அரைப் பட்டினியாக்கி, நமது உடலைப் பாழாக்கி, பிறகுதான் போகும் என்கிறார் இன்னொருவர், "நாற்றம் குடலைப் புரட்டுகிறது. இந்த ரேஷன் அரிசியை எங்கே இருந்துதான் கொண்டு வந்தார்களோ தெரியவில்லை" என்று கூறுகிறார் இன்னொருவர்; உடனே, "ரேஷன் ஒழிக! புழுத்துப்போன அரிசி ஒழிக! ஒரு வகுப்புக்கு ஒருவிதமாகவும் மற்ற வகுப்புக்கு மற்ற விதமாக ரேஷன் தரும் முறை ஒழிக! என்று கூட்டம் கூச்சலிடுகிறது. கூட்டத்தில் ஒரு பகுதி, ரேஷன் ஆபீசுக்கே போக ஆரம்பிக்கிறது. ஆரம்ப நோக்கம் அது அல்ல! ஆனால் ஒரு விதமான அதிருப்தி தெரிவிக்கப்பட்டதும், மற்ற அதிருப்திகள், மனதிலே குமுறிக் கொண்டிருக்கும் மற்றக் குறைகள், கொந்தளித்து, ஒன்றை ஒன்று காந்த சக்தி போல் இழுத்துக் கொண்டு, பிரம்மாண்டமான உருவை அடைந்து

விடுகிறது. இத்தனை விதமான அதிருப்திகளும், அவ்வப்போது நீக்கப்படாததால், ஒருசமயத்தில் அவையாவும் ஒன்று கூடும்போது, கலகம் உச்ச நிலை அடைகிறது; சாதாரண சமயத்திலே செய்யக்கூடாது என்று எண்ணும் எந்தக் காரியத்தையும், அந்த நேரத்தில் மக்கள் செய்கின்றனர். அச்சம், தயை, தாட்சணியம், காரணம், கேள்வி, நிதானம் எதுவும் அப்போது அவர்களிடம் இதலை காட்ட முடிவதில்லை. அவர்கள், அதுவரை மறைந்திருந்த ஒரு சக்தியினால் நடத்தப்படுகிறார்கள்; ஆவேச உணர்ச்சியிலே இருக்கிறார்கள். கலவரங்களின் தன்மை இதுதான்.

சர்க்கார், கலவரங்களை அடக்கக் கடமைப்பட்டவர்கள் என்று மட்டுமே கருதினால், போதாது. கலவரங்கள் கிளம்பாத படி, ஆரம்பத்திலேயே அதிருப்திகள் தோன்றாதபடி செய்ய வேண்டும். அதனைச் செய்ய அன்னிய சர்க்காரால் முடியாது. ஆகவே, நாட்டிலே உள்ள பல்வேறு கட்சித் தலைவர்களைக் கொண்ட, அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்; "ஆள்வது நாம், மக்களை இப்படி நடக்க வேண்டும், இவ்விதம் நடக்கக் கூடாது என்று வழி காட்டுபவர்கள், கட்சித் தலைவர்களா?" என்று சர்க்கார் எண்ணினால் பலன் இல்லை. இன்று நடக்கும் சர்க்கார், நாட்டு மக்களின் எதிர்ப்புக்கு இடையே உள்ள அன்னிய சர்க்கார், ஆகவே, அது, தான் இருப்பதற்கே முதலில் சமாதானம் சொல்லியாக வேண்டும்!

சர்க்கார், கலகங்களை அடக்கினர், மக்களும், கலவரமும் பீதியும் ஒழிந்தது என்று திருப்தி அடைவர். சர்க்கார் அதிகாரி களும், கலவரத்தை அடக்கிவிட்டோம் என்று பெருமை

அடைவர், ஆனால், பிணங்கள் கொளுத்தப்பட்டன, புண்ணுக்கு மருந்து பூசப்பட்டது, தழும்புகள் உள்ளன, அடக்கப்பட்ட அமளியின் விளைவுகளாக! சர்க்கார், மக்கள் மனதிலே, இதனால் இயல்பாக ஏற்படக்கூடிய வேதனையின் தன்மையை உணரவேண்டும். சாதாரண நகரம் காஞ்சிபுரம், இதிலேதுப்பாக்கிப் பிரயோகத்தால் நாலு பேர் இறந்தனர். ரயில் போகாத இடம் செய்யாறு இங்கு ஒருவர் இறந்தார் அதிகாரிகளைக் கண்டால், பணிவாகவும் பயத்துடனும் நடந்து கொள்ளும் இடங்கள் இவை; இங்கே அதிகாரிகள் அல்லலுக்கு ஆளாயினர். இந்த அமளியின்போது, அஹிம்சை நசித்தது பற்றிக் காந்தியார் கவலையுடன் பேசியுள்ளார். கலவரத்தின் போது நடைபெற்ற, கல்லெறி, தீ மூட்டுதல், கடைகளைச் சூறையாடுதல் போன்ற காரியங்கள், நமக்கு நாமே நஷ்டத்தை யும் கஷ்டத்தையும் ஏற்படுத்திக் கொண்டதுதான் என்பதை, கலவரத்தில் ஈடுபட்டவர்களே கூட, உணர்கிறார்கள். ஆனால், கலகம், கலவரம், கல்லெறி, தாக்குதல் என்பவைகளையே திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டு, சர்க்கார், தனது கடமையைத் திறம்படச் செய்துவிட்டதாகத் திருப்தி அடைவது கூடாது. பல்வேறு இடங்களிலே நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களைப் பற்றி, விசாரணை நடத்த வேண்டும்; பொது மக்களுக்கு இதனால் ஏற்பட்டுள்ள மனப்புண் ஆற்றப் படவேண்டும். கலகம் செய்தனர் - சுட்டோம் - சுருண்டனர் என்று பிரச்சனையைச் சர்க்கார் சுருக்கமாக்குகின்றனர். துப்பாக்கிப் பிரயோகத்துக்கு அவசியம் இருந்ததா? நிலைமை வளர விடப்பட்டதா? தானாக வளர்ந்ததா? ஆரம்பத்திலே அதிகாரிகள், கலக உணர்ச்சியைத் தடுக்கவும், குறைக்கவும்

தக்க முயற்சி எடுத்துக் கொண்டனரா? பொதுமக்களின் தலைவர்களைச் சர்க்கார் அழைத்தனரா? என்பன போன்றவைகள் விசாரிக்கப்பட்டு, விளக்கப்படவேண்டும். மக்கள் மனதிலே, சமாதானம் நிலவ அதுவே மார்க்கம்.

பெயர் - தயாளன்

வயது - 14

நிலைமை - குண்டு மார்பிலே பாய்ந்து இறந்தான்

என்று பிரேத விசாரணையை மட்டும் நடத்துவதால், ஐயோ மகனே! என்று அலறிய தாய், ஆறுதல் அடைய முடியாது. குண்டுபட்டு இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு, மட்டுமல்ல, நாட்டு மக்கள் அனைவருக்குமே, வேதனை நீங்க வேண்டுமானால், கலகங்கள் கிளம்பாது; அதிருப்திகள் வளராது என்று உறுதி கூறவேண்டும், சர்க்கார், நாட்டிலே உள்ள பல்வேறு கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று. அது எப்படிச் சாத்தியமாகும், கலகம் நடக்கத்தான் செய்யும், அதுபோது துப்பாக்கிப் பிரயோகம் நடந்துதான் தீரும் என்று பழைய பல்லவி பாடினால், நாகரிக சர்க்காரிலே நடுரோட்டிலே பிணம் விழுமா? என்று மக்கள் கேட்கத்தான் செய்வார்கள். "நான் என்ன செய்வது? நிலைமை அப்படி இருக்கிறதே!" என்று வெள்ளைக்காரர் கூறுவதனால், வெள்ளையனே! வெளியே போ! என்று கூறுவது தவிர, நாட்டு மக்களுக்கு வேறோர் முழக்கமும் கிடையாது.

*(திராவிட நாடு - 10-3-46)*

# 25. தங்க வயலில்

தங்கம் விளையும் வயல், அங்கு தரித்திரம் தாண்டவமாடுகிறது, தொழிலாளர் உலகில். மிகவும் முற்போக்கானது என்ற பெயர் பெற்றுள்ள மைசூர் சமஸ்தானம், கோலார் தங்கச் சுரங்கத்தை ஒரு வெள்ளைக்கார கம்பெனியிடம் ஒப்படைத்துவிட்டு, தன் வரையில் கணிசமான பலன் பெற்றுக்கொண்டு, சுரங்கத் தொழிலாளர்களைக் கம்பெனி எந்த விதமாக வேனும் நடத்திக் கொள்ளட்டும் என்று கவலையற்றுக் கிடக்கிறது. வெள்ளை முதலாளிகளுக்குக் கோலார் இலாபவேட்டைக் காடாகி விட்டது, தொழிலாளர் வாழ்வு, பரிதாபகரமாகி விட்டது. அந்தத் தொழிலாளரில் முக்கால்வாசிப்பேர் தமிழர், பழங்குடி மக்கள். பல ஆயிரம் அடி, பூமிக்கு அடியேசென்று, தங்கத்தை வெட்டி எடுத்துக் கொண்டு வந்து முதலாளியிடம் கொடுத்துவிட்டு, தரித்திரத்தால் பீடிக்கப்பட்ட வாழ்க்கையிலே அந்தத் தோழர்கள் உள்ளனர். கம்பெனிக்குப் பலகோடி ரூபாய் இலாபம். மைசூர் சமஸ்தானம் இதிலே ஆண்டு தோறும் இரண்டுகோடி ரூபாய்க்கு மேல் பெற்றுக் கொள்கிறது. தன் வயிறு நிரம்பியதும், சமஸ்தானம் திருப்தி அடைந்து தொழிலாளர்களைக் கம்பெனி எவ்விதமாகவேனும் நடத்திக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டது. தங்களுக்குக் கூலி போதாது, என்ற கிளர்ச்சியைத் தொழிலாளர்கள், மிகச் சாந்தமான முறையிலே, பல நாட்களாக எடுத்துக் கூறி வந்தனர். தொழிலாளர்களிடையே ஒற்றுமையும் கட்டுப்பாடும் இருக்கிறது. கோலார் சுரங்கத் தொழிலில் ஈடுபட்ட, சகல தொழிலாளர்களும், இந்தச் சமயம் ஒன்றுபட்டுள்ளனர். கோலார்

பகுதியிலே உள்ள, சகல தொழிலாளர் ஸ்தாபனங்களும், ஒருமுகமா உள்ளன. இவ்வளவும், கம்பெனிக்குத் தெரிந்தும், தொழிலாளரின் கோரிக்கைக்குச் செவி சாய்க்கவில்லை, எனவே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். கடந்த ஒரு மாத காலமாக இந்த வேலை நிறுத்தம் நடந்து வருகிறது, அமளியின்றி.. கோலார் தொழிலாளர்கள் மிகத் திறம்பட நடத்திக் காட்டும் இந்த வேலைநிறுத்தம், அவர்களின் மதிப்பை உயர்த்தியிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களின், வேலையின் தன்மையையும், அவர்களுக்குள்ள ஆபத்துக்களையும், அறிந்தவர்கள் அனைவரும், அவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். கம்பெனி யாருக்குக் கவலை எல்லாம் இலாபத்தில். சமஸ்தானமோ, கம்பெனிக்குச் சுயராஜ்யம் கொடுத்து விட்டது! தன் அடிமடியில் கைபோடாத வகையில், நல்லது என்ற எண்ணத்திலே, வருஷ வாரியிலே கிடைக்கும் இரண்டு கோடியை இரும்புப் பெட்டியிலே வைத்துப் பூட்டுவதிலே மட்டும் கண்ணுங் கருத்துமாக இருக்கிறது.

ஒருமாத காலமாக அந்தத் தொழிலாளர்கள் நிறுத்தம் செய்கின்றனர், என்றால் விளையாட்டல்ல. வேதனையுடன் பல்லயிரக்கணக்கான மக்கள் உள்ளனர் என்று பொருள். எவ்வளவோ பேருடைய வாழ்வு நொறுங்கி விட்டிருக்கும். இவ்வளவு கஷ்டத்தையும் பொறுத்துக் கொண்டு இருக்க, கம்பெனி, தனக்கு முன்பு கிடைத்ததுபோல இலாபம் கிடைப்பதில்லை என்று கூறுகிறது. கோலார் தங்கச் சுரங்கத்தின் மூலம் அந்த வெள்ளைக்காரக் கம்பெனி கொழுத்த இலாபம் அடைந்ததை உலகம் நன்கு அறியும், அந்தச் சுரங்கத்திலே

வேலை செய்ததால் தொழிலாளர்கள் கண்ட பலன், தேய்ந்த உடல், நோய் உறுப்புகளின் உருக்குலைவு முதலியனதான், அவர்களைக் கண்டாலே தெரியும். தொழிலாளர்கள் தங்கள் மாளிகையிலே உள்ள மூன்றாவது மாடிக்குப் பளிங்குக்கல் அமைக்கப் பணம் கேட்கவில்லை! குடிசையில் படுத்து உறங்கும்போது, பசியால் சிறுகுடலைப் பெருங்குடல் தின்றுவிடாதபடி தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே, கூலி கொஞ்சம் கூட்டிக் கொடுக்கும்படி கேட்கிறார்கள். கோடி கோடியாக இன்பத்தைக் குவித்துக் கொண்ட கம்பெனியார், ஏழை அழுத கண்ணீரைச் சட்டை செய்வதாகக் காணோம். இவ்வளவுக்கும், தொழிலாளர்கள் கோரிக்கையை ஈடேற்றுவதன் மூலம், கம்பெனிக்கு, மலைபோன்ற அளவு செலவும் இல்லை. அவர்கள் அடையும் இலாபத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தொழிலாளர்கள் கேட்பது, மிகமிகக் குறைந்த அளவுதான். கோடிகோடியாக இலாபமடித்த கம்பெனியை, நாடி நரம்பு முறியப்பாடுபடும் நமது தமிழ்த் தொழிலாளர்கள் கூலி உயர்வு என்ற முறையிலே கேட்பதெல்லாம், கம்பெனிக்கு 5-இலட்ச ரூபாய் செலவுதான் ஆகும். இதற்கு மனமில்லை, கம்பெனிக்கு. சமஸ்தானமோ, கம்பெனிக்கு வக்கீல் வேலை செய்வதிலே காட்டுகிற அளவு ஆர்வத்தைத் தொழிலாளர் துயர் போக்கக் காட்டக் காணோம். ஒருமாத காலமாக, வேலை நிறுத்தம் நடக்கிறது, கம்பெனி அசைந்து கொடுக்கவில்லை, சமஸ்தானமோ, சட்டத்தையும் சமாதானத்தையும் நிலை நாட்டுவதிலே அக்கறை காட்டுகிறதே ஒழிய, ஒருமாதமாகப் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினியுடன் போராடி வேலையின்றி வேதனைப்படுகிறதே, இது, சமஸ்தானத்துக்கே

கேவலமல்லவா என்ற எண்ணக்காணோம். உலகிலேயோ, மைசூர் சமஸ்தானத்துக்குப் பெரிய மதிப்பு. இந்த மதிப்பு, கோலார் தங்க வயல் வேலை நிறுத்தத்தின் பலனாக நிச்சயம் குறையும். ஏன், மைசூர் சமஸ்தானம், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் சார்பிலே பாதுகாவலனாக நின்று, கம்பெனியை ஒழுங்காக நடந்து கொள்ளும்படி கட்டாயப் படுத்தக் கூடாது? ஒருசில துரைமார்களின் புன்சிரிப்புக்காக, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின், கண்ணீரைக் கண்டு காணாதது போலிருப்பதா? மைசூர் சமஸ்தானத்திலே, சந்தனக்காடு உண்டு, மின்சார உற்பத்தி நிலையம் உண்டு, தொழில்வளம் உண்டு, தங்கம் விளையும் நாடு அது என்று உலகம் படிக்கிறது, மைசூரைப் பாராட்டுகிறது, ஆனால் அதே செய்தியுடன், மைசூரில் அரைப்பட்டினியுடன் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் உள்ளனர் என்பதையும் படித்தால், உலகம் மைசூர் சமஸ்தானத்தைப் பாராட்டவா செய்யும்? மைசூர் சமஸ்தான நிர்வாகிகள், இதனைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். சமஸ்தானத்திலே, மன்னரின் மன மகிழ்ச்சிக்காகவும், பொழுதுபோக்கு, விளையாட்டுக்காகவும் வளர்க்கப்படும் குதிரைகள், வேறு பல மிருகங்கள், பூந்தோட்டங்கள் ஆகியவைகளுக்குச் செலவிடப்படும் தொகையைவிட, தங்கத்தை வெட்டி எடுத்துத்தரும் தொழிலாளர்களின் வாழ்க்கைக்காகச் செலவிடப்படும் தொகை குறைவு! சமஸ்தானம் இதனை மறுத்தலாகாது. தொழிலாளரின் துயரைத்துடைக்க விரைந்து முன்வரவேண்டும். அப்போது தான், சமஸ்தான மன்னர், மக்களின் பாதுகாவலராக இருக்கிறார் என்ற பெயர் பொருந்தும், இல்லையேல், இத்தகைய

சமஸ்தனாதிபதிகள், ஏகாதிபத்யக் கண்காட்சிச் சாலையின் கொலுப்பொம்மைகள் என்ற எண்ணம் உறுதிப்படும். மைசூர் தன் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முன்வருதல் வேண்டும். தொழிலாளர் வாழ்க்கையிலே இப்படி வறுமைத் தேள் கொட்டும்படிச் செய்துவிட்டுப் பிறகு, அவர்கள் கட்டுக்கு அடங்குவதில்லை வேலை நிறுத்தம் செய்து தொழில் பெருக்கத்தை கெடுக்கிறார்கள் - கலவரம் செய்கிறார்கள் - என்று குறை கூறுவதும், சரியாகுமா? ஒரு மாத காலமாக, வேலை நிறுத்த வேதனையைச் சகித்துக் கொண்ட தோழர்களின் மனஉறுதியையும் பண்பையும் நாம் பாராட்டத்தான் வேண்டும். ஆனால் இந்த அமைதி என்றும் நிலவும் என்று சமஸ்தானம் எண்ணுவது ஏமாளித்தனமாக முடியும். பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. அதைத் தாண்டும் நிர்பந்தத்தைத் தொழி லாளருக்கு ஏற்படுத்தாது, அவர்களின் குறைகளைக் கவனிக்க வேண்டும். கிளர்ச்சி செய்தால் இருக்கவே இருக்கிறது, குண்டு, என்று கருதுவதானால், அறிவு உலகம் அந்தப் போக்கைக் கண்டித்தே தீரும். கோலார் தங்க வயல் தோழர்களின் துயரைக் கேட்டுத் தமிழகம் மிகவும் மனம் வருந்துகிறது. ஆங்காங்கு உள்ள திராவிடர் கழகங்கள், கோலார் தங்க வயல் தோழர்களின் குறையை நீக்கும்படி, மைசூர் சமஸ்தானத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டும். தீர்மானங்களைச் சமஸ்தானத்துக்கு அனுப்ப வேண்டும். தந்திகள், மைசூர் சமஸ்தானத்துக்கு அனுப்ப வேண்டும். பல்லாயிரக்கணக்கான அந்தப் பாட்டாளிகளின் பக்கத்திலே தமிழகம் நிற்கிறது என்பதைச் சமஸ்தானம் உணரும்படிச் செய்யவேண்டும்.

*(திராவிட நாடு - 17-3-46)*

## அண்ணாவின் உடல்நலக்குறைவு - அறிவிப்பு

**தோழர்களுக்கு**

இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கும் உடல்நலக் குறைவு, இன்னும் சிறிதுகாலத்துக்கு வெளியூர் போக முடியாத நிலைமையில் இருப்பதால் மதுரை, தென்னாற்காடு ஆகிய வட்டாரங்களில் இருந்து வந்த அழைப்பையும் மற்றும் தோழர்களின் அழைப்பையும் உடனே நிறைவேற்றி வைக்க முடியாமைக்குப் பெரிதும் மன்னிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணாதுரை

*(செய்தி - திராவிட நாடு - 17-3-46)*

# 26. மரண சாசனம்!

"நான் சாகவில்லை! நோய்க்கிருமிகள் உன் உடலைத் துளைத்து, இரத்தத்தைக் குடித்து, என்னை நடைப்பிணமாக்கிய பிறகு, படுக்கையில் புரண்டு, கண் மங்கி காது பஞ்சடைந்து, ஈளை கட்டி, இருமி, விக்கி வியர்த்து, நான் சாகவில்லை பாம்பு கடித்து விஷம் ஏறிச்சாகவில்லை. புலி கடித்து இறக்க வில்லை. நான் சாகவில்லை, தோழர்களே! கொல்லப்பட்டேன்!! என் கடமையைக் களிப்புடன் செய்துகொண்டு இருக்கையில் கொல்லப்பட்டேன். உள்ளத்திலே, மூண்ட உணர்வுத் தீயினால் உந்தப்பட்டு உற்சாகத்துடன், ஊர்சீர்பட உழைத்துக்

கொண்டிருந்த நேரத்தில் கொல்லப்பட்டேன். எந்த மக்களுடைய வாழ்வுதுலங்க வேண்டுமென்பதற்காக என் சொந்த வாழ்வு சிதைவதையும் பொருட்படுத்தாது பணிபுரிந்து வந்தேனோ, அதே மக்களாலேயே கொல்லப்பட்டேன். நண்பனை விரோதி என்று கருதிக் கொண்டு தொண்டு செய்பவனைத் துரோகி என்று எண்ணிக் கொண்டு மனதிலே மாற்றான் தூவிய எண்ணத்தை வளர விட்டுக் கொண்டதால், மருண்ட மக்கள் என்னைக் கொன்றனர். என்னைக் கொல்வதன் மூலம் ஏதோ ஒரு பெரிய கேட்டினைக் களைவதாக அவர்கள் எண்ணிக் கொண்டனர் அவர்கள் அறியார்கள், அவர்கள் கொன்றது தங்களுடைய தோழனை நண்பனை இனத்தவனை, என்பதை. என் இரத்தம் அவர்களின் கண்களுக்குக் காட்சியாக இருக்கும். அவர்கள் நெடுநாளைக்குப் பிறகேனும் கண்ணீர் சொரிவர் சிந்தப்பட்ட இரத்தம், சமுதாயக் கரையைக் கழுவத் தியாகி செய்த கடைசி பணி என்பதை உணர்ந்து. சொல்லால் செயலால், அவர்களுக்காகவே, பாடுபட்டேன், இரத்தமும் அதற்காகப் பயன்பட்டது. நான் வீணுக்கு மடியவில்லை. வேலையைச் செய்துவிட்டே மடிந்தேன். இகழ்வோர் இன்றுஉளர் நாளை அறிவர் உண்மையை. அறியாமற் போயினும் என்ன? நான் அறிவேன், உயிர் போகும்வரை, நான், மனமார நம்பிய உன்னதமான கொள்கைகளைப் பரப்ப உழைத்து, அதே பணியிலேயே, இறந்துபட்டேன் என்பதை. நான் சாகவில்லை செத்து விட்டிருந்தால் இந்தச் சாசனம் தேவைப்பட்டிராது. ஏனெனில், என் வாழ்நாள் முழுவதும், பணிபுரிந்து விட்டிருப்பேன். இப்போதோ, நான் கொல்லப் பட்டேன் வாழ்ந்திருப்பின், பணிபுரிந்திருப்பேன்; அந்தப்

பணிபுரிய முடியாத நிலை ஏற்பட்டது செய்யக்கூடியது அத்தனையும் செய்து முடிக்குமுன் கொல்லப்பட்டதால், செய்யவேண்டிய பணியில் செய்யாது விட்ட அளவு கொஞ்சம் இருக்கிறது. பாக்கி இருக்கிறது என்னிடம் இரக்கம் காட்டுவோர். என் பொருட்டுக் கண்ணீர் விடுவோர் அந்தப் பாக்கிக்காரியத்தை, என் சார்பில் செய்ய வேண்டும். இதுவே என் மரண சாசனம்."

திராவிடர் கழகத்திலுள்ள தோழர்கள் ஒவ்வொருவரும், தயாரித்துக் கொள்ள வேண்டிய மரண சாசனம் இது. வீழ்ச்சி யுற்ற இனத்தை எழுச்சிபெறச் செய்துவிட்டோம்; எந்தவிலை கொடுத்தேனும், விடுதலையைப் பெற்றுத் தீரவேண்டிய கட்டத்தில் வந்துவிட்டோம், வெட்டும் குத்தும், இனி நம்மை விரைந்து தேடிவரும்; வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே அமைந்துள்ள ஊஞ்சலிலே நாம் உலாவ வேண்டியவர்களாக இருப்போம்; வைகைக்கரையிலே, சென்ற கிழமை, நடந்த அமளி நமக்கு அறிவுறுத்தும் பாடம் அதுதான்; நாம் இருக்குமட்டும் தமது ஆதிக்கத்துக்கு ஆபத்துதான் என்பதை ஐயந்திரிபற அறிந்து கொண்ட வர்ணாஸ்ரமம், நாம் செத்தால் மட்டுமே, தான் இன்னும் கொஞ்ச காலத்துக்கேனும் ஜீவித் திருக்க முடியும் என்று நன்கு தெரிந்து கொண்டு, நம்மைக் கொல்லக் கோர நாட்டியம் செய்தது. நமது இரத்தத்தையும் கொஞ்சம் குடித்து ருசி பார்த்தது.

பகலிலிருந்து இரவு வரும்வரை, பரந்த ஆற்றுவெளியில், பாண்டிய மன்னரின் பரிவாரங்கள் நடமாடிய இடத்தில், யவனரும் கிரேக்கரும், பொன்னையும், மணியையும்

வீசி,துகிலையும் அகிலையும் வாங்கிச் சென்ற மதுரையில், கல்லையும் மண்ணையும், கத்தியையும், அரிவாளையும் தடியையும் வீசி, தமிழரின் இரத்தத்தைத் தமிழர் கொட்டினர். ஆண்களையும் பெண்களையும் அலற அடித்தனர். சிக்கினவர்களைச் சீரழித்தனர். மதுரையில், அல்லோலகல்லோல மாயிற்று. இவ்வளவும், ஏதற்குப் பிறகு? ஓர் நாளும் ஓர் இரவும். மதுரையே கண்டிராத மகத்தான மாநாடு நடைபெற்று, மக்களின் மனதிலே மகிழ்ச்சிப் பெருக்கெடுத்தோடிய பிறகு! மாநாட்டுத் தலைவர் பெரியார், திராவிடத் தோழர்களுக்குக் கட்டுப்பாடும் ஒழுங்கும் தேவை என்பதை மணிக்கணக்கில் வற்புறுத்திக் கூறியதுடன் காங்கிரஸ் ஆட்சியினருடன் நாம் கண்மூடித்தனமான எதிர்ப்பில் இறங்க மாட்டோம், நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் நற்காரியங்களிலே அவர்கள் ஈடுபட்டால் ஒத்துழைப்போம் என்று இதமொழி பேசியபிறகு. ஏன் விளைந்தது பெருங்கலகம்.

மதுரையில் இப்படி ஒரு மாநாடா! அதற்கு, நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடுவதா? பெண்கள் இவ்வளவு பெருங்கூட்டமாகவா? ஊர்வலம், இவ்வளவு அழகாக, அமைதியாக, கட்டுப்பாடாக, நடப்பதா? பிரச்சாரத்தின் தன்மை இப்படி இருப்பதா, யாரையும் புண்படுத்தாமல், விஷய விளக்கமும் அறிவு வளர்ச்சியும் தருவதாக இருக்கிறதே, கலக உணர்ச்சியைக் கிளப்பிவிடவும் வழிகாணோமே, என்ன செய்வது? இரவெல்லாம், திருவிழாப்போல், திரள் திரளாகக் கூட்டமா? நீலநிறவானிலே நீந்தி விளையாடும் நிலவும், அதன் ஒளியால் ஒளிபெற்ற வெண்மணலும், அந்த மணற் பரப்பிலே, திராவிடத்தோழர்களும், அவர்கள் நெஞ்சிலே,

களிப்பும், இருப்பதா? அந்தக் காட்சியைக் கண்டும் நாம் சகிப்பதா? என்ற எண்ணம் கொண்டனர்; கூடினர்; யாது பேசினரோ; என்ன திட்டம் வகுத்தனரோ நாம் அறியோம்; புன்னகைப் பூந்தோட்டத்தைப் புயல் அடிக்குமிடமாக்கினர் மறுநாள். களிப்பு நடமாடிய இடத்திலே கலகத்தை நடனமிட விட்டனர். நாசவேலை செய்தனர்.

இவ்வளவுக்கும், காரணம் கூறவேண்டி, கோயில் சென்ற பெண்களைக் கேவலமாகப் பேசினர், கொடி கொளுத்தினர், விக்ரஹத்தை எடுத்தனர், என்று பழி கூறினர். செய்தவர்கள் யார்? கருப்புச்சட்டைப்படையினராம்! கோயிலிலே அதிகாரிகள், ஆள் அம்பு இல்லையா? அவர்கள் ஏன், அந்த நேரத்திலேயே, அந்தத் தோழர்களைப் பிடித்திருக்கக்கூடாது, அதிகாரிகளிடம் ஒப்படைத்திருக்கக் கூடாது? செய்தனரா? இல்லை! கூறப்படும் செயலைப் புரிந்தவர்களைக் காட்டவுமில்லை; செயலைக் கண்டவர்கள் இன்னின்னார் என்று சொல்லவுமில்லை; செயல் நடந்ததாகக் கூறப்படும் கோயிலிலே உள்ள அதிகாரிகள் இதுபற்றி வாய்திறந்தொரு வார்த்தை கூறவுமில்லை; மீனாட்சி ஆலயத்திலே பங்கம் செய்ததாகப் புகார் கூறினாரேயன்றி, அம்மையின் பெருமையைக் கூறிக்கொண்டல்ல அமளி நடத்தியது, வந்தேமாதர கோஷத்துடன்; தேசீய நாதத்துடன் நடத்தினர். ஒன்றுக்கொன்று பொருத்தமோ, பொருள் விளக்கமோ, இருப்பதாக யாரேனும் கூறமுடியுமா?

அக்ரமமாக அமளியை நடத்திவிட்டு, தமது செயலை மறைக்க இந்தத் திரையைத் தயாரித்துக் கொண்டனர். துரைத்

தனத்திலே வீற்றிருப்பவர்கள், தமது கட்சியினர், ஆகவே, எதிர்க்கட்சியினரை எது செய்யினும், அவர்மீது என்ன பழிச் சொல் வீசினும், கேட்பார் இரார், என்ற தைரியம் தவிர, வேறில்லை.

கருப்புச் சட்டைப் படையினரைக் கண்ட இடங்களி லெல்லாம் அடித்தனர்; துரத்தினர்; கருப்புச் சட்டைகளைக் கொளுத்தினர்; மாநாட்டுப் பந்தலையே கொளுத்தினர்; ஆத்திரம் கொண்ட பொது மக்கள் செய்தனர் என்று அக மகிழ்ச்சியுடன், தேசிய இதழ்கள், தீட்டின. நெடுநாட்களாக இருந்து வந்த நெஞ்சு ஊறல் ஓரளவுக்கு அவைகளுக்குத் தீர்ந்திருக்கும்! வெற்றிக்களிப்புடன் இவைகளை எழுதிய பிறகு, புத்திமதிகள் கூறச்சில ஏடுகள்துவங்கின, நாடு, எதையும் சகித்துக் கொள்ளும், ஆனால் கோயில்விஷயமாக மட்டும் பொறுக்காது, என்று ஒரு ஏடு, எழுதுகிறது. செய்தது சரி என்று தட்டிக் கொடுக்கும் முறையிலும், தூண்டிவிடும் முறையிலும், எழுதுகின்றன சில ஏடுகள். நையாண்டி செய்யவும் தமக் கிருக்கும் மகத்தான செல்வாக்கை மானிலமே அறிந்துகொள்ள மதுரைச் சம்பவம் உதவிற்று என்று மனங்களிக்கவும் முன் வந்துள்ளன சில எடுகள். ஏடு இன்றி இடர்ப்படும் இயக்கத்துக்கு, இவை, கட்டணமில்லா விளம்பரம்! காசு கொடுத்து இத்தனை ஏடுகளிலும், அகில இந்திய ரேடியோவிலும், நாம், கருப்புச் சட்டைப்படையின் வளர்ச்சியைப்பற்றி மக்களுக்குக் கூற முடியாது. சிறிது இரத்தம் கொடுத்துப் பெற்றோம்; பழிகூறப் பட்டது என்ற போதிலும், அன்றும் மறுநாளும், மேலும் சில நாட்களும், இருக்கும்! செய்திருப்பர்" என்று மக்கள் நம்பியும் இருக்கக்கூடுமென்ற போதிலும். மெள்ள மெள்ள, அவர்கள்

"இருக்குமா? இப்படி நடந்திருக்குமா? ஏன் செய்யப் போகிறார்கள்? செய்தார்கள் என்றே வைத்துக்கொள்வோம், செய்தவர்களைப் பிடிப்பது, தண்டிப்பதுதானே முறை, அதற்காக வேண்டி ஆயிரக்கணக்கான மக்களை இம்சிப்பதா, ஊரையே அமளியிலே ஈடுபடுத்துவதா?" என்று யோசிக்காமல் இருக்க முடியாது. யோசனை செய்பவர்களிலே நேர்மையாளர்கள் அனைவரும், உண்மையை உணரத்தான் செய்வார்கள்.

சம்பவம் நடந்த இடம் மதுரை. ஆனால், கருஞ் சட்டைப்படையைப்பற்றி "இந்தியா" எங்கும்பேச்சு! இதற்காக நாம் கொடுத்தவிலை, சிறிதளவு இரத்தம், கல்தடுக்கிக் கீழே விழுந்திருந்தால்கூட இரத்தம் கசியும்! உல்லாசப் பயணத்திலே, மோட்டார் மோதினால், இரத்தம் வழியும்! அந்த இரத்தத்தைவிட வைகைமணலிலே கலந்த இரத்தம் மகத்தான நன்மையை நமக்கு அளித்துவிட்டது. நாம், வாழ்ந்தால் தமக்குத் வாழ்வு இல்லை, என்ற எண்ணத்தில், பழைமை, வர்ணாஸ்ரமம், ஆரியம் வந்துவிட்டது, என்ற நிலையை நமக்குத் தெரிவித்து விட்டது. நம் நன்றி அதற்காக.

மதுரையில், கலக உணர்ச்சியை அவ்வளவு சுலபத்திலே தூண்டிவிட, அவர்களுக்கு வசதி அதிகம். கூர்ந்து கவனிப்பவர்கள் இதனை நன்கு அறிந்து கொள்ளக்கூடும். தேசிய ஏடுகள் திருப்தியுடன் தீட்டின்வே, "ஆத்திரங்கொண்ட பொதுமக்கள்" இச்செயல் புரிந்தனர், என்று அதன் உண்மையை எப்படிப்பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம். கருப்புச் சட்டைப்படையினர் அடாது செய்தனர்,

அதனாலேயே இவ்வளவு அமளி நடந்தது என்று பேசுவோரும், மதுரையம்பதியின் பற்பல சம்பவங்களைக் கூர்ந்து நோக்கினால், இடம், அத்தகைய கலகத்துக்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது என்பதை உணரலாம்.

சென்ற கிழமை கருப்புச் சட்டைப்படையினர் மீது கோபம் பிறந்தது. எனவேதான் அமளி நடந்தது, என்று குற்றத்தைக் கருப்புச் சட்டைப் படையினர்மீது திருப்பி விட்டனர்.

இந்தக் கிழமை நடந்தது என்ன? திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ், ஒரு கூட்டத்தால், வழிமறித்து நிறுத்தப்பட்டது. டிரைவர், பயர்மென் ஆகியோர் தாக்கப்பட்டனர். அவர்களைப் பக்கத்திலே இருந்த சுடுகாட்டுக்குத் தூக்கிச் சென்று அடித்தனர். அடித்ததுடன் விடவில்லை, அவர்களிடம் இருந்த மணிபர்ஸ், கைக்கடியாரம் ஆகியவற்றைப் பறித்துக் கொண்டனர். என்ஜினில் தண்ணீர் ஊற்றி அணைத்தனர், கலங்கிய மக்கள், ஆபத்து அதிகரிக்கும் என்று பயந்து, ரயிலைவிட்டுக் கீழிறங்கி, நடந்து சென்றனர். பிறகு, ரிசர்வ் போலீசார் வந்தனர்; பாது காப்புத் தரப்பட்டு, இரயில் மதுரைக்குச் சென்றது.

இது, மதுரையில் நடைபெற்ற திருவிளையாடல், கருப்புச் சட்டைப்படையினர் மீதுஅல்ல, ரயில்வே மீது பாய்ந்தனர். ஊரெல்லாம் நடைபெற்ற ரயில்வே ஸ்ட்ரைக்கில், மதுரையில் தவிர, இந்த அமளி வேறு எங்கும் இல்லை. வேலை நிறுத்தத் தலைவர் வேலை நிறுத்தத்துக்கு விரோதமாக இருந்த டிரைவர், பயர்மென் ஆகியோரின் மணிபர்சையும், கைக்கடியாரத்தையும் பறித்துக் கொண்டு, தாக்கும் நிலை ஏற்படும் என்று

எண்ணினவர் அல்ல. வேறு எங்கும் இவ்வித அமளி நடந்ததில்லை. ஆனால் மதுரையில் நடந்தது.

கருப்புச் சட்டைப்படை மாநாடு நடைபெறுவதற்கு முன் கிழமை,- தோழர் புலாபாய் தேசாய் மரணத்துக்காக நாட்டிலே, எவ்வளவோ இடங்களில், ஊர்வலம், கடை அடைப்பு நடந்தன. எங்கும் அமளி கிடையாது. மதுரையில் உண்டு! ஊர்வலத்தில் கலகம், கடைகள் மீது கல்வீச்சு! ரிசர்வ் போலீஸ் குறுக்கிட்டுக் கண்ணீர்புகைக் குண்டு வீசிக் கூட்டத்தைக் கலைத்தனர். மதுரையில் மட்டும்தான்!

அதற்கும் முன்பு, காங்கிரஸ் கம்யூனிஸ்டு கைகலப்பு நேரிட்டு, மதுரையில் பெருங்கலவரம். கம்யூனிஸ்டு நிலையத்தின்மீது கல்வீச்சு! இருதரப்பிலும், பலமான சண்டைகள். பயங்கரமான சூழ்நிலை இருந்தது.

அதற்கு முன்பும், காமராஜ், ராஜகோபாலாச்சாரியார் தகறாரின்போது, கண்டன ஊர்வலம், அதிலே 'கலகம், கல்வீச்சு, கைகலப்பு, கத்திக்குத்துக்கள், இன்னபிற.

மதுரையில், கருப்புச்சட்டைப் படையினர் ஏதோ தகாத காரியம் செய்யவே, மக்கள் ஆத்திரங் கொண்டு கிளம்பி, கலகம் விளைத்தனர், என்று கூறிக் கண்ணில் மண் தூவுவோருக்குக் கூறுகிறோம் மதுரையில், இத்தகைய சம்பவங்கள், நித்ய நிகழ்ச்சியாகிவிட்டன; கிழமைதோறும் உண்டு இத்தகைய விழா! திங்கள்தோறுந் திருவிளையாடல் நடைபெறும்.

அவைகளை எல்லாம், தேசீய இதழ்கள், பத்திரிகையிலே, மூலை முடுக்கிலே, கடுகு எழுத்திலே பிரசுரிப்பார்; கருப்புச் சட்டைப் படைமீது நடந்த தாக்குதலை மட்டும், திருப்தியுடன், சந்தோஷத்துடன், முந்திரி எழுத்தில் முதல் பக்கத்தில் போட்டு நாட்டு மக்களுக்கு, அதன் மூலம், கருப்புச் சட்டைமீது வெறுப்பு மூட்டிவிடலாம் என்று எண்ணுகின்றன. நாட்டு மக்களில் இதழ்களில் வரும் செய்தி களையும் படித்துச் சிந்தனைக்கும் வேலை தரும் பகுதியினர் உள்ளனர். அவர்கள் மதுரையில், கலகமும் கலவரமும், வாரந் தோறும் நடைபெறுகிறது, எந்தச்சாக்குக் கிடைத்தாலும் போதும், கலகம் கூத்தாடுகிறது என்பதை உணர்வர். உணர்வோரில், உறுதியுள்ளம் படைத்தவர்கள் கேட்பர், சர்க்காரைப் பார்த்து, ஏன் மதுரையில் இவ்விதம் கலக உணர்ச்சி அடங்காத பசியுடன் இருக்கிறது என்று. யார் இத்தகைய கலக உணர்ச்சியைக் கிளப்புகிறார்கள்? என்பதைக் கண்டறியச் செய்வர்.

எனவே, கருப்புச் சட்டைப்படையினர் மீது கடுங் கோபம்கொண்ட மதுரை மக்கள், கலகம் செய்தனர் என்ற தேசியவாசகம் முழுஉண்மையல்ல. வாரந்தோறும் மதுரையில் ஏதேனும் ஓர் கலகம் நடக்கும், இந்தக் கிழமை கருப்புச் சட்டைப்படையினர்மீது, கலகக்காரர்கள் பாய்ந்தனர்.

மக்களின் மனதுக்குப் பிடிக்காத செயலைச் செய்தனர், எனவேதான் பெரிய கலகம் விளைந்தது, என்று மற்றோர் சாரார் வாதாடுகின்றனர். அதுவும் தவறான வாதமே யாகும்.

கலகம் செய்வது என்று ஒரு சாரார் தீர்மானித்துவிட்டால், செய்துவிட்டுக் காரணம் தேடுவர். கலகம், கருப்புச் சட்டைப் படைக்கு எதிரிடையாக மட்டுமல்ல, சென்ற திங்கள், காந்தியாருக்கு எதிரிடையாகவும் நடந்திருக்கிறது. தேசியத் தாட்கள், தமது நிலையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அந்தக் கலகம் செய்தவர்களைக் "காலிகள்" என்று கூறி, மதுரைக்கலகம் நடத்தியவர்களை "ஆத்திரங்கொண்ட பொது மக்கள்" என்று அழைக்கும். அகராதியின் துணைதேடி, அந்த ஏடுகள், விஷயத்தை வேறு உருவில் காட்டும். ஆனால் கலகம், கலகந்தானே; அது கருப்புச்சட்டைப் படைக்கு எதிரிடையாக மட்டுமல்ல, காந்தியாருக்கு எதிரிடையாகவும் நடக்கிறது. எனவே, கலகம் நடந்ததாமே! காயமாமே! கத்திக்குத் தாமே! என்று கேட்பதன்மூலம், கருப்புச் சட்டைப் படையினரைக் கேலி செய்வதாகக் கருதும் தோழர்கள்; ஆரஅமர யோசித்தால், எதற்கும் கலகம் நடக்கிறது அதுபோல் இதற்கும் நடக்கிறது என்று உணர்வர்.

எனவே, கருப்புச் சட்டைப்படையினர்மீது, நடத்தப்பட்ட தாக்குதல், எப்போதும் கலகம் செய்வதற்குத் தயாராக உள்ள கூட்டத்தைக் கொண்டு கலகவாடை கலந்து வீசியபடி உள்ள மதுரையிலே, முதல்நாள் முழுவெற்றியுடன் நடைபெற்ற மாநாட்டைக் கண்டு மனம் புழுங்கிய ஆரியம், கிளப்பி விட்டதாகும். இந்தச் செயலைப் பிறர் பழிக்காதிருக்க வேண்டி, கட்டிவிடப்பட்ட காரணங்களே, கோயில் புகுந்தனர், பெண்களை இகழ்ந்தனர் என்பனவெல்லாம்.

இனி ஏன் அந்தக் கலகம் வெறுங்கூச்சல், கல் மண் வீச்சோடு முடியாமல், ஒருநாள் முழுவதும் நீடித்தது என்பதைக் கவனிப்போம்.

தேசியத் தாள்கள் எழுதின, "கருப்புச்சட்டைப் படையினர் கண்ட கண்ட இடங்களில் அடிக்கப்பட்டனர்" என்று உண்மை. ஆனால், அதிலே மற்றோர் உண்மையும் தொக்கி இருக்கிறது. கண்ட கண்ட இடங்களில் கருப்புச் சட்டையினர் அடிக்கப்பட்டனர் என்றால் கண்ட கண்ட இடங் களிலும் கருப்புச் சட்டையினர் இருந்தனர் என்று ஏற்படுகிறது. அதாவது, மதுரையில், எந்தப் பக்கத்திலும், கருப்புச் சட்டைப் படையினர் இருந்தனர். மதுரை கிராமமல்ல. பெரிய நகரம். அந்தப் பெரிய நகரத்தில், எங்கு பார்த்தாலும் கருப்புச் சட்டைப்படையினர் இருந்தனர். மாநாட்டுக்கு அவ்வளவு திரள் திரளாகத் தோழர்கள் வந்திருந்தனர். மாநாட்டின், அளவுக்கு இஃதோர் சான்று.

ஏராளமான கூட்டம் இருக்கவேதான் கலகக்காரரால், தமது காரியத்தை விரைவிலேயோ, சுலபத்திலேயோ செய்து முடிக்க முடியவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையில், ஒரே வந்தேமாதரக் கூச்சலில், கலகம் முடிந்துவிடும், மாநாடு கலைந்துவிடும், கூட்டம் இராது. இன்று நிலைமை வேறு! மாநாட்டிலே ஜனத்திரள். கொள்கைக்காக வாழ்பவர்கள். எனவே அந்தப் பெருங்கூட்டத்தை, வெறுங் கூச்சலால் கலைத்துவிட முடியாது. கல் போதவில்லை! கத்தியும் அரிவாளும் தேவைப்பட்டது! ஒரு சிறுகூட்டத்தால் முடிய வில்லை; ஊரையே திரட்டிக் கொண்டு வரவேண்டியதாயிற்று!

ஒருமணிநேரம் இரண்டுமணி நேரம் போதவில்லை; ஒருநாள் முழுவதும் தேவைப்பட்டது; இதன் ஆழ்ந்த பொருள் என்ன? மதுரையில், ஆரியம், தனது முழுச்சக்தியையும் திரட்டி, முழுமூச்சாக, ஒருநாள் முழுவதும் எதிர்க்க வேண்டிய அளவுக்கு, நாம் வளர்ச்சி அடைந்திருக்கிறோம்.

இந்த எதிர்ப்புங்கூட, நமது, திட்டம், கொள்கை ஆகியவைகளை மறுத்துரைத்து, மக்களுக்கு, அந்தக் கொள்கைகள் பிடிக்காதபடி செய்த பிறகு, தோன்றியதல்ல. மக்கள் கேட்டதும் மருட்சி அடையக்கூடிய பழிகளைச் சுமத்தி, ஊரைத்திரட்டி வந்தே, எதிர்ப்பை நடத்த முடிந்தது? நமது கொள்கைகளை மறுத்துப் பேசினர், பயன் காணவில்லை. எனவே, செய்யாததைச் செய்ததாகக் கூறி, மக்களைத் தூண்டியாவது பார்ப்போம் என்ற நிலைக்கு வந்துள்ளனர். இது நமது வளர்ச்சியின் அறிகுறி நமக்கு மட்டுமல்ல, பிராமண சேவா சங்கத்தாருக்கும் தெரிந்திருக்கிறது. அவர்களின் மகஜர், நமது வளர்ச்சிக்கு ஆரியம் தரும் நற்சாட்சிப் பத்திரம்.

எல்லாம் சரி, ஆனால், இத்தகைய கலகங்களால் சேதம் நேரிடுகிறதே; இரத்தம் வீணாக்கப்படுகிறதே என்று எண்ணுகிறார்கள் சிலர். அவர்களுக்கு ஒரு வார்த்தை. நாம், எடுத்துக் கொண்டுள்ள மகத்தான காரியத்தின் தன்மையை ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

யுகயுகமாக இருந்துவருவதாகக் கூறப்படும் ஏற்பாடுகளை நாம், திருத்தி அமைக்க விரும்புகிறோம். மமதை மலைக்க வேட்டு வைக்கிறோம். நம்மீது

சிறுசிறுதுண்டுகள் சிதறி விழுந்து, மண்டையைப் பிளக்கின்றன என்றால், நாம் வைத்த வேட்டு மலையைப் பிளந்து வருகிறது என்று பொருள். மலையைப் பிளக்கும் காரியத்தில் இறங்கி விட்டு, மலர் தலைமீது விழும் என்று எதிர்பார்க்க முடியாதல்லவா? நம்மை நாமாகவே இந்தக் காரியத்துக்கு ஒப்படைத்து விட்டோம். உலகில் பலபாகங்களிலே, இதற்கு ஒப்பான காரியம் செய்யப் புகுந்தவர்கள், பட்டபாடுகள் இன்று, பல்கலைக்கழகங்களின் பாடப்புத்தகங்களாகி விட்டன. அன்று சாக்ரடீஸ் குடித்த விஷம், இன்றுவரை, சாகா நிலையைச் சாக்ரடீசுக்குத் தந்துவிட்டது. பழியையும் இழிவையும், எதிர்ப்பையும் ஆபத்தையும், தலைமீது ஏற்றுக்கொண்டு, பணிபுரிந்து சென்று, அந்தப்பணியின் பலனைப்பின் சந்ததியார் அனுபவிக்கச் செய்யும், பரம்பரையில், நாம், சேர்ந்தி ருக்கிறோம். நமக்கு, இன்னலும் இடையூறும் இருக்கத்தான் செய்யும்; ஆனால் நமது உழைப்பு ஒரு நாளும் வீண்போகாது.

கடுவிஷம் கொடுத்துக் கொல்லப்பட்டோர், காரிருள் சிறையில் ஆயுட்கால முழுதும் தள்ளப்பட்டோர், கல்லால் அடித்துத்துரத்தப்பட்டோர், சிலுவையில் அறையப்பட்டோர், சிறுத்தைக்கு இரையாக்கப்பட்டோர், கழுத்து நெரிக்கப்பட்டோர், கனலில் தள்ளப்பட்டோர், கண்டதுண்டமாக்கப்பட்டோர், நாட்டு மக்களாலேயேதுரத்தி அடிக்கப்பட்டோர், நாதியற்றுப் போனோர் என்று இவ்விதமாகத்தான் இருக்கும், சமுகப் புரட்சிப் பணியிலே ஈடுபட்டவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள். நாம் அந்த இனம். அவர்களெல்லாம் இன்று, அறிஞர் உலகின் அணிமணிகளாயினர். நம்மையும், பின்சந்ததி மறவாது.

காதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றிகாலம், கட்டிப்போட்டு வீட்டுக்குத் தியிட்ட காலம், கிணற்றில் தள்ளிக் கல்லிட்ட காலம், கண்களைத் தோண்டி எடுத்த காலம், நாவைத் துண்டித்த காலம், கழுவிலேற்றிய காலம், தலையைக் கொய்த காலம், தணலில் தள்ளிய காலம், இவையெல்லாம் இருந்தன. சீர்திருத்தம் பேசியோர் இவைகளிலேதான் உழன்றனர். பெரும் பாலானவர்கள் சாகவில்லை. கொல்லப்பட்டனர். கொல்லப் பட்டதாலேயே அவர்கள் இன்று சாகாதவராக உள்ளனர். எனவேதான், மரணசாசனம் தயாரித்துக் கொண்டு இந்த மகத்தான போராட்டத்திலே இறங்கவேண்டும் என்று கூறுகிறோம்.

சமூகத்திலே அடிப்படை மாறுதலை விரும்பும் நாம் கொல்லப்படக்கூடும் என்ற எண்ணத்திற்காக, நாம் இந்தபணி நமக்கேன் என்றிருந்துவிடினும், 'சாவு' ஓய்வு எடுத்துக் கொள்ளாது. சாந்தம் பேசினாலும், "இன்றைக்கிருப்பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லை ஐயோ!" என்றுதான் பதிகம் செவியில் ஒலிக்கும். செத்தால், செத்ததுதான், ஆனால் கடமையைச் செய்கையில் கொல்லப் பட்டால், அது சாகாவரம் பெற்றதாகும்; நாம் வாழ்வோம், நமது உழைப்பின் பலனால் புது வாழ்வு பெறும், நமது பின் சந்ததியாரின் பேச்சில், பாட்டில்! தொட்டிலருகே, பூந்தோட்டத் தருகே, கட்டிலருகே, பட்டி மண்டபத்திலே, நாம் பேசப் படுவோம், "நமக்காகப் பணிபுரிந்தனர் கொல்லப்பட்டனர்" என்று. அப்போது நாம் வாழ்ந்திருப்பதாகத்தான் பொருள். நமக்கென்ன, மரணம் நேரிடுகையில் மாளிகை என்னாகுமோ, மனோஹரிகள் என்ன ஆவாரோ, தோட்டம் துரவு என்ன

கதியோ, தோடு தொங்கட்டம் யாருக்குப் போகுமோ, வாணிபம் குறையுமோ, வட்டித் தொகை கெடுமோ என்ற எண்ணம் குடையப் போகிறதோ! இல்லை! "ஆரியமே! என்னைக் கொன்றுவிட்டாய்! நான் உயிருடன் இருந்தால் உனக்கு ஆபத்து என்று தெரிந்து இதனைச் செய்தாய். திருப்தி அடையாதே! திரும்பிப் பார்! பிணமாகாது வேறு பலர் உளர்" என்று கூறிக்கொண்டேதான் இறப்போம். எனவே, மரண சாசனம் தயாரித்து விடுங்கள்; மதுரை நமக்குக்கூறும் மகத்தான பாடம் அதுதான்.

மதுரைக்கு மறுகிழமை, குடந்தையில் கூடினர் நமது தோழர்கள், பல ஆயிரக்கணக்கிலே. மதுரையைவிட இங்கு தாய்மார்கள் ஏராளம். இருநாள் மாநாடுகள், இருஇரவும் நாடகங்கள்; எழுச்சியின் அளவும் தன்மையும் மதுரைச் சம்பவம், கனவிலே கண்ட காட்சியோ என்று எண்ணக்கூடிய வகையினதாக இருந்தது. இதன் பொருள் என்ன? மதுரைச் சம்பவத்தால், மகத்தான நமது இயக்கம் மங்காது என்பதை நமது தோழர்கள் காட்டிவிட்டனர் என்றே பொருள். ஆர்வமும், ஆவேச உணர்ச்சியும் கொண்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள், சிலர் மதுரைத் தழும்புகளுடன், அங்கு கூடினர். பணிபுரியத் தயார் என்று முழக்கமிட்டனர். மதுரை ஓய்ந்து விட்டது. நமது தோழர்கள்மீது கல்வீசியவர்களின் கரத்தின் வலி இன்னும் குறைந்திராது, ஆனால், கல்லடியும் கத்திக்குத்தும் பெற்ற நமது தோழர்கள், புண்ஆறா முன்பே, என்றும் போலவே பணிபுரியக் குடந்தையில் கூடினர். ஆம்! மரண சாசனம் தயாரித்து விட்டே இந்த மகத்தான காரியத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் வீரத்தை, தியாக உணர்ச்சியை,

உறுதியை நாம் பாராட்டுகிறோம்; அவர்களின் வீரத்துக்குத் தலை வணங்குகிறோம். மணலிலே இரத்தம் சிந்திய தோழர்களே! உங்கள் இரத்தம், வீணுக்குச் சிந்தப்படவில்லை. அந்தச் சேதி எண்ணற்ற தமிழரின் இரத்தத்தில் கொதிப்பேற்றி இருக்கிறது. வாழ்வுக்கும் சாவுக்கும் வித்தியாசம் காணமுடியாத மனப் பான்மையைத் தந்து விட்டது. நாம் கொல்லப்படக்கூடும், ஆகையினால், இருக்கும் இன்றே, இன்னும் கொஞ்சம் இன எழுச்சிப் பணிபுரிவோம் என்ற எண்ணத்தை ஊட்டிவிட்டது. கொஞ்சநஞ்சம் நம்மவருக்கு இருந்து வந்த குடும்ப பாசம் பந்தம், ஆகியவைகளையும் மதுரைச் சம்பவம், போக்கடித்து விட்டது. இனி இருப்பது நாம், நமது தொண்டு, அதைக் கண்டுதுடிதுடிக்கும் ஆரியம், அது ஏவும் அஸ்திரம், அதுபாயுமுன் பணிபுரிய வேண்டிய அவசரமான நிலைமை, இவ்வளவே! நாம், மரணசாசனம் தயாரித்துவிட்டு, இந்த மகத்தான போராட்டத்தில், ஈடுபட்டு விட்டோம்.

*(திராவிட நாடு - 26-5-46)*

# 27. சர். பாத்ரோ மறைவு

சர்.ஏ.பி. பாத்ரோ அவர்கள் 26-5-46ந் தேதி சென்னை ராயப்பேட்டையிலுள்ள தமது இல்லத்தில் இயற்கையெய்தினார் என்பதையறிய வருந்துகிறோம். அவருக்கு வயது 71. இவர் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட ஒரு அரும்பெரும் தலைவர். 1921-ல் பனகால் மந்திரி சபையில் இவர் மந்திரியாக நியமிக்கப்பட்டு 1927-ம் வருஷம் வரை

கல்வி, மராமத்து இலாகாவை நிர்வகித்து வந்திருக்கிறார். இவரது மந்திரிப் பதவி காலத்தில்தான் சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்திலும் ஆந்திரப் பல்கலைக்கழகச் சட்டத்திலும் திருத்தங்கள் செய்யப்பட்டன. இவர் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களில் ஒருவர். 1926ல் மதுரையில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டுத் தலைமை தாங்கினார். 1931ல் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் அகில இந்தியத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

வகுப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 1930 டில்லியில் கூடிய எல்லாக்கட்சி மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். 1931ல் ஜினிவாவில் நடைபெற்ற சர்வதேச சங்கத்திற்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றார். 1931-32ல் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டிலும் கலந்து கொண்டார். 1933ல் கூடிய இந்திய சீர்திருத்த பார்லிமெண்டரி கமிட்டிக் கூட்டத்திலும் கலந்து கொண்டார். 1937 முதல் இராஜாங்க சபையின் அங்கத்தினராக இருந்து வந்தார்.

பொதுவாகப் பார்ப்பனரல்லாதார் நலனுக்காகவும் குறிப் பாகத் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக வும் அவர் உழைத்து வந்திருக்கிறார். பார்ப்பனரல்லாதாரின் பரிதாபகரமான நிலமையை உலகறியச் செய்தவர்களில் இவர் ஒருவர். விவசாயிகளின் குறைகளை நன்கு பரிசீலனை செய்துள்ளார். அவர் எழுதியுள்ள கிராமப் பொருளாதாரம் என்ற நூலைப் பார்த்தால் இதன் விபரம் நன்கு புலப்படும். சர். பாத்ரோ அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தது மிகவும் வருந்தக் கூடிய காரியமாகும். பார்ப்பனரல்லாதார் சமுகத்திற்கே பெரும்

நஷ்டமாகும். அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தாருக்கும் அவரது புதல்வர் தோழர் ஏ.பி. பாத்ரோவுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*(திராவிட நாடு - 2-6-46)*

# 28. மயானகாண்டம்

"சுடுகாட்டிலே, ஒரு பிணத்தைக் கொளுத்தினவன் நீதானே?"

"ஆமாம்."

"யாருடைய பிணம் அது?"

"என் மகன்"

"சரி, நீ என்ன ஜாதி"?

"ஆதித்திராவிடன்"?

"ஆதிதிராவிடர்கள், தங்கள் ஜாதிக்கென்று ஒதுக்கப் பட்டுள்ள இடத்திலேதான், பிணங்களைக் கொளுத்தவேண்டும், நீயோ வேறு ஜாதிக்காரர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்திலே, உன் மகன் பிணத்தைக் கொளுத்தினாய். இந்தக் குற்றத்துக்காக, உன்னை ஏன் தண்டிக்கக்கூடாது?"

"எந்தக் குற்றம்?"

"ஒரு ஆதித்திராவிடரின் பிணத்தை, ஜாதி இந்துப்பிணம் கொளுத்துவதற்கு என்று நிர்ணயித்துள்ள இடத்திலே கொண்டு போய்க் கொளுத்துவது குற்றம். ஏன் அவ்விதம் செய்தாய்?"

"தெரியாது செய்துவிட்டேன்"

"தெரியாமல் செய்தேன் என்றால் போதுமா? நீ, அவ்விதம் வரைமுறை தவறி நடந்ததால், ஜாதிமத ஆச்சாரம் கொண்ட மக்களின் மனம் புண்படும்படியான காரியத்தைச் செய்த குற்றம் உன் மீது ஏற்படுகிறது. ஆகவே, உன்னைத் தண்டித்தாக வேண்டும்."

"அன்று மழை பெய்தது. ஆகவே, நான் அவசரத்திலே அறியாது செய்து விட்டேன்"

"தக்க சமாதானமல்ல. சரி, நாலுமாதம் கடுங்காவல் தண்டனை உனக்குத் தந்திருக்கிறோம்"

அரிசந்திரன் காலத்து மயான காண்டமல்ல; 1946-ம் வருஷத்தது; மதுரையில் ஒரு ஆதித்திராவிடனுடைய மூத்த குழந்தை இறந்து போயிற்று. அதனை அடக்கம் செய்யச் சுடுகாடுச் சென்றான். குழந்தை இறந்த துக்கத்திலே இருந்தவனுக்கு "இந்தப் புண்ய பூமியில், ஆதிகாலத்திலே இருந்து நமது பெரியவா செய்து வைத்த சாஸ்திரோக்தமான ஏற்பாடும், வெள்ளைக்கார சர்க்கார் அந்த வேதகால ஏற்பாட்டை மதிச்சி நடக்கிறவா" என்னும் விஷயமும், எப்படிக் கவனித்து வந்திருக்க முடியும். அவன் பாபம், எதை எதை எண்ணி அழுது கொண்டிருந்தானோ? மழைவேறு தொல்லை கொடுத்தது. எங்கோ ஓர் இடத்தில் பிணம்

கொளுத்தப்பட்டது. அந்த இடம், ஜாதி இந்துக்கள் மட்டுமே உபயோகிக்கக் கூடியதாம், அப்படி ஒரு ஏற்பாடு. அதனைமீறிச் செய்ததால், அங்கே ஒன்றும் அன்று பூமி வெடிக்கவில்லை, சாமி கோபிக்கவில்லை, ஜனங்களும் சண்டைக்கு வரவில்லை, சட்டம் கோபித்துக் கொண்டது.

மக்களின் மதாச்சாரத்துக்கு விரோதமாக நடந்து கொண்ட குற்றத்துக்காக, அந்த ஆதித்திராவிடத் தோழன், தண்டிக்கப்பட்டான். நாலுமாதக் கடுங்காவல் தண்டனை. சட்டத்துக்கும், அந்தச் சஞ்சலத்தால் தாக்கப்பட்டவனுக்கும் நடைபெற்ற பேச்சு, நாம் மேலே குறித்திருப்பது.

வழக்கு, மேல் கோர்ட் விசாரணைக்குப் போயிற்று; கீழ்க்கோர்ட் தீர்ப்பு நிலைத்தது. இங்கே, சட்ட சம்பந்தமாகவும் வாதம் நடத்தப்பட்டதாம். 1938-ல் சென்னை சர்க்கார், ஒரு சட்டம் ஏற்படுத்தினர், அதாவது, மதஸ்தாபனமல்லாத மற்றப் பொது இடங்களிலே எந்த ஜாதியாரும் போகலாம் என்று. அதனைக்கூட எடுத்துக் காட்டினராம். ஆனால், சட்டம், சம்பிரதாயத்துக்கு, சாஸ்திரத்துக்குத் தான்துணைநின்று அவனுக்கு நாலு மாதக்கடுங்காவல் என்ற தீர்ப்புத்தான் கிடைத்தது.

சுடுகாடுதானே, அங்கே தாராளமாகப் போகலாம், சுந்தரேஸ்வரர் சமேத மீனாட்சி ஆலயத்துள்ளேயே போக அனுமதி பெற்றுள்ள நாம், சுடுகாட்டிலே எங்கே சென்று பிணத்தைக் கொளுத்தினால் என்ன என்று, அந்தத் தோழன் எண்ணியிருக்கக்கூடும். அவனுக்கு நாலு மாதம்! அவன் சாட்சாத் நந்தன் பரம்பரை! நந்தனோ வேதியனுக்கும் சிவஞான

போதம் செய்தவன், என்று புராணிகர் கூறுவர்! பயன் என்ன? மதவாதிகளின் மனம் புண்ணாகும் என்று சட்டம் சொல்கிறது!!

மாகாண சட்டசபைக்குத் தலைவர் யார்? தோழர் சிவசண்முகம்! ஒரு ஆதித்திராவிடர். மதராசில் அவர் சட்டசபைத் தலைவர், மதுரையில் அவருடைய ஜாதி ஆசாமிக்கு நாலு மாதம் தண்டனை, உயர் ஜாதி இந்துவின் பிணம் கொளுத்தப்பட வேண்டிய இடத்திலே, ஆதித்திராவிடப் பிணத்தை கொளுத்திய குற்றத்துக்காக.

மந்திரி கூர்மைய்யா, ஆதித்திராவிடர். சட்ட மந்திரியாக இருக்கும் வைஷ்ணவப் பிராமணர் தோழர் பாஷ்யம் அவர்களிடம் பார்லிமெண்டரி காரியதரிசியாக அமர்ந்துள்ள, தோழர் பரமேஸ்வரன் ஆதித்திராவிட இளைஞர். ஆயினும் என்ன? சட்டம், ஜாதி ஆச்சாரத்துக்கு மாறாக நடந்ததற்காக, மதுரையில் ஒரு ஆதித்திராவிடத் தோழனுக்கு நாலு மாதம் கடுங்காவல் தண்டனை தந்து இருக்கிறது.

அரசியலிலே தனித்தொகுதி கூடாது, சுடுகாட்டிலே தனித்தொகுதி வேண்டும் - இது எந்த வகையான நியாயம்?

ஆதித்திராவிடர், சட்டசபைச் சபாநாயகராகலாம், மந்திரியாகலாம், ஆனால், பிணத்தைக் கொளுத்தும் இடத்திலேகூட ஆதித்திராவிடருக்குப் பேதம் காட்டப்பட்டுத் தான்வரும்! இது எந்தவகையான நீதி?

நாட்டிலே காட்டப்படும் பேதம் போதாதென்று, சுடுகாட்டிலேயும் ஜாதிபேதம் காட்டப்பட்டு வருகிறது. இன்னின்ன ஜாதியாரின் பிணங்கள் இன்னின்ன இடத்திலே தான் புதைக்கப்படவோ, கொளுத்தப்படவோ வேண்டுமென்ற

ஏற்பாடுகளும், அதற்கான அறிவிப்புக் குறிகளும், சென்னைச் சுடுகாட்டிலே இருக்கிறது.

ஜாதிபேதக் கொடுமையைக் களையவேண்டியது அவசியம் என்ற கொள்கையை எல்லாக் கட்சிகளும் ஒப்புக் கொண்டுள்ளன. காங்கிரஸ் கட்சி, பழங்குடிமக்களுக்குப் புதிய பெயர் கொடுத்ததோடு, அவர்கள் அரசியலிலே தனித்தொகுதி கேட்கக் கூடாது என்றும் உபதேசம் செய்கிறது. காங்கிரஸ் கட்சியினர் ஆட்சி செய்கின்றனர். சட்டசபைக்குத் தலைவரே ஒருபழங்குடித் தோழர்.

நாடகத்திலேகூட நண்பர்கள் பாடுவார்கள், இறந்த பிறகு, பெட்டிச்சாவி எங்கே, கெட்டிக்காப்பு எங்கே, வட்டி சட்டி எங்கே என்று. அதுபோல் சகலமும் போனாலும், ஜாதி மட்டும், சுடுகாட்டுக்கும் வந்து நின்றுகொண்டு, "எதுபோனாலும் நான் இருக்கிறேன்!" என்று கேலி பேசி, பணியவும் வைக்கிறது. இந்தப் பேதத்தைப் போக்கும்படி, சென்னைக் காங்கிரஸ் மந்திரி சபையினரைக் கேட்டுக் கொண்டனர். மந்திரி சபையினர், அனுபவித்த தண்டனைக் காலம்போக எஞ்சியுள்ள தண்டனைக் காலத்தை ரத்து செய்து, எதிரிகளை விடுதலை செய்யுமாறு உத்திரவிட்டதாக அறிகிறோம். ஆனால், இந்த உத்தரவு, இந்த ஒரு நிகழ்ச்சிக்கு மட்டுமா? அல்லது பழங்குடி மக்கள் அனைவரும் இனிச்சுடுகாட்டில் எந்த இடத்தில் வேண்டுமானாலும் தங்கள் பிணத்தைக் கொளுத்த இடமளிக்கிறதா?" என்பதன் விளக்கம் அந்த உத்தரவில் தெளிவுபடுத்தப்படவில்லை.

*(திராவிட நாடு - 16-6-46)*

# 29. சட்ட மறுப்பும் – சாஸ்திர மறுப்பும்

சமஉரிமை கோரி, தென்னாப்பிரிக்காவிலே இந்தியர்கள் சட்ட மறுப்புச் செய்கின்றனர். இலங்கையிலே, சமஉரிமை சமசந்தர்ப்பம்கோரி, தமிழர்கள், சிங்களவர்களின் ஆட்சி ஆதிக்கத்தை எதிர்த்து வேலை நிறுத்தக் கிளர்ச்சி செய்கின்றனர்.

இங்கே, உள் நாட்டிலேயே ஆதித்திராவிடர்கள்

**சேரிகளில் வாழ்கிறார்கள்,**
**தீண்டாதாராக இருக்கிறார்கள்,**
**பொதுஉரிமைகள் கூட இல்லை.**

ஆனால் சமஉரிமைக் கிளர்ச்சிக்கு வசதி இல்லை!

**ஏன்?**

இங்கே, பார்ப்பனர் தவிர மற்றவர்கள் கோவிலிலே மூலக்கிரஹம் சென்று சாமியைத் தொட்டுக் கும்பிட முடியாது. பார்ப்பனரே, பூஜை செய்யும் உரிமை பெற்றுள்ளனர்.

ஆலயத்திலே சமஉரிமை கேட்கும் தைரியமும், கிளர்ச்சி செய்ய வசதியும், பார்ப்பனரல்லாதாருக்கு இல்லை.

**ஏன்?**

சாப்பாட்டுக் கடைகளிலேகூடப் பார்ப்பனருக்கு ஒரு இடம் பார்ப்பனரல்லாதாருக்கு வேறு இடம் என்ற பேதம் காட்டப்படுகிறது. இங்கேயும் சம உரிமை கேட்க,

பார்ப்பனரல்லாதாருக்குத் தைரியம் இல்லை; கிளர்ச்சி செய்ய வசதி இல்லை.

### ஏன்?

இப்போதும், வைதிகப் பார்ப்பனர், நாம் தொட்டு விட்டால் தீட்டாகிவிட்டதாகத்தான் கருதுகிறார்கள், பார்ப்பனர் தவிர மற்றவர்கள் மட்ட ஜாதி என்ற திட்டம், சாஸ்திரப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதனை எதிர்த்துச் சம உரிமை கேட்கவோ, கிளர்ச்சி செய்யவோ, துணிவும் வசதியும் இல்லை.

### ஏன்?

ஸ்மட்ஸ்துரையின் சட்டத்தை மீறுவது சுலபம்; சனாதனிகளின் சாஸ்திரத்தை மீறுவது கஷ்டம்.

### ஏன்?

ஸ்மட்ஸ், அரசியல் தலைவர்;

சனாதனி, பூதேவர்.

இந்தச் சூட்சமத்தை உணராமல் இன்னும் எவ்வளவு காலம், காங்கிரஸ் திராவிடர்கள் இருக்கப் போகிறார்கள்?

சட்ட மறுப்புக்கு அரசியலாரின் தண்டனை மட்டுமே உண்டு.

சாஸ்திர மறுப்புக்கு, ஆண்டவனின் தண்டனை உண்டு என்று மிரட்டுவார்கள்.

சட்ட மறுப்புச் செய்பவன், வீரன் என்று போற்றப் படுவான்; சாஸ்திர மறுப்புக்காரனைப் பாபி என்று தூற்றுவர்!

## ஏன்?

சட்டங்கள் மறுக்கப்பட்டு. நிலைமை சரியானால் சனாதனிகளுக்கு அவர்களின் சுகவாழ்வுக்குக் கேடு இல்லை.

சாஸ்திரங்கள் மறுக்கப்பட்டு, நிலைமை மாறினால் சனாதனிகளின் சுகவாழ்வு கெட்டுவிடும். ஆகவேதான், சட்ட மறுப்புக்கு இசையும் பார்ப்பன சமூகம், சாஸ்திர மறுப்புக்கு இசைவதில்லை. தென் ஆப்பிரிக்க சர்க்கார், இந்தியரைக் கேவலப்படுத்தும் போக்கு, கண்டிக்கப்படுகிறது, சர்க்காராலும் சகல அரசியல் கட்சிகளாலும்; அந்தச் சட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தப்படுகிறது; அந்தக் கிளர்ச்சி பாராட்டப்படுகிறது நியாயம் - அவசியம் - முக்கியமானதுங்கூட.

ஆனால் அதேபோல, இங்கே, சேரிகளில் வாழும் பழங்குடி மக்கள், சம உரிமை கோரி, மற்ற உயர்ஜாதிக்காரர் வசிக்கும் பகுதியிலே “இடம் தேடும்” கிளர்ச்சி செய்தால், என்ன நடக்கும்? சட்டம் சீறும் - சாஸ்திரம் சபிக்கும் - நாட்டிலே இரத்தக்களரி ஏற்படும்.

பிணத்தை, ஜாதி இந்துவுக்கென்றுள்ள இடத்தில் கொளுத்தினதற்கே, இதே திங்களில், ஒரு ஆதிதிராவிடருக்கு 4 மாதக் கடுங்காவல் தண்டனை தந்தது, நம் நாட்டுச் சட்ட மன்றம்.

பார்ப்பனர் அர்த்த மண்டபத்திலே நின்று தரிசிக்கலாம், மற்றவர்கள், வெளியேதான் நின்று தொழவேண்டும், என்று

திருவண்ணாமலை கோயில் வழக்கிலே "தீர்ப்பாகி" இருக்கிறது. திருவையாறு சமஸ்கிருதப் பள்ளிக்கூடத்திலே, பார்ப்பன ரல்லாத மாணவர்களுடன் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவது, தங்கள் ஜாதிக் கௌரவத்துக்குக் குறைவு, என்று பார்ப்பன மாணவர்கள் கூறினர், பார்ப்பனத் தலைவர்கள் ஆதரித்தனர்.

இன்றும், பார்ப்பனர் குளிக்கும் குளம், மற்றவர்களுக்கு தராத நிலை, சில இடங்களிலே உண்டு.

இன்றும், பார்ப்பனர்கள் வசிக்கும் அக்ரகாரத்திலே, மற்ற வகுப்பாருக்கு இடம் தர மாட்டார்கள்.

இவைகளை எல்லாம், மத ஆச்சாரத்தின் பேரால் நடத்துகிறார்கள்; சாஸ்திர ஆதாரம் கூறுகிறார்கள்.

சம உரிமைக்காகத் தென்னாப்பிரிக்காவிலே சட்ட மறுப்புத்துவக்கும் தைரியம் பிறந்ததுபோல, இங்கு, சம உரிமைக்காக, சாஸ்திர சம்பிரதாயங்களை மறுக்க யாராவது முன் வந்தால் அவன்,

**நீசன், பாபி, நாஸ்திகன்**

என்று, மக்களாலேயே, எந்த மக்களின் சம உரிமைக்காகப் பாடுபடக் கிளர்ச்சி செய்கிறோமோ, அதே மக்களாலேயே, தூற்றப்படுவர், கண்டிக்கப்படுவர், கல்லால் அடிக்கப்படுவர்.

**சட்ட மறுப்பு சுலபம்.**

**சாஸ்திர மறுப்பு கஷ்டம்**

## சட்டம் பொது.

### சாஸ்திரம் பார்ப்பனரின் தனி உரிமை

பார்ப்பனர் தங்கள் தனி உரிமையான சாஸ்திரம் கெடாதபடி சர்வ ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்வர்.

தென்னாப்பிரிக்காவில், வெள்ளையர் (நம்மை) கருப்பரைக் கேவலமாக நடத்துகிறார்கள், வெளி நாட்டான், வேறு இனத்தான் என்று காரணம் காட்டி. இது ஜனநாயகத்துக்கு தேசிய கௌரவத்துக்கு, மனிதாபிமானத்துக்குக் கேடு தருவதாகும் என்று கூறுகிறோம். உண்மை! ஒரு நாட்டான் மற்றோர் நாட்டவனைக் கேவலமாகக் கருதுவது, மிகக் காட்டுமிராண்டிக் கருத்து; அந்த ஆணவத்தை எதிர்க்கத்தான் வேண்டும். தென்னாப்பிரிக்காவிலே அதனை எதிர்க்கின்றனர்; நாம் ஆதரிக்கிறோம் அந்தச் சமஉரிமைப் போராட்டத்தை.

அங்கு, வெள்ளையர், கருப்பரைக் கேவலமாக நடத்துகின்றனர், அமெரிக்கர்கள், நீக்ரோக்களைக் கேவலமாக நடத்துகின்றனர். இந்தக் கொடுமைகள் ஒழிய வேண்டும் என்று கிளர்ச்சி நடக்கும் இக்காலத்திலே, இங்கே,

இந்துக்கள், இந்துக்களிலே ஒரு பிரிவினரான பார்ப்பனரல்லாதாருக்குச் சம உரிமை தருவதில்லை.

இந்துக்களிலேயே ஒரு பகுதியினரான பழங்குடி மக்களைத் தீண்டாதார் என்று கேவலப்படுத்திக் கொடுமை செய்கின்றனர்.

வெள்ளையர், வெள்ளையரில் சில பகுதியினரைக் கேவலப்படுத்துவது, தாழ்த்துவது இல்லை.

சீனர், சீனமக்களிலே சிலரைத் தீண்டாதார் என்று சிறுமதியுடன் கூறவில்லை. நீக்ரோ, நீக்ரோவை இழிவு படுத்துவதில்லை.

ஆனால், இந்து, இந்துவையே இழிவுபடுத்துகிறான் தீண்டாதார் என்கிறான், கோயிலிலே, குளத்திலே பொதுஇடத்திலே உரிமைதர மறுக்கிறான்.

இந்து, இந்துக்களிலேயே, நாலு ஜாதி என்று பிரித்துக் கொண்டு, ஒருவருக்கொருவர், பேதம் காட்டிவரும் கொடுமையைச் செய்கிறான். இவைகளைச் சாஸ்திர முறை என்று கூறுகிறான்.

சட்டமறுப்புக்கு வீரர்கள் இருக்கிறார்கள். சாஸ்திர மறுப்புக்கு, யார் முன் வருகிறார்கள்? சட்டமறுப்புச் சாத்திய மாகிறது! சாஸ்திர மறுப்பு என்றால் குலை நடுங்குகிறது!

**ஏன்?**

*(திராவிட நாடு – 23-6-46.*

# 30. மைசூர் சர்க்காருக்கு!

தென் ஆப்பிரிக்காவிலே, இந்தியாவிலிருந்து சென்றவர்களைச் சேரிப்புறத்தில் ஒதுக்கும் அளவுக்கு நிறபேதம் காட்டி இருப்பதுடன், சட்டமூலம் இந்தக் கொடுமையை அமுல் நடத்துகிறார்கள். இந்தப் “பேத புத்தி” வேண்டாம்

என்ற வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு விட்டது. இந்திய சர்க்காரின் வேண்டுகோளை, ஆப்பிரிக்க சர்க்கார் ஏற்கவில்லை. எனவே, தென் ஆப்பிரிக்க சர்க்காருடன் வியாபாரத் தொடர்பு அறுக்கப்பட்டுவிட்டது என்று இந்திய சர்க்கார் தெரிவித்துவிட்டதுடன், ஹை கமிஷனரையும் திருப்பி அழைத்துக் கொண்டனர்.

தென் ஆப்பிரிக்கச் சட்டத்தை மீறி, இந்தியர்கள் கிளர்ச்சி துவக்கி விட்டனர்.

மைசூர் சர்க்கார், படைகளின் பிரதம தளபதியாக, லெப். கர்னல் பிரெஸ்டன் என்ற தென் ஆப்பிரிக்கர் இருப்பதாகத் தெரிகிறது.

தென் ஆப்பிரிக்காவில் இந்திய பூபாகத்தினருக்கு இழைக்கப்படும் கொடுமையைக் கண்டிப்பதில், இந்திய சர்க்காரும் இந்தியாவிலுள்ள பல்வேறு பிரிவினரான மக்களும் ஒன்றுபட்டிருப்பதுடன், எல்லா அரசியல் கட்சிகளும் ஒரு முகமாக இதனைக் கண்டித்துள்ளன. இவ்வளவுக்குப் பிறகும் தென்ஆப்பரிக்க சர்க்கார், வழிக்கு வரவில்லை.

இந்த நிலையில், மைசூர் சமஸ்தானம், ஒரு தென் ஆப்பிரிக்கரைப் படைத்தளபதியாக ஏன் வைத்திருக்க வேண்டும்? இந்திய பூபாகத்தினரை அவமதிக்கத் துணியும் நாட்டவருக்கு, இங்கே ஒரு சமஸ்தானப் படைத்தலைவர் பதவி தருவது எந்த விதத்திலே சரியான காரியமாகும்? ஏன், மைசூர் சர்க்கார், தென்ஆப்பிரிக்க சட்டத்தைக் கண்டிக்கும் அறிகுறியாக, தென் ஆப்பிரிக்கத் தளபதி எமக்கு வேண்டாம் என்று கூறக்கூடாது?

மைசூர் சர்க்கார் தைரியமாக இந்தக் காரியத்தைச் செய்தால், தென் ஆப்பிரிக்க சர்க்கார் தமது போக்குக்குச் சரியான "சூடு" தரப்பட்டது என்பதை உணருவர். வெளிநாடுகளும், இப்படி ஒரு நிகழ்ச்சி நேரிடுமானால், உண்மையிலேயே, இந்திய பூபாகத்திலே புது எழுச்சி, சுயமரியாதை, தோன்றிவிட்டது என்பதை உணர்வர், தென் ஆப்பிரிக்க சர்க்காருக்கும் சரியான பாடம் கற்றுக் கொடுத்ததாகும். மைசூர் சர்க்கார் இதனைச் செய்ய முன்வருமா?

சுதேச சமஸ்தானங்களின் சபையும், தென் ஆப்பிரிக்க சர்க்காரின் போக்கிலே, தமக்கு இருக்கும் கசப்பை எடுத்துக் கூறி, இதற்காக இந்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளிலே சமஸ்தான சர்க்கார்களும் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகச் சுற்றறிக்கை விட்டிருக்கிறது. இந்நிலையில், மைசூர் சர்க்கார், ஏன் ஒரு தென் ஆப்பிரிக்கரைப் படைத்தலைமைத் தளபதியாக வைத்திருக்க வேண்டும்? இந்திய சர்க்கார், இந்திய ரிசர்வ் பாங்கியிலே, தென் ஆப்பிரிக்கர் "ஷேர்" (பங்கு) பெறுவதுகூடக் கூடாது என்ற தடுத்துவிட்டது. இவ்வளவுதூரம், இந்திய சர்க்கார் வெளிப்படையாகத் தென் ஆப்பிரிக்க சர்க்காரைக் கண்டித்து நடவடிக்கைகள் எடுத்தான பிறகும், மைசூரில் ஒரு தென் ஆப்பிரிக்கருக்குப் பெரிய பொறுப்பான, முக்யத்துவம் வாய்ந்த பதவி இருப்பது, கூடாது என்பதை மைசூர் சர்க்கார் உணர வேண்டும்; உடனே ஆவன செய்து, தென் ஆப்பிரிக்க சர்க்காருக்குப் புத்திபுகட்ட வேண்டும்.

மைசூர் சர்க்கார் துணிந்து இந்தக் காரியத்தைச் செய்யுமா?

*(திராவிட நாடு - 23-6-46)*

# 31. வாழ்த்தினர்!

வாழ்த்துக் கூறி இருக்கிறார்! தெருவில் இரத்தம் ஓடச்செய்து, நூற்றுக்கணக்கானவர்களைச் சிறைப்படுத்தி, தடியடி முதல் துப்பாக்கிப் பிரயோகம் வரை செய்து, மக்களின் விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்கிய மகாராஜரை, வாழ்த்தி விட்டார்! "ராஜாதி ராஜராஜமார்த்தாண்டனே! ராஜ்ய ரட்சகா! ராஜத்துரோகிகளான பாகிஸ்தானி முஸ்லிம்கள் நடத்திய புரட்சியைப் பொசுக்கிய தீரனே, வீரனே! நீ வாழ்க!" என்று அகமகிழ்ந்து வாழ்த்தி விட்டார்.

பனிதவழும் இமயமலைச் சாரலில் உள்ள காஷ்மீர் நாட்டிலே, பெருங்கலகம். மக்களின் கிளர்ச்சி மன்னரின் மாளிகைக்கு உலைவைக்குமோ என்று பயப்படும் அளவுக்குச் சென்றுவிட்டது. விடுதலைக் கிளர்ச்சி -பொறுப்பாட்சி வேண்டுமென்ற போராட்டம் - மன்னனின் எதேச்சாதிகாரத்துக்கு மக்கள் இரையாக வேண்டுமென்ற முறை மாற வேண்டும், மன்னன் மக்களுக்காக ஆளவேண்டுமென்ற கிளர்ச்சி அங்கு. பல்வேறு சமஸ்தானங்களிலே தோன்றியுள்ள சுதந்திரக் கிளர்ச்சிகளில் இதுவும் ஒன்று - பொதுவாகத் தோன்றியுள்ள விடுதலைக் கிளர்ச்சியிலே, இது ஓர் பகுதி; எதேச்சாதிகார ஏகாதிபத்யத்தை எதிர்க்கும் நாட்கள். அதேவீரம், காஷ்மீரமும் சென்றது மன்னரின் அமுல் அமோகம். அரசாட்சியின் பல குறைபாடு களை அகற்றவும், குடிஅரசுக் கோட்பாடுகள் மிகுந்த இந்நாளிலே மன்னர்கள் தமது மக்களின் நலனையே

முக்கியமானதென்று கருதவேண்டும் என்று கூறி, மக்கள் மன்றத்தை நடத்தும், தலைவர்கள் கிளர்ச்சி நடத்தினர். சமஸ்தான சர்க்கார், அடக்குமுறையைக் கையாண்டனர். சுத்ந்திரக் கிளர்ச்சியை, ஆட்சியைக் கவிழ்க்கும் சதிச்செயல் என்று கூறினர். மக்களால் தலைவரெனப் போற்றப்படுபவரை, மன்னர் ஆட்சிக்கு உலைவைக்க முளைத்தவன், என்று சொல்லி சிறைபிடித்தனர். மன்னரின் பட்டாளமும் பரிவாரமும் மக்களை அடக்கும் காரியத்தை மும்முரமாகச் செய்தனர். அரசனால் கைது செய்யப்பட்டு ஷேக் அப்துல்லா, வழக்குமன்றில் நிற்கிறார். புரட்சிப் புயல் இனி இல்லை என்று மன்னர் பூங்காவில் உலவுகிறாரோ, அல்லது பூவையர் புடைசூழ அந்தப்புரத்தில் இருக்கிறாரோ நாம் அறியோம்; ஆனால் மன்னருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட, தோழர் சவர்க்காருக்கு, இந்து மகாசபைத் தலைவருக்கு ஆனந்தம் பொங்கிவிட்டது, காஷ்மீர மன்னரின் வீரதீர பராக்கிரமத்தைக் கேள்விப்பட்டு. மன்னராவது, ஒருவேளை, வெளி உலகம், நாம் கையாண்ட கடுமையான முறைகளைக் கேள்விப்பட்டு நம்மைக் கண்டிக்குமோ என்று கவலைப்பட்டிருக்கக்கூடும், சமஸ்தான மக்களின் மன்றத்துக்குத் தலைவராக இருக்கும் பண்டித ஜவஹர் தந்த காரசாரமான அறிக்கையால் மன்னருக்குக் கொஞ்சம் மனக்கஷ்டம் ஏற்பட்டிருக்கும். ஆனால், சவர்க்காருக்குக் கவலையற்ற களிப்பு பிறந்தது காஷ்மீர் சம்பவத்தால்! வாழ்த்தும் அனுப்பி விட்டார். மன்னர் பிரானுக்கு! ஏன்? மன்னர், இந்து; மக்கள், முஸ்லீம்!!

மன்னரின் எதேச்சாதிகாரத்துக்கு எதிரிடையாக மக்கள் கிளர்ச்சி செய்தனர் என்றால், மக்கள், மக்கள் கிளர்ச்சியையும்,

மன்னர் மன்னரையும், தாங்கி நிற்பர். இதுவே இயற்கை. சவர்க்கார், மன்னரல்ல, ஆனால், மக்களின் கிளர்ச்சியைக் கண்டிக்கிறார், அந்தக் கிளர்ச்சியைக் கடுமையான முறையிலேயே அடக்கிய மன்னரை வாழ்த்துகிறார்! ஏன்? வேறு ஒரு காரணமும் இல்லை, மன்னர் இந்து, மக்கள், முஸ்லிம் அவ்வளவுதான்!

காஷ்மீர் தேசாதிபதி இந்து; தேசமக்களில் 100க்கு 93 பேர் முஸ்லிம்கள். காஷ்மீரத்தை மகாராஜாகுலாப்சிங் என்பவருக்கு 400,000 பவுனுக்கு விலைக்கு விற்று விட்டனர், வெள்ளைக்கார கிழக்கிந்தியக் கம்பெனியார்; அதனாலேயே நாம் இந்து ஆட்சிக்குள் வந்துவிட்டோம், என்பது, காஷ்மீரத் தலைவர்களுள் முக்கியமானவரான ஷேக் அப்துல்லாவின் வாதம். இவர், பண்டித ஜவஹருக்கு நண்பர்.

பெரும்பாலான இந்துக்கள் உள்ள ஹைதராபாத் சமஸ்தானம், முஸ்லீம் மன்னராட்சியில் இருக்கிறது, அதுபோலவே, பெருவாரியான முஸ்லிம்கள் நிறைந்த காஷ்மீரில், இந்து மன்னர் அரசாள்கிறார்.

முஸ்லிம்கள் பெருவாரியாக உள்ள பகுதிகளைப் பாகிஸ்தான் என்று தனி அரசு ஆக்க வேண்டும் என்று கேட்கும் ஜனாப்ஜின்னா, காஷ்மீர், ஒரு இந்து அரசரின் ஆளுகையில் இருப்பதுபற்றி எதிர்ப்பாக ஏதும் பேசவில்லை; சமஸ்தான விஷயங்க்ளில் தலையிடவில்லை.

இந்நிலையில், மக்கள் மன்னருக்கு எதிரிடையாக நடத்தும் கிளர்ச்சியை, காங்கிரஸ், தலைவர்கள் உட்படப்

பலரும், இது சமஸ்தான மக்களின் விடுதலைக்கிளர்ச்சி என்று கூறி, அதனை ஆதரித்து இருந்தும் கூட, இதனை, முஸ்லிம்கள் இந்து அரசனுக்கு எதிரிடையாக நடத்தும் இனப் போராட்டமாகக் கொண்டு சவர்க்கார், மக்களை அடக்கிய மன்னனை, பாகிஸ்தான் முஸ்லிம்களின் புரட்சியை அடக்கியவனே! என்று புகழ்ந்து, அடக்கு முறையை ஆதரித்து, மன்னருக்கு வாழ்த்தும் அனுப்பி இருக்கிறார்.

நேர்மையாளர்கள் இந்தப் போக்குச் சரியா, என்று யோசித்துக் கூறவேண்டும். ஷேக் அப்துல்லா, பண்டித நேரு வின் நண்பர், காங்கிரசுக்குத் தோழர், முஸ்லிம் லீகினரல்ல. அத்தகைய அப்துல்லா நடத்தும், மக்கள் விடுதலைக் கிளர்ச்சியே, சவர்க்காரின் கண்களுக்கு, இஸ்லாமியர் புரட்சி, அதிலும் பாகிஸ்தான் இஸ்லாமியர் புரட்சி என்ற உருவில் தோன்றுமானால், உள்ளபடியே ஷேக் அப்துல்லா, முஸ்லிம் லீகினராக இருந்திருந்தால், அல்லது முஸ்லிம் லீகினரும் இந்த விடுதலைக் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருந்தால், சவர்க்காரின் அறிக்கை இன்னும் எப்படி எப்படி இருந்திருக்குமோ, பாபம்!!

இந்துவின் ஆளுகையாகத்தான் இருக்கட்டும், மக்கள் இஸ்லாமியராகத்தான் இருக்கட்டும், அங்கு நடந்த கிளர்ச்சி, அரசன் இந்து, ஆகவே அந்த ஆட்சியிலே நாங்கள் இருக்க மாட்டோம் என்ற முறையிலே நடத்தப்பட்டிருந்தால் சவர்க்கார் கோபித்துக் கொள்ள நியாயம் இருந்திருக்கலாம். நாட்டு மக்கள், தங்கள் உரிமைக்காகப் போராடினர்; தங்கள் வறுமையைப் போக்கும்படி கேட்டனர். இதனை, ஏன், சவர்க்கார், இந்து-முஸ்லிம் பிரச்னையாக்கவேண்டும்!

ஒரு இந்து அரசருக்காக, சவர்க்கார், விடுதலை உணர்ச்சி, ஜனநாயகக்கோட்பாடு என்னும் பண்புகளைப் பற்றிய அக்கரையைக் கூடவிட்டுவிட்டு, மக்கள் அடக்கப்பட்டது சரி என்றும் கூறவும், அரசனை ஆதரிக்கவும், வாழ்த்தவும் முன் வந்தார் என்றால், தன் இனத்தவர் பெருவாரியாக உள்ள ராஜ்யத்திலே, நடத்தப்படும் ஆட்சி இந்துவிடம் இருப்பதோடல்லாமல், மக்களின் உரிமையும் பறிக்கப்பட்டு, அடக்குமுறைக்கும் அவர்கள் ஆளாக்கப்பட்டனர் என்பதைக் கேள்விப்படும் ஜனாப் ஜின்னா, இஸ்லாமியர் சார்பாக ஏன் பேசமாட்டார்?

'வகுப்புவாதம்' என்கிறார்களே, அது, யார் துவக்குகிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு இது. பெருவாரியான முஸ்லிம்கள் உள்ள நாடு என்று தெரிந்தும், அங்கே இந்துமன்னர் ஆள்கிறார் என்று தெரிந்து மக்கள் அடக்குமுறைக்கு ஆளானார்கள் என்று அறிந்தும், நாம் இதிலே தலையிட்டால், இந்து ஆட்சிக்கு எதிரிடையாக முஸ்லிம்களைத் தூண்டிவிடுவதாக நம்மைத் தூற்றக்கூடும், எனவே நாம் இதிலே தலையிடக்கூடாது, என்று ஜனாப்ஜின்னா இருக்க, மக்களின் கிளர்ச்சி, இந்து - முஸ்லிம் என்ற முறையிலே நடவாமல், ஆள்வோருக்கும் ஆளப்படுபவருக்கும் இடையே நடக்கும் போராட்டம் என்ற முறையிலே நடந்திருக்கும் போது, சவர்க்கார், மக்களை அடக்கிய மன்னரை வாழ்த்தியதும், இஸ்லாமியரின் புரட்சி அடக்கப்பட்டு விட்டது என்று கூறிப் பூரிப்பதும், முறையா, நியாயமா, அரசியல் தர்மமா? என்று கேட்கிறோம்.

இத்தகைய மனப்பான்மையே, இந்து-முஸ்லிம் பேதத்தை இந்த அளவுக்கு வளர்த்து விட்டது.

காஷ்மீரில் வறுமை தாண்டவமாடுகிறது - மக்களிடையே. மன்னரின் பரிவாரங்கள், பரிமள வாழ்வில் உள்ளனர். மன்னருக்குப் பரிவாரங்களாக உள்ளவர்கள், ஜாகீர்தார்கள் - இந்துக்கள். படிப்பு, முஸ்லிம் சமுதாயத்திலே நூற்றுக்கு 4-பேருக்கும் கிடையாது. காஷ்மீர் மன்னரின் சட்டப்படி, ராஜபுதனியர்கள் மட்டுமே ஆயுதம் தாங்கலாம். அரசாங்க உத்யோகம் அவ்வளவும், சின்னாட்களுக்கு முன்பு வரை, காஷ்மீரப் பார்ப்பனர்களிடமே இருந்தது. கொஞ்ச காலமாகத்தான் மற்றவர்கள் உத்யோக மண்டலத்திலே புக முடிந்தது. பெரும்பாலான மக்கள் ஏழை விவசாயிகள். பார்ப்பனர்கள் படித்தவர்கள்; பட்டமே அவர்களுக்கு பண்டிட் என்று. காஷ்மீர் பண்டிதர் வகுப்பிலே சேர்ந்தவர்தான் ஜவஹரும் இத்தகைய ராஜ்யத்துக்குத்தான் சவர்க்கார் வாழ்த்துக் கூறினார். அவருடைய வாழ்த்து, கொஞ்சம் தாமதித்துக் கிடைத்தது காஷ்மீர் மன்னருக்கு ஆனால், பிராமணோத்தமர்களின் வாழ்த்து, மன்னருக்கு, முன்பே கிடைத்து விட்டது. பலமான போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது, காஷ்மீர மக்கள் விடுதலைக் கிளர்ச்சி நடத்திக் கொண்டிருந்த போது, ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்ட போது அடக்குமுறை அமோகமாகக் காஷ்மீரில் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், மக்கள் பதைபதைத்த சமயத்தில், கூசாமல், சில காஷ்மீரப் பார்ப்பனர்கள், சுவர்களிலே,

"மகாராஜா வாழ்க!" என்று எழுதினராம்! அந்தச் சுவரிலே, அவர்கள் மகாராஜா வாழ்க என்று எழுதிக்

கொண்டிருந்த போது, காஷ்மீர மக்களின் இரத்தம் சிந்திக் கொண்டிருந்தது. அடிபடும் மக்களிடம் அன்பு காட்ட வேண்டிய நேரத்தில், அந்தப் பிராமணோத்தமர்கள்.'

மகாராஜா வாழ்க! என்று மதிற் சுவரிலே எழுதினார்கள், ராஜத்துவேஷக் குற்றத்துக்காக ஷேக் அப்துல்லா, கைது செய்யப்பட்டு, வழக்கு நடக்கும் நேரத்தில் சவர்க்கார்.'

மகாராஜா வாழ்க! என்று தந்தி கொடுக்கிறார், மகாராஜா வாழ்வார், சந்தேகமில்லை! இவ்வளவு பெரிய பண்டித சிரோமணிகளும், சவர்க்காரும் வாழ்த்தி இருக்கும்போது, அவர் வாழ்வுக்கு என்ன குறை! மேலும், பிராமணோத்தமர்களின் ஆசீர்வாத பலத்துக்கு அந்தச் சக்தி இல்லாமற் போயினும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பீரங்கிக்கு அந்தச் சக்தி இருக்கத்தானே செய்யும். அதன்துணையை நாடி, மகாராஜா வாழட்டும், ஆனால் மக்கள் கதி என்ன வென்பது பற்றி இந்த மகானுபாவர்கள் கொஞ்சமாவது கவனித்தார்களா? வாழ்த்துகிறார்கள், கூசாமல், கொஞ்சமும், மக்களிடம் அக்கரை கொள்ளாமல், அடக்குமுறையை வீசி, ஆயுதமற்ற மக்களை அடக்கிவிட்ட தீரத்தைப் பாராட்டுகிறார்கள். இந்தப் போக்குச் சரியா? இந்தப் பிராமணோத்தமாக்களின் செயல் நியாயமா? இல்லை! என்றுகூற உங்களுக்குத் தைரியமில்லையா? எப்படி இருக்கும், பிராமணாமமதேவதா! அல்லவோ? மக்கள் செய்த கிளர்ச்சியை அடக்கிய மன்னனை வாழ்த்திய மகானுபாவர்களை நீங்கள் வாழ்த்துங்கள்!!

*

காஷ்மீர் மன்னரை, வாழ்த்தியதோடு நின்றுவிட வில்லை பூசுரக் கூட்டம். ஷேக் அப்துல்லாவின் இயக்கம், மகாராஜாவால் அடக்கப்பட்டது சரி என்ற கருத்தைப் பிரச்சாரம் செய்யவும் முன்வந்து விட்டனர். காஷ்மீர் பண்டிதர்கள் (பிராமணர்) சங்கச் செயலாளர் சிவநாராயண் என்பவர், புதுடில்லியில், காந்தியாரையும் பண்டித ஜவஹரையும் கலந்து பேசிவிட்டுச் சென்றார். இந்தப் பூசுரரின் விஜயத்தின் பலனாகப் பண்டித ஜவஹர் தமது அறிக்கையிலே, "அடாணா"வைக் குறைத்துக் கொண்டதுடன், காஷ்மீரில் இயக்கம் அவசரப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது என்று கூறியிருக்கிறார். சிறுபான்மையினர், கிள்ளுக்கீரை, இங்கு! காஷ்மீரில் இந்தப் பண்டிதர்கள் கூட்டம் சிறுபான்மைதான், ஆனால் இவர்களின் செல்வாக்கு, அங்கே அரண்மனையோடு மட்டும் நின்றுவிடவில்லை, புதுடில்லி வரையிலும் பரவி இருக்கிறது. காஷ்மீரில் ஆரம்பிக்கப் பட்டுள்ள விடுதலை இயக்கமே விபரீதமான காரியம் என்று அவர்கள் அறிக்கைமேல் அறிக்கைகள் விடுகிறார்கள். இந்நாட்டுத் "தேசீய ஏடுகள்" "பயபக்தி விசுவாசத்துடன்" அந்த அறிக்கைகளை, மக்களின் விடுதலைக்கு ஊறுதேடும் அறிக்கைகளை, பிரசுரிக்கத் தவறுவதில்லை. எப்படித் தவற முடியும்! பிராமணா மமதேவதா! அல்லவோ!!

இத்தாலியர், தங்கள் நாட்டுக்கு மன்னன் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதுபற்றி, 'ஓட்' எடுத்து, மன்னர் கூடாது என்ற கருத்துக்கே ஆதரவு அதிகம் என்பதைக் காட்டி விட்டனர், இத்தாலிய மன்னரும், நாட்டைவிட்டுப் போய்விட்டார்.

கிரீசிலே, மன்னர் உள்ளே வரலாமா, கூடாதா என்பது மக்களின் சம்மதத்தைப் பொறுத்து இருக்கிறது, ஐரோப்பா கண்டத்திலே, பல்வேறு நாடுகளிலே, மன்னர் ஆட்சிக்கு மரண ஓலை தயாரித்து விட்டனர் மக்கள். இந்த நிலைக்கு நேர்மாறாக, இங்கே நடைபெறுகிறது, மன்னர்கள், தங்களின் திவான்கள் மூலம், ஒருபுறம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திடம் பேரம்பேசி, சமஸ்தானங்களின், உள்நாட்டு நடவடிக்கைகளிலே, வெளியார் பிரவேசிக்க முடியாதபடி ஏற்பாடு செய்து கொண்டதுடன், காங்கிரசிடமும் கொஞ்சிக் குலவி, தங்களின் நிலையைப் பலப்படுத்திக் கொண்டனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், இனி இந்தச் சமஸ்தானங்களைச் செல்லப் பிள்ளைகளாகக் கொண்டு, காலந்தள்ள வழிகண்டு கொண்டனர்.

இத்தகைய சமயத்தில் உண்மையில் மக்கள் விடுதலை கோருபவர்கள், ஏன், இந்தச் சமஸ்தானாதிபதிகள் இருக்கத்தான் வேண்டுமா என்பதை அந்தந்தச் சமஸ்தான மக்களின் "ஓட்"டின்படி தீர்மானிக்க வேண்டும் என்று யோசனை கூறலாகாது? ராஜாதி ராஜாக்களைக் கோபமூட்டக்கூடாது என்று எண்ணுவதானால், அவர்கள் வேண்டுமானால் இருந்து தொலைக்கட்டும். மக்கள் மன்றத்திடம் முக்கியமான பொறுப்புகளை விட்டுவிட வேண்டும், என்ற கிளர்ச்சிகளை ஏன் ஆதரிக்கக்கூடாது. விடுதலை உணர்ச்சியுள்ளவர்கள் இதனைச் செய்வர். ஆனால் காஷ்மீர் நாட்டு விப்பிரரும், இந்திய உபகண்டத்திலே இந்து மகாசபை நடத்தும் விப்பிரரும், மக்களின் விடுதலைக்காகப் போரிட்ட இயக்கத்தை நசுக்கிய "மாபெரும்" காரியத்துக்காக, காஷ்மீர மன்னரை வாழ்த்துகிறார்கள்! எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கவேண்டும் அதற்கு!!

காஷ்மீருக்கு வரப்போவதாகப் பண்டித ஜவஹர், மகாராஜாவுக்குத் தந்தி கொடுத்தார், அனுமதிகோரி. மகாராஜா, "இந்தச் சந்தர்ப்பத்தில் பண்டித நேரு காஷ்மீர் வருவதில் பயன் இல்லை; பயணத்தை நிறுத்திக் கொள்ளவும்" என்று பதில் அனுப்பிவிட்டார். மரியாதையான பாஷை; அர்த்தம் "காஷ்மீருக்குள் காலடி எடுத்து வைக்காதே!" என்பதுதான். மன்னரின் பதில் மட்டுமல்ல, பல ஸ்தாபனங்களும் தனிப்பட்டவர்களும், பண்டித ஜவஹரை இப்போது காஷ்மீர் வரவேண்டாம் என்று தந்தி மூலம் கேட்டுக் கொண்டுள்ளனர். யார் அவர்கள்? யாராக இருக்க முடியும்! மகாராஜரை வாழ்த்திய பூசுரக் கூட்டமாகத்தான் இருக்க முடியும்.

*(திராவிட நாடு 23-6-46)*

# 32. மனு சிரிக்கிறான்!

**சட்ட மறுப்பு**

டர்பன், ஜூன் 26.

ஐம்பது இந்தியர்கள் டாக்டர் ஜி.எம். நாயக்கர் தலைமையில் (தென்னாப்பிரிக்க சர்க்காரின் புது சட்டப்படி) தடுக்கப்பட்ட பிரதேசத்துக்குள் நுழைந்தனர். மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவின்படி, 50-பேரும் கைது செய்யப்பட்டு ஒருவாரக் கடுங்காவல் தண்டனை தரப்பட்டனர். இந்தியர்கள் பிரவேசிக்கக் கூடாது என்று, ஸ்மட்ஸ் தென்னாப்பிரிக்காவிலே கொண்டு வந்த சட்டத்தை மீறினதாகக் குற்றம் சாட்டப்பட்டு 50-பேருக்கும் இந்தத் தண்டனை தரப்பட்டது.

**சாஸ்திர மறுப்பு**

திருச்சூர். ஜுன் 26

கொச்சி சமஸ்தானத்திலே கோயில் பிரவேசக் கிளர்ச்சிக் கான கூட்டம் பிரஜா மண்டலம், எஸ்.என்.டி.பி. யோகம், கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளின் கூட்டுறவுடன் நடந்த பிறகு கூடல் மாணிக்கம் கோயில் முன்புள்ள குட்டம் குளம் பகுதியில் தாழ்த்தப்பட்ட தோழர்கள் ஆறுபேர் நுழைந்தனர், அவர்கள் கைது செய்யப்பட்டனர். கூட்டம் தடியடி கொடுக்கப்பட்டுக் கலைக்கப்பட்டது. ஆறு தோழர்களும் சப் ஜெயிலில் இருக்கிறார்கள் - "இந்து"

ஸ்மட்ஸ், சட்டத்தை மீறும் கிளர்ச்சிக்கு எவ்வளவு ஆதரவு நம் நாட்டுத் தலைவர்களாலும், பத்திரிகைகளாலும் தரப்பட்டுள்ளன என்பதையும், மனிதனை மனிதன் இழிவுபடுத்தும் மமதையை ஆப்பிரிக்காவிலே எதிர்க்கும் வீரர்கள்போலவே, மனிதனை மனிதன், அதிலும் ஒரே நாட்டு மக்களிலேயே ஒரு பிரிவினர் மற்றோர் பிரிவினரை, அதிலும் இந்து மதத்தினரிலேயே ஒரு பகுதியினர் மற்றோர் பகுதி யினரைக் கேவலப்படுத்தும் சாஸ்திர ஆதாரமான சம்பிரதாய மாகிவிட்ட சட்ட திட்டத்தை இங்கே எதிர்ப்பவர்கள், எப்படி அனாதைப் பிள்ளைகள்போல் தலைவர்களாலும் பத்திரிகை களாலும் நடத்தப்படுகின்றனர் என்பதையும் ஒப்பிட்டுப் பாருங்கள் - உங்கள் நெஞ்சிலே கை வைத்துக் கூறுங்கள், சட்ட மறுப்புப்போலவே, சாஸ்திர மறுப்பும் அவசியந்தானே, அப்படி இருக்க, சட்ட மறுப்புக்கு ஆதரவு திரட்டுவதுபோல, சாஸ்திர மறுப்புக்கு ஏன் திரட்டக்கூடாது, ஏன் திரட்ட முடிவதில்லை என்பதின் சூட்சமம் என்ன?

**வெள்ளைக் குண்டர்**

ஓ! இந்தக் கருப்புக்கு.........டாமிட்! இதுகளையாவது நம்பகூடச் சரிசமமாச் சேர்த்துக் கொள்வதாவது. எல்லோரும் ஒண்ணுன்னு சொன்னா நாம்ப. எப்படி ஒத்துக் கொள்ள முடியுமா? நாம் நாம்பத்தான், கருப்புமனுஷன் கருப்பு மனுஷன்தான். சரிசமம்னு பேசவே விடக்கூடாது. விட்டா, நம்ம யோக்யதை கெட்டுப் போகும். வெள்ளைக்காரரும் கருப்பு மன்ஷனும் ஒண்ணுன்னு ஆயிடக்கூடாது. அதுக் கெல்லாம் நாம்ப இடந்தரக் கூடாது!

**வேதப் பிராமணா!**

ஓய்! என்னங்காணும், அவாளாவாள் ஜாதியாச்சாரம், குல முறை, ஆண்டவனுடைய சிருஷ்டியோன்னோ? எப்படி எல்லா ஜாதியும் ஒண்ணுன்னு சொல்ல முடியும்? ஏன் சொல்லணும்? பிராமணா முதல் ஜாதி; மற்றவா, அதுக்கு எப்படிச் சமமவா? பிராமணனும் அப்பிராமணனும், சமமாகணும்னு பேசறதுகளே, தலைகீழ் ஆட்டமாடறதுகளே, இதை எப்படி நாம் சகித்திண்டு இருக்க முடியும்? ஏன் இதற்கு நாம் இடங் கொடுக்கணும்? கூடவே கூடாது. ஜாதிமுறை கெடக்கூடாதுங்காணும்.

வெள்ளைக்கார இனம், உயர்ந்த ஜாதி; கருப்பு நிறத்தவர்கள் தாழ்ந்த ஜாதி, என்ற நிறத்திமிர் பிடித்தவர்கள், கருப்பரைக் கேவலமாக நடத்துகிறார்கள், இழிவுபடுத்தும் சட்டம் செய்கிறார்கள், கொடுமை நடக்கிறது. அதிலே சில வெள்ளையர்கள் வெளிப்படையாகவே வெள்ளைக்காரர்கள்

உயர்ந்த இனம் என்று பேசுகிறார்கள். நிறபேதம் கூடாது. அதனைப் போக்க வேண்டும் என்று கொண்டுவரப்படும் திட்டங்களைத் தவறு என்று ஏசுகிறார்கள் அத்தகைய வெள்ளைக்குண்டர்களின் வாய்க்கொழுப்பு (1) ஒரு கட்டத்திலே பொறிக்கப்பட்டிருக்கிறது.

பக்கத்துக் கட்டத்திலே (2) பாருங்கள், வேதப் பிராமணர்களின் பேச்சு இருக்கிறது. சனாதனம், வர்ணாஸ்ரமம், வைதிகம், பழையவா முறை, லோகாச்சாரம், தேசாச்சாரம் என்று பலவிதமாக அழைக்கிறார்களே, ஜாதி பேதம் என்ற ஏற்பாட்டை. அந்த ஜாதிபேதம் போக்கப்பட வேண்டும், பிராமணர், இதராள் என்று வித்யாசம் காட்டக் கூடாது, வித்யாசம் இருக்கக்கூடாது, எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை, என்று பேசிப்பாருங்கள், வேதப் பிராமணாளிடம், என்ன பதில் வரும்! ஜாதி முறைக் கெடக் கூடாது, கெடவிடக்கூடாது என்று பேசுவார்கள். அவர்களின் பேச்சு 2-வது கட்டத்திலே இருக்கிறது.

வெள்ளையரின் நிறபேதம் காட்டும் போக்கைக் கண்டிக்க நாம் தயங்குவதில்லை. தலைப்பிலேயே தைரியமாகக் கண்டனம் இருக்கிறது, வெள்ளைக் குண்டர்கள் என்று.

ஆனால், அதே தைரியத்துடன், பிராமணப் பிண்டங்கள், வைதிகப் பிச்சுகள், என்று கூற முடியுமா? நீங்கள்தான், உடனே சொல்வீர்களே, "ஏண்டா தம்பி! பிராமண தூஷணை செய்கிறாய்" என்று. நான் அவர்களை நீங்கள் திட்டவேண்டும் என்று தூண்டுகிறேன் என்பதாக எண்ண வேண்டாம். நிறபேதம் இருக்கத்தான் வேண்டும் என்று கூறும் வெள்ளைக்காரனைக்

கண்டிக்கும் நம்முடைய வீரதீர பராக்கிரமம் அவ்வளவும் வைதிகத்தின் பேரால், ஜாதிபேதம் இருக்கத்தான் வேண்டும் என்று பேசும் வேதப்பிராமணர்களைக் கண்ட உடனே, சப்தநாடியும் அடங்கி, கைகால் வெடவெட என நடுங்கி, நாக்குக் குளறிவிடுகிறதே! வீரம் விரையமாகிறது, தீரம் ஈரமாக மாறிவிடுகிறது, பராக்கிரமம் பாதசேவா உணர்ச்சி யாகி விடுகிறது, இதைத் தீவிரத்திலே திளைத்த தோழர்கள் கொஞ்சம் கவனித்துப் பார்க்கட்டும் எனபதற்காகவே சொல்கிறேன்.

நிறபேதம் இருக்க வேண்டும் என்று பேசிய உடனே, வெள்ளைக்குண்டர்கள் - கொக்கரிப்பு - என்று நமது தலைவர்கள் முழக்கமிட, நமது பத்திரிகை ஆசிரியர்கள், கோபமென்ற பேனாவில் ஆத்திரமென்ற முள்ளைச்செருகி, தேசீயம் என்ற மையிலே தோய்த்துக் கிளர்ச்சி என்ற காகிதத்திலே தீட்டுகிறார்கள், அதைப் படித்த உடனே நமது "மகா ஜனங்கள்" ஆஹா! இந்த வெள்ளைக்குண்டர்களைச் சும்மாவிடக் கூடாது, விரட்டி அடிக்க வேண்டும், எட்டி உதைக்க வேண்டும் என்று வீரகர்ஜனை புரிகிறார்கள். ஆனால் நிறபேதம் இருக்கவேண்டும் என்று வெள்ளைக்குண்டர்கள் பேசுவது போலவே, ஜாதிமுறை இருக்கத்தான் வேண்டும் என்று பார்ப்பனர் பேசும்போது, அதனை நமது தலைவர்கள், "ஸ்ரீமான் சீனுவாசாச்சாரியாரின் வியாக்யானம்", "ஸ்ரீசங்கராச்சாரியாரின் ஸ்ரீமுகம்", "மகாமகோபாத்தியாயரின் மனுஸ்மிருதி பாஷ்ய உரை" என்று கூறிவிட, நமது ஏடுகள் "நம் நாட்டுப்பூர்வீகப் பெருமையும் கீர்த்தியும், வேதபுராண இதிகாசாதிகள் மூலம் வியக்தமாகத் தெரிவதால், இக்கால

நாகரிகம் என்ற மோகத்திலே மூழ்கி, சமூகக் கட்டுப் பாட்டையும், தார்மீக முறைகளையும் பாழ்பண்ணும் காரியாதி களிலே கண்மூடித்தனமாக இறங்கி, நாட்டையும் நாட்டின் நற்பெயரையும் கெடுக்கும் நாச காரியத்திலே இறங்க வேண்டாமென்று நம் யுவர்களையும் யுவதிகளையும் கேட்டுக் கொள்கிறோம்'' என்று எழுதிவிடும். அதைப்படிக்கும் நமது ''மகாஜனங்கள்'' ஜாதிமுறை இருக்கவேண்டுமென்ற கொள்கையை நிலைநாட்டும் சூழ்ச்சியிலே தாங்களாகவே சிக்கிக் கொள்வர்.

நிறத்திமிர் பேசுபவர்களைக் கண்டிப்பதுபோல, ஜாதி முறை பேசுபவர்களையும், கண்டித்திருந்தால், நம்நாட்டு ஏடுகளின் பேனாமுனை, ஸ்மட்ஸ்துரையின், இருப்பிடத்தைத் தாக்குவது போலவே, இங்கே ஜாதி இருக்கத்தான் வேண்டும் என்று பேசுபவர்கள், இருக்கச் செய்வதற்கான முறைகளை வகுப்பவர்கள் ஆகியோர்களையும் தாக்கியிருந்தால், நாடும் மக்களும் எப்போதோ நல்ல நிலையை அடைந்திருக்க முடியும். போனது போகட்டும், இனியேனும், “தலைவர்களும் தாள்களும்” இந்தக் காரியத்தைச் செய்யுமா? மக்களே! பதில் கூறுங்கள்!! ஸ்ரீரங்கம் பார்ப்பன அம்மையார் கண்ணிலே மிளகாய்ப்பொடியைத் தூவியபோதுகூட, டாக்டர் ராஜன் ஒரு வார்த்தை அவர்களைக் கண்டிக்க முடியவில்லையே! கண்டிக்க முடியுமோ! “அதோ நிற்பது கமலா, நம்ம அத்திம்பேருக்கு பந்து. கூச்சல்போடுவது சீனு சம்சாரம், சகுந்தலா! பக்கத்திலே நிற்பது பர்வதம், சுந்தராச்சாரியாரின் இரண்டாந்தாரம் எல்லாம் நம்மவா” என்று இவ்விதமாகத்தானே எண்ணியிருக்க முடியும். அதை, ஆச்சாரியார் சொல்லியே விட்டார் ஒரு சமயம்,

"சனாதனிகளின் மனதை நோகச் செய்ய முடியாது. அவர்கள் என் இரத்தம், என் சதை" என்றார்.

இந்தத் தலைவர்கள் கண்டிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். போகட்டும். இருக்கிறார்களே நமது இனத் தலைவர்கள் காமராஜர்கள், தேவர்கள், முதலியவர்கள், இவர்களாவது கண்டிப்பார்களா? முடியாது. அவர்களெல்லாம், "கேவலம் வகுப்புவாதம் பேசமாட்டார்கள்" போகட்டும். ஜாதி என்ற சொல்லே தமிழனுடையது அல்ல என்று இலக்கியமூலம் கண்டறிந்த கதிரேசர்கள் கலியாணசுந்தரங்கள் மீனாட்சி சுந்தரர்கள் சேதுக்கள் சாதுக்கள், ஆகியோர், கண்டிப்பார்களா? முடியாது. அவர்கள், "சுடுசொல் புகலாதே, சினமது கைவிடு, சிவனதுபதம் தொடு, அன்புவித்தினை நடு, அரனை எண்ணிப் படு" என்னும் சித்தத்தினர். இப்படிப்பலரும், கண்மூடி மௌனியானதாலேதான், ஜாதிபேதம் நிலைத்து இருக்கிறது. அது இருக்கத்தான் வேண்டும் என்று கூறும் வேதப் பிராமணர்கள் உள்ளனர், அவர்கள் பேசுவதைக் கேட்டுக் களிக்கும் மக்களும் உள்ளனர்.

*

லைடன்பர்க், ஜூன் 28.

தென்னாப்பிரிக்காவில் லைடன்பர்க் என்ற ஊரிலே, வெள்ளையர்களின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தியர்களைப் பகிஷ்காரம் செய்யவேண்டியதென்று அதிலே பேசினார்கள். வெள்ளையர், கருப்பர் என்ற நிறபேதத்தைப் போக்குவதற்காகக் கொண்டுவரப்படும் முயற்சிகள் முறைகள்

ஆகியவற்றைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்றும், அந்தப் பேதத்தைப் போக்கக்கூடாது என்றும், வெள்ளையர்கள் கூட்டத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

*

ராய்ட்டர் இப்படி ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது. இதைப் படிக்கும்போது நமக்கெல்லாம் இரத்தம் கொதிக்கிறது. கோபம் பொங்குகிறது. ஒரு கண்டனக்கூட்டம் போடலாமா என்று தோன்றுகிறது. உண்மையிலேயே, கண்டிக்கத்தான் வேண்டும். ஆனால் இந்த வெள்ளைக்குண்டர்கள் நிறபேதம் - இருக்கத்தான் வேண்டும் என்று பேசியதுபோல, ஜாதிபேதம் இருக்கத்தான் வேண்டும், பிராமணா முதல் ஜாதி, மற்றவா அடுத்தடுத்துதான், என்று இங்கே வைதீகர்கள், சனாதனிகள், வேதப்பிராமணர்கள் குளத்தங்கரை மாநாடுகள் நித்த நித்தம் நடத்துகிறார்கள் - விசேஷ மாநாடுகளிலே, பெரிய பண்டித சிரோமணிகள், வேத வியாக்யான கர்த்தாக்கள் பிரதிவாதி பயங்கரங்கள், திருவாய்மொழி திவ்யப்பிரபந்தம் முதலிய ஆதாரங்கள் காட்டிப் பேசுகின்றனர் - சங்கராச்சாரிகளின் ஸ்ரீமுகம் பிறக்கிறது - சத்கதாகாலட்சேபங்களிலே உபதேசிக்கப்படுகிறது - சங்கீத சபைகளிலே கூத்துக் கொட்டகையிலே, சினிமாக்கோலாகல மண்டபங்களிலே ஜாதிமுறையின் அவசியத்தைப்பற்றிப் பேசுகிறார்கள்.

வேதப்பிராணமர்களின் பேச்சுக் கேட்கும்போது, வெள்ளைக் குண்டர்களின் பேச்சைக் கேட்டதும், கிளம்பிய ரோஷம் எங்கே? வீரம் எங்கே? தைரியம் எங்கே? எங்கே?

அவை போகுமிடத்தைத் தேடுங்கள், எல்லோரும் ஒன்றாய்க் கூடுங்கள், பேதஉணர்ச்சியை யார், எந்தக் காரணத்துக்காகப் புகுத்தினாலும் சாடுங்கள், பிறகு பாருங்கள், நாடு எவ்வளவு விரைவில் முன்னேறுகிறது என்று.

இதைச் செய்யாதவரையில், மனுவின் மமதை நிறைந்த சிரிப்பு அடங்காது.

*(திராவிட நாடு – 7-7-46)*

# 33. நம்மோடு கலந்து விட்டார்

பால் வடியும்வதனம், பார்ப்பவரைச் சொக்கிடச் செய்யும் பார்வை, அரும்புமீசை, அதைத் தாங்கியும், தொடர்ந்தும் புன்னகை இழைத்த பொன் அதரம், காதளவு நீண்ட கவர்ச்சி மிக்க கண்கள், காண்போரை நண்பர்களாக்கி விடும் ஓர் மோகன சக்தி, இவ்வளவும் கொண்ட எழில் உருவம், இலட்சிய புருஷன் கொங்கு நாடு நமக்குத்தந்த தங்கம், பழைய கோட்டையின் புதிய வீரன், பயமறியாப் பரம்பரையில் உதித்த தீரன், தமிழகத்தின் தோழன் அர்ஜுனன், மறைந்து விட்டார். சலிப்பெனும் காரிருள் சூழ்ந்திருந்த வேளையிலே, நமது கட்சிக் கோட்டத்திலே கண்டோம் அந்தச் சுந்தர புருஷனின் உருவை. கெம்பீர மொழி கேட்டோம், கவலையைத் தடைத்துக் கொண்டு எழுந்தோம், பெற்றோம் ஓர் மாவீரனை இனிப்பயமில்லை, ஜெயமுண்டு மனமே என்று கூறினோம்; நாலைந்து ஆண்டுகளாக அந்த வீரன் ஆற்றிய

அரும்பணியும் அவருடைய அறிவாற்றலும் அதனை விட மேலான அவருடைய அன்பும் நாற்பதாண்டு கட்சிப்பணி புரிந்தும், பலரால் அடையமுடியாத இடத்தில் அவரைக் கொண்டு சேர்த்தது. எத்தனையோ வீரர்கள் வந்தனர், சென்றனர் - இருந்தனர் - இருக்கின்றனர். பெரும்பான்மையோர், நமது பார்வையில் படும் உருவங்களாக மட்டுமே இருக்க முடிந்தது. அர்ஜுனன், நமது இதயத்தில் இடம் பெற்று விட்டார். நெடு நாட்கள் நம்முடன் இருந்தல்ல. வந்தார், புன்னகையை வீசினார், அவருடைய கண்களினின்றும் கனிவும், வீரமும், ஒளியென வெளிப்பட நின்றார்; நமது இதயத்தைத் தட்டினார், குடியேறி விட்டார்! இப்படி நம்மை வென்ற கட்சிப் பணியாளர்கள் அதிகம் பேர் இல்லை. நாம் பாராட்டி யிருக்கிறோம் பலரை. சிலரை வணங்கி இருக்கிறோம். சிலரிடம் மதிப்பு வைத்திருக்கிறோம். சிலரைக் கண்டு வியந்திருக்கிறோம், இன்னும் சிலரிடம் நேசமாக நடந்து கொண்டிருக்கிறோம். ஆனால் மனதைப் பறிகொடுத்தது இந்த மாவீரனிடந்தான்! அவருடைய வருகை தென்றலின் வருகையாக, திங்களின் வருகையாக இருந்தது, திகைத்து இருந்த தமிழகத்திற்கு. மாளிகையிலிருந்துதான் கிளம்பினார், நாம் காட்டிய மண்மேடுகளெல்லாம் உழன்றார்; சோலைக் குயிலையும், மாலை மதியையும் ஆடும் மயிலையும் கண்டு களிப்பெனும் மது உண்டு வாழ்வதற்கேற்ற இடம் - அங்கிருந்து கிளம்பினார் - கல்வீச்சு மண்வீச்சு கருத்தறியா தாரின் சொல்வீச்சு இவைகள் நிரம்பிய இடத்துக்கு அழைத்தோம், ஆர்வத்துடன் வந்தார், நமக்கு ஆர்வம் தரும் அளவு கட்சியில் பற்றுக் கொண்டார். நாலு ஆண்டுகளிலே நம்மை எல்லாம் தமது நண்பர்களாக்கிக் கொண்டார். வீரனின்

விழியும் மொழியும் விளங்கிடும் வகை எவ்வண்ணமிருக்க வேண்டுமென்பதைக் காட்டினார் அந்தோ! மறைந்தார்.

அர்ஜுனன் மறைந்தார் -ஆம் - அர்ஜுனனுக்கு உடல் நலம் இல்லையாம் என்ற செய்திகூடத் தெரியாது தமிழகத்துக்கு. திடீர்த்தாக்குதல், மின்னல் வேகத்திலே மரணம், எதிர்பாராத இடி, நமக்கு - நமது இருதயத்துக்கு.

விண்ணில் சென்று கொண்டிருந்த விமானம், ஓமான் கடலருகே வீழ்ந்ததாம் என்று அன்றோர் நாள் கிடைத்ததே நம் ஆவியைத் தாக்கும் செய்தி, அது போன்றது இந்தச் செய்தி - நமது அர்ஜுனன் - மறைந்தாராமே - மறைந்தாராமே - என்று. நமக்கே, எப்படி இதனைக்கூறுவது - இப்படியும் இருக்குமா என்ற சந்தேகம் தோன்றும் அளவு சடுதியில், கிளம்பி வந்தது செய்தி. பசும்புற்றரையிலே, பாதித் தூக்கத்துடன் படுத்திருக்கும் வேளையில், மலர்ப் புதரருகிருந்து மறைந்துவந்து நாகம் தீண்டியதுபோல, தேனைப் பருகிவிட்டு, தீந்தமிழ்ப் பாடலைக் கேட்டுக் கொண்டிருக்கும் நேரத்திலே, விண்ணும் மண்ணும் அதிர, வெடியொன்று கேட்டு, நொடிப் போதில் இறப்பது போல, வெற்றிப் பாதையிலே வீறுகொண்டு நடக்கும்போது காலடியில் பிளவுகண்டு, பூமியடியில் புதையுண்டதுபோல, பால்வண்ணநிலவு கண்டு வெண் மணலைக் குவித்து விளையாடிக் கொண்டிருக்கும் வேளையிலே, எங்கிருந்தோ வெள்ளம் புரண்டு வந்து கொன்றது போல, கோவை மாவட்டக் குறுநில மன்னன், திராவிடப் பூங்காவுக்குப் பணிபுரியக் கிளம்பிய வீரன், கோவை சென்றான் கூட்டம் நடத்த, திருப்பூர் சென்றான் நிதி திரட்ட, சென்னை வந்தான் நண்பர்களைக் காண, என்னைக்

கண்டான் இன்பமொழி புகன்றான், அன்று வந்தான் இன்பப்பூமாலை சூட்டி அகமகிழ்ந்தேன், நாளை வருவான் நமதூரில் பேச, எங்கும் வருவான், எவர்க்கும் அஞ்சான், கொள்கையில் பிறழான், கோட்டம் அமைப்பான், வெற்றிக் கொடி ஏற்றிவைப்பான், என்று நமது தோழர்கள் நாலா பக்கங்களிலும், ஏந்த நண்பனைப் பற்றி நாவார அல்ல மனமார மகிழ்ந்து பேசிக் கொண்டிருந்தனரோ, மகிழ்ச்சியுனூடே பெருமையும் அடைந்தனரோ, அந்த நண்பன், மறைந்தான் என்ற சொல் கேட்டு, வில்காணா நேரத்தில் விடுகணை தாக்கி வீழ்ந்தவனின் வேதனையைப் பெற்றனர். இந்த வேதனை போக்க முடியாதது - மன அதிர்ச்சி மாற்ற முடியாதது - தாக்குதல் நமது உளத்தைத் தகர்க்கக் கூடியது - நஷ்டம் ஈடு செய்ய முடியாதது - ஆம்! - ஈடு செய்ய முடியாதது. கொங்கு வேளாளக்குடியிலே, இத்தகைய வீரனின் தொண்டு இனி நமக்குக் கிடைக்குமா! - ஏக்கம் மட்டுமே பதில்! பெருமுச்சும், கண்ணீரும் தான் பதில்! வேறுபதில் இல்லை! - ஏது! எதை எண்ணி ஆறுதல் பெற முடியும்? நண்பர் நாற்பதாம் ஆண்டைக் கடந்தார், நடுத்தர வயது அல்ல, முதுமைக்கு முற்றம் அவ்விடம். அங்கு சென்ற பிறகு மறைந்தார் -துக்கம்தான், ஆனால்துடைத்துக் கொள்வோம், என்று கூறமுடியுமா? ஆருயிர் நண்பன் அர்ஜுனன் இருபத்தினான்கு ஆண்டுக் குமரனாயிற்றே! அவரையன்றோ இழந்தோம் - அந்தோ! ஆறுதல் பெற எதனையும் துணைக்கு அழைப்பதற்கில்லையே!

ஆறுதல் பெற ஒரேவழிதான் உண்டு - இதயத்தில் குடிஏறிய அர்ஜுனனை, அங்கேயே இருக்கவைப்பது

மட்டுமல்ல - அவர் அங்கு என்றும் இருப்பார் - அங்கு இருப்பது மட்டுமல்ல - அவருடைய வாழ்க்கையின் இலட்சியமாக விளங்கிய தனித்தாயகத் தமிழ் அரசுரிமையைத் திராவிடம் பெற்றதும், நாம், அந்த அரசமன்றத்திலே, அவர்தம் அழகு சிலையை அமைக்க வேண்டும். இன்று திராவிடன், கண்ணீரையும் துடைத்துக் கொள்ளாமல் நின்று அந்த மறைந்த வீரனின் மீது கொண்ட பற்றினைத் துணை கொண்டு, சூள் உரைத்திட வேண்டும் - "ஆற்றலரசனே! ஆருயிர் நண்பனே! அர்ஜுனனெனும் எமது அண்ணலே! நீ மறைந்தாய்! செல்வம் மறைந்ததுபோல்! மறவோம் உமது நினைவினை - எமது உள்ளத்தில் குடியேறி விட்டாய் - குமரா! நீ இறக்கவில்லை - நீ மறையவில்லை! இதோ இருக்கிறாய் எம் அகக்கண்ணின் முன்னே - என்றும் இருப்பாய் எம்முடன் - திராவிடத் தனி அரசுதுவக்கும் நாளன்றும் இருப்பாய் - அதற்கான வேலை இருக்கிறது என்ற ஒரே எண்ணத்தைத்தான், ஆறுதலுக்கு மருந்தாகக் கொண்டுள்ளோம் - நீ துவக்கிய பணியினை முடிப்போம்" என்று உறுதியுடன் கூறவேண்டும் மனதில் திடம் கொள்ள வேண்டும்.

ஓராண்டுக்கு முன்னம் தந்தையை இழந்தார் - இன்று தம்பியை - அப்பா! பழைய கோட்டைப்பட்டக்காரர் - அர்ஜுனனின் அண்ணார் அடைந்துள்ள வேதனைக்கு, உவமை கூற முடியாது. அவருக்கு ஆறுதல் கூறுவது ஆகாத காரியம் - இதோ தமிழகம் கண்ணீர்பெருக்குடன் நிற்கிறது காணீர்! என்று கூறுவதன்றி வேறில்லை கூற. மறைந்த மணியின்துணைவியாரின்துயரையும், அவருடைய குழந்தைகளின் நிலையையும், குடும்பம், உற்றார், உறவினர்,

கொங்கு நாட்டுப் பெருங்குடியினர், ஆகியோர் அடைந்துள்ள ஆறாத்துயர் அளவிட முடியாதது. நமது அனுதாபம் அவர்கட்கெல்லாம் - அழுகுரலில். மறைந்த அர்ஜுனன், மறையவில்லை, நமது மனதிலே இருக்கிறார், மனையில் காணப்பட மாட்டார் ஆனால் அவர் இதோ, இங்கே இருக்கிறார். இனிய முகம் இதோ தெரிகிறது, அன்பு மொழி கேட்ட வண்ணம்தான் இருக்கிறது, நம்மோடு இருக்கிறார் - நம்மில் கலந்து விட்டார் - இதுவே இன்று நிலைமை - உண்மையும் இதுவே.

*(திராவிட நாடு - 13-10-46)*

# 34. வேதனையைப் போக்கியும்.....!

பாடுபடாமல் என்ன செய்ய முடியும்?

படிப்பு இல்லை! கஷ்ட ஜீவனம் தானே செய்தாக வேண்டும்!

பிழைப்புக்காக உடலை வாட்டும் வேலை செய்பவர்களிடம் இரக்கம் கொண்ட நற்குணவான் இதுபோலக் கூறுவான். மனிதனின் மதிப்பை அறிய மறுக்கும் மாமிசப் பிண்டங்களில் சில, மமதை காட்டும், இரக்கம் கொள்ளாமல்; அவர்களின் பேச்சு வேறுவிதமாக இருக்கும். "மடையன்! மண்டையிலே களிமண் தானே உனக்கு. நீ கெட்ட கேட்டுக்கு உனக்கு நாசுக்கான வேலை கிடைக்குமா?" என்று கோபிப்பர். மதத்தைத் துணைக்கழைத்து, மனமயக்கத்தைப் புகுத்துவோர்,

"என்னப்பா செய்வது? உன் விதி அப்படி இருக்கிறது. யாரை நொந்து கொண்டு என்ன பயன்?" என்று பேசுவர். பேச்சின் போக்கிலே, மாறுதல் இருக்குமேயொழிய அடிப்படையில் இரண்டு உண்மைகள் மூன்று வகையினர் பேச்சிலும் காணலாம்.

1. பலர், பிறர் காணச்சகியாத அளவு பாடுபடுகிறார்கள். கடினமான வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆபத்து நிறைந்த வேலையிலும் உள்ளனர்.

2. இந்தக் கஷ்டத்தை நீக்குவது எப்படி என்று தெரியவில்லை.

கஷ்டப்படும் மக்களின் விடுதலைக்கு, எதேச்சாதிகாரி வழிவகுப்பதில்லை, ஏய்த்துப் பிழைப்பவன் மயங்க வைப்பான், மதவாதி மறுஉலகைக் காட்டுவான், ஆனால், இவ்வளவு கஷ்டப்பட்டுத் தான் பிழைக்க வேண்டுமா? மனித அறிவு, இதற்கோர் விடுதலைத் திட்டம் காணக்கூடாதா? வேலை வேதனை உள்ளதாகத்தான் இருக்க வேண்டுமா? வேதனையைக் குறைக்க வழி இல்லையா? என்ற கேள்விகளுக்கு அவர்கள் பதில் கூறவில்லை - விடுதலைக்கு வழி கோலவில்லை - இஷ்டமில்லாததால் அல்ல, அவர்களுக்கே தெரியாததால்! விஞ்ஞானம் இந்த வீரப்பணிபுரிந்திட முன் வந்தது. வேதனையைக் குறைக்க முடியும் என்று வாக்களித்தது - செய்து காட்டிற்று எத்தனையோ வகையில் - எவ்வளவோ, ஆச்சரியப்படும் விதத்தில்.

நாலாவது மாடியிலே இருக்கும் நளினியைக் காணச் செல்லும் காதலன், காதலுக்குக் கட்டுப்பட்டவனானால்கூட,

இருநூறு படிகளை ஏறிச் செல்லும் போது காதலைக்கூடக் கணநேரம் மறந்து கால்கடுப்பதுபற்றி எண்ணிடுவான். மின்சாரம் மூலம் ஏற்பட்ட "ஏற்றிவிடும் இயந்திரம்" இருநூறு படிக்கட்டை ஏறிக் கடக்க வேண்டிய அவசியமான அல்லலை' எவ்வளவு அற்புதமாகக் குறைத்து விட்டது. படிக்கட்டருகே உள்ள சிறுஅறை வடிவிலுள்ள இடத்தில் நிற்கிறான், ஒரு பொத்தானை அழுத்துகிறான், மேலே போய்ச் சேருகிறான்! விஞ்ஞானம், மனிதனின் வேலையில் உள்ள கஷ்டத்தை எப்படி எப்படிப் போக்கி இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் இது.

ரசமான எடுத்துக் காட்டு கிடக்கட்டும், வேறு நாம் ஆச்சரியப்படும்படியான எவ்வளவோ, காரியங்களை, மனிதனின் வேலையில் உள்ள வேதனையைப் போக்க, விஞ்ஞானம் அளித்திருக்கிறது. கிடைத்து விட்டதால் - அதுவும் நாமாகக் கஷ்டப்பட்டுத் தேடாமல் தானாகவே கிடைத்து விட்டதால் - அனுபவிக்கும் நாம் அதன் அருமையை மறந்து விடுகிறோம், பெருமையை உணர மறுக்கிறோம், சிறுமைக்குணமுள்ள சிலர், அதிலே பிரமாதம் என்ன இருக்கிறது என்று பேசவும் செய்கிறார்கள். மனித சமுதாயத்தின் அல்லலை, எவ்வளவு குறைத்தது விஞ்ஞானம் என்பதுபற்றி எண்ணினால், மக்கள் ஆச்சரியப்படுவது மட்டுமல்ல, வீழ்ந்து வணங்கவும் செய்வார்கள், விஞ்ஞானத்தின் முன்பு!

இரத்தம் சுண்ட, நரம்பு முறிய உடல் உருக, கண் மங்க, கைகால் அலுக்க, மனிதன் பாடுபட்டான் - அத்தகைய உழைப்பைக் கேட்டுப் பெற்ற எத்தனை எத்தனையோ

காரியங்களில், விஞ்ஞான முறையில் நடைபெற ஆரம்பித்ததன் பலனாக, மனிதனின் உழைப்பு, வேதனை, எவ்வளவோ குறைந்து மனிதன், மிருகத்தன்மை எனும் சிறையிலிருந்து விடுபட்டான் - ஆனால் எந்த விஞ்ஞானம் விடுதலை தந்ததோ, அதனை மதிக்கவும் மறந்தான் - இன்றும் மறந்துதான் இருக்கிறான். 5 வாட் எலக்ட்ரிக் விளக்கு! சாதாரண விஞ்ஞானப் பொருள். மனிதனின் உழைப்பை எவ்வளவு பாழ்படாதபடி சேமித்துத் தருகிறது என்று கொஞ்சம் யோசனை செய்து பார்த்தால், அதன் அருமை தெரியும்.

ஒரு சிறுமின்சார விளக்கு தரும் ஒளி அளவுக்கு, ஒளிபெற, நாம், எத்தனை அகல் விளக்குத் தேடவேண்டும். அதற்காக நேரிடும் வேலையின் நேரம், அளவு எவ்வளவு இருக்கும், செலவு எவ்வளவு இருக்கும் என்பதைப் பரீட்சித்துப் பார்த்தால், பிறகு, நமது மக்கள் விஞ்ஞானத்தின் பெருமையை உணர முடியும். எத்தனையோ தீவர்த்திகள் கொளுத்திக் கஷ்டத்துடன், வெப்பத்தையும் புகையையும் வேதனையையும் தாங்கிக் கொண்டு பெற்ற; "ஒளி" இன்று, உழைப்பும் நேரச் செலவும் இன்றி, தொட்டதும் கிடைக்கிறது விஞ்ஞானத்தின் உதவியால். வானத்தில் பறப்பது, கடலில் மூழ்கி வெளிவருவது, தொலைவில் நடப்பதைக் காண்பது, கேட்பது ஆகிய அற்புதங் களைப் பிறகு நினைத்துப் பாருங்கள். அவைகளால் இன்று மக்கள் பெறக்கூடிய பலன்களில் பத்தாயிரத்தில் ஒரு பாகத்தைப் பெறுவதற்குக்கூட, விஞ்ஞானம் தோன்றாமுன்பு, மனிதன் எவ்வளவு உழைத்திருக்க நேரிட்டிருக்கும் என்பதை. அவ்வளவு உழைப்பையும் மிச்சப்படுத்தி, வேலையின்

கடினத்தன்மையைப் போக்கி வேதனையைக் குறைத்திருக்கும் விஞ்ஞானத்தை, விளக்கம் பெறாதார் சாமான்யம் என்று கருதுவதும், அதனால் பெற்ற பலனைக்கூடச் சரியாக மதிப்பிடாமலிருப்பதும் காணும்போது, வியப்பல்ல, கொஞ்சம் கோபமும் வரும் விஷயமுணர்ந்தவர்களுக்கு. குறைத்து மதிப்பிடுவோர்கூட, அதே விஞ்ஞான சாதனம், கொஞ்ச நேரம் கிடைக்காத போது எவ்வளவு வேதனையும் அதிருப்தியும் பரபரப்பும் பெறுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நகைப்பு வரும்! விஞ்ஞானத்தைச் சர்வ சாதாரணம் என்று கூறுவான், பழைய நாட்களின் பெருமைபற்றிப் பன்னிப்பன்னிப் பேசுவான், அதே ஆசாமி ஒருநாள் அவன் வாழும் ஊரிலே, மின்சார விளக்குக் கெட்டுவிட்டால், போதும், வேதனை அடைவான், ஆயிரம் தடவை ஆயாசமடைவான்! வேலை செய்து செய்து வேதனையுற்று, தேய்ந்துக் கொண்டிருந்த மக்களை, விஞ்ஞானம் காப்பாற்றி, அவன் உழைப்பைக் குறைத்து, நேரத்தைக் குறைத்து, செலவையும் குறைத்து வாழ்க்கையில் முன்பு எண்ணியிருக்க முடியாத வசதிகளைத் தந்து, பொது நலனை வளர்த்தது - வளர்த்துக் கொண்டு வருகிறது.

ஏககாலத்தில், முழு வலிவுடனும் முழுத்திறமையுடனும் ஆயிரம்பேர் சேர்ந்து வேலை செய்தால் மட்டுமே சாதிக்கக் கூடிய ஒருகாரியத்தை, விஞ்ஞானத்தின் உதவிகொண்டு, ஒரே ஆள், மிக எளிதாக, எவ்வளவோ குறைந்த நேரத்தில், இன்று செய்து முடிக்க முடிகிறது. இதன் பொருள் என்ன? பொதுவாக, மனிதனின் உழைப்பு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான்.

சென்னை போன்ற நகர்களிலே இன்றும், "பாரமான" சாமான்கள் ஏற்றப்பட்ட வண்டியை இழுத்துச் செல்லும், பாட்டாளியின் பரிதாபத்தைக் காண்கிறோம் - அவன் தள்ளிச் செல்லும் பார வண்டியில் ஏற்றப்பட்டுள்ள சாமானை விட அதிக கனமும் அளவும் கொண்ட சாமான்களை ஏற்றிக் கொண்டு, ஒரே மனிதன் நிழல் பட உட்கார்ந்து கொண்டு ஓட்டும் "லாரி" எடுத்துச் செல்வதைக் காண்கிறோமல்லவா! கைவண்டி, மனிதனை மிருகமாக்கி விடுகிறது - "லாரி" மனிதனை மனிதனாக்கி வைக்கிறது! இந்த "லாரி" விஞ்ஞானத்தின் சிறு சின்னம் - அதுவந்திராவிட்டால், வியர்வைபொழிய, மேனிகருக்க, இரத்தம் சுண்ட, எலும்பு முறிய இழுக்கிறானே கைவண்டி, அதைப்போல வேறு பல வகை வண்டிகளில் சாமான்களை ஏற்றிக் கொண்டு, வேறுபலர், வேதனையுடன் இழுத்துக் கொண்டு போகவேண்டும். அந்த வேதனையை விஞ்ஞானம் குறைத்தது. இதுபோல், மனிதன் பாடுபட்டுச் செய்து வந்த எவ்வளவோ காரியங்கள், யாக யோகாதிபலனால் அல்ல, சித்து தெரிந்ததால் அல்ல, தேவானுக் கிரகம் பெற்றதால் அல்ல, 'மையின்' மகிமையால் அல்ல, யாரோ சிலர், மக்களின் வேதனையைக் கண்டு மனந்தாளாமல், அந்த வேதனையைக் குறைக்க முடியாது சகித்துக் கொள்ளத் தான் வேண்டும் என்று குருமார்கள் கோயில்களிலே ஜெப மாலையை உருட்டிக் கொண்டிருந்தபோது, சிந்தனையில் ஈடுபட்டு ஆராய்ந்து ஆராய்ந்து, ஆயிரம் முறை தோற்று, தோல்வி கண்டு துவளாமல் மீண்டும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, விஞ்ஞான முறைகளை வகுத்ததன் பலனாகக் குறைத்துள்ளனர் - குறைத்துக் கொண்டு வருகின்றனர்.

கோயில் சுற்றும்போதாவது பக்தர்களுக்கு உள்ளே எழுந்தருளியிருக்கும் ஈசனுக்கு அங்கு என்ன பெயர் என்பது தெரியும். போகாதவர்கள்கூட, ஸ்தலபுராணத்தை அறிவர். அது பற்றிப் பேசுவர், பாராட்டுவர். ஆனால் ரயிலில் போகும் போதும் நமக்கு அந்தச் சாதனத்தைக் கண்டறிந்தவனின் பெயரும் தெரிவதில்லை, தெரிந்து கொள்ள வேண்டுமென்ற சிந்தனைகூடத் தோன்றுவதில்லை. ரேடியோ கேட்போம், அதனைத் தந்தவர் யார் என்று அறியாமல். தந்தி கொடுப்போம் உடனே புறப்படு என்று, அந்தச் சாதனத்தை நாம் அடையச் செய்தவர் யார் என்று கண்டறியும் எண்ணமும் கொள்ளாமல்! விஞ்ஞானத்தின் முழு உதவியையும், கொஞ்சமும் நன்றி காட்டாமல், உணராமல்கூட, அனுபவிக்கிறோம். அதுமட்டுமா? இன்று நம்மில் பலர், விஞ்ஞான சாதனங்களை, ஆகாதவை என்றும், ஆபத்தானவை என்றும், தேவைப்படாதவை என்றும் கூடக்கூறத் தொடங்கிவிட்டோம். அதற்குக் காந்தியாரைச் சாட்சிக்குக் கொள்கிறோம்.

விஞ்ஞானத்தின் அருமை பெருமையை அறிந்து கொண்டவர்களாகவோ, மனிதனின் உழைப்பு அதிகமாகப் பாழாக்கப்படுவது கூடாது என்ற பச்சாதாப உணர்ச்சி கொண்டவர்களாகவோ நாம் இருந்தால், நெசவுத் தொழிலுக்குக் கைராட்டையையும், அரிசிக்கு உரல் உலக்கையையும், இன்றும் தேடுவோமா! தேடுவது ''தேசோத்தாரணம்'' என்று பேசுவோமா?

இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு நெசவுத் தொழிலில் இருந்த வேலையின் கடினத்தையும் வேதனையை

யும் போக்கி, மனிதனின் கஷ்டத்தைக் குறைத்து, பலனை அதேபோது, அதிகரிக்கச் செய்யும். விஞ்ஞான நெசவு முறையைக் கண்டுபிடித்தனர் - கண்டுபிடித்ததை மேலும் மேலும் வளமாக்கினர் வசதியைப் பெருக்கிக் கொண்டனர். இன்று, பழைய நாட்களிலே நெசவுத் தொழிலில் ஈடுபட்டவர்கள் பட்ட கஷ்டத்தில் சிறுஅளவு கஷ்டம் மட்டுமே பட்டு, பழைய நாட்களில் பெற்ற பலனைப்போல, எத்தனை எத்தனையோ மடங்கு அதிகமான பலனைப் பெற்று வருகிறோம். எவ்வளவு மனித உழைப்பு, நேரக்கேடு குறைக்கப் பட்டிருக்கிறது! மனிதனின் நரம்பு முறிவு எவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது. இது தெரிந்தும், இன்று, வீட்டுக்கொரு ராட்டை வைத்துச் சுற்றும் திட்டம் தயாரிக்க விடுகிறோம் ஆள்பவர்களை. தாங்களே நூற்று, தாங்களே நெய்து கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது. நமது மாகாண முதலமைச்சர், அதுமட்டும் போதாது, தங்களுக்குத் தேவையான நூலை நூற்க, பஞ்சு வேண்டுமே அதற்கும், அவரவர்கள் தத்தமது இடத்திலேயே பருத்தியும் பயிரிட்டுக் கொள்வது மிக நல்லது என்று போதிக்கிறார்! எவ்வளவு தூரம், விஞ்ஞானத்தை விட்டுப் பிரிய இருக்கிறார், பிரகாசம்காரு!

அவரவர்கள் தத்தமது இடத்திலே பருத்தி பயிரிட்டு, அதனைக் கொண்டு அவர்களே நூற்று, நூலைக் கொண்டு ஆடை நெய்து அணிந்து கொள்ளலாம் என்றால், தேவையான அளவுதுணி கிடைக்காதே என்று கேட்டால், நமது முதலமைச்சர் - இப்போதல்ல, இன்னும் கொஞ்சம் கோபம் அதிகமானதும் கூறுவார் - வெளியிலே நடமாடினால்தானே துணி அதிகமாகத் தேவைப்படுகிறது. வீட்டோடு இருந்தால், ஆடை அதிகம்

தேவைப்படாதல்லவா, ஆகவே வீட்டுக்குள் இரு! என்றும் கூறிவிடுவார் - ஆமாம்! பழங்காலத்திலே, வேட்டையாடவும் குறவைக் கூத்தாடவும், வெளியே சென்ற நேரம் தவிர, மற்றச் சமயத்திலே, குகைகளிலே வாசம் செய்து வந்தார்கள், நமது ஆதிகுடிகள் - அதுபோலிருப்போம் என்று அறவுரை கூறவும் கூடும்.

இவ்வளவுக்கும், இன்று நாம் பெற்றுள்ள விஞ்ஞான வசதி, மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் எவ்வளவோ குறைவு. மற்ற நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள், நமது நாட்டு மக்களைப்போல நரம்பு முறியப் பாடுபடுவதில்லை. சென்னைக்கு அருகே உள்ள பல்லாவரத்தைச் சார்ந்த மலைகளில், தொத்திய படியும், நூலேணியில் தொங்கிய படியும், கயிற்றைப் பிடித்தபடியும், காயும் வெயிலைத் தாங்கிய படியும், கல் உடைக்கும் பாட்டாளிகளைப் பாருங்கள்! பாதை ஓரத்தில், கல் உடைக்கும் பாவையரைப் பாருங்கள்! அவர் களின் உழைப்பு எவ்வளவு! வேதனை எவ்வளவு!

அமெரிக்கத் தொழிலரசர் போர்டு, "இன்றும் அடிமை களாக உழைப்பவர்கள் ஆசியாப் பகுதியிலே உள்ளனர்' என்றார். யார் அவர்கள் என்று கேட்டபோது அவர் சொன்னார், "ஏன்! இன்றும் இந்தியா போன்ற இடங்களிலே, கல் உடைத்தும், கட்டை வெட்டியும், ஜீவிக்கிற மக்கள் இருக்கிறார்களே. அவர் களின் வாழ்வு, ஒரு அடிமையின் வாழ்வு போன்றதுதானே' என்றார். உலகில் இங்குமட்டுமல்ல, எங்கும் ஆதிநாட்களிலே, மனிதன் சகலவிதமான கடினமான வேலையையும், கஷ்டப் பட்டு, உடலைத் தேயவைத்துக் கொண்டுதான் செய்துவந்தான்

- கல் உடைத்தான், கட்டை வெட்டினான் - வீதி கூட்டினான் - வேதனைப்பட்டான், வாழ! இன்றோ, மேனாடுகளிலே, மனிதன், தன் புத்திபலத்தைக் கொண்டு, விஞ்ஞானத்தைப் பெருக்கிக் கொண்டு, அதன்துணைகொண்டு, இன்று எண்ணற்ற காரியங்களை, மனித உழைப்பைப் பலியிட்டுத்தான் சாதிக்க வேண்டும் என்ற நிலையை மாற்றிக் கொண்டான். உழைப்பைக் குறைத்துக் கொண்டான். அதேபோது, வாழ்க்கையின் வசதி களையும் பெருக்கிக் கொண்டான்.

இன்று அங்கெல்லாம் மனித உழைப்பின் மூலம் சாதிக்கப்படும் வேலையின் அளவைவிட, மின்சாரம், நீராவி, நிலக்கரி போன்ற "சக்தி"களின் துணை கொண்டு பெறப்படும் வேலையே அதிகம். அதனைத்தான், நவயுகம் முன்னேற்றம், மனிதனின் வளர்ச்சி, நாகரிகம் என்று கருதுகிறார்கள்.

இன்றும், ஓய்வாக இருக்கும் ஆள், நாகரிகமாக வாழ்கிறான், "அடிமைக்காரனாக" உழைப்பவன், புழுதியில்தான் புரள வேண்டி இருக்கிறது. வடபாதி மங்கலத்தாரின் வாழ்க்கையில் கலைமணம் கமழும் - பண்ணையில் வேலை செய்யும் சின்னான் வாழ்விலே, மணம் ஏது! அதுபோலவே விஞ்ஞானத்தின் துணையால் மக்களின் உழைப்பின் கடினத்தைக் குறைத்துக் கொண்ட மேனாட்டவரின் வாழ்வு, கலை ஒளியுடன் இருக்கிறது, இங்கு கவலை ஒலியே கேட்கப் படுகிறது. இன்றும் இங்கு, மனித உழைப்பே அதிகம், மற்ற சக்திகளை விட! உழைப்பு அதிகமேயொழிய, விளைவு பலனைப் பொறுத்த மட்டிலே மிகமிகக் குறைவு! ஏற்றம் இறைக்கும் கழனியில், உழவனின் உழைப்பு அதிகம், இரண்டு

மூன்று குதிரை ஓட்டமுள்ள மெஷின் வைத்துத் தண்ணீர் இறைத்துப் பயிரிடும் வயலில், உழவனின் உழைப்புக் குறைவு! பலனோ, அதிக உழைப்பு இருக்குமிடத்தில் குறைவு, மனித உழைப்புக் குறைந்திருக்கும் இடத்தில் அதிகம், மனிதனுக்குத் தோழனாகவும் துணையாகவும், மெஷின், விஞ்ஞானம் இருப்பதால்.

இதுபற்றி, (1929) ஒரு கணக்கு எடுத்தார்கள், அப்போது நாட்டில் நமது மக்கள் எவ்வளவு வேதனைப்படுகிறார்கள் என்பது உலகுக்குத் தெரிந்தது.

நாட்டிலே, நடைபெறும் எல்லாவிதமான வேலை களுக்கும், மனித உழைப்பு, நிலக்கரி கொண்டு செய்யப்படும் வேலை, பெட்ரோல் உபயோகித்துச் செய்யப்படும் வேலை, நீரின் சக்தி கொண்டு சாதிக்கப்படும் வேலை, என்று பல வாறாகத் தேவைப்படுகிறது. அதன் அளவு பற்றிக் கணக்கெடுத்து இருக்கிறார்கள். இந்தியாவின் கணக்கு, மக்களின் வேதனை எவ்வளவு அதிகம் என்பதைக் காட்டுவதாக இருக்கிறது.

கரைபுரள ஓடிவரும் ஆறுகள் காட்டிடை காணப்படும் மரவகைகள், பூமிக்கடியில் தூங்கும் கனிப்பொருள்கள், ஆகிய வற்றை எல்லாம் விஞ்ஞானத்தின் துணைக்கருவிகளாகக் கொண்டு உலகு முன்னேறுகிறது - மனிதன் மிருகம்போல உழைக்கும் கொடுமையை களைந்திருக்கிறது. விஞ்ஞானத்தை முதலாளித்வம், தன் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டிரா விட்டால், இன்று உலகு இன்பபுரியாக இருக்கும்.

வியர்வைபொழிய, பெருமூச்சுடன், கடுமையான வேலை செய்ய வேண்டிய அவசியமின்றி, மனிதன் விஞ்ஞான சாதனங்களைக் கொண்டு, மூளைபலத்தால், வேலை செய்து, இன்று பெறுகிற பலனைவிட எவ்வளவோ மடங்கு அதிகமான பலனைப் பெற்று, இப்போது உழைக்கும் அளவு உழைக்காமல், உன்னதமான வாழ்வு பெறமுடியும். விஞ்ஞானம் அதற்கான வழிகளை வகுத்திருக்கிறது. வெளிநாடுகள் அவ்வழி சென்றன - இந்நாடு வெளிநாட்டுத் தொடர்பின் பலனாக, அந்தப் பாதை ஓரத்திலே நின்று கொண்டிருக்கிறது. அதுவழி போகலாம் என்ற நினைப்புடன். காந்தியார், கூப்பிடுகிறார் 'திரும்பிப் போகலாம் வா! நமக்கு வேண்டாம் அந்த நவயுக பாதை! நாம் பழங்காலம் பெறுவோம்!' என்று. சரியா, தவறா? என்பதுகூட அல்ல என் கேள்வி, அவருக்கு அது சரி என்று தோன்றுகிறது - அவர் மனப்போக்கு அது. நாட்டின் முன்னேற்றத்துக்கு அது உகந்ததா? மக்கள் முழுவாழ்வு பெற அதுவா வழி? இதைத்தான் யோசிக்க வேண்டும். வாழ்க்கைக்காக நடைபெறும் போராட்டத்திலே மனிதனுக்குப் புதிய பலத்தையும் வசதியையும் தரும் சாதனம் விஞ்ஞானம். அதுகூடாது என்ற தத்துவத்தின், ஒருதுண்டுதான், ராட்டைப்பிரசாரம். இந்த நெசவாலை மட்டிலுந்தான் இன்று கண்டிக்கப்படுகிறது, இதே சமயத்தில் சென்னை சர்க்கார், பெரிய தொழிற்சாலைத் திட்டங்களை நிறைவேற்றப் போகிறார்கள் என்று முதலமைச்சர் கூறுகிறார். ஏன், மற்றவற்றுக்கு விஞ்ஞான சாதனத்தை யந்திர வசதியை உபயோகிக்க விரும்பும் இவர், நெசவு விஷயமாக மட்டும், கைராட்டைக் காலத்துக்கு, நாடு - நம் நாடு - போக வேண்டும் என்று கூறுகிறார்! இதற்குப் பொருத்தமான ஓர்

சமாதானம் அவர் கூறவில்லை; கூற முடியாது. இன்று துவக்கப்படும், மில் ஒழிப்புத் திட்டம், படிப்படியாக, எல்லா வற்றுக்கும், பரவிவிடும், தடுக்கமுடியாது, ஆரம்பத்தில் தடுத்தா லொழியப் பிறகு விஞ்ஞானத்தைச் சகலதுறையிலிருந்தும் விலக்கவே முயற்சி நடக்கும். இதற்கு அறிகுறியும் தோன்றி விட்டது. பெரிய பிரச்னையிலே மக்கள் இன்று ஈடுபட்டிருப்ப தால், இந்த அறிகுறியைக் காணநேரமில்லை. மில்களை ஒழிக்கத் திட்டமிடும் முதலமைச்சர், இதே நேரத்தில், அரிசி மில்களையும் ஒழிக்கத் திட்டமிட்டிருக்கிறார் - புதிய அரிசி மில்கள் இனித்துவக்கப்பட அனுமதி கிடையாதாம். ஆடைக்குக் கைராட்டை, அரிசிக்கு உலக்கை! இரண்டாம்படி வந்தாயிற்று!! இனிப் படிப் படியாகப் போக வேண்டியதுதானே; அகல்விளக்கு, ஏடு எழுத்தாணி, தேட வேண்டும், காடுமேடு களில் குடி இருக்க வேண்டும்.

விஞ்ஞானத்தின் ஜொலிப்பை மட்டுமல்ல, அதன் பலனாக மனித சமுதாயம் பெற்ற நலனை உழைப்பு மிச்சப் பட்டதை, கடினம் குறைக்கப்பட்டதை உணர மறுப்பதால் விளையும் போக்கு இது.

வெளிநாட்டவரோ, மனிதனின் உழைப்பின் சக்தியைச் சுறண்டும் முறையைக் குறைத்து, நீர், நெருப்பு, காற்று, மின்னொளி, முதலிய இயற்கைச் சக்தியைப் பயன்படுத்தி, உழைப்பைக் குறைத்துக் கொண்டுள்ளனர் - இன்னும் புதிய புதிய முயற்சிகள் நடைபெற்றபடி உள்ளன.

சாதாரணமாக, நீராவியினாலோ, மின்சாரத்தாலோ, இயங்கும் மெஷின் இன்று, தண்ணீர் இறைப்பது முதற்கொண்டு,

ரயில் வரை உபயோகமாவதைப் பார்க்கிறோம். மூன்று குதிரை ஒட்டமுள்ள மெஷின் (3 எச்.பி) 5 குதிரை ஓட்டமுள்ள மெஷின் என்று கேள்விப்படுகிறோம். தோட்டங்களில் பார்க்கிறோம், தொழிற்சாலைகளில் காண்கிறோம். என்ன இதன் பொருள்? மனிதன் உடல் தேய உழைக்கும் கொடுமையைக் குறைக்க மனிதரில் மதிமிகுந்தவன், தந்த நிதி அது நமக்குப் பயன்படக்கூடாது என்கிறார் முதலமைச்சர். நீதியா என்று யோசியுங்கள். ஒருகுதிரை ஓட்டமுள்ள மெஷின் என்றால் என்ன பொருள்? 20 மனிதரின் சக்தி, அந்த ஒரு மெஷினுக்கு இருக்கிறது. அந்த ஒரு மிஷினை உபயோகிப்பதன்மூலம், இருபது மக்களின் உடல்தேய்வு தடுக்கப்படுகிறது - உடல் தேய்வுமட்டுமல்ல, அவ்வளவு பேரும் பாடுபடும் கால அளவும் குறைக்கப்படுகிறது.

காலையில் கோழி கூவியதும் எழுந்திருந்து, கொட்டாவி விட்டுக்கோலும் குடமும் எடுத்துக் கொண்டு தோட்டக்காடு போய் ஏற்றம் ஏறி, தண்ணீர் இறைக்கும் உழவன், ஒருநாள் பூராவும் உழைத்து எவ்வளவு அளவு தண்ணீர், பாய்ச்ச முடியுமோ அதுபோல எவ்வளவோ அதிகமான மடங்கு அளவு தண்ணீர், ஒரு மெஷினைக்கொண்டு இறைக்க முடிகிறது. 20 மனிதரின் உழைப்பு, ஒரு குதிரை ஓட்டம் உள்ள சின்னஞ்சிறு மெஷினுக்கு இருக்கிறது. இந்தச் சாதனங்களை இழக்கவேண்டுமா? ஏன்? மனிதன் மிருகமாக உழைக்கத்தான் வேண்டுமா? ஏன்? இயற்கைச் சக்திகளை விஞ்ஞான அறிவுடன் பயன்படுத்திக் கொள்ள ஏன் மறுக்க வேண்டும்? அதிலும் வெளி உலகு எங்கும் காற்றைக் கனலை, நீரையும் நிலத்தடி கிடைக்கும் பொருளையும் கொண்டு 'சக்தி'களை உற்பத்தி

செய்து, மனிதவாழ்வின் வேதனையைப் போக்கி இருக்க, அதைக்கண்கூடாகக் கண்டான பிறகும், இவை ஆகாது என்று கூறுவது எவ்வளவு கொடுமை. எங்கே கூறினர் என்று கேட்பர் அன்பர்கள். கூறுவது ஏன்! செய்தே காட்டுகிறார்களே! ஆடைக்கு ராட்டை! அரிசிக்கு உலக்கை! ஆணுக்குச் சுற்றும் வேலை! பெண்ணுக்குக் குத்தும் வேலை! இதற்கு ஆளும் வேலை, பிரகாசத்துக்கு! அறிவுடைமையா இது? என்று கேட்டாலோ, ஆத்திரமுடையோர் ஆர்ப்பரிக்கின்றனர். முறையா இது!

நீரிலே நெருப்பு இருக்கிறது என்பதைக் கண்டறிந்த விஞ்ஞானிகள், நீரோட்டத்தை இன்று மனித வாட்டத்தைக் குறைக்கும் சாதனமாக்கினர். மந்திரத்தின் துணைகொண்டல்ல, மாகாளி அருள் கொண்டல்ல, மதியின் துணைகொண்டு. நீரின் ஓட்டத்திலே பிறக்கும் சக்தியைக் கொண்டு, பிரமாண்ட மான யந்திரங்களை இன்று இயங்கச்செய்து, அவைகளைக் கொண்டு இலட்சக்கணக்கான மக்கள் பாடுபட்டுச் சாதிக்க வேண்டிய காரியத்தைச் செய்து முடிக்கின்றனர், மனித உழைப்பும் மிச்சமாகிறது, காலமும் சூறையாடப்படாமலிருக் கிறது, பலனும் அதிகமாகிறது. மேட்டூர் எங்கே இருக்கிறது, கோலார் எங்கே இருக்கிறது. மலை, மேட்டூர்! கோலார், பாதாளம்! மலைமேல் இருக்கும் நீரைக்கொண்டு, பாதாளத்தில் பட்டப்பகல் போலாகச் செய்யும் மின்விளக்குகள் போடப் பட்டுள்ளனவே, இதைவிட அற்புதம் வேறு என்ன வேண்டும். பாதாள லோகம் போனான் பார்த்திபன், அங்கு நாககன்னியைக் கண்டான், காதல் கொண்டான் என்று படிக்கக் கேட்டுப் பரவசமடைகிறோம், இதோ பார்த்துக் கொண்டிருக்கும்போதே,

கண்ணன் இல்லை, அவன் கைக்குழல் இல்லை, பார்த்திபனல்ல, பாணம் விடுவதில்லை, வானத்திலே பொழிகிற நீர், வயலைக்குளமாக்கிப் பின்னர் புரண்டோடி ஆறாக, அதன் வெள்ளத்தையும் ஓட்டத்தையும் அறிவால் அணையிட்டு தேக்கமாக்கி, தேக்கியநீரைத் தேவையானபோது தேவையான அளவு தேவையான இடத்துக்கு அனுப்புவதுடன், தேக்கத்தின் மூலம் நீரோட்ட சக்தியைக் கொண்டு பெரிய மெஷின்களை இயங்க வைத்து, மெஷின் இயங்குவதன் மூலம், மின்சார சக்தியை உண்டாக்கி, அந்தச் சக்தியைக் கொண்டு, நெடுந்தூரம், ஒளி தருகிறார்களே, இது எவ்வளவு அற்புதமான காரியம்! அற்புதம் கிடக்கட்டும், எவ்வளவு பெரிய வெற்றி, அறிவுக்கு! வெற்றி கூடக்கிடக்கட்டும், எவ்வளவு வேதனையான உழைப்பை, இதன் மூலம் குறைக்க மார்க்கம் கிடைத்தது.

பம்பாயில், டாட்டா கம்பெனியார், நீரைத்தேக்கி, நீரோட்ட சக்தியைக்கொண்டு, இன்று பம்பாய்க்கு ஒளி தருகிறார்கள். மேற்குத்தொடர்ச்சி மலைகளில் புரண்டோடி வரும் நீரை, பெரிய தேக்கங்களாக்கி, 230,000 குதிரை ஓட்டமுள்ள மின்சாரச் சக்தியை உற்பத்தி செய்கிறார்கள். அதாவது 4600000 மனிதர்களின் உழைப்பு, அவ்வளவு மனிதர் இல்லாமல், உண்டாக்கப்படுகிறது.

நாற்பத்து ஆறு இலட்சம் மக்களின் உழைப்பின் அளவுள்ள சக்தி, மலையிலே, புரண்டு ஓடிக்கொண்டிருந்தது தண்ணீராக! இதுவரை, நமது கவிகள் கானாற்றின் சல சலப்பையும் வெள்ளத்தின் வேகத்தையும் பாடினர்! ஓவியர்கள், படம் தீட்டினர்! வேதாந்திகளோ, அந்த வெள்ளத்தின் வேகத்தில்

சிக்கினவன் எப்படிக் கரைசேர முடியாமல் அழிந்துபடுவானோ, அதுபோலப் போகபோகாதிகளிலே மூழ்கினவன், அழிவான் என்று பயம் காட்டினர், ஆனால், அதன் பலத்தை, அது கட்டுக்கு அடங்கும் என்ற எண்ணத்தை, அதனை அடக்கி ஆளலாம் என்ற ஆசையை, அடக்கி ஆள்வதன் மூலம், அபாரமான பலன் பெறலாம் என்ற திட்டத்தை யார் சொன்னார்கள்! யார் செய்து காட்டினார்கள்! விஞ்ஞானம் இதோ, ஓடும் நீரிலே 46 இலட்சம் மக்களின் சக்தி இருப்பதைக் கண்டு, கொடுத்தது. பம்பாய் நகருக்கு விளக்குப் போடுகிறார்கள் இந்த 46 இலட்சம் மக்கள், இவர்களே 53 நெசவாலைகளை ஓட்டுகிறார்கள். பம்பாயிலிருந்து பூனாவுக்கு ஓடும் ரயிலை ஓட்டுகிறார்கள். ஒரு ஆளாவது கண்ணுக்குத் தெரிய மாட்டார்கள்! ஆனால் ஓயாது வேலை செய்து கொண்டிருக்கிறார்கள், 46 இலட்சம் மக்கள் - பிரம்மாவின் சிருஷ்டிகளல்ல, ஆற்றிலேயிருந்து அறிவு எடுத்துத்தந்த மாயாவிகள்! இஷ்டப்படி சுற்றிக் கொண்டு, எடுப்பாரற்றுக் கிடந்தவர்கள், இன்று, ஏவினதைச் செய்கின்றனர்! இத்தகைய நீரோட்ட சக்தியைக் கொண்டு மனிதன் பயன்படுவது நல்லதா, கைராட்டை கைஉலக்கைக் காலத்துக்குப் போவது நல்லதா என்று யோசிக்க வேண்டுகிறோம். யார் போக விரும்புவார்கள் காட்டுக் காலத்துக்கு என்று கடுங்கோபத்துடன் கேட்கும் காங்கிரஸ் அன்பர் மனக்கண்முன் தெரிகிறார். "கோபியாதே நண்பா! இன்று ஆடைக்கு ஆலைவேண்டாம் அரிசிக்கு மெஷின் வேண்டாம் என்று ஆரம்பமாகிறது, இதை அனுமதித்தால், பிரயாணத்தின் முடிவு, காட்டுக் காலந்தான் என்று கூறவிரும்புகிறோம்.

இந்தியா பூராவிலும் சேர்த்து இன்று 1,5000,000 குதிரை ஓட்டமுள்ள மின்சார சக்தி பயன்படுத்தப்படுகிறது, அதாவது 30000000 மக்கள் செய்ய வேண்டிய வேலையை மின்சார சக்தி செய்கிறது.

மூன்றுகோடி மாயாவிகள், இதுபோலப் பலப்பல கோடி மாயாவிகள்! இன்னும் உள்ளனர், மறைந்துக் கொண்டு, நீராய், நெருப்பாக, நிலக்கரி ரூபத்தில்! விஞ்ஞானம் அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து வருகிறது, நமக்காக வேலை செய்ய, நமக்குத் துணை செய்ய, இப்படி நமக்கு வேலை செய்யக்கூடிய மாயாவிகள், எவ்வளவுபேர் கிடைக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர் தெரியுமோ! நீரிலே விளையாடிக் கொண்டிருக்கும் மாயாவிகள் மட்டும் 54 கோடி பேர். இந்தியாவின் ஜனத்தோகை 40 கோடி, அவர்களுக்கு வேலை செய்யக்கூடிய மாயாவிகள், நீரிலே மட்டும் 54 கோடிபேர் இருக்கிறார்கள்! இவர்களை அழைப்பது விஞ்ஞானியின் வேலை. இவர்கள் வருவதைத் தடுக்க கைராட்டையைச் சுற்று, உலக்கையைச் தூக்கு என்று துவக்குகிறார் போர்! இதுமுறையா, சரியா?

நீரிலே இருந்து பெறகிற சக்திபோல நிலக்கரியிலிருந்து பெறலாம், நிலக்கரி கொண்டு நெருப்புண்டாக்கி அதன்மூலம் கிடைக்கும் சக்தியையும் ஆவியையும் கொண்டு. அதுமட்டுமா! பூமியைத் தோண்டினால், பாதாளத்திலிருந்து ஆவி கிளம்புகிறது - அதற்கு சக்தி இருக்கிறது - அதைக்கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது - இத்தாலியில் 4000 குதிரை ஓட்டமுள்ள மின்சார சக்தி இப்படி, பாதாளத்திலிருந்து கிளம்பும் ஆவியைக் கொண்டு பெறப்படுகிறது. இதுமட்டுந்

தானா? கதிரவன் காய்கிறானே, அவனுடைய வெப்பத்தையும் வேலை வாங்க முடியும்! வேலை வாங்கும் திட்டத்தைக் கண்டுபிடிக்கிறார்கள். சூரிய வெப்பத்திலிருந்து மின்சார சக்தியைக் கொண்டு, ஒரு சின்ன மின்சார மெஷினை நடத்திப் பார்த்தார்கள், பரீட்சார்த்தமாக, ஆராய்ச்சி மேற்கொண்டு நடந்து வருகிறது. இந்த நாட்களிலேதான், மெஷின்கள் கூடாது என்ற பேச்சுப் பேசப்படுகிறது, அதன் ஆரம்ப அத்யாயமாக, ஆலை வேண்டாம் என்று ஆளவந்தார் கூறுகிறார், நாடு கேட்டுக் கொண்டிருக்கிறது.

*(திராவிட நாடு - 20-10-46)*

# 35. இடந்தேடிகள்!

"முதலியார் ரொம்ப நல்லவர்; தர்மிஷ்டர்; நிர்வாகத் திறமையும் உண்டு, அதை எல்லாம் இல்லை என்று சொல்ல வில்லை; அவர் தங்கமானவர்; ஆனால் காங்கிரஸ் கட்சியின் கீர்த்திக்குப் பங்கம் வரப்படாது பாருங்கோ; என்னையோ காங்கிரஸ் அபேட்சகனாகத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். காங்கிரசின் கீர்த்தியைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு எனக்கு வந்து சேர்ந்திருக்கு; ஆகையினாலேதான் நான் முதலியாரை எதிர்க்கவேண்டி இருக்கே ஒழிய, வேறென்ன சார். என்னயையும் பார்க்க வேண்டாம். அவரையும் கவனிக்க வேண்டாம், காங்கிரசைக் கவனியுங்கள் சார். அதுதான் நான் சொல்ற விஷயம்"

காங்கிரஸ் அபேட்சகர்.

"என்னய்யா செய்யறது! எதிர்த்து நிற்கறதுன்னு ஆரம்பிச்ச பிறகு, ஏதாவது ஒரு கட்சிப் பேரைச் சொல்லித் தானே ஆகணும்! அவனுங்கக் கூட்டம் போட்டுக் காங்கிரஸ் காங்கிரசுன்னு பேசறாங்க. நாம்பளும் ஏதாவது கூட்டம் போட்டாக வேணுமில்லோ? கூட்டம்னு போட்டா, வேறே எதைப் போடறது? ஜஸ்டிசுதான். அதனாலே அந்தக் கட்சின்னு சொல்லிக் கொள்ள வேண்டி இருக்கு. இல்லைன்னா, நமக்கென்னய்யா கட்சியும் கத்திரிக்காயும். இப்ப நான் என்ன காங்கிரசு, கெட்டுப்போன கட்சின்னா சொல்றேன்? என்னமோ அது நமக்குப் பிடிக்கலே, அவ்வளவுதான். எவ்வளவோ உபகாரம் செய்திருக்கிறேன் இந்த ஜனங்களுக்கு ஒரு ஒட்டு கொடுக்காத போயிடுவாங்களா? இல்லைய்யா நானேதான் கேட்கறேன், காங்கிரஸ் பெரிய கட்சியா இருக்கட்டும். அந்த ஆள், எப்படிப்பட்டவன் எத்தனை காலமாக உங்களுக்குத் தெரியும், என்னைவிட எந்தவிதத்திலே, அவன் சிறந்தவன், சொல்லுங்க கேட்போம். இதோ பாரு, என்னமோ கட்சி கட்சின்னு பேசிகிட்டு, நல்லவங்களுக்குத் துரோகம் செய்யாதே. அவ்வளவுதான் நான் சொல்றது. நீ காங்கிரஸ் கட்சிதான் பெரிசுன்னு நினைத்துக் கொண்டா அப்படியே சொல்லிக்கோ, நம்மை மட்டும் மறந்துடாதே, ஒட்டு போட்டுடு. உனக்கு நான் உபகாரம் செய்யாமே இருந்ததில்லை, இதுவரைக்கும் உன்னை நான் வாய் திறந்து ஒரு உபகாரமும் செய்யச் சொல்லிக் கேட்டதில்லை".

ஜஸ்டிஸ் அபேட்சகர்,

தேர்தல் காலத்திலே, நீங்கள் சர்வசாதாரணமாகக் கேள்விப்படக்கூடிய பேச்சு இது.

காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நிற்பவர், தன் கட்சியை முன்னாலே நிறுத்திப் பேசவார் - தனக்கல்ல மரியாதை, கட்சிக்கு என்பதை வலியுறுத்துவார் - கட்சிக்காகவே தான் நிற்பதாகச் சொல்வார் - கட்சியின் மதிப்புக்காகவே பாடுபடு வதாகச் சொல்வார்.

இதுவா முக்கியம், ஆளின் யோக்யதாம்சம், திறமை தகுதி இவைகளை அல்லவா கவனிக்க வேண்டும் என்று கேட்பர். அது ஓட்டர்கள் கவனிக்கவேண்டிய பிரச்னை - ஆனால் ஒன்றுமட்டும் மறுக்கமுடியாது, அபேட்சகர்கள் என்று நிற்பவர்கள், தாங்கள் எந்தக் கட்சியின் சார்பிலே நிறுத்தப்படுகிறார்களோ, அதனுடைய சேவைக்காகவே இருப்ப தாகச் சொல்வது, ஓட்டுபெறும் தந்திரமாகக்கூட இருக்கலாம். ஆனால், கட்சிப்பற்றை அவர்கள் காட்டும் விதம் இருக்கிறதே, அது பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

அதேபோது, இதர கட்சிகளின் சார்பில் நிற்பதாகக்கூறிக் கொள்கிறார்களே அவர்கள், தங்களை முன்னாலே நிறுத்திப் பேசுவார்களேயொழிய, கட்சியைப் பற்றிப் பேசமாட்டார்கள் - பற்றும் காட்டமாட்டார்கள் - கட்சியை நேசிக்கக் கூட மாட்டார்கள். இத்தகையவர்கள், தேர்தல் காலத்துக் காளான்கள் - அதே போது - அவர்களே கட்சிக்கரையான்களாகவு மாகிறார்கள் - ஜெயித்தாலும் தோற்றாலும்.

கடசிக்காகத்தான் நான் என்று காங்கிரஸ்காரர் மார் தட்டும் வீரம்போல, இவர்களிடம் கட்சிப்பற்று இருப்பதில்லை - கட்சியினிடம், தொடர்போ, கட்சித் தொண்டர்களிடம் ஈரமோ கொள்வதில்லை. இவர்கள், மின்மினி போலத்

தேர்தலின்போது தோன்றி, தோன்றி மறைவதற்குள் தங்கள் போக்கினாலேயே, கட்சித் தொண்டர்கள் கஷ்டப்பட்டு ஏற்றி வைத்த கொள்கை விளக்கைக்கூட அணையும்படிச் செய்து விடுபவர்கள்.

எனவேதான், உண்மைக்கட்சித் தொண்டாற்றுபவர்களின் தொகை அதிகரித்ததும், இத்தகையவர்களின் தேர்தல் கூத்துக்குக் கட்டியம் ஆடும் வேலை நமக்கு இருத்தலாகாது என்று சேலம் மாநாட்டிலே தீர்மானிக்கப் பட்டது. நமக்குக் "காங்கிரஸ் எதிரிகள்", "கவர்மெண்டு நண்பர்கள்" என்று மட்டுமே தங்களைக் கூறிப் பூரிக்கும் பிரமுகர்களின்" கூட்டுறவு வேண்டாம் என்று சேலம் தெரிவித்து விட்டது.

தேர்தலையும், கட்சிக்கு ஆற்றும் தொண்டுகளிலே ஒன்று, கொள்கையைப் பரப்பும் முறைகளிலே ஒன்று, கொள்கையின்படிக் காரியமாற்றும் இடத்துக்குச் செல்லும்பணி, என்ற முறையில் கருதுபவர்களின் தொகை இன்னும் வளர வேண்டும் - திடீர்க்காதலர்கள் - நெருக்கடியால் நண்பர்கள் - அவசரத்தில் அன்பர்கள் - வந்து சேர்ந்தவர்கள் - கண்டு பிடிக்கப்பட்டவர்கள் - என்ற முறையிலே, நமக்குப்பலர் இருந்தனர் - தேர்தல் வேலை இல்லை என்ற உடனே அவர்கள் இல்லை - கொள்கையில்லாக் கும்பல் இல்லை.

முன்பு நமக்கு இருந்தது போன்ற சங்கடம் இன்று காங்கிரசுக்கு வந்திருக்கிறது. அங்குதான் இப்போது, கள்ள மார்க்கட்டுக்காரர், கலெக்டர் துரைக்கு நண்பர்கள் - கதர் கட்டக் கற்றுக் கொண்டவர்கள் - சத்யாக்கிரகத்தைக் கலகம் என்றவர்கள் - ஆகிய 'ரகங்கள்' சேருகின்றன, தேர்தலுக்காக

தாராளமாகப் போகட்டும், ஆனால் அங்கே உள்ள உண்மைக்கட்சித் தொண்டர்கள், நெடுநாட்களுக்கு, இந்த 'இடந்தேடிகளை' விட்டு வைக்கமாட்டார்கள். அங்கேயும் உழைப்பவன் உரிமையை உரத்த குரல்காரன் பறித்துக் கொள்ள இடந்தரும் போக்கு நெடுநாளைக்கு இருக்க முடியாது. இங்கிருந்து அங்கு சென்றுள்ளவர்களின், கதர் சட்டை பழசாகு முன்பு, அவர்களின் காதலுக்கு முறிவு ஏற்படும் - ஏற்படத்தான் வேண்டும் - ஏனெனில் இங்கும் சரி, அங்கும் சரி, எந்தக் கட்சியிலும் சரி, குறிப்பிட்ட கொள்கைகளுக்காக வாழ்பவர்கள் உழைப்பவர்கள், கஷ்ட நஷ்டம் ஏற்பவர்கள், மதிக்கப்பட வேண்டுமே ஒழிய, மேனாமினுக்கிகளிடம், நிர்வாகக் காரியத்தைத் தரும் போக்கு இருக்கக் கூடாது.

"நேற்று, அர்ச்சகர் நமது ஜெமீன்தார் வீட்டுக்கு வந்தார் - ஜெமீன்தார் அந்த ஆள் வருவது தெரிந்து - வேண்டுமென்றே - அவன் முகம் செத்துப்போகும்படி இந்தப் பாப்பான்களை நம்பவே கூடாது என்று சொன்னார்" என்று கூறி நாம், அல்ப சந்தோஷப்பட்டதுண்டு; அந்த ஜெமீன்தார் தமிழருக்காக உயிரை விடுபவர் - பார்ப்பனீயத்தை அறவே வெறுப்பவர் - என்று நம்பி. கொஞ்ச நாளைக்கெல்லாம் தெரிந்தது அர்ச்சகரை அவர் கண்டித்தது, நமது முகத்தைத் துடைக்கவேயொழிய, உண்மையில் கோபம் கொண்டல்ல என்பது. சேலம் மாநாடு நடைபெறும் வகையில் 'பாசம்' ஊசலாடிக் கொண்டேதான் இருந்தது. வருகிற பழி வந்து சேரட்டும் என்று வாலிபர்கள் துணிந்ததால், அந்த "வாய் வீரர்கள்" விரட்டப்பட்டனர்.

"கலெக்டர் வரப்போவது தெரியும் சார்; தெரிந்து, அன்றையத் தினமாகப் பார்த்து, மோட்டாரில் புதிய கதர்க் கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டுதான், நம்ம டவுன் காங்கிரஸ் கமிட்டி பிரசிடெண்ட் போயிருந்தார் கலெக்டரைப் பார்க்க" என்று கூறி இன்று களிக்கும் காங்கிரஸ் வாலிபர்கள், கொஞ்ச நாளில், "சேலம்" அவர்கள் கட்சிக்கும் தேவை என்பதை உணரப்போகிறார்கள்.

அது சரி சார்! இப்படி அவர்களை இங்கேயும் இருக்கக் கூடாது, அங்கேயும் தங்கக்கூடாது என்று விரட்டியபடி இருந்தால் அவர்கள் போகிற இடந்தான் என்ன? என்று கேட்பீர்கள். எந்த இடம் போவதானாலும் சரியே, ஏதாவது ஒரு கொள்கையில் உண்மையான, உறுதியான சுயநலமற்ற, பற்றுகொண்டு வாழவேண்டும் அவர்கள். அப்போதுதான், பொதுவாழ்வு தூய்மையடையும், இல்லையெனில், எத்தனையோ சுறண்டல் ஸ்தாபனம்போல, பொதுவாழ்வும் கொள்கைப்பற்று கொண்டவர்களை, கொள்கைக் கடைவைத்து நடத்தும் சுயநலக்காரர்கள் சுரண்டும் முறைகொண்ட ஸ்தாபன மாகிவிடும்.

காங்கிரசின் பேரால், சட்டசபைகளிலே அங்கம் பெற்றுள்ள பல 'தொண்டர்களைப் பற்றி அங்கே உள்ள கொள்கைக் கடைக்காரர்கள் எவ்வளவு தாழ்வாக பேசுகிறார்கள், என்பதைத் தெரிந்து கொள்ள, கொஞ்ச நாளாகும். அந்த நாள், அங்கும் சேலம் நடக்கும். இது வீண்பேச்சு என்று, கருதுபவர் களுக்கு ஒரு உதாரணம் தருகிறோம். தஞ்சாவூர் ஜில்லாவில் உப்பு சத்யாக்கிரகம் நடந்தது, அப்போது, வடபாதிமங்கலம் மிராசுதாரர் தியாகராஜன் அவர்கள் எங்கே இருந்தார்? ஆகஸ்ட்

இயக்கத்தின்போது என்ன செய்து கொண்டிருந்தார்? இப்போது அவர் காங்கிரசில் சேர வருவானேன்? அவர் இல்லாததால், காங்கிரசின் கரம் வலிவு இழந்து விட்டதா? அல்லது திடீரென்று அவருக்குத் தேசபக்தி வந்துவிட்டதா! ஏன் அவர் காங்கிரசில் சேர்ந்தார்?

காங்கிரசில் உள்ள உண்மைத் தொண்டர்கள், சூட்சமத்தைத் தெரிந்து கொள்ளாமலா இருப்பார்கள்? புதிய இடம், நல்ல பலன் தருமென்று எதிர்பார்த்து வடபாதி மங்கலத்தார், தலைமை இடம் தேடப்போகும்போது ஒன்று, தொண்டர்களின் உழைப்பு சுறண்டப்பட வேண்டிவரும், அல்லது 'சேலம்' வந்தாக வேண்டும், வேறு என்ன மார்க்கம் இருக்கிறது. எனவேதான, பொதுவாழ்வு கொள்கைக்கு வேலை செய்பவர்களுக்கேயொழிய, காற்றடிக்கும் பக்கம் சாய்பவர் களுக்கு அல்ல என்பதைச் செயலளவில் காட்ட வேண்டும் என்று கூறுகிறோம்.

கொள்கையில் உறுதி இருந்தால்தானே, இடம் கிடைக்கும் பொதுவாழ்வில் என்பது, திட்டமாகத் தெரிந்து விட்டால், "இடந் தேடுபவர்கள்' ஒன்று விலகிவிடுவர் பொது வாழ்க்கையை விட்டு, அல்லது இருதயபூர்வமாக எந்தக் கொள்கை தமக்குப் பிடிக்கிறதோ அதனை வளர்க்க முற்படுவர். அப்போதுதான் பொது வாழ்வு, புனித பூமியாகும்.

கொள்கைக்காக கட்சியில் இருக்கிறார்களா ஒரு கட்சியில் இருக்கிறோம், இருப்பதற்காக அந்தக் கொள்கையைப் பேசித் தொலைப்போம் என்று இருக்கிறார்களா, என்ற விஷப்பரீட்சைத் தான் நாம் சேலத்தில் நடத்தியது.

இப்போது இருப்பவர்கள் தேர்தலை மட்டுமே கட்சி வேலை என்று கருதுபவர்கள் அல்ல - சில கொள்கைகளுக்காக உள்ளவர்கள். அவர்களால், தேர்தல் யந்திரத்தைக் கைப் பற்றவோ, பிரசார யந்திரத்தைப் பலப்படுத்தவோ, துரிதமாக முடியாது - ஆனால் அதற்காக அவர்கள் ஆயாசப்படுபவர்கள் அல்ல.

அத்தகைய நண்பர்கள், சட்டசபைக்குத்தான் வேண்டாம் என்றீர்கள் - முனிசிபல் ஜில்லாபோர்டு விஷயமாக என்ன முடிவு செய்கிறீர்கள் என்று கேட்டுள்ளனர். 'விடுதலை' அதுபற்றி தலையங்கம் எழுதியிருந்தது.

ஸ்தல ஸ்தாபனங்களாகிய ஜில்லாபோர்டு, முனிசிபாலிடி, முதலியவைகள் கட்சிப் பூசலுக்கான இடமல்ல.

குறிப்பிட்ட ஒரு சட்டத்தின் கீழ்தரப்படும் குறிப்பிட்ட சில அதிகாரங்களை நிர்வாக உத்தியோகஸ்தர்கள் நடத்திக் கொண்டு வருவதைக் கண்காணிக்கும் இடம். இங்கு கட்சிகள் போட்டியிட்டு, சம்பந்தமற்ற சச்சரவுகளுக்கு இடமாக்கிக் கொள்வது, கூடாது என்பதே நமது கொள்கை, நெடு நாட்களாகவே.

காங்கிரசிலோ, வேறு கருத்து. அவர்கள் கட்சி முறையிலேயே தேர்தலை நடத்த முற்பட்டுள்ளனர். சக்தியும் சௌகரியமும் உள்ளவர்கள் என்ற காரணத்தால் அவர்கள் டில்லி முதல் குப்பம்வரை, தங்கள் கரம் வலுக்க வேண்டும் என்று கருதுகின்றனர். ஆனால் இதன்விளைவு என்ன ஆகும்? நாம் மேலே குறிப்பிட்ட இடந்தேடிகளுக்குக் காங்கிரஸ் இறை

யாகிறது. இதன் முழுவிளைவு தெரிய நாளாகும் - ஆனால் நிச்சயமாகத் தெரியும் ஒருநாளைக்கு.

நாம் விரும்புவதும், யோசனையாகக் கூறுவதும், முதலில், இந்த இடங்களைக் கட்சிக் களமாக்குதல் கூடாது என்பதுதான். அப்படியானால் போட்டியே கூடாதா என்று கேட்கப்படலாம்; யாருக்குச் செல்வாக்கு இருக்கிறது, ஊரில் யார் 'பெரிய மனுஷர்' என்று உலவுகிறார்களோ அவர்களிடமே விட்டுவிடவேண்டுமா என்று கேட்கப் படலாம். அல்ல - நிச்சயமாக அந்த இடங்கள் கண்டவர் களிடம் விட்டுவிடக் கூடியதுமல்ல - அது ஆபத்து - ஆகாது.

வேறு முறை என்ன? என்று கேட்பர். இருக்கிறது.

இந்த இடங்களுக்கு என்று, திட்டம் - கொள்கை - ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதிலே அமர வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள். பொதுமக்களிடம் கட்சிப் பிரதாபம் - காந்தியாரின் மகிமை - ஜவஹரின் வீரம் - அருணாவின் புரட்சி ஆகியவற்றைக் கூறி, 'ஆகா வழிகள்' - அந்தர்பல்டிக்காரார் 'ஆகியோருக்குப் பிரைஸ்' விழும்படிச் செய்யும் முறையைவிட்டு விட்டு, நாங்கள் போனால் இன்னின்ன காரியம் செய்வாம் - எங்கள் நிர்வாகத்தில் இன்னின்ன புது முறை இருக்கும் என்று விளக்க வேண்டும். இப்படி இரண்டு அல்லது மூன்று தனித்தனி கட்சியினர், கூறும் திட்டத்தை மக்கள் பரிசீலனை செய்து, எந்தத் திட்டம் சரி என்று படுகிறதோ அதை ஆதரிப்பவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போதுதான், உண்மையான வேலை அங்கு

நடைபெறுமேயொழிய, வேறு முறை பயன்தராது - இதுவரைத் தந்ததுமில்லை.

"இடந்தேடிகள்" கூடாது என்பதற்காக, ஆங்காங்கு காங்கிரஸ் இளைஞர்கள் பலர், தத்தமது வட்டாரத்தில் தேர்தலுக்கு ஆள் தேர்ந்தெடுக்கும் கமிட்டியில், போரிட்டி ருக்கிறார்கள். வெற்றி கிட்டிற்றோ இல்லையோ, அதுவல்ல முக்கியம் - மனப்பான்மை மாறுகிறது என்பதே இதிலே முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

ஒரு நகரில், ஆகஸ்டு இயக்க காலத்திலே, காங்கிரசிலே தாங்கள் இருக்கப்போவதில்லை என்றும், நகரசபை விவகாரத்திலே, 'எதிர்க்கட்சியாருடன்' சேர்ந்து வேலை செய்வதாகவும், மன்னிப்பு எழுதிக் கொடுத்துவிட்டு, புதிய கூட்டுறவு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட, பலர் இன்று காங்கிரஸ் அபேட்சகர்களாக முன் வருகின்றனர். கமிட்டியில் எதிர்ப்புதான் - இருந்தால் என்ன என்கிறார்கள் இந்த இடந் தேடிகள். நாம் இத்தகைய இடந்தேடிகள், நகரசபைகளில் மட்டுமல்ல, பொது வாழ்வுத் துறையிலேயே இருக்கக் கூடாது என்று கூறுகிறோம். ஒவ்வொரு கட்சியிலும் உள்ள பொதுப்பணி நோக்குடைய தீவிர இளைஞர்களிடம் தான் 'சாவி' இருக்கிறது.

"என் வார்டு வரையிலே போட்டி போடுவதில்லை - அப்படி ஆள் நிற்க வைப்பதானாலும், ஒப்புக்கு யாரையோ ஒரு ஆளைப் பிடித்துப் போடுகிறோம் என்று காங்கிரஸ் கமிட்டித் தலைவரே என்னிடம் கூறிவிட்டார். எப்படியும் நான் ஜெயித்து விடுவேன் - பயமில்லை" என்று கூறும் பிரமுகர்கள் நமக்குத் தெரியும். அவர்களெல்லாம், ஊரிலே

திருவிழா நடக்கும்போது வைதீகர்கள், பெரியார் விஜயத்தின் போது சுயமரியாதைக்காரர்கள், காங்கிரஸ் மந்திரி வரும்போது தேசபக்தர்கள், கலெக்டர் வரும்போது ஆங்கில ஆட்சியின் நண்பர்கள், இப்படி 'தசாவதாரம்' எடுப்பர் ஒரே நோக்கத்துக்காக; அந்த நோக்கம், சுயநலம், சுயசுகம் தேடிக் கொள்வதுதான்.

முனிசிபல் நிர்வாகக் காரியத்தைக் கவனிக்கும் போதுகூட, ஆள்கிற கட்சி, எதிர்க்கட்சி என்ற முறை, கேவலம் பேரம்பேசிக் கொள்வதில் போய்முடிகிறதே தவிர, குறிப்பிட்ட கொள்கை, தெளிவான திட்டம் ஆகிய விதத்தில் இருப்பதில்லை.

"காங்கிரசாரேதான் மெஜாரடியாக இருக்கட்டுமேப்பா!! கமிஷனர் நான் சொல்கிறபடித்தான் கேட்பார்" என்று பேசும், எதிர்க்கட்சி அங்கத்தினர் இருப்பார்; அதுபோல்வே, கவுன்சிலில் மெஜாரடி வேறு கட்சியிடம் இருந்தால் "நான் மேல் இடம்போய், நம்ம மருமானுக்கு அண்ணன் சம்பந்திதானே லோகல்போர்டு ஆபீசர், அவரண்டெ ஒரு வார்த்தை நம்ம அலமுவை விட்டுச் சொல்லச் சொல்லி, இந்த ஆர்டரையே கான்சல் செய்து விடுகிறேன் பார்" என்று பேசும் காங்கிரசாரும் இருப்பார். இதற்குப் பெயர் பொதுமக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் ஆட்சியாம்! ஏன் இந்தப் போலிகள்? எதற்காக இந்த வீணாட்டம்?

கவுன்சில் கூட்டத்துக்கு முன்பே, 7-லிருந்து 9-வரை, நான் ஓட்கொடுத்து விடுகிறேன். ஆனால் பதினாலாம் அயிட்டம் இருக்கிறதே, அது நம்ம பாலகிருஷ்ண முதலியாரைப் பொறுத்தது, அவர் நம்ம நாயுடுவிடமும்

சொல்லி இருக்கிறாராம், அந்த ஒரு அயிட்டத்தை மட்டும் விட்டுவிடுங்கள்" என்று மெஜாரிடி கட்சியிடம் 'பேரம்'பேசிக் கொள்வதும் உண்டு.

மெஜாரடி கட்சி, நிர்வாக சம்பந்தமாகவோ, திட்டத்தைப் பற்றியோ, பொதுமக்களுக்கு எடுத்து விளக்குவதும் கிடையாது - நடையாக நடந்து ஓட்டு வாங்கியான பிறகு.

அதுபோலவே, "மெஜாரிடி கட்சியின் திட்டத்தாலோ, நிர்வாகத்தாலோ, இன்னின்ன கேடுகள் உள்ளன, அவைகளை நான் கவுன்சிலில் இன்னின்ன சொல்லித் தடுத்தேன், எதிர்த்தேன்" என்று பொதுமக்களிடம் விளக்கும் வேலையை, மைனாரடியாக இருக்கும் எதிர்க்கட்சிக்காரரும் செய்வதில்லை. ஏதோ ஒரு கலியாண வீட்டுக்குப் பல திறப்பட்டவர்களும் போய், வேடிக்கையாக இருந்து சாப்பிட்டுவிட்டு வருபவர்கள் போலவே, கவுன்சில் கூடத்துக்கு இருதரப்பினரும் போய் வருவார்களேயொழிய, திட்டம் இருக்கிறது அதன்படி வேலை செய்கிறார்கள்; அந்தத் திட்டத்தில் இன்னகுறை இருக்கிறது அதனை எதிர்க்கட்சியார் எடுத்துரைக்கிறார்கள் என்று மக்கள் நம்பும்படியான காரியம் நடப்பதுமில்லை; அந்தப் பொறுப் புணர்ச்சியும் பெரும்பாலானவர்களுக்கு இருப்பதில்லை.

ஓட்டு கேட்க வருகிறவரைத் திடீரெனக் கேட்டுப் பாருங்கள், "ஐயா! ரோடுகளுக்கு எவ்வளவு பணம் செலவா கிறது? ஆரம்பக்கல்விக்கு எவ்வளவு செலவிடப்படுகிறது?" என்று. பதில் கிடைக்காது. அதற்கு ஈடாக ஒரு இலேசான புன்சிரிப்பு தவழும் அபேட்சகர் முகத்தில். "என்ன நாயுடு! இதென்ன புதிசா இருக்கே உன்போக்கு. கேள்விகளெல்லாம்

பலமாக இருக்கு. என்ன கோபம்?" என்றுதான் கேட்பார். ஓட்டர், கேள்வி கேட்பதே கோபத்தின் அறிகுறி என்று அபேட்சகர் கருதுவார்.

அபேட்சகரை மட்டுமா குறை கூறுவதற்கு இருக்கிறது, ஓட்டளிக்கும் அன்பருடைய போக்கிலே குறை ஏராளம்!

அவரும் இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கமாட்டார். தோட்டக் குத்தகைத் தகறாரு - தொழுவத்திலே உள்ள மாட்டுத் தகறாரு - சம்பந்திச் சண்டை - சப்இன்ஸ்பெக்டருக்குச் சிபாரிசு - சம்பாஅரிசி கேட்டுத்தர முடியாது என்ற கதை - இவ்வளவும் நடக்கும், ஒவ்வொரு வீட்டுத் தாழ்வாரத்திலும் - அபேட்சகர் ஒருபுறம் சிறுபடையுடன், ஓட்டர் எதிர்ப்புறம் குழந்தை குட்டிச் சகிதம்.

பேசி முடிந்த பிறகு, "கடவுளுக்குப் பொதுவாக நான் உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்" என்று அபேட்சகர் முடிப்பார்; "எதற்கும் எங்க அண்ணாரை ஒருவார்த்தை கேட்டுக் கொண்டு சொல்லி விடுகிறேன்" என்று ஓட்டர் முடிப்பார்.

பல ஆயிரம் ரூபாய்களைக் கொண்டு பல ஆயிரம் மக்களின் நகர வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்காக ஏற்பட்ட காரியம். இப்படி, இடந்தேடிகளிடம் தரப்படுகிறது. முறையல்ல என்கிறோம்.

குறிப்பிட்ட சில கொள்கைகள் நிர்வாக சம்பந்தமாக இன்னின்ன வேலைகள் செய்கிறோம். என்று கூறும் அபேட்சகரும், நிற்பவர் யார், அவர் கட்சி எது என்பதை

மறந்து, அவர்காட்டும் திட்டம் எப்படிப்பட்டது என்பதைக் கூர்ந்து கவனித்து சரியா, இல்லையா என்று ஆராய்ந்து பார்த்து அதன்படி, யாருக்கு ஓட்டளிப்பது என்று தீர்ப்பு செய்யும் ஓட்டரும், ஏற்படவேண்டும். ஏற்படுவாரா! நிச்சயமாக ஏற்படுவர். எப்போது? எவ்வகையில்? பொது வாழ்வு தூய்மை யாக்கப்பட்டால். உண்மைப் பொதுப்பணியாளர்கள், தங்கள் உணர்ச்சியும் உழைப்பும், கட்சிகளின் பெயர்கூறிக் கொண்டு இடந்தேடும் இயல்பினரால் சூறையாடப்படாமல் பாதுகாத்துக் கொண்டால்.

எனவேதான், நாம், கட்சிநோக்குடன் அல்ல, நகர நிர்வாகம் சரியான முறையில் இருக்க வேண்டும் என்ற நோக்குடன் கூறுகிறோம், இடந்தேடிகளை ஆதரிக்காதீர்கள் - அவர்களுக்காகக் கட்சிகளை - கொள்கைகளைப் பலியிடாதீர்கள் - பொது வாழ்வைப் புதியதோர் சுரண்டல் ஸ்தாபனமாக்கதீர்கள் என்று உறுதி கூறுகிறோம்.

*(திராவிட நாடு - 3-11-46)*

# 36. இயற்கை ஓர் அழகிய விதவை

இயற்கை எழில் மிகுந்த இடம், நமது நாடு. ஆனால், நம் மக்களுக்கு, அந்த அருமையைக் காண நேரமும் கிடையாது, நினைப்பும் அப்பக்கம் செல்லாது. இடிபட்டுக் கொண்டு, இம்சைக்கு ஆளாகி, எங்காவது ஒரு திரு விழாவுக்குப் போகிறார்களேயொழிய, அழகிய இயற்கைக்

காட்சிகளைக் காணச் செல்லமாட்டார்கள். அர்த்தமற்றதாகவே இருக்கும் அவர்கட்கு அக்காட்சிகள். அவைகளைக் காண்பது, வீண்வேலை என்றே எண்ணுவர்.

நாள் முழுதும் பாடுபட்டுப் பிழைக்க வேண்டிய, ஓயாத உழைப்புள்ள, படிப்பறியாதாரை மட்டுமல்ல நான் குறிப்பிடுவது.

கடியாரத்தைப் பார்த்து வேலை செய்துவிட்டு, காலண்டரைப் பார்த்துச் சம்பளம் வாங்கும், படித்தவர்களையுந் தான் குறிப்பிடுகிறேன். அவர்களுக்குந்தான் இயற்கைக் காட்சி களைக் கண்டுகளிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவ தில்லை. மிகக்கஷ்டப்பட்டு "நாலுநாள் லீவு" பெற்றாலும், குழந்தைக்கு 'மொட்டை' அடிக்கத் திருப்பதிக்கோ, அம்மா "சிரார்த்தத்துக்கு" காவிரிக்கோ போய்வருவார்களேயொழிய, களிப்புக்காக, இயற்கை தீட்டிக் காட்டும் இனிய ஓவியங்களைக் காணச் செல்பவர் இரார். இயற்கை, தன் அழகை வாரி வீசுகிறது - கவனிப்பாரற்றுக் கிடக்கிறது - எழில்மிக்க இளம் விதவைபோல!

நூற்களைப் புரட்டினாலோ, இயற்கையின் விளக்க ஓவியங்கள் ஏராளம்! அதையும் படிக்க நேரம் கிடைக்காது. அவற்றில் பல, படித்தாலும் புரியாது.

இந்நிலையில், இயற்கை எழில் பயன்படுத்துவார் அற்று கிடக்கிறது. படம் பிடிக்கும் தொழில் நடத்தி மலைமலையாய் இலாபம் குவிக்கும் சினிமாக்காரர்களும் இதனைப் பயன் படுத்துவதில்லை. அவர்களின் காடும் நாடும், மேடும் பள்ளமும்,

எல்லாம், "எட்டடிக்குச்சுக்குள்ளே" முடிந்து விடுகிறது. அவர்கள் இவைகளை நம்பியா படம் எடுக்கிறார்கள்? மேயும் கண்-சாயும் இடை - இத்யாதிகளையும் - தோடி மோடி ஆகியவை களையும் நம்பும் அளவுக்கு, மலைச்சரிவு, மடு, பாய்ந்தோடும் ஆறு, பச்சை மலை இவைகளை நம்புவதில்லை.

கண்ணுக்கும் கருத்துக்கும் களிப்பூட்டும் இக்காட்சி களைக் காண மக்களுக்கு நேரம் இல்லாமற் போவதன் காரணம், மற்ற நாட்டவரைவிட இங்குள்ள மக்களுக்கு வேலை அதிகம் - அலுப்பு அதிகம் என்பர். உண்மைதான், ஆனால் முழு உண்மை அல்ல. நேரமே இல்லை என்றால் வேலை மிகுதியாலும் கடினத்தாலும் ஆர்வமும் இல்லை என்றால், நமது நாட்டிலே, ஒவ்வோர் நாளும் ஒவ்வோர் திருவிழா நடைபெற முடியுமா, அவைகளில் பெருந்திரளான மக்கள் கலந்து கொள்ள முடியுமா! திருவிழாக்களுக்கு வரமுடி கிறது - கடமை என்று கருதுவதால் - கஷ்டம் பல என்றாலும் - போய்த்தான் வரவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது - ஏன்? மதக்காரியம் - மகேசனின் அன்பைப் பெறும் காரியம் - பாபத்தைத் தொலைக்கும் வழி - புண்யம் தேடும் மார்க்கம்! இதை அறிந்துதான், ரயில்வே கம்பெனியார் கூட, "யாத்திரா மார்க்கம்" என்று விளம்பரம் செய்கிறார்கள்.

எனவே, மக்களுக்கு நேரம் கிடைக்கிறது, எவ்வளவு தொலைவானாலும் போக மனம் இருக்கிறது - அங்கே போய்வர, எப்படியோ கடன்பட்டேனும் போகிறார்கள் - போய் வருவதிலே எவ்வளவு இடைஞ்சல் இருப்பினும் பொறுத்துக் கொள்ளவும் மனம் இடந்தருகிறது - ஆனால்

ஒருதடவையேனும், ஓய்வுகாலத்தை இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசிக்கப் பயன்படுத்துகின்றனரா? இல்லை!

''பாழாப்போன மழை கொட்டு கொட்டுன்னு கொட்டியபடி இருந்தது. ஒரே சேறு - சோறு உண்டா? தண்ணி உண்டா? - படுக்க இடமாவது உண்டா? - சனியன்! பெரிய இழவாப் போச்சு - சொல்லி முடியாது கஷ்டம். ரயிலிலே சண்டை - சத்திரத்திலே சண்டை - கோயிலிலே ஒரே கும்பல் - குழந்தையின் காப்பை எவனோ கழட்டிக்கிட்டான், நம்ம சம்சாரத்தின் காலை எவனோ மடப்பய போட்டு நசுக்கி விட்டுட்டான் - இவ்வளவு கஷ்டப்பட்டுக்கிட்டே போனோம். ரிஷப வாகன உற்சவம் பார்க்க - அன்னிக்கி பாரு, பெரு மழையானதாலே தங்க ரிஷபம் ரொம்ப பெரிது, அதை தூக்கிக்கிட்டு வரமுடியாதுன்னு, சின்னது வெள்ளி ரிஷபம், அதிலேதான் சாமி வந்தாரு - ஆக இவ்வளவு செலவு செய்து சிரமப்பட்டுப் போயி, கடைசியிலே தங்க ரிஷப வாகனத்தையும் பார்க்க முடியாமே போச்சி - நாம்ம கொடுத்து வைக்கலே - என்னமோ பிழைச்சி இருந்தா அடுத்த வருஷமாவது போய் சேவிக்கோணும்''

இதுதான், திருவிழா போய்த் திரும்பியவரின் பேச்சு! இதுதான், சாதாரணமாக நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்குள்ள மனப்பான்மை!

புண்யம் தேட ஸ்தல யாத்திரை போவதிலேயே நாட்டம் கொண்டவர்களாக மக்கள் இருப்பதாலேதான், இயற்கைக் காட்சிகளைக் காண, எங்கும் போக விரும்புவ தில்லை - அவசியமற்ற வேலை என்றாகிவிட்டது.

இதனால் மக்களுக்கு இயற்கை தரக்கூடிய இன்னமுது கிடைக்காமல் போவதுடன், அதனைப் பெற்றால், பெறக்கூடிய கலை உணர்வும், அந்த உணவை உள்ளடக்கிய கவிதைச் சுவையும், அவர்களுக்குப் பயன்படாமற் போகின்றன.

புண்ய ஸ்தலங்களையே 'அமோகமாக, நம் நாட்டிலே நிர்மாணித்து விட்டதால் ஓய்விடங்கள், இயற்கை அழகுள்ள இடங்கள், குன்று, செய்குன்று, ஆறு, கானாறு, மலை, சரிவு, காடு, மேடு ஆகியவற்றைக் காணக்கூடிய சந்தர்ப்பம் இல்லாமலே போய்விடுகிறது.

சிறுகுன்று! அதன்மீது அமர்ந்திருந்தேன்! மாலை நேரம்! கதிரவனின் ஒளி அடங்கும் நேரம்! ஒரு சத்தம் கேட்டது. என்னவென்று குன்றின்கீழே சற்றுத் தொலைவிலே இருந்த காட்டுப்பாதையின் பக்கம் பார்த்தேன்! என்ன அருமையான காட்சி தெரியுமா? ஒருதாய் யானை, அதன் குட்டிகள் இரண்டு பின்தொடர ஓடக்கண்டேன். அந்த யானை சென்ற பிறகு, அங்கு புதரில் அதுவரை பதுங்கி இருந்த நரி பாய்ந்தோடிச் சென்றது.

மயில் ஆடக்கண்டேன்! மாடப்புறாவை மரக்கிளையில் கண்டேன்! கீரி பாம்பைத் துரத்தக் கண்டேன்! மலைப்பாம்பு புரளக் கண்டேன். காட்டெருமை கதறக் கேட்டேன். உறுமல் கேட்டது; புலி என்றனர்.

வானவில்லைக் கண்டேன்! வளைந்தோடும் சிற்றாற்றங்கரையோரத்தில் நீளமூக்குக் கொக்கு இருக்கக் கண்டேன். மலைச்சாரலில் ஆட்டுமந்தை மேய்த்திடும் சிறுவன்

குழல் ஊதக்கேட்டேன். இனிய இசையை உண்டேன்9 இருபுறமும் சோலை, இடையே ஓர் ஆறு, மேலே நீல நிறவானம், அதிலே மின்னின பொறிக்ள், மீன்கள் துள்ளின நீரில்.

இப்படிப்பட்ட பேச்சு, நாம் கேட்க முடியுமா, நமது மக்களிடம், சிறு கதைகளிலே (எழுதுவர் சங்க இலக்கியங் களிலே) இருந்து படிப்பர் - அவ்வளவே தவிர, மக்கள் பேசிக் கேட்க முடியாது. ஏனெனில் இக்காட்சிகளை அவர்கள் கண்டதுமில்லை - காணவேண்டும் என்று எண்ணுவதுமில்லை - கண்டவர் கூறிடின் அவை அருமை எனக் கொள்வது மில்லை. இலேசான ஓர் கேலிச் சிரிப்புடன், இப்படி வீண் வேலை செய்பவனுமிருக்கிறானே என்று கூறுவர்.

இலக்கியம் எப்படி வளரும்? கலைமணம் எங்கிருந்து கமழும்? ஓவியக்கலை எவ்வண்ணம் ஓங்க முடியும்? நல்லிசை எங்கிருந்து பிறக்கும்? மனதுக்கு இயற்கை ஊட்டும் களிப்பு கிடைக்கவில்லையே, பெரும்பான்மையோருக்கு!

அன்னவாகன சேவை, ஆண்டிக்கோலத்தில் அப்பன், கண்ட உடன் உடல் சிலிர்க்க வைக்கும் தேவி, காவி உடையுடன் காட்சி தரும் யோகி, இப்படிப்பட்டவைகள்பற்றிப் பேசுவரேயன்றி, இயற்கையைப்பற்றிப் பேச எங்ஙனம் முடியும் அவர்களால்!

முடியாதது மட்டுமா! முடியாதுபோன காரணத்தால், இயற்கை எழில் விளங்கும் காட்சிகள் அவ்வளவும், கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

எங்கோ ஓர் குக்கிராமத்திலே 'குறி' கூறுவான் ஒரு தந்திரக்காரன், அங்கே கும்பல் கூடும். அதற்கு அருகே அரியதோர் இயற்கைக் காட்சி இருக்கும், கண்டோர் மனதைக் களிப்புறச் செய்யக்கூடிய விதமாக! - காண யாரும் வாரார்!

இயற்கை எழில் நிரம்பிய இடங்கள் எவ்வளவோ இப்படி உள்ளன, கவனிப்பாரற்று. மேனாட்டவர் கண்டால், இங்கு எவ்வளவோ, "ஓய்விடங்களை" உண்டாக்கி, பொழுது போக்குக்கும், உல்லாசத்துக்கும், இயற்கை அழகைப் பருகு வதற்கும், பயன்படுத்திக் கொள்வர். இங்கோ அவை அவ்வளவும் அழகு இருந்தும், ஆர்வம் தரும் சக்தி இருந்தும், கலை உள்ளத்தைத் தரும் திறம் இருந்தும், கவனிப்பாரற்று, பருவமும் அழகும் இருந்தும், மணாளன் இல்லாத காரணத்தால் மங்கிய நிலவென உள்ள நம் நாட்டு, விதவைகள் போலவே - உள்ளன. மறுமணம் செய்து கொள்ளவும் அவர்கள் தயார்! - நீங்கள்? நேரமில்லையே!

சித்திரையில், வைகாசியில் காஞ்சிபோக வேண்டும் கருட சேவை காண, ஆனியில் திருமஞ்சன சேவை, ஆடியில், ஆடிப்பூர உற்சவம், ஆவணிக்கு அவிட்டம், புரட்டாசிக்குத் திருப்பதி, ஐப்பசிக்கு கார்த்திகைக்குத் திருவண்ணாமலை, மார்கழிக்கு (திருவாதிரை) சிதம்பரம், தை மாதம்.....?

இப்படி ஒவ்வோர் மாதத்திற்கும் ஒவ்வோர் ஊரின் திருவிழா, புண்யம் தேடும் காரியம் வந்து விடுகிறதே! மலை மீதேற, படகில் செல்ல, காட்டுப்பாதையில் நடக்க, கானாற்றங் கரையிலே உலவ, நேரம் ஏது!

இயற்கை, பேசாது! சிற்சில சமயத்திலே அடிக்கிறதே கடுங்காற்று, அது, தன்னை அலட்சியப்படுத்திவிட்டு, வேறு அலுவலைக் கவனிக்கும் நம்மீது கொண்ட கோபத்தின் குறிதான் போலும்!!

கடலோரம் - கவி அங்கு நின்று காண்கிறார் கதிரவன் கிளம்பும் காட்சியை - தெரிவது கதிரவனா? இல்லை! தங்கத் தூறல்! கண்ட கவி, "புதுக்காட்சி பருகு தம்பி!" என்று கூவி அழைக்கிறார்.

தம்பி கண்டானா அந்தத் தகத்தகாயத்தை! தம்பியைக் காண விடுவார்களா, அந்தக் காட்சியை. சே! அவனைத்தான் 'பால பருவ' முதல், தங்க மயில் வாகன சேவைக்கும் வெள்ளி பெருச்சாளியில் விநாயகர் வருகிற உற்சவத்துக்கும் அழைத்துச் சென்று பழக்கப்படுத்தி இருக்கிறார்களே! அவன் தானே, இப்போது 'தம்பி'யாகி இருக்கிறான், தமிழ் தரும் கவிவாணருக்கு. தங்கத் தூறல் காண வாடா தம்பி! என்று அழைத்தால், அவன் எப்படி வருவான்? அவனுக்கு அப்படி யொரு காட்சி உண்டு, அதைக் கண்டதும் களிப்பு பொங்கும் என்பது என்ன தெரியும்? தாயின் இடுப்பிலிருந்தபடி கண்ட தங்க மயில் வாகனச் சேவையைத்தான், அவன் சேயைத் தரப்போகும் தன் சேல்விழி மனையாளுடன், இப்போது கண்டுகொண்டிருக்கிறான். எனவே, அவன் காணவாரான் கடலில் தங்கத்தைத் தெளித்திடும் கதிரவனை.

கவியின் கண்கள் மட்டுமல்ல - செவியும் இன்பத்தைப் பெற்றது. கடல்நீர் - நீலவான் - இரண்டும் கைகோர்க்கும் - இடையே வெள்ளம் இருக்கிறதே, அதுதான் வீணை - காற்று

வீசுகிறதே, அது என்ன? வீணை நரம்பின் அசைவு! விளைவு என்ன? இன்னிசை! யாருக்குக் கேட்கும்? தம்பிக்கா? தம்பிக்கு எப்படிக் கேட்கும்? தம்பியின் செவியில்தான், கோயில் உற்சவ வேட்டு விழுந்து விழுந்து, இசை அறிநுட்பமும் கெட்டுவிட்டதே! கவிஞரின் செவியில் வீழ்கிறது அந்த இசை. தம்பி! வண்கடல் பண்பாடல் கேள்! என்று கூறுகிறார்.

இசை கேட்ட இடத்துக்கு, தங்கத் தூற்றலைக் கண்ட இடத்துக்கு, கவி மாலையும் போகிறார் - மதியும் வந்த வேளை.

கடலழகி காலையிலே பொன்னிறச் சேலையல்லவா அணிந்திருந்தாள் - இதோ மாலை - நிலவு மேலே - கடலழகி புதிய முத்துச் சேலை அணிந்து கொண்டாள், பார்! என்கிறார் கவி. இன்பம் தந்த அந்தக் காட்சியிலே மனதைப் பறி கொடுத்தவர், தாம் வாழ்த்தியதோடு இல்லை, கடலினை வாழ்த்தாய் தம்பி! என்று கொஞ்சுமொழியிலே கூறுகிறார். தம்பிக்கு முடியுமா? தம்பிதான் அதோ போகிறானே, இஷ்ட சித்தி விநாயகர் கோயிற்கு. அங்கு பொருள் தெரிகிறதோ இல்லையோ, தம்பி வாழ்த்தத்தான் போகிறான்!

மூஷிக வாகன
மோஹன அஸ்த
என்றெல்லாம்.

"அழகின் சிரிப்பு" என்ற அரிய நூலிலே அன்பர் பாரதிதாசன், இயற்கையின் எழிலைத் தீட்டிக் காட்டுகிறார். அந்த இனிமையை முழுதும் உணரவேண்டுமானால்,

"தம்பி"க்கு, இயற்கைக் காட்சிகளைக் காண, நேரமும், நினைப்பும், வசதியும் ஏற்படவேண்டும். அப்போதுதான், கவிதை, எதுகை மோனையின் தயவால் அல்ல, சொல்லை ஒன்றோடொன்று பின்னியதால் அல்ல, இயற்கை ஊட்டிய இன்பத்தின் விளைவாக வெளிப்போந்தது என்பதை உணர முடியும் - கவிதையின் உயர்வுமட்டுமல்ல - உயிர் - புரியும். இன்று, இதுபோல் எண்ணற்ற கவிஞர்களின் இயற்கைக் காட்சியின் சித்தரிப்பு, முழுப் பயனைத் தரமுடியாத நிலைமையே இருக்கிறது.

அழகிய இளம் விதவை என்றேன் இயற்கை அழகினை. அந்த விதவையின் தோழியர் - செவிலித்தாயர் - நமது கவிஞர்கள். அவளுடைய அழகினை, அருமையினைக் கூறுகின்றனர்; கூறிக்கொண்டேதான் இருக்கிறார்கள். ஆனால் இன்னமும் நாட்டு மக்களின் நோக்கம், இத்தகைய இயற்கை எழிலைக்காணச் செல்லவேண்டும் என்ற முறைக்கு மாறவில்லை. என்று மாறுமோ!

நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் காணவில்லை அந்தக் கவர்ச்சிகர இயற்கைப் பெண்ணை. கவிஞர் கண்டார். எங்கெங்கு? எங்கும்! இதோ நமது கவிஞர் கூறுகிறார் கேளுங்கள்.

"காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற

மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்! ஆலஞ்
சாலையிலே, கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில்அந்த "அழகெ"ன்பாள் கவிதை தந்தாள்!"

காலைப்பரிதி, கடற்பரப்பு, சோலை, மலர், தளிர், மதி, ஆலஞ்சாலை, அழகுக்கிளி, இவைகளை எல்லாம் கண்டார் - இங்கெல்லாம் அவளைக் கண்டார். அவள், கவிதைதந்தாள்! அவர் பெற்றார், இன்புற்றார்! தெரிவிக்கிறார்!! நாம்? இனியேனும் காணமுயற்சிப்போமா? அல்லது இன்னும் சில "ஸ்தலயாத்திரை" பாக்கி இருக்கிறதோ?

*(திராவிட நாடு – 12-1-47)*

# 37. கம்பர் "விழா"!

"ஏ.....என்....னா...டா.... அது... டேய்.... யாருகிட்டேடா... ஒங்க அப்பண்டா நானு.... டேய்!"

*

ரொம்ப மட்டரகம்! வலிச்சண்டைக்கு இழுக்கிறான் வெறியன். வாய்க்கு வந்தபடி ஏசுகிறான். பேச்சிலே உள்ள வளைவுகளை, உடல்வளைவு மிஞ்சுகிறது. வீரதீரமான போருக்குத் தயார் என்று கூவுகிறான், விழுந்தால் எழுந்திருக்க முடியாத நிலையில் உள்ள அவன். இத்தனைக்கும், இவனை அறைகூவி அழைப்பதாக இவனாக எண்ணிக் கொண்டிருக் கிறானே, ஓர் உருவம் கண்டு, அது, விளக்குக் கம்பந்தான்!

விழியும் மொழியும் பிழைபடவேலை செய்கிறது!! ஏன்? கொண்டாட்டம்! விழா!

❋

இது விழாவா? குடித்துவிட்டு ஆடுகிறான் எவனோ ஓர் குணங்கெட்டபயல் என்று கூறுவதைவிட்டு, கொண்டாட்டமாம், விழாவாம்! என்னய்யா, வேடிக்கையாக இருக்கிறது. விழா, எனினும் அகமும் முகமும் மலர, அன்பு மொழியினை அள்ளிவீசி, இன்பமாகக் குடும்பத்தினர், உற்றார் உறவினர், நண்பருடன் அளவளாவுவதன்றோ முறை. எவனோ ஓர் குடியன், தென்னையையோ பனையையோ, தனக்குற்ற தோழனாகக் கொண்டு, தெருவை அளந்து கிடக்கிறான், அவன் விழாக் கொண்டாடுகிறான் என்று கூறுகிறீரே, எங்ஙனம் பொருந்தும் இது. இஃதோ பண்புடையோர் செயல்! நாட்டின் சீரழிவு நம் எதிரே ஆட்டமாடிக் காட்டப்படுகிறது.

❋

குடித்தாடும் கோலத்தை விழாவின் விளைவு என்று கூறிடின், இதுபோலத்தான் நற்குணம் நாடும் எவரும், நகைத்துக் கூறுவர். ஆனால் விழா, எனில் வெறியாட்டமாகவே, அவை மாற்றப்பட்டுவிடுவதையே காண்கிறோம். எந்தப் பெயர் கூறி விழா நடத்திடினும், அதிலே இத்தகுகூத்து நடைபெறக் காண்கிறோம்; கண்டு கவலையற்றோர் சிரிக்கிறோம், நாட்டு நிலையைக் காட்டும் கண்ணாடியாக இதுஉளதே என்றெண்ணிக் கவலை கொள்வோர்,

வெட்கமுமடைகிறோம், துக்கப் படுகிறோம் குடியின் கோலாகலத்தைக் காணீர்! கள்உண்டோன், மனிதத் தனத்தை இழந்து அலைவதைப் பாரீர்! மது, மதியை மாய்க்கிறது, அறிவீர்! என்று அறிவுரை கூறுகிறோம். பெருமூச்செறிகிறோம், நாடு இந்நிலைக்கு வந்துவிட்டதே என்றெண்ணி.

*

விழா, எனில் மகிழ்ச்சி மலரும் ஓர் நாள். வாழ்வே விழா, சிலருக்கு. விழாவெல்லாம், வெறியாட்டம், சிலபலருக்கு. இருளைக்கீறிக் கிளம்பிப் பின்னர் மறையும் மின்னல்போன்றது விழா, பெரும்பாலோருக்கு காலமெல்லாம் கஷ்டமனுபவிக் கிறோம், இன்று ஓர்நாள், கஷ்டமனைத்தும் துடைக்கப்பட்டு, அல்ல - மறக்கப்பட்டு மகிழ்ந்திருப்போம், நாளை இருக்கவே இருக்கிறது நமது பரம்பரைச் சொத்தான துயரம், இன்று ஓர்நாள், திருநாளாகக் கொள்வோம். உள்ளதில் நல்லதை உடுப்போம். கிடைத்ததைச் சீர்செய்து உண்போம்! நடந்ததைக் கூட மறந்து நட்புரிமை கொண்டு மகிழ்வோம். நாமும் இன்புற்று, அனைவரும் அஃதே போலிருக்க வேண்டுவோம் என்று மக்கள் எண்ணிடும் நேரம், தீராத் தொல்லைக்கு விடுமுறைநாள், விழா! ஓயாத அலைச்சல் கொண்ட மனதுக்கு ஒருநாள் விடுமுறை! விழா, வேதனை நிரம்பிய வாழ்வினருக்கு, இஃதே போலத்தான் இருக்க முடியும். இத்தகைய நிலையிலே, நிலைகெட்ட மாந்தர் சிலர், விழாவிலே, வெறியீட்டுபவைகளைப் பருகிவிட்டு, வீணாட்டம் ஆடிடக் காண்போருக்கு மனவாட்டமாகத்தானே இருக்கும்! ஏனோ

நாடு இவ்வளவு தாழ்ந்தது? எம் முன்னோர் இங்ஙனமோ இருந்தனர், என்றெண்ணி ஏக்கமடைதலும் இயற்கை.

*

பண்டைத் தமிழரின் பண்பாடுகளைக் கம்பன் தீட்டிய இராமாயணத்திலே காணலாம் என்று, கலைவாணர்கள் கூறக் கேட்கிறோம் - சற்று உரத்தகுரலிலே கூடக் கூறுவர் இதனை. கவிகள் தமது ஏடுகளில், இருந்தவையையோ, இருக்கவேண்டு மென அவர்கள் எண்ணுவதையோ தீட்டுவர். இருப்பதைக் கண்டு இது போலுளது, இஃது நல்லதன்று இவ்விதமன்றோ இருக்க வேண்டுமென்று எடுத்தெழுதுவர். அங்ஙனம் எழுதப் படும் ஏடுகள் மூலம், நாடு உய்யும் நற்கருத்துக்களை மக்கள் உணரவழி ஏற்படும் என்றே, அத்தகைய ஏடுகளைப் பொன்னேடுகள் என்று புகழ்ந்துரைக்கின்றனர். விழா, எங்ஙனம் இருக்கவேண்டும், என்று யாரைக் கேட்டாலும், வீதியிலே உருளும் வீணன் செயல்மூலம் காட்டிய வெறியாக இருத்தலாகாது என்றே கூறுவர். கம்பர் கருத்து என்ன? விழா, எங்ஙனம் இருக்கவேண்டுமென்று விழைகிறார்? இதனைக் காண்பதே இக்கட்டுரையின் கருத்து.

*

கம்பர், எழுதினது காகுத்தனைப்பற்றியப்பா, நீ குறிப்பிடும், விழாவினைப்பற்றிய விளக்கஉரையொன்றும் அவர் தீட்டவில்லை என்று கலாரசிகர்கள் கூறுவர். அறிவேன். ஆயினும், அவருடைய "புண்ணிய நூலிலே" அரசர்க்கரசர் களின் அன்றாட வாழ்க்கைபற்றிய குறிப்புகள் உள்ளன,

அதர்மம் தர்மம் ஆகியவற்றினுக்கிடையே மூண்ட போர்க் குறிப்புப் புத்தகம் மட்டுமல்லவே அது. மக்களின் வாழ்க்கை - மக்கள் மட்டுமா? மந்தியின் ஆட்டம் முதற்கொண்டு, மயிலின் நடனம் வரையிலே, அவர் படம் பிடித்திருக்கிறா ரல்லவா! ஆகவே அந்த ஏட்டிலே, விழா நேரத்திலே என்ன நடந்ததாக எழுதினார் என்பதும் இருந்தே தீருமல்லவா? நடந்ததையாவது பொறித்திருப்பார், அல்லது இங்ஙனம் இருந்திருப்பின் நல்லது என்று அவர் நினைத்ததையாவது தீட்டிக் காட்டுவார். இருவகையிலே எதுகிடைப்பினும் சரியேயன்றோ.

❋

விழா எனின், முன்னமே கூறினது போல, மகிழ்ச்சிக் குரியநாள், இம்மகிழ்ச்சியிலே, மணவினைபோல, மகிழ்ச்சி தரும் நாள்வேறில்லை, அதிலேயும், மணநாளான்றாவது மனதுக்குப் பாரமாகத் தோன்றும் பலவேலைவரும், மண நாளுக்கு முன்பு, மணவினை நடைபெறும் என்று உறுதியான வேளை, மணவினைக்காக ஏற்பாடுகள் செய்யும் வேளை, இவற்றின் போது இன்பம் ஊற்றெடுக்கும், மற்றவற்றினுக்கு மேலாக மணவினையைக் காணச்செல்லும்போது, களிப்பு மிகும். விழா மனப்போக்குக் கொள்வர் மக்கள். இன்றும் காணலாம், மணவினை காணச் செல்ல, வீட்டார், பெட்டி பேழைகளை எடுத்துவைப்பதும், ஆடை அணிகளை ஒழுங்கு பட அணிவதும், அண்ணனை அழைப்பதும், தம்பியைத் தேடுவதும், மல்லிகைச் செண்டினை மனைவிக்கு அளிப்பதும், மகனை மார்புடன் அணைப்பதும், சிரிப்பதும் சிங்காரித்துக்

கொள்வதும், சில்லறையை வீசுவதும் நோட்டுகளை மடிப்பது மாக மனைகளிலே, இருப்பதை. இவ்விதம் கிளம்பும் ஓர் குடும்பம், என்னென்ன வகையான மகிழ்ச்சி கொள்ளும்?

✻

“குடித்துவிட்டு வந்து அந்தப்பயல் குப்பியை கை பிடித்திழுத்து, குளறிக் குளறி எதையோ பாடினான் சார்!”

“எங்கே?”

“விழுப்புரம் ஜங்ஷனிலே! வண்டி மாற வேண்டி இருந்தது. அதற்குள், பயல், கடைக்குப் போனான், போட்டுக் கொண்டு வந்துவிட்டான்!”

“அட, போக்கிரிபயலே!”

‘‘என்னடா இது, ஒரு கலியாண வீட்டுக்குப் போகிறோமே, போகிற வழியிலே இப்படிக் குடித்துவிட்டு ஆடினால், என்ன எண்ணுவார்கள் என்று கொஞ்சமும் யோசிக்காமல், இப்படிச் செய்தான்”

“அப்படியா செய்தான்? ஏன், அவன் அண்ணனைக் கூப்பிட்டுச் சொல்வதுதானே?”

‘‘சரிதான், அந்தக்கூத்துத் தெரியாதா? அவன், அகிலாண்டத்தை இழுத்துக் கொண்டு, கடைவீதிக்குப்போய் விட்டான்.”

“அவனும் அப்படியா?”

"ஒவ்வொன்றும் சொல்லப்போனால், வயிற்றெரிச்சலாகும். ஏன் இதுகளோடு போனோம் என்றாகிவிட்டது"

❋

இப்படிச் சில உரையாடலைக் கேட்கிறோமல்லவா! இதுவே அறிவுடையோருக்கு அருவருப்பளிக்கக் கூடியது. இதுமட்டுமன்றி, ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் குடித்தார்கள், கும்மாளமடித்தார்கள், காமக்கூத்தாடினார்கள், நிலைதவறி ஏதேதோ செய்தனர் என்று விஷயம், இருந்தால் எவ்வளவு வெறுப்பும் கோபமும் வரும், பண்பு தேடுவோருக்கு? ஆமாம், கோபம் வரும், இதெல்லாம் கீழ் மக்கள் செயல் என்று கண்டிப்போம். சரி! இதோ, கம்பர் அழைக்கிறார், ஒரு மணவினைகாண; கொஞ்சம் சென்று பார்ப்போம், வாருங்கள்.

❋

மணவினை என்றால், சாமான்யமானது அல்ல, வில்லை ஒடித்த இராமன், முல்லையை ஒத்த பல்லழகி சீதையைக் கடிமணம் செய்து கொள்வது. மிதிலைச் செல்விக்கும் கோசலைச் செல்வனுக்கும் திருமணம். இத்தகைய ராஜகுடும்பக் கல்யாணமய்யா, சாதாரண குடும்பத்திலே அல்ல. மேலும், அதற்காகப் புறப்படும் கூட்டம், ராஜாதிராஜன் தசரதனும் அவனுடைய பரிவாராதிகளும், சிற்றரசர்கள், சேல்விழிமாதர், இசைவாணர், ஆடலழகிகள், பொற்கொடிகள், பூங்கொடிகள், இன்னும் பலப்பல "ரகங்கள்" இப்படிப்பட்ட கூட்டத்திலே கம்பர் நுழைகிறார் - ஆங்குள்ள காட்சிகளைக் காட்டுகிறார்

நமக்கெல்லாம். காண்போம் சில காட்சிகளை! மகிழ்ச்சிப் பெருக்கூட்டும் விழா எங்ஙனம் இருந்தது என்பது, கம்பன் கைக்காமிரா மூலம் தெரியக் காண்போம். சிறந்த காமிராமேன், அல்லவா, அவர்! குளோசப் காட்சிகளைக் காட்டுவதிலே குவலயத்தில் அவருக்கு இணை கிடையாது. ஆனால், காட்டும் குளோசப் குலுங்கும் மாம்பழமா? ஆ! அதுதான் இல்லை! அதைப் போன்றுள்ள வேறு பொருள்!! கொஞ்சம் காட்சிகளைக் காண்போம், உலகம் உய்ய "ஸ்ரீமன் நாராயணன் இராமனாக அவதாரம் செய்து, மகாலட்சுமியின் அவதாரமாகிய சீதையைக் கடிமணம் புரிந்து கொள்ளப்போகும் கண் கொள்ளாக் காட்சியைக் காண்பதற்காக, தசரதச் சக்ரவர்த்தி, அயோத்தி வாழ் மக்களில், அரசதயவு பெற்றவர்களின் கூட்டம் புடைசூழக்கிளம்பிச் செல்லும், அந்தவிழாவிலே, கம்ப இராமாயணம், பாலகாண்டம்9 அதிலே, இப்போது, உண்டாட்டுப் படலத்துள் நுழைவோம்.

❋

உண்டாட்டுப்படலம்! பெயரேஜோர்!! உண்டு, ஆடுதல்!! எதை உண்டால் ஆடுவர்? யார் உண்டு ஆடுவர்?

❋

இராமனுக்கு மிதுலையிலே திருமணம் என்று ஜனகச்சக்ரவர்த்தியார் அனுப்பிய ஓலையைக் கண்டு உளமகிழ்ந்த தசரதர், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற முறையிலே, ஊராருக்கு அந்த உவகைதரும் செய்தியைக் கூறிவிட்டு, நால்வகைச் சேனைகளும் புடைசூழக்கிளம்பினர்

மிதுலையை நோக்கி. நால்வகைச் சேனைகள்மட்டும் அழைத்துச் சென்றாரா? இல்லை! அங்ஙனம் செல்லவிடுவாரா, கம்பர்! நகைமுகச் சேனையும் கிளம்புகிறது கூட. ஆடவர் கூட்டம் போகும்போது ஆரணங்குகளை, அயோத்தியிலே ஏங்கவிடுவரா, அகப்பொருளை அள்ளிக்குடிக்கும் கம்பர்! அவர்களும் வருகிறார்கள். புறப்படுவது, எழுச்சிபடலம். அதிலிருந்து துவங்கி, வரைக்காட்சிப் படலம், பூக்கொய் படலம், புனல்விளையாட்டுப் படலம், என்று தீட்டி, மாலையிலே, மலர்ச் சோலையிலே, வாவியிலே, ஆண்களையும் பெண்களையும் ஆடவிட்டுக் கண்டு அகமகிழ்ந்து, (ரசிகர்களையும்) அகமகிழச் செய்து) உண்டாட்டுப் படலத்துக்கு வருகிறார், அதாவது கள் உண்டு அவர்கள் கூத்தாடிய கதையைக் கூறுகிறார், புண்ணிய ஏடு எழுதப் போந்த புலவர் ஏறு.

❋

"சார்! அவர் எப்போதாவது இலேசாகக் கொஞ்சம் போடுவார். 'ஒசத்தி'ச் சரக்குதான்".

"எவ்வளவு போட்டுக் கொண்டாலும், மன்னன் ஒருதுளிகூட மாறாட்டமாகப் பேசவே மாட்டான்."

"கள்ளைத்தான் சார், அந்தப் பய குடம் குடமாகக் குடித்துவிட்டு, துணி போவது கூடத் தெரியாமே வீதியிலேயே புரள்வான். பார்க்க ரொம்பக் கண்றாவியாக இருக்கும்."

இப்படிப் பேசப்படுவதைக் கேட்டிருப்பீர்கள். புண்ய கதையிலே, படித்தாலும் படிக்கப் பக்க நின்று கேட்டாலும்

இம்மையில் சுகமும் மறுமையில் சுவர்க்க வாசமும் வாங்கித் தரக்கூடிய ஏடாமே, அதிலே கள்ளைக் குடித்துவிட்டு ஆடுகிற பகுதி இருப்பதே ஆபாசம், அதிலும் குடித்துவிட்டுக் கூத்தாடினவர்கள், யாரோ வழிப்போக்கர்கள், வனவாசிகள் என்றாவது இருக்கப்படாதோ! கீழ் மக்கள், இராமனுக்குத் திருமணம் என்ற செய்தி கேட்டு மகிழ்ந்து, குடித்துவிட்டு ஆடினர். அதுபோது, மணவினை காணச் சென்ற தசரதர், அவர்களைக் கண்டு "அப்பா! மது மதியை மாய்க்குமே! மகிழ்ச்சி கொள்வதற்கு, மதுவா வேண்டும்? இஃது நல்வழியன்று" என்று அறிவுரை கூற, அது கேட்ட அம்மக்கள் தமது மயக்கநிலையும் கடந்து மன்னன் அடிபணிந்து, குற்றம் பொறுத்தருள்க என்று கொற்றவனைக் கேட்க, "குறை மதியுடையோர் நீவிர்; செய்த குற்றம் தெரிந்தபின், திருத்திக் கொள்ள இசைந்தீர். இனி நிறைமதியாளர் ஆனீர். நீடூழி வாழ்க!" என்று வாழ்த்திவிட்டுச் சென்றார் என்று கம்பர் எழுதியிருக்கலாம். மது மதியை மாய்ப்பதையும் மன்னன் மக்களைத் திருத்துவதையும், ஏடுபடிப்போர் கண்டு, நல்லறிவும் பெறலாம். ஆனால் புலவர் ஏறு என்ன செய்தார்? குடித்துவிட்டுக் கூத்தாடினவர்கள் தசரதனின் உடன்வந்த புண்யபுருஷர்கள்தான் என்று கூறுகிறார்! அவர்கள் அவ்வழி எனில், மலைவாசியும் கானக வாசியும் எந்நிலையில் இருந்திருக்கக்கூடும்! மனம் குழம்பும், எண்ணினால். மன்னர் மன்னனின் மதிப்புக்குப் பாத்திரமானவர்களைக் குடிகாரர் என்று குறித்ததோடு விட்டாரா? ஏதோ மது அருந்தினர், மயங்கிச் சாய்ந்தனர் - அவர் தம் மதி சிறிது கெட்டதை எண்ணிச்சிரித்திடுவது போலச் சந்திரன் ஒளி வீசினான், செச்சே! இவர்களே இப்படிச் செய்தால், கற்றறிவில்லார் என்ன நிலை அடைவர் என்று

கோபித்துக் கதிரவன் தன் கதிர்கொண்டு அவர்களைத் தாக்கினான், குற்றம் பொறுத்திடுக என்று கோருவதொப்ப அவர்கள் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து, கள்ளுண்ட வாயுடன் கடவுளின் கலியாணக் காட்சியைக் காண்பதோ என்றஞ்சி, மடுவில் வீழ்ந்தெழுந்து, வாய் கழுவி, காலைக் கடனை முடித்தனர் என்று கம்பரும் முடித்திருக்கலாம்; ஆனால், என்ன செய்கிறார்? ஒவ்வொரு இடமாகக் குளோசப்!! பாருங்கள்!

அழகிய பொற்கிண்ணத்திலே புதிய கள்ளை ஊற்றிக் குடிக்கத் தொடங்கினர்!!

யார்?

மகளிர்!

அட, கர்மமே! இப்படிக் கள்ளைக் குடிக்கும் பெண்கள் யார்? மலர்கள் சூட்டப்பட்டு, நறுமணம் வீசும் கூந்தலையுடைய பெண்கள்.

அருவருப்புக்கு இதுவே போதும்! பெண்கள், ராஜ குடும்பத்தினர், ராகவனின் திருமணத்தைக் காணச் செல்கையில், வழியில், தங்குமிடத்தில், கள்ளைக் குடிப்பதா? கடவுளின் இலட்சண விளக்கத்துக்கான நூல் எழுதுவதற்கு, இந்தக் கள் குடிக்கும் காரிகையரைப்பற்றி எழுதத்தான் வேண்டுமா! நல்லறங்களுக்கெல்லாம் உறைவிடமாகிய அயோத்தியிலே 'ஐயன்' அவதாரம் எடுத்திருக்கும் நாட்களிலே, அணங்குகள் இருந்தநிலை இதுவா? வழியே கள் குடித்துவிட்டுக் கிடப்பதா?

பக்தர்காள்! பண்பு தேடிடும் புலவர்காள்! கலை ரசம் கேட்டிடும் கண்ணியர்காள்! மதுவிலக்குக்குப் பிரச்சாரம் செய்யும் மாண்புடைத் தோழர்காள்! அயோத்தி வாழ் அணங்குகள் ஐயன் காலத்திலே இதுபோல இருந்தனராம்! உரைத்தவர் கம்பர்! சரியா? பெருமைப்படுவதற்கானதா? பண்டைப் பெருமைக்குச் சான்றா? புண்ய ஏட்டின் இலட்சணம் இதுவா? பொறுமையுடன் சிந்தித்துப் பாருங்கள்.

பெண்கள் குடித்தனர். கள்ளைத்தான், தேன் அல்ல! இத்தோடு நிறுத்தவில்லை கம்பர். ஏன் குடித்தனர், என்பதற்கும் காரணம் கூறுகிறார். ஆபாசத்தின் முகட்டுக்கு அழைத்துச் செல்கிறார், ரசிகர்களை.

கள்ளை அந்தக் காரிகையர் காரணமின்றிப் பருக வில்லையாம். அந்த ரசத்தைத் தேடினது வேறோர் ரசத்தை அனுபவிக்கத்தானாம்! கள், தனிப்பொருள் என்று கருதினரில்லை அந்தத் தையலர், அதனை வேறோர் பொருளுக்குத் துணைப் பொருளாகக் கொண்டனர். பொற் கிண்ணத்தில் ஊற்றப்பட்ட அந்தக் கள், போகபூமிக்கு நுழைவுச் சீட்டாம், கேட்டீர்களா, காரண விளக்கத்தை!

ஐயனுக்குத் திருமணமாம், என்று அகமகிழ்ந்த ஆரணங்குகள், பாலென்றெண்ணிக் கள்ளைப் பருகினர், என்று கூறவில்லை. கலவிப் போரிலே களிக்க வேண்டு மென்பதற்காகக் கள்ளைக் குடித்தார்களாம்!! எவ்வளவு "கைகாரிகள்"!! எவ்வளவு பழக்கமும் பயிற்சியும் இருக்க வேண்டும். இந்த முறையை, "யாத்ரா மார்க்கத்திலே"யும் கையாள.

மலர்கள் மிகுதியாகப் பரப்பப்பட்ட படுக்கைகளிலே நடைபெறும் கலவிப் போரிலே, களிப்படைய வேண்டுமென்று, எண்ணி அந்த ஏந்திழையார், பொற்கிண்ணத்திலே கள்ளை ஊற்றிக் குடித்தனர் என்று கம்பர் உரைக்கிறார். புண்ய கதைதானா இது, அல்லது மதுவிலக்குக்கு எதிர்ப்பிரசாரத்துக் கான காவியமா? குடித்துக் கூத்தாடும் பெண்களையே மட்ட ரகத்தில் சேர்ப்பர், மதிவாணர். குடிப்பது காமக்கூத்திலே திறமையைப் பெறுவதற்கும் என்று எண்ணிக் குடிக்கும் பெண்டிரை, எங்கு சேர்ப்பர்! எங்கு காண்பர்! கம்பர் அயோத்திப் பெண்டிருக்கு இந்த "இலட்சணத்தை"ச் குறித்திருக்கிறார்.

❋

"அலமு! ஒரு 'திரான்' போட்டுக்கோ"

"வே.....ணா...க்கா...போதும்."

"ச்சீ! பெயித்தமே! போட்டுக்கோடி.. உடம்புக்கு ரொம்ப அலட்டு... பாழாயிடும் ...... இந்தா..... குடி... ஆவட்டும்... அதோ யாரோ வர்ராப்போலே இருக்கு."

❋

இதுபோன்ற, பேச்சு எங்கே கேட்க முடியும்? குடிப்பது காமக்கூத்துக்குத் தேவை, நல்லது, திறமையை அதிகப்படுத்தும் என்ற நாராசப் பேச்சு விபசாரத் தடைச் சட்டம் இல்லாத ஊரில், வழுக்கி வீழ்ந்த வனிதையரின் கொட்டகைகளில், கெட்டவர்களிடையே கேட்கக் கூடியது.

❋

கம்பர், காமக்கூத்திலே களிப்புண்டாக வேண்டுமென்பதற்காகக் கள்ளைப் பருகின காரிகையரை, காகுத்தன் பிறந்த அயோத்தியிலே இருக்கச் செய்வதுடன், 'ஐயனின்' கலியாணத்துக்கு அவர்கள் போகும் அருமையைப் படலம் படலமாகப் பாடித் தள்ளுகிறார்.

❈

ஏ! அதிகமாகப் பேசாதே! கம்பர், இதுபோல் பாடினதில்லை என்று கலாரசிகர்கள் அல்ல, மற்றவர்கள், குறிப்பாகப் பக்தர்கள் கூறுவர் - கோபத்துடன். கலாரசிகர்களின் கோபத்துக்கும் நான் ஆளாகித்தான் தீரவேண்டும், ஆனால் அவர்களின் கோபத்துக்குக் காரணம் வேறு. கம்பர், எவ்வளவு அழகுபட, மலரணை மங்கை, மது, கலவிப்போர், களிப்பு, ஆகிய ரசங்களைக் கூட்டிக் கலக்கி, "காக்டெயில்" ஆக்கித் தருகிறார், இந்தப் பித்தன் அனுபவித்தறியாதான் போலும், கோபிக்கிறான் என்று எண்ணுவர். இருசாராரும், பக்தரும் கலாரசிகரும் குறை கூறுவர். ஆனால் குற்றவாளி நானா? உண்டாட்டுப் படலம், 6வது செய்யுளைத் தருகிறேன், பாருங்கள்.

"பூக்கம ழோதியர் போது பொங்கிய
சேக்கையின் விளை செருக்குஞ் சிந்தையா
ராக்கிய வமிழ்தென வம்பொன் வள்ளத்து
வாக்கிய பசுநறை மாந்தன் மேயினார்."

பூக்கமழ் ஓதியர் - மலர் மணம் தரும் கூந்தலை உடைய பெண்கள்

போது பொங்கிய - மலர்கள் நிறையப் பரப்பப்பட்ட

சேக்கையின் - படுக்கைகளிலே

விளை - நிகழுகின்ற

செரு - கலவிப் போரில்

செருக்கும் - களிப்படைய வேண்டும் என்ற

சிந்தையார் - எண்ணமுடையவராய்

ஆக்கிய அமுது என - தேவர்கள் உண்டாக்கிய அமிர்தம் போல

அம்பொன் வள்ளத்து - அழகான பொற் கிண்ணங்களில்

வாக்கிய - ஊற்றப்பட்ட

பசு நறை - புதிய கள்ளை

மாந்தல் மேயினார் - பருகத் தொடங்கினர்கள்.

❋

அயோத்தி ஆரணங்களின் மகிழ்ச்சியைவிடக் கலா ரசிகர்கள் கம்ப ரசத்தைப் பருகிக் களிக்கின்றனர், களிக்கட்டும். ஆனால் நாட்டிலே நற்பண்பு வேண்டும் என்று எண்ணுவோர் சற்றுச் சிந்திக்கட்டும், இதுதானா புண்யகதை, இதுதானா களிப் படையும் வழி, இதுவா விழாப் போக்கு, புண்யகாலத்திலே, பொற்காலத்திலே, ராகவன் நாளிலே அணங்குகளின் போக்கு இதுவாக இருந்ததென்றால், அந்தக் காலம், பண்புடைய

காலமாகுமா என்ற இன்னோரன்ன பற்றி யோசித்துப் பாருங்கள். இந்த இலட்சணத்திலே, "கம்பன் எழுதப்போந்தது வடநாட்டுக் கதையே எனினும் தமிழ்நாட்டையே அதிலே குழைத்துள்ளார், கங்கையைக் காவிரியாகக் காட்டுகிறார், தமிழ்ப் பண்பையே காட்டுகிறார் என்றும் பேசுகிறார்கள். தமிழ்ப் பண்பு! இலட்சணத்தைப் பாருங்கள். கலவிப் போருக்குத் துணையாகக் கள்ளைத் தேடிடும் கைகாரிகள், தமிழர்கள்!! எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும் இப்படிக் கூற. எவ்வளவு கவலையற்ற தன்மை இருக்க வேண்டும், இதனைக் கேட்டுக் கொள்ள.

❋

அந்தக் காலத்திலே அவர்கள் குடித்தது கள் என்று பொருள்படுவதானாலும் கூட, அது வேறு வகை, என்று வாதாடி[illegible]வளை தேடுகிறர்களே பதுங்க, அவர்களுக்குக் கூறுகிறேன். குடியினால் உண்டாகும் கோணற் சேட்டைகள் என்னென்ன இன்று காண்கிறோமோ அது அவ்வளவும் அயோத்திப் பெண்கள் நடத்திக் காட்டுவதைக் கம்பர், பாடல் பாடலாக விரித்துக் காட்டியுள்ளார்.

❋

குடித்தனர் என்பது 6ம் செய்யுள். 7-ம் பாட்டிலேயும் அதுவே. 8ல், கண் சிவந்ததைக் கூறுகிறார். 9ல், கள்ளினால் காமம் மூண்டது குறித்திருக்கிறார் - பிறகு அவர்கள் நிலை இழந்தது, பிறகு உளறிக் கொண்டிருப்பது, பிறகு ஆபாசமான ஆட்டங்கள்... இவ்வண்ணம், - குடிவெறியை, 66 பாடல்கள்

மூலம், உண்டாட்டுப் படலத்திலே விளக்கியிருக்கிறார், ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்புக்கான புண்யகதை எழுதப்போந்தவர்.

❋

டே! ரொம்ப போதை ஏறிவிட்டதுடா பயலுக்கு. அவன் நிழலைப் பார்த்து, வேறே யாரோ ஒரு ஆள் என்று எண்ணிக் கொண்டு பேசுகிறான் பாரடா!

❋

கிளாஸ் காலியாகி விட்டது கூடத் தெரியாமல், அதிலே பீர் இருககென்று எண்ணி, கிளாசை எடுக்கிறான் பார்டா. ஓவர்!

❋

இப்படி இன்று குடியர்களைப் பற்றிப் பேசப்படுகிறதே, அதேவிதமாக, அந்த மகராஜிகளின் மாண்பினைப் பற்றிக் கம்பர், பல பாடல்கள் பாடியிருக்கிறார்.

❋

வெறி! பய, இடுப்புக்குக் கட்டவேண்டியதைத் தலைக்கும், காலுக்குப் போடுவதைக் கழுத்துக்கும் போட்டு கிட்டு, பார்க்கக் கண்றாவியா நடந்து கொண்டானாம்! – இப்படி, குடியனின் கோணற் சேட்டையைப் பற்றிப் பேசப் படுகிறது, இந்நாளில். இந்தச் சீர்கேடெல்லாம் ஒழிய வேண்டும் என்று நல்லறிவாளர் அனைவருமே கூறுகின்றனர்.

16வது செய்யுளைப் படித்தால் "குணவதிகள்" குடிவெறியில் செய்திருக்கும் கோலாகலம், நமக்கு வாந்தி வரும் விதமாக இருக்கிறது. கம்பநாட்டாழ்வார் பாடியதுதான், சூனா மானா பேனா அல்ல!! பாடலைப் பார்க்கிறீர்களா! அந்தப் பாவையரைப் பார்க்கும் பாக்கியம் இல்லை உங்கட்கு!! பார்த்திருந்தாலும், ஆபத்துதான்!!!

மதுமயக்கம் தலைக்கேறிவிட்டதாம் ஒரு மாதுவுக்கு. எதை எங்கே அணிவது என்ற தெளிவு கூட இல்லை. இடையிலே கட்டியிருந்த மேலாபரணத்தை எடுத்துத் தலையிலே அணிந்து கொண்டாளாம். காலிலே பூண வேண்டியதை எடுத்துக் கொண்டையிலே செருகினாளாம், இப்படிப் பலப்பல கோலங்களாம்!

"மின்னென நுடங்குகின்ற மருங்குலாள் ஒருத்தி வெள்ளை
பின்னமிழ்தனைய வின்சொலிடைத் தடுமாறியென்னே
வண்ண மேகலையைநீக்கி ,மலர்த் தொடையல்குல் சூழ்ந்தாள்
பொன்னரி மாலைகொண்டு புரிகுழல்புனையலுற்றாள்"

பாடலின் பொருளைப் பாருங்கள்.

மினஎனநுடங்குகின்ற - மின்னல் போல் அசையும்.

மருங்குலாள் ஒருத்தி - இடையை உடைய ஒரு மாது

வெள்ளைஇன் அமிழ்துஅனைய - வெண்ணை நிறமுள்ள இனிமையான அமிர்தம் போன்ற

இன்சொல் - இனிப்பான பேச்சு

இடைதடுமாறி - இடையிலே குன்றி

அல்குல்வண்ணம் மேகலையை நீக்கி - மறைவிடத் தருகே அணியப்பெறும் மேகலாபரணத்தை எடுத்து

மலர்த்தொடை - மலர்மாலையை

அல்குல்சூழ்ந்தாள் - மறைவிடத்தருகே அணிந்து கொண்டாள்.

பொன்னரிமாலைகொண்டு - பொன்னரிமாலை எனும் ஆபரணத்தை

புரிகுழல் - கூந்தலிலே

புனையலுற்றாள் - சூட்டிக் கொள்ளத் தொடங்கினாள்.

❋

ஆபாசத்தின் எல்லை! இனி நமக்கு அங்கு வேலை இல்லை! ஆபத்து!! திரும்புக, சிந்திக்கத் தொடங்குக, இதுவா புண்யகதை, தமிழ்ப்பண்பு, காவியரசனை!! கம்பர் விழா, இதற்கு மகிழ்ந்ததோ?

*(திராவிட நாடு - 12-1-47)*

# 38. மறைந்த மறத்தமிழர்!

"சிவந்தமேனி - நல்ல உடற்கட்டு - சிரித்த முகம் - வெண்கலத் தொனி - வீரநடை" எனக் குறிப்பிட்டாலே

புரிந்து கொள்வார்கள் அவர் ஒருமுறை பார்த்துப் பழக்க முடையவர்களும் ஒன்றுபட்ட கருத்துடையாரைக் காட்டிலும், மாறுபட்டவர்களே அவர் பெயரையும் உருவையும் என்றும் மறக்கமுடியாது.

சிங்கத்தைக் கண்டு சிறுநரி மறைந்தொளியலாம். ஆனால் சிங்கத்தைச் சிங்கமே கண்டு அஞ்சுவதென்றால் அச்சுறுத்தும் சிங்கத்தின் ஆற்றல் பெரியதென்றுதான் கூற வேண்டும். அத்தகைய நெஞ்சுரமும் உடல் வன்மையும், கொள்கைபால் பற்றும் கொண்டு வாழ்ந்தவர் மு. அரங்கசாமி அவர்கள்.

பள்ளியில் பலகால் பயின்று பட்டம் பெற்றவரல்லர். இருந்தால் என்ன? பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பலர், இன்றும் கடவுள் கற்பனைகளில் நம்பிக்கையும் கற்கால மன வளமும் கொண்டிருப்பதை நாம் பார்ப்பதில்லையா? நீண்ட நாள் வரையில் கொடிய வைஷ்ணவப் பற்றுக் கொண்டிருந்த அவர் சகல வாழ்க்கைத் துறைகளிலும் தீவிரப் போக்குடையா ராக மாறி விட்டாரென்றால் ஆச்சரியப்படக் கூடியதேயாகும்.

காஞ்சிபுரத்தைப் பொறுத்த வரையில் சுயமரியாதை இயக்கத்தை நிறுவினவர் அவரேயாகும். இது பதினைந்து ஆண்டுகட்கு முன்பே நிகழ்ந்தது. கூட்டத்தில் கூடி இருப்பவர்களிலும், மறைவிலிருந்து கல்வீசுபவர்களும் வாய் விட்டுக் கண்டபடி ஏசுபவர்களுமே அதிகம் அக்காலத்தில் பரந்த நெற்றியில் பளிச்செனத் தீட்டிய நாமத்துடன், சில இளைஞர்களின் அரிய பெரிய முயற்சியை ஆக்கம் தந்து ஊக்கியவர் அவர்!

கிழிந்த ஆடை, பளபளப்பான உடை, இவை இரண்டிற்கும் அவர் வேற்றுமை அறியாதவர். ஏழை பங்காளராகவே அவர் வாழ்ந்தார். பணமூட்டைகளைக் கண்டு பல்லிளிக்கும் பண்பு அவரிடத்தில் ஒருதுளியும் கிடையாது. முடியாது' என ஒருசொல் இருப்பதையே அவர் அறியார். 'அச்சம்' அவருக்குத் தெரியாத பண்பு.

காஞ்சி நகரசபைக்கு இனி அவர்போல் ஒருவர் கிடைப்பது அரிதேயாகும். செங்கற்பட்டு ஜில்லா போர்டிலும் அவர் அங்கத்தினராக இருந்தார். இன்னும் பல பொது ஸ்தாபனங்களிலும் அவர் கலந்து உழைத்திருக்கிறார். ஒரு இடத்திலும் தன்னை அங்கு அனுப்பிய மக்களின் நன்மையை மறந்தறியாதவர்,

மாறுபட்ட கருத்திற்காக, போலீஸ் துணைநாடி, அவரை வீழ்த்த எடுத்துக் கொண்ட சில முயற்சிகளிலும், வெற்றி வீரராகவே அவர் விளங்கினார். போர்க்களம் புகுந்த காளையாகவே அவர் காலம் முழுதும் கழித்தார்.

முஸ்லிம் தோழர்களுக்கு ஓர் உண்மை நண்பராகவே இருந்தவர் அவர். குருடனுக்குக்கோல் - இருட்டுக்கு வெளிச்சம் எனும் தன்மையில், தான் பிறந்த குலத்திற்கு (வன்னியகுல க்ஷத்திரியர்கள்) இருந்து வந்தார். தம்குலமக்களின் கல்வியின்மை, வறுமை ஆகியவற்றைக்கண்டு அவர் பட்ட வேதனை எழுத்தளவில் நிற்கக்கூடியதல்ல 54 வயதுதான். எதிர்பாராதவகையில் திடீரென்று இருதயம் நின்றதால் 16-3-47 இரவு 8மணிக்கு உயிர் நீத்தார். ஆயிரக்கணக்கில் மக்கள் ஒன்று திரண்டனர். அவர் வாழ்க்கை வரலாற்றின்

சிறப்புகளைப் பலரும் தாம்தாம் அறிந்த வகையில் பேசிப் பேசி துக்கித்தனர்.

இருவரிசையில் இருநூறு கருப்புக்கொடிகள் மரக்கலம் போன்ற பல்லக்கில். மறத்தமிழரின் சூழ்ச்சியறியாத உடல் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. 5000க்கு அதிகமான மக்கள் உடன் வந்தனர். மயானத்தில் பெருங்கூட்டம். அ.க. தங்கவேலர் தலைமை தாங்கினார். தோழர் அண்ணாதுரை, தழதழத்தக்குரலில் பிரிந்த பெரியாரின் சிறப்பியல்புகளைச் சில வார்த்தைகளில் சொல்லி நிறுத்தினார். தோழர்கள் கள்ளிப்பட்டு கிருஷ்ணசாமி நாயக்கர், ஆபீசர் வி. கண்ணன், ஐயம்பெருமாள், மா. தேவராஜன், காஞ்சி கலியாணசுந்தரம் முதலியவர்கள் சில வார்த்தைகள் பேசினர். தலைவரின் முடிவுரை நெஞ்சையும் உலரச் செய்துவிட்டது. ஆயிரமாயிரங் கண்கள் நீர் சிந்தின. பின்னர் வீரரின் உடலுக்குத் தீயிடப்பட்டது. தமிழ் வீரரின் உடல் வெந்து நீறாயிற்று இருந்தாலும் அவர் வீரவரலாறு என்றும் மறையாது.

இதுவரை பிரிந்த எவருக்கும் காஞ்சிபுர மக்கள் இத்தகைய மரியாதை செய்ததே கிடையாது. இதிலிருந்தே காலஞ்சென்ற மு. அரங்கசாமி எவ்வளவு மக்களின் அன்பைப் பெற்றிருந்தார் என்பது தெற்றென விளங்கும்.

மறத்தமிழர் மறைவு, பொதுமக்கட்குப் பெருநஷ்டம் - மறக்கொணா துக்கம் - அவர்தம் குடும்பத்தினருக்கோ - சொல்லொணாக் கஷ்டம். மீசையும் அரும்பெடுக்காத சிறுவன் அவருக்கு - ஒரே மகன் - அவனுடைய உடைந்த உள்ளம், மற்றும் காலஞ்சென்றவரின் திருமகளாரின் திகைப்புண்டமனம்,

மறைந்தவரின் அன்னை மூதாட்டியின் தீப்பட்ட மனம் மற்றும் மூத்தவர், இளையவர், முறையினர், உறவினர் ஆகிய பலருடைய பதறும் நெஞ்சம் இவற்றிற்கு ஆறுதல் கூறும் ஆற்றலற்று இருக்கிறோம் - நமது மனமும் அதே நிலையில் இருப்பதால், எனினும் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக் கொள்வோம் என்ற முறையில் அவர்கட்கெல்லாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம், மலை சாய்ந்தது! என் செய்வது - இனிக் குன்றுகள், மலையாக வேண்டும். மறைந்தவரின் மாண்புகளை மறவாது, பணிபுரிய வேண்டும்.

*(செய்தி - திராவிட நாடு - 29-3-42)*

## 39.ஆடுராட்டே! ஆனால் இங்கு!

ஆடு ராட்டே! கழன்று ஆடு ராட்டே! என்பதில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் நண்பர்களுக்கு ரொம்பப் பிரியம். வீட்டுக்கு வீடு ராட்டை ஆட வேண்டும் என்பது அவர்களின் விருப்பம் - வேலைத் திட்டம். இந்த வேலைத் திட்டம் போடும் அளவுக்கு ராட்டையிலே அவர்களுக்கு ஆர்வம் உண்டானதற்குக் காரணம், காந்தியாரின் போதனை. ஆனால் அந்தக் காந்தியாரின் வாசஸ்தலமாகவும், பிரதம சீடர்களின் இடமாகவும் உள்ள, வடநாடு, எவ்விதம் இருக்கிறது? அங்கு ஆலையரசர்கள் கொழுக்கிறார்கள் என்று பன்முறை எடுத்துக்காட்டினோம். அது பழங்கதையாகி விடவில்லை. புதிய அத்யாயம் இதோ!

பம்பாயிலுள்ள முதலாளிமார்கள் ஒருவெளிநாட்டுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டிருக்கிறார்கள் - கதர் திட்டத்துக்காகவா? - இல்லை அதைக் கருவறுக்க, வடநாட்டில் கருவறுக்க! ஒரு கோடி ருபாய் விலையுள்ள, நவீன ஆலை இயந்திரங்களை 1948, ஜூலையிலிருந்து மூன்று ஆண்டுகள், தங்களுக்கு அனுப்பிக் கொடுக்கும்படி, ரோட்ஸ் தீவிலுள்ள ஒரு கம்பெனியிடம், பம்பாய் முதலாளிகள் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கம்பெனி, அமெரிக்கருக்குச் சொந்தமானது. நவீன யந்திரங்கள் அங்கே ஆலைகளை அதிகப்படுத்த! ஒரு கோடி ரூபாய்க்கு ஆலைச் சாமான் வாங்குகிறார்கள், ஏற்கனவே ஆலையிலே ஆதிக்கம் பெற்றுள்ள பம்பாய் முதலாளிகள். இங்கோ மந்திரிகளும் ஆடு ராட்டே! சுழன்று ஆடு ராட்டே! என்று பாடுகிறார்கள்!! வடநாட்டில் ஆலை! இங்கு ராட்டை!!

*(திராவிட நாடு - 6-7-47)*

# 40. ஐயோ யாழ் முறிந்தது

மயில் வாகனனார் எனும் பெயரால் வளர்ந்து, விபுலாநந்தர் எனும் பெயரால் சிறப்பிக்கப்பட்டு, தென் மொழி, வடமொழி, ஆங்கிலம் முதலியன நன்கு பயின்று, ஒழுக்கத்தால் உயர்ந்து, ஆராய்ச்சியால் சிறந்து, பிறரால் சிறிதென ஒதுக்கித் தள்ளப்பட்ட முன்னாள் தமிழரின் இசை அறிவை நுணுகி ஆராய்ந்தறிந்து, பிற மொழி இசை நூல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, 'தமிழர்க்குத் தனி இசை

உண்டு. மிகவும் தொன்மை வாய்ந்தது' எனும் முடிவிற்கு வந்து, யாழ் நூல் ஒன்று இயற்றி, தமிழருக்கும் தமிழுக்கும் ஒப்பற்ற தொண்டாற்றி வந்த பெரியார் விபுலாநந்தர் 20-7-47ல் கொழும்பில் உயிர் நீத்தார் எனும் செய்தி, தமிழர்க்கு வேதனை தரும் என்பதில் ஐயமில்லை. இராமகிருஷ்ணர் மடத்தின் நோக்கும் போக்கும் இதுவென அறிந்திருப்ப வர்களுக்கு, இளமையிலிருந்து அதனுடன் இரண்டறக் கலந்திருந்தும் சுவாமி விபுலாநந்தரின் தமிழர் பண்பாடு மாறாமல், தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய பெருமை ஆச்சரியத்தை உண்டாக்கும். தமிழர்க்கென வாழ்ந்து உயிர் நீத்த அறிஞரின் சேவையைப் பின்பற்ற உறுதி கொள்வோமாக.

*(திராவிட நாடு - 27-7-47)*

# 41. நாகை மணி பகுத்தறிவுக் கழகம்!

சுயமரியாதை இயக்கம் துவக்கப்பட்டபோது, பல திக்குகளிலிருந்தும் பலமான எதிர்ப்பு ஏற்பட்டது. பிரச்சார மேடை அமைப்பது மிக ஆபத்தான வேலையாக இருந்த காலம் அது. ஊரெங்கும் எதிர்ப்பு; ஒருவகை இருவகை எதிர்ப்பல்ல ஒரு புறம் சர்க்கார், மற்றோர்புறம் பார்ப்பன அதிகாரிகள், பணக்காரர் வைதீகர் ஆகியோரின் எதிர்ப்பு. இவ்வளவுக்குமிடையே எதிர்நீச்சு, இயக்க காரியம். இதனைப் பெரியார் செய்துவந்தபோது, அவருக்கு இருமருங்கிலும், இரு சிங்கங்களென நின்றவர்கள், மாயவரம் தோழர் நடராஜன்

அவர்களும், நாகை மணியுமாவர். இருவரும் இன்று இல்லை. உடற்கட்டு, உள்ள உரம், உழைப்பதில் சலியாத தன்மை கொண்ட அவர்களின் ஒப்பற்றத் தொண்டின் விளைவுதான், இன்று தஞ்சை மாவட்டத்திலே இயக்கத்துக்குள்ள செல்வாக்கு. மறைந்த மணியின் நினைவுக்குறியாக, நாகை வெளிப் பாளையத்தில், மணி பகுத்தறிவுக் கழகம், அமைத்து, அவர் ஆற்றி வந்த தொண்டினைத் தொடர்ந்து நடத்தி வருவதே, அவர்பால் நமக்குள்ள மரியாதையைக் காட்டும் முறையாகும் என்ற நோக்குடன், நாகை திராவிடத் தோழர்கள் மேற்படி கழகத்தை நடத்தி வருகிறார்கள். 15-7-47 அன்று மாலை, நாகை அவுரித் திடலில் மணி பகுத்தறிவுக் கழக மூன்றாவது ஆண்டு விழா, குடந்தைத் தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. தோழர்கள் மதியழகன், நெடுஞ்செழியன், சம்பத், அண்ணாதுரை ஆகியோர், காலஞ் சென்ற மணி அவர்களின் மாண்புகளை எடுத்துரைத்துவிட்டு, பகுத்தறிவின் அவசியத்தைக் குறித்தும், திராவிட நாடு தனிநாடு ஆகவேண்டியது பற்றியும் பேசினர்.

*(செய்தி - திராவிட நாடு - 27-7-47)*

# 42. அவுங்சான்!

படித்துவிட்டு வரத்தான் சென்றான் அந்த வாலிபன், ஆனால் அவன் படித்த பாடங்கள், அவனைப் பரீட்சையில் தேறும் அளவோடு வைக்கவில்லை - தியாகத்தீயிலே புகச் செய்தது, புகுந்தான் புன்னகையுடன். ஏன் ஏற்படாது

அவ்விதமான எழுச்சி! அவன் படித்த பாடங்கள் அப்படிப் பட்டவை.

சொர்ணமாளிகையிலே வீற்றிருந்தான் நமது மன்னன். சொந்த நாட்டைவிட்டுக் கிளம்பி, ஊரூராகச் சென்று சோப்பு விற்றுப் பிழைக்க வந்த வெள்ளையர், தங்கள் ஆதிக்கத்தை மெள்ள மெள்ள ஏற்படுத்திக் கொண்டதுடன், நமது நாட்டின் மீது பாய்ந்து, மன்னனை வம்புக்கு இழுத்து, போரிடச் செய்து, போரிலே தோற்ற மன்னனை, சிறைப்படுத்தி, நாட்டைவிட்டே அழைத்துச் சென்று, சிறையிலே வதையச் செய்தனர் - சாகும்வரை!

அவன் படித்த பாடத்திலே இது ஒன்று. வாலிப உள்ளத்திலே இந்தப்பாடம், எவ்விதமான ஆவேச உணர்ச்சியைக் கிளப்பி இருக்கும் என்பதை நாம் யூகித்துக் கொள்ளலாம்.

ரத்னகிரி கோட்டை, வெகு தொலைவில் இருக்கிறது. இந்திய பூபாகத்தைச் சேர்ந்த அந்தக் கோட்டையிலேதான், நமது மன்னர் சிறை வைக்கப்பட்டிருக்கிறார், வியாபாரம் செய்து பிழைக்க வந்த ஆங்கிலேயரால்.

இதுவும் அவன் படித்த பாடமே. அவனுக்கு வெள்ளையர்மீது வெறுப்புணர்ச்சி ஏற்படாதிருக்க முடியுமா - களங்கமற்ற மனம் - கவலையற்ற பருவம் - கட்டுக்கடங்க மறுக்கும் உணர்ச்சி, இவைகளின் இருப்பிடம். அந்த வாலிபன். அவன் மனதிலே, தன் தாய்நாடு அடிமைப்படுத்தப்பட்ட வரலாறு, ஆழப்பதிந்தது. அவன் பேச்சிலும் மூச்சிலும் அனல் கிளம்பிற்று.

"ஆற்றல் மிக்க நமது படைத்தலைவர், வெள்ளையரின் தாக்குதலை வெகு சாமர்த்தியமாகச் சமாளித்தார். அவர்களிடம் நவீன முறையில் அமைந்த பல ஆயுதங்கள் இருந்தன - நம்மிடமோ, பரம்பரை பரம்பரையாக நமக்கு உரித்தான ஆண்மை நிரம்ப இருந்தது - தாக்கினார் நமது படைத் தலைவர் - தாக்கவந்த வெள்ளையர் திகைக்குமளவு தாக்கினார். ஆனால், அந்தோ! எங்கிருந்தோ பறந்துவந்த பாழும் குண்டொன்று அவரைக் கொன்றது; நமது படை சிதறி விட்டது. இல்லையேல் இந்நாடு, வெள்ளையரிடம் பிடிபட்டிருக்காது.

என்றும், அந்த மாணவன் படித்தான் - விடுதலைப் போருக்கு ஏற்ற உலைக்கூடமாயிற்று அவன் மனம். புரட்சியின் பொறிகள் அவன் கண்களிலே இருந்து கிளம்பின. போர்க் கோலம் பூண்டான் - மாணவனாக இருக்கும்போதே, ஆம்! - போர்க்கோலத்துடனேயே மாண்டான் - கொல்லப் பட்டான்.

முப்பத்திரண்டு வயது! முடிசூடா மன்னன் நிலைமை! அந்தோ உடலெல்லாம் குண்டுகள் பாய்ந்தன. களத்திலே அவன் நின்றபோது அல்ல, நாட்டு நிர்வாகக் காரியத்துக்காக, தனது கூட்டுத் தோழர்களுடன் கலந்து பேசிக் கொண்டிருந்த நேரத்திலே கோரமாகக் கொலை செய்யப்பட்டார்.

அவுங்சான், அடிமைத்தனம் சூழ்ந்திருந்த பர்மாவிலே, ஓர் மகத்தான மின்னல்போலத் தோன்றி மறைந்தார் - மறக்க முடியாத, மனவேதனை என்றென்றும் மாறமுடியாத நிலையிலே மாண்டார்.

பள்ளியில் படிக்கும்போதே அவுங்சான், தனது திறமையினால், மாணவர் தலைவரானார். அவர் அக்காலத்திலே நடத்திய வேலைநிறுத்தம், பர்மா சர்க்காரைத் திணற வைத்தது - பர்மிய மக்களின் கண்களைத் திறக்கச் செய்தது; இதோ ஒரு வீரன் தோன்றிவிட்டான் - விடுதலைப் படையை நடத்திச் செல்லக்கூடியவன் - பர்மாவின் அடிமைத்தளைகளை உடைத்தெறியக்கூடியவன் - என்று பேசிக்கொண்டனர்.

பர்மா, இந்திய பூபாகம் வெள்ளையர் ஆதிக்கத்திலே வந்த நெடுநாட்களுக்குப் பிறகு, பிடிபட்ட நாடு. மூன்று முறை வெள்ளையர் போரிட்டனர் பர்மாவைப் பிடிக்க. பிறகு அங்கு ஏற்பட்ட, கலகமோ போர் தந்ததைவிட அதிகத் தொல்லைதான் தந்தது வெள்ளையருக்கு. சுதந்திரத் தீ அணைந்திருந்ததே தவிர, அடியோடு பட்டுப்போகவில்லை - நீறுபூத்த நெருப்பாக இருந்தது. இதனை மீண்டும் ஜுவாலையாக்குவதற்கு ஒரு வாலிபனின் ஆவேச உரை போதுமானதாக இருந்தது.

சட்டக்கல்லூரியிலே சேர்ந்த அவுங்சான், நாட்டு விடுதலையிலே நாட்டம் கொண்டதால், மேற்கொண்டு படிப்பதற்கு ஏற்ற மனப்பாங்கு கொள்ள முடியவில்லை. ஏடுகளைப் பிரிக்கும்போதெல்லாம் நாட்டின் நலிவே கண்முன் தோன்றும்போது, எப்படி முடியும், படித்துப் பட்டம்பெற்று, ஏதோ ஓர்வேலையில் அமர்ந்து குடும்ப பாரத்தைத் தாங்கவேண்டுமென்று.

கூண்டுக்கிளியாக இருக்க மறுத்துவிட்டான் - பாய்மரமற்ற கப்பல்போல, அலைஅடிக்கும் திக்கெல்லாம் தள்ளப்பட்டாலும், முடிவில், எப்படியாவது துறைமுகம்

சென்றுவிடலாம் என்று நம்பும் மாலுமிபோல, பர்மாவின் விடுதலைக்காக ஏதேனும் ஓர்வழி, கிடைக்கும் மார்க்கமெல்லாம் சென்று பார்த்துத் தீரவேண்டும் என்று தோன்றிவிட்டது அவுங்சானுக்கு.

பர்மா, அழைக்கிறது! பள்ளிக்கூடம், அந்த நிலையிலே அவனை அடக்கிவைக்க முடியுமா! கம்பிகள் விலகின, கிளி றந்தது! வல்லூறு துரத்திக்கொண்டே சென்றது.

பர்மிய விடுதலைப் போராட்டம், மேனாடுகளிலே, நடைபெறுவிதமாக அமைந்துவிட்டது. இங்கு நமது உபகண்டத்திலே ஏற்பட்டதுபோல, சர்க்கார் முறையிலே அமையவில்லை.

துப்பாக்கி தூக்கிக்கொண்டுவந்து நம்மைத் தாக்கின துரைமார்களை, கிடைக்கும் ஆயுதத்தைக் கொண்டு தாக்கிவிரட்ட வேண்டியதே முறை என்று பர்மியர் கருதினர். அந்நாட்டு விடுதலை வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளை, படிக்கும்போதே மயிர்க்கூச்செறியும் விதமாக அமைந்திருப்பதற்குக் காரணம் அதுதான்.

விடுதலைப்போர் தொடுக்க எண்ணிய அவுங்சான் பள்ளிக்கூடத்தைவிட்டு விலகினான் பாசறைப்பயிற்சி பெறச் சென்றான்.

அதுபோது, பர்மாவிலும், மலாய் பகுதிகளிலும், ஆசியாவை ஆளவேண்டும்என்ற பேராசை கொண்ட ஜப்பானியர்கள், ஆங்காங்கு "முகாம்கள்" அமைத்துக் கொண்டு, பல்கட்டும் டாக்டர் - பழக்கடைக்காரார் - மருந்து விற்பவர்

- ஓட்டல்காரர், என்ற இவ்விதமான உருவங்களிலே உலவி, ஆங்காங்கு உள்நாட்டுக் குழப்பங்களைக் கிளறிக் கொண்டிருந்தனர். அவுங்சானுக்கு ராணுவப்பயிற்சி கிடைத்ததும், அவர்கள் மூலமாகத்தான். ஹயினான் என்ற இடத்திலே, அவர் ராணுவப்பயிற்சி பெற்றார். நாட்டுவிடுதலைக்கு அதுதேவை என்ற எண்ணத்துடன்.

உலகப் போர் மூண்டது - அவுங்சானுக்குச் சந்தர்ப்பம் கிடைத்து. பர்மாவை நோக்கி வந்த ஜப்பானியப் படைக்கு வழிகாட்டிக் கொண்டுவந்த முப்பது வாலிபர்களில் அவுங்சானே, முதலிடம் பெற்றிருந்தார்.

தங்கள் முன்னோடும் பிள்ளை என்ற அளவிலே ஜப்பானியர், அவுங்சானை மதிப்பிட்டனர் - தலைகால் தெரியாமல் ஆடினர். ஜப்பானியர், அவுங்சானைப் பற்றிப் போட்டது "தப்புக்கணக்கு" என்பது பிறகே அவர்களுக்குத் தெரிய வந்தது. அவர்கள், சரியான ஒரு காளை கிடைத்தது நமக்கு; இந்த அவுங்சானைக் காட்டி, பர்மிய மக்களை நாம் ஏய்த்துவிடலாம் என்று மனப்பால் குடித்தனர். பிரிட்டிஷ் படைகள் பின்வாங்கின! அவுங்சான் ஆனந்தமடைந்தார்! ஓடுதுபார், என்னாட்டை இதுகாறும் ஆட்டிப்படைத்த பிரிட்டிஷ் படை, பர்மாவைப் பாழாக்கி வைத்த படை என்று எண்ணிக்களித்தார். "தம்பீ! உன் வீர தீரத்தை நாம் மெச்சுகிறோம். இனிநாம் ஒன்று கூடி இந்நாட்டை ஆளுவோம்" என்று கூறிக்கொண்டே, தன் முதுகைத் தட்டிக் கொடுக்கும் ஜப்பானியனைக் கண்டான் அவுங்சான். "பழைய சனியன் போயிற்று, இந்தப் புதுஆள்....?" இந்த எண்ணம் ஏற்பட்டது. அவுங்சானின் மனம், பிரிட்டிஷார் வெளி ஏறிவிட்டதுடன்

———

எப்படித் திருப்திப்பட முடியும்? ஜப்பானியரின் கொட்டம் வளருவது கண்டு நெஞ்சம் குமுறினான். பர்மா தங்கள் பிடியில் சிக்கிவிட்டது என்ற தீர்மானமான எண்ணத்துடன், ஜப்பானியர்கள் தங்கள் அடக்குமுறையைத் துவக்கினர்; அவுங்சானின் இரத்தம் கொதித்தது.

முன்பு அவுங்சான், வீரவாலிபன் - இப்போது வீரப்படைக்குத் தலைவன். ஜப்பானியரின் மேற்பார்வையில் பர்மா அமைத்த மந்திரிசபையிலே, அவுங்சான், படைத் தலைவன்! போர்ப்பயிற்சி பெற்ற, ஆயுதபலம் பெற்ற பெரும் படை இருந்தது, அவுங்சானின் சுட்டுவிரல் காட்டும் திக்கு நோக்கிப்பாயும் மனதிடத்துடன். அவுங்சான் புன்னகை புரிந்தான் - புதுத்திட்டம் தயாராகிவிட்டது. பிரிட்டிஷாருடன் சேர்ந்து கொண்டான்! ஜப்பானியரை விரட்டினான்! பர்மாவுக்கு நேரிட்ட புதிய ஆபத்து ஒழிந்தது.

வெறும் அவுங்சானாக இருந்தால், பிரிட்டிஷார், அவனுக்கு ஒரு 'சர்' பட்டம் கொடுத்து உட்காரவைத்து விட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் கண்டகாட்சி என்ன? பல்லாயிரக்கணக்கான போர் வீரர்களின் அணிவகுப்புக்குத் தலைமை வகித்து வந்த அவுங்சான்! பல இலட்சம் பர்மியர்கள், அவுங்சானின் வார்த்தையைச் சட்டமாக ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருந்த நிலை.

வெள்ளையருக்குத்தான், வளைந்து கொடுக்கும் வித்தை மிக நன்றாகத் தெரியுமே! எனவே அவர்கள், இங்கே, இந்தியாவிலே, ஷாநவாசையும், ஷெய்காலையும், குற்றக் கூண்டிலே ஏற்றிவைத்து, எந்தக் குற்றம் செய்ததற்காக

விசாரணை நடத்தினார்களோ, அதே வேலையைச் செய்ய அவுங்சானை, சர்க்கார் மாளிகையில் வரவேற்றனர் - இப்போது இங்கு இந்துஸ்தான் கவர்னர் ஜெனரலாக உள்ள மவுண்ட் பேட்டன் பிரபுவே, அவுங்சானுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார் - அவுங்சானின் படையை, பர்மிய தேசியப் படை என்று அங்கீகரித்தார்.

விடுதலை வீரன் அவுங்சான், பர்மாவின் ஒப்பற்ற தலைவரானார். பிறகு அவருடைய ஒவ்வொரு முயற்சியும், ஆச்சரியகரமான வெற்றியையே தந்தது. அவர் வேலை நிறுத்தம் செய்யச்சொன்னால், பர்மா முழுவதும் கேட்டது. அவருடைய படை திரண்டது; அதுபோலவே யூகமும் நிர்வாகத் திறமையும் வளர்ந்தது. வெள்ளையர், இனித் தமது பிடி நிலைக்க முடியாது என்று தெரிந்து கொண்ட பர்மிய நாட்டுக்குச் சுதந்திரச் சாசனம் தயாரிக்கும் உரிமையுடன் பர்மிய அரசியல் நிர்ணய சபையை அமைக்கும் திட்டத்தைத் தந்தனர். அரசியல் நிர்ணய சபை நடைபெற்றுக் கொண்டிருக் கிறது, அந்தோ, அதற்கு உயிரளித்த அவுங்சானின் உயிரைக் குடிக்கத் துணிந்தனர், பழிக்கஞ்சாப் பாதகர்கள்.

சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்ட யூசோ, அவனுடைய சகாக்கள், சந்தேகிக்கப்படும் பாமா, இவர் களெல்லாம், அவுங்சானைவிட, வயதிலே பெரியவர்கள் - அரசியல் சேற்றிலே ஆழமாகக் காலை வைத்தவர்கள் - அவர்களும் சிறை, நாடு கடத்தப்படல் முதலியவற்றுக்கு ஆளானவர்கள்தான். ஆனால், அவர்கள், அவுங்சான் மீசை கருக்காத வாலிபனாக இருந்தபோது தலைவர்களாக

இருந்தவர்கள் - அவர்களின் மனதிலே அவுங்சானின் மின்னல் வேக வளர்ச்சி, பொறாமையை மூட்டிவிட்டது.

போரின்போது, கைது செய்யப்பட்டு, பிறகு பிரிட்டிஷாரால் விடுதலை செய்யப்பட்ட யூசா பர்மா திரும்பிய உடனே, பர்மிய விடுதலை ஒன்றே அவருடைய குறிக்கோளாக இருக்குமானால், பழையபடி தமது கட்சியைத் திரட்டி இருக்க வேண்டியதில்லை. அவுங்சானின் செல்வாக்கைத் தொலைக்க, யூசா முயற்சித்தது, வெளிப்படையாகவே தெரியலாயிற்று. அதிலும பர்மிய விடுதலைக்கான திட்டத்தைப் பிரிட்டன் தயாரித்தபோது அவுங்சான் அதை ஏற்றுக் கொள்ள, யூசா, பாமா, ஆகியோர் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தனர் - மறுத்தவர்கள், நாட்டு மக்களைத் தங்கள் பக்கம் சேர்த்துக் கொள்ள முயற்சித்தனரா என்றால், அதிலே ஈடுபடவில்லை. அரசியல் நிர்ணய சபைத் தேர்தலிலே தலை காட்டவில்லை. ஏன் தலைகாட்டப் போகிறார்கள். அவர்களின் திட்டம்தான் வேறுவிதமானதாயிற்றே.

வெற்றிக் களிப்புடன் வீர அவுங்சானும், அவருடைய மந்திரிசபையினரும், கலந்து பேசிக்கொண்டிருக்கும்போது, கொலைபாதகர்கள், குண்டு மழைபொழிந்து, பர்மாவின் ஒப்பற்ற வீரனைக் கொன்றுவிட்டனர். பர்மிய படுகொலைக்குச் சமமான கோர சம்பவம், உலகிலே வேறு எங்குமே நடைபெற்ற தில்லை. கொடியோனான ஜாரும் இந்த முறையிலே படுகொலை செய்ததில்லை. வீர அவுங்சானின் சோக முடிவுக்காக, கண்ணீர் சிந்தாதர் இல்லை.

மூன்று மக்கள் - இவர்களை வளர்ப்பதும், துக்கத்தைத் தாங்கிக் கொள்வதும்தான் இனி எனக்கு வாழ்க்கையிலே

உள்ள வேலை என்று அவுங்சானின் துணைவியார் கூறினாராம். உலகமே இருண்டுவிட்டது என்னைப் பொறுத்தவரையில் என்று கூறினாராம். ஆமாம்! பர்மாவின் விடுதலைக்குத் தன்னையே அர்ப்பணித்த அவுங்சானுக்குத் துரோகம் செய்த கூட்டத்தை, அவுங்சானின் கட்சியினரும், சட்டமும் ஒழித்தே தீரும் - பர்மிய வரலாற்று ஏடுகளிலே, அவுங்சான், ஒரு சின்னமாக்கப்படுவார் - உலக ஏட்டிலேயும் கூடத்தான் - ஆனால், என்ன செய்தாலும், சிறைக்கஞ்சாமல், படையை நடத்திச் சென்று பர்மிய விடுதலையைச் சில ஆண்டுகளிலே பெற்றுத் தந்த தன் கணவனின், முடிவு பற்றி எண்ணும்போது, அவுங்சானின் துணைவியாரின் கண்கள் குளமாகுமே! துடைக்க முடியாத சோகத்தைத் தாங்கும் உருவமாயினர் அந்த அம்மை.

*(திராவிட நாடு - 27-7-47)*

# 43. இழந்த இன்பம்!

பத்தாண்டுகளுக்கு முன்பு என்னைப் பார்த்திருந்தால் தானே தெரியும்! அந்த பளபளப்பும், வனப்பும், வசீகரமும், இப்போது மங்கிவிட்டது. இன்று நடையிலே தளர்வு! தாடையிலே சுருக்கம்! இடையிலே பிடிப்பு! உடையிலே அலட்சியம்! சடையிலே நரை! என்றாகிவிட்டது, என முன்னாள் பருவ மங்கையாக இருந்து இன்று மாதாகி, வயது முதிர்ந்த அம்மை கூற, இன்று இளமங்கையாக,இன்பவாடையை எங்கும் பரப்பும் இயந்திரமாக, பிடியிடையும், குழல் மொழியும், பெடைநடையும் கொண்டவள், நாளை நமக்கும் இக்கதிதானோ,

என்று ஏங்க அது கண்டு நகைத்துக் கொண்டே உலகு நகர்ந்து கொண்டே போகிறது.

நேற்று - இன்று - நாளை! ஆம், இந்த மும்மொழி, முப்பருவத்தை, மூன்று நிலையை, மூன்று முக்கிய சகாப்தத்தைக் காட்டுகின்றன.

நேற்று அலர்ந்திருந்த ரோஜா, இன்று, கூந்தலை விட்டுக் கீழே இறங்கி குப்பைமேடு போகிறது. இன்று "மொக்காக" இருப்பது, நாளை மலரும்; மணம் வீசும், மனதுக்கு உல்லாசத்தைத் தரும்! இது பருவ மாற்றத்தினால் நிலையுங் கணமும் மாறும் இயற்கையைக் குறிப்பதாகும்.

**நாட்டு நிலையை மாற்ற முடியும்**

ஆனால் இயற்கையின் போக்கை செயற்கை முறைகொண்டு செப்பனிட்டு, வர இருக்கும் மாற்றத்தைத் தடுக்க மக்கள் முற்படுகின்றனர். பத்தாறு ஆண்டு சென்ற பழந்தோழர் மாளவியா தமது வாலிபப் பருவத்தை மீண்டும் பெறப் பரமசாதுவின் அருள் தேடினாரன்றோ!

நேற்று முற்றிய கதிருடன் இருந்த நிலம் இன்று அறுவடை காரணமாக வெறும் வெளியாகி விடுகிறது. ஆனால் நாளை மறுநாள், சின்னாள் பலநாள் சென்றேனும் நிலமங்கை பச்சைப் பட்டாடை அணிந்துகொண்டு பார்ப்ப வரை உற்சாகப்படுத்துகிறாள். காரணம் மனிதனின் உழைப்பு!

மக்கள் பருவத்தை மருந்து வகைகளாலும், பண்டங்களின் இயல்பை மக்கள் தம் உழைப்பாலும், மாற்றுவது

சரிவர, குறைவர நடப்பினும் நடக்காது போயினும், மக்கள் தம் அறிவினால், தம் நாட்டு நிலைமையை மட்டும் நிச்சயம் மாற்ற முடியும். நேற்று இருந்தது, இன்று இருப்பது, இந்நிலை என்பதை ஆராய்ந்தறிந்து, குறை களைந்து குணங்கொண்டு நாட்டு நடப்பை அமைப்பின், நாளை நாட்டு நிலையை நல்லதாக்க முடியும்.

நேற்றுக் குளிர், இன்று காய்ச்சல். உடனே மருந்து உட்கொள்ளாது விட்டால் - மருந்து உட்கொள்ளாததுடன் குளிர் இல்லை. காய்ச்சல் இல்லை, எல்லாம் மனப்பிராந்தி என யாரோ கூறக்கேட்டு - குளிர் நீர் அருந்திக் கூத்தாடித் திரிந்தால் ஜன்னி கண்டு இறப்பதும் இயல்பன்றோ! அஃதே போலத்தான் இன்று பலர் காங்கிரசில் உள்ளனர்.

நேற்று நாட்டில் அசோகரின் சாம்ராஜ்யமும் பிந்துசாரரின் பிரபல ஆட்சியும், கனிஷ்கரின் கவர்ச்சி தரும் கோலாட்சியும், அக்பர் ஆட்சியும், சிவாஜியின் சிறப்பும், சேர, சோழ, பாண்டியர் செங்கோலும் இருந்தன. ஆனால் இந்த 'நேற்றைய நாட்களில்' ஒரு வகுப்பு முடியரசர், கொடையரசர், இசையரசர், யாருக்கும் மேலோராய் இருந்தனர். அழகிய தன்மையினர் எனக்கூறிக் கொண்டனர். ஆண்டவனின் அருள் பெற்றோர் எனச் செப்பினர்; மற்றையோரை அடக்கினர், மறையோர் எனக் கூறினர். பிறர் பொருள் எமது என்று புகன்றனர். இது "நேற்று" இருந்தது என்பதை எந்தச் சரித்திராசிரியரும் மறைக்க முடியாது. எந்த அரசியல்வாதியும், அந்தக் கால முதற்கொண்டு பார்ப்பன ஆதிக்கம் பல்வேறு துறைகளிலும் இருந்துவந்ததையோ,

அதன் காரணமாக நாட்டுப்பழம் பெருங்குடி மக்கள் அடிமை களானதையோ, இந்த அடிமைத் தனத்தைச் சகித்துக் கொண்டு இருந்ததால்தான், நாட்டு மக்களிடை சுயமரியாதையற்றுப் போயிற்று என்பதையோ, சுயமரியாதையை இழந்ததாலேயே சுயாட்சி செத்தது என்பதையோ, ஆதாரங்காட்டி, இல்லை எனக்கூற முடியாது. கூறத்துணிபவர் உண்டேல், வாரும் மன்ற மேறுவோம் என அறைகூவி அழைக்கின்றோம்.

நேற்று நாம் நாடாண்டவர்களை எல்லாம், காட்டைக் காட்டி ஏய்த்தோம், இன்று நம்மை இன்னவர் எனக் கண்டு கொள்ளும்படி வெள்ளையன் செய்துவிட்டான். எனவே, அவனை விரட்டிவிட்டால் நாளை நாம் மீண்டும் பூசுரராக வாழலாம் என்பதுதான் காங்கிரசைக் கையாயுதமாகவும், காந்தியாரைக் கையாளாகவும் கொண்டுள்ள பார்ப்பனீயத்தின் நினைப்பு.

நேற்று நாம் பார்ப்பனீயத்தினிடம் சிக்கி, பலப்பல தொல்லைகள் பெற்றோம், இன்றுதான் சற்று விழிப்படைந் துள்ளோம், நாளை நம் நாட்டை நாமே ஆளவும் நம்மைப் பார்ப்பனீயம் மீண்டும் பற்றாதிருக்கவும் இன்றே பாதுகாப்புத் தேடிக் கொள்வோம் என்று நாம் கூறுகிறோம்.

நேற்று இருந்ததுபோலவே பல ஜாதிப் பிரிவினை நாளை சுயராஜ்யமடைந்த இந்தியாவிலும் இருக்கட்டும் என அவர்கள் கூறுகின்றனர். அதற்கேற்றபடியே காரியங்கள் செய்கின்றனர். ஒரு தோட்டத்தில் பல புஷ்பங்கள் இருப்பது அழகல்லவா என அதற்கு ஆச்சாரியார் குட்டிக் கதை கூறுகிறார்.

நாம் நேற்று இருந்த ஜாதிபேதக் கொடுமைகளை நாளை இருத்தல் ஆகாது. இன்றே அதைப் போக்கும் முறைகள் தேவை எனக் கூறுகிறோம்.

இந்த விஷயத்தில் நமது கொள்கையை ஆதரிப்பவரின் தொகை நாளுக்குநாள் பெருகி வருகிறது.

கண்டவர் வியக்கும் விதமாகக் கட்டமைந்த உடல் படைத்தவன் காலத்தின் கோளாறினால், தன் பலமிழந்து தளர்ந்து போனால் முன்னாளில் தனக்கிருந்த பலத்தை எண்ணி ஏங்கிப் பெருமூச்சு விடுதல் இயற்கை.

கைநிறையப் பொருளும், பொருள் பெறும் வகையும் பெற்று வாழ்ந்து வந்தவன், திடீரெனத் தன்பொருளைப் பிறர் பறித்துக் கொண்டு போக, வறுமையில் சிக்கி வாடும்போது முன்னாளில் தான் இருந்த நிலையை எண்ணி வருந்தாது இரான்.

கருத்துக்கிசைந்த கட்டழகனைப் பெற முடியாது போய், சமுதாயக் கட்டுப்பாட்டின் காரணமாக யாருக்கோ வாழ்க்கைப்பட்ட, வனிதை சாலையிலும் சோலையிலும், சாயங்கால வேளையிலும், தன் காதலனைக் கண்டு களித்த காலத்தை நினைத்தும், எடுத்ததற்கெல்லாம் இடியும் அடியும், உதையும் தரும் முரடனுக்கு பெண்டானோமே என எண்ணியும் ஏங்குவது உண்டல்லவா!

இழந்த இன்பத்தை எண்ணிடும்போது, உள்ளம் வேதனைப்படும். இன்பத்தை இழந்ததுடன் துன்பத்திலும் சிக்கிவிட்டால் அந்த வேதனை பன்மடங்கு அதிகமாவதுடன்,

இழந்த இன்பத்தை மீண்டும் எப்படியேனும் பெறவேண்டு மென்ற எண்ணம் வலுத்துப் பெருத்து, வீறிட்டு எழும்.

இதுவே இன்றைய தமிழர்நிலை.

தமிழ்நாடு என்றுமே தலைவணங்கி வாழ்ந்ததில்லையே! தனிநாடாக, திருநாடாகவன்றோ தழைத்து வந்தது. ஆரியமன்றோ அதனை அடுத்துக் கெடுத்தது.

அசோகர், அக்பர், ஆகிய மன்னாதி மன்னர்கள் காலத்திலும், மண்டியிட்டதில்லை தமிழ்நாடு. அசோகரின் கல்வெட்டு, கலிங்கத்தை, கடும்போரில் அவர் வென்றதைக் காட்டுகிறது. அசோகரின் படைபலம் கலிங்கத்துப்போரில் நாடு, இரத்தக்காடாகப் போரிட்ட வீரம் ஆகியவற்றைக் காட்டுகிறது. ஆனால், மற்றுமென்ன இதில் விளக்கமாகிறது? இவ்வளவு கடுமையாகப் போரிட்டு வெற்றி பெறக்கூடிய அசோகர் திராவிட நாட்டை வெல்ல முடியவில்லை என்ற உண்மையை எடுத்துக் காட்டுகிறது.

**தமிழ்நாடு தனித்தே இருந்தது**

சேர, சோழ, பாண்டியர்கள் மண்டலாதிபதிகளாக வாழ்ந்தனர் அக்காலத்திலும், அசோகர் காலத்தில் இவர்கள் அரசுரிமை இழக்காது தமிழ்நாட்டைத் தனிநாடாக ஆண்டு வந்தனர் எனில், இது தமிழரின் தனிச்சிறப்பைக் காட்டவில்லையோ எனக் கேட்கிறேம்.

ஐம்பத்து ஆறு மன்னர்கள், ஐம்பத்தாறு தனித்தனி நாடுகளை ஆண்டு வந்த வரலாற்றைக் கூறும் சமஸ்கிருத

நூல்கள் காலமுதற்கொண்டு, தமிழ்நாடு தனித்துத்தான் வாழ்ந்து வந்தது.

கிறிஸ்து பிறப்பதற்கு 6-நூற்றாண்டுகளுக்கு முன்னர் "தமிழர் என்ற ஆரியரல்லாதார் தனி நாகரீகம், தனி மொழி, தனி வரலாறுடன் தனி நேஷனாக வாழ்ந்து வந்தனர்" என்று ஆசிரியர் பார்கீத்தர் கூறியுள்ளார்.

கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு, "திராவிட நாட்டு மன்னர்கள் தங்கக்கொப்பரையில் சந்தனத் தைலத்தை ஊற்றி வைத்துக் கொண்டு வாழ்ந்தனர்" என்று கூறப்படுகிறது.

மூன்றாவது நூற்றாண்டில் திராவிட நாட்டின் அமைப்பு பற்றிய வரலாற்றை அக்காலத்திலிருந்த வரலாற்று நூல்களில் வரைந்திருக்கின்றனர்.

திருநெல்வேலிக்குத் தென்கிழக்கே 12-வது மைலில் உள்ள, ஆதிச்சநல்லூரில் ஆராய்ச்சியாளர்கள், கல்வெட்டுக் களையும், திராவிடச் சின்னங்களையும் கண்டுபிடித்து எடுத்தனர். இதேவிதமான திராவிடச் சிறப்புச் சின்னங்கள், பஞ்சாப்பில், மாண்ட்காரி ஜில்லாவிலுள்ள ஹரப்பா என்ற இடத்திலும், சிந்து மாகாணத்திலும், லார்க்கானா ஜில்லாவிலுள்ள, மகன்ஜதாரோவிலும் கண்டு எடுக்கப்பட்டன.

**திராவிட நாகரிகத்தின் சிறப்பு**

எனவே ஒரு காலத்தில் திராவிட நாகரிகம், திராவிட ஆட்சி, நெல்லையில் தொடங்கி நெடுக நெடுகச் சென்று,

சிந்து, பஞ்சாப் வரையிலும் அதற்கு அப்புறமும் சென்றது என்று விளங்குகிறது.

பதஞ்சலி எழுதிய புத்தகம், அசோகர் கல்வெட்டுகள், மெகஸ்தனிஸ் எழுதிய புத்தகங்கள், சிலோன் நாட்டுச் சரித சம்பந்தமான புத்தகங்களான மகாவம்சம், தீபவம்சம் ஆகிய எத்தனையோ சான்றுகள், திராவிடச் சிறப்பை விளக்குகின்றன.

அதனால்தான் சர்.ஜான்ஈவான்ஸ் என்பார் "மனித சமுதாயத்திற்கே நாகரிகத் தொட்டிலாகத் திராவிட நாடு இருந்தது" - அதாவது திராவிட நாட்டில்தான் நாகரிகம் முதன்முதலாகத் தோன்றிற்று என்று கூறியுள்ளார்.

திராவிட நாட்டின் இந்தப் பண்புகள் ஏன் மறைக்கப் பட்டது? ஆரிய சூழ்ச்சியால்தான்!

ஆனால் சரித்திரத்தைத் துருவிப் பார்த்தால் ஆரியத்தின் அலங்கோலமும் திராவிடத்தின் தனிச்சிறப்பும் திராவிடத்தை அடக்க அழிக்க, ஆரியர்செய்த சூழ்ச்சியும் விளங்காமற் போகாது.

மஹா அலெக்சாண்டர் இந்தியாமீது படை எடுத்தார் எனச் சரித்திரம் கூறுகிறது. ஆனால் திராவிடம் தலைநிமிர்ந்து வாழ்ந்து வந்தது அந்தக் காலத்திலும்.

அதற்குப்பிறகு ஏற்பட்ட எந்த சாம்ராஜ்யத்திலும் திராவிடநாடு சேர்ந்திருக்கவில்லை. தனித்தே இருந்தது. எந்த வல்லரசும் திராவிடநாட்டை வென்றதாகச் சரிதம் கூறவில்லை.

இந்தியாவிலேயே இணையற்ற மன்னர்கள் என்று அட்டவணை போடுவதானால், அதில் அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர், சந்திரகுப்த மௌரியர், சமுத்திர குப்தர், அக்பர் என்ற பெயர்கள் பொறிக்கப்படும். இவர்கள், சாம்ராஜ்யங்களை ஏற்படுத்தி, கீர்த்தியுடன் வாழ்ந்தவர்கள். ஆனால் இத்தனை மன்னாதிமன்னர்கள் இருந்தபோதும், திராவிடநாட்டை அவர்கள் ஆளவில்லை. திராவிடநாடு திராவிடருக்கேதான் இருந்தது.

இடிந்த கோட்டைகள், விந்தியமலைக்கு மேலேயே தவிரக் கீழே அல்ல! தோற்ற மன்னர்கள், நர்மதை நதிக்கரைக்கு அப்புறமே தவிர இப்புறமல்ல.

*(திராவிட நாடு - 10-8-47)*

# 44. சிறந்த நண்பர் – சிதைந்த வாழ்வு!

ஆதிக்கம் செலுத்த விரும்பும் ஆசிரியர்களுக்கு ஒரு புயல்! மாணவர்களுக்கு ஓர் தென்றல்! பழகும்போதே, இனி என்றும் இவரை மறத்தல் முடியாத காரியம் என்ற எண்ணத்தை மனதிலே பதியச் செய்துவிடும், பேச்சு!

நான் ஓர் புரட்சிச் சின்னம்! எங்கோ இருக்கவேண்டிய என்னை இந்தக் காட்டுக்குள் கொண்டு வந்து போட்டுவிட்டனர் – நானோ, என்று இந்தக் கூண்டை விட்டு வெளி ஏறுவது என்றுதுடிதுடித்தபடியே இருக்கிறேன் - என்று கூறும் விதமாக

அமைந்த பார்வை. கருப்பு நிறம்! ஒழுங்கு படுத்தப்படாத, ஆனால் மேனாட்டு முறையான உடை!

உள்ளமெல்லாம், பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றத்தைக் குறித்த அக்கரை! இடி முழக்கம் போன்ற சிரிப்பு - கண்டிக்கத் தொடங்கினால், காரம்!

வேடிக்கையில் இறங்கினால், சிறு பிள்ளையின் நிலை!

இப்படி, இருபதாண்டுகள், எண்ணற்ற வாலிபர்களின் கண் களுக்குக் காட்சியாய், தோழனாய், இருந்து வந்த ஆசிரியர் வரதராஜன், காலமானார் என்ற செய்தி, அவருடன் பழகும் வாய்ப்புப் பெற்றிருந்த யாருக்கும், திடுக்கிடக்கூடிய செய்தி யாகவே இருந்திருக்கும்.

பிரம்பும் கையுமாக இருந்த ஆசிரியர்களைக் கண்டு பழகிய, என் கண்களுக்கு, ஆசிரியர் வரதராஜனின், கரம், என் முதுகைத் தட்டிக் கொடுத்தபடி, பச்சையப்பன் பழைய கல்லூரி மாடித் தாழ்வாரத்திலே, அன்றோர் நாள் உலவிய காட்சி, புதுமையாக இருந்தது. கல்லூரியிலே நான் நுழைந்த நாட்கள் ஆசிரியர்களின் "தோழமை" மாணவர்களுக்குக் கிடைக்கக் கூடும் என்ற எண்ணமே எழமுடியாத நாட்கள்.

வரதராஜன் - அப்போது ஆசிரியராகவுமிருந்தார் - மாணவராகவுமிருந்தார். பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியர் - சென்னை சட்டக் கல்லூரியிலே மாணவர்!

இந்த இருநிலை மட்டுமல்ல. சென்னை நகர பார்ப்பன ரல்லாத இளைஞர்களுக்குத் தலைவர்! சர். ஏ. இராமசாமி

முதலியாரின், எலக்ஷன் இலாக்காவின் தலைவர்! இது மட்டுமல்ல, தெருக்கோடிக் கூச்சலிடுவோன், தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கல்வீசுவோன், இருட்டில் நின்று அடித்துவிட்டு ஓடுபவன் போன்ற இந்த ரகங்களுக்கு, இவர் ஓர் அபாய அறிகுறி.

நூறு, இருநூறு, ஐந்நூறு என்ற அளவில், சைகிள்கள் கிளம்பும், (Vote for Justice) என்ற முழக்கத்துடன். ஒழுங்கான உடையுடன், மாணவர்கள்அவ்விதம் முழக்கம் செய்வர். யார் அவர்கள்? எல்லாம், வரதராஜனின் ஆட்கள் (?) அல்ல, நண்பர்கள்!

இத்தனை காரியங்களையும் கவனித்துக் கொண்டு, கல்லூரியிலும், சில பேராசிரியர்களால் அடக்க முடியாத வகுப்புகளிலும், அவர் அநாயாசமாக ஆட்சி செய்வார்.

அவருடைய 'வகுப்பு' நடைபெறும்போது, மாணவர் முகமெல்லாம் மலர்ந்து இருக்கும் - அவருடைய அரிய இலக்கியச் செறிவு கண்டோ, பாட நுட்ப விளக்கத்தைக் கேட்டோ அல்ல, அவருடைய உலக விஷய விளக்கம் கேட்டு.

இளைஞர் என்ற நிலையிலேயே இத்தனைப் பொறுப்பு களைத் தாங்கியதால், அவருடைய வாழ்வு வளைந்தே விட்டது. அதை அவர் உணருவதற்குள், அந்த வளைவு நிமிர்த்த முடியாத நிலை அடைந்துவிட்டது.

வரதராஜன் - கார்ப்பரேஷன் செல்வார் - சட்டசபை செல்வார் - மந்திரியுமாகக் கூடும் என்றுதான் அந்த நாட்

களிலே பலரும் பேசினர். ஆனால் அவர் கடைசிவரை, அந்தக் கல்லூரியிலேயேதான் அடைபட்டுப் போனார். பயன் படுத்தாத காரணத்தால் பாழான பண்டம் போலாகிவிட்டது அவருடைய வாழ்வு - அவருடைய சொந்த நன்மையைப் பொறுத்தமட்டில். ஆனால், பார்ப்பனரல்லாதார் இயக்கமோ, அவரால் பெரும் பயன் பெற்றது.

வகுப்பிலே அமர்ந்திருக்கும் போதே, வலைவீசுவார் - யாரார், இயக்கத்துக்குப் பயன்படக்கூடியவர்கள் என்று கண்டறிந்து, பத்து, இருபது நாட்களில், அந்த மாணவன், வரதராஜனின் கோஷ்டியிலே சேர்ந்தே விடுவான்.

விரும்பத்தகாத சூழ்நிலை மிகுந்திருந்த ஓர் தெரு - அங்கு ஒரு குதிரைக் கொட்டில் - அதன் மேல்மாடியிலே, சிதறிய புத்தகங்கள், சில செல்லரித்துமிருக்கும், கண்டால் தூக்கிக் குப்பையில் எறியலாம் என்று தோன்றக்கூடிய படுக்கை, தினசரிக் குவியல். ஈமொய்த்துக் கொண்டிருக்கும் தின்பண்டமிச்சம், இவைகளுக்கிடையே அந்தக் கருப்பு வீரர் அவரைச் சூழ்ந்தபடி மாணவர்கள் - அவர்களிலே, நான் முன்னணியில். திட்டங்களோ, மகாப்பிரமாதமாக இருக்கும்! அடிக்கொரு தடவை, தேநீர் - சிகரட் புகை, அந்த அறையின் வாடையை அதிகப்படுத்தும்! நகரைப் பொறுத்த பல முக்கிய மான அரசியல் காரியங்கள், இந்தச் சிறிய அறையிலேதான் முடிவு செய்யப்படும். பிறகு அவை, கார்ப்பரேஷனில், சட்ட சபையிலேயும், நடமாடியதுண்டு.

என், பொது வாழ்க்கைக்குப் போதகாசிரியராக அமைந்த இரட்டையரில், வரதராஜனார் ஒருவர், மற்றவர்

திருவேங்கட சாமி. இன்று, அந்தோ, இருவரும் இல்லை. இருவரும் எய்தவேண்டிய நிலையையும் எய்தா முன்பே, இறந்துபட்டனர்.

ஆசிரியர் வரதராஜன், சில ஆண்டுகளாக, ஓரளவு சலிப்பு மனப்பான்மையையும் கொண்டு விட்டார். அதற்குக் காரணம், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் பெருந்தலைவர்களில் சிலர், செய்த சுயநலமேயாகும். நாளைக்கொரு முறையேனும் 'நண்பர் வரதராஜனைக்' காணாவிட்டால் களிப்பு ஏற்படுவதில்லை என்று கூறி வந்த சாதாரண இராமசாமி, சர். இராமசாமியான பிறகு, இன்று நேரமில்லை, நாளை வரச்சொல், என்று பேசுவது, வரதராஜனின் செவியிலே வீழ்ந்ததென்றால், மனவேதனையும் சலிப்பும் வரத்தானே செய்யும், இந்த சலிப்பின் பிடியிலிருந்தும் சிற்சில சமயங்களிலே விடுபட்டு, சென்னையில் சில பல சமயங்களில், நமது இயக்கக் கூட்டங் களிலே கலந்து கொள்ளவும் செய்தார் - ஆனால் அது அந்தப் பழைய வரதராஜன் அல்ல, என்பது அவருடன் அந்த நாட்களிலே பழகிய என்போன்றவர்களுக்கு நன்கு தெரியும். கடைசி வரையில் அவர், எதையோ தொலைத்துவிட்டுத் தேடித் தேடி அலுத்தவர் போன்றே இருந்து வந்தார்.

சொந்த வாழ்க்கை அவருக்கு மிக மிகச் சுவையற்றதாக இருந்தது.

“மணி என்ன சார் இப்போது? மூன்று ஆகப்போகுது சார்! அந்த மடைப்பயல் இன்னும் வரவில்லை சார்! சோறு இல்லாமல் என்ன சார் செய்வது!” என்று கூவுவார்.

பிறகு சோறு வரும் தட்டுகளிலே உள்ள பண்டத்தை, வெறித்தபடி பார்ப்பார் - ஒரு பெருஞ்கூச்சலிடுவார், சோறு கொண்டு வந்த அவர் தம்பி, பயந்து போகும்படி.

"நாய் தின்னுமா சார், இந்தச் சோறு - நாய்தின்னுமா? பணம் மட்டும் பிடுங்கிக் கொள்கிறார்கள் சார்! டே! உன்னைக் கொன்றுபோட்டுவிட்டுத்தான், பிறகு சோறுகூடத் தின்பேன்" என்று கூச்சலிட்டுக் கொண்டே (டாக்டர் ஜான்சன் போல) சாப்பிடுவார் - சாப்பிடச் சொல்வார் - சாயா என்று கூவுவார் - அதையும் பருகுவார் - வியர்வை பொழியும் - அதைத்துடைக்க, மேல்துண்டு இராது - கிடைக்கும்துண்டு, கரிக்கரை நிரம்பியதாக இருக்கும்.

இவ்வளவு சுவையற்ற சொந்த வாழ்வுதான் இவருக்கு. சில ஆண்டுகளுக்கு முன்பு சற்றுச் சூழ்நிலையைச் சுகமுள்ள தாக்கிக் கொள்ள முயன்றார். கல்லூரியை அடுத்த சிறிய தோட்ட வீட்டில் குடி இருந்து கொண்டு வந்தார்.

"சார்! ஒரு பத்து இருபதாயிரம் ரூபாய் சேரட்டும் என்னிடம், பிறகு இந்த வேலையை உதறித்தள்ளிவிட்டு, என்ன செய்கிறேன் பாருங்கள்" என்று கூவுவார். அவருக்கு அந்த எண்ணம் தோன்றியதும் ஏற்படும் கோபம், பிறகு, புகைந்தே போகும். இறக்கும் தருவாயில், தம்மிடமிருந்த சிறு தொகையைக் கல்விக்காகவே செலவிடுதல் வேண்டுமென்று கூறியதாக அறிந்து மகிழ்கிறோம். சிறந்த நண்பர் - சிதைந்த வாழ்வு. அவருடைய சீரிய முயற்சியினால், என் போல் பலர், பொது வாழ்வுக்கு வந்தனர். அவருடைய தொண்டு, பார்ப்பன ரல்லாதார் இயக்கத்துக்கு மிகமிகப் பயன்பட்டது - அவர்

வாழ்வோ, பட்டுவிட்டது. நாற்பது எட்டாம் வயதில் ஆசிரியர் வரதராஜன், இந்தத் திங்கள் 14-ந் தேதி காலமானார். பலன்பெறாது பாடுபட்டுப் பலருக்கு வாழ்வளித்த வீரன் மறைந்தார். அவர் வளர்த்த பயிர் செழிப்பாக இருக்கிறது - பலர் அறியவும் மாட்டார்கள் அந்த நாட்களிலே அவர் ஆற்றிய அரிய தொண்டினை. அவருடைய பிரிவால், வாடும், என்போன்ற பல நண்பர்கள், மாதக்கணக்கிலே பேசிக் கொண்டே இருக்கலாம், அவருடைய பல்வேறு செயல்களைப் பற்றி. ஆனால்...... அவருடைய குடும்பம்! அவர்களின் வேதனையை என்போல் பலர் பங்கிட்டுக் கொள்வதன் மூலமாக மட்டுமே, குறைத்திட முடியும்.

*(திராவிட நாடு - 28-9-47)*

# 45. அனுதாபம்!

சுயமரியாதைப் பற்று மிகக் கொண்டு, தன்னலமற்றுப் பணிபுரிந்து, இன்சொலால் எவரையும் தன் வயப்படுத்தும் இயல்புடன் விளங்கிய, காஞ்சிபுரம் தோழர் எம். ஏழுமலை என்பவர் தமது இள வயதில், சென்ற கிழமை காலமானார் எனும் மனம் நோகும் செய்தியைக் கேட்டு, வருந்துகிறோம். வைதீகப் பற்றுடைய தகப்பனார் ஒருபுறம், தீவிர நோக்கமுடைய நண்பர்கள் மற்றோர்புறம், இடையே அந்த நண்பர் நின்று, மிகமிகப் பக்குவமாகப் பணிபுரிந்து வந்தார். எதனையும் முறைப்படி செய்ய வேண்டுமென்பதிலே மிகுந்த அக்கரை கொண்டவர். நல்ல தமிழ்ப்பற்று, அப்பழுக்கற்ற

நடவடிக்கை கொண்டவர். அத்தகைய தோழரின் மறைவு. காஞ்சிபுரம் திராவிட இயக்கத்தினருக்கு மிகப் பெரு நஷ்டம். அவருடைய பெற்றோருக்கும், துணைவியாருக்கும், நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*(திராவிட நாடு - 16-11-47)*

# 46. வெந்த புண்ணில்.......!

ஆம், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுதல் கூடாது. இம்முறையால் மனக்கசப்புப் பெருகுமேயன்றிக் குறைவுபடாது. ஏற்கனவே இருந்த உறவும் கெடும். அந்தஸ்த்தை மட்டும் அளிக்கும் ஆற்றல் உடையது அதிகாரம் எனும் தவறான எண்ணம் கொள்ளுதல் கூடாது. பிரத்தியேகமான சில பொறுப்புகளையும் அதிகாரம், உடனடியாக உண்டாக்குகிறது. இதனை நன்கு உணர்ந்து, பெற்றுள்ள அதிகாரத்தை, மக்களுக்கு நன்மைக்கான காரியத்தில் காட்டுவதன் மூலம்தான், அதனைச் சில நாளுக்காவது தம்மிடமே இருக்கப் பார்த்துக் கொள்ள முடியும். மக்களின் நல்லாசியையும் ஆதரவையும் பெற்று, ஆட்சிபீடத்தமர்ந்ததும், பெற்ற அதிகாரத்தைக் கண்டு நிலைதடுமாறி, மக்களை மதிக்காது மாநிலம் ஆள மார்க்கம் தேடினால், அதிகாரத்தமர்த்தி மனம் மகிழ - கண்குளிரக் கண்ட அதே மக்கள், தாங்கள் பெற்ற ஏமாற்றத்தையும் எரிச்சலையும் என்றாவது ஓர்நாள் செயலில் காட்டியே

தீருவர். அதிகாரமும் வேறு சிலரின் கைமாறும். மக்களை மதிக்காத ஆட்சி நீடித்து நிற்பது முடியாத காரியம். இப்பொது விதியை நாடாள வருவோர் யாவராயினும் கருத்துள் கொள்ள வேண்டியது, அவர்களுடைய முதற் கடமையாகும்.

இதனைக் காங்கிரஸ் மந்திரிகள் மறந்து போய்விட்டார் களென்றே எண்ண வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் எடுத்துக் கொள்ளும் சில பல நடவடிக்கைகளில் இம்மறதி வெளிப்படையாகத் தெரிகிறது. பிரசார பலமும், படை பலமும் போதிய அளவு இருக்கிறது எனும் நம்பிக்கை யினாலேயே, இம்மறதி நோய் அவர்களை நன்கு பற்றிக் கொண்டிருக்கிறது போலும்!

முதலாளிகள் - பண மூட்டைகள் விஷயத்தில் அவர்கள் காட்டும் பரிவிலும் பாசத்திலும், ஒரு சிறு அளவிலாவது ஏழைத் தொழிலாளர்பால் காட்டுவது அதிக நன்மைதரக் கூடியதாகும். சென்ற மார்ச் 11-ந்தேதி முதல் ஜூன் 19-ந் தேதி முடிய சென்னை பி அண்டு சி மில் தொழிலாளர்கள் செய்த வேலை நிறுத்தத்தை அவர்கள் இதற்குள் மறந்திருத்தல் கூடாது. பதினான்காயிரம் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தது விளையாட்டிற்காக அல்ல. உற்பத்தியைக் குறைக்க வேண்டும் எனும் தீய நோக்கத்திற்காகவும் அல்ல. வாழ்வில் அவர்களுக்குள்ள வறுமைப் பிணியைப் போக்கிக் கொள்ள வேண்டிய, வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். ஆசை வார்த்தை கூறியும், அச்சுறுத்தியும் அவர்களை, வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு, அரசாங்கம் கட்டளை பிறப்பித்தது. குறைகள் கவனிக்கப்படுமென வாக்குறுதி

அளிக்கப்பட்டது. தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைக்க முறையற்ற முறையிலும் முயற்சிக்கப்பட்டது. எப்படியோ வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுத் தொழிலாளரும் வேலைக்குத் திரும்பினர். அவர்கள் விரும்பினதற்கு விரோதமாக, அவர்கள் குறைகளைக் கேட்டுத் தீர்ப்பளிக்கக் கட்டாயப் பஞ்சாயத்து முறை கையாளப்பட்டது. இதனால் தொழிலாளர் அடைந்த நன்மை பூஜ்யம் என்றுதான் சொல்லவேண்டும். மத்தியஸ்தராகவே நியமிக்கப்பட்ட நீதிபதி லட்சுமண ராவ், கேளாக்காதராகவே இருந்துவிட்டார். தொழிலாளர் கோரிய கோரிக்கைகள் அனைத்திற்கும் 'இல்லை' யெனும் ஒரே தீர்ப்பை வழங்கி இருக்கிறார். இதனை ஏற்றுக் கொண்டு, இனியும் ஓராண்டிற்கு இத்தீர்ப்பைச் செயலாற்றத் தொழிலாளர்களுக்குக் கட்டளைப் பிறப்பித்துவிட்டது அரசாங்கமும். "நம்மவர்கள் நாடாளுகிறார்கள். அது ஒன்றே போதும் நமது பசியைப் போக்க" எனத் தொழிலாளர்கள் முடிவுக்கு வந்து விடுவார்கள் எனும் உயர்ந்த நோக்கத்தோடு ஆளுவோர் இத்தீர்ப்பை ஏற்றுக் கொண்டு கட்டளைப் பிறப்பித்து விட்டனர் போலும்!

கோடிக்கணக்காகச் சம்பாதித்த வெள்ளை முதலாளியிடம் அதிகாரத்தைக் காட்டுதல் முறையாக இருக்கத் தங்களுக்கு அதிகாரத்தைத் தந்த அதே மக்கள் வயிற்றில் அடிக்கவா, அதிகாரத்தைக் காட்ட வேண்டும்?

அரசாங்கத்தின் இத்தவறான போக்கால், உற்பத்தி பெருகப் போவதில்லை. அதற்கான ஆர்வத்தைத் தொழிலாளர் களிடம் எதிர்பார்த்தாலும் ஒழுங்கானதாகாது. வாழ்க்கைச்

செலவும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. அந்த அளவிற்குத் தொழிலாளர்கள் வருமானம் உயரவில்லை. இந்நிலையில் அரசாங்கமும். அவர்களைத் திருப்தி படுத்துவதைவிட்டு, அவர்கள் கோரிக்கைகளை அசட்டை செய்வது விரும்பக்கூடியதாகாது.

வேலைநிறுத்தத்திற்கு முன்னர் பி அண்டு சி மில் தொழிலாளர்களுக்கு எத்தகைய குறைகள் இருந்தனவோ - எந்தத் தேவையின் காரணமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டதோ - அவை இன்றும் அப்படியே இருந்து கொண்டேதான் இருக்கின்றன. அவர்கள் புண்பட்ட நெஞ்சில், அரசாங்கத்தின் கட்டளை வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் வேதனையைத்தான் உண்டாக்கும். மேலும் அவர்களின் மனக்கசப்பு ஆபத்தான தன்மையை அடைவதற்குள், அரசாங்கம் இட்ட கட்டளையை மாற்றிக் கொண்டு, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதே நன்மை பயக்கக் கூடியதாகும். அதிகாரத்திலுள்ளோர் செவிபுகுமா இது?

*(திராவிட நாடு - 30-11-47)*

# 47. துக்கவாரம்

“ஆனந்தசுதந்திரம், அடைந்துவிட்டோம் - என்றே
ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே!”

ஓட்டல் தோறும், வீடுதோறும், பள்ளிதோறும், காலை மாலை இரவு எந்த நேரமும், கீதம் கேட்கிறது.

சென்னையிலே, தஞ்சை, திருச்சி, மற்றும் பல ஊர்களிலே, துக்கவாரம் நடைபெற்றது!

துக்கவாரம், மேலும் நீடித்து நடத்தவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

யாருக்கு, என்ன, துக்கம், என்று அறியக்கூடச் சர்க்காருக்கு அக்கரை இருப்பதாகத் தெரியக் காணோம்.

ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் 'பேர்போன' ஆசிரியர்கள் - அதிலும் தகறாருக்கு என்றுமே வராத தமிழாசிரியர்கள், துக்கவாரம் கொண்டாடுகிறார்கள், வேண்டுகோள் நிராகரிக்கப்பட்ட பிறகு, மகஜர் பலன்ளிக்காத பிறகு - சம்பளம் போதாது என்று.

அமைச்சரை அணுகினாலோ, அவர் வறுமையால் வாடும் அந்தத் தமிழாசிரியர்களை, இழிவாகப்பேசி மனதைப் புண்படுத்தியே அனுப்புகிறாராம். சென்னையில் ஒவ்வொரு பேட்டையிலும், தங்கள் குறையை எடுத்துக்கூறி

சுதந்திர நாட்டில்

தமிழ் அமைச்சர் ஆட்சியில்

எங்கள் நிலை இது - என்று விளக்கி வருகிறார்கள் தமிழாசிரியர்கள்.

துக்கவாரம் - துக்கத்தோடு முடிந்துவிடாது. நேரடி நடவடிக்கைக்குத் தொடக்கமாகவே அமையும் என்று தெரிகிறது.

வறுமையில் வாடி, அமைச்சரால் அலட்சியப்படுத்தப் பட்டு, சங்க நூற்களைச் சுமந்து கொண்டிருப்பதைவிடச் சிறையிலே, சென்று கிடப்போமே - சீரழிவு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் உணரட்டுமே என்று மனம் உடைந்து பேசுகிறார்கள்.

ஆங்கில ஆட்சி அகன்றது - ஆங்கிலத்துக்குள்ள தனி மதிப்பு அகன்றது - இனித் தாய்மொழிக்கு உயர்வும், தாய்மொழி ஆசிரியர்கட்கு, மதிப்பும் பிறக்கும் - அமைச்சரோ, குறளைக் கொட்டிப் பேசுகிறார் - கலைக்களஞ்சியம் அமைக்கிறார் - இளைஞர் - இப்படிப்பட்டவருடைய ஆட்சியிலே இதுவரை இருந்துவந்த இழிவும் பழியும் நீங்கி, இல்லாமை ஒழிந்து, எமது நிலை உயரும் என்று எண்ணி ஏமாந்தோம் - எமதுதுயரை உம்மிடம் தெரிவிக்கிறோம், செந்தமிழ் நாட்டவரே! எங்கள் கோரிக்கை நியாயமற்றதா? குறை, தீர்க்கப்படவே முடியாததா? என்று கேட்போர் மனம் உருகக் கேட்கின்றனர், ஏழ்மையில் சிக்கியுள்ள தமிழாசிரியர்கள்,

ஏறக்குறைய, எல்லாப் பத்திரிகைகளும் - இந்து உட்பட - இவர்களின் குறை, களையப்படத்தான் வேண்டும் என்று எழுதிவிட்டன. அரசியல் கட்சிகள் அனைத்துமே அவர்களுக்கு ஆதரவு காட்டுகின்றன. என்றாலும், அமைச்சர் அசைந்து கொடுக்க மறுக்கிறார் - அலட்சியமாகக் கருதுகிறார்.

தமிழாசிரியர்களால், ஆலைத் தொழிலாளர்கள் போல, உழவர் போல, போராட்டம் நடத்த முடியுமா! கிளர்ச்சி செய்ய

அவர்களால் இயலுமா? அப்படிப்பட்ட கிளர்ச்சிகளை எல்லாம் கூட அடக்கிவிட்ட எமக்கு, இவர்களின் எதிர்ப்பா, ஒரு பிரமாதம்! - என்று இறுமாப்புடன் எண்ணுகிறார்கள் ஆளவந்தார்கள்.

காங்கிரசை, கம்யூனிஸ்டு, திராவிடர் கழகம், ஆகிய எதிர்க்கட்சிகள் மட்டுமே கண்டிக்கின்றன, என்று எண்ணினோம், ஆனால், தமிழாசிரியர்கள் கண்டிக்கின்றனரே, அவர்கள் மனக்குறையைக் கூடத் தீர்க்க முன்வராதது நியாயமா என்று பொதுமக்கள், தீவிரமாக யோசிக்கத் தொடங்கிவிட்டனர். யோசிப்பதோடு மட்டுமில்லை - தமிழாசிரியர்களுக்கு யோசனைகள் சொல்லவும் தொடங்கி விட்டார்கள்.

துக்கவாரக் கூட்ட நடவடிக்கைகளை அமைச்சர், ஒற்றர் மூலம் தெரிந்து கொள்வாரானால், மறியல், உண்ணாவிரதம், பள்ளிகளில் வேலை நிறுத்தம், என்று பல திட்டங்கள், அக்கூட்டங்களில், வெட்டிக்கோ வீராப்புக்கோ அல்ல - வேதனையிலே பிறந்த உறுதியுடன், பேசப்படுவதைக் கேள்விப் படக்கூடும். நிலைமையை, நேர்மையையும் நியாயத்தையும் மதிக்கும் யாரும், இப்படியே விட்டு வைக்க மாட்டார்கள். தமிழாசிரியர்கள் சிந்தும் கண்ணீர், வீண் போகாது.

தமிழாசிரியர், சார்பாகக் கிளர்ச்சியை, முன்னின்று நடத்தி வைக்க, ஒரு கூட்டுப்படை நிச்சயமாகத் தயாராகும் என்பதை அமைச்சர் உணர வேண்டும். பணம் இல்லை என்ற பழம்பாட்டோ, தமிழாசிரியர்கள் சூனாமானாக்கள் என்று கூறும் சுடுசொல்லோ, நெடுநாட்களுக்கு, அமைச்சருக்கு அரண் அளிக்காது.

ஏன், ஆங்கிலம் போன்ற அன்னிய மொழி ஆசிரியர் களுக்குக் காட்டப்படும் அளவு மரியாதையும் நிலையும் தமிழாசிரியர்களுக்கு மறுக்கப்படுகிறது?

தமிழ்நாட்டில் தமிழாசிரியர்களை, ஆப்பிரிக்காவிலே ஜெனரல் ஸ்மட்ஸ், 'இந்தியரை' வைத்திருக்கிற நிலையிலே, வைத்திருப்பது, அமைச்சருக்கோ அவருடைய தோழர் களுக்கோ, கீர்த்தியைத் தரக்கூடிய செயலா?

தமிழ்! தமிழ்! என்று போட்டு வந்த கூச்சல், போலிதானா

எங்கள் ஆட்சியிலே தாய்மொழிக்கே ஆக்கமிருக்கும் என்று சொன்னதை மறந்தனரா?

ஆட்சியை, ஆங்கிலர் நடத்தினால் நம்மவரின் அருமை பெருமைகளை அறிய முடியுமோ? குறைகளைத் தீர்க்க இயலுமோ? என்று பேசினதெல்லாம், வெறும் பேச்சுத்தானா?

மந்திரிகள் தங்கள் சம்பள விஷயத்திலே அக்கரையுடன், நடந்து கொண்டு, சம்பளத்தை உயர்த்திக் கொண்டனரே, தமிழாசிரியர்களின் நிலையைக் கவனிக்க மறுப்பது, அறமாகுமா, அறிவுடைமைதானாகுமா?

உண்மையைக் கூறுகிறோம், தமிழாசிரியர்கள், துக்கவாரம் என்று பெயர் வைத்தனர். ஆனால் அவர்களின், அறிவு நிரம்பிய பேச்சுக்களைக் கேட்ட பொதுமக்கள், "தமிழாசிரியர்களின் துக்கவாரம் என்று கூடக் கூறவேண்டாம் – இது வெட்கவாரம் இப்படிப்பட்ட ஆளவந்தார்களைப் பெற்றிருக்கிறோமே – இப்படிப்பட்டவர்களை ஏத்தி ஏத்தித்

தொழுதோமே - இவர்கள் ஆட்சிக்கு வரவேண்டுமென்று இஷ்ட தேவதைகளை எல்லாம் வேண்டிக் கொண்டோமே - வந்தவர்களின் வல்லமை இப்படி இருக்கிறதே, என்று எண்ணி, ஓட்டு அளித்த நாங்கள் வெட்கப்படுகிறோம் - இது வெட்க வாரம்" என்று பொதுமக்கள் பேசுகின்றனர்.

துக்கவாரக் கூட்டங்களை முடித்துக் கொண்டு, சென்னையில், பலகட்சி ஆதரவாளர்களையும் கொண்டு, மாபெரும் கூட்டம் நடத்தி, நேரடி நடவடிக்கையில், தமிழாசிரியர்கள் இறங்க இருக்கிறார்கள்.

ஆளவந்தார்கள், பாட்டாளிகளை, ஜெயிலில் போட்டாயிற்று - இனித் தமிழாசிரியர்களையும் சிறையில் தள்ளும், சிலாக்கியமான - கீர்த்தி மிக்க - தலைமுறை தலைமுறைக்கும் புகழ் தேடித் தரத்தக்க கைங்கரியத்தையும் செய்யட்டும்.

பொது மக்களிடம், ஆசைமொழி கூறவும், அவர்கள் எதிர்த்துக் கேட்டால் அடக்கவும், முறையே பிரச்சார பலமும், அடக்குமுறைக் கருவிகளும், நம்மிடம் இருக்கும்போது, நமக்குப் பயமென்ன, என்று அமைச்சர் எண்ணுகிறார் போலும். தமிழாசிரியர்கள், கடைசி நிமிஷத்தில் பின்வாங்கி விடுவர் என்று நினைக்கிறார் போலும்.

அமைச்சர், பெரிய ஏமாற்றத்துக்குள்ளாகப் போகிறார். தமிழாசிரியர்களின் உள்ளம் கொதிப்பேறி இருக்கிறது - பொது மக்கள் - குறிப்பாக மாணவர்கள் - பெற்றோர்கள் - அவர்களை ஆதரிக்கத் துணிந்துவிட்டனர். தமிழாசிரியர்களின்

'துக்க வாரம்' இந்த வகையிலே, நல்ல பலனளித்து விட்டது.

பொது மக்கள், நன்கு அறிவார்கள், இவர்கள், எதிர்க்கட்சிக்காரரல்ல, பதவிக்காகப் போரிடுபவரல்ல, காங்கிரஸ் எது செய்தாலும் எதிர்க்கும் போக்கு கொண்டவர்களல்ல - அரசியலுக்குப் புறம்பானவர்கள்; ஆட்சியாளர்களிடம் வீண் வம்புக்கு வருபவர்களல்ல என்பதை. இப்படிப்பட்டவர்கள், துக்கவாரம் நடத்த வேண்டிய அளவுக்கு நிலைமை இருப்பது, பொதுமக்கள் மனதிலே, புதியதோர் அதிர்ச்சியைத்தந்து, விழிப்பையும் உண்டாக்கி விட்டது. ஆளவந்தார்களின் போக்குச் சரியல்ல, என்று பொதுமக்கள் தீர்ப்பளித்துள்ளனர் - ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும்.

ஆண்மையுடன் நடக்க விருப்பமிருந்தால், அமைச்சர், பொது மக்களிடம், தமது கட்சியை எடுத்துக் கூறட்டும், அதே கூட்டத்திலே ஒரு தமிழாசிரியர், தமது கட்சியையும் எடுத்துப் பேசட்டும் - பொது மக்கள் தீர்ப்பளிக்கட்டும் - பார்ப்போம்.

அமைச்சர், இந்த அறைகூவலை ஏற்றுக் கொள்வாரா?

*(திராவிட நாடு - 30-11-47)*

# 48. ஒன்றும் செய்யவில்லை!

'புகைகுடிக்கக் கூடாது' எனும் விளம்பரப் பலகை பல இடங்களில் தொங்கவிடப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். சிறு

தீப்பொறி பட்டாலும், தீப்பிடித்துக் கொள்ளும் பண்டம் அங்கு இருக்கிறது எனும் உண்மையை உணர்த்துவதற்கே, முன் அறிவிப்பாக அத்தகைய பலகை தொங்கவிடப் பட்டிருக்கிறது, இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமலோ, கவனியாமலோ, நடந்து கொண்டால் அபாயம் ஏற்படுவ்து நிச்சயம்.

❋

'தொடாதே, அபாயம்' எனும் விளம்பரத்தையும் பார்த்திருக்கிறோம். இதனால், மனிதனால் தொடப்படும் பொருளுக்குப் பெரும்பாலும் அழிவு உண்டாவதில்லை. ஆனால், தொடுகிறவர்களுக்குச் சில சமயங்களில் உயிர் போகும் அளவிற்கு ஆபத்து ஏற்பட்டுவிடும். எனவே, முன் அறிவிப்பு அவசியப்படுகிறது.

❋

'அசுத்தம் செய்யாதே' எனும் விளம்பரங்கள் சந்து பொந்துகளிலெல்லாம், நகரங்களில் எழுதப்பட்டிருக்கின்றன. அசுத்தமே வியாதிகளுக்குக் காரணம். இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாமல், அசுத்தம் செய்வதால், அதன் விளைவாகத் தோன்றும் பல உயிர்க்கொல்லும் கிருமிகளால், அப்பகுதியிலுள்ள மக்களுக்குப் புதிய புதிய நோய்கள் சம்பவிக்க இடமேற்படுகிறது. எனவே, இது விஷயத்திலும் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது,

❋

நல்வாழ்வு பெறுவதில் மக்களுக்குப் போதிய ஆர்வமின்மை, சீர்கேடான செல்வநிலை, கல்வியற்ற கேவலம் முதலியன மக்களைச் செம்மையான முறையில் நடக்க விடவில்லை. இந்த முறை மாற வேண்டும். மாற்றி அமைக்கப் பட வேண்டும்.

மனித வாழ்க்கைக்கு, இதுவரையில் நாம் கொண்டிருந்த பொருளை மாற்றிப் புதுப் பொருள் கொள்ள வேண்டும். கண்ணுக்குப் புலனாகும் இவ்வுலக வாழ்வில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். அதற்கான வகையில், நாட்டு மக்கள் நலத்தில் நோக்குடையவர்கள் தொண்டாற்ற வேண்டும்.

அபாய அறிவிப்புகளைக் கண்டு, கவலையற்று இருப்போர் உண்டு.

வேறு சிலர் உண்டு, அசுத்தம் செய்யாதே! என்ற போர்டுகள் உள்ள இடமாகப் பார்த்து. அசுத்தம் செய்பவர்கள். இத்தகையவர்களை அறிவுள்ளோர் என்றோ, பொறுப்பை உணர்ந்தவர்களென்றோ, அறிஞர்கள் கூறார்.

அமைச்சர்கள், அறிவுள்ளவர்கள்! ஆளும் திறம் படைத்தவர்கள்! கண்ணியம் காரணமாக அவர்கள், பொதுக் கூட்டங்களிலே, நாங்கள் மக்களின் ஊழியர்கள் என்று பேசுவர், உண்மையிலேயோ, அவர்கள் நாட்டு மக்களை நடத்திச் செல்லும் நாயகர்கள்.

மந்திரி டேனியல்தாமஸ், மதிமிக்கவர் என்பது மட்டுமல்ல, அனுபவசாலி!

அப்படிப்பட்டவர், கண்முன் ஓர் அபாய அறிவிப்புப் போர்டு தென்பட்டது - அவரே அதுபற்றிக் கூறவும் செய்தார். ஆனால், அவரே, அது பற்றி யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

"அந்தப் பகுதிதான் ஆச்சரியமிகுந்ததடி!" - என்ற கவியின் வாக்கு, கவனத்திற்கு வருகிறது.

"சென்னையில், தெருக்களிலும் சாக்கடை ஓரங்களிலும் சுமார் ஒரு இலட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள்!"

நாகரிகம், நல்லாட்சி, நல்லறிவு, நன்மதக் கோட்பாடு, மனிதாபிமானம், முதலிய எந்தப் பண்பாட்டின்படி கவனித்தாலும், இந்த நிலை, அபாய அறிவிப்பு என்பது மறுக்க முடியாதபடி விளக்கமாகும்.

அமைச்சர் டேனியல் தாமசின் அரசியல் கட்சியினர் அருஞ்சிறையிலிருந்து கொண்டு, ஆங்கிலக்கொடி, கோட்டையில் பறந்து கொண்டு, உலகுக்கு இந்தியாவின் இழிநிலையை எடுத்துக்காட்டி ஏளனம் செய்து கொண்டிருந்தனரே, அந்த நாளிலும், சாக்கடை ஓரங்களில் ஏழைகள், விடுதிகள் அமைத்துக் கொண்டுதான் இருந்தனர் விடுதி! வேதனையின் வடிவம்!! தகரப் பலகை, அதிலே பல பொத்தல்! அது வளைத்து ஒருபுறம் நிறுத்தப்பட்டிருக்கும். மறைப்பிலே, சட்டியும் பானையும் இருக்கும் - நெருப்பு இருக்கும்போது நாய் இராது - நாயும் ஏழையின் சிறு சேயும், அந்தச் சமையலறையைச் சயன கிரஹமாகக் கொள்ளும், நெருப்பில்லா நேரங்களில்! இது அவர்கள் விடுதி இதிலே,

ஆண் உண்டு பெண் உண்டு, 'ஆண்டவன் அருளால்' அரை டஜன் குழந்தை குட்டிகள் உண்டு!

கொடி கீழே இறக்கப்பட்டு, சிறைக்கோட்டத்திருந்தோர் நாடாள்வோராகி விட்டனர். ஆனால் அந்த விடுதிகள், அப்படியே உள்ளன!! அமைச்சரே அறிவிக்கிறார்! அன்பு மார்க்கத்தவர் டேனியல்தாமஸ். அவர் அறியவில்லை, இந்த ஏழைகளின் அவதியை, என்ற அளவிலே நிலைமை இருந்தால், வருத்தம், மட்டுமே நமக்கு ஏற்பட்டிருக்கும். அவர் அறிந்திருக்கிறார்! அறிவித்துமிருக்கிறார். ஒரு இலட்சம் மக்கள் சாக்கடை ஓரத்தில் உள்ளனர் என்று!

மனிதனின் இறுதி லட்சியம் எதுவாக இருந்த போதிலும், இன்று சமூக வாழ்வில் உள்ள குறைபாடுகளை நீக்க வழிவகை செய்யக்கூடாதென்பதில்லை. இன்றுபலர் பசித்திருக்கவும், சிலரிடை உணவுப் பொருள் குவிந்து கிடக்கவுமான நிலையைப் பார்க்கிறோம். மாட மாளிகையில் சிலர் சுக வாழ்வில் வாழவும், பலர் சாக்கடை ஓரங்களையும் வெட்ட வெளிகளையும் தங்கள் குடியிருப்புகளாகக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். இந்த நிலை சென்னையில் இருப்பதாகவும், சரியான புள்ளி விவரம் சேகரிக்கப்படவில்லையென்றும், சுமார் ஒரு லட்சம் மக்கள் தெருக்களிலும் சாக்கடையோரங் களிலும் வசிக்கிறார்கள் என்றும், சென்னை சட்டசபையில் கனம் மந்திரி டேனியல் தாமஸ் குறிப்பிட்டுள்ளார்.

வேதனை தரும் விஷயம் இது. சென்னையில் மட்டும் இந்த நிலை என்று சொல்ல முடியாது. பொதுவாகச் சகல நகரங்களிலும் இந்த நிலைதான். கோவை, மதுரை போன்ற

இடங்கள், சென்னையை மீறினாலும் மீறக் கூடும். இதற்கு ஏதாவது பரிகாரம் உண்டா? இதற்கான திட்டம் ஏதாவது இதுவரையில் தீட்டப்பட்டுள்ளதா?

"இந்த ஏழைகள் வசிப்பதற்கு இதுவரையில் சர்க்கார் ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை."

இவ்வாறு கூறிவிட்டார், பதிலாக மந்திரியார். அவருக்குப் பெயர் வீட்டிலாக்கா மந்திரி. பெயருக்கு ஏற்பச் செயலிருக்கிவில்லை.

மாகாண சர்க்கார்தான் இதனைச் செய்யவில்லை. ஆனால் சென்னை நகரைப் பரிபாலிக்கும், சீமான்களாவது இந்த அபலைகளின் அவஸ்தையைப் போக்கத் தக்கதோர் நடவடிக்கை எடுத்துக் கொண்டார்களா? அவர்களுக்குத்தான் எவ்வளவோ வேலை இருக்கிறதே, எவ்வளவு பேருக்கு வரவேற்பு அளிக்க வேண்டி இருக்கிறது - எத்தனைப் பேர்களுக்கு சஷ்டியப்த பூர்த்தி கொண்டாட வேண்டி இருக்கிறது - இது போன்ற 'சத்காரியங்களிலே' அவர்கள் கவனம் எல்லாம் சென்றிருக்கும் பொழுது, ஏழை எளிவர்கள் எக்கேடு கெட்டால்தான் என்ன! எங்கு குடியிருந்தால்தான் என்ன - எப்படி அவஸ்தைப்பட்டால்தான் என்ன - இவைகளை எல்லாம் கவனிக்க அவர்களுக்கு நேரமேது?

விடுதலை அடைந்து விட்டதன் அறிகுறியாக, அவர்கள் எவ்வளவு வேலை செய்ய வேண்டி இருக்கிறது. தெருவுக்கெல்லாம் புதுப்புது பெயர்கள் மாற்ற வேண்டும் - இதுபோன்ற எவ்வளவோ உடனடியாகச் செய்ய வேண்டிய

வேலைகள், அவர்களுக்குக் காத்துக் கொண்டிருக்க, அவர்களுடைய கவனம் பாதையிலே முகாமிட்டிருக்கும் - ஒதுக்குப்புறத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் - ஏழைகள் மீது எப்படிச் செல்லும்?

சென்னை கார்ப்பொரேஷன் கனதனவான்களின் கருத்தையும் - வேலைத் தொந்தரவையும் தெரிந்து கொள்ளலாமல், அவர்கள் என் இந்த ஏழைகளின் குடியிருப்பைக் கவனித்துக் கொள்ளக்கூடாதென, தோழர் ஆதித்தன், அதே சட்டசபையில் அதே மந்திரியாரை ஒருகேள்வி கேட்டார். அதில், கார்ப்பொரேஷன் செய்யும் வரவேற்பையும் விழாவையும் இடித்துக் கூறினார். இதற்கு, பொருத்தமற்ற கேள்வி என மந்திரியார் பதில் கூறிவிட்டார்.

இது, உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்று சொல்லத் தேவையில்லை. குடி இருக்க இடமில்லாமல், தெருக்களிலும், ஒதுக்குப்புறங்களிலும் மக்கள் அவதிப்படுவது, அவர்களை மட்டும் பாதிக்கக் கூடியதன்று. பங்களாவாசி களையும் இதுதாக்கும். இருக்கவும் படுக்கவுமே இடமின்றி அவதிப்படும் ஏழைகள், அசுத்தத்தைக் கழிக்க ஒதுக்கிடங்களுக்கு எங்கே போவார்கள்? அவர்களே சுகக்கேடான இடங்களில் தங்கி உயிரோடு இருக்கிறார்களே!

அவர்களைப் பிடிக்கும் நோய், சுகபோகிகளையும் தாக்கவே தாக்கும். சுற்றுப்புறங்களை நச்சுக் கிருமிகள் பிறந்து வளரும் பண்ணையாக வைத்துக் கொண்டு, பாதுகாப்பான பங்காளவில் வாசம் செய்து, நச்சுக் கிருமிகளைக் கொல்லும் பற்பல நவீன பொருள்களை உபயோகித்துக் கொண்டு,

வாழ்ந்து வந்த போதிலும், என்றைக்காவது ஒரு நாளைக்கு, பங்களாவும் தொத்து நோய்ப்பண்ணையாக மாறியே தீரும்.

சுகவாழ்வுக்கு பங்கம் விளைவிக்கும் சுற்றுச்சார்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அதன் அபாய விளைவிலிருந்து தப்பிப் பிழைக்க மருந்து தேடிக் கொண்டிருப்பது, விரும்பக் கூடிய முறையாகாது. பொது மக்கள் வரிப்பணம் பாழாவதும், தொத்து நோய் அறவே அழிக்கப்படாமல் இருப்பதும், மக்கள் அதனால் பாதிக்கப்படுவதும்தான் பலனாக முடியும்.

சென்னை சர்க்காரோ, கார்ப்பொரேஷனோ, இந்த அபாய நிலையிலிருந்து சென்னை மக்களை மீட்க உடனடியாக முயலவேண்டும். புதிய வீடுகள் கட்ட முன்வரவேண்டும். இந்த நல்ல காரியத்தில் செலவு செய்வதற்கு இல்லாத பணம் வேறு எதற்கு என்பதுதான் விளங்கவில்லை!

சென்ற போரின் விளைவாக, இங்கிலாந்தில் லட்சக்கணக்கில் வீடுகள் நாசமாகிவிட்டன. அங்கு, வீடு கட்டுவதற்கே முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் வீடு அற்றோர், அங்கு சில பொது இடங்களை ஆக்ரமித்துக் கொண்டதாகவும் செய்தி வந்தது.

சென்னை சர்க்காரின், செயலகங்கள் பல வாடகைக் கட்டிடங்களில் இருப்பதாகவும், அதற்கான புதிய கட்டிடங் களைச் சொந்தத்தில் சென்னை சர்க்கார் கட்டப்போவதாகவும் சிலநாளைக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. பின்னர், கட்டிடத்திற்கான சாமான் விலை அதிகமாக இருப்பதின் காரணமாக, அந்த யோசனை கைவிடப்பட்டுவிட்டதாகவும்

செய்தி வந்தது. சர்க்காரின் சொந்த நிலைக்கே, இந்தப்போக்கு. ஆனால், ஏழைகளுக்கு வீடு கட்டுவதில் புதிய நிலை ஒன்றும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

இங்கிலாந்தில் இருப்பதும் சுதந்திர சர்க்கார்தான், இங்கு இருப்பதும் சுதந்திர சர்க்கார்தான். இருந்தாலும் – இங்கு சர்க்கார் கட்டிடங்களுக்கே சலுகை கிடையாது; பலம் பொருந்திய மத்திய சர்க்காருக்கு ஆக்கம் தேடுவதில் ஊக்கம் குறையக் காணோம்!

இன்று சென்னையிலிருக்கும் கோவில்கள், ஒரு லட்சம் அல்ல, மேலும் பலரை குடியிருக்க ஏற்றுக் கொள்ளும் அமைப்பில்தான் இருக்கின்றன. தெருக்களிலும் ஒதுக்குப் புறங்களிலும் தங்கி இருப்பவர்கள் நாஸ்திகர்களும் அல்ல. அவர்கள் அனைவரும் ஆண்டவன் குழந்தைகள், சிலருக்கு விரிந்த மனமும், அதிகாரத்திலிருப்பவர்களுக்குக் கொஞ்சம் துணிவும் இருந்தால் ஏழைகள் குடியிருப்புக் கஷ்டத்துக்கும் ஒரே நிமிஷத்தில் நல்லதோர் முடிவு காணலாம். நடக்குமா?

ஏழைகள் இவ்வாறு இடமின்றி அவதிப்படுவது, மக்களின் சுக வாழ்விற்கு வரஇருக்கும் கேட்டைத் தெரிவிக்கும், அபாய அறிவிப்பாகும். இதனைக் கவனித்துத் தக்கமுறையில், ஆதிக்கத்திலுள்ளோர் நடந்து கொள்ள வேண்டும். இல்லையானால், விடுதலைப் போராட்டம் புது ரூபத்தைப் பெறுவது இயற்கையாகும்.

*(திராவிட நாடு - 11-12-47)*

# 49. மறைந்தார்!

காஞ்சிபுரம் 'குமரன்' அச்சக உரிமையாளர், தோழர் த. குப்புசாமி அவர்கள் 17-12-47ல் உயிர் நீத்தார். அச்சுத் தொழிலைப் பிறர்கண்டு ஆச்சரியப்படும்படி முன்னணிக்குக் கொண்டு வந்தவர். விடாமுயற்சி உடையவர். சிறிய இயந்திர சாதனத்தைக் கொண்டே ஞானசூரியன், இராமாயண ஆராய்ச்சி போன்ற நூற்களை அழகுபட உருவாக்கியவர், 'குமார விகடன்' எனும் இதழையும் சிலகாலம் வெளியிட்டு வந்தார். அவருடைய 'திருக்குறள்' நூல் புகாத தமிழர் இல்லங்களே இல்லை என்று கூறலாம், அவருடைய தொழில் திறமைக்கு, 'குமார விகடன்' தேதிக் குறிப்பொன்றே தக்கதோர் சான்றாகும். அவருடைய குடும்பத்தார்க்கு நமது ஆறுதல்.

*(திராவிட நாடு - 21-12-47)*

# 50. அடுத்த கட்டம்!

நிறம் வேறாக இருக்கும் காரணத்திற்காக வேற்றுமை காட்டி நியாயம் பேசுவது எவ்வளவு அக்கிரமமோ, அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அநீதியானது பிறப்பினால் பேதம் காட்டி, மக்களை மாக்களாக நடத்துவது. அதிலும் தீண்டத்தகாதவர்களெனச் சிலரைக் கூறி, தெருவில் நடக்க விடாமல் தடுப்பதும், ஆண்டவன் எழுந்தருளி இருப்பதாகச் சொல்லப்படும் இடங்களில் அனுமதிக்க மறுப்பதும், உலகிற்

கெல்லாம் ஆத்ம ஒளியைத் தரவல்ல புண்யபூமி என்று பேசப்படும் நாட்டிற்கு பொருந்தாது. இன்று எங்ஙனம் கோயில்கள் திறக்கப்படுகின்றன? அதுவும் ஏதோ காரணார்த்தமாகச் செய்யப்படுவதாகத்தான் இருக்கிறது. எப்படி இருந்தாலும் ஒரு பெரிய களங்கம் நீக்கப்படுகிறது எனும் அளவில் நாம் மகிழ்ச்சி கொள்ளத்தான் வேண்டும்.

தோழர் சிவஷண்முகம் போன்ற அதிகாரத்திலுள்ளவர்களை 'உள்ளே வாருங்கள்' என அழைக்கும் நிலையில்தான் இன்னும் ஆலயப்பிரவேசம் இருக்கிறதாக அவரே கூறுகிறார். ஆலயப் பிரவேசம் மட்டும் போதாது, வேறு பல நன்மைகளையும் செய்ய வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். திருவாரூர் 'ஹரிஜன' சேவாசங்க ஆண்டு விழாவில் பேசும் பொழுது, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அந்தச் சங்கமும் இரண்டு தீர்மானங்களைச் செய்துள்ளது. தீண்டப் படாதோர் எனப்படுபவர்கள் குடியிருக்கும் இடங்களை அவர்களுக்கே சொந்தமாக்குவது ஒன்று; போதிய கல்வியளிக்க வேண்டுமென்பது மற்றொன்று. இந்த இரண்டும் ஜீவாதாரமானது. ஒவ்வொருவரும் தோழர் சிவஷண்முகம் போன்று பொருளாதாரத்துறையில் வசதிபெறும் அளவிற்கு வசதி செய்யப்படுவதுதான், ஆலயப்பிரவேசத்தின் அடுத்த கட்டம். இந்தக் காரியத்தில் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் முறையில் தாழ்த்தப்பட்ட தோழர்கள் ஒன்றுதிரண்டு ஏகோபித்த குரலில், உரத்துப் பேசவேண்டும். அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும் என்பதை நினைவில் வைக்க வேண்டும்!

*(திராவிட நாடு - 28-12-47)*

# 51. நீர் நஞ்சாயிற்று!

பாம்பு தீண்டிற்று இறந்தான் - விஷம் குடித்தான் இறந்தான் - என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இதனால் ஆச்சரியம் கொள்வதில்லை - கொள்ளத் தேவையுமில்லை. ஆனால் தண்ணீர் குடித்து இறந்தான் என்றால் எவர்க்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஏதோ தண்ணீர் அசுத்தமாக இருந்திருக்கும், உயிர் கொல்லும் கிருமிகள் அதில் இருந்திருக்க வேண்டும், அதனால்தான் அந்நீரைக் குடித்தவன் இறந்தான் என்று சிலர் வாதிட முற்படலாம். ஓரளவிற்கு - ஏன் - பெரும்பாலும் அது உண்மையாக இருக்கக் கூடியதுதான். ஆனால் நாம் சொல்லும பேர்வழி நல்ல தண்ணீரை, அனைவரும் குடிப்பதற்காக என ஏற்படுத்தப்பட்டுள்ள குழாய்த் தண்ணீரைத்தான் குடித்தான். ஆசைதீரக் குடித்தான்; வயிறு நிறையக் குடித்தான். முடிவு என்ன? சில நிமிடத்திற்கெல்லாம் உணர்வு இழந்தான். உடல் வியர்த்தது. பரிசோதித்துப் பார்த்ததில் பிணமாய் விட்டான் எனத் தெரிந்தது.

அவன்யார்? தண்ணீர் குடித்து ஏன் பிணமானான்? திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கயத்தார் எனும் கிராமத்தவன் அவன். பலநாள் பட்டினி. மதுரைக்குக் கால்நடையாக வந்த பலரிலே அவன் ஒருவன். மீனாட்சி தரிசனத்திற்காகச் செல்லவில்லை. வேலை ஏதாவது கிடைக்காதா எனும் நோக்கத்தோடு மதுரைக்குச் செல்லத்துணிந்தான். வழியிலேயே, விருதுநகரில் புகைவண்டி நிலையத்தில் தண்ணீரைக்

கண்டதும், பசித்தீயைத் தணித்துக் கொள்ள நீரைப் பருகினான் உடல் உயிரைவிட்டுப் பிரிகிற வரையில் பருகினான்.

வேலையில்லை, இந்நிலையில் குறைந்தளவானாலும் ஏதோ கொடுத்துத் தீரவேண்டும் எனும் கடமை உணர்ச்சி கொண்டிருந்த அரசாங்கமும், பற்றாக்குறைப் பகுதிகளுக்கு பங்கீட்டை எடுத்து விடுகிறது. மண்ணுக்கு இரையாகும் கட்டைதானே, தண்ணீரைக் குடித்துதான் காலங்கழிக்கட்டுமே எனும் உயர்ந்த நோக்கமே ரேஷன் விலக்குக்குக் காரணம் போலும்.

*(திராவிட நாடு - 28-12-47)*

# 52. “பறக்கும் குதிரை”

உலகத்திலேயே அதிவேகமாகச் செல்லக்கூடியதும், போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படக்கூடியதுமான ஒரு ‘ஹெலிகாப்டர்’ தற்போது பிரிட்டனில் தயாராகி வருகிறது. அதிக பளுவை ஏற்றிச் செல்வதற்கென பிரத்யேகமாகத் தயாரிக்கப்படும் இந்த “ஹெலிகாப்டர்’ டபிள்யூ-11 “பறக்கும் குதிரை”யென அழைக்கப்படுகிறது. இது, வரும் வசந்த காலத்தில் தன் முதற் பிராயணத்தை ஆரம்பிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

மணிக்கு 154 மைல்கள் வீதம் செல்லக்கூடிய இந்த ‘ஹெலி காப்டர்’ 24 பிராயணிகளையோ அல்லது மூன்று டன் நிறைந்துள்ள சாமான்களையோ சுமந்து செல்ல முடியும்.

இதைவிட உருவத்தில் சிறியதும், டபிள்யூ-12 'பறக்கும் குதிரை'யென அழைக்கப்படுவதுமான 'ஹெலி காப்டர்' 12 பிரயாணிகளையோ அல்லது 114 டன் நிறையுள்ள பளுவையோ ஏற்றி செல்ல முடியும்.

பறக்கும் குதிரையா? - இது என்ன அதிசயம்! நமது பண்டைய ஏடுகளில் இதுபற்றிக் குறிப்புளது, தெரியுமா? என்று கேட்பர், இங்கு சிலர். ஆனால், ஏட்டிலே இப்படி ஒரு குறிப்பும் இருந்தும், இதுபோல் ஓர் கருவியும் செய்யாதது ஏன் என்று கேட்டாலோ விழிப்பர்!!

*(திராவிட நாடு - 28-12-47)*

# 53. உத்தமரை இழந்தோம்!

## உலகம் எங்கும் அழுகுரல்!

யமுனை நதி - இந்திய துணைக்கண்டத்து மக்கள் மட்டுமல்ல, உலகிலேயே பல இடங்களிலும் உள்ள மனிதாபிமானமும் நல்லறிவும் விடுதலை வேட்கையும் கொண்ட மக்கள் அனைவருமே, சிந்திய கண்ணீரையே, கொண்டு செல்கிறது. அவ்வளவு கண்ணீரும் சேர்ந்து கடல் நீரில் கலக்கிறது - உலகைத் திருத்த வேண்டுமென்று உழைத்த உத்தமர்கள் எத்தகைய தியாகக் கடலிலே, வீழ்த்தப்பட்டனரோ, அதே நிலைக்கு, மோகன் தாஸ் கரம்சந்த் காந்தியாரின் வாழ்க்கையும், உத்தமர் அனைவரும் சென்ற வழியே சென்று தீரவேண்டி நேரிட்டு விட்டது.

யமுனை நதிக்கரையிலே, 31-1-48 மாலை 5 மணிக்கு மூட்டப்பட்ட தீ, அங்கு காந்தியாரின் சடலத்திற்கு மட்டுமல்ல, உலகிலே இலட்சக்கணக்கான மக்களின் அடிவயிற்றிலே கூட அல்ல, இருதயத்தையே தீண்டியதீ ஆகும். உலக வரலாற்றிலே, இது போன்ற துக்கரமான,துடிதுடிக்கச் செய்யும், திடுக்கிட்டுத் திகைக்கச் செய்யும், நிகழ்ச்சி வேறு இல்லை. இந்திய பூமி மட்டுமல்ல, இருதயம் படைத்த நல்லறிவாளர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம், இந்தத்துக்கம், மக்களை இதுவரை அவர்கள் அனுபவித்தறியாத விதமாக ஆக்கி விட்டிருக்கும்.

எங்கு நோக்கினாலும் ஒரே திகைப்பு! கலங்கிய கண்கள்! ஏக்கம்!

ஒவ்வொருவருக்கும் அவரவர் குடும்பத்திலே, அவர்களின் இருதயத்தில் முதலிடம் - முக்கிய இடம் பெற்ற எவரேனும் இறந்துபோய், அந்தத் துக்கத்தின் தாக்குதலால் அவதிப்பட்ட அனுபவம் இருக்கத்தான் செய்யும். என்ற போதிலும் எதுவும், இந்தச் சமயத்திலே ஆறுதல் அளிக்கும் ஆற்றலைப் பெற்றதாகக் காணோம்.

இந்தத் துக்கம், ஏதோ ஓர் புதுவிதமானதாக, இதுவரை அனுபவித்த எந்தத் துக்கத்தையும்விட, அதிகமானதாக இருக்கிறது. மரணம், எவ்வளவு தொண்டு கிழவருக்கு ஏற்படினுங்கூட, துக்கம் வரத்தான் செய்யும். ஆனால் இது மரணமா! அல்லவே! அவர் சாகவில்லை. மாபாவியினால் கொல்லப்பட்டார்.

மாலை நேரத்தில், ஒரு நாட்டு மக்களையே உலகறிய வைத்த உத்தமர் தன் பேத்திமார் இரு பக்கமும் வர, தன் சொல்லை எதிர்நோக்கிக் கூடியிருக்கும், ஆர்வமிக்க மக்கள் முன்வந்து கொண்டிருக்கிறார் - இதோ இன்னோர் நிமிஷம் - அவர் மேடைமீது அமர்ந்து, ஒற்றுமையைப் பற்றி, ஒருவருக்கொருவர் குரோதம்,துவேஷம், நீங்கி, நாட்டு நன்மதிப்பை நாசமாக்காத வகையில் நடந்து கொள்ள வேண்டுமென்று அன்புரை அளிக்கப்போகிறார், எத்தனையோ நட்களாக அளித்தது போலவே - அந்த ஒரு நிமிஷம் எவ்வளவு பெரிய மாறுதலை உண்டாக்கி விட்டது - நினைத்தாலே நெஞ்சு வெடித்து விடும். நிலைமையை ஏற்படுத்திவிட்டது - அந்த நிமிஷத்தில், அவர் மேடை மீதேறப் படிக்கட்டுகளில் கால் வைக்கும் நேரத்தில், எவனோ ஒரு கயவன், மனித உருவில் உலவிய மிருகம், மாநிலத்தோர் எவரும் காரி உமிழத்தக்க மாபெருந் துரோகம்புரிய மனதைத் துவேஷக் கூடாக்கிக் கொண்ட மாபாவி, ஒன்று, இரண்டு, மூன்று என்று துப்பாக்கியால் சுட்டான் - மார்பிலே, அடி வயிற்றிலே - கண்கள் மூடிக்கொண்டன - அவர் சாய்ந்தார் - நாடு முழுதும் சோகக் கடலிலே வீழ்ந்துவிட்டது - உள்ளே கொண்டு சென்றனர் - உடனிருந்தோர் கதறினர் - உயிர் அவருக்குப் பிரிந்தது - அந்த நிமிஷமே, கௌரவமே நாட்டை விட்டுப் பிரிந்து விட்டது.

எவ்வளவு பெரிய கேடு செய்கிறோம், எத்துணைப் பெரியதுரோகம் என்பதை எண்ணிப் பார்க்காமலே அந்த வெறியன் செய்த காரியம், ஏசுவைச் சிலுவையில் அறைந்த ரோம் வெறியர்களும் வெட்கித் தலைகுனியும்படியானதாகும்.

ரோம் ஆதிக்க வெறியர்களாவது, ஏசுவின் செல்வாக்குப் பரவுவதால் தங்கள் ஆதிக்கம் கெடுகிறது என்று பொறாமையும் துவேஷமும் கொண்டதால், அக்கொடுஞ் செயல் புரிந்தனர். இந்த வெறியனோ எந்த மாபெருந் தலைவரால், இவன் மதிப்பு பெற்றானோ, இவனுடைய வாழ்வுக்கு ஓர் புது அந்தஸ்து கிடைத்ததோ, நாட்டுக்கு ஓர் புது நிலை ஏற்பட்டதோ, அந்த மாபெருந் தலைவரையல்லவா, மார்பிலே சுட்டுக் கொன்றான். பெற்ற தாயைக் கொல்லும் பேயன் அந்த மாலைநேரத்திலே, மக்களுக்கு மதிமொழி கூறவந்தபோது, மஞ்சள்நிற வெயில் அவருடைய பொன்னிற மேனியலே பட்டபோது, அவருடைய முதுமை தெரிந்தபோது, ஒரு பெரியதுணைக்கண்டத்திலே சர்க்காரே அவர் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரக் காத்திருந்தும், ஒரு பாதுகாப்பையும் விரும்பாமல், தனியாக, வந்த, தூய்மையைக் கண்டபோது, சில நாட்களுக்கு முன்பு வெடிகுண்டு வீசினான் வேறோர் வெறியன் என்பதறிந்தும், மீண்டும் எவனாவது இதுபோல் செய்தால் என்ன செய்வது என்பது பற்றிய எண்ணமே கொள்ளாமல், வந்த போக்கைக் கண்டபோது, மரணத்தின் பிடியிலே தன்னைத்தானே சிக்கவைத்துக் கொள்ளும் விதமாகப் பட்டினியிருந்து, அதன்மூலம் நாட்டு மக்களிலே சில பலருக்கு ஏறியுள்ள வெறி விஷத்தைப் போக்க முயற்சித்தாரே சில நாட்களுக்கு முன்பு என்ற சம்பவத்தையும் எண்ணிப்பாராமல், கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தன் சொந்த வாழ்க்கை என்பதையே மறந்து, நாட்டுக்குப் புது வாழ்வு பெற்றுத் தரவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பணியாற்றி வந்தவராயிற்றே என்பதையும் எண்ணிப்பாராமல், சுட்டான் - மும்முறை - அவர் கீழே சாயும் வரை.

முப்பதாண்டுகளாக எந்த ஏகாதிபத்தியத்தின் மீது அவர் தாக்குதலை நடத்தினாரோ, அந்த ஏகாதிபத்யம் செய்யத் துணியாத காரியத்தை, எவனை ஏகாதிபத்தியத்திட மிருந்து விடுவித்தாரோ, அவன், செய்திருக்கிறான். தீயிலே வீழ்ந்த நாகத்தை வெளியே எடுத்துப்போட்டால், பாம்பு, அவனையே தீண்டும் என்பார்கள். இந்தப் பாவியின் செயல், அதைவிடக் கொடுமை நிரம்பியது. ஆண்டு ஒன்றும் பூர்த்தியாகவில்லை, நாட்டுக்கு உலகிலே புதுநிலை ஏற்பட்டு - இதற்குள், அவர், இயற்கையாக மரணமடைந்திருந்தால் கூட,துக்கம் ஏற்படத் தான் செய்யும். ஆனால் இப்போதோ, அவர் சாகவில்லையே, கொல்லப்பட்டார் ஒரு கொடியவனால், அவன் வாலிபனாம் இந்துவாம்.

இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு ஏலம் கிராம்பு பெறுவதுண்டு, பொன்னும் பொருளும் மிக உண்டு, போக்கறி யாதார் நிரம்ப உண்டு, என்ற அளவில், பதினாறாம் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருந்தது. பிறகு படிப்படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது. அப்போது, இந்திய என்றோர் நாடுண்டு, அது ஆங்கிலருக்கு நல்ல வேட்டைக்காடு, என்று உலகம், இழித்தும் பழித்தும் பேசிக் கொண்டது. திலகர் காலத்திலே விடிவெள்ளி தோன்றுவதுபோல, விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும், காந்தியார் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே, இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு விழிப்பும் எழுச்சியும் உண்டு என்று உலகம் அறிந்து கொள்ள முடிந்தது. காந்தியாரின் புகழொளி மூலமே, உலகம் இந்தியாவைக் கண்டு வந்தது. தன்னலமற்ற, விளைவு பற்றிய கவலையற்ற, போராட்ட

மனோபாவத்தை நாட்டிலே காந்தியாரால்தான் உண்டாக்க முடிந்தது. அதற்கு முன்பு வரையில், விடுதலைகோரி மனுச் செய்யும் மேதாவிகளிடமே நாடு இருந்தது. அவருடைய உருவமோ, உடலமைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ, ராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை - ஆனால் அவரால், ராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீரஉணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களுக்கு உண்டாக்க முடிந்தது. எத்தனை எத்தனை பேராட்டங்கள்! அவைகளிலே கலந்து கொண்ட வாலிபர்கள் எத்தனை எத்தனை இலட்சம்! எத்தகைய வீரச்செயல்கள், தியாகச்செயல்கள் அவர் காலத்திலே நேரிட்டன. இவ்வளவையும் தந்த தலைவருக்கு, அந்தத்துரோகி, தந்தது மூன்று குண்டுகள். காக்கை கழுகும், நாய்நரியும் அந்த மாபாவியின் உடலைத் தின்னக்கூசும். அவ்வளவு பெரியதுரோகச் செயலை, அந்த வாலிப்ன் செய்து விட்டான். அந்த வெறியனின் செயலால், இருள் சூழ்ந்து கிடக்கும் நேரம் இது. எவரும் எதிர்பாராது நடந்து விட்டதால், எவ்வளவு பேசிப்பேசிப் பார்த்தாலும், ஆற்றிக் கொள்ள முடியாதவிதமான நிலை ஏற்பட்டுவிட்டது. இந்தத்துக்கத்தை எளிதில் துடைத்திட முடியாது. ஒரு நாட்டுக்கே பெரியதோர் நெருக்கடி ஏற்பட்டுள்ள நேரம்.

இருள் கவிந்து கொண்டு, இருதயம் துடித்துக் கொண்டு, கண்களிலே நீர் கொப்பளித்துக் கொண்டுள்ள இந்த நேரத்தில், நாம் ஆறுதல் பெறுவது மிகமிகச் சிரமமான காரியம், ஆனால் என்ன செய்வது? ஒரு வெறியன் செய்துவிட்ட துரோகம், நாட்டையே நிலை குலையச் செய்து விட்டது. மனம் பதறுகிறது. மக்கள் மனம் பதறியுள்ள நிலையிலே,

நாட்டுத் தலைவர்கள்தான், ஆறுதலைத் தரவேண்டும் - துக்கத்தை ஆளுக்கோர் அளவு பங்கிட்டுக் கொள்வதன் மூலமும், இந்தக் காட்டு முறையை நாட்டிலே கண்டோமே என்பதுபற்றி எண்ணித் தலைஇறங்குவதன் மூலமும், அவர், கீழே சாயும் வரையிலே, அஞ்சாமல், பணிபுரிந்ததுபோல, வெறியர்கள் டில்லியில் உலவுகிறார்கள், வெடிகுண்டும் வீசினார்கள் என்பதறிந்திருந்தும், மாபெருங் கூட்டத்திற்குப் பாதுகாப்புத் தேடாமல் வந்த மாண்புபோல, நாமும் இந்தத் தாங்க முடியாத துக்கத்தையும் தாங்கிக் கொள்ளும் சக்தியைப் பெற வேண்டும். காந்தியாரின் புகழொளியை, அல்ல, அவருடைய உழைத்து அலுத்த உடலைத்தான், வெறியன் சுட்டு வீழ்த்தினான். எனவே கண்ணீரைத் துடைத்துக் கொள்வோம்; மனவேதனையைக் கட்டுக்குக் கொண்டு வருவோம்; அவரவரும் தத்தம் வாழ்நாளில், மக்கள் பணி செய்வதே, மறந்த மாபெருந்தலைவருக்குக் காட்டும் மரியாதை, செலுத்தும் காணிக்கையாகும் என்பதை அறிந்து, யமுனைக் கரையிலே மூண்ட தீயை, தியாகத் தீயாக்கி, அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம். அவர் விரும்பியது அதுதான் - அவர் பணிபுரிந்ததும் அதற்கே. குரோதம் நீங்கித்துவேஷத்தை விரட்டி, நாட்டுப் பணிபுரியுங்கள் - என்றே அவர் கூறி வந்தார் - அந்தப் பணியாற்றிக்கொண்டிருந்த நேரத்திலே, மாபாவியால் கொல்லப்பட்டார். அவருடைய மறைவு, மனவேதனை தருவதோடு நில்லாமல், நமது மனதுக்குப்புதிய உறுதியைக் கொடுத்துப் புதிய உண்மையைக் காட்டுமாக.

உலகிலேயே, படை பலம் ராஜ தந்திரபலமும் மிகுந்ததோர் ஏகாதிபத்தியத்தை, எதிர்த்துப் போரிட்டு, வெற்றி

காண முடியும், ஆயுதபலமுமின்றி, என்ற திடமனதை, எந்த உத்தமர் உண்டாக்கினாரோ, அவரை, ஏகாதிபத்தியமே பணிந்து விட்ட நேரத்தில், எவனோ வெறியன், சுட்டுவிட்டான் இந்த நாடும் உலகமும் இதனை மறப்பதற்கில்லை. நமது வாழ் நாளிலே, நாடு விடுதலை பெறக்கண்டோம், நாம் சாகுமுன் ஆங்கில நாட்டுக்கு நாமோர் அடிமை என்று இருந்த இழிவு நீக்கப்பட்டு, அதனால், நமது மக்களெல்லாம், தலைநிமிர்ந்து நின்று, பூரித்து, நமது தலைமுறை, மகத்தானது என்று மார் தட்டிக்கூறினோம், இன்றோ, மாபாவியினால் மகாத்மா கொல்லப்பட்ட காலத்திலே, வாழ்ந்தவர்கள் நாம் என்ற துக்கம், மனதைப் பிய்த்துத் தின்னுகிறது.

அவருடைய முப்பதாண்டுப் பணியிலே, ஒரு கடுமையான சொல், ஒரு நேர்மையற்ற செயல், ஒரு சுயநலத் திட்டம் - இருந்ததில்லை. அவருடைய சேவையினால் ஏற்பட்ட செல்வாக்கு இந்தியாவின் ஒளியையும், ஆசியாவின் புகழையும், நிறத்திமிர் கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிலி உண்டாக்கக் கூடிய அளவுக்குப் பரப்பிற்று. அவருடைய மொழியைக் கேட்க வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தனர். அவர் மண்குடிசையிலே தங்கினால், அங்கு செல்வதை மதிப்பளிக்கக் கூடியதென்று மன்னர் மன்னர்கள் எண்ணினர். அவருடைய மறைவு கேட்டு மாநிலமே துடிதுடித்ததுபோல, வேறு எங்கும் எந்தத் தலைவருக்கும் ஏற்பட்டதில்லை. புதிய மார்க்கம் துவக்கிய புத்தர், வீரத்தாலும் பிறகு விவேகத்தாலும் இந்தியாவின் புகழை வளரச் செய்த அசோகன், பெரிய வல்லரசுகளைக் கட்டி ஆண்ட மன்னர்கள், ஆகியோர்

படித்தவர்களுக்கு மட்டுமே தெரியக்கூடிய நிலை பெற்றனர். மகாத்மாவையோ, மாநிலம் முழுதும், படித்தவர் பாமரர், பாராளும் மன்றத்தினர் அனைவரும் அறிந்து கொண்டதுடன், அவர்களின் மனதிலே, அவர் இடம் பெற்றார். சத்தியம், அகிம்சை எனும் இருதத்துவங்களை நாடு கொள்ள வேண்டு மென்பதை, அவர், எப்போதும் வலியுறுத்தி வந்தார். அரசியலிலே மோசடிகளும், படுகொலைகளும் நிகழ்ந்த போதும், அவர் மனம் வேதனைப்பட்டதேயன்றி, அவர் அந்த இரு தத்துவங்களை வலியுறுத்தத் தவறவில்லை. கடைசி வரையில் அந்தக் கொள்கையை அவர் கொண்டிருந்தார். நாடு, அந்தக் கொள்கை வழி நிற்கவில்லையே என்ற எண்ணம் அவர் மனதிலே கிளம்பிய வேதனைப் புயல் கொஞ்சமல்ல. கடந்த சில மாதங்களாகவே, இந்த மன வேதனையை அவர் எடுத்துக்கூறி வந்தார். எவரும் இயலாதது என்று எண்ணி, போகத்துணிவு பெறாமல், இருக்கும் இடத்துக்குச் சென்று காரியம் செய்ய அவர் முன் வந்தார். படுகொலைகள் நடைபெற்ற நவகாளி, கல்கத்தாப் பகுதி களிலே, அவர் கிராமங் கிராமமாக, ஒற்றையடிப் பாதைகளிலே, வயல் வரப்பு களின்மீது, குக்கிராமங்களுக்கெல்லாம் சென்று நொந்த உள்ளங்களுக்கெல்லாம் ஆறுதல் அளித்தார். மிருகத் தன்மையை மாற்றினார். மக்களிடம் புதியதோர் மனமாறுதலை ஏற்படுத்தினார். ஆபத்து நிரம்பிய இடம், அறிவற்ற மூர்க்கர்கள் உலவிய இடம், என்று பயந்தனர் பலரும் - அவருடைய புன்சிரிப்பு அவ்வளவுக்கும் பதிலளித்தது. என் உயிரைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் - என்று கூறினார். எரிமலை மீது நடந்தார், தீ அண்டவில்லை - ஆனால் சர்க்காரின் தலைமைப்

பீடத்தைத் தன்னிடம் கொண்ட டில்லியில், அக்ரமம் நடந்துவிட்டது.

சாம்ராஜ்யங்களின் சவக்காடு இந்தப் பாழாய்போன டில்லி இது நமக்குத் தலைநகராகவும் இருக்க வேண்டாம், என்று, கிருபளானி போன்ற பல தலைவர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே டில்லியிலே முன்னம் அமைக்கப்பட்ட பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் அவ்வளவும், சதிச்செயலால், படு கொலையால், பாவிகளின் துரோகத்தால், சரிந்து போயின. சவக்காடு - சாம்ராஜ்யங்களின் சவக்காடு - ஆம் - அது மட்டுமில்லை - இப்போது, உலகைத்திருத்த உழைத்த உத்தமரையே சாகவைத்த,துரோகபுரியாகி விட்டது. டில்லியிலே, என்ன இருக்கிறது என்று, உலகிலே, எதிர் காலத்திலே, கேள்வி கேட்கப்படும்போது, நாமும் பின் சந்ததி யும், எப்படிப் பதில் கூறமுடியும் - தலைகவிழ்ந்து, தழதழத்த குரலிலே, மகாத்மாவை மாபாவி கொன்ற இடம் அந்த டில்லி - என்று கூறிக் கதற வேண்டும்.

மகாத்மா கொலை செய்யப்படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு அவருடன் சர்தார்படேல் பேசிக் கொண்டி ருந்தார். அந்தப் பேச்சில், காலம் போய்விடுவதை அறிந்து, தன் அன்புரை கேட்க மக்கள் கூடி இருப்பரே என்ற எண்ணம் கொண்டு, சர்தாரிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார் - மீண்டும் சந்திக்கும்போது, படேல் கண்டது குண்டு பாய்ந்த மார்பும், அப்போதும் மலர்ச்சி குன்றாத முகமும் கொண்ட மகாத்மாவின், ஆவி பிரியும் கோலத்தை. துக்கம் துளைக்கும் நிலையிலே உள்ள நாம் அவர்களைச் சற்று நம் அகக்கண் முன்கொண்டு வந்து பார்க்க வேண்டும். சர்தார், நேரு,

ராஜேந்திர பிரசாத், ராஜகோபாலாச்சாரியார், சரோஜினி அம்மையார், தேவதாஸ் இவர்களின் உள்ளம், இந்தச் செய்தியைத் தாங்க முடியுமா? எவ்வளவு தொடர்பு, எத்தகைய தொடர்பு, எத்தனை ஆண்டுகளாகத் தொடர்பு, கஷ்டத்திலும் சுகத்திலும் கலந்திருந்த அவர்களின், உள்ளம், எப்படி இருந்திருக்கும், பிர்லா மாளிகையிலே, அவருடைய உடலம் இருந்த நிலையைக் கண்டபோது. அவர்கள், அந்தத் துக்கத்தைத் தாங்கிக் கொண்டுள்ளனர், நாட்டு மக்களின் துக்கத்தைத் துடைக்கும் கடமை உணர்ச்சியுடன், அவர்களின் பக்கம் நின்று, நாமும், இந்தச் சகிக்க முடியாத துக்கத்தைத் தாங்கிக் கொள்வோம்.

உலகிலே உள்ள எல்லா நகர்களிலும், மக்களின் மனம்துடிதுடித்துப் போயிற்று. தூரதேசமான அமெரிக்காவிலே அழு குரல். பற்பல நாடுகளிலேயும் பிரலாபம். எவரும், ஆ - ஆ என்று அலறிய நிலை. எங்கும் ஏற்பட்டதில்லை, இத்தகைய கோரச் சம்பவம்.

காலை 11 மணிக்குப் புறப்பட்ட, பிரேத ஊர்வலம் யமுனைக்கரை போய்ச்சேர, மாலை ஐந்தாயிற்று - ஜன சமுத்திரத்தைக் கடந்து சென்றது - கதறும் மக்களைக் கடந்து சென்றது - ஐந்து மைல் இருக்குமாம். அந்தப் பாதை. அவ்வளவு இடமும், மக்கள் கூட்டம். ஆனால் அந்த ஐந்து மைல்களில் மட்டுமல்ல, இந்தியாவின், 2000 x 2000 மைல்கள் என்றுள்ள அளவு பூராவிலும் உள்ள நகரம், கிராமம் அவ்வளவு இடமும், மக்களின் சோகப் பயணமே நடந்தது. யமுனையை நாமெல்லாம் காணவில்லை - ஆனால் பல கண்ணீராறுகளைக் கண்ணீர் ததும்பும் கண்களால் கண்டோம்.

அங்கே மாலை 5.00 மணிக்குத் தீயிட்டனர் - இங்கோ, பாதகன் அவரைக் கொன்றான் என்ற செய்தியைக் கேள்விப் பட்டதும், நமது இருதயத்திலே தீயிடப்பட்டது; ஆறாத, அணையாத தீ, ஆத்திரக்காரன் நமது நாட்டின் உயிருக்கு வைத்த தீ; நானில மெங்கும் நம்மை அறியச் செய்த உத்தமரின் உடலிலே தீ வைத்த அந்த உலுத்தன், எவ்வளவு கொடிய துரோகம் செய்து விட்டான் என்பதை எண்ணும் போதே, நமது இருதயத்தில் பட்ட தீ, மேலும் மூண்டுவிடுகிறது. நாம், மிக மிக, மகத்தான நஷ்டத்துக்கு ஆளாக்கப்பட்டு விட்டோம். கட்சிகளை, கட்டுகளை, ஆசாபாசங்களை, கோபத் துவேஷங்களைக் கடந்து நின்ற ஒரு உத்தமரை இழந்து விட்டோம்.

இந்தத்துக்கம், கட்சிக் குரோதச் சுவர்களை இடித் தெறிந்து, நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றாக்கிப் பிணைக் கிறது. பல தலைவர்களின், ஆறுதலுரைகளிலும் இந்த எண்ணம் திண்ணமாகத் தெரிகிறது. மனதைக் கட்டுக்குக் கொண்டுவர வேண்டிய நேரம் - தவறினால், துக்கம், மக்களைக் கல்லாக்கி விடும் - அவ்வளவு ஆழப் பாய்ந்துவிட்டது துக்கம்.

கடைசி முறையாக, அவரைக் காண, இந்தியாவிலே உள்ள, வெளிநாட்டுத் தூதுவர்களெல்லாம் ஓடோடி வந்து, அவர் பக்கம் நின்று புலம்பினர். சின்னாட்களுக்கு முன்பு, தங்கள் ஒப்பற்ற தலைவர் அவுங்சானை, கொலைபாதகனால் இழந்து தவிக்கும் பர்மியப் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். கவர்னர்கள் அவர் காலடியிலே நின்றனர் - வைசிராய் அவர் நிலைகண்டு வாய்விட்டு அழுதார் - வல்லரசுகளிலே எல்லாம், வருத்தம் தெரிவித்து அறிக்கைகள் வெளி வந்தன. ஆனால்,

இவை அவ்வளவும் உள்ள துக்கத்தை அதிகப்படுத்துவனவாக அமைகின்றனவேயொழிய, குறைக்கும் வழிகளாகத் தோன்றவில்லை. எந்தவிதமான ஆறுதலை நாடினாலும், அதனைத் தாண்டி அப்பால் நம்மை இழுத்துச் சென்று, இந்தத் துக்கம் தாக்குகிறது. இந்தப் பயங்கர நிலையிலிருந்து விடுபடும் ஒரே வழி, இதேதுக்கத்தை, நம்மை ஒரு சேரப் பிணைக்கும் சக்தியாக மாற்றுவதுதான். இந்த மகத்தான வேலையை முன்னிறுத்தி, அழுத கண்களுடன் நின்றபோதிலும், அறநெறியைக் கடைப்பிடித்து, நிற்போமாக. இவ்வளவு பெரிய க்ஷ்டத்தைத் தாங்கிக் கொள்வோமானால், இனி, நமது வாழ் நாளிலே, நம்மை வதைக்கக்கூடிய அளவுக்கு ஆற்றலை, எந்தக் கஷ்டமும் பெற முடியாது. அவர் மறைந்தார் - அவரை அவனி மறவாது - அவருக்கு இருந்த மன உறுதியில் ஆயிரத்திலோர் பாகமேனும், நாம் பெற்றால்தான், அவனி நம்மைக் கண்டு, அவர் வாழ்ந்த நாட்டுமக்கள்தான் இவர்கள், என்று கூறும். மனிதனுக்குள் இருந்துகொண்டு, சமயம் கிடைத்தபோதெல்லாம் வெளி வந்து வெறிச்செயல் புரியும் மிருகத்தை அடக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அகில உலகமும் நம்முடன் இந்தத் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு, நாட்டுக்கு ஏற்பட்டுள்ள புதிய நிலையைக் காப்பாற்ற, இந்த உறுதியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏகாதிபத்தியக் கோட்டையைத் தகர்த்து, யுக யுகமாக மூடிக் கிடந்த ஆலயங்களைத் திறந்து, மக்களிடையே புதிய மாண்பைக் காண்பதற்குத் தளராமல் பாடுபட்டு வந்த புனித புருஷனை இழந்துவிட்டோம் - நமது வாழ்நாளிலே நேரிட்ட இந்த மகத்தான நஷ்டத்துக்கு, பலப்பல தலைமுறைகளுக்குப் பிறகும், ஈடு செய்யக்கூடிய நிலை வராது.

இந்து மதத்தில் ஏறிப்போய், ஊறிப்போயிருந்த கேடுகளை எல்லாம், தமது பரிசுத்த வாழ்க்கையாலும், தூய்மையான உபதேசத்தாலும், புதிய தத்வார்த்தத்தாலும், நீக்கும் காரியத்தில் அவர் ஈடுபட்டிருந்தார். இந்த அரும் பணியால், அன்புமார்க்கம் தழைக்கும், அனைவரும் ஆண்டவனின் குமாரர்களே என்ற உண்மை துலங்கும் என்று மனமார நம்பினார். அந்தோ! இந்த அகத்தூய்மையோ புறத் தூய்மையோ, நெடுங்காலமாகக் குவிந்து வளர்ந்து போயுள்ள மத வெறியர்களைத் திருத்தாதே என்று கூறி வந்தோம் - அவர் யாரிடமிருந்து அன்பு மார்க்கத்தை எதிர்பார்த்தாரோ, அங்கிருந்தே அவர் உயிரைக்குடிக்கும் ஒரு வெறிபிடித்த இந்து கிளம்பினான். இவன் இந்துமார்க்கத்தையும், இந்து அரசையும் நிலைநாட்டும் நோக்கம் கொண்டவன் என்று கூறப்படுகிறது. ஹைதராபாத் சமஸ்தான சத்யாக்கிரகத்திலும் கலந்து கொண்டவனாம். பெயர் நாதுராம் விநாயக கோட்சே. உலகை நோக்கி, நமது உள்ளத்தை நோக்கி, "உத்தமரை வீழ்த்திவிட்டான் ஓர் உலுத்தன். அவருடைய உடலை நாங்கள் இழந்துவிட்டோம் - அவருடைய உத்தமக் கொள்கை களின் மூலம், அவர் இனி என்றென்றும் வாழ்வார். இந்தத்துக்க நாளன்று, அவர், எங்கள் ஒவ்வொருவருடனும் கலந்து விட்டார் - இனி அவரை எங்களைவிட்டுப் பிரிக்க முடியாது. யமுனைக்கரையிலே, அவருடைய சடலத்தைக் கொளுத்தினோம், ஆனால், வீடு திரும்புமுன், எங்கள் உள்ளங்களிலே அவர் இடம் பெற்றிருப்பதைக் கண்டோம். அவர் இதோ இருக்கிறார். எங்கள் நற்குணத்துக்கும் நல்ல நடத்தைக்கும் காரணமாக விளங்கி வருகிறார்" என்று

கூறவேண்டும் - சொல்லால் மட்டுமல்ல செயலால் - அனைவரும்.

தோற்றம் : 3-10-1869

மறைவு : 30-1-1948

*(திராவிட நாடு - 1-2-48)*

# 54. அவர் காண விரும்பிய நாடு

12-2-48

30-1-48ல் படுகொலைக்கு ஆளாகி உயிர் துறந்த உத்தமர் காந்தி அடிகளின், நீத்தார் வழிபாட்டு நிகழ்ச்சி, 12-2-48ல் இந்தியா முழுவதும் நடைபெற்றது. யமுனை, கங்கை, சிந்து, கோதாவரி, காவிரி, வைகை முதலிய பல நகர்களிலும் நீத்தார் வழிபாடு நடைபெற்றது. கவர்னர் ஜெனரலும், மாகாணக் கவர்னர்களும், மந்திரிமார்களும், தலைவர்களும், பொதுமக்கள் எல்லோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து, உத்தமருக்கு உள்ளன்புடன் மரியாதை செலுத்தினர்.

"பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்க வேண்டும். மக்களில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்பதே இருக்கக்

கூடாது. எல்லாச் சமூகத்தினரும் அன்யோன்யமாய் வாழ வேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன்".

இதுவே, உலக உத்தமர் காந்தியாரின் இலட்சியம் என்று அறிவிக்கிறார் பண்டித நேரு.

ஒரு நாடு, அன்னியரிடம் அடிமைப்பட்டு, விடுதலைப் போர் தொடுத்து, பிறகு தன்னாட்சி பெறுவது, மகத்தானதோர் சம்பவம் - உலக வரலாற்றில். ஒவ்வோர் சமயம், படை பலத்தாலோ, இராஜ தந்திர பலத்தாலோ, ஏதேனும் ஓர் நாடு, பிற நாடுகளை அடிமை கொள்வதும், அடிமைப்பட்ட நாட்டின் செல்வத்தைச் சுரண்டுவதும், உலக வரலாற்றிலே, எங்கோ ஓர்மூலையிலே காணப்படும் சிறு விஷயமல்ல - அந்த வரலாற்றிலே, மிக முக்கியமான பகுதியே, இந்தச் சம்பவத்தைக் கொண்டதுதான்.

அலெக்சாண்டர், ஜூலியஸ் சீசர் போன்ற அதிமகா வீரர்கள் கால முதற்கொண்டு, பெர்லின் சர்வாதிகாரி ஹிட்லர் காலம் வரையிலே, இந்த நாடு பிடிக்கும் போக்கு, இருந்த வண்ணமிருக்கிறது. அவர்கள் காலத்திலே, போர்த்திறனோடு வீர உணர்ச்சியும் தன்னம்பிக்கையும் ஊட்டப்பட்ட மக்கள் உண்டாயினர், அந்தந்த நாடுகளில். அவர்களைப் பலிகொடுத்து அந்த மாவீரர்கள், மண்டலம் பலவென்று கடைசியில் மாநில முழுவதையுமே தமது ஏகபோக ஆடசியின் கீழ் கொண்டு வரவேண்டுமென்ற பேராசை கொண்டு நின்றனர். அதேபோது, போதுமான பலமும், தக்க தலைவரும் இல்லாமல், உள்நாட்டுக் குழப்பமும் பேதநிலையும் கொண்டு இருந்த நாடுகள், புயலிற்

சிக்கிய நெடு மரங்களெனச் சாய்ந்தன. சரிந்த அரசுகளின்மீது, வெற்றி பெற்றவர்கள், சர்வாதிகாரம் செலுத்தினர். அடிமைப்பட்ட நாடுகளிலே, மக்களின் அழுகுரல் கிளம்பி, பிறகு, விம்முவதாக அது குறைந்து, பிறகு ஏக்கமாகி, பிறகு, அதை வெளியே காட்டுவதும் குற்றம் என்று கோல் கொண்டோன் மிரட்ட, அதனையும் நீக்கிவிட்டு, உணர்ச்சி யற்றுப் போன நிலையும் பிறந்ததுண்டு. ஆனால், இந்த இருள், நிலைத்திருப்பதில்லை - ஒளி கிடைக்க, தாமதம் ஏற்படினும், இடையே சொல்லொணாச் சங்கடம் விளையினும், விடுதலைச் சுடரொளி, எப்படியும் கிளம்பித் தன் வேலையை வெற்றிகரமாகச் செய்து வந்திருக்கிறது. அவ்வப்போது, ராணுவ பலத்தால் அமைக்கப்பட்ட பல்வேறு சாம்ராஜ்யங்கள், சிலபல காலத்துக்குப் பிறகு, சிதறி, பழையபடி, தனி அரசு கொண்ட பல நாடுகளாகி விட்டன. விடுதலைப்போர் முரசொலி, அடியோடு எங்கும் எப்போதும், அழிந்து படுவதில்லை. முரசு இருந்து, அதைக் கொட்டும் திறம் உடையார் முன்வராமல் இருந்ததுண்டு, முரசறையும் திறமுடையோர் இருந்து, முரசு அமையாது இருந்ததுண்டு, ஆனால், அடிமைப்பட்ட எந்த நாடும், எப்பாடுபட்டேனும், எத்தனை முறை தோற்றேனும், விடுதலையைப் பெறாமல் போனதில்லை. ஏறத்தாழ, இயற்கையின் கட்டளை, இந்த விடுதலை வேட்கை. எனவே தான், எவ்வளவு பெரிய பலமுள்ள நாட்டின் பிடியிலே சிக்கி விட்டாலும், ஓர்நாள், விடுதலை பெறுவோம் என்ற எண்ணம் கருகுவதில்லை.

விடுதலைப்போர் நடத்தப்படும் காலம், நாட்டின் வரலாற்றிலே சுவையுள்ள பகுதி வீரச் செயல்கள், தியாக

நிகழ்ச்சிகள் நிரம்பிய பகுதி. குன்றுகள் கோட்டைகளாகி, வீதிகள் போர் முகாமாகி, வீடுகளெல்லாம் பாசறையாகி, நாட்டு மக்கள் வீரர்களாகும் வேளை அது. அப்போதெல்லாம், அவர்களின் ஒரே நோக்கம், ஒரே இலட்சியம், தன்னாட்சி பெறுவது என்பதுதான். புலியை விரட்டி அடித்துக் கொல்ல வேண்டுமெனத் தோட்டக்காரர் தன்துணைவருடன் கூடி ஆயுதமெடுத்து, புலி தப்பி ஓடாதபடி, நாற்புறமும் நல்ல முறையில் காவல் அமைத்து தீரமாக உள்ளே நுழைந்து புலியுடன் போராடுகிறபோது எப்படியாவது, இந்தப் புலியை அடித்துக் கொன்றுவிட்டால் போதும், என்ற ஒரே எண்ணம்தான் தோன்றும். புலி, கொல்லப்பட்டதும், "அப்பா! கொன்று விட்டோம் புலியை. இனிப்பயமில்லை" என்ற ஆறுதல் தோன்றும் - ஆயாசமும் ஏற்படக்கூடும். அது போலவே பல்வேறு நாடுகளிலே, விடுதலைப்போர் நடந்த காலங்களிலெல்லாம், எப்படியாவது, நம்மை அடிமைப் படுத்திய அன்னிய ஆட்சியை ஒழித்து, நாட்டிலே தன்னாட்சியை ஏற்ப்டுத்த வேண்டும், என்ற ஒரே எண்ணம், ஒரே இலட்சியமே தலைசிறந்து விளங்கிற்று. அந்த ஒரே குறிக்கோளுடனேயே, மக்கள் வீரமாகப் பணியாற்றினர் - அவர்களை நடத்திச் சென்ற தலைவர்களும் பல நாடுகளிலே, விடுதலை வேட்கையை மட்டுமே, முக்கியமானதாக்கினர். பல நாடுகளிலே, விடுதலை கிட்டியதும், மக்கள், தமது நோக்கம் ஈடேறிவிட்டது அன்னியன் விரட்டப்பட்டான், தாய்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது, சுதந்திரக் கொடி கெம்பீரமாகப் பறக்கிறது, ஆகவே நமது வேலை முடிந்தது, இனிச் சொந்த வேலையைப் பார்ப்போம் என்று எண்ணி அங்ஙனமே, பழையபடி 'பிரஜைகள்' ஆகிவிடுவதே முறை எனக்

கொண்டனர் - புலியைக் கொன்றான பிறகு தோட்டக்காரன், தன்வேலை முடிந்தது என்று எண்ணிடுவது போலவே. புலி புகுந்ததால், ஏற்பட்ட சேதம், புலியைக் கொல்லப்போரிட்டதால் உண்டான சேதம், ஆகியவைகளைப் போக்குவது, வேறு ஏதேனும் துஷ்ட மிருகங்கள் புகாதபடி பாதுகாவல் அமைப்பது போன்ற காரியங்களைக் கூடத் தோட்டக்காரன், கொஞ்ச காலம் பொறுத்துதான் செய்ய முற்படுவான். அது போலவே, அடிமைப்பட்டிருந்தபோது ஏற்பட்ட அவதிகளை யும் அல்லல்களையும் துடைத்திடும் அரும்பணியை, விடுதலைப் போரில் வெற்றி பெற்ற பல நாடுகள் செய்யாமல் இருந்து விட்டதுண்டு - காலங்கடந்தபின் செய்யத் தொடங்கியதுமுண்டு

இந்தியாவின் விடுதலை சம்பந்தமாகக் கவனித்தாலோ, இவை போல மட்டுமல்ல, மற்ற நாடுகளிலே, ஏற்பட முடியாத, நிலைமை இங்கு இருக்கக் காணலாம்.

அடிமைப்பட்ட பல நாடுகளிலே, சுதந்திரம் வேண்டும் என்பது மட்டுமே பிரச்னை - இங்கோ, சுதந்திரமும் வேண்டும், புதிய சமுதாய அமைப்பும் வேண்டும் என்று கேட்க வேண்டிய நிலைமை.

மற்ற நாடுகளிலே எல்லாம், அன்னிய ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்பது மட்டுமே விடுதலைப்போர் முழக்கமாக எழ வேண்டிய நிலைமை இருந்தது. இங்கோ, விடுதலை வேண்டும் என்று போராடத் தொடங்கியபோது, அன்னிய ஆட்சி ஒழிய வேண்டும் என்பது மட்டும், முழக்கமாக

இல்லை - அந்த ஒரு முழக்கம் மட்டும் போதுமானதாகத் தெரியவில்லை. அன்னிய ஆட்சி மட்டும் தொலைந்தால் போதும் என்ற அளவுடன், நின்றுவிட மனமில்லை - ஏனெனில் இந்நாட்டு அமைப்பு முறை, தேவையான, வேறுபல இலட்சியங்களைக் கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்தி விட்டது. எனவேதான் இங்கு சாதாரணமாக, அடிமைப் படுத்தப்பட்ட மற்ற நாடுகளிலே, அன்னிய ஆட்சி ஒழிய வேண்டும் என்ற ஒரே ஒரு முழக்கம் மட்டும் கிளம்பியது போலல்லாமல்,

அன்னிய ஆட்சி ஒழியவேண்டும்.
மக்களாட்சி மலர வேண்டும்.
இந்து-முஸ்லிம் ஒற்றுமை வேண்டும்.
தொழில்கள் பெருக வேண்டும்.
கல்வி பரவ வேண்டும்.
ஜாதிபேதம் ஒழிய வேண்டும்
தீண்டாமை போக வேண்டும்
கிராமம் சீர்பட வேண்டும்
வறுமை போக வேண்டும்
சுரண்டல் முறை ஒழிய வேண்டும்.

என்ற வேறுபல இலட்சிய முழக்கங்கள் கிளம்பின. மற்ற நாடுகளிலே நடைபெற்ற விடுதலைப்போர் சூழ்நிலைக்கும் நமது நாட்டிலே விடுதலைப்போர் நடந்த போதும், அதற்குப் பிறகும் உள்ள சூழ்நிலைக்கும் இது ஓர் மகத்தான வித்தியாசம் - இதிலேதான், எதிர்காலத்தை உருவாக்கும் சூட்சமும் இருக்கிறது.

சூதாடி ராஜ்யத்தைத் தோற்றுவிட்ட நளன் மீண்டும் ராஜ்யத்தைப் பெற்ற கதைக் காலத்திலிருந்து, மகத ராஜ்யத்தை சேதி நாட்டரசன் பிடித்துக் கொண்டான் என்றுள்ள சரிதக்காலம் வரையிலே, ஒரு ராஜ்யம், ஒரு அரசன் கரத்திலிருந்து வேறோர் அரசனிடம் சிக்கி, மீண்டும் சொந்த அரசனிடம் வந்து சேரும், சம்பவம், கொடிகள் மாறுவது, அதிகாரிகள் மாறுவது என்ற இவ்விதமான அளவோடுதான் இருக்கும். ஆனால், இக்காலத்தில், அதிலும், இந்தியாவில் நடைபெற்ற விடுதலைப்போர், கொடி மாற்றமோ, அதிகார மாற்றமோ மட்டும், குறிக்கோளாக அமைந்ததல்ல - தன்னாட்சி மட்டுல்ல, இலட்சியம், அந்தத் தன்னாட்சி, மக்களாட்சியாக, அந்த மக்களாட்சியும், நல்லாட்சியாக அந்த நல்லாட்சியும் மக்களுக்குப் புதிய வாழ்வை, முழு வாழ்வைத் தரக்கூடிய ஆட்சியாக அமைதல் வேண்டும் என்ற இவ்வளவு உன்னத மான இலட்சியத்தையும் உள்ளடக்கியதுதான் - எனவேதான் இங்கு, விடுதலைப்போரின் போது கிளம்பியது ஒரு முழக்கமல்ல, பல; ஒரே ஒரு குறுகிய இலட்சியமல்ல, பரந்த இலட்சியம் - எனவேதான் மறைந்த உத்தமர், அன்னியராகிய வெள்ளையர் நீங்கிய, இந்தியர் அரசாள்கிற இந்தியாவைக் காண்பதே எனது இலடசியம் என்று மட்டும் கூறாமல் பண்டிதர் எடுத்துக் காட்டியது போல,

ஏழை ஈடேறவேண்டும்
ஏழை உரிமை பெறவேண்டும்
ஜாதிபேதம் ஒழிய வேண்டும்
ஒற்றுமை மலர வேண்டும்

என்று கூறினதுடன், இத்தகைய இந்தியா உருவாக வேண்டும், அதுவே என் இலட்சியம், அதற்கே நான் பாடுபடுகிறேன் என்று கூறினார். மற்ற நாடுகளின் நலிவு அன்னிய ஆட்சியின் போது, அதன் விளைவாகவே ஏற்பட்டதால், அந்த நாடுகளிலே தோன்றிய தலைவர்கள், நாட்டின் நலிவை நீக்க, அன்னியரை விரட்டினாலே போதும் என்று கருதினர் அவர்கள் அங்ஙனம் கருதினதில் தவறுமில்லை. அதுபோல இங்கு அன்னியர் விரட்டப்பட்டு, நாடு, தன்னாட்சி பெறுவது மட்டுமே போதும் என்று கருதினால், நிச்சயமாகத்தவறு - ஏனெனில் இங்கு, அன்னிய ஆட்சியினால் மட்டுமல்ல, அதற்கு முன்பிருந்தே, நமக்கென்று தோன்றிய சில அரசர்களாலும் அவர்கள் அனுஷ்டித்த முறைகளாலும், நமது சமூக அமைப்பினாலும் அதன் பயனாக ஏற்பட்ட பழக்க வழக்கங்களாலும், நமது வாழ்க்கை இலட்சியத்தினாலும் அதை ஒட்டி கட்டிவிடப்பட்ட வெட்டி வேதாந்த முறைகளினாலும், நமது மத அமைப்பினாலும் அதைப் பயன்படுத்திக் கொண்ட தன்னலக்காரரின் போக்கினாலும், பலப்பல, கேடுகள் முளைத்து, காடெனக் கிடந்தன. எனவே அன்னிய ஆட்சி அகன்றால் நாட்டின் நலிவு நீங்கிவிடும் என்ற அளவோடு, அடிகள், நிற்கவில்லை - அன்னிய ஆட்சியை நீக்குவதுடன், மக்களாட்சிக்கு, நல்லாட்சிக்குத் தடையாக உள்ள, சகல கேடுகளையும் நீக்கியாக வேண்டும் என்று தெளிவாகக் கூறினார்.

அவர்காண விரும்பியக் காட்சி இந்தியர் ஆளுகின்ற இந்தியா என்பது மட்டுமல்ல, தீண்டாமை அடியோடு ஒழிந்து, மதத்தின் மாசும் தூசும் போக்கப்பட்டு, ஜாதி பேதம் களைந்

தெறியப்பட்டு ஏழையின் வாழ்விலே, புதியதோர் மலர்ச்சி ஏற்பட்டு, நாடு, இலட்சிய பூமியாக இருக்க வேண்டும் என்பதாகும்.

நான் காணவிரும்பும் இந்தியா, இவ்விதமானது - என்று அவர் உரைத்துவிட்டார், உயிர்துறக்கும் நேரம் வரையிலே அதற்காகவே உழைத்தார் - அவர் உயிர் பிரியும் போது, அவருடைய மனக்கண்முன், எத்தகைய இந்தியா தெரிந்திருக்கும். அவர் காண விரும்பிய காட்சியா! அல்லவே! அவர் காண விரும்பிய இந்தியாவில் கோட்சே இருக்க முடியுமா - இருக்க இடமுண்டா? அவர் காணவிரும்பிய இந்தியாவில் சேரிகள் உண்டா? அவர் காண விரும்பிய இந்தியாவில் ஜாதிபேதக் கொடுமை இருக்குமா? அவர் காணவிரும்பிய இந்தியாவில், ஏழையின் வாழ்வு இருண்டு கிடக்குமா? அவர் அவ்விதமான இந்தியாவை, அல்ல, ஏழைக்கு வாழ்வு தரும் இந்தியாவை, எல்லோரும் ஓர்குலம் என்ற இலட்சியத்தைக் கொண்ட இந்தியாவைக் காண விரும்பினார். அந்த இலட்சிய பூமியை உருவாக்குவதையே பணியென்று கொள்வதுதான், அவருடைய காலத்திலே பிறந்தவர்களின் கடமை - அப்போதுதான் எதிர்காலத் தலைமுன்றகள், உத்தமர் மறைந்தார் - ஆனால் அவருடைய உள்ளத்திலிருந்த இலட்சியத்தை அவர் காலத்தவர், உருவாக்கிக் காட்டினர், என்று பெருமையுடன் பேசுவர். விடுதலைப்போர், அன்னிய ஆட்சியாளரிடமிருந்து, நாட்டை மீட்பது என்ற அளவோடு மட்டும், உள்ளது என்ற முறையிலே அவர் கொள்ளவில்லை - அறிவித்தது அதுஅல்ல - ஒரு இலட்சிய பூமியைக் காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார். நாட்டை அன்னிய

ஆட்சியிலிருந்து விடுவிக்கும், விடுதலைப்போர் கட்டம், அன்னிய படைபலத்துக்கு மட்டுமே நாம் பயப்படக்கூடிய நிலையை உண்டாக்கக்கூடியது. விண்ணிலிருந்தும், மண்ணி லிருந்தும், கடலிலிருந்தும் அன்னியர் எதிர்த்து அடிப்பர், விடுதலைப்போரின் அந்தக் கட்டத்தில். ஆனால் விடுதலைப் போரின் மற்றோர் கட்டத்தின்போது, மறைந்தவரின் மனக்கண் முன் தோன்றிய நாடு உருவாவதற்காக நடத்தப்படும் விடுதலைப்போரின் போது, அன்னியரிடமிருந்தல்ல, நம்மவரி டமிருந்தே, விண்மண் கடல் என்னும் இடங்களிலிருந்து மட்டுமல்ல, நம் ஒவ்வொருவர் மனதிலேயே இருந்துங் கூட, சந்தேகம், பயம், சஞ்சலம், நம்பிக்கைக் குறைவு, பழக்க வழக்கம் ஏற்படுத்தியதால் உண்டான பற்று பாசம், ஆகிய பல்வேறு எதிரிகள் கிளம்பக்கூடும் - இவை களை எல்லாம் முறியடிக்க வேண்டும். உலகம், இதை நாம் செய்ய முடியுமா, நமக்கு அந்த ஆற்றல் இருக்கிறதா என்று பார்க்கக் காத்துக் கொண்டிருக்கிறது. நாம், அவருடைய காலத்தவர், அவருடைய கருத்துக்களை அறிந்தவர்கள் என்பதற்கு. நாம் உகுத்த கண்ணீர் மட்டும் உலகுக்கு அத்தாட்சியாகி விடாது. அவர் எத்தகைய இந்தியாவைக் காண விரும்பினாரோ, அதை உருவாக்கும் அரும்பணியை நாங்கள் ஏற்று நடத்துகிறோம் பாரீர் என்று கூறி, வெற்றிகரமாக நடத்துவதுதான், தகுதியான அத்தாட்சியாகும். அவர்காண விரும்பிய இந்தியாவை, மீண்டும் கவனத்திற்குக் கொண்டு வருவோம்.

ஏழை ஈடேறி ஏழை உரிமை பெற்றும் விளங்கும் நாடு.

மக்களில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற நிலை இல்லாத நாடு. எல்லோரும் தோழமையுடன் வாழும் நாடு.

இந்த நாடு, - காந்தி நாடு - காண்பதுதான், நமது தலைமுறைக்கு உள்ள வேலை. இதைச்சாதிக்க அனைவரும் ஒன்றுபட, நமது தலைவர்களெல்லாம், கூடிப்பேசி, அனைவரின் ஆற்றலையும் ஒருமுகப்படுத்தி, இந்த அரும்பணியை வெற்றிகரமாக முடிக்கவேண்டும். நாடெங்கும், நகரெங்கும் இலட்சக்கணக்கிலே கூடினர் மக்கள் - அவர்கள், மறைந்த உத்தமருக்குத் தமது கண்ணீரை அர்ப்பணித்தனர் - அவர் காட்டிய வழி சென்று தீட்டிய சித்திரத்தைக் காண, இனிப்புதியதோர் ஆர்வத்துடன், அனைவரும் ஒன்றுபட்டு பணிபுரிய மக்களுக்கு நேர்வழி காட்டுவதும், ஒற்றுமைக்கான திட்டம் தீட்டுவதும், தலைவர்கள் கடமை.

*(திராவிட நாடு - 15-2-48)*

# 55. அவர் சிந்திய இரத்தம்!

மகாராஜாக்கள் இருந்தனர் - இன்றும் இருக்கின்றனர்.

மடாதிபதிகள், இருந்தனர் - இன்றும் இருக்கின்றனர்.

மாயாஜாலம், மகேந்திர ஜாலம் தெரியும் என்று கூறிக் கொண்டவர்கள் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர்.

ஆரூடம் கணித்து, இனி இன்னின்னபடி ஆகும் என்று கூறும் ஆற்றல் எமக்குண்டு என்று கூறுபவர்கள் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர்.

யோகம் தெரியும், ஆண்டவனைக் காட்ட எம்மால்

முடியும், அகிலமெல்லாம் அடக்கிடும் வித்தை தெரியும் என்று பேசினவர்கள் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர்.

அவர்கள், இருந்தனர் என்பதுமட்டுமல்ல, நிலைமை -

மகாராஜாக்களுக்கு வரி செலுத்திக் கொண்டு, பயபக்தி விசுவாசம் காட்டிக் கொண்டு, மக்கள் இருந்தனர்.

அந்த மகாராஜாக்கள், தேவ கட்டளையால், பூர்வ புண்யவசத்தால், சிங்காதனம் ஏறும் பாக்கியம் பெற்றார்கள் என்று மக்கள் எண்ணினர்.

மதகுருமார்களின் தங்கப்பல்லக்குக்கு காணிக்கை செலுத்தினர். திருஅருளால் அவர்கள் திவ்விய புருஷர் களானார்கள். ஆகவே அத்தகையவர்களின் "தெரிசனமே" பாபத்தைப் போக்கும் என்று மக்கள் எண்ணினர் - அந்த மதகுருமார்கள் மனம் வைத்தால், எதுவும் நடைபெறும் என்று மனமார நம்பினர்.

மாயவித்தை தெரிந்தவர்களால், துஷ்டதேவதைகளைக் கட்டுப்படுத்த முடியும், அவர்கள் கூப்பிட்ட உடனே குட்டிச் சாத்தான் ஓடிவருவான், நெருப்பு தண்ணீராகும், நீர், நெருப்பு மாகும், ஆளை மிருகமாக்குவான், மிருகத்தை ஆளாக்குவான், என்றெல்லாம் நம்பினர் - அவர்களிடம் பயப்பட்டனர் - அவர்களின் மிரட்டலைக்கண்டு, அடி பணியவும் சம்மதித்தனர்.

யோகிகளால், புவனத்தை அடக்க முடியும், தேவ இரகசியத்தை அறிய முடியும், அவர்களிடம் அபாரமான ஆற்றல் உண்டு, அவர்கள் நினைத்தால் அதுபோலவே நடை

பெறும் என்று எண்ணினர். யோகிகளையும் பொதுவாகவே சாது சன்யாசிகளையும், மக்களை ஈடேற்றும் மகத்தான சக்தி வாய்ந்தவர்கள் என்று கருதி தொழலாயினர் - அவர்களின் அருளைப்பெற ஆவல் கொண்டனர்.

அப்படிப்பட்டவர்களெல்லாம், ஆங்கிலேய ஆட்சி இங்கே ஏற்பட்டதைத் தடுக்கவில்லை - ஏற்பட்டபிறகு தத்தமது ஆற்றலை உபயோகித்து, அதை எதிர்த்து ஒழிக்கவில்லை - ஏன் அதைச் செய்யவில்லை என்று மக்கள் கேட்டதுமில்லை.

அவர் இருந்தனர் - மக்கள் வணங்கி வந்தனர். ஆங்கிலேயனும் வந்தான், மக்கள் அவர்களிடம் அஞ்சிக் கிடந்தனரேயொழிய, ஐயன்மீர்! உமக்குள்ள ஆற்றலிலே ஆயிரத்திலோர் பாகமேனும் செலவிட்டால், இந்த ஆங்கிலேயன் மிரண்டோடுவானே, அதைத் செய்யலாகாதா என்று கேட்கவில்லை - அவர்களின் ஆற்றலோ, அல்லது ''காலதேசவர்த்தமானத்தினாலோ'' ஆங்கிலேயன், எப்போதுதான் போய்த்தொலைவான் என்பதைக் கூறும்படி ஆற்றல்மிக்க ஆரூடக்காரனையும், மக்கள் கேட்டதில்லை. அவர்களும், மீனாவுக்கும் முத்துவுக்கும் பொருத்தம் பார்ப்பது, மேஷ ரிஷபக் கணக்குக் கூறுவது என்று கூறிக் கொண்டிருந்தார்களேயொழிய, கிரிப்ஸ் திட்டம், புதிய சட்டம் என்ற இவைபற்றி ஏதும் கணக்கெடுத்துக் கூறினதில்லை.

அவர்களெல்லாம் அன்னிய ஆட்சியைத் தடுக்க முடியாமலும், போக்கியாக வேண்டுமே என்று எண்ணாமலும்

இருந்தனர் என்றாலும், மக்கள் அவர்களிடம், வழக்கப்படி, மரியாதை காட்டியும், காணிக்கை செலுத்தியும், பயபக்தி விசுவாசத்தோடும் இருந்து வந்தனர்.

இவர்களின் கண்முன்னாலே, வெள்ளைக்காரர்கள் உலவினர் - இவர்கள் அக்காட்சியைக்கண்டு தமது ஆற்றல் பயனற்றுப் போயிற்றே என்று வெட்கித்தலை குனியவுமில்லை - தங்களிடம், மக்கள் எவ்வளவு மரியாதை காட்டுகிறார்கள் என்பதை அன்னியனுக்குக் காட்டி, உனக்கு ஒருவகையில் செல்வாக்கு, எங்களுக்கு மற்றோர் வகையிலே என்று கூறிக்கொள்ளும் முறையிலேயே நடந்து கொண்டனர். மக்களோ, நம்மை ஆண்டு ரட்சிக்க, பலபேர் உள்ளனர், அவர்களிலே ஆங்கிலேயனும் ஒருவன் போலும் என்று எண்ணிவிட முடிந்ததேயொழிய, இவ்வளவு ஆற்றல் படைத்த இவர்கள் ஏன், இன்னோர் அதிகாரியை அனுமதித்தனர் என்று சிந்தித்து உண்மையில் இவர்களுக்கு ஆற்றல் இல்லை என்று முடிவு செய்யவில்லை. சிந்திக்க இடந்தரவில்லை, பழக்கம். எனவே, அன்னிய ஆட்சி ஏற்பட்டதைத் தடுக்க முடியாத சக்திகள் அன்னிய ஆட்சியின்போதும் மக்களை மட்டும் எப்போதும்போலவே, ஆதிக்கம் செலுத்தி வந்தன.

"உங்கள் நாட்டு மன்னன் யார்?" என்று வெளியூரான் கேட்க, "எங்கள் நாட்டு மன்னனா! மன்னர் என்று சொல்லு, இருவர் உளர்" என்று உள்ளூரான் கூற, "இருவரா! எவ்விதம் அம்முறை ஏற்பட்டது? யார், அவ்விருவர்" என்று வெளியூரார் கேட்க, "எமது மன்னர் இருவர், ஒருவர் கர்நாடகர், மற்றவர் குண்டுவீசி - குண்டுவீசி, கர்நாடகத்தைத் தோற்கடித்தார் -

இப்போது இருவரும் எம்மை ஆள்கிறார்கள்'' என்று உள்ளூரான் பதில் சொன்னால், எப்படி இருக்கும்! நமது நாட்டு மக்களை, யாரும் அவ்விதமாகக் கேள்வி கேட்க வில்லை - கேட்டிருந்தால், இப்படித்தான் ஏதேனும் ஓர் வேதனை கலந்த வேடிக்கை நிரம்பிய பதிலளித்திருக்க வேண்டிவரும். ஏனெனில், இந்தியாவிலே 500க்கு மேற்பட்ட ராஜாக்கள், அதைவிட அதிகத் தொகையிலே மதத்தின் பெயர் கூறி மக்களை ஆள்பவர்கள், யோகிகள், ஜால ஜாதகம் தெரிந்தவர்கள், இப்படிப்பட்டவேறு பலர். இவ்வளவு பேர் இருந்தும், இங்கிலிஷ்காரனும் வந்தான் - ''பத்தோடு பதினொன்று அத்தோடு இதுவொன்று'' என்று கருதி மக்கள் அவனையும் ஏற்றுக் கொண்டனர், அவனுக்கும் அடங்கி நடக்கலாயினர். புதியவனை அந்தப் பழைய சக்தி தடுக்கவில்லையே, அத்தகைய ஆற்றலைக் காணோமே, அவ்விதமிருக்க, நாம் ஏன், அந்தப் பழைய சக்திகளை, இனியும் போற்ற வேண்டும், நம்ப வேண்டும், என்று எண்ணத் தொடங்கினவர்களின் தொகை, மிகமிகச் சொற்பம். மற்றவர்களோ, வெள்ளையராட்சி ஏற்படுவதற்கு முன்பு எப்படிப் பேசி வந்தனரோ பயபக்தியுடன், அதே முறையிலே தான், அந்தப் பழைய சக்திகளைப் பற்றிப் பேசி வந்தனர்.

''அவருக்கு அம்பாள் பிரசன்னம்''

''அவர் ஊமையைப் பேசச் செய்தார்''

''அவர் அனுமத் உபாசி''

''இவருக்கு அடயோகம் தெரியும்''

"இந்த ராஜாவுக்கு 76 மனைவிமார்"

"இவர் கருத்தரிக்கும்போதே ஆணா பெண்ணா என்று அறிந்து கூறினவர்"

"இவர் காட்டேரியை ஏவி விட்டுவிடுவதில் கைதேர்ந்தவர்"

"இவர் மண் அள்ளிக் கொடுத்தால் பொன் ஆகும்"

"இவர் நமது கடைப்பக்கம் வந்து போனால் போதும், இலட்சுமி தாண்டவமாடுவாள் நம்மிடம்" என்ற இது போன்ற புகழுரைகள், நம்பிக்கையுரைகள், நடந்தவண்ணந்தான் இருந்தன. நாட்டை அன்னியரிடம் இழந்திருக்கிறோம், இவர்கள் இவ்வளவு அற்புத புருஷர்கள் என்று நம்புகிறோம், இந்த இரண்டும் எப்படிப் பொருந்தும், என்று எண்ணவுமில்லை. 'பழைய சக்திகளின்' பெருமை, ஆடாமல் அசையாமல் இருந்து கொண்டிருந்தது.

இவ்வளவு அற்புதவான்கள்', ஆற்றலுள்ளவர்கள், 'மகாராஜாக்கள்' போன்றவர்கள் யாரும் மனதாலும் எண்ணாத மகத்தான காரியத்தை, ஒருவர் சாதித்தார்.

உத்தமர் காந்தியாரின் ஒப்பற்ற சக்தியை உள்ளபடி உணருவதற்கு, இந்தச் சூழ்நிலையை, நன்கு தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும். மனித சக்திக்கு மேற்பட்ட மகாசக்தி வாய்ந்தவர்கள் என்று மக்கள் பலகாலமாக, தலைமுறை தலை முறையாக, பழக்கமாக, யாராரை – அதாவது மகாராஜாக்களை, மத அதிபர்களை, யோகிகளை, சித்து விளையாடுபவர்களை,

மற்றும் இதுபோன்றவர்களைப் பாராட்டியும், வணங்கியும், காணிக்கை செலுத்தியும், வந்தார்களோ அவர்கள் யாரும் நாட்டுக்கு விடுதலையும், மக்களுக்கு நற்குணமும் ஏற்பட வேண்டுமென்பதற்காக, உத்தமர் காந்தியார்போல் உழைத்து வெற்றிகண்டது போலக் கண்டதில்லை. அவர் பிறந்தபோது, வானத்திலே ஓர் ஒளி தோன்றிற்று - வாழ்த்துவதற்குத் தேவர்கள் கூடினர், தீர்க்கதரிசி தோன்றுகிறார் என்று இயற்கை முறை மாறித் தெரிவித்தது - பட்டமரம் துளிர்த்தது - செத்தவன் பிழைத்திட்டான் - வெட்டாமல் ஆறு தோன்றிற்று, என்று எந்த அற்புத நிகழ்ச்சியும் ஏற்பட்டதாகக் கூறப்படவில்லை. அவர், எல்லோரையும் போலவே பிறந்தார் - போர்பந்தர் சமஸ்தானத்திலே. அவர் பிறந்த அன்று, வேறு எவ்வளவோ குழந்தைகள் பிறந்தன.

அவர் பிறந்த குலமும், குடும்பமும், குவலயம் அறிந்தது என்றோ, அருள் பெற்றது என்றோ, ஆலய அதிகாரம் படைத்தது என்றோ, அரசாள்வோரின் அந்தரங்க ஆதரவைப் பெற்றதென்றோ கூறுவதற்கில்லை. ஏழைக் குடும்பம் அல்ல - ஆனால் கோடீஸ்வரர்கள் அல்ல. அவர் சாதாரணத் தொட்டிலிலே தவழ்ந்து கொண்டிருந்தபோது, தங்கத்தாலான தொட்டிலிலே படுத்திருக்க, தாதிமார் தாலாட்டுப் பாடிக் கொண்டிருக்கும் சீமான் வீட்டுச் செல்லக் குழந்தைகள் எவ்வளவோ இருந்தன - இந்தியாவில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சமஸ்தானங்கள், ஆயிரக்கணக்கில் ஜெமீன்கள். ஜாகீர்கள், காட்டு ராஜாக்கள் மேட்டுக்குடியினர், வணிகவேந்தர்கள், ஏராளமல்லவா - அவர்களின் வீடுகளிலெல்லாம், பிறந்த குழந்தைகள்போல, மோகன்தாஸ்கரம்சந்த் காந்தி, பிறக்கும்

போதே, பிறரால் பெருமைப்படுத்தப்பட்டுத் தீரவேண்டிய செல்வமும் செல்வாக்கும் பெற்றவராக இல்லை.

கல்வித்துறையிலே அவர் பெற்ற வெற்றியும் கீர்த்தியும் விட, வேறு எவ்வளவோ பேர் பெற்ற விதமானதுதான் - சிலருக்குக் கிடைத்ததைவிடக் குறைவும்கூட. பாரிஸ்டர் படிப்பில் தேறினார் - அவருடன் தேறினவர்கள் அனேகர் - அதற்குப் பிறகு, பாரிஸ்டர் ஆனவர்களின் தொகை ஏராளம்.

சிறுவயதிலேயே அவருக்கு அருள் கிடைத்தது, அம்மையப்பன் அவர் முன் தோன்றி, அகில உலகும் புகழும் நிலையை நீ பெறப்போகிறாய் - ஆகவே நீ, கிழக்கு முகமாகப் பார்த்தபடி பத்மாசனத்திலே அமர்ந்து, பத்து ஆண்டுகள் நம்மை நோக்கித் தவம் கிடக்கவேண்டும், என்று அருள அம்மொழிப்படியே, அழகான ஆற்றோரத்திலே ஓர் பர்ணசாலை அமைத்துக் கொண்டு, மோகன்தாஸ் தவம் செய்தார் - அதன் பலனாக அவர் முன் மும்மூர்த்திகள் தோன்றினர் - என்று வழக்கமாகப் பெரியவர்களைப் பற்றிக் கூறப்படும் புராணமும் இவருடன் இல்லை.

ஆரூடம் கூறுபவர்கள் கூட அவர் அகில உலகப் புகழ் பெற்றபிறகு, அவருடைய 'ஜாதகம்' அப்படிப்பட்டது என்று கூறினரேயொழிய, அன்னையின் மடியிலே குழந்தை தவழ்ந்தபோது, ஆசானிடம் பாடம் கேட்டபோது, ஆங்கில நாட்டிலே படித்தபோது, ஆப்பிரிக்காவிலே உரிமைப் போர் துவக்கியபோதும்கூட, அவர், அகில உலகும் அதிசயிக்கத் தக்கவராக விளங்குவார் என்று முன்கூட்டி ஆரூடம் கூறவில்லை.

இவைகள் ஏதுமின்றி, நம்மில் ஒருவராகவே இருந்ததால், ஆனால் இன்று நாமும், உலகிலுள்ள நல்லறிவாளர்கள் அனைவரும், உத்தமர், உலகைத் திருத்த உழைத்தவர் என்று உள்ளம் உருகி உரைத்திடத்தக்க உயர்நிலை அடைந்ததுடன், உலக வரலாற்றிலே உன்னதமான இடம் மட்டுமல்ல, நிரந்தரமான இடத்தைப் பெற்றுவிட்டார்.

முன்பு கூறியபடி, அவருடைய பிறப்பு, வளர்ப்பு ஆகியவற்றிலே அற்புத சக்திகள் உடன் இருந்திருக்குமானால், அவருடைய இன்றைய உயர்நிலை குறித்து அதிசயப்படத் தேவையில்லை - அவர் அவ்விதமான சக்திகளோடு பிறந்தார் என்று கூறத்தோன்றுமே தவிர, அதிசயிக்கத் தோன்றாது. ஆண்டவனின் சக்தி அதனால் விளங்கிடும் அளவுக்கு அவர் பற்றி இராது. ஆனால், உண்மையான பெருமை, உண்மையான சிறப்பு, அவர் அவ்விதமான அதிசயப் பிறவியல்ல - நம் போன்றவர் - ஆனால், நாம் கண்டு அதிசயிக்கத் தக்கபடியான, உயர் நிலை பெற்றார் என்பதிலேதான் இருக்கிறது. தேன் இனிப்பாகத்தான் இருந்து தீரும் - வாதம் தேவையில்லை அதை விளக்க - சிபார்சு தேவையில்ல அதைப்பருக. தேன், எவ்வளவு இனிப்பாக இருக்கிறது தெரியுமா என்று கூறினால், கேட்பவர்கள் சிரித்து விட்டு, இது என்ன பேச்சப்பா - தேன் இனிக்காமல் வேறெப்படி இருக்கும் என்று கூறுவர். அது போலவே தேவ புருஷர்கள், அற்புதம் புரிவோர் என்று முத்திரை பொறிக்கப்பட்டு, கதைகள் சேர்க்கப்பட்டு, உலகிலே உலவுவோர் உலகினரின் வணக்கத்துக்குரியவராவது, சகஜம். ஆனால் மோகன்தாஸின் சிறு பிராயமுதல், இதுபோல ஏதும் அதிசயம் நிகழாமலிருந்தும், அவர் இன்று அடைந்திருக்கும்

உயர்நிலை, நமக்கு, நாம் இதுவரை மறந்துபோன அதிசய புருஷர்களை எல்லாம் விடநம் கவனத்துக்குக் கொண்டு வருகிறது என்றால், அந்த உத்தமருடைய உண்மையான பெருமை, இந்தச் சூட்சமத்திலேதான் இருக்கிறது. இதனைத் தான், உலக அறிஞர்கள் பாராட்டுகிறார்கள். கலமின்றிக் கடலைக் கடப்பது எப்படி அற்புதச் சக்தி என்று கருத வேண்டுமோ, அதுபோலவே, அற்புதப் பிறவி என்ற நிலை இன்றி எல்லோரையும் போலப் பிறந்து, எல்லோருக்கும் மேம் பட்டவராக, மகாத்மாவாக, மாநிலத்தவரால் கொண்டாடப் படுவது என்றால், அதுதான், உண்மையிலேயே உயர்வு.

இராமகிருஷ்ண அவதாரங்களோ, ஆழ்வாராதி நாயன்மார்களோ, சித்தர்கள் ஜீவன் முக்தர்களோ தங்கள் மக்கள் உருவிலே இருக்கும்போதே மக்களின் சுபாவத்தை மீறிய சக்திகளைப் பெற்றிருந்தனர் என்று, கதைகள் உள்ளன. பூதகியைக் கொன்றார், தாடகையைக் கொன்றார், காளீங்க மடுவில் குதித்தார், கடலுக்கு அணையிட்டார் என்பன போன்ற கதைகள் மூலம், அவர்கள், கடவுள் என்ற கருத்து பரப்பப்பட்டது - எனவே அவர்கள் புகழ் பெற்று விளங்கியதிலே, நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆனால் இந்த உத்தமர் - மானிட குலம் - அந்தக் குலத்துக்கு எந்தவிதமான ஆற்றல் உண்டோ, அதேவிதம் பெற்றார் - இருந்தும், மானிட குலத்துக்கு வழிகாட்டி என்றும், உலகப் பெரியார் என்றும், எல்லா நாட்டிலேயும் போற்றப்படும் நிலையைப் பெற்றார். அவர் பெருமை இதிலேதான் இருக்கிறது - அவருடைய மறைவால் உள்ளம் உருகும் நிலை ஏற்பட்டதன் முக்கிய காரணம் இதுதான்.

இராமகிருஷ்ணர்கள் என்ற புராண புருஷர்கள் போலல்லாமல், நமது காலத்தவர், மானிட குலத்தவர், மற்றவர் போலவே இயல்பான சக்திகளையே உடன்கொண்டு பிறந்தவர் எ்னினும், இன்று அவர், மற்றவர் சாதிக்காத காரியத்தைச் சாதித்திருக்கிறார். எனவேதான் நமது உள்ளத்திலே அவருக்கு உயர்ந்த இடம் கிடைத்திருக்கிறது.

மக்கள் மனதிலே இடம் பெற்றார் என்பது மட்டுமல்ல, இந்த அளவு உயர்வு பெறுவதற்காக அவர், நாட்டின் நடவடிக்கைகளைக் கவனிக்க மறுத்து, மக்களின் சுகதுக்கங் களைப் பற்றிய நடவடிக்கைகளிலிருந்து விலகி, யோகம், யாகம் செய்து கொண்டே, இருந்துவிடவில்லை. காதகனின் கைத்துப்பாக்கிக்குப் பலியாகும் கடைசி நிமிஷம் வரையில், மக்களோடு, மக்களுக்கான காரியத்தைத் தன்னலமற்ற முறையிலே, மகத்தான வெற்றியுடன் செய்து வந்திருக்கிறார். இதனைக் கவனிக்கும்போது, அற்புதம் செய்தவர்கள், என்போரிடம், ஏற்படமுடியாத பற்றும் பரிவும், மதிப்பும் இவரிடம் ஏற்படுகிறது. அழகிய ரோஜாவுக்கு, அற்புதமான வர்ணம் தீட்டிப்பார்க்க வேண்டாமல்லவா! நம்மைச் சொக்க வைக்கும் மயிலின் தோகைக்கு, பட்டாடை போர்த்த தேவை யில்லையல்லவா! முல்லைக்கு மணமும், தேனுக்கு இனிப்பும், நாம் கூட்டத் தேவையில்லையல்லவா! அதுபோலவேதான், எந்த உத்தமரின் மறைவு கேட்டு உலகம் உருகி அழுகிறதோ, அவருடைய உயர்வுக்கு, அவருடைய குணமும், செயலும், அவர் பெற்ற வெற்றிகளும், அதற்காக அவர் பட்ட கஷ்டங் களும், போதுமான கரணங்கள் - அவருடைய பெருமையை விளக்க நாம் ஏதும் புராணப்பூச்சு போடத் தேவையில்லை.

அவர், குருடனுக்குப் பார்வை வரச் செய்தார், முடவனை எழுந்து நடக்கச் செய்தார், ஊமையைப் பேசவைத்தார், மாயஜாலங்களைச் செய்தார், கந்துகமதக்கரியை வசமாய் நடத்திடும் சித்து விளையாடினார் என்று மகான்களைப் பற்றி மக்களிடையே கதைகள் உலவுவதுண்டு. அவர்ளில், யாரேனும், ஏதேனும் ஓர் அதிசயச் செயல் செய்திருப்பினும், அவர்களின் பெருமையையும் ஆண்டவன் அவர்களிடம் காட்டிய அன்பையும் விளக்க மட்டுமே அவை உதவும். யாரோ ஒருவருக்கு, யாரோ ஒரு மகான் கண்பார்வை வரச்செய்தார் – குருடு யாருக்கும் ஏற்படாதபடி செய்துவிடவில்லை. மறைந்த உத்தமர், இப்படிப்பட்ட சித்துக்கள் விளையாட வில்லை – சித்து விளையாடினவர்கள் செய்ததாகக் கூறப்பபட்ட அற்புதங்கள், இவருடைய மகத்தான வெற்றிகளின் முன்பு, சிருதுரும்பு. ஒருவருக்குக் கண்பார்வை உண்டாகச் செய்த மகான்கள் இருக்கட்டும் ஒருபுறம் – இது நமது நாடு, ஆங்கிலருக்கு வேட்டைக்காடு ஆகிவிட்டது – நாம் பலகோடி, அவர்கள் சில இலட்சம் – நாம் அடிமைகள், அவர்கள் ஆட்டிப்படைப்பவர்கள் என்ற நிலை தெரியாதிருந்த குருடர்களாக, நமது நாட்டவர் கோடிக்கணக்கிலே இருந்தனர் – மறைந்த உத்தமர் அவர்களின் கண்களைத் திறந்தார். என்ன பேசுவது என்று தெரியாமல் வாய் அடைத்துப் போயிருந்த மக்களைப் பேச வைத்தார் – உரிமை பற்றி – உறுதியுடன். எப்படிப் பெறுவது என்று தெரியாமல், முடவன் நிலையில் இருந்தவர்களைக் கச்சை கட்டி நின்று, கடும்போரிட வைத்தார் பலகோடி மக்களுக்குப் பார்வை, பேச்சு, செயல்திறமை, இவ்வளவையும் உண்டாக்கினார் இந்த உத்தமர். அற்புத நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகக் கூறப்படும் அருளுடையார்கள்

இருந்தபோதுதான், ஆங்கிலேயன் நம்மை அடிமைப் படுத்தினான். அந்த அடிமைத்தளைகளை உடைத்தெறிந்தவரை, அவர்களோடு சேர்த்துப் பேசுவது, அவருக்குக் கௌரவம் என்று எண்ணுபவர்கள், உத்தமரின் உயரிய பண்புகளைச் சரியாக உணராதவர்கள் என்றே பொருள்படும். அவருடைய வெற்றிகள் மகத்தானவை - அவைகளைவிட மகத்தானது, அவர் உண்டாக்கி வைத்துவிட்டுப் போயிருக்கும், மாண்புகள். அன்னிய ஆட்சியை விலக்கவோ, அதற்கான விடுதலைப் போர் துவக்கும் உணர்ச்சியையும் உறுதியையும் மக்கள் பெறச் செய்யவோ, முடியாதவர்களை எல்லாம், "அற்புதம் தெரிந்தவர்கள், அருள் பெற்றவர்கள்" என்று கூறிக் கொண்டிருந்தனர் - மக்களும் அதை ஏற்று அவர் அடி தொழுதனர் - அதேபோது, அவர்கள் யாரும் சாதிக்காததைச் சாதித்தவர், 1922-ம் ஆண்டு பிப்ரவரி 16ந் தேதி 'யங் இந்தியா' பத்திரிகையில் என்னிடமிருப்பதாக நான் சொல்லிக் கொள்ள விரும்பும் ஒரே குணம், சத்தியமும் அஹிம்சையும்தான். மனிதருக்கு மேற்பட்ட சக்தி எதுவும் எனக்கு இல்லை திடசித்தமில்லாத மற்றவர்களுக்கு கெடுதலை நாடிவிடக்கூடிய எந்தச் சதை உண்டோ, அதே சதையாலானவனே நானும்" என்று எழுதினர் - இருபத்திஆறு ஆண்டுகளுக்கு முன்பு.

இப்போதும், மக்களின் பாராட்டுதலைப் பெற்றுப் பூரிக்கும் 'பழைய சக்திகளிடம்' கேட்டுப் பாருங்கள், இப்போதும், தமது வீரதீரத்தையும், அருள்பெற்று ஆற்றலுடையோராக இருப்பதையும் கூறுவர். அவர்கள் கூறட்டும் - மக்கள் இனியும் அவர்களின் உரையை ஏற்கலாமா - அந்தப் பழைய சக்திகளைப் பாராட்டவும், அவைகளுக்கு

வணக்கம் செய்யவும் முற்படுவது, சரியாகுமா? முற்றும்துறந்த முனிவரின் சொந்த ஆஸ்தி இவைதான், என்று 'தினசரி'யில் ஒரு படம் வெளிவந்தது, காந்தியாரின் சொத்துக்களைக் காட்ட. அந்தப் படத்தைக் கண்ட எவருக்கும் கண்ணீர் கசியாமலிராது! என்ன சொத்து? நூல்சரம், சிறுகரண்டி, தெர்மாஸ் பிளாஸ்க், ஒரு பவுண்டன் பேனா, ஒரு ஜதை காலணி இவை. அருள்பெற்றவர்கள், யோகமறிந்தவர்கள் மக்களின் மோட்சலோக வழிகாட்டிகள் என்றெல்லாம் விருதுபெற்று, துறவுநிலையும் கொண்டிருப்பதாகக் கூறுபவர்கள், இன்று, பலர் உள்ளனரே, அவர்களின் சொத்துகளைச் சற்று உங்கள் கண்முன் கொண்டு வந்து பாருங்கள் - எவ்வளவு ஆடை ஆபரணம் - தங்கத்தால் வட்டில் தட்டு முதலியன மட்டுமா, பாதக்குறடே தங்கத்தால்! இவர்களையும், முற்றுந் துறந்தவர்கள், முனிவர்கள், மக்களின் அன்புக்கு மட்டுமல்ல, ஆராதனைக்கும் பாத்திரராகக் கூடியவர்கள் என்று, இனியும், கொள்ள எப்படி மக்களின் மனம் சம்மதிக்கும்? சாதாரண காய்ச்சலுக்கு, ஒரு வைத்தியர் கொடுத்த மருந்து பயனற்றுப்போய், வேறொரு வைத்தியர் கொடுத்த மருந்து வேலை செய்து, ஜுரம் நீங்கிவிட்டால், என்ன சொல்கிறோம்! முன்னவரின் முறை சரியில்லை, மருந்து பயனில்லை என்று கூறிவிடுகிறோமே இதோ ஒரு நாட்டின் நலிவை, மக்களின் நிலையை மாற்ற, நமக்குத் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்தவர்களால் முடியாமற் போனபிறகு, அவர்களைப் போல தான் அற்புதம் புரிபவன் என்று கூறிக்கொள்ளாமல், பணிபுரிந்து வெற்றி கண்டு, கடைசியில், நாட்டிலே வகுப்பு மாச்சரியம், ஒழிந்து, புதுவாழ்வு ஏற்படவேண்டும் என்பதற்காக, உயிரையே கொடுத்தாரே ஓர்

உத்தமர், அவரைப்போற்றும், அதே வாயினால், எப்படி அந்தப் பழைய சக்திகளின் பிரதிநிதிகளைப் புகழ்வது? பழைய சக்திகளின் பிரதிநிதிகளும், இனியும் தாங்கள் ஆதிக்கம் செலுத்துவது அழகல்ல, அறமுமாகாது என்பதை அறிந்து, அவர்களின் போகபோக்கிய நிலையையும், அதைக்காப்பாற்ற அவர்கள் கையாளும் முறைகளையும் விட்டொழித்து, உத்தமர் உரைத்த உயரிய கொள்கைகளை ஊருக்கு உரைக்கும் உயர்பணியில் ஈடுபட முன்வரவேண்டும். அவர்களுக்குத் தமது சுகானுபவத்தை இழக்க மனம் வராது போகுமானால், மக்கள், இனித்தாங்கள் விழிப்புப் பெற்று விட்டதால், முற்றுந் துறந்தவர் என்றால் எப்படி இருக்க வேண்டும், மக்களின் ரட்சகர் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தை உத்தமர் காந்தியாரின் வாழ்க்கையின் மூலம் தெரிந்து கொண்டு விட்டதால் இனி மக்களை மயக்க பழைய சக்திகள் கூறும் உரைகளை நம்பப் போவதில்லை அந்த உரைகளின்படி அமைந்துள்ள முறை களைக் கொள்ளப் போவதில்லை என்பதைத் தெளிவுப்படுத்தி, அன்பு நெறியை, அனைவரும் ஒருகுலம் என்ற அறநெறியை கைக்கொள்வோம், வேறு வழி வேண்டாம் என்று கூறி, புதுவாழ்வு துவக்கவேண்டும். அந்தப் புதுவாழ்வு பிறக்கவே, அவர் இரத்தம் சிந்தினார்.

*(திராவிட நாடு - 15-2-48)*

# 56. ஆறுதல் கூறுகின்றோம்!

நமது நண்பரும், இயக்க இளைஞர்களில் குறிப்பிடத்தக்க ஒருவருமான தோழர் மு. கருணாநிதி அவர்களின்

துணைவியார் பத்மாவதி அம்மையாா 12-4-48ல் தமது இளவயதில் இயற்கை எய்தினார் என்ற சோகச் செய்தி கேட்டு வருந்துகிறோம். தமது வாழ்க்கையை இயக்கத்துக்காகவே அர்ப்பணித்துப் பணிபுரிந்துவரும் தோழர் கருணாநிதி தமது வாழ்க்கைக்கும் இயக்கப்பணிக்கும் உறுதுணையாய் நின்று பணியாற்றிய அன்புத் துணைவியாரை இந்த இளவயதில் பிரிய நேர்ந்ததே என்பதைக் கேள்விப்படும் எவருக்கும் ஏக்கமும் துக்கமும் ஏற்பட்டே தீரும்.

தோழர் கருணாநிதி அவர்கள் இப்பொழுது சில காலமாகத் தம்முடைய சொந்த ஊராகிய திருவாரூரில் இருந்து கொண்டே 'முரசொலி' என்ற பத்திரிகையின் வாயிலாக இயக்கப்பணி புரிந்து வருகிறார். இந்த எதிர்பாராத சோக சம்பவம் அவருக்குத் தாங்கமுடியாத கவலையைத் தந்திருக் கும். துணைவியைப் பிரிந்து துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் தோழர் கருணாநிதி அவர்களுக்கும் அவரது உறவினருக்கும் ஆறுதல் மொழி கூறுகின்றோம்.

*(திராவிட நாடு - 18.4.48)*

# 57. வெட்கப்படுகின்றோம்

சர்க்கார் நிதி அமைச்சர் தோழர் ஆர்.கே. சண்முகம் அவர்கள், ஸ்டர்லிங் இருப்புப் பற்றிய பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காக இப்போது இலண்டனுக்குப் போய் இருக்கிறர். இந்தச் சமயத்தில் அவருக்கு இலண்டனில் ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. தமிழ் மக்கள் பெருமையும் மகிழ்ச்சியும்

அடையக்கூடிய விதத்தில் அந்த வாய்ப்பு அமைந்தது. அதாவது. இலண்டனிலுள்ள தமிழ்ச்சங்கத்தில் பேசும் வாய்ப்புத் தோழர் சண்முகம் அவர்களுக்குக் கிடைத்தது. எனவேதான் இதனை ஒரு அரிய வாய்ப்பு என்று கூறினோம். எனவே, இலண்டனிலுள்ள தமிழ்ச் சங்கத்தில் தோழர் சண்முகம் அவர்கள் பேசியபோது,

"எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்ற முதுமொழிக் கிணங்கிச் செவிக்கும் வாய்க்கும் சிந்தைக்கும் இனியவாய் சிறந்த சொற்செறிவும், உயர்ந்த பொருட் பொலிவும் பொருந்தி விளங்க எழுதப்பட்ட நமது தமிழ் நூல்களிற் காணப்படும் அமிழ்த மயமான அற ஒழுக்கங்களையும், பொருள் நுணுக்கங் களையும் அறிந்து நுகர்ந்து மகிழ்வடைவதே மக்கட் பிறப்பின் மாண் பயனாகும். கண் பெற்றிருந்தும் காணாத மக்களைக் குறித்தும். காது பெற்றிருந்தும் கேளாத மக்களைக் குறித்தும் ஏசுநாதர் விவிலிய நூலுட் கூறிப்போயுள்ளவை பலரும் அறிந்தவையே. அக்குறிப்புகளைப் போன்ற பலவற்றை நந்தமிழ் நூல்கள் பலவற்றுட் பரக்கக் காணலாம். உறுப்புக் களான் மக்களை ஒத்துப் பண்பினால் அவரை ஒவ்வாதவரும், ஊணும் உடையும் பிறவுமுடையராயினும், உண்மையை அறிய அஞ்சுபவரும் மக்கள் அல்லர் என்பது நமது தமிழ் ஆன்றோர் கொள்கை.

உண்மைகளை உள்ளபடி கூறி மக்களை நல்வழிப்படுத்தவல்ல ஆற்றலோடு கூடிய தமிழ். அறிஞர் பலர் அஞ்ஞான்று இருந்தாராயினும். அவருட் பெரும்பாலார்

பொருள் வருவாய்க்கு வழியில்லாமையாற், செல்வர் சிலரை அடுத்து, அவரைப் பலவகையாலெல்லாம் புகழ்ந்து பாடிக் காலங்கழித்து வந்தார்கள். இத்தகைய இரங்கத்தக்க நிலை இப்போதும் முற்றும் ஒழிந்து போயிற்றென்று சொல்லுவதற் கில்லை. இஞ்ஞான்றும் கற்றறிந்தவர்கள் என்று காணப்படு வோருட் பலர் தம் வறுமை கருதியோ அல்லது உண்மை உணர்ச்சி இல்லாத சிலரின் புகழ் உரைகளைப் பெற விரும்பியோ, அல்லது தாம் அல்லாத ஏனையோரெல்லாம் ஒன்றும் அறியாத முட்டாள்களென நினைத்தோ தம வாய்க்கு வந்தவாறெல்லாம் முன்னுக்குப் பின் முரணாக உள்ளதை இல்லையென்றும் இல்லதை உள்ளதென்றும், உண்மை நூல்களிற் காணப்படுபவனவற்றை நீக்கியும், காணப்படாதன வற்றைப் புனைந்தும் பேசிவிடுகின்றனர். இத்தகைய அருவருப்பான விரிவுரைகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் அவைக்குழுவினரும் அவர் பேசியதில் உண்மைக்கு மாறான பல புனைந்துரைகள் காணப்படுகின்றனவே என்று அறியும் ஆற்றலில்லாத இயல்போடு கூடியவர்களாய்க் கைகொட்டி ஆரவாரஞ் செய்துவிடுகின்றனர். இவ்வித அறியாமையைக் கண்டு உண்மையை உள்ளபடி சொல்லவேண்டுமென்ற கருணையுடன் எவரேனும் முன்வருவார்களானால், அவர்களை அங்ஙனம் பேசவிடாது தடுப்பதற்கு எத்துணை இயலுமோ அத்துணை இடர்களும் செய்து விடுகின்றனர் ஐயகோ! இது பெரிதும இரங்கற்பாலது. நிற்க!

கற்றார் முதற் கல்லாதார் ஈறாகச் சிறு மகாரும் பெண்டிரும் உட்பட எல்லாரும் பேசப்படுவதே மொழியெனப் படுமன்றி, நூல்களிற் கற்றார்பால் மட்டும் வழங்குவது

மொழியெனப்படாது. வல்லோசை இல்லாத நந்தமிழ் இத்தமிழ்நாட்டின் கண் இன்ன காலத்தில் இருந்துதான் பேச்சு வழக்கில் வந்ததென்று எவராலும் ஆராய்ந்தறிய முடியாததாய்த் தன் இளமை குன்றாது. கல்லாதாராலும். கற்றாராலும். சிறு மகாராலும். பெண்டிராலும் பேசப்பட்டு வருகிறதென்பதை எவரே அறியாதார்!

இனித் தமிழ்மொழியின் சொற்களும், சொற்றொடர்களும் இப்படித்தான் பேசவும் எழுதவும் படல் வேண்டுமென்னும முறைகளையும் நுட்பங்களையும் நுண்ணிதின் ஆராய்ந்து, அவைகளை ஒரு வரம்பிற்குட்படுத்தி ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே பல சிறந்த இலக்கண நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன தொல்காப்பியத்திற்கும் முன்பே எழுதப்பட்ட இலக்கண நூலாசிரியர்களின் கருத்தோடிணங்கி அவர் தம் சொற்களையும் சொற்றொடர்களையும் வேறு படுத்தாது, அவர்க்குப் பின்வந்த "தொல்காப்பிய" ஆசிரியர் தம் காலத்து வழக்கும் உடன் சேர்த்துத் "தொல்காப்பியம்" என்னும் நுண் பொருள் விரிந்ததோர் இலக்கண நூலை இயற்றினார். தொல்காப்பியத்திற்குப்பின் தோன்றிய பவணந்தி முனிவரும் தொல்காப்பியர் கருத்தோடிசைந்து 'நன்னூல்" என்னும் ஓர் அரிய இலக்கண நூலை இய்ற்றினார். இவ் வகை யானே, நம் பண்டைத் தமிழர் அவ்வக்காலத்து இயல்பிற்கு இசைகின்ற விடத்தும், தம் முன்னாசிரியர் கருத்தோடு மாறு படாமற், சொற்களையும் சொற்றொடர் களையும் ஒழுங்குபடுத்தி இலக்கண நூல்கள் எழுதி வைத்தமையாலன்றோ நந்தனித்தமிழ் பண்டை நாள் தொட்டு இன்றைய நாள்வரையும் சிறிதும் வேறுபடாமற் பேசவும் எழுதவும் எளிதாய் இருக்கின்றது.

இனி ஆரிய மொழியிற் பழைய முனிவரால் இலக்கண நூலுட் கூறப்பட்டுள்ள சொற்களையும் சொற்றொடர்களையும், அவர்க்குப் பிற்காலத்து வந்தோர் வேறு திரித்துப் பல்வேறு வகைப்பட வழக்கின்மையின், அவற்றிற்கேற்பப் பிற்காலத்து இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. பாணினீயம் எழுதப்பட்ட காலத்தில் ஆரியமொழி ஒருதன்மைத்தாயும், காளிதாசர் காலத்து வேறு தன்மைத்தாயும் இருந்தது. இங்ஙனம் பாணினீயம் எழுதப்பட்ட காலத்தில் வழங்கிய ஆரிய மொழியையும், பாணினீயத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வழங்கிய சமஸ்கிருத மொழியையும் உற்று நோக்கின், அவை ஒன்றற்கொன்று ...... நம்மைப்பற்றியும், நம் மொழியைப் பற்றியும் நம் கொள்கையைப் பற்றியும் நன்றாக ஆராய்ந்து கொள்ளல் இன்றியமையாத தொன்றாம். ஆதலாற், பழமை தொட்டு நாகரிகத்திற் சிறந்த தமிழ் நன்மக்கள் வழியிற் றோன்றிய நம்மனோர், தமது சிறப்பையும் நாகரிகத்தையும் நிலைநாட்டி, அவற்றைப் பிறரும் பின்பற்றுமாறு செய்வார் களானால், அவர்கள் தமக்கும் பிறர்க்கும் பயன்பட்டவராய்ப் புகழ் ஓங்கி வாழ்வர்"

என்றுதான் பேசியிருப்பார் - தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தோழர் சண்முகம் அவர்கள் தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றியும், அதன் தொன்மை - இனிமை பிறமொழிகளின் உதவியின்றித் தனித்தியங்கும் தனிச்சிறப்பைப்பற்றியும் மேற்கண்டவாறுதான் பேசியிருப்பார் என்று நீங்கள் கருதுவீர்கள்.

தமிழ்நாட்டிலிருந்து இங்கிலாந்து முதலான மேலைநாடு களுக்குப் போகின்றவர்களை நோக்கி அங்குள்ளவர்கள், "உங்களுடைய நாட்டுக்கும், கலை, நாகரிகங்களுக்கும் சிறப்புத்

தரும் நூல்கள் என்னென்ன" என்று கேட்கும் போதெல்லாம், அவர்கள், "எங்களிடம் பாகவதம் - பகவத் கீதை - இராமாயணம் - பாரதம் - ஆகமம், உபநிஷத் ஆகிய ஒப்புயர் வற்ற நூல்கள் பல இருக்கின்றன" என்று கூறிப் பூரிப்படைவது போலத் தோழர் சண்முகம் அவர்கள் கூறியிருக்க மாட்டார் என்றும், அவர், "எங்கள் நாட்டுக்கும், கலைக்கும், நாகரிகத்துக் கும் சிறப்புத் தரும் நூல்கள், இதுவரை நீங்கள் அறியாதது - அறிவிக்கப்படாததுமான பல பழம்பெரும் நூல்கள் நம்மிடம் உள்ளன. அவை :- திருக்குறள் - தொல்காப்பியம் - புறநானூறு -அகநானூறு - கலித்தொகை - கலிங்கத்துப்பரணி - ஐங்குறுநூறு - சிலப்பதிகாரம் - சீவகசிந்தாமணி போன்ற இன்னும் பல தனித் தமிழ் நூல்கள், நம்மிடம் உள்ளன" என்று கூறித் தமிழுக்கும், தமிழ் மக்களுக் கும் பெருமையும் மகிழ்ச்சியும் தரக்கூடிய முறையில் பேசி யிருப்பார் என்றும் கருதுவீர்கள். ஆனால் நமது அன்பர் சண்முகம் அவர்கள் அந்தப் பெருமை தரும் பணியனைச் செய்து, அவருக்குக் கிடைத்த அரிய வாய்ப்பினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை வருத்த மும் வெட்கமும் கலந்த குரலில் கூற வேண்டியிருக்கிறது.

இலண்டனிலுள்ள தமிழ்ச் சங்கத்தில் பேசிய தோழர் சண்முகம் அவர்கள்,

"பிறமொழிப் பதங்களின்றி எந்த மொழியும் வளர்ச்சி அடைய முடியாதாகையால், பிறமொழிப் பதங்களைச் சேர்த்துக் கொள்வதில் தமிழர்கள் வெட்கப்படக்கூடாது."

என்பதாகப் பேசியிருக்கிறார். இவ்வாறு சண்முகம் அவர்கள் பேசினார் என்பதைச் செய்தித்தாள்களில்

படித்தவுடன் உண்மையாகவே நாம் வெட்கப்பட்டோம். தோழர் சண்முகம் அவர்கள் இத்தகைய தனக்கு மிஞ்சிய தன்னால் ஆகாத பணியில் ஏன் ஈடுபட்டார் என்று வருத்தமும் அடைந்தோம். அவர் எந்த வேலைக்காகப் போனாரோ, அந்த வேலையை மட்டும் சரிவர முடித்துக் கொண்டு திரும்பியிருக்கலாமே என்றும் எண்ணினோம்.

தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதில் தமிழ் மக்கள் வெட்கப்படக் கூடாதென்ற வெட்கங்கெட்ட பேச்சை அவர் பேசியிருக்க வேண்டியதில்லை. உலகில் உள்ள மொழிகளில் தமிழ் மொழி ஒன்றுதான், பிறமொழிச் சொற்களை எந்த ஏதுவைக் கொண்டும் இரவல் வாங்காமல் தனித்து இயங்கக் கூடியதென்பதையும், எந்தவிதமான புதுச் சொற்களுக்கும் தமிழில் சொற்களை ஆக்கிக் கொள்ளும் திறமை தமிழ்மொழி ஒன்றுக்கு மட்டும் உண்டு என்பதையும் தோழர் சண்முகம் அவர்க[illegible]ல் பேசியது கேட்டுநாம் உண்மையாகவே வெட்கப்படுகின்றோம்.

"தமிழ் ஒன்றுதான் பிறமொழிச் சொற்களின் உதவியின்றித் தனித்தியங்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது" என்று கூறிய மேல்நாட்டறிஞர்களான டாக்டர் போப், டாக்டர் கால்டுவேல் முதலானவர்கள் இன்று இருந்தால், இலண்டனில் தோழர் சண்முகம் அவர்கள் பேசியதைக் கேட்டு அவர்களும் வெட்கப்பட்டிருப்பார்கள்.

இலண்டனிலுள்ள பெரிய நூல் நிலையத்தில், விவிலிய (பைபிள்) நூலுக்குப் பக்கத்தில், இரண்டாவது நூலாக இடம் பெறும் பேற்றைப் பெற்றுள்ள திருக்குறள், தோழர் சண்முகம் அவர்களைக் காண நேர்ந்து – அதற்குப் பேசவும் வாயிருந்

தால், அதுவும் அவரின் அறியாமையைக் கண்டுவெட்கப் பட்டுக் கைகொட்டி நகைத்திருக்கும்.

“உங்கள் போன்றவர்கள், என்னைப் பற்றி இப்படியெல்லாம் தப்பும் தவறுமாகக் கூறுவதாலேதான், நான் இன்று இந்தக் கீழ்நிலையை அடைய நேரிட்டது - 'தண்ணீரை' ஜலம் என்றும், 'சோறு' என்பதைச் சாதம் என்றும், 'மலர்' என்பதைப் புஷ்பம் என்றும், 'கண்கூடு' என்பதைப் பிரத்தியட்சம் என்றும், 'கறி' என்பதைப் பதார்த்தம் என்றும், 'சாறு' என்பதைச் சாம்பார் என்றும், 'மிளகுநீர்' என்பதை ரசம் என்றும், 'முதுகுன்றம்' என்பதை விருத்தாசலம் என்றும், 'மறைக்காடு' என்பதை வேதாரண்யம் என்றும், தமிழ் மக்களால் மிக எளிதாகச் சொல்லக் கூடிய தூயதனித் தமிழ்ச் சொற்கள் எல்லாம் வடமொழிச் சொற்களாக ஆக்கப்பட்டுவிட்டன” என்று, தோழர் சண்முகம் அவர்களைப் பார்த்துத் தமிழ் மொழியும் வெட்கப்பட[illegible]ர்கள்.

விஞ்ஞான முறையால் உண்டாகும் புதுப்புதுச் சொற் களுக்குக்கூடத் தனித் தமிழ்ச் சொற்களைக் கருத்து மாறுபடாமல் உண்டாக்கிக் கொள்ள முடியும் என்பது தமிழ்மொழி வல்லுநரின் முடிந்த முடிவாகும். இந்த நிலையில் நமது மதிப்புக்குரிய தோழர் சண்முகம் அவர்கள், தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதில் தமிழ் மக்கள் வெட்கப்படக்கூடாதென்று பேசியது கேட்டு, நாம் உண்மையாகவே வெட்கப்படுகின்றோம். இதனைப் படித்த பின்னர் தோழர் சண்முகம் அவர்களும் வெட்கப்படுவார் என்பதில் ஐயமில்லை, அவரும் தமிழ் மகன் என்ற காரணத்தால்.

*(திராவிட நாடு - 20-6-48)*